365

# தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை நடவடிக்கைகள்

செயலக வெளியீடு.

தொகுதி-9 எண்-1

20.9.1991

வெளியீடு - 11.6.1992

D
V211,31 N91
N91.9.1
158316

Issued 11-5-1992

365

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

24 குலை 92

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATE

## OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, செப்டம்பர் 20, 1991 - தொகுதி 9 - எண் 1
Friday the 20th September, 1991 - Volume 9 - No 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat,
Madras-600 009

[Price Rs. 3 0

158376
சென்னை-600




| | | |
|---|---|---|
| | 6. திரு. கே. சி. சுந்தரவேல் .. .. | 27—29 |
| | 7. திரு. ஈ. தெய்வநாயகம் | 29—32 |
| | 8. டாக்டர் ச. சுந்தரராஜ் .. .. | 33—35 |
| * | 9. திரு. ஓ. எஸ். அமர்நாத் .. .. | 35—37 |
| * | 10. திரு. ஏ. ஏகாம்பர ரெட்டி .. .. | 38—41 |
| (ஆ) | கோரிக்கை எண் 30—சமூக நலன் .. | 54—106 |
| * | 1. மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி.. .. .. .. | 55,67—103, 104,105 |
| * | 2. திருமதி ரமணி நல்லதம்பி .. .. | 55—65 |
| | 3. டாக்டர் (திருமதி) மு. சினியம்மாள் .. | 65—69 |
| | 4. டாக்டர் அ. ஸ்ரீதரன் .. .. | 70—72 |
| * | 5. டாக்டர் (திருமதி) பியாட்ரிக்ஸ் டி. சோ. .. ... .. .. | 72—74 |
| * | 6. திருமதி ஜெ. லோகாம்பாள் .. .. | 74—80 |
| * | 7. திரு. தா. வேடியப்பன் .. .. | 80—84 |
| | 8. திரு. சா. பன்னீர்செல்வம் .. .. | 84—87 |
| (இ) | கோரிக்கை எண் 11—மாவட்ட நிருவாகம்<br>கோரிக்கை எண் 1—நில வரித் துறை<br>கோரிக்கை எண் 5—முத்திரைத் தாள்கள் நிருவாகம்.<br>கோரிக்கை எண் 6—பத்திரப் பதிவு<br>கோரிக்கை எண் 41—இயற்கைச் சீற்றங்கள் குறித்து துயர் தணிப்பு.<br>கோரிக்கை எண் 44—எழுதுபொருள் அச்சுத் துறை.<br>கோரிக்கை எண் 46—இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும். | 107—223 |





| | | |
|---|---|---|
| | 1. மாண்புமிகு திரு. எஸ். டி. சோம சுந்தரம் .. .. .. .. | 106—112, 190—218 |
| | 2. திரு. எஸ். டேனியல் ராஜ் ... .. | 107—118 |
| | 3. திரு. செ. து. வரதராஜன் .. .. | 119—124 |
| * | 4. திரு. வி. தம்புசாமி .. .. .. | 124—131 |
| | 5. திரு. வி. எம். சுப்பிரமணியன் ... .. | 131—135 |
| | 6. திரு. நா. சா. பழனிசாமி ... .. | 135—141 |
| | 7. திரு. மு. தென்னவன் ... ... .. | 141—147 |
| | 8. திரு. கோ. ஜானகிராமன் .. .. | 147—152 |
| | 9. திரு. செ. கு. தமிழரசன் ... .. | 152—158 |
| * | 10. திரு. ஏ. ரவிக்குமார் .. .. .. | 159—162 |
| | 11. திருமதி கே. பஞ்சவர்ணம் .. ... | 162—165 |
| * | 12. திரு. கா. சுந்தசாமி .. .. .. | 165—168 |
| | 13. திரு. ஆர். டி. அரங்கநாதன் .. | 168—171 |
| | 14. திரு. ஜி. பழனிசாமி .. .. .. | 171—176 |
| * | 15. திரு. ம. சின்னசாமி .. | 176—180 |
| | 16. திரு. ம. தனபால் .. .. .. | 181—182 |
| * | 17. திரு. சோ. பாலகிருஷ்ணன் .. .. | 183—190 |
| 4. | **விதி 110-இன் கீழ் உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சரின் அறிக்கை.—**<br>தமிழ்நாடு நுகர்பொருள் மற்றும் வாணிபக் கழக ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு அளித்தல் குறித்து ... .. .. .. | 17—18 |
| 5. | அறிவிப்பு—<br>பேரவை அலுவல் ... .. .. .. | 106—107 |
| 6. | **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.—** | 224—225 |

## உள்ளடக்கம்.

**20—9—1991**


| | பக்கங்கள். |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | iv—vi |
| Personnel of the Government of Tamil Nadu | vii—ix |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் .. .. .. ... | x—xii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பட்டியல் (அகர வரிசைப்படி) .. | xiii—xxiv |
| தகவல் கோரல்— | |
| (அ) மதுரை மாவட்டம் திருமங்கலம் சந்தையூர் கிராமத் தொடக்க கூட்டுறவு வங்கியிலிருந்து 17-9-1991 அன்று உரத்தை எடுத்துச் செல்லும்போது ஏற்பட்ட அசம்பாவித சம்பவங்கள் குறித்து .. .. .. ... .. | 1—5 |
| (ஆ) உறுப்பினர் திரு. இளம்வழுதிக்கு அளிக்கப்பட்ட தண்டனை பற்றிய தீர்ப்பை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்ற கோரிக்கை குறித்து .. .. .. ... .. | 6—7 |
| அறிக்கை அளித்தல்.— | |
| பொது நிறுவனங்கள் குழு. | |
| <u>மானியக் கோரிக்கைகள், 1991–92, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.</u> | |
| (அ) கோரிக்கை எண் 26—கைத்தறியும் துணித் தொழிலும் ... .. .. .. | 7—17, 19—54 |
| 1. மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் .. | 7,8,41—53 |
| 2. திரு. வி. தண்டாயுதபாணி ... ... | 9—17 |
| * 3. திரு. தே. ஜனார்த்தனன் ... ... | 19—21 |
| * 4. திரு. வி. தம்புசாமி ... ... .. | 21—24 |
| 5. திருமதி செ. சுந்தராம்பாள் ... | 24—26 |


53—328—A

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

## GOVERNOR OF TAMIL NADU

**Thiru BHISHMA NARAIN SINGH**

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. Chief Minister — **The Hon. Selvi J. JAYALALITHA :**

Public, General Administration, Indian Administrative Service. Indian Police Service and other All-India Services, District Revenue Officers, Police, Prevention of Corruption, Industries, Commercial Taxes, Prohibition and Excise, Molasses, Backward Classes, Minorities, Hindu Religious and Charitable Endowments, Information and Publicity, Film Technology, Cinematograph Act, Tourism and Tourism Development Corporation, Mines and Minerals.

2. Minister for Finance — **The Hon. Dr. V.R. NEDUNCHEZHIAN :**

Finance, Planning, Elections and Legislature.

3. Minister for Law — **The Hon. Thiru K. A. KRISHNASAMY :**

Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Debt relief including Legislation on Money lending, Chits and Registration of Companies.

4. Minister for Revenue — **The Hon. Thiru S.D. SOMASUNDARAM:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Indians Overseas, Refugees and Evacuees, Stationery and Printing, Government Press, Bhoodan and Gramdan and Passports.

5. Minister for Education The Hon. Thiru ERAAMA VEERAPPAN:

Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare, Tamil Development and Tamil Culture, Archaeology and Welfare of Ex-Servicemen.

6. Minister for Food and Co-operation. The Hon. Thiru K. RAJARAM:

Food, Co-operation, Civil Supplies, Price Control and Statistics.

7. Minister for Labour The Hon. Dr. C. ARANGANAYAGAM:

Labour, Employment and Training, Urban and Rural Employment Programmes and Census.

8. Minister for Health The Hon. Thiru S. MUTHUSAMY:

Health, Medical Education, Family Welfare, Environmental Pollution Control, Electronics, Iron and Steel Control and Newsprint Control.

9. Minister for Transport The Hon. Thiru K.A. SENGOTTAYAN:

Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

10. Minister for Handlooms and Textiles. The Hon. Thiru E. MADHUSUDHANAN:

Handlooms and Textiles.

11. Minister for Public Works. The Hon. Thiru S. KANNAPPAN:

Public Works, Irrigation including Minor Irrigation, Highways, Electricity and Non-Conventional Energy Development.

12. Minister for Local Administration. The Hon. Thiru ALAGU THIRUNAVUKKARASU:

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes and Rural Indebtedness.



13. Minister for Agriculture. The Hon. Thiru Ku. Pa. KRISHNAN:

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture and Sugar.

14. Minister for Housing and Urban Development. The Hon. Thiru T. M. SELVAGANAPATHY:

Housing, Slum Clearance, Rural Housing Development, Accommodation Control, Town-Planning, Urban Development, Madras Metropolitan Development Authority and Urban and Rural Water Supply.

15. Minister for Rural Industries. The Hon. Thiru MOHAMED ASIF:

Small Scale Industries, Rural Industries including Cottage Industries, Khadi and Village Industries Board and Wakf.

16. Minister for Social Welfare. The Hon. Thirumathi R. INDIRA KUMARI:

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meals, Beggar Homes, Orphanages and Correctional Administration.

17. Minister for Adi-Dravidar Welfare. The Hon. Thiru M. ANANDAN:

Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.

18. Minister for Forests and Fisheries. The Hon. Thiru D. JAYAKUMAR:

Animal Husbandry, Milk, Dairy Development, Fisheries, Forests and Cinchona.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

பேரவைத் தலைவர் :

மாண்புமிகு திரு. இரா. முத்தையா.

பேரவைத் துணைத் தலைவர் :

பேராசிரியர் க. பொன்னுசாமி.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல் :

1. திரு. க. அர்ச்சுனன்
2. திரு. வ. சத்தியமூர்த்தி
3. திருமதி ரமணி நல்லதம்பி
4. டாக்டர் தே. குமாரதாஸ்

செயலாளர். :

திரு. செ. சு. ஜானகிராமன்

5. கல்வி அமைச்சர் .. மாண்புமிகு திரு. இராம வீரப்பன் :
கல்வி, தொழில் நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் நலம், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, தொல் பொருளியல், முன்னாள் இராணுவத்தினர் நலம்.

6. உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. க. இராசாராம்:
உணவு, கூட்டுறவு, நுகர் பொருள் வழங்கல், விலைவாசிக் கட்டுப்பாடு, புள்ளி விவரங்கள்.

7. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்:
தொழிலாளர், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர்ப்புற மற்றும் கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டங்கள், மக்கள் தொகைக் கணக்கு.

8. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:
மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி, குடும்ப நலம், சுற்றுச் சூழல் மாசு கட்டுப்படுத்தல், மின்னணுவியல், இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, அச்சுக் காகிதக் கட்டுப்பாடு.

9. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்:
போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள்.

10. கைத்தறி மற்றும் நெசவாலைகள் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்:
கைத்தறி மற்றும் நெசவாலைகள்.

11. பொதுப் பணித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :
பொதுப் பணிகள், பாசனம் (சிறு பாசனம் உட்பட), நெடுஞ்சாலைகள், மின்சாரம், மரபுசாரா எரி சக்தி வளர்ச்சி,



12. உள்ளாட்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு :
நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், கிராமப் புறக் கடன் சம்பந்தப்பட்டவை.

13. வேளாண்மைத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் :
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை மற்றும் சர்க்கரை.

14. வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு.டி. எம். செல்வகணபதி :
வீட்டு வசதி, குடிசை மாற்றுத் திட்டம், ஊரக வீட்டு வசதி வளர்ச்சி, இடவசதிக் கட்டுப்பாடு, நகர அமைப்பு, நகர்ப்புற வளர்ச்சி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், நகர்ப்புற மற்றும் கிராமப் புறக் குடிநீர் வழங்கல்.

15. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. முஹமது ஆசிப் :
சிறு தொழில்கள், ஊரகத் தொழில்கள் (குடிசைத் தொழில்கள் உட்பட), கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியம், வக்ஃப்.

16. சமூக நலத்துறை அமைச்சர் .. மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி :
சமூக நலம் (மகளிர் மற்றும் குழந்தைகள் நலம் உட்பட), சத்துணவு, பிச்சைக்காரர் விடுதிகள், அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம்.

17. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. மு. ஆனந்தன் :
ஆதி திராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர்.

18. வனம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் :
கால்நடை பராமரிப்பு, பால், பால் பெருக்குத் திட்டம், மீனளம், வனங்கள் மற்றும் சின்கோனா.

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

**ஆளுநர்—திரு. பீஷ்ம நாராயண் சிங்.**

**அமைச்சரவையின் உறுப்பினர்கள்.**

| | |
|---|---|
| 1. முதலமைச்சர் .. | மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், இந்திய காவல் பணியாளர் மற்றும் அனைத்திந்தியப் பணியாளர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், காவல், இலஞ்ச ஒழிப்பு, தொழில்கள், வணிக வரிகள், மதுவிலக்கு மற்றும் ஆயத்துறை, சர்க்கரைப் பாகு கழிவு, பிற்பட்டோர் நலம், சிறுபான்மையினர் நலம், அறநிலையத் துறை, செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம், சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சுரங்கம் மற்றும் கனிம வளம். |
| 2. நிதி அமைச்சர் .. | மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: நிதி, திட்டம், தேர்தல்கள், சட்டமன்றம். |
| 3. சட்ட அமைச்சர் .. | மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவை பற்றிய சட்டம் இயற்றுதல் உட்பட), கம்பெனிகள் பதிவு. |
| 4. வருவாய்த் துறை அமைச்சர் .. | மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளர்கள், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள், ஆவணப் பதிவுத் துறை, முத்திரைச் சட்டம், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம் மற்றும் கிராம தானம், பயண இசைவுச் சீட்டு. |

## பேரவையின் முக்கிய அலுவலர்கள் (அகர வரிசைப்படி).

| | |
|---|---|
| இராமச்சந்திரன், திரு. ஆர். கே., பி.ஏ., பி.எல். | இணைச் செயலாளர். |
| சுந்தரராஜன், திரு. கா. செ., பி.ஏ., பி.ஜி.எல். | இணைச் செயலாளர். |
| இராசமாணிக்கம், திரு. பெ., பி.ஏ., பி.எல். | துணைச் செயலாளர் (பதிப்பாளர்). |
| சண்முகநாதன், திரு. கோ., பி.காம். | துணைச் செயலாளர் (பதிப்பாளர்). |
| சந்திரசேகரன், திரு. ஆர்., பி.ஏ. | துணைச் செயலாளர். |
| சாலமன் ஜெயபால், திரு. டி., பி.எஸ்ஸி., பி.எல். | துணைச் செயலாளர். |
| ஜேக்கப் ஆர்தர், திரு. தா., பி.ஏ., பி.எல்.,டி.பி. மற்றும் பி.ஏ. | துணைச் செயலாளர். |
| கிருஷ்ணமூர்த்தி, திரு. எஸ்., பி.எஸ்ஸி. | குழு அலுவலர். |
| வெங்கட்டராமன், திரு. ப. சீ., பி.காம். | குழு அலுவலர். |
| அப்துல் சத்தார், திரு. ஜே., பி.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர். |
| இராசாராமன், திரு. வி., பி.எஸ்ஸி., பி.எல். | சார்புச் செயலாளர். |
| உமா, திருமதி வி. நா., பி.ஏ. | சார்புச் செயலாளர். |
| கண்ணன், திரு. கே., பி.எஸ்ஸி., பி.எல். | சார்புச் செயலாளர். |
| சாயிநாதன், திரு. கி., பி.ஏ., பி.ஜி.எல்., | சார்புச் செயலாளர். |
| பவானி சுப்பையா திருமதி பி.ஏ., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர். |

| தொடர் எண்ணும் உறுப்பினரின் பெயர் | தொகுதியின் பெயர் |
|---|---|
| 21. இராசாராமன், திரு. சோ. .. | பாப்நாசம். |
| 22. இராசாராம், திரு. க. .. .. | பனமரத்துப்பட்டி. |
| 23. இராதாகிருஷ்ணன், திரு. த. க. .. | திருமங்கலம். |
| 24. இராமகிருஷ்ணன், டாக்டர் இ. | அச்சரப்பாக்கம் (செ.வ.). |
| 25. இராமசாமி அம்பலம், திரு.கே.ஆர். | திருவாடானை. |
| 26. இராமசுவாமி, திரு.சி. .. .. | சங்கராபுரம். |
| 27. இராமச்சந்திரன், திரு. மா.சா.மா. | இளையான்குடி. |
| 28. இராமச்சந்திரன், திரு. ஓ. ஆர். .. | கம்பம். |
| 29. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். | சாத்தூர். |
| 30. இராமச்சந்திரன், திரு. ச. .. | பண்ருட்டி. |
| 31. இராமதாஸ், திரு. எஸ்.எஸ்.ஆர். | செஞ்சி. |
| 32. இராமநாதன், திரு. இராம. .. | கும்பகோணம் |
| 33. இராம வீரப்பன், திரு. .. .. | காங்கேயம். |
| 34. இராஜமன்னார், திரு. கு. சே. | ஒட்டப்பிடாரம் (செ.வ.). |
| 35. இராஜன்பாபு (எ) தணிகைபாபு, திரு. கி. | திருத்தணி. |
| 36. இராஜேந்திரன், திரு. பி.வி. .. | வேதாரண்யம். |
| 37. இலதா பிரியகுமார், திருமதி .. | அரக்கோணம் (செ.வ.) |
| 38. இளம்வழுதி, திரு. .. .. | எழும்பூர் (செ.வ.). |
| 39. ஈஸ்வரமூர்த்தி, திரு. பி. .. .. | தாராபுரம் (செ.வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினரின் பெயரும் | தொகுதியின் பெயர் |
|---|---|
| 40. ஈஸ்வரன், திரு. ஆர். .. .. | வாசுதேவநல்லூர் (செ.வ.). |
| 41. ஏகாம்பர ரெட்டி, திரு.எ. .. | பள்ளிப்பட்டு. |
| 42. கண்ணப்பன், திரு. எஸ். .. | திருப்பத்தூர். |
| 43. கண்ணன், திரு. வே. .. .. | திருவண்ணாமலை. |
| 44. கந்தசாமி, திரு. கா. .. .. | தலைவாசல் (செ.வ.). |
| 45. கருப்புசாமி, டாக்டர், எம். .. | குன்னூர் (செ.வ.). |
| 46. கலியபெருமாள், திரு. ப. .. | திருவையாறு. |
| 47. கலைச்செல்வி, திருமதி கே. எம். | காட்பாடி. |
| 48. கவிநிலவு தர்மராஜ், பேராசிரியர் திருமதி .. | மொடக்குறிச்சி. |
| 49. கற்பகம் இளங்கோ, பேராசிரியர் திருமதி. .. | காரைக்குடி. |
| 50. கனகவல்லி, திருமதி என். சி. .. | விளாத்திகுளம். |
| 51. காஞ்சி பன்னீர்செல்வம், திரு. .. | உத்திரமேரூர். |
| 52. காந்திராஜன், திரு. ச. .. .. | வேடசந்தூர். |
| 53. காளன், திரு. கோ. .. .. | வில்லிவாக்கம். |
| 54. காளிராஜன், டாக்டர் மு. .. | சமயநல்லூர் (செ.வ.). |
| 55. கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. .. | ஆயிரம்விளக்கு. |
| 56. கிருஷ்ணன், திரு. எஸ். எம். .. | தாம்பரம். |
| 57. கிருஷ்ணன், திரு. கு. ப. .. | ஸ்ரீரங்கம். |
| 58. கிருஷ்ணன், திரு. சி. .. .. | ஓமலூர். |
| 59. குப்பன், திரு. க. — — | திருவொற்றியூர். |

| | |
|---|---|
| பானுமதி அனந்தராஜன், திருமதி பி.எஸ்ஸி., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர். |
| முடிகோபதி, திரு. நா., எம்.ஏ. | சார்புச் செயலாளர். |
| முனிர் உன்னிசா, திருமதி பி.எஸ்ஸி., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர். |
| ராஜன், திரு. கே. பி., டி.ஆர்.எஸ். | சார்புச் செயலாளர். |
| ராஜேந்திரன், திரு. பி. சி., பி.ஏ. | சார்புச் செயலாளர். |
| வெங்கட்டராமன், திரு. கோ. | பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர். |
| சுந்தரராஜுலு, திரு. துரை., எம்.ஏ. | தலைமை நிருபர். |
| துரைபாண்டியன், திரு. செ. ஏ., பி.ஏ. | தலைமை நிருபர். |
| ஜெயதேவ் திரு., பி. சி. | தலைமை நிருபர். |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்.

| தொடர் எண்ணும் உறுப்பினரின் பெயரும் | தொகுதியின் பெயர் |
|---|---|
| 1. அண்ணாமலை, திரு. எஸ். | ஆலந்தூர். |
| 2. அபரஞ்சி, திரு. பெ. | அரூர் (செ.வ.). |
| 3. அபுல்ஹசன், திரு. எம்.எம்.எஸ். | மயிலாடுதுறை. |
| 4. அமர்நாத், திரு. ஓ. எஸ். | மதுரை கிழக்கு. |
| 5. அம்மமுத்து பிள்ளை, டாக்டர் மு. | கன்னியாகுமரி. |
| 6. அரங்கநாதன், திரு. ஆர். டி. | விருத்தாசலம். |
| 7. அரங்கநாயகம், டாக்டர் செ. | தொண்டாமுத்தூர். |
| 8. அர்ச்சுனன், திரு. க. | வீரபாண்டி. |
| 9. அழகிரி, திரு. ச. | சிதம்பரம். |
| 10. அழகு திருநாவுக்கரசு, திரு. | ஒரத்தநாடு. |
| 11. அறிவழகன், திரு. ஆ. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.). |
| 12. அன்பழகன், திரு. எஸ். | நாமக்கல் (செ.வ.). |
| 13. ஆசைமணி, திரு. எஸ். | குத்தாலம். |
| 14. ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம். |
| 15. ஆண்டித் தேவர், திரு. எஸ். | திருப்பரங்குன்றம். |
| 16. ஆரோக்கியசாமி, டாக்டர் ச. | திருச்சிராப்பள்ளி-1 |
| 17. ஆறுமுகம், திரு. செ. | வானூர் (செ.வ.). |
| 18. ஆனந்தன், திரு. எம். | உளுந்தூர்பேட்டை (செ.வ.). |
| 19. இந்திர குமாரி, திருமதி இரா. | நாட்ராம்பள்ளி. |
| 20. இராசமாணிக்கம், திரு. க. வெ.வீ. | மேலூர். |

| தொடர் எண்ணும் உறுப்பினரின் பெயரும் | தொகுதியின் பெயர் |
|---|---|
| 60. குமரி அனந்தன், திரு. .. .. | சாத்தான்குளம். |
| 61. குமாரதாஸ், டாக்டர் தே. .. | கிள்ளியூர். |
| 62. குழந்தைவேலு, திரு. சி. .. | குளத்தூர் (செ.வ.). |
| 63. கோடிமாரி, திரு. ஆர். .. .. | நாகப்பட்டினம். |
| 64. கோபால கிருஷ்ணன், திரு. வே. | சங்கரநயினார் கோவில் (செ.வ.) |
| 65. கோபால், திரு. க. .. .. | நன்னிலம் (செ.வ.). |
| 66. கோவிந்தராசு, திரு. மா. .. | ரிஷிவந்தியம். |
| 67. சக்குபாய், திருமதி ரா. .. | கும்மிடிப்பூண்டி. |
| 68. சக்குபாய் தேவராஜ், திருமதி டி... | திருவள்ளூர். |
| 69. சஞ்சய் ராமசாமி, திரு. .. .. | விருதுநகர். |
| 70. சண்முகநாதன், திரு. எஸ். .. | ஆலங்குடி. |
| 71. சண்முகம், திரு. எஸ்.வி. .. | மதுரை மேற்கு. |
| 72. சத்தியமூர்த்தி, திரு. வ. .. | கடலாடி. |
| 73. சந்திரசேகர், திரு. வி.பி... .. | பொள்ளாச்சி. |
| 74. சம்பத், திரு. எ. .. .. | வாணியம்பாடி. |
| 75. சரஸ்வதி, திருமதி அ. தி... .. | சத்தியமங்கலம். |
| 76. சரஸ்வதி, திருமதி ப. .. .. | கபிலர்மலை. |
| 77. சரோஜா, டாக்டர் (திருமதி) வெ. | சங்கரி (செ.வ.). |
| 78. சாத்தையா, திரு. தி. .. .. | இராஜபாளையம் (செ.வ.). |
| 79. சாவித்திரி அம்மாள், திருமதி ஆர். | முகையூர். |
| 80. சிங்காரம், திரு. ஆர். .. .. | பேராவூரணி. |



| | |
|---|---|
| 81. சிங்காரம், திரு. கே. .. .. | மொரப்பூர். |
| 82. சிங்கை கோவிந்தராசு, திரு. .. | சிங்காநல்லூர். |
| 83 சியாமளா, திருமதி ரெ. .. | கோவில்பட்டி. |
| 84. சிவசுப்பிரமணியன், திரு .கு. .. | குறிஞ்சிப்பாடி. |
| 85. சிவபதி, திரு. என். ஆர். .. .. | தொட்டியம். |
| 86. சின்னசாமி, திரு. கா. .. .. | சேந்தமங்கலம் (ம.ப.). |
| 87. சின்னசாமி, திரு.ம. .. .. | கரூர். |
| 88. சின்னசாமி, திரு. வி.கே. | பவானிசாகர் |
| 89. சின்னப்பன், திரு. கே. கே. | ஜெயங்கொண்டம். |
| 90. சீனியம்மாள், டாக்டர் (திருமதி) மு. | அவினாசி (செ.வ.) |
| 91. சீனிவாசன், திரு. ஆ. கு. | பெரணமல்லூர். |
| 92. சீனிவாசன், திரு. கு. | மன்னார்குடி. |
| 93. சுதர்சனம், திரு. டி. | பூந்தமல்லி. |
| 94. சுந்தரசாமி, திரு. எம். | கலசப்பாக்கம். |
| 95. சுந்தரதாஸ், திரு. மா. | விளவன்கோடு. |
| 96. சுந்தரம், திரு. எம். கே. | தண்டராம்பட்டு. |
| 97. சுந்தரராஜ், டாக்டர் ச. | பரமக்குடி (செ.வ.) |
| 98. சுந்தரவேல், திரு. ஏ.கே.சி. | திருப்பத்தூர். |
| 99. சுந்தராம்பாள், திருமதி செ. | மேட்டூர். |
| 100. சுப்பிரமணியம், திரு. வ. மு. | மானாமதுரை (செ.வ.). |
| 101. சுப்பிரமணியன், திரு. வி. என். | பெருந்துறை. |

| தொடர் எண்ணும் உறுப்பினரின் பெயர் | தொகுதியின் பெயர் |
|---|---|
| 102. சுப்பிரமணியன், திரு. வீ. | சுண்டமங்கலம் (செ.வ.). |
| 103. சுப்புரத்தினம், திரு. ஆ. | பழனி (செ.வ.). |
| 104. சுலோசனா, செல்வி எல். | மேட்டுப்பாளையம். |
| 105. சுவாமிநாதன், திரு. சி. | புதுக்கோட்டை. |
| 106. செங்கோட்டையன், திரு. கே. ஏ. | கோபிசெட்டி பாளையம். |
| 107. செல்லக்குமார், டாக்டர் அ. | அண்ணா நகர். |
| 108. செல்லசாமி, திரு. ஏ. டி. | ஒட்டன்சத்திரம். |
| 109. செல்லத்துரை, திரு. ஆ. | திருச்செந்தூர். |
| 110. செல்வகணபதி, திரு. டி. எம். | திருச்செங்கோடு. |
| 111. செல்வராசன், திரு. அ. | துறைமுகம். |
| 112. செல்வராஜ், திரு. கே. | கோயம்புத்தூர் மேற்கு. |
| 113. செழியன், திரு. தா. | பெரம்பலூர் (செ.வ.). |
| 114. சேகர், டாக்டர் எம். பி. | பெரம்பூர் (செ.வ.). |
| 115. சேகர், திரு. எம். ஜி. | பாலக்கோடு. |
| 116. சொக்கலிங்கம், திரு. பி. | மதுராந்தகம். |
| 117. சோமசுந்தரம், திரு. எஸ். டி. | தஞ்சாவூர். |
| 118. ஞானசேகரன், திரு. சி. | வேலூர். |
| 119. டேனியல்ராஜ், திரு. எஸ். | ஸ்ரீவைகுண்டம். |
| 120. தங்கமுத்து, திரு. கு. | திருவோணம். |



| தொடர் எண்ணும் உறுப்பினரின் பெயரும் | தொகுதியின் பெயர் |
|---|---|
| 121. தங்கராஜ், திரு. ஆர். | ஆண்டிமடம். |
| 122. தங்கவேல், திரு. எம். | முசிறி. |
| 123. தண்டாயுதபாணி, திரு. வி. | குடியாத்தம். |
| 124. தமிழரசன், திரு. செ. கு. | வந்தவாசி (செ.வ.). |
| 125. தமிழரசு, திரு. வெ. | ஆத்தூர். |
| 126. தம்புசாமி, திரு. வே. | திருவாரூர் (செ.வ.) |
| 127. தர்மலிங்கம், திரு. கி. | அணைக்கட்டு. |
| 128. தர்மலிங்கம், திரு. பே. | பாளையங்கோட்டை. |
| 129. தவசி, திரு. கே. | ஆண்டிப்பட்டி. |
| 130. தனபால், திரு. ம. | திருப்போரூர் (செ.வ.). |
| 131. தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிபுத்தூர். |
| 132. தாமோதரன், திரு. சி. | நெல்லிக்குப்பம். |
| 133. திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி. |
| 134. துரை, திரு. எஸ். எம். | ஆத்தூர். |
| 135. துரைமுருகன், திரு. கு. சு. | பல்லடம். |
| 136. துரை ராமசாமி, திரு. | வெள்ளக்கோவில். |
| 137. தெய்வநாயகம், திரு. எ. | மதுரை மத்தி. |
| 138. தென்னவன், திரு. மு. | இராமநாதபுரம். |
| 139. தேவராஜ், திரு. அ. | செய்யாறு. |
| 140. தேனி பன்னீர்செல்வம், திரு. | போடிநாயக்கனூர் |
| 141. நடேசன், திரு. இரா. | திருவட்டாறு. |
| 142. நடேசன், திரு. மு. | சேலம்-2. |

| தொடர் எண்ணும் உறுப்பினரின் பெயரும் | தொகுதியின் பெயர் |
|---|---|
| 143. நடேசன், பால்ராஜ் திரு. வெ. | நாங்குநேரி. |
| 144. நாகூர் மீரான், திரு. எஸ். | கடையநல்லூர். |
| 145. நிர்மலா, செல்வி பி. | திண்டுக்கல். |
| 146. நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | தேனி. |
| 147. பஞ்சவர்ணம், திருமதி கே. | வலங்கைமான் (செ.வ.). |
| 148. பட்டாபிராமன், திரு. கா. ப. | காஞ்சிபுரம். |
| 149. பரந்தாமன், டாக்டர் ஜெ. | பேரணாம்பட்டு (செ.வ.). |
| 150. பரமசிவம், திரு. ஆர். பி. | சின்னசேலம். |
| 151. பரமசிவன், திரு. ஏ. எம். | சோழவந்தான். |
| 152. பலராமன், திரு. உ. | பூங்காநகர். |
| 153. பழனிசாமி, திரு. இரா. | தாரமங்கலம். |
| 154. பழனிசாமி, திரு. க. | எடப்பாடி. |
| 155. பழனிசாமி, திரு. நா. சா. | கிணத்துக்கடவு. |
| 156. பழனிசாமி, திரு. வெ. | திருப்பூர். |
| 157. பழனிசாமி, திரு. ஜி. | திருத்துறைப்பூண்டி (செ.வ.). |
| 158. பழனியம்மாள், திருமதி க. | ராசிபுரம். |
| 159. பன்னீர்செல்வம், திரு. என். | திருவிடைமருதூர். |
| 160. பன்னீர்செல்வம், திரு. சா. | திண்டிவனம். |
| 161. பன்னீர்செல்வம், திரு. ஜெ. | திருநாவலூர். |
| 162. பாண்டியம்மாள், திருமதி இரா. | உசிலம்பட்டி. |



| தொடர் எண்ணும் உறுப்பினரின் பெயரும் | தொகுதியின் பெயர் |
|---|---|
| 163. பாப்பா சுந்தரம், திரு. அ. | குளித்தலை. |
| 164. பாலகங்காதரன், திரு. ஜெ. | சிவகாசி. |
| 165. பாலகிருஷ்ணன், திரு. சோ. | முதுகுளத்தூர். |
| 166. பாலசுப்பிரமணியன், திரு. எஸ். ஆர். | பொங்கலூர். |
| 167. பாலசுப்பிரமணியன், திரு. கி. | பட்டுக்கோட்டை. |
| 168. பாலன், திரு. எம். கே. | சைதாப்பேட்டை. |
| 169. பாலையா, திரு. ஆ. | குளச்சல். |
| 170. பியாட்ரிக்ஸ் டி. சோ சா, டாக்டர் (திருமதி). | நியமனம் |
| 171. பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். | தென்காசி. |
| 172. புதுநயினார் ஆதித்தன், திரு. இரா. | சேரன்மகாதேவி. |
| 173. புரட்சிமணி, திரு. ச. | மங்களூர் (செ.வ.). |
| 174. புருஷோத்தமன், டாக்டர் வெ. | பெண்ணாகரம். |
| 175. பூராசாமி, திரு. எம். | பூம்புகார். |
| 176. பெரியசாமி, திரு. வே. | அந்தியூர் (செ.வ.). |
| 177. பெரியவீரன், திரு. எம். | பெரியகுளம். |
| 178. பெருமாள், திரு. செ. | ஏற்காடு (ம.ப.). |
| 179. பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | நிலக்கோட்டை (செ.வ.). |
| 180. பொன்னுசாமி, பேராசிரியர், க. | மருங்காபுரி. |
| 181. பொன்னுசாமி, திரு. பெ. | தருமபுரி. |
| 182. பொன்னுவேலு, திரு. ஏ. தா. | வரகூர் (செ.வ.). |
| 183. போளூர் வரதன், திரு. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.). |
| 184. மணிமேகலை, டாக்டர் (திருமதி) சு. | அரியலூர். |
| 185. மணிமேகலை, திருமதி வி. ஜி. | அருப்புக்கோட்டை. |

| தொடர் எண்ணும் உறுப்பினரின் பெயரும் | | தொகுதியின் பெயர் |
|---|---|---|
| 186. மணிவாசகம், திரு. கே.பி. | | உடுமலைப்பேட்டை. |
| 187. மதுசூதனன், திரு.இ. | | டாக்டர் இராதா கிருஷ்ணன் நகர். |
| 188. மரியமுல் ஆசியா, திருமதி | | அரவக்குறிச்சி. |
| 189. மல்லிகா, செல்வி ஜி. | | புவனகிரி. |
| 190. மனோகரன், திரு. கே.ஏ. | | ஓசூர். |
| 191. மாணிக்கம், திரு.சி. | | ஈரோடு. |
| 192. மாலா, டாக்டர் (செல்வி) ஜி.ஆர். | | திருச்சிராப்பள்ளி-2. |
| 193. முத்துசாமி, திரு.சு. | ... | பவானி. |
| 194. முத்தையா, திரு.இரா. | ... | சேடப்பட்டி. |
| 195. முருகானந்தம், திரு. கே. ஆர். | ... | சிவகங்கை. |
| 196. முருகையா பாண்டியன், திரு. ஆர். | | அம்பாசமுத்திரம். |
| 197. முனிரத்தினம், திரு. ஏ. எம். | ... | சோளிங்கர். |
| 198. முனிவெங்கடப்பன், திரு. கே. | ... | கிருஷ்ணகிரி. |
| 199. முனுசாமி, திரு. கா.பூ. | ... | காவேரிப்பட்டிணம் |
| 200. முஹமது ஆசிப், திரு. | | திருவல்லிக்கேணி. |
| 201. மூர்த்தி, திரு.து. | .. | சீர்காழி (செ.வ.). |
| 202. மோசஸ், டாக்டர் எம். | .. | நாகர்கோவில். |
| 203. ரகுபதி, திரு. செ. | .. | திருமயம். |
| 204. ரங்கநாதன், திரு .ப. | .. | புரசைவாக்கம். |
| 205. ரங்கராஜன், திரு. டி.எம். | ... | மயிலாப்பூர். |
| 206. ரத்தினவேல், திரு. த. | ... | திருவெறும்பூர். |



| தொடர் எண்ணும் உறுப்பினரின் பெயரும் | | தொகுதியின் பெயர் |
|---|---|---|
| 207. ரமணி நல்லதம்பி, திருமதி | ... | ராதாபுரம். |
| 208. ரமேஷ், திரு. வி. பி. ஆர். | .. | தூத்துக்குடி. |
| 209. ரவிக்குமார், திரு.ஏ. | ... | பொன்னேரி (செ.வ.). |
| 210. ரவிச்சந்திரன், திரு.வி. | ... | உப்பிலியாபுரம் (ம.ப.). |
| 211. ராமசுப்பு, திரு. எஸ். எஸ். | ... | ஆலங்குளம். |
| 212. ராஜூ, திரு. எச்.எம். | ... | உதகமண்டலம். |
| 213. ராஜூ, திரு. கே. ஆர். | .. | கூடலூர். |
| 214. ராஜூ, திரு. கே.பி. | ... | பேரூர். |
| 215. ராஜேந்திரன், திரு. என்.ஆர். | | காட்டு மன்னார் கோவில் (செ.வ.) |
| 216. லட்சுமணன், திரு. வி. கே. | ... | கோயம்புத்தூர். (கிழக்கு). |
| 217. லாரன்ஸ், திரு. கு. | ... | பத்மநாபபுரம். |
| 218. லோகாம்பாள், திருமதி ஜெ. | ... | லால்குடி. |
| 219. வரதராஜன், திரு. செ.அ. | ... | செங்கல்பட்டு. |
| 220. விசுவநாதன், திரு. ஜி. | ... | ஆற்காடு. |
| 221. வீரபாண்டியன், டாக்டர் பெ. | ... | செங்கம் (செ.வ.) |
| 222 வெங்கடராம ரெட்டி, திரு. மூ. | .. | தளி. |
| 223. வெங்கடேசன், திரு. பி. ஆர். எஸ். | | கடலூர். |
| 224. வேடியப்பன், திரு. தா. | ... | போளூர். |
| 225. வேணுகோபால், திரு. என். ஜி. | ... | ராணிப்பேட்டை. |
| 226. வேலையா, திரு. டி. | ... | திருநெல்வேலி. |
| 227. ஜனார்த்தனன், திரு. தே. | ... | விழுப்புரம். |

| தொடர் எண்ணும் உறுப்பினரின் பெயரும் | | தொகுதியின் பெயர் |
|---|---|---|
| 228. ஜானகிராமன், திரு. கோ. | ... | மேல்மலையனூர். |
| 229. ஜீனத்ஷெர்புதீன், திருமதி | ... | சேப்பாக்கம். |
| 230. ஜெயக்குமார், திரு. எஸ். | ... | தியாகராய நகர். |
| 231. ஜெயக்குமார், திரு. டி. | ... | ராயபுரம். |
| 232. ஜெயராமன், திரு. எஸ். ஆர். | ... | சேலம்-1. |
| 233. ஜெயலலிதா, செல்வி ஜெ. | ... | பர்கூர். |
| 234. ஜெய்சன் ஜேக்கப், டாக்டர் | ... | ஆரணி. |
| 235. ஸ்ரீதரன், டாக்டர் அ. ... | ... | வால்பாறை (செ.வ.). |

பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்.

| | | |
|---|---|---|
| சுப்பிரமணியன், திரு: கே. | ... | தலைமை வழக்கறிஞர். |

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

புரட்டாசி 4, பிரஜோற்பத்தி, திருவள்ளுவராண்டு-2022.

1991, செப்டம்பர் 20, வெள்ளிக்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் முற்பகல் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

'' சூழாமல் தானே முடிவெய்தும் தம்குடியைத்
தாழாது உஞற்று பவர்க்கு.''

தம் குடி உயர்வதற்கான செயலை விரைந்து முயன்று செய்பவர்க்கு அவர் ஆராயாமலேயே அச் செயல் தானே நிறைவேறும்.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

தகவல் கோரல்.

அ) மதுரை மாவட்டம் திருமங்கலம் சந்தையூர் கிராம தொடக்கக் கூட்டுறவு வங்கியிலிருந்து 17–9–1991 அன்று உரத்தை எடுத்துச் செல்லும்போது ஏற்பட்ட அசம்பாவித சம்பவங்கள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தேனி பன்னீர்செல்வம், திரு. ஆர். சிங்காரம், திரு. சி. ஞானசேகரன், திரு, கி. செல்வராஜ், திரு. செ. கு. தமிழரசன், திரு, வி. தம்புசாமி, திரு. ஜி. பழனிசாமி ஆகிய மாண்புமிகு உறுப்பினர்கள் மதுரை மாவட்டத்தில், இரண்டு நாட்களுக்கு முன்னர் ஒரு கூட்டுறவு அங்காடியிலிருந்து உர மூட்டைகளை கடத்தியவர்களைத் தடுத்த ஊர்மக்கள் மீது டிராக்டரை விட்டு மோதச் செய்து இருவர் இறந்தது பற்றிய ஒரு பிரச்சினையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று என் இசைவைக் கேட்டிருக்கிறார்கள். நான் இசைவை வழங்கியிருக்கிறேன். அதுபற்றிச் சுருக்கமாகக் கூறுமாறு கேட்டுக் கொள்கிறேன். திரு. தேனி பன்னீர் செல்வம்.

* திரு. தேனி பன்னீர்செல்வம்: பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், சேடப்பட்டி தொகுதியைச் சேர்ந்த பேரையூர் போலீஸ் சரகம் சந்தையூர் கிராமத்திலே எம்.டி. ஸ்பெஷல் 54 தொடக்கக் கூட்டுறவு வங்கியினுடைய

செயலாளரும் அவருக்குத் துணையாக 5 பேரும் சேர்ந்து அங்கே யிருந்த 70 மூட்டை உரங்களை கடத்திச் செல்லுகின்ற வேளை யில், பொதுமக்கள் தலையிட்டு, அவ்வாறு கடத்திச் செல்வதைத் தடுக்க முயன்றபோது பொது மக்களுக்கும், அந்தச் சங்கத் தினுடைய நிர்வாகத்தினருக்கும் ஏற்பட்ட தகராறைத்* தொடர்ந்து அந்த டிராக்டரை ஓட்டி வந்தவர் அச்சுறுத்தி—மூட்டைகளை ஏற்றி வந்த டிராக்டரை மேலே ஏற்றி விடு வேன் என்று அச்சுறுத்தி—பொது மக்களை மிரட்டி அவர் களை ஒதுங்கிக் கொள்ளும்படி கேட்டிருக்கிறார். ஆனால் பொதுமக்கள் நியாயத்திற்காகப் போராடி அங்கே அந்த டிராக் டரை மறித்து உட்கார்ந்து சாலை மறியல் போராட்டம் நடத்திய போது அந்த பொது மக்கள் மீது டிராக்டரை அத்து மீறி ஏற்றி அதனால் அங்கே ஹோமியோபதி டாக்டராகப் பணியாற்றி வந்த திரு. நடராஜன் என்பவரும், கிருஷ்ணம்மாள் என்கின்ற ஒரு பெண்மணியும் ஸ்தலத்திலேயே உயிரிழந்திருக்கிறார்கள். மேலும் 3 பேர் படுகாயத்தோடு மதுரை அரசு பொது மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலையில் அங்கே பதட்டம் நிலவினாலும் கூட மாவட்ட காவல்துறை கண்காணிப் பாளர் அவர்கள் சிறந்த முறையிலே நல்ல நடவடிக்கையை எடுத்து பதட்டத்தைத் தணித்து குற்றவாளிகளையெல்லாம் கைது செய்திருக்கிறார்கள். நல்ல நடவடிக்கை எடுக்கப்பட் டிருந்தாலும் பாதிக்கப்பட்டவர்கள் ஒரு நியாயத்தின் காரண மாகப் போராடி தங்களுடைய இன்னுயிரை இழந்திருக்கிறார்கள். இறந்திருக்கக்கூடிய இரண்டு பேர்களுமே மிகவும் ஏழ்மையான குடும்பங்களைச் சார்ந்தவர்கள். நியாயத்திற்காக போராடிய அவர்களுக்கு இந்த அரசு கருணை உள்ளத்தோடு வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டும். அதே போல அங்கே பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக் கக்கூடிய நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டிருக்கக் கூடியவர் களுக்கும் இந்த அரசு உதவி செய்ய வேண்டும் என்பதைத் தெரி வித்து அந்த தொடக்கக் கூட்டுறவு வங்கியினுடைய செயலாளர் இதற்கு முன்பும் இதுபோன்ற பல்வேறு தவறுகளைச் செய் திருக்கிறார்கள். அந்தத் தவறுகளுக்கெல்லாம் சரியான, நியாய மான, ஒரு உறுதியான நடவடிக்கை எடுத்து பொதுமக்கள் மத்தியிலே இருக்கக்கூடிய அச்சத்தைப் போக்கவேண்டுமாய் இந்தப் பேரவையின் மூலம் பணிந்து வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

* மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், திருமங்கலம் சந்தையூர் கிராம தொடக்கக் கூட்டுறவு வங்கியிலிருந்து கடந்த 17-9-1991 அன்று உரத்தை எடுத்துச் செல்லும்போது ஏற்பட்ட விபத்து குறித்து பேரவையின் உறுப்பினர்கள் பலர் இங்கே எடுத்துப் பேசியிருக் கிறார்கள்.



முற்பகல் 9-35

அன்று காலை சுமார் 9-30 மணி அளவில் மதுரை மாவட்டம் சந்தையூர் கிராம தொடக்கக் கூட்டுறவு வங்கியில் இருந்து 80 மூட்டைகள் உரத்தை ஒரு டிராக்டரில் ஏற்றிக் கொண்டு சென்ற போது கிராம மக்கள் அதைத் தடுக்க முடிவு செய்தனர். டிராக்டரை ஓட்டினால் மறியல் செய்தவர்கள் விலகி விடுவார்கள் என்று கருதி டிராக்டரை ஓட்டிய போது மறியல் செய்தவர்களில் ஓமியோபதி டாக்டர் திரு. நடராஜன் என்பவரும் திருமதி கிருஷ்ணம்மாள் என்பவரும் வண்டியில் அடிப்பட்டு அந்த இடத்திலேயே மாண்டனர்.

சம்பவம் தெரிந்தவுடன் திருமங்கலம் கூட்டுறவுச் சங்க துணைப் பதிவாளர் ஸ்தலத்திற்குச் சென்று பார்வையிட்டு, விசாரித்தார். மறுநாள் 18-9-1991 அன்று மதுரை மத்திய கூட்டுறவு வங்கி தனி அலுவலர்|செயலாளர், இணைப் பதிவாளர் (கூடுதல் பொறுப்பு), துணைப் பதிவாளர், திருமங்கலம் ஆகியோர் சங்கத்திற்குச் சென்று விசாரித்தனர். விசாரித்ததில் கீழ்க் கண்ட விவரங்கள் தெரிய வந்துள்ளன:—

சம்பவத்தில் குறிப்பிடப்பட்ட டிராக்டரில் கீழ்க்கண்ட உர மூட்டைகள் இருந்தன —

| | | மூட்டைகள். |
|---|---|---|
| விஜய் கலப்பு உரம் | .. | 40 |
| டி. எப். கலப்பு உரம் | .. | 30 |
| விஜய் யூரியா | .. | 10 |

டிராக்டரில் விருதுநகரினைச் சேர்ந்த வியாபாரி ஒருவரும் இருந்தார்.

இந்த உர மூட்டைகள் மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், சந்தையூர் கிராம தொடக்கக் கூட்டுறவு வங்கி யிலிருந்து எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. இந்த 80 மூட்டை களும் வங்கியில் கடன் பெற்ற விவசாயிகளுக்கு கடனாக விற்பனை செய்ததாக பதிவு செய்யப்பட்டு இருந்தது. சென்ற வாரமாக உரம் இருப்பு இல்லை என்றும் அதனால் விற்பனை செய்யவில்லை என்றும் வங்கி செயலாளர் திரு. முத்துராமலிங்கம் கூறி வந்துள்ளார் என்று பொது மக்கள் புகார் செய்தனர். இச்சம்பவம் தொடர்பாக டிராக்டர் ஓட்டுநர், தனியார் வியாபாரி, வங்கிச் செயலாளர் திரு. முத்துராமலிங்கம், லோட் மேன், கிராம தலையாரி, பொது மக்களில் இதற்கு உடந்தை யாக இருந்ததாகக் கருதப்படும் ஒருவர் ஆகிய 6 பேர்கள் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு பேரையூர் காவல் நிலை

யத்தில் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். உசிலம்பட்டி கோட்
டாட்சியர், திருமங்கலம் காவல் துறை கண்காணிப்பாளர் ஆகி
யோர் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று விசாரணை செய்து
நிலைமையைக் கட்டுப்படுத்தினார்கள். தற்போது வங்கி
அலுவலகத்தையும், உரக் கிடங்கையும் காவல் துறையினர் மூடி
சீல் வைத்துள்ளனர். 20–9–1991 அன்று உசிலம்பட்டி கோட்
டாட்சியர் முன்னிலையில் வங்கி அலுவலகம் திறக்கப்படும்
என்று எதிர்பார்க்கப்படுகிறது. வங்கி அலுவலகம் திறந்தபின்
உர இருப்பு, விற்பனை போன்ற ஆவணங்களை எடுத்து மேலும்
விசாரணை தொடரும். இவ்வழக்கில் கைது செய்யப்பட்ட
வர்கள்மீது பேரையூர் காவல் நிலையத்தில் இ.பி.கோ. 147, 302,
307 ஆகிய பிரிவுகளின் கீழ் குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்
டுள்ளன. தற்போது நிலைமை கட்டுக்குள் இருக்கிறது. வேறு
எந்தவிதமான அசம்பாவிதமும் ஏற்படவில்லை என்று காவல்
துறையினர் தெரிவித்து உள்ளனர்.

டான்பெட் மூலம் இக்கூட்டுறவு வங்கிக்கு ஜூலை மாதத்தில்
10 மெட்ரிக் டன் உர வகைகளும், செப்டம்பர் மாதத்தில் 10
மெட்ரிக் டன் உரங்களும் அனுப்பப்பட்டுள்ளன. இவை மானிய
அடிப்படையில் சிறு, குறு விவசாயிகளுக்குக் கொடுப்பதற்காக
அனுப்பப்பட்டதல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தச் சம்பவத்தில் இறந்து போன இருவருக்கும் மாண்புமிகு
முதலமைச்சர் அவர்களுடைய பொது நிதியிலிருந்து 3 ஆயிரம்
ரூபாய் வரையில் தருவது வழக்கம். நேற்று நம்முடைய மாண்பு
மிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே இந்தச் செய்தியை எடுத்துச்
சொன்னபோது நியாயத்திற்காக போராடியதற்காக தலா
10 ஆயிரம் ரூபாய் தரும்படி அன்போடு தெரிவித்து இருக்கிறார்
கள். (மேசையைத் தட்டு ஒலி) மாண்புமிகு முதலமைச்சர்
அவர்களுடைய நிதியிலிருந்து தருவதற்கு ஆணை பிறப்பித்து
இருக்கிறார்கள். அந்த வகையில் நியாயத்திற்காக போராடி
யதற்கு இந்த அரசு நியாயத்தின் பக்கத்திலே இருக்கிறது என்
பதைச் சொல்லி அமர்கிறேன். வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> இது சம்பந்தப்பட்ட
இடம் என்னுடைய தொகுதியைச் சேர்ந்தது. இறந்தவர்
களுடைய குடும்பத்திற்கு தலா 10 ஆயிரம் ரூபாய் வழங்குவதற்கு
அனுமதி அளித்திருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு
என்னுடைய நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்
கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மற்றபடி மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இந்தக் கூட்டுறவுச்
சங்கங்களில் இருக்கிற செயலாளர்கள் இப்போது கலைக்கப்பட்ட
சங்கங்களின் முன்னாள் தலைவர்களாலே நியமிக்கப்பட்டுபல இடங்க
ளிலே இருக்கிறார்கள். அவர்கள் எந்தச் சட்டத்தின் கீழும் கட்டுப்
பட மாட்டோம் என்று ஏதோ குறுநில மன்னர்களைப் போல
இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மீதும் துறை உரிய நட



வடிக்கைகளை எடுப்பதற்கு இந்த ஒரு சங்கம் என்று இல்லாமல்
எல்லா சங்கங்களிலும் இன்றைக்கு இந்தச் செயலாளர்கள் பழைய
தலைவர்களைப் போல இருந்துகொண்டிருக்கிறார்கள். (மேசை
யைத் தட்டும் ஒலி) அவர்கள் மீதும் ஏதாவது உரிய நடவடிக்கை
கள் எடுத்தால்தான் இதுபோன்ற நிகழ்ச்சிகள் வராமல் தடுக்க
முடியும். அதற்கு அரசு தக்க முடிவு எடுக்க வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன்.

<u>*மாண்புமிகு திரு. க. இராசாராம்:</u> மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இந்தக் கருத்தைச் சொன்ன பிறகு,
மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இதற்கு முழு ஆதரவு அளித்த
பிறகு இந்தச் செயலாளர்கள் பலயிடங்களில் இப்படிப்பட்ட
நிலைகளில் இருப்பதை நான் நன்கு அறிவேன். 20 வருடங்கள்,
25 வருடங்கள் என்று ஒரே சங்கத்திலேயே இருந்து கொண்
டிருக்கிறார்கள். ஆகவே அதற்கு தக்க நடவடிக்கைகளை
அதற்கான ஒரு மசோதாவைக்கொண்டு வந்து நிறைவேற்றி எடுப்
பேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும்
ஒலி.)

## 2. அறிக்கை அளித்தல்.

### பொது நிறுவனங்கள் குழு.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> பொது நிறுவனங்கள்
குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கி. தருமலிங்கம்,
பொது நிறுவனங்களின் குழுவின் தலைவர்.

<u>திரு. கி. தருமலிங்கம்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக தலைவர்
ஆகிய நான் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில்கள் வாரியத்தின்
செயல்முறை பற்றிய ஆய்வு குறித்த குழுவின் 8-வது அறிக்கை.
1971–72 முதல் 1975–76 ஆம் ஆண்டு வரையிலான தமிழ்நாடு
கதர்-கிராமத் தொழில் வாரியத்தின் கணக்குகள் குறித்த
தணிக்கை அறிக்கையின் மீது பொது நிறுவனங்கள் குழு (1986–
87) அளித்த நாற்பத்தி இரண்டாவது அறிக்கையில் கண்டுள்ள
பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை
பற்றிய அறிக்கை மீதான குழுவின் ஒன்பதாவது அறிக்கை.

மற்றும் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின்
செயல்முறைகள் குறித்த பொது நிறுவனங்கள் குழு (1985–86)
அளித்த ஏழாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின்
மீது அரசு எடுத்துள்ள மேல் நடவடிக்கை பற்றிய அறிக்கை
மீதான பத்தாவது அறிக்கை ஆகியவற்றை இப் பேரவைக்கு
அளிக்கின்றேன்.

(ஆ) உறுப்பினர் திரு. இளம்வழுதிக்கு அளிக்கப்பட்ட தண்டனை பற்றிய தீர்ப்பை மறுபரிசீலனை செய்யவேண்டுமென்ற கோரிக்கை குறித்து.

முற்பகல் 9-40 .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. தம்புசாமி.

திரு. வி. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் இரண்டு பேரும் வராதது குறித்து தங்களுடைய தீர்ப்பை மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் அடுத்த திங்கட்கிழமையாவது வருவதற்கு.................. (கூச்சல்) (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பழனிசாமி, தயவு செய்து........(கூச்சல்) இந்தப் பிரச்சினையில்............ (குறுக்கீடு).

திரு. ஜி. பழனிசாமி : வேண்டுமானால் நாங்களும் சேர்ந்து வெளியே........(கூச்சல்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி, இந்தப் பிரச்சினையில் எல்லா தலைவர்களோடும் கலந்து பேசி பின்னர் என்னுடைய முடிவை அறிவிக்கிறேன். (கூச்சல்), (குறுக்கீடு).

திரு. ஜி. பழனிசாமி : நான் வெளியே போவதுபற்றி ஒன்றும் பிரச்சினை இல்லை. அவையில் மக்களுடைய நலனைக் கருதித்தான் நாம் பேசுகிறோமே தவிர............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்று சொல்வது அவ்வளவு**பொருத்தமாக இல்லை (குறுக்கீடு). அது அவைக்குறிப்பிலே இருந்து எடுக்கப்பட வேண்டும். (குறுக்கீடு). நீங்கள் அப்படிச் சொல்லக் கூடாது, இல்லையா? * * என்று சொல்வதும் அவைக்கு வருவதற்காக * * என்று சொல்வதும் தவறான வார்த்தையாக இருக்கிறது.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப் பெற்றது.



*[திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் குறிப்பிட்டபடி கட்சித் தலைவர்களைக் கூட்டி அதிலே முடிவுசெய்வதுதான் சரியாக இருக்கும். நண்பர் பழனிசாமி அவர்கள் இதிலே உணர்ச்சிவயப் படத் தேவையில்லை. நீங்கள் வைத்த வேண்டுகோள் அப்படியே இருக்கிறது. அதை, தலைவர் அவர்கள் மறுபரிசீலனை செய்ய மாட்டேன் என்றும் சொல்லவில்லை. தலைவர்களை அழைத்துப் பேசி அதுகுறித்து ஒரு முடிவு எடுக்கலாம் என்று சொல்வதுதான் நல்ல முடிவு. இவ்வளவு பேர்களை வைத்துக்கொண்டு அவையிலே பேசுவதைவிட, நாம் பேரவைத் தலைவர் அவர்களுடைய அறையிலே பேசி இதற்கு ஒரு முடிவு காணலாம். அதுவரை, பேரவை நடவடிக்கைகள் எப்பொழுதும்போல் நடப்பதற்கு எதிர்கட்சிகளான நாமும் பேரவைக்கு ஒத்துழைப்பு தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததைப் போன்ற வார்த்தைகள், திரு. பழனிசாமி அவர்கள் பேசியது, அவைக் குறிப்பில் இருக்குமானால், அவற்றை அவைக் குறிப்பிலிருந்து நீக்க உத்தர விடுகிறேன்.

3. மானியக் கோரிக்கைகள், 1991-92

விவாதமும், வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண். 26—கைத்தறியும், துணித் தொழிலும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும்—தொடர்ச்சி. மானியக் கோரிக்கை எண். 26.—கைத்தறியும், துணித் தொழிலும். மாண்புமிகு கைத்தறி மற்றும் நெசவாலைகள் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' கைத்தறியும், துணித் தொழிலும் பற்றிய 26ஆம் எண். மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 59,00,28,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும் '' என்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண். 554, திரு. மா. சுந்தரதாஸ்.

Thiru M. SUNDARADOSS : Mr. Speaker Sir,

"To discuss the need to set-up Investigation Cells to Improve and modernise colours and designs of handloom cloth" I move — That the allotment of Rs. 59,(0 28,000 under Demand No. 26— Handloom and Textiles be reduced by Rs. 100.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண். 553, திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கைபற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

" கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய26ஆம் எண். மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெற்ற ரூ. 59,00,28,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறியும், துணித் தொழிலும் பற்றிய கொள்கைக் குறிப்புகள் அவை முன்னால் தமிழிலும், ஆங்கிலத்திலும் வைக்கப்பட்டிருக்கின்றன. நான் அவைகளைப் பேசியதாகக் கருதி தாங்கள் பதிவேட்டில் பதிவுசெய்து கொள்ள* வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேநேரத்தில் அவையிலே உள்ள உறுப்பினர்கள் அதற்கான கருத்துக்களைத் தெரிவிப்பார்களேயானால், இறுதியாக என்னுடைய முடிவைத் தெரிவிக்கிறேன் என்பதனை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இம்மானிய கோரிக்கைகளுக்கான விவாதத்திற்கு நேரம் முற்பகல் 11-30 வரையிலேயும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதைத் தொடர்ந்து சமூக நலன் பற்றிய மானியக் கோரிக்கையை எடுக்க இருக்கிறோம் என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும்.

* 226–254 ஆம் பக்கங்களில் இணைப்பு 1ஆக அச்சிடப் பெற்றுள்ளது.



முற்பகல் 9-45

எனவே, இதிலே பேசுவதற்கு வாய்ப்பு பெற்றிருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் எவ்வளவு சுருக்கமாகப் பேசினால் 11-30-க்கு இந்த மானியக் கோரிக்கையை முடிக்கமுடியும் என்பதை உணர்ந்து அதற்கு ஏற்றவாறு சுருக்கமாகத் தங்களுடைய கருத்துக்களைக் கூறுமாறு கேட்டுக்கொள்கிறேன். திரு. வி. தண்டாயுதபாணி.

திரு. வி. தண்டாயுதபாணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறித் துணி என்கின்ற இந்த மானியக் கோரிக்கையிலே பேசுகின்ற ஒரு அரிய வாய்ப்பு கிடைத்தமைக்கு என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். "ஆள் பாதி, ஆடை பாதி" என்று சொல்லுவார்கள். அண்ணா அவர்களும், தந்தை பெரியார் அவர்களும் கைத்தறித் துணியைத் தோளின்மேலும், தலையின்மீதும் சுமந்து விற்ற காலங்கள் உண்டு. அப்படிப்பட்ட கைத்தறி நெசவாளர்களுக்கு நல்வாழ்வு அளிக்கின்ற வகையிலே இந்த அரசு சிறப்பான நல்ல திட்டங்களை யெல்லாம் தீட்டி, கைத்தறி நெசவாளர்களுக்குப் பல்வேறு விதங் களிலே உதவிபுரிகின்ற அளவிற்கு நல்ல திட்டங்களையும் கைத்தறியை நவீனமயமாக்குவதற்கு வேண்டிய பல்வேறு விதமான உபயோகமான கருத்துக்களையும், கைத்தறி நெசவாளர்கள் இறந்தால் பத்தாயிரம் ரூபாய் என்று இருந்ததை, அந்தக் குடும்பத்திற்கு உதவித் தொகையாக பதினைந்தாயிரம் ரூபாய் என்றும் உயர்த்தியிருக்கின்றது.

அதேபோன்று, நல்ல கைத்தறியைப் போடுவதற்காக இரண்டாயிரம் ரூபாய், மூன்றாயிரம் ரூபாய், கைத்தறி உபகரணங்கள் வாங்குவதற்கு ஆயிரம் ரூபாய் என்று அறிவித்திருக்கிறார்கள்.

அதேபோன்று, ஓய்வூதியம் போன்ற பல்வேறு நலம்பயக்கும் திட்டங்களையும் இந்த அரசு அறிவித்திருக்கிறது.

நெசவாளர்களுக்கு என்றைக்கும் இல்லாத அளவிற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலே மிகத் தெளிவாக ஒரு நல்வாழ்வுக்கு உத்தரவாதம் அளிக்கின்ற வகையிலே இந்த மானியக் கோரிக்கையும், பொதுவான பட்ஜெட்டும் அமைந்திருப்பதிலே நான் மிகவும் பெருமைப்படுகின்றேன்.

அதேபோன்று, நெசவாளர்களுக்கு அவ்வப்பொழுதெல்லாம், துன்பங்கள் ஏற்பட்டபோது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், காங்கிரஸ் பேரியக்கமும் ஒன்றாகச் சேர்ந்து, நெசவாளர்களுக்குக் கிடைக்கின்ற சிட்ட நூல்களுடைய விலையைக் குறைக்கவேண்டும் என்பதோடு இந்த நூலுக்குப் போட்டிருக்கின்ற வரியை—மூன்று சதவீதம் போட்டிருக்கின்றீர்கள்,—குறைக்கவேண்டுமென்று இன்றைக்கு அல்ல, ஆளுநர் ஆட்சி

யிருந்தபொழுது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்
றக் கழகத்தின் சார்பாக, இன்றைய அமைச்சராக இருக்கின்ற
மதிப்பிற்குரிய மாண்புமிகு திரு. மதுசூதனன் அவர்களும்
திரு. அனகாபுத்தூர் இராமலிங்கம் அவர்களும், நாங்களும் ஒன்
றாகச் சேர்ந்து, கவர்னர் மாளிகைக்கு ஊர்வலம் நடத்தி,
கவர்னர் அவர்களும் 3 சதவீதம் வரியிலேயிருந்து இரண்டு
சதவீதமாகக் குறைத்தார்கள். ஆனால், இன்றைக்கும் அந்த
இரண்டு சதவீத வரி, சிட்ட நூலுக்கு இருந்துகொண்டே இருக்
கிறது.

முற்பகல் 9-50

அதை ஏன் எடுக்க வேண்டுமென்று நாங்கள் கோருகிறோம்
என்று சொன்னால், நாம் தோழமையோடு இருந்து அதை
எடுக்க வேண்டுமென்பதற்குக் காரணம் என்னவென்று சொன்
னால், பக்கத்திலே இருக்கின்ற ஆந்திர மாநிலம், இந்தியாவிலே
எந்த மாநிலத்திலேயும் நெசவுத் தொழிலுக்கு உபயோகப்படுத்து
கின்ற சிட்ட நூலுக்கு வரி கிடையாது. ஆனால் தமிழ்நாட்
டிலே மட்டும்தான் அந்த வரி உண்டு. அப்படி அந்த வரி விதிக்
கப்படுகின்ற காரணத்தினால், பக்கத்திலேயேயிருக்கின்ற நகரி
புத்தூர் போன்ற பகுதிகளிலேயிருந்து நெய்து வருகின்ற லுங்கி,
கைத்தறித் துணிகளை இங்கே குறைந்த விலைக்கு விற்கின்றார்
கள். நம்முடைய நெசவாளர்கள் நெய்கின்ற துணிகளை அந்த
விலைக்கு ஈடாக நம்மால் விற்க முடியவில்லை. ஆகவே
தான், வெளி மாநிலங்களுக்குப்போய், நம்முடைய தோழர்கள்
லுங்கிகளையும், மற்றவைகளையும் வாங்கி வந்து இங்கே விற்கின்
றார்கள். நம்முடைய நெசவாளர்கள் நெய்கின்ற துணியி
னுடைய விற்பனை குறைவாக இருந்துகொண்டிருக்கிறது.
ஆகவே, இந்த மாமன்றத்திலே மாண்புமிகு அமைச்சரவர்களை
மெத்தப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். இந்த
சிட்ட நூலுக்குப் போட்டிருக்கிற வரியை— 2 சதவிகித
வரியை— நிச்சயமாக ரத்துசெய்ய வேண்டுமென்று மெத்தப் பணி
வன்போடு கேட்டுக் கொள்கிறேன். காரணம், அவர்களுடைய
தொகுதியிலேயும் நெசவாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்
பதை நான் தெளிவாக அறிவேன். இன்றைக்கு மாலையிலே
பத்திரிகையிலே, சிட்ட நூலுக்குள்ள இரண்டு சதவிகித வரியை
யும், அமைச்சர் அவர்கள் ரத்து செய்து விட்டார்கள் என்கிற
கொள்கை அறிவிப்பு வருமேயானால், அமைச்சர் அவர்களை
எவ்வளவு தூரம் அந்தத் தொகுதி வாழ் மக்கள் நல்ல முறையிலே
பாராட்டுவார்கள் என்பதை உணரலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்
கள் அனைவரும் அமைதியாக இருக்க வேண்டும். ஒருவருக்
கொருவர் பேசிக் கொண்டிருப்பதைத் தவிர்க்க **வேண்டும்.**



திரு. வி. தண்டாயுதபாணி: இந்த 2 சதவிகித வரியை,
மொத்தமாக எடுத்துவிட வேண்டுமென்று நான் சொல்கிறேன்.
கைத்தறி மானியக் கோரிக்கையாக இருந்தாலும், நான் ஒன்றைச்
சொல்கிறேன். வேறு மாநிலங்களிலே சென்று, பொருள் எதற்
காக வாங்குகிறார்கள்? துணியை மட்டுமல்ல வேறு எந்தப்
பொருளானாலும் வேறு மாநிலங்களுக்குச் சென்று ஏன் அந்தப்
பொருளை வாங்கி வந்து, இங்கே அதை உபயோகப்படுத்து
கிறார்கள்? வெறுமனே, ''என்ட்ரி டாக்ஸ்'' மட்டும் கட்டி
விட்டு, பொருட்களை இங்கே கொண்டு வந்து உபயோகப்படுத்து
கிறார்கள். இதனால், நம் மாநிலத்திலே விளைகின்ற,
நம் மாநிலத்திலே செய்கின்ற பொருட்களுக்கு கிராக்கி இல்லா
மல் போய்விடுகிறது. அதை நல்ல முறையிலே கவனித்து,
அதற்கு ஒரு கமிட்டி போட்டு, எந்தெந்தப் பொருட்களை மற்ற
மாநிலங்களிலே இருந்து, இங்கே கொண்டுவந்து விற்பதற்கு செய்து
கொண்டிருக்கிறார்களோ, அந்தப் பொருட்கள் இங்கேயே
கிடைத்தும் கூட, அதை வாங்காமல் இருப்பதற்குக் காரணம்
என்னவென்று ஆராய்வதற்கு ஒரு கமிட்டி போட்டு, அதைச்
செயல்படுத்த வேண்டுமென்று இந்த மாமன்றத்திலே **நான்**
கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, இந்த சிட்ட நூல் மட்டுமல்ல;
நேற்றைய தினம் மதிப்பிற்குரிய நம்முடைய அனைத்திந்திய
அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொறடா,
மாண்புமிகு திரு. பட்டாபிராமன் அவர்கள் தலையிட்டு, பட்டு
நெசவாளர்களுக்கு,—அவர்களுடைய தொகுதியிலேயுள்ள பட்டு
நெசவாளர்களுக்கு — 20 சதவிகிதம் கூலி உயர்வை ஏற்படுத்திக்
கொடுத்திருக்கிறார்கள். பாராட்ட வேண்டியது. ஆகவே,
பட்டு நெசவாளர்கள் சார்பாக அவர்களை நான் பாராட்டக்
கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோன்று, 20 சதவிகிதம்
பட்டு நெசவாளர்களுக்கு மட்டுமல்ல கைத்தறி
நெசவாளர்களுக்கும் அந்த 20 சதவிகித கூலி உயர்வை ஏற்படுத்
தித் தந்தால், நிச்சயமாக இந்த மாமன்றத்தை, கைத்தறி நெச
வாளர்கள் அதுவும் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே
நெசவாளர்களுக்கு எல்லாம் விரைவாகக் கிடைக்கும் என்று
பாராட்டுவார்கள் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்
கிறேன்.

ஒன்றை மட்டும், நான் இங்கே ஞாபகப்படுத்த ஆசைப்படு
கிறேன். 1985 ஆம் ஆண்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி
அவர்கள் இந்த மாமன்றத்திலே இல்லையென்று சொன்னா
லும், கைத்தறி மானியத்திற்காக, மாநிலங்கள் அவையிலே,
22 ரகங்களை கைத்தறித் துணிக்கு ஒதுக்க வேண்டுமென்று 1½
மணிநேரம், புரட்சித் தலைவி அவர்கள் ஒரு பெரிய 'மராத்
தான்' உரையை நிகழ்த்தினார்கள் என்பதை மெத்தப் ப
ணிவன்போடு இங்கே ஞாபகப்படுத்த விரும்புகிறேன். 22 ரகங்
கள் ஒதுக்கப்படவில்லை என்று சொன்னாலும், இன்றைய தி
னம்

[திரு.வி. தண்டாயுதபாணி] [1991 செப்டம்பர் 20

10 ரகங்களையாவது, 15 ரகங்களையாவது ஒதுக்கி அதை நீங்கள் செயலாக்க வேண்டும். இந்த மாமன்றம் அதற்கென்றே ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து, கைத்தறி நெசவாளர்களுக்கு என்று இத்தனை ரகங்களை ஒதுக்கி இருக்கிறோம் என்று சொல்லி ஒரு தீர்மானத்தை இந்த மாமன்றத்திலே நிறைவேற்ற வேண்டுமென்று, எல்லா அங்கத்தினர்கள் சார்பாகவும் மெத்தப் பணிவன்போடு இங்கே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

முற்பகல் 9-55

இன்னொன்று : என்றைக்கும் உதவிக் கொண்டிருக்கிறவர்கள் — நம்முடைய நெசவாளர்களுக்கு, பருத்தி விலை உயர்ந்த காரணத்தினாலே, நூல் விலை உயர்ந்த காரணத்தினாலே, சரியாக நூல் கிடைக்கவில்லை என்று அல்லல்பட்டபோது, ஜூலை மாதத்து விலையிலேயே தனிப்பட்ட நெசவாளர்களுக்கு இரண்டாயிரம் பேர்களுக்கு வழங்க வேண்டுமென்று புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டார்கள். நெசவாளர்கள் பயன் பெற்றார்கள். அது நிறுத்தப்பட்டிருக்கிறது. தொடர்ந்து அந்தத் தனிப்பட்ட நெசவாளர்களுக்கு, இரண்டாயிரம் பேர்களுக்கு அச்சலுகை கிடைக்க வேண்டும். அப்போதுதான் நூல் விலை உயர்ந்தாலும், தனிப்பட்ட நெசவாளர்கள் நூற்றுக்கு 90 சதவிகிதம் இருக்கிற தனிப்பட்ட நெசவாளர்கள் அதிலே பயன் பெறுவார்கள் என்பதை நான் இங்கே மெத்தப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். இன்னொன்று : இந்த நெசவாளர்களுக்கு ஏன் இந்த குறைந்த விலையிலே கொடுக்க வேண்டுமென்று சொன்னால், ஏற்றுமதி ஆகிற கைத்தறிப் பொருட்கள் — ஏற்றுமதி ஆகிற கைத்தறித் துணிகள் நூற்றுக்கு 90 சதவிகிதம், தனிப்பட்ட நெசவாளர்கள் நெய்து முடிக்கின்ற துணிகளைத்தான் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். அதற்கு ஒரு உதாரணம். 1989—90 ஆம் ஆண்டு 375 கோடி ரூபாய்க்கான துணி ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது இந்தியா முழுவதிலும். அதிலே தமிழகத்திலே மட்டும் 100 கோடிக்கு மேலே ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. தமிழகத்திலே மட்டும் 100 கோடிக்கு மேலே ஏற்றுமதி செய்யப்பட்டிருந்தால், அதிலே வெ'றுமனே 10 கோடிதான் கூட்டுறவுச் சங்கங்கள், கோ-ஆப்டெக்ஸ், இப்படிப் பலதரப்பட்ட சங்கங்கள் ஒன்றாகச் சேர்ந்து ஏற்றுமதி செய்தது வெறுமனே 10 கோடி ரூபாய் தான. ஆனால், 90 கோடி தனிப்பட்ட நெசவாளர்கள் ஒன்றாகச் சேர்ந்து ஏற்றுமதி செய்ததாகும். ஆனால் நாம் கொடுக்கின்ற சலுகைகள், மற்றவைகளோடு, அவர்களுக்குக் கொடுக்கின்ற பல்வேறு உபகரணங்கள் வெறுமனே இந்தக் கூட்டுறவு கோ-ஆப்டெக்ஸ் இதோடு மட்டும் நின்றுவிடுகிறது. ஆகவே, தனிப்பட்ட நெசவாளர்களுக்கும் அதைக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதை எப்படி



1991 செப்டம்பர் 20] [திரு. வி. தண்டாயுதபாணி]

நிர்ணயிப்பது என்று சொன்னால், தனிப்பட்ட நெசவாளர்களுக்கு, மாஸ்டர் வீவர்ஸின் கீழே வேலை செய்கின்ற நெசவாளர்களுக்கு ஒரு அடையாள அட்டை வழங்க வேண்டும். அப்படி வழங்கினால் அது அவர்களுக்கு இலாபகரமாக இருக்கும். அவர்களும் இந்தத் திட்டத்தன் கீழ் வருவார்கள். அவர்கள் இந்தத் திட்டத்தின் கீழ் வந்து நன்மை பெறுகின்ற அளவுக்கு இந்தத் திட்டம் இருக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, நெசவாளர்களுடைய பிரச்சினையில் இங்கே கொள்கை விளக்கக் குறிப்பில் முதல் பக்கத்திலே நம்முடைய அறிக்கையிலே அமைச்சர் அவர்கள் தெளிவாகக் கொடுத்திருக்கிறார்கள். 'இத்தொழில் சுற்றுப்புறத் தூய்மைக்குக் கேடு விளைவிக்காததாகும்,. கேடே விளைவிக்காது என்று முதல் பக்கத்திலே நம்முடைய மாநில அறிக்கையிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், மாசுக் கட்டுப்பாட்டு நிறுவனத்தின் கீழ் இருக்கின்ற சாயத் தொழிற்சாலைகள், சாதாரணமாக குடியாத்தம், குறிஞ்சிப்பாடி போன்ற பகுதிகளில் இருக்கின்ற சாயம் போடுகின்றவர்களுக்கு டையிங் பேக்டரி— நம்முடைய ஈரோட்டிலும் உள்ளது. அவர்களுக்கெல்லாம், இந்தச் சாயம் போடுகின்ற தொழிற்சாலைக்கு, அது குடிசைத் தொழிலாக இருந்தாலும் சரி, பெரிய தொழிலாக இருந்தாலும் சரி, அதை மாசுக் கட்டுப்பாட்டின் கீழே கொண்டுவந்து நீங்கள் அத்துணை பேரும் இந்த இந்தக் காரியங்களையெல்லாம் முடிக்க வேண்டும். அப்போதுதான், உங்களுக்கு லைசென்ஸ், உங்களுக்கு நூல் விற்க முடியும் என்று தொந்தரவு செய்கிறார்கள். இதனால், மூன்று நான்கு மாத காலமாக இந்த மாசுக் கட்டுப்பாட்டு நிறுவனத்தின் கீழே வருகின்ற காரணத்தால், இந்தச் சாயத் தொழிற்சாலைகள் எல்லாம் செயல்படாமல் இருக்கின்றன. இல்லையென்று சொன்னால், அந்த மாசுக் கட்டுப்பாடு எப்படி இருக்கிறது என்று சொன்னால் அந்தச் சாயத் தொழிற்சாலைகள் உபயோகப்படுத்துகின்ற கெமிக்கல்ஸ்-இரசாயனப் பொருட்கள் எங்கெங்கே இருக்கின்றதோ அங்கெல்லாம் கொசுவே கிடையாது. எங்கெங்கே இந்த பேக்டரி இருக்கின்றதோ அங்கெல்லாம் கொசுக்கள் செத்துவிடுகின்றன. நீங்கள் யாரையாவது விட்டு விசாரித்துப் பார்த்தால் கூடதெரியும். அது வெறும் நன்மை பயக்கின்ற இரசாயனப் பொருட்கள் தானேயொழிய, உயிருக்கு ஊறுவிளைவிக்கக்கூடிய இரசாயனப் பொருள் கிடையாது. ஆகவே, அதற்கு, மாசுக் கட்டுப்பாட்டு நிறுவனத்திலிருந்து விலக்கு அளிக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, இந்தக் கைத்தறி நெசவுகளுக்கு ஏன் விலை ஏறிக்கொண்டே போகின்றது ஏன் அவர்கள் அல்லல்படுகிறார்கள் என்று பார்க்கும்போது, பருத்தியினுடைய விலை சில நேரங்களில் குறைந்துபோகிறது. சில நேரங்களில் அதிகமாக இருக்கின்றது. ஆனால், இந்தியா முழுமைக்கும் பருத்தி

[திரு. வி. தண்டாயுதபாணி] [1991 செப்டம்பர் 20

எவ்வளவு வேண்டும் என்று சொன்னால் 130 இலட்சம் பேல்கள்
தேவைப்படுகிறது. ஆனால் நம்மிடத்திலே உற்பத்தியாகிறது
எவ்வளவு என்றால் நிச்சயமாகத் தமிழகத்தை மட்டும் நான்
குறிப்பிட ஆசைப்படுகிறேன். தமிழகத்திலே மட்டும் ஆறு
இலட்சம் பேல்கள்தான் இங்கே பருத்தி உற்பத்தியாகிறது. ஆறு
இலட்சம் பேல்கள் பருத்தி நம்முடைய தமிழ்நாட்டிற்குப்
போதாது. நம்முடைய தமிழ்நாட்டிற்கு இன்னமும் அதிகமாகத்
தேவைப்படுகிறது. எப்படி நெல், கரும்பு, பயிரிடுகின்ற விவ
சாயிகளுக்கு மத்திய அரசாங்கம் விலை நிர்ணயம் செய்கிறதோ,
எப்படி இங்கே மாநில அரசாங்கம் அதற்கு சப்சிடித் தொகை
யாக, எப்படி நெல்லுக்கும், கரும்புக்கும் கொடுக்கிறார்களோ,
அதைப்போல, பருத்தி பயிரிடுகின்ற விவசாயிகளுக்கும் கட்டுப்
படியாகக்கூடிய வகையிலே பருத்திக்கும், மாநில அரசாங்கம்
கொள்முதல் விலையை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று
இந்த மாமன்றத்தில் நான் பணிவன்போடு கேட்டுக்
கொள்கிறேன்.

முற்பகல் 10-00

அடுத்தபடியாக நெசவாளர்களுடைய பிரச்சினையில் நாம்
பார்த்தால் இங்கே இருக்கின்ற நெசவாளர்கள் தினசரி அல்லல்
பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரை
யிலே ஏற்கெனவே பட்ஜெட்டிலே மதிப்பிற்குரிய டாக்டர்
நாவலர் அவர்கள் பேசுகிறபோது In the event of death of
a weaver his family is given Rs.10,000. We shall immediately
enhance this amount என்றுசொல்லி 15,000 ரூபாய்
ஒதுக்கி இருக்கிறார்கள். அப்படி 15,000 ரூபாய் ஒதுக்கி
இருக்கிறபோது அந்தக் குடும்பமே உண்மையிலே பலன்
பெறுகிறதா, அவர்களுக்கு உண்மையிலேயே நன்மை
கிடைக்கிறதா என்று நாம் எண்ணிப் பார்க்கவேண்டும்.
இந்தக் கூலி உயர்வைப்பற்றி நான் சொல்கிறபோது கூலி
உயர்வு குறித்து உயர்தர முத்தரப்பு கமிட்டி ஒன்றை அரசு
நிறுவினால் நிச்சயமாக நெசவாளர்களும் வந்து சொல்வார்
கள், மாஸ்டர் வீவர்களும் வந்து சொல்வார்கள், அரசாங்கத்
தின் தரப்பிலேயிருப்பவர்களும் வந்து சொல்வார்கள். எனவே
அப்படிப்பட்ட ஒரு குழுவை நிச்சயமாக இந்த அரசு ஏற்படுத்த
வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய தமிழகத்தினுடைய மாண்புமிகு புரட்சித்
தலைவி அவர்களுடைய கோரிக்கையை ஏற்று பருத்தி விலை
யைக் குறைப்பதற்காகவும், நூல் விலையைக் குறைப்பதற்
காகவும், மத்திய அரசு நேற்றைக்கு முன்தினம் பருத்தி ஏற்று



1991 செப்டம்பர் 20] [திரு. வி. தண்டாயுதபாணி]

மதியையும், நூல் ஏற்றுமதியையும் தடை செய்திருப்பதை நீங்கள் பார்த்திருக்கிறீர்கள். நீங்கள் வெற்றிபெற்றிருக்கிறீர்கள். தமிழக அரசு கொடுத்த குரல் மத்திய அரசில் ஒலித்து அங்கே ஏற்றுமதியைத் தடை செய்திருக்கிறார்கள் என்பதை நான் இங்கே பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். எங்களுடைய பகுதியான குடியாத்தம் பற்றி நிச்சயமாக ஓரிரு வார்த்தைகளை மட்டும் நான் பேச ஆசைப்படுகிறேன். இந்தக் கைத்தறித் துணிக்காக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். விவசாயத்திற்கு அடுத்து கைத்தறித் தொழில் இருக்கிறது. ஆனால், விவசாயத்திற்காக விவசாயப் பல்கலைக் கழகம் இருக்கிறது. அப்படி விவசாயப் பல்கலைக் கழகம் இருப்பதைப்போல் கைத்தறித் அதாவது 'ஹேண்ட்லூம்'-க்கு, 'டெக்ஸ்டைல்'-க்கு என்று சொல்லி ஒரு பல்கலைக் கழகம் நிறுவினால் அது இந்தியாவிற்கே வழிகாட்டியாக இருக்கும். உற்பத்தி செய்வது, மார்க்கெட்டிங் செய்வது அதற்குப் பிறகு முறையாக வெளியே கொண்டுபோய் விற்பது இப்படிப்பட்ட பல்வேறுவிதமான பயிற்சிகளை அந்தப் பல்கலைக் கழகத்தின் மூலமாகக் கொடுக்க முடியும் என்று நான் இங்கே பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மத்திய அரசு எத்தனையோ தொழில் கொள்கைகளைக் கொண்டிருந்தாலும், இந்தக் கைத்தறித் தொழிலுக்கு முன்னுதாரணமாகக் கூறிக்கொள்வது தமிழ்நாடுதான். தமிழ்நாட்டிலிருந்துதான் கைத்தறியைப் பொறுத்த வரையில் 100-க்கு 60 சதவீதம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். இன்றையதினம் ஜனாதிபதியாக இருக்கின்ற மதிப்பிற்குரிய திரு. வெங்கட்டராமன் அவர்கள் 1965-ஆம் வருஷம் 'ப்ளீச்சிங்-மெட்ராஸ்' என்று சொல்லி, அந்த அளவுக்கு அமெரிக்காவிற்கு துணி ஏற்றுமதி செய்தபோது அன்றையதினம் மிக உயர் தரமாக இருந்தது. அது நீடிப்பதற்கு இந்த அரசாங்கம் வழிவகை செய்ய வேண்டுமென்று நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். எப்படி கைத்தறிக்காக ஒன்றரை மணி நேரம் புரட்சித் தலைவி அவர்கள் மாநிலங்கள் அவையில் பேசினார்களோ அதேபோல் எங்களுடைய அருமைத் தலைவர் திரு. வாழப்பாடி இராமமூர்த்தி அவர்கள் நெசவாளர்களின் பிரச்சினையில் அத்தொழிலாளர்களின் தலைவராக இருந்து செயல்பட்டு நெசவாளர்களுக்காகப் பாடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே சொல்லாமல் இருக்க முடியாது. அப்படிப்பட்ட ஒரு நிலைமையில் நெசவாளர்களுக்கு உள்ள பல்வேறு பிரச்சினைகளை நல்லமுறையில் இந்த அரசு கவனித்து வருகிறபோது, நெசவாளர்களுக்குக் கொடுக்கிற, நவீனமயமாக்கப்படுகிற அந்த நெசவு உறுப்புகள் மானியமாகக் கொடுக்கப்படுகிறபோது ஏதாவது தவறு நடந்துவிடக்கூடாது

என்பதற்காக அதைக் கைத்தறியினுடைய உபகரணங்களாகவே கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுத்தால் தான் நல்லது. பணமாகக் கொடுத்தால்........

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது உபகரணங்களாகவே தான் தரப்படுகிறதே தவிர பணமாக யாருக்கும் தருவதில்லை என்பதை நான் இந்த அவைக்கு மெத்தப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சீக்கிரம் முடியுங்கள், திரு. வி. தண்டாயுதபாணி.

திரு. வி. தண்டாயுதபாணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக்க நலம். ஆனால் இன்றைய தினம் இந்தப் புத்தகத்தில் 2,000 ரூபாய், 3,000 ரூபாய் என்று போட்டிருக்கிறது. சாதா தறிகள் வாங்க இன்றைக்கு 2,000 ரூபாய்........

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மதிப்புள்ள பொருட்கள் தரப்படுகின்றன என்றுதான் கருத்தில் ஏற்றுக்கொள்ள வேண்டுமே தவிர பணத்திற்காக ஆசைப்படக்கூடாது.

முற்பகல் 10-05

திரு. வி. தண்டாயுதபாணி மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கைத்தறி நெசவாளர்கள் நிச்சயமாகப் பணத்திற்கு ஆசைப்படமாட்டார்கள். ஆனால் கைத்தறி நெசவாளர்கள் போர்வையிலே யாராவது வாங்கிப் போய் விடுகிறார்கள். பாங்கியிலே எப்படி பினாமி லோன்கள் வாங்குகிறார்களோ அதே போல கைத்தறி நெசவாளர்களுடைய பெயரைப் போட்டு சில பேர் வாங்கிக் கொள்ளை அடிக்கிறார்கள் என்ற காரணத்திற்காகத் தான் நான் இதை பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவேதான் சொன்னேன். கைத்தறி நெசவாளர்களுக்கு ஒரு 'ஐடன்டிட்டி கார்டு' கொடுக்க வேண்டும் என்று. அவர்கள் மாஸ்டர் வீவர்களிடமாவது போய் வேலை செய்யட்டும் அல்லது கூட்டுறவுத் துறையிலேயாவது போய் வேலை செய்யட்டும். ஆக ஈ.எஸ்.ஐ. போன்ற பல்வேறு பலன்களை நெசவாளர்களுக்கு உண்மையிலேயே அளிக்க வேண்டும் என்று சொன்னால் அப்படிப்பட்ட அடையாள அட்டையையும் நீங்கள் புகுத்த வேண்டும் என்று இந்த மாமன்றத்திலே கேட்டுக் கொள்கிறேன். கைத்தறியினுடைய வளர்ச்சி தான் இந்த நாட்டினுடைய வளர்ச்சி. எவ்வளவு தூரம் இந்த 22 ரகங்களை இங்கே கொண்டு வந்து நாம் சட்டமாக ஆக்குகின்றோமோ, அதுவும் எப்படித் தெரியுமா



சட்டம், அரசியல் சட்டத்திலே 9-வது பிரிவின் கீழே, அரசியல் சட்டத்தினுடைய 9-வது பிரிவின் கீழே தான் அதைக் கொண்டு வர வேண்டும் என்று அன்றைய தினம் புரட்சித் தலைவி அவர்கள் சொன்னார்கள் என்பதைச் சொல்லி, நெசவாளர்களுடைய துயர் துடைப்பதிலே இந்த அரசாங்கம் எடுக்கின்ற எல்லா முயற்சிகளுக்கும் நாங்கள் உறுதுணையாக இருப்போம் என்று அன்புடன் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். நன்றி. வணக்கம்.

## 4. விதி 110-இன் கீழ் உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சரின் அறிக்கை.

### தமிழ்நாடு நுகர்பொருள் மற்றும் வாணிபக் கழக ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு அளித்தல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் பேரவை விதி 110-ன் கீழ் பேரவைக்கு ஓர் அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் ஆணையின்படி, 15–9–1991 முதல் ஏக போகக் கொள்முதல் தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை, மற்றும் தென்னாற்காடு மாவட்டத்தின் சில பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்டு தீவிரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள தமிழ்நாடு நுகர்பொருள் மற்றும் வாணிபக் கழக பருவகால ஊழியர்களின் நெடுநாளைய ஊதிய உயர்வு கோரிக்கைகளை புரட்சித் தலைவியின் அரசு பதவி ஏற்றவுடன் மிகுந்த அக்கறையுடன் பரிசீலிக்கத் தொடங்கியது. இதன் விளைவாக வாணிபக் கழகத்தின் தலைவர் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தொழிற்சங்கப் பேரவை, தி.மு.க. தொழிற்சங்கப் பேரவை, ஏ.ஐ.டி.யு.சி. தொழிற்சங்கம், இந்திய தேசிய காங்கிரஸ் தொழிற் சங்கப் பேரவை, ஷாப் அண்டு ஜெனரல் ஒர்க்கர்ஸ் யூனியன் ஆகியோருடன் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. அந்த பேச்சு வார்த்தையில் திருப்திகரமான முடிவு ஏற்படாத சூழ்நிலையில் மாண்புமிகு தமிழக முதலவர் புரட்சித் தலைவி அவர்களின் ஆணையின்படி நான் 18–9–1991 அன்று காலை தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினேன்.

பேச்சு வார்த்தையின் முடிவில் தொழிற்சங்கங்களால் வைக்கப்பட்ட முக்கியமான கோரிக்கைகள் புரட்சித் தலைவியின் ஒப்புதலுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பதை இந்த மாமன்றத்

திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த உடன்
பாட்டின்படி நேரடிக் கொள்முதல் நிலையங்களில் பணியாற்றும்
பருவகால ஊழியர்களுக்கு குறைந்தபட்சமாக தற்போதைய
ஊதியத்திலிருந்து ரூ. 120-ம் அதிகபட்சமாக ரூ. 210-ம் அளிக்கப்
பட உள்ளது. தற்பொழுது ஏற்பட்டுள்ள ஏற்பாட்டின்படி தமிழ்
நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு 12.55 லட்சம் ரூபாய்
கூடுதலாகச் செலவாகும். இந்த ஆண்டு மட்டும் (1991-92)
ரூபாய் சுமார் 7.50 இலட்சம் கூடுதலாகச் செலவாகும். மேலும்
நேரடிக் கொள்முதல் நிலையங்களில் உள்ள சுமார் 3,000 ஊழி
யர்கள் பயனடைவார்கள். மேலும் நேரடிக் கொள்முதல் நிலை
யங்களில் உள்ள 9,000 சுமை தூக்குபவர்களுக்கும் மூட்டை
தூக்கும் கூலி கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது. அவர்களுக்கு
இப்போது 10 சதவிகிதம் கூலி உயர்த்தப்பட்டிருக்கிறது. தொழிற்
சங்கங்களின் நெடுநாளைய கோரிக்கையான நேரடிக் கொள்முதல்
நிலையங்களில் பருவ காலங்களில் பணியமர்த்தப்படும் ஊழியர்
கள் வாணிபக் கழகத்தில் ஏற்படும் நிரந்தரப் பணியிடங்களில்
அமர்த்தப்பட வேண்டும் என்பதையும் தமிழக முதல்வர் ஏற்றுக்
கொண்டுள்ளார் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்
கொள்கிறேன்.

இதனபடி கழகத்தில் ஏற்படும் நிரந்தர காலியிடங்களுக்கு
எற்கெனவே கழகத்தில் உள்ள தகுதியுள்ள கீழ்நிலைப் பணியாளர்
களுக்கு பதவி உயர்வு அளித்த பின்பும் உள்ள காலியிடங்களுக்கு
மேற்கூறிய பருவ கால ஊழியர்களை அமர்த்தலாம் என்று
முடிவெடுக்கப்பட்டது.

முற்பகல் 10-10

அத்தோடு இந்த பணியில் ஏராளமான பட்டதாரிகள் பணி
புரிகிறார்கள் என்பதை அறிந்தேன். ஆகவே மாண்புமிகு முதல்
அமைச்சர் அவர்களிடம் நான் கேட்டுக்கொண்ட பிறகு அவர்
களுக்கும் ஏதாவது தரவேண்டும் என்று அவர்கள் சொன்னார்கள்.
அதன்படியாக இந்த 3 ஆயிரம் ஊழியர்களில் ஏறத்தாழ 90
சதவிகிதம் பேர். எல்லோரும் பட்டதாரிகள். அது ஹெல்பராக
இருந்தாலும், பில் கலெக்டராக இருந்தாலும் பட்டதாரிகளாக
இருக்கிற காரணத்தினாலே அவர்களுக்கு 50, 50 ரூபாய் சேர்த்து
கொடுப்பதாக முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்பதையும் நான்
தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இவர்களை வேறு
நிரந்தரபணியில் அமர்த்த வயதுவரம்பு குறித்த விதிமுறைகளைத்
தளர்த்த வேண்டுமாயின், அரசு ஒப்புதல் அதற்கு அளிக்கப்படும்
என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.





## கோரிக்கை எண். 26—கைத்தறியும் துணித் தொழிலும் —தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தே. ஜனார்த்தனன்.

* திரு. தே. ஜனார்த்தனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய
ரசிகனாக இருந்து, புரட்சித் தலைவருடைய திரைப்படங்களைப்
பார்த்த என் போன்ற மிகச் சாதாரண தொண்டர்களை எல்லாம்
இந்த நேரத்திலே சட்டமன்றத்தில் இருந்து பேசக் கூடிய அளவுக்கு
எங்களை ஆளாக்கிய எங்களுடைய இதய தெய்வம் புரட்சித்
தலைவி அவர்களுடைய பொற்பாதங்களுக்கு என் சிரம் தாழ்த்தி
வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். புரட்சித் தலைவி
யினுடைய வேண்டுகோளை ஏற்று எனக்காக வாக்களித்த விழுப்
புரம் தொகுதி சட்டமன்ற வாக்காளர்களுக்கு என்னுடைய
பணிவன்பான நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்
கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

1991-92 ஆம் ஆண்டுக்கான கைத்தறி மற்றும் துணி நூல்
மானியக் கோரிக்கையின் மீது பேசுகின்ற வாய்ப்பினைப் பெற்ற
மைக்காக நான் மெத்த மகிழ்ச்சி அடைகின்றேன். நம்முடைய
பேரறிஞர் அண்ணா அவர்கள் கைத்தறி நெசவாளர்களுக்காக
தன்னுடைய தோளிலேயே துணிகளை சுமந்து விற்று அவர்
களுடைய துயரங்களைத் துடைத்திருக்கிறார்கள். அதேபோல
புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கைத்தறி நெசவாளர்
களுக்காக பல்வேறு திட்டங்களை எல்லாம் தீட்டி அவர்களுக்கு
உதவி செய்திருக்கிறார்கள். இந்த நேரத்திலே நம்முடைய
அரசாங்கமும் கைத்தறிகளை விசைத் தறிகளாக மாற்றுவதற்
கான திட்டங்களைத் தீட்டியிருப்பதை நான் மனமாரப் பாராட்டி
வரவேற்கிறேன். எங்களுடைய தென்னாற்காடு மாவட்டத்திலே
கைத்தறி நெசவாளர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். அந்த
கைத்தறிகளை எல்லாம் விசைத் தறிகளாக மாற்றுகின்றபோது,
தென்னாற்காடு மாவட்டத்திற்கும் அதிக முக்கியத்துவம்
கொடுத்து. நிதி ஒதுக்கி நன்மை செய்ய வேண்டும். மேலும்
நமது அரசாங்கம் கைத்தறி நெசவாளர்கள் இறந்தால் அவர்
ளுடைய குடும்பத்திற்கு 15 ஆயிரம் ரூபாய் கொடுப்பதாக
அறிவித்திருக்கிறது. அதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன்.
மேலும் கைத்தறி நெசவாளர்கள் சங்க உறுப்பினராக இருந்து
இறந்து விட்டால் அவர்களுடைய குடும்பத்திற்காக மாதந்
தோறும் 250 ரூபாய் வீதம் தொடர்ந்து 10 ஆண்டுகள் அவர்
களுக்கு உதவித் தொகை வழங்கி அந்தக் குடும்பம் நல்லதொரு

[திரு. தே. ஜனார்த்தனன்] [1991 செப்டம்பர் 20

நிலையில் வாழ்வதற்கு வளர்வதற்கு வழிவகை செய்திருப்பதை, இப்படிப்பட்ட ஒரு நல்ல திட்டத்தை தீட்டியதற்காக புரட்சித் தலைவியினுடைய அரசாங்கத்தை நான் இந்தத் தருணத்தில் பாராட்டுகிறேன்.

நம்முடைய கைத்தறிக்கு தந்தை பெரியார் அவர்களுடைய பிறந்த நாளின்போதும், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பிறந்த நாளின் போதும் விற்பனையின்போது தள்ளுபடி கொடுத் கிறார்கள். அதேபோல நம்முடைய அரசாங்கம் நம்மை எல்லாம் ஆளாக்கிய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பிறந்த நாளின்போதும் தள்ளுபடி. கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக கைத்தறித் துறை அமைச்சர் அவர்களை இந்தத் தரு ணத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் கைத்தறி நெசவாளர்கள் எல்லாம் மிகவும் ஏழ்மை நிலையில் வாடிக் கொண்டிருக்கிறார்கள். வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கிற அந்தக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் மேல் படிப்பு படிப்பது என்பது கனவாக இருக்கிறது. அந்தக் கனவை நனவாக்குகின்ற வகையில் நம்முடைய புரட்சித் தலைவர் அவர் கள் காலத்திலே, 1986-லே 'டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளை' என்ற பெயரில் ஒரு அறக்கட்டளை நிறுவி கைத்தறி நெசவாளர்களுக்கு எல்லாம், ஏழ்மை நிலையில் இருக்கிற அவர்களுடைய குழந்தைகள் எல் லாம் மேல் படிப்பு படிக்க ஒரு திட்டத்தைத் தீட்டினார்கள். அந்த அறக்கட்டளை அதற்குப் பிறகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பெயரை மறைக்க வேண்டும், அவர் தளுடைய புகழை குறைக்க வேண்டும் என்று நடுவில் வந்த அரசாங்கம் எண்ணிய காரணத்தால் அவர்கள் அந்த அறக் கட்டளையினுடைய பெயரை—எப்படி மருத்துவப் பல்கலைக் கழகத்திற்கு புரட்சித் தலைவருடைய பெயரை மறைத்து 'தாமரை' என்று மாற்றினார்களோ அதேபோல—கொடு நெஞ் சம் கொண்ட அவர்கள் புரட்சித் தலைவருடைய பெயரை மாற்றி, அந்த அறக்கட்டளைக்கு நெசவாளர்கள் நல்வாழ்வு அறக்கட்டளை என்று பெயரை சூட்டி புரட்சித் தலைவருடைய பெயரை மறைக்க வேண்டுமென்ற எண்ணத்திலே அதை செய் திருக்கிறார்கள்.

இன்றைய தினம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற புரட்சித் தலைவருடைய அரசாங்கம், அந்த புரட்சித் தலைவருடைய பெயரை மீண்டும், 1986-ல் நிறுவியது போலவே, அந்த அறக் கட்டளைக்கு 'டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளை' என்று சூட்ட வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



1991 செப்டம்பர் 20; [திரு. கே. ஜனார்த்தனன்]

என்னுடைய விழுப்புரம் பகுதியைச் சுற்றி நிறைய பஞ்சு பருத்தி உற்பத்தி செய்யப்படுகிறது. அந்தப் பருத்தியை எல்லாம் நல்ல விலைக்கு வாங்க அரசாங்கம் ஆவன செய்வதோடு பருத்தி யைக் கொண்டு அங்கே ஒரு பருத்தி நூற்பாலை ஒன்றை நிறுவ உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-15

மேலும் எங்களுடைய விழுப்புரம் தொகுதியைச் சுற்றியிருக் கிற பகுதிகளில் இன்றையதினம் பட்டுப் பூச்சி வளர்ப்பு பிரபலம் அடைந்து வருகிறது. அந்தப் பட்டுப் புழுவை அவர்கள் அங் கிருந்து எடுத்துச் சென்று பெங்களூருக்கு சென்று விற்கக் கூடிய சூழ்நிலை தற்போது இருக்கிறது. அவர்கள் பெங்களூர் சென்று வருவதற்கு பெரிதும் கஷ்டப்படுகிறார்கள். அதனால் விழுப் புரத்திலேயே பட்டுப் பூச்சிகளை விற்கவும் விழுப்புரத்தில் பட்டு நூல் ஆலை ஒன்றை நிறுவவும் அரசாங்கம் வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் கைத் தறித் தொழில் ஒரு குடிசைத் தொழில். கைத்தறித் தொழி லுக்கான சிட்டா நூலுக்கு வரி விதித்திருக்கிறார்கள். அந்த 2 சதவிகிதம் வரியை அரசாங்கம் ரத்து செய்ய வேண்டுமென்று இந்தத் தருணத்தில் மெத்தப் பணிவோடு கேட்டுக் கொண்டு வாய்ப்பு கொடுத்ததற்கு இந்த மாமன்றத்திற்கு நன்றி கூறி, விடை பெறுகிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. தம்பு சாமி, 7 நிமிடங்கள் மட்டும்.

*திரு. வி. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கைத்தறி மானியக் கோரிக்கையின்மீது ஒருசில கருத்துக்களைக் கூறுவதற்கு வாய்ப்பு அளித்த தங் களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இன்றையதினம் நாட்டிலே இயந்திரத் தொழிலுக்கும் கைத்தொழிலுக்கும் கடுமையான போட்டி ஏற்பட்டு, கைத்தொழில் முழுமையும் நசிந்து போகக்கூடிய சூழ்நிலைகள் இருக்கின்றன என்பதை நாம் அறிவோம். அந்த வகையிலே இன்றையதினம் கைத் தறிக்கும் விசைத்தறிக்கும் போட்டி ஏற்படுகின்ற ஒரு சூழ் நிலை அதிகரித்து வருகிறது என்பதை நாம் மறுக்க முடியாது. இப்போது தமிழகத்தில் 4 லட்சத்து 27 ஆயிரம் கைத்தறிகள் உள்ளன. கூட்டுறவின் மூலம் 3 லட்சத்து 27 ஆயிரம் கைத் தறிகள் உள்ளன. இந்தக் கைத்தறிகள் முழுமையிலும் தொடர்ந்து பல்வேறு காரணங்களால் உற்பத்தித் திறன் குறைவதை ஆய்வு செய்து, எதிர்காலத்திலே அந்தக் கைத் தறியினுடைய தரத்தை உயர்த்துவதற்கு முயற்சிகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே போன்று 35 வருடங்களாக கைத்தறி நெசவாளர்களுக்கு வீடு

[திரு வி. தம்புசாமி] [1991 செப்டம்பர் 20

கள் கட்டிக் கொடுக்கின்ற திட்டம் இருந்தாலும், 35 வருடங்
களுக்குப் பிறகு 12,000 வீடுகள்தான் கட்டி முடிக்கப்பட்டிருக்
கின்றன. மேலும் அனைத்து கைத்தறித் தொழி
லாளர்களுக்கும் வீடு கட்டுவதற்கு கடனும், மானியமும் அளிப்
பதற்கு அரசு முயற்சிக்க வேண்டும். 20,000 ரூபாய் வரையில்
கடன் கொடுத்து, வீடுகள் கட்டும் பணியை துரிதப்படுத்த
வேண்டும். சொசைட்டிகள் மூலம் அந்தக் கடனை திரும்ப
வசூலித்துக் கொள்ளலாம். அந்த வகையிலே விரைவாக வீடு
கட்டிக் கொடுக்கும் திட்டத்தை அரசு செயல்படுத்த வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

1981ஆம் ஆண்டு தொழிலாளர்களுடைய நலன் குறித்து,
அவர்கள் வாழவேண்டுமென்பதற்காக முன்னாள் முதல்வர்,
அமரர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் ஒரு சட்டத்தை,
தொழிலாளர்களுக்கான சட்டத்தை சட்டமன்றத்திலே நிறை
வேற்றினார்கள். ஆனால் அந்தச் சட்டத்தை எதிர்த்து முத
லாளிகள் கோர்ட்டுக்குச் சென்று, கோர்ட்டிலே 1984 ஆம்
ஆண்டு ஏப்ரல் மாதம் 27 ஆம் தேதி அந்தச் சட்டம் செல்லும்
என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பு அளித்தும்கூட இதுவரையில்
அந்தச் சட்டம்-அந்தக் கைத்தறி நெசவாளர்கள் நலச் சட்டம்
அமல்படுத்தப்படவில்லை. அந்தச் சட்டத்தை அடிப்படை
யாகக் கொண்டு தமிழக அரசு செயல்படுத்த வேண்டுமென்று
கேட்டுக்கொள்வதோடு, அந்தச் சட்டத்தை நிறைவேற்று
வதற்கான, அமல்படுத்துவதற்கான உரிய அதிகாரிகள் இன்ன
மும் நியமிக்கப்படவில்லை. ஆளுநர் ஆட்சிக் காலத்தின்போது
இதற்காக $4\frac{1}{2}$ கோடி ரூபாய் மானியம் கோரியபோது ஒதுக்
கப்படவில்லை. அதற்குப் பின் வந்த அரசும் அதற்கு மானியம்
ஒதுக்கவில்லை. இந்தச் சட்டத்தின்மூலம் ஏறத்தாழ 3 லட்
சத்து 27 ஆயிரம் கூட்டுறவு நெசவாளர்களுக்கு அளித்த விதி
விலக்கு பற்றி தமிழக அரசு பரிசீலித்து, தக்க நடவடிக்கை
களை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும்
உரிய நிதி ஒதுக்கி, அதிகாரிகளை நியமித்து, இந்தச் சட்டம்
முழுமையாக தொழிலாளர்களைப் பாதுகாக்கும் வகையிலே
அமல்படுத்துவதற்கு தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10—20

அதேபோல குறைந்த பட்ச கூலி சட்டம் 1983வது ஆண்டு
நூல் மற்றும் பட்டு நெசவாளர்களுக்கு குறைந்த பட்ச கூலி
நிர்ணய கமிட்டி அமைக்கப்பட்டது. அந்த கமிட்டி இடையிலே
நூல் நெசவாளர்களுக்கு அளித்த சிபாரிசை 1983 ஆகஸ்ட் மாதம்
உயர்நீதிமன்றத்திலே உற்பத்தியாளர்கள் தடை வாங்கி
நிறுத்தி விட்டார்கள். தடை வாங்கிய அந்த வழக்கின் மீது 8
ஆண்டுக்காலம் முடிந்த பிறகும் தமிழக அரசு சார்பில் அதை
எதிர்த்து வாதாடுவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. ஆகவே
இப்போதாவது தமிழக அரசு பரிசீலித்து அந்த வழக்கை



1991 செப்டம்பர் 20] [திரு. வி. தம்புசாமி]

எதிர்த்து வாதாடி, தொழிலாளர்களுக்கு ஆதரவான நீதி
கிடைப்பதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல 1989 ஆம் ஆண்டு குறைந்த பட்ச கூலி விலை
வாசிப்புள்ளி அடிப்படையில் 615 புள்ளிக்கு மேல் உயரும்
ஒவ்வொரு புள்ளிக்கும் இரண்டு பைசா வீதம் பஞ்சப்படி
வழங்க வேண்டுமென்று அரசு உத்தரவிட்டது. அதற்கு ஆகஸ்ட்
மாதத்திலேயே தடை உத்தரவு பெற்றார்கள். இதற்கும்
அரசுத் தரப்பிலே எதிர்மனு தாக்கல் செய்து அந்த வழக்கை
முடிப்பதற்கான நடவடிக்கை எடுக்கவில்லை. ஆகவே தமிழக
அரசு மீண்டும் பரிசீலனைசெய்து அந்த வழக்குகளை நடத்தி
தொழிலாளர்களுக்கு ஆதரவான நீதி கிடைப்பதற்கானஏற்
பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.
மாண்புமிகு முன்னாள் முதல்வர் அமரர் எம்.ஜி.ஆர். ஆட்சி
நடக்கிற போது குறைந்த பட்சக் கூலி நிர்ணய கமிட்டி அமைக்
கப்பட்டது. அந்த கமிட்டி இடையிலேயே கலைக்கப்பட்டு,
பின்பு லேபர் கமிஷன் முத்தரப்பு கமிட்டியை கூட்டி விவா
தித்து சிபாரிசும் அனுப்பப்பட்டது. அரசு இன்னமும் அந்தச்
சிபாரிசை வெளியிடவில்லை. வறுமைக் கோட்டுக்குக் கீழே
வாழும் கைத்தறி நெசவாளர்களின் பாதுகாப்புக்காக நட
வடிக்கைகளை எடுத்து, அந்த சிபாரிசுகளை அமல் படுத்த
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்றையதினம்
நூல் விலை நாளுக்கு நாள் உயர்ந்து வருகிறது என்பதை நாம்
அறிவோம். அந்த நூல் விலை உயர்த்தப்படுவதால் தமிழகத்
திலே இருக்கிற கைத்தறியை நம்பியிருக்கிற 4 லட்சத்து 27
ஆயிரம் கைத்தறி நெசவாளர்கள் பாதிக்கப்பட்ருக்கிறார்கள்.
சுமார் 3.75 லட்சம் விசைத் தறிகளும் தமிழகத்திலே இருக்
கின்றன. இதிலே 2 லட்சம் தறிகள் லைசன்ஸ் இல்லா
மலேயே இயங்கி வருகின்றன என்பது அரசுக்குத் தெரியும்.
ஆனால் அதுபோன்ற லைசன்ஸ் பெறாமலேயே இயங்கு
கின்ற அந்த விசைத் தறிகளை, ஏன், எப்படி இயங்குகின்
றன என்பதை அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்க வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

மத்திய அரசு நாணய மதிப்பைக் குறைத்ததன் காரணமாக
முன்பு ஏற்றுமதி செய்த அளவில், 20 சதவீத அளவுக்கு பணத்
தைப் பெறுவதில் சிரமம் இருக்கிறது. அந்த 20 சதவீதக்
குறைவு ஏற்பட்டதால் ஏற்றுமதியாளர்கள் கடுமையாகப்
பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆகவே பேல் ஒன்றுக்கு,
நூலுக்கு 8 சதவீதமும், கைத்தறிக்கு 15 சதவீதமும் ஊக்கத்
தொகை அரசு வழங்கியதை இப்போது நிறுத்தியுள்ளது. தற்
போது 30 சதவீதம் வரை நூல் விலை உயர்ந்து இருக்கிற
காரணத்தால் கைத்தறி, விசைத்தறித் தொழில்களும் பாதிப்
புக்கு ஆளாகியுள்ளது. கூட்டுறவு [illegible] றிகளுக்கு மாதம்
1[illegible] ஆயிரத்துக்கு மேல் தென்னிந்திய [illegible] தொழிலாளிகள் சங்கமும்

கூட்டுறவுச் சங்கமும் நிதி ஒதுக்கி, கைத்தறிக்கும் பவர் மில்
லுக்கும் ஒதுக்கி, அதை கைத்தறி துறையின் மூலம் சிறப்பாக
செயல்படுத்துவதற்கு அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

கைத்தறித் தொழிலில் ஈடுபட்டிருந்தக்கிற தொழிலாளர்
களைப் பாதுகாப்பதற்கான சகல முயற்சிகளையும் தமிழக
அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி
அமைகிறேன். நன்றி. வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> திருமதி செ.
சுந்தராம்பாள்.

<u>திருமதி செ. சுந்தராம்பாள் :</u> மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, சோதனைகள் பலவற்றைக்
கடந்து சாதனை பல புரிந்து தமிழகத்தை அமைதிப் பூங்கா
வாக மாற்றிக் கொண்டிருக்கும் தமிழகத்தின் தனிப்பெருந்
தலைவி, காவிரித் தாய், எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு
முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் பாதங்களைத் தொட்டு
வணங்கி, என் உரையைத் தொடங்குகின்றேன்.

கைத்தறி நெசவாளர்களின் வாழ்விலே கஷ்டங்கள் என்று
தான் தீருமோ என்று எங்கள் சேலம் மாவட்டத்தில் அடிக்கடி
சொல்வார்கள். தமிழகத்திலேயே மிக அதிகமாகவும், கைத்தறி
மையமாகவும் இருக்கிற சேலம், சேலம் குகை, சேலம் அம்மா
பேட்டை ஆகிய பகுதிகளில் கைத்தறித் தொழில் மிகவும் அதிக
மாக நடைபெற்று வருகிறது. ஆனாலும் ஆயிரக்கணக்கான
தொழிலாளர்கள் மிகவும் துன்பப்படுகிறார்கள் அதற்குக்
காரணம் கூட்டுறவுத் துறையில் வழங்கப்படும் நூல் மிகவும்,
குறைவு, போதுமானதாக இல்லை. தனியாரிடம் நூல் வாங்கும்
போது சிட்டம் ஒன்றுக்கு 100, 200 ரூபாய் அதிகமாக உள்ளது.
இதனால் நெசவாளர்கள் மிகவும் அதிகமாக பாதிக்கப்படு
கிறார்கள். இதை அதிகப்படுத்தித் தர அரசு நடவடிக்கை
எடுக்கவேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.
மேலும், 2,000 பேல்கள் என்பது நெசவாளர்களுக்கு பத்து
நாளைக்குத்தான் வேலைக்கு வருகிறது. இதையும் அதிகப்
படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தமிழ
கம் பட்டு உற்பத்தியில் மிகவும் பிரசித்தி பெற்ற மாநிலமாக
விளங்குகிறது. குறிப்பாக காஞ்சிபுரம், கும்பகோணம், சேலம்
போன்ற நகரங்களில் உற்பத்தி செய்யப்படும் பட்டு ரகங்கள்
நமது நாட்டிலேயே வியாபார ரீதியில் பிரதான இடங்களை
வகிக்கிறது. குறிப்பாக எனது தொகுதியில் மல்பரி சில்க்,
ஆர்ட் சில்க், அசல் பட்டுத் தறிகளும் உள்ளன. ஆனால் தமிழ
கத்தில் நூல் விலை அதிகமாக இருப்பதால் பட்டு நெசவாளர்
கள் கஷ்டப்படுகிறார்கள். இதற்குக் காரணம் கர்நாடகத்தில்
தான் மல்பரி நூல் அதிகம் கிடைக்கிறது. ஆனால் மாண்புமிகு



முற்பகல் 10-25

[illegible]ய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் கர்நாடகத்திடம்
தண்ணீர் கேட்டதால், அந்த காவிரித்தாய் சீற்றம் கொண்ட
காரணத்தால் மழை பெய்து, மல்பரி சீட்ஸ் மிகவும் பாதிக்கப்
பட்டுள்ளது. இதனால் மல்பரி சீட்ஸ் விலை ஏற்றப்பட்டு நெச
வாளர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இதனைப் போக்க
மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் வெளிநாடுகளிலிருந்து
இறக்குமதி செய்து நெசவாளர்களுக்கு கொடுக்குமாறு மிகவும்
பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நேரத்தில் எனது தொகுதியைப் பற்றியும் ஓரிரு
வார்த்தைகள் கூறிக்கொள்ள விரும்புகிறேன். எனது தொகுதி
யாகிய மேட்டூரில் கடந்த 7 ஆண்டுகளாக மேட்டூர் டெக்ஸ்
டைல் எனும் தொழிற்சாலை மூடப்பட்டு 2,500 தொழிலாளர்
கள் மிகவும் கஷ்டப்பட்டு வருகிறார்கள். ஏனென்றால் மேட்
டூரில் உற்பத்தி செய்யப்பட்ட மேட்டூர் லாங்கிளாத், மேட்டூர்
மல் எனும் துணி ரகங்கள் அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்
யப்பட்டு மிகவும் பிரசித்தி பெற்று விளங்கியது. அவ்வாறு
பிரசித்தி பெற்ற தொழிற்சாலையை தனிப்பட்ட நபர்கள்
[illegible]டக்கிவிட்டு இருப்பதால் இந்தத் தொழிலாளர்கள் மிகவும்
கஷ்டப்பட்டு வருகிறார்கள். அந்தத் தொழிற்சாலையை முழு
மையாக இயக்க நடவடிக்கை எடுத்து, தொழிலாளர்களுக்கு
வாழ்வு தரவேண்டுமாய் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்
களைக் கேட்டுக்கொள்கிறேன்.

நேற்று மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் பீ அண்டு சி
ஆலைத் தொழிலாளர்களுக்கு ரூ. 400 நிவாரணம் அளிப்ப
தாகக் கூறினார்கள். அதுபோல என்னுடைய தொகுதிக்கும்
வழங்க வேண்டும் என்று மிகவும் பணிவன்போடு கேட்டுக்
கொள்கிறேன்.

இன்றையதினம் மக்களின் உடைத் தேவை
கைத்தறி மற்றும் விசைத்தறி மூலம்தான் பூர்த்தி
செய்யப்பட்டு வருகிறது. அதிலும் குறிப்பாக அத்துறை அந்
நியச் செலாவணியை பல கோடி ரூபாய்க்கு ஈட்டித் தருகிறது என்
பதனையும் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். குறிப்பாக
கைத்தறி நெசவாளர்களுக்கு மின்கட்டணம் உடனடியாக
குறைக்க வேண்டுமாய் இம் மாமன்றத்தில் கேட்டுக்கொள்
[illegible]றேன். மேலும் 2 சதவீதம் வரியையும் குறைக்க வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி 10 ஆண்டுகளில்
7,500 கைத்தறிகளை படிப்படியாக விசைத்தறிகளாக மாற்று
வதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனை நான் நெஞ்சாரப்
பாராட்டுகிறேன். நெசவாளர்களின் வாழ்வில் ஒளி ஏற்றியதற்

காக எனது தொகுதி மக்களின் சார்பாக அவைக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். மேலும் கைத்தறியை நவீனப்படுத்தும் 5 ஆண்டு பெரும் திட்டத்தின்படியும் ரூபாய் 4,230 கோ செலவில் மூலதனம் மூலம் கைத்தறி நெசவாளர்களின் வருமானம் கூடுகின்ற திட்டம் என்பதைச் சுட்டிக் காட்டி பாராட்டு கிறேன். அதேநேரத்தில் பொதுவாக நூற்பாலைகள் மொத்தம் 26.28 கோடி முதலீட்டில் இந்திய தொழில் வளர்ச்சி வங்கி உதவியுடன் நவீனப்படுத்தும் திட்டத்தை அறிவித்து இருப்பது அறிந்து பாராட்டுகிறேன்.

தமிழ்நாட்டில் நெசவாளர்களுக்கு ஹட்கோ முலம் வீடுகள் கட்டும் திட்டத்தையும் பாராட்டுகிறேன். எங்கள் தொகுதி நெசவாளர்களுக்கு ஹட்கோ மூலம் வீடு கட்டித் தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன். மேலும் நெசவாளர்கள் இறந்தால் 10 ஆயிரம் ரூபாயிலிருந்து 15 ஆயிரம் ஆக அரசு உயர்த்தி இருப்பதையும் நெஞ்சாரப் புகழ்கிறேன்.

மேலும் நெசவாளர்கள் மிகவும் கஷ்டப்படுவதற்குக் காரணம் நூல் விலை உயர்ந்து இருப்பது தான். தமிழகத்தில் பருத்தி மிகவும் குறைவாகக் காணப்படுகிறது. எனவே, நமது அரசாங்கம் விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை அளித்து, பருத்தி உற்பத்தியை பெருக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். நெசவாளர்கள் துயர் துடைக்க நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் உதவி செய்வார்கள் என்று கூறி கொண்டு எனக்கு வாய்ப்பு அளித்ததற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று நடைபெறுகிற கைத்தறித் துணித் துறையின் மானியக் கோரிக்கையில் பேசுகிற வாய்ப்புக் கொடுத்தமைக்காக முதலில் நான் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய திருப்பத்தூர் தொகுதி 1962 ஆம் ஆண்டு முதல் 1989 ஆம் ஆண்டு வரை தி.மு.க. கோட்டை என்று வர்ணிக்கப்பட்ட கோட்டை. ஆனால் கடந்த தேர்தலில் அதை நொறுக்கி உடைத்து, அந்தத் தொகுதி இதய தெய்வம் புரட்சித் தலைவியின் கோட்டை என்பதை நிரூபித்துக் காட்டிய திருப்பத்தூர் தொகுதி மக்களுக்கு முதலில் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரித்துக் கொள்கிறேன். புரட்சித் தலைவர் இருந்த காலத்திலே கூட ஜெயிக்க முடியாத தொகுதி எங்கள் திருப்பத்தூர் தொகுதி. கடந்த தேர்தலிலே எனக்கு சீட் கொடுத்ததும் தி.மு.க. காரர்கள் முதலில் பட்டாசு வெடித்தார் கள். காரணம் என்ன என்று கேட்டேன். 'ஒரு சாதாரண கைத்தறி நெசவாளர் குடும்பத்தைச் சேர்ந்த, சுந்தரவேல் என்பவனுக்கு சீட்டு கொடுத்து விட்டார்கள், என்றார்கள்.



' நாங்கள் ஜெயித்து விட்டோம் ' என்று பட்டாசு வெடித்தார்கள். அப்போது நான் சொன்னேன், தேர்தல் நடக்கட்டும், எங்களது புரட்சித் தலைவி அவர்களின் பலம் என்ன என்று தெரியும் என்று சொன்னேன். தேர்தலும் நடந்தது. தி.மு.க.-வை விட 36,904 வாக்குகள் அதிகம் பெற்று(மேசையைத் தட்டும் ஒலி) நான் வெற்றி பெற்று, திருப்பத்தூர் தொகுதியின் முதல் அனைத்து இந்திய அண்ணா தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் என்ற பெருமை பெற்றேன். தமிழக வரலாற்றிலே இதற்கு முன்னும் பின்னும் இது போன்ற ஜனநாயக வெற்றியை எவரும் பெற்றதில்லை ; இனிப் பெறப் போவதுமில்லை என்று வியந்து, புகழ்ந்து போற்றும்படியான மகத்தான வெற்றி பெற்று முதல்வராகத் திகழும் எங்கள் காவல் தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக் காலம் தமிழகத்தின் ஒரு பொற்காலம்.

முற்பகல் 10-30

கோடி கோடியான தமிழக மக்கள் எல்லாம் நம்பிக்கையுடன், வான்மழை நோக்கும் உழவர் போல புரட்சித் தலைவியின் கண்ணியமான சொற்களையும், கருணையான சொற்களையும் எதிர்பார்க்கின்றனர். தமிழகத்து தாய்க்குலம், ஏழையெளிய மக்கள் தங்களுக்கு இது வேண்டும், அது வேண்டும் என்று தனியாக கேட்காமல் அவர்களுக்கு வேண்டியதையெல்லாம், வேண்டும் போது புரட்சித் தலைவி தந்து உதவுவார்கள் என்று காத்திருக்கின்றனர்.

தமிழ்நாட்டு நெசவாளர்களுக்கு தடையின்றி நூல் கிடைக்க உதவி செய்ய வேண்டுமென்று மத்திய அரசுக்கு முதலாவதாக குரல் கொடுத்ததே நம் புரட்சித் தலைவி ஆவார்கள். தமிழ்நாட்டு நெசவாளர்களுக்கு இலவச வீடு கட்டித்தரவும், குடும்ப ஊதியம் வழங்கவும், இறந்தபின் பாதுகாப்பு நிதி அளிக்கவும் ஆவன செய்வதாக உறுதியளித்தது நம்முடைய மதிப்பிற்குரிய புரட்சித் தலைவி ஆகும்.

நெசவாளர்களின் நெஞ்சங்கள் மகிழ்ச்சியும், நிறைவும் ஊட்டிய இனிய செயல்பாட்டிற்கு தமிழக நெசவாளர்கள் சார்பில் நன்றியையும் பாராட்டுகளையும் தமிழக முதல்வர் அவர்களுக்கு காணிக்கையாக்குகிறேன்.

தமிழ் நாட்டில் உழவுத் தொழிலுக்கு அடுத்த நிலையில் இருப்பது நெசவுத் தொழிலேயாகும் பல்லாயிரக்கணக்கான ஏழை மக்கள் நெசவுத் தொழிலை நம்பியிருக்கின்றனர். எனவே நெசவாளர்களை வாட்டி வதைக்கும் பிரச்சினைகளைத் தீர்க்க அரசு விரைந்து செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்] [1991 செப்டம்பர் 20

விஷம் போல் ஏறிவரும் நூல் விலையைக் கட்டுப்படுத்த நடவடிக்கையெடுக்க வேண்டும். அதற்கு பருத்தி நூலை அத்தியாவசியப் பொருள் சட்டத்தின்கீழ் கொண்டு வந்து நெசவாளர்களுக்கு சீரான நூல் கிடைக்க மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நூற்பாலைகளில் அவர்களின் உற்பத்தியில் 50 சிட்டா நூல் கட்டாயம் உற்பத்தி செய்ய வேண்டும் என்பதையும் சட்டமாக்க வேண்டும். அப்போதுதான் நெசவாளர்களுக்கு நூல் கிடைக்கும். இதைச் செய்ய மத்திய அரசை நாம் வற்புறுத்த வேண்டும். நூல் விலை தாறுமாறாக ஏறுவதற்கும், நூல் தட்டுப்பாட்டிற்கும் காரணம் பஞ்சு நூலை வெளிநாட்டுச்கு ஏற்றுமதி செய்வதாகும். இந்த ஏற்றுமதியை உடனடியாக தடை செய்ய மத்திய அரசை கேட்டுக்கொள்ள ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தாய் உள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுக்கு ஒரு அன்பு வேண்டுகோள். கைத்தறி நெசவாளர்களுக்கு உதவும் வகையில் சிட்டா நூலுக்கு முழு விற்பனை வரியையும் விலக்க வேண்டும். இதனால் தமிழக அரசுக்கு ஏற்படும் பொருள் இழப்போ மிகமிகக் குறைவே.

இன்றுள்ள விலைவாசியில் வீட்டு மனைகளை ஏழை நெசவாளர்கள் வாங்கிட முடியாது. எனவே, அரசாங்கமே நிலங்களை ஆர்ஜிதம் செய்து நெசவாளக்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்களை வழங்கி, இலவசமாக வீடு கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கேரளாவில் கொடுப்பதைப போல 58 வயதான கைத்தறி நெசவாளர்களுக்கு மாதம் 200 ரூபாய் ஊதியம் கொடுப்பதைப் போல இங்கேயும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

கைத்தறி நெசவாளர்களுக்கு அவர்களின வறுமையால் இருண்ட வாழ்க்கையில் ஒளிவிளக்கு ஏற்றும் வகையில் அவர்கள் வேலை செய்யும் வீடுகளுக்கு இலவச மின்சாரம் வழங்க வேண்டுமென்று நான் தமிழக அரசை வேண்டி கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது.) ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன்.

மற்றுமொரு அன்பு வேண்டுகோள். விசைத்தறித் தொழிலில் ஏற்பட்டிருக்கிற முக்கிய பிரச்சினையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். தமிழக விசைத்தறிகளுக்கு யூனிட் ஒன்றுக்கு ரூ. 1.40 வீதம் மின்சாரம் வழங்கப்படுகிறது. ஆனால் தமிழகத்திற்கு அருகில் உள்ள ஆந்திரா பகுதியில் ஒரு யூனிட்டிற்கு 50 பைசா தான்



1991 செப்டம்பர் 20] [திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்]

வாங்கப்படுகிறது. தமிழக விசைத் தறிகளுக்கு உதவும் வகையில் சலுகைக் கட்டணம் விதித்து அவர்களுக்கு கைகொடுத்து உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும், கூட்டுறவு நூற்பாலைகளிலும் ஏற்படும் வேலை வாய்ப்பில் கைத்தறி நெசவாளர் வீட்டுப் பிள்ளைகளுக்கு முனனுரிமை கொடுத்து காக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, அளித்த வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> திரு. எ. தெய்வநாயகம்.

<u>திரு. எ. தெய்வநாயகம் :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று கைத்தறி மற்றும் துணிநூல் துறை மானியக் கோரிக்கை மீது எனக்கு உரையாற்றுவதற்கு வாய்ப்பளித் தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இத்துறையைப் பொறுத்த வரையில் பெருமைப்படக் கூடிய தொழிலாக விவசாயத்திற்கு அடுத்தப்படியாக விளங்கி வருகிறது. மரியாதைக்குரிய மகாத்மா காந்தியடிகள் அவர்கள் இராட்டை சுற்றி நம் நாட்டிற்கு சுதந்திரம் வாங்கிக் கொடுத்தார்கள். அந்த வகையிலும் இந்தத் தொழில் பெருத்த முக்கியத்துவத்தைப் பெறு கிறது.

முற்பகல் 10-35

அதுமட்டுமல்ல. மகாத்மா காந்தி அடிகள் எப்படி கைத்தறி நெசவாளர்களுக்கு உறுதுணையாக இருந்து, போட்டி போடக் கூடிய தன்மையை வகுத்துக் கொடுத்தார்களோ, அதே வழியில் அன்புப் பெரியார் அவர்களும், அண்ணா அவர்களும், அந்த நெசவாளர் குடும்பங்களை வாழ வைப்பதற்காக தங்களது தோள் களிலே துணியைச் சுமந்து விற்று, அந்த ஏழை குடும்பங்களைக் காப்பாற்றுவதற்காக பெரும் போராட்டங்களை எல்லாம் நடத்தி, சீர் செய்ததன் பலனாகத்தான் இந்தத் துறை இன்று வாழவழி வகுத்துக் கொண்டிருக்கிறது.

இப்போது, தமிழகத்தை ஆண்டு கொண்டிருக்கிற அன்புத் தலைவி அவர்கள், நல்ல பல திட்டங்களைச் செயலாக்குவதற்கு அறிவித்திருக்கிறார்கள். வீடு கட்டும் திட்டம், கடன் வழங்கும் திட்டம், படிப்பு வசதி, இப்படி எல்லாம் நல்ல பல வசதிகளைச் செய்து கொடுத்திருந்தாலும் கூட, அந்த ஏழை தொழிலாளர் களுடைய வாழ்வு மலர்வதற்கு இன்னும் பல திட்டங்களை வழி வகுத்துக் கொடுக்க வேண்டும் என்று இந்த மாமன்றத்தின் மூல மாக் கேட்டுக் கொள்கிறேன்.

ஏன் என்று கேட்டால், அங்கே தொழிலாளர் வர்க்கம் அல்லும் பகலும் பாடுப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதிலே பெண்மணிகள் 50 சதவீதம் ஈடுப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பெண்களுக்கு பாதுகாப்பு எதுவும் இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அவர்கள் கூலி பெறுவதற்காக, அவர்களுடைய முதலாளிகளிடத்திலே சென்று கையேந்தி நிற்கிற ஒரு துர்பாக்கியமான நிலையை பார்த்தால் நாம் வருத்தப்பட வேண்டிய காலகட்டமாக இருக்கிறது. எந்த வர்க்கத்தை எடுத்துக் கொண்டாலும், கூலி உயர்வு, கூலி உயர்வு என்று கூக்குரலிட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே அவர்களுக்கு எல்லாம் தக்க பாதுகாப்புச் சட்டம் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பேக்டரியிலே வேலை பார்க்கிற கைத்தறி நெசவாளர்களுக்கு சட்டப் பாதுகாப்பு இருக்கிறது. ஆனால் தனித்தனியாக நெய்கின்ற இந்த கைத்தறி குடும்பங்கள் வாழ்வதற்கு பல வகைகளிலே கடன் வழங்கினாலும், அந்தக் கடனைப் பெறுவதிலே பெரிய சிக்கல் இருக்கிறது. அந்தக் குடும்பங்கள் அத்தனையும், தனித்தனியாக ஒவ்வொரு வரிடத்திலே போய்ச்சேர்ந்து விடுகிறார்கள் கூட்டுறவு முறையிலே கூட்டுறவுச் சாதகமான சூழ்நிலையை உருவாக்காமல் இருப்பதால் அந்தத் தொழிலுக்கு சம்பந்தம் இல்லாதவர்கள், இதைக் கூட்டுறவு தொழிலாக வைத்து, கிடைக்கின்ற மானியத்தைப் பெற்று, இவர்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இதைப் போக்குவதற்கு அதிகாரிகள் முற்பட வேண்டும் என்பதை இந்தச் சந்தர்பத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர்களுக்கு கூலி உயர்வு என்று சொல்கிறபோது, கூலி உயர்வு கொடுப்பதிலே சிந்திக்க வேண்டிய ஒரு சூழ்நிலை வருகிறது. கூலி உயர்வு கேட்டால், உடனடியாக நூல் பற்றாக்குறை இருக்கிறது என்ற ஒரு சாக்கைச் சொல்லி, தப்பித்து கொள்கிறார்கள், முதலாளிகள். அந்த நூல் விலையை குறைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சி சிறப்பான முயற்சியாக இருந்தது. முதலாளிகளைக் கூப்பிட்டுப் பேசி, உடனடியாக திறக்கச் சொல்லி, அந்தக் கூலி உயர்வைக் கேட்கப் போனால், இப்படிச் சொல்கிறார்களே என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லும் போது, 'இனிமேல் நான் பார்த்துக் கொள்கிறேன்' என்று சொல்லியிருக்கிறார்கள். தீபாவளி வர இருக்கிறது. போனஸ் பிரச்சினை வேறு வந்துவிடும். எனவே, கூலி உயர்வு போன்றவைகளை எல்லாம் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு சட்டப்பாதுகாப்பு கொண்டு வந்து, தனித்தனியாக இருக்கிற நெசவாளர் குடும்பங்களை வாழவைப்பதற்கான வழிவகைகளைச் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முற்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



கூலி உயர்வு மட்டுமல்லாமல், அவர்களுக்கு நூல் தட்டுப்பாடு இல்லாமல் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். எங்கள் மதுரை மாவட்டத்திலே கிட்டத்தட்ட 1 லட்சம் கைத்தறி நெசவாளர்கள் இருக்கிறார்கள் அவர்களுக்கு நூல் சப்ளை செய்வதற்கு ஒரு நூல் பேங்க் ஒன்றை ஏற்படுத்தி, நூல் தட்டுப்பாடு உள்ள நேரத்திலே அவர்களுக்கு நூல் தருவதற்கு ஏற்பாட்டை மதுரை மாவட்டத்தில் உள்ளவர்களுக்கு செய்து கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மதுரையைப் பொறுத்தவரையில், சிறப்பாக நெய்யக் கூடிய சேலை சுங்குடிச் சேலை, அந்தச் சுங்குடிச் சேலை என்றால், நமது இந்தியாவிலே பிரசித்தி பெற்ற சேலை, கைத்தறிச் சேலை, அந்தச் சேலைக்கு பெரிய மார்கெட் இருக்கிறது. இந்த நூலை மேலும் அவர்கள் வளம்படச் செய்வதற்கு, இன்னும் தாராளமாக கடன் உதவிகளை அவர்களுக்கு செய்து, ஊக்குவிக்க வேண்டும். என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக டர்க்கி டவல்கள். இது மதுரையிலே பிரசித்தி பெற்று உள்ளது. வண்ண வண்ணக் கலர்களிலே தயார் செய்கிறார்கள், கைத்தறியிலேயும் இதைச் செய்கிறார்கள். ஜக்கார்ட் தறியிலேயும் இதைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இப்போது இதிலே போட்டி போட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவர்களைக் கேட்டால், அவர்களுக்கு கூலி மிச்சமாக இருக்கிறது. கைத்தறி நெசவாளர்களுக்கு கூலி மிச்சம் இல்லை என்று முதலாளிகள் சொல்லி, இந்தத் தொழிலாளர் வர்க்கத்தை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். எனவே இதையெல்லாம் சிந்தித்து, ஜக்கார்ட்டிலே வேலை பார்க்கிறவர்களுக்கும், கைத்தறியிலே வேலை பார்க்கிறவர்களுக்கும் பாகுபாடு இல்லாத வகையிலே, ஒரே கூலியை நிர்ணயித்து, அதுவும் ஒரு நிரந்தரமான கூலியை நிர்ணயித்து உடனடியாக 25 விழுக்காட்டிற்குக் குறையாமல் உயர்வினை அவர்களுக்கு கூட்டிக் கொடுக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இங்கு இருக்கின்ற கோ-ஆப்பரேட்டிவ் சொசைட்டிகளுக்கு ஸ்பெஷல் அதிகாரிகளைப் போட்டு, அந்த நிர்வாகத்தை நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். அந் இன்னும் வெகு நாளைக்கு நடக்கக்கூடாது என்பது என்னுடைய தாழ்மையான வேண்டுகோள். கூடிய சீக்கிரம் தேர்தலை நடத்த வேண்டும். தேர்தல் நடத்தி. இதிலே [illegible] இருக்கிற தொழிலாளர் வர்க்கங்கள் அந்த நிர்வாகத்திலே வரும்படியாகச் செய்து. இந்தத் தேர்தல் மூலமாக வருகின்ற தலைவர்களை நிர்ணயிக்கக்கூடிய சங்கமாக அமைத்து செயல் படுவதற்கு உங்களுடைய ஒத்துழைப்பை [illegible] [illegible] கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. எ. தெய்வநாயகம்] [1991 செப்டம்பர் 20 முற்பகல் 10.40

அடுத்தபடியாக இந்த கூட்டுறவு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மிக வேகமாக பல கூட்டுறவுச் சங்கங்களைச் நிர்வகித்து வரும் போது அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய மானியங்கள் எளிதில் கிடைக்கச் செய்ய வேண்டும். தீபாவளிக்கு சேல்ஸ் ரிடக்ஷன் கொடுக்கிறார்கள். அதை அதிவிரைவிலேயே கொடுத்தால், போனஸ் போன்றவற்றை கொடுப்பதற்கு, காலம் தாழ்த்தாமல் கொடுத்தால், தொழிலாளர்களுக்கு அது கையில் கிடைப்பதற்கு சௌகர்யமாக இருக்குமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக அந்தத் துணிகளிலே பாகுபாடு காண்பித்து இருக்கின்றீர்கள். விற்கிற துணிகளிலே ஜனதா துணி மிகக் குறைவான விலையிலே விற்கின்றது என்பதை நீங்கள் அறிவித்திருக்கின்றீர்கள். நான் உங்களுக்கு ஒரு வேண்டுகோளாக விடுக்கிறேன். ஜனதா என்றால் மட்டமான துணி என்ற ஒரு குறிக்கோளை எட்டி மக்கள் அதனிடத்திலே செல்வதற்கு நாட்டம் இல்லாமல் இருக்கிறது. அந்தப் பெயரை மாற்றி, ஏதாவது தலைவர்கள் பெயரை 'ஜெ. ஜெ.' என்று கூட வைக்கலாம். அப்படி அந்தப் பெயரை மாற்றி வைத்தால் தான் அந்த குறைவான எண்ணம் மாறி மார்கெட்டில் நல்ல சரளமாக விற்பனைக்கு அது கிடைக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

கைத்தறி சர்க்கா நெய்வதற்கு நீங்கள் விட்டுவசதி செய்து கொடுப்பது மட்டுமல்லாமல், அவர்களுக்கு படிப்பு வசதி கொஞ்சம் குறைவாக இருக்கிறது. நெசவாளர் குடும்பங்கள் பல இனத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். பேக்வேர்டு க்ளாஸ் இருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கிறார்கள். இன்னும் எவ்வளவோ பேர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு அந்தப் படிப்பு வசதியிலே சரியான முந்தாய்ப்பு கொடுக்காமல், முயற்சி செய்யாமல் இருப்பதாக, அதில் தடை இருக்கின்றது என்று குறிப்பிடுகிறார்கள். ஆனால் இந்த பெண்மணிகள் சின்ன குழந்தைகளையெல்லாம் டப்பா சுற்றுவது, நூல் சுற்றுவது, பாவு போடுவது என்று இப்படிப் பட்ட தொழிலில் ஈடுபடுத்துவதனால் அவர்களுக்கு படிப்பு தடைபட்டு விடுகிறது. படிக்கமுடியாமல் அவர்கள் கஷ்டப் படுகிறார்கள். அவர்களுக்கென்று தனியாக ஒரு பள்ளி அமைத்து அவர்களுக்கு பயிற்சிப் பள்ளி இல்லையென்றால் பாடத்திலே சேர்த்துப் படிப்பதற்கு ஒரு உத்தரவாதத்தை ஏற்படுத்தி வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, வாய்ப்பிற்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.



1991 செப்டம்பர் 20]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : டாக்டர். ச. சுந்தரராஜ்.

டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கைத்தறி, மற்றும் துணி நூல் துறையின் மானியத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறி, இந்த மானியத்தின் மீது ஒரு சில கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன்.

வேளாண்மைக்கு அடுத்தபடியாக கிராமங்களில் வேலை வாய்ப்பு அளிக்கின்ற துறை இந்த கைத்தறித் துறையாகும். கிராமங்களில் வறுமையை ஒழிப்பதற்கு கைத்தறித் துறை மிகவும் பயன்படுகின்றது. குறைந்த மூலதனத்தில் அதிக நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கின்ற தொழிலாகவும் மற்றும் சுற்றுப் புறத் தூய்மை கெடாமல் இருக்கின்ற ஒரு துறையாகவும் இது இருக்கின்றது. கூட்டுறவு நூற்பாலைத் திறனை அதிகரித்து மூலப் பொருள் தட்டுப்பாட்டை நீக்கி வேலை வாய்ப்பை அதிகப்படுத்துவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களது அரசு பாடுபட்டு வருகின்றது. அதை நான் இந்தச் சமயத்தில் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியான பரமக்குடித் தொகுதியில் 7,500 நெசவுகள் இருக்கின்றன. அங்கே 45 கூட்டுறவுச் சங்கங்கள் தனியாக சொந்தத் தறி வைத்து நெய்பவர்கள் 1,000 பேரும் இருக்கிறார்கள். ஆனால் என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற மக்கள் பனாரஸ் மற்றும் பம்பர் துணிகளைத்தான் நெய்கிறார்கள். கோ-ஆப்டெக்ஸ் அதிகமான முக்கியத்துவம் கொடுப்பதே பட்டு நூலுக்குத்தான். ஆனால் அவர்கள் ரூ. 80 கோடிக்கு மேல் பட்டு ரகங்களுக்கான துணிகளை ஸ்டாக் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் பனாரஸ் மற்றும் பம்பர் துணி ஸ்டாக்கே இல்லாவிட்டாலும் அதை அவர்கள் பர்சேஸ் பண்ணுவதற்கு மறுக்கின்றார்கள். ஆனால் மார்க்கெட்டில் அதிகமாக விற்பனையாவது இந்த பனாரஸ் மற்றும் பம்பர் துணிகள்தான். ஆனால் ஏழை எளிய மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட இந்த கோ-ஆப்டெக்ஸ் அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் பட்டு துறைக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுக்கும் நிலை மாறி, பட்டிலே மயங்குகின்ற நபர்களுக்கு இல்லை முக்கியத்துவம் கொடுக்காமல் ஏழை எளிய மக்களை வாழ வைக்கின்ற கைத்தறி நெசவாளர்களை வாழவைக்கின்ற பனாரஸ் மற்றும் பம்பர் துணிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அதிகமாக வாங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மற்றும் 100 நாட்களுக்கு தள்ளுபடி கொடுக்கிறார்கள்.
ஆனால் அந்த தள்ளுபடி தொகை உடனே அந்த மக்களுக்கு
போய்ச் சேர்வதில்லை. 30 நாட்களுக்குள் அந்த தள்ளுபடி.
தொகை வந்தால் அவர்கள் தொடர்ச்சியாக மற்றவர்களுக்கு
வேலைவாய்ப்பு கொடுப்பதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும்.
தீபாவளி நெருங்கிக் கொண்டிருக்கிறது. எனவே என்னுடைய
தொகுதியில் கிட்டத்தட்ட கோ-ஆப்டெக்ஸ் மூலம் ரூ. 62
இலட்சம் பாக்கித் தொகை இருக்கின்றது. மற்றும் தள்ளுபடி
தொகையை 3 மாதங்களுக்கு கொடுக்கப்பட வேண்டும் என்று
இருந்தாலும் இன்னும் ரிபேட் தொகை கொடுக்கப்படாமல்
கிட்டத்தட்ட 77 லட்சம் ரூபாய் பாக்கியாக இருக்கிறது.
ஆகவே அந்த நெசவுத் தொழிலை செய்கிற, கைத்தறி
தொழிலை செய்கிற ஏழை எளிய மக்கள் மிகவும் கஷ்டத்தில்
இருக்கிறார்கள். தீபாவளி நெருங்கிக் கொண்டிருப்பதால்
அவர்களுக்கு இந்த சமயத்தில் தொடர்ச்சியாக வேலை
கொடுப்பதற்கு மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்
அவர்கள் கருணையோடு ஆவன செய்ய வேண்டுமென்று
இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன். மேலும் இந்த
கூட்டுறவுச் சங்கங்களையெல்லாம் கலைத்து எஸ்.ஓ.க்களை
போட்டிருக்கிறார்கள்.

முற்பகல் 10.45.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக
உறுப்பினர்கள் தேர்தலில் நிற்கக் கூடாது என்ற ஒரே காரணத்
திற்காக பல்வேறு நபர்களுக்கு தண்டனை வழக்கின் கீழ்
தேர்தலில் நிற்பது தடை செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே
அப்படி அரசியல் நோக்கத்தோடு போடப்பட்ட தண்டனை
வழக்குகளையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
கருணையோடு பரிசீலித்து அதை ரத்து செய்ய வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன். கூட்டுறவுச் சங்கங்களை நிர்வகிப்
பதற்காகவென்றே ஏ.டி. ஆபிஸ்ஸை ஒவ்வொரு மாவட்டத்திலும்
போட்டிருக்கிறீர்கள். என்னுடைய தொகுதியில் ஏ.டி. ஆபிஸ்
பசும்பொன் மாவட்டத்திற்கும், இராமநாதபுரம் மாவட்டத்
திற்கும் சேர்த்து ஒன்று உள்ளது. ஆனால் பரமக்குடியில்
45 கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இராமநாதபுரத்தில்
ஒரே ஒரு கூட்டுறவுச் சங்கம்தான் உள்ளது. காரைக்குடியில்
7 சங்கங்கள் உள்ளன. மானாமதுரையில் கூட்டுறவுச்
சங்கமே இல்லை. அவ்வாறு சங்கமே இல்லாத இடத்தில்
ஏ.டி. ஆபிஸ் அமைக்கப்பட்டுள்ளது. ஆகவே கூட்டுறவு
சங்கங்கள் அதிகமாக உள்ள பரமக்குடிக்கே இந்த ஏ.டி.
ஆபிசை மாற்ற வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர்
அவர்களை துணைத் தலைவர் மூலமாக கேட்டுக்கொள்ள
ஆசைப்படுகிறேன். என்னுடைய தொகுதியில் பொருளா
தாரத்தில் மிகவும் பின் தங்கிய பனாரஸ், பட்டுத் தொழிலை
செய்யக்கூடிய நெசவாள மக்கள் அதிகமாக இருப்பதால் அவர்
களுக்கு வீடுகளைக் கட்டுவதற்கு 50 பெர்சென்ட் மானிய
மாகவும் 50 பெர்சென்ட் கடனாகவும் வழங்குமாறு கேட்டுக்



கொள்கிறேன். மேலும் என்னுடைய தொகுதியில் ஈ.எஸ்..ஐ
ஆஸ்பத்திரியே இல்லாமல் இருக்கிறது. என்னுடைய
தொகுதியில் கூட்டுறவு நெசவாளர்கள் அதிகமாக இருக்கிற
காரணத்தால் இங்கு கூட்டுறவு நெசவாளர்களுக்காக மருத்துவ
மனை ஒன்றை கட்டித்தரவேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன். தற்போது அவர்கள் கிட்டத்தட்ட 5 கிலோ
மீட்டருக்கு அப்பால் உள்ள ஆஸ்பத்திரிக்குத்தான் செல்ல
வேண்டிய சூழ்நிலை உள்ளது. ஆகவே இதை அமைச்சர்
அவர்கள் கருணையோடு பரிசீலித்து — அவர்கள் தற்போது
மருத்துவ மனைக்கு சென்று வரவேண்டுமென்றால் மதியம்
ஆகிவிடுகிறது — ஆகவே அவர்களுக்கு என்று தனியாக ஒரு
மருத்துவ மனையை நிறுவவேண்டும் என்று நான் கேட்டுக்
கொண்டு, என்னுடைய தொகுதியில் கூட்டுறவுச் சங்கத்தின்
மூலமாக ஒரு நூற்பாலை 5 லட்சத்திற்கு கட்டப்பட்டது.
8 வருடமாக மூடியே கிடக்கிறது. ஆகவே அந்த கூட்டுறவு
நூற்பாலையை உடனே திறக்க வேண்டும் என்று கேட்டுக்
கொண்டு அச்சங்குளத்தில் ஒரு கூட்டுறவு நூற்பாலை உள்ளது. அது
வேலை ஆட்கள் அதிகமில்லாமல் மற்றும் பவர் கட்டின் மூலமாக
வும் அதிகமான நபர்களுக்கு வேலை கொடுக்க முடியாத சூழ்நிலை
யில் உள்ளது. 45 நபர்களைச் சேர்ப்பதற்காக 3 முறை
இன்டர்வியூ நடத்தி மூன்று முறையும் தடை செய்யப்பட்டது.
ஆகவே அந்த இன்டர்வியூவை மீண்டும் நடத்தி அந்தப்
பகுதியில் உள்ள ஆதி திராவிட மக்களுக்கு நெசவாளி
மக்களுக்கு வேலை வாய்ப்பு தரும்படி கேட்டுக் கொண்டு இந்த
சந்தர்ப்பத்தை தந்த மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவருக்கு நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.
நன்றி வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ஓ.எஸ்.
அமர்நாத்.

*திரு. ஓ. எஸ். அமர்நாத் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, கைத்தறி மற்றும் துணி நூல் துறையின்
மானிய விவாதத்தில் கலந்துக் கொண்டு பேச வாய்ப்பு அளித்த
துணைத் தலைவருக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக்
கொள்கிறேன். தமிழகத்திலே கிராமப்புற மக்களுக்கு வேலை
வாய்ப்பு வழங்குவதில் வேளாண்மைக்கு அடுத்தபடியாக
கைத்தறி துணி தான் முக்கிய பங்கு வகிக்கிறது. அதுமட்டு
மின்றி மாநில பொருளாதார முன்னேற்றத்தில் நெசவாளர்
களின் பங்கு கணிசமானது ஆகும். கைத்தறி துறை மற்ற
கிராமத் தொழில்களை விட குறைந்த மூலதனத்திலே அதிக
நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக் கூடிய ஒரு துறை.
மேலும் கிராமப்புறத்திலிருந்து நகர்ப்புறத்திற்கு மக்கள்
குடிபெயர்வதை தடுக்க வல்ல இத்தொழில் சுற்றுப்புற சூழ்
நிலைக்கும் கெடுதல் விளைவிக்காதது ஆகும்.

மேலும் மதுரை மாவட்டத்திலே குறிப்பாக செந்தூர் வண்டியூர், அண்ணாநகர், அல்பாடி போன்ற இடங்களிலும் பொதுவாக என்னுடைய மதுரை கிழக்கு தொகுதியிலும் நெசவுத் தொழிலாளர்கள் அதிகமாக வாழ்ந்து வருகிறார்கள். அந்த நெசவுத் தொழிலாளர்களுக்கு தேவையான உப பொருட் களை கைத்தறி நூல் போன்ற பொருட்களை அரசின் கண்ட் ரோல் விலையில் சப்ளை செய்ய வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களையும், கைத்தறித் துறை அமைச்சர் அவர்களையும் தங்கள் மூலமாக பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 10.50

மதுரை கிழக்குத் தொகுதி அனுப்பானடி மிகவும் பின்தங்கிய பகுதியாக இருப்பதால் அந்தப் பகுதியிலே அரசுக்குச் சொந்த மான கூட்டுறவு நூற்பாலை ஒன்று அமைத்துத்தர வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும், கைத்தறித் துறை அமைச்சர் அவர்களையும் நான் அன்புடன் கேட்டுக் கொள் கிறேன். தறிகளைக் கூட்டுறவின் கீழ் கொணருதல். கைத்தறி களை அதிக அளவில் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டு வருதல் அரசின் முக்கியக் கொள்கைகளில் ஒன்றாகும். கூடுத லான தறிகளை கூட்டுறவு அமைப்பின் கீழ் கொணரும் பொருட் டும், அவர்கள் பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் பங்கு முதலீடு செய்யும் பொருட்டும் அவர்களுக்கு அரசு நிதி உதவியை கடன் வடிவில் வழங்குகின்ற இந்தத் திட்டத்தை மன தாரப் பாராட்டுகிறேன். நூல் விநியோகம் செய்வதில், தமிழ் நாட்டில், ஆண்டொன்றுக்கு 4.27 இலட்சம் கைத்தறிகளுக்கு 1.8 இலட்சம் கிலோ கிராம் சிட்டா நூல் தேவைப்படுகிறது. கூட்டுறவு நூற்பாலைகளின் மூலம், ஆண்டொன்றுக்கு 80,000 பேல்கள் சிட்ட நூலினை 1,503 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. மதுரை மாவட்டத் திலே கைத்தறி ஜவுளி உற்பத்தியாளர் சங்கம் என்ற ஒரு அமைப்பு இருக்கிறது. அந்த அமைப்புக்கு 5 சதவீதம் என்ற கோட்டா நூல் சென்னை கைத்தறி இயக்குநரால் வழங்கப் பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார். நீங்கள் தொடர்ந்து பேசுங்கள்.

திரு. ஓ. எஸ். அமர்நாத் : மதுரையிலே கைத்தறி ஜவுளி உற்பத்தியாளர் சங்கம் என்ற ஒரு அமைப்பு இருக்கிறது. அதற்கு 5 சதவீதம் கோட்டா நூல்களை சென்னை கைத்தறி இயக்குநர் அலுவலகத்திலிருந்து ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால்



மதுரையில் உள்ள இணை அல்லது துணை இயக்குநர் அலுவல கத்திற்குப் போய் கேட்டால் அவர்கள் சரியாக—ஒதுக்கப்பட்ட ரேஷியோ முறையில் நூல்களை வழங்குவதில்லை என்று புகார் கள் வருகின்றன. எனவே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களும், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களும் அதைக் கருத்தில் கொண்டு உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி மிகவும் அன்புடன் கேட்டுக் கொள் கிறேன்.

நூற்பாலைகள், மத்திய அரசு திட்டத்தின் கீழ் "சிட்ட நூல் உற்பத்தி செய்யும்படியான கடமைக்குட்பட்ட திட்டத்தின் கீழ்" பதுக்கலைத் தவிர்த்து சிட்ட நூலின் விலையை சீரான முறையில் நிர்ணயிக்கும் பொருட்டு இத்திட்டத்தின் கீழ் உள்ள உத்தரவுகளை திறம்பட நிறைவேற்றும்படி மாவட்டக் ஆட்சி யாளர்களுச்கு உத்தரவிடப்பட்டுள்ளதை பாராட்ட கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து கைத்தறிகளை நவீனமயமாக்கும் திட்டம். கைத் தறித் துறையின் கீழ் கைத்தறியின் உற்பத்தி திறன் மற்றும் தரம் ஆகியவற்றை உயர்த்தும் நோக்குடன் நெசவாளர்களின் சோர்வை அகற்றவும், கூட்டுறவின் கீழ் இயங்கும் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு தறிகளை நவீனப் படுத்தும் திட்டம் ஒன்று 1980–81 முதல் அமல்படுத்தப்பட்டு வருகிறது. மத்திய அரசும் மாநில அரசும் 50 : 50 என்ற விகிதாச்சார அடிப்படையில் நிதியுதவி அளிக்கின்றன. இதில் 3-ல் 2 பகுதி கடனாகவும் 3-ல் 1 பகுதி மான்யமாகவும் வழங்கப்பட்டு வருகிறது. இதை நான பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

ஏற்றுமதியாளர்களுக்கு அரசு பரிசு வழங்கும் திட்டம். இத் திட்டத்தின் கீழ் திறமையான ஏற்றுமதியாளருக்கு பரிசு வழங்க வருடத்திற்கு ரூபாய் 22,500 வீதம் செலவிட அரசு உத்தரவிட்டுள்ளது என்பதை அன்புடன் பாராட்டுகிறேன்.

ஜனதா துணி திட்டம். ஜனதா துணி உற்பத்தி திட்ட மானது கைத்தறி நெசவாளர்களுக்கு தொடர்ந்து தொழில் கொடுக்கவும், கிராமப்புற மக்களுக்கு வாங்கத் தகுந்த விலையில் துணிகள் வழங்கவும் கைத்தறி துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்திலே அன்புடன் பாராட்டுகிறேன்.... (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஏ. ஞானப் பா ரெட்டி.

*திரு. ஏ. ஏகாம்பர ரெட்டி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கைத்தறியும், துணித் தொழிலும் பற்றிய 26 ஆம் எண் மானிய கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முன்வந்துள்ளேன். விவசாயத்திற்கு அடுத்தபடியாக கிராமப் புறங்களில் வேலை வாய்ப்பை நோக்கி சுமார் 10 மில்லியன் குடும்பங்கள் நம்பியிருக்கின்றன. அது கைத்தறி நெசவாளர்களுடைய குடும்பங்கள். இந்த அரசாங் கம் கைத்தறி நெசவாளர்களுடைய வாழ்க்கைத் தரத்தை முன் னேற்ற 5 முக்கிய அம்சங்களை வகுத்து இருப்பதை நான் பாராட் டாமல் இருக்க முடியாது. அதிலே ஒன்று கோ-ஆப்டெக்ஸுக்கும் பிரைமரி கோ-ஆப்பரேடிவ் ஹேண்ட்லூம் வீவர்ஸ் சொசைட்டி ஆரம்ப கைத்தறி நெசவாளர்களுக்கும் 42 கோடி ரூபாய் ரிபேட் இனைம் செய்வதற்கு கொடுத்தது ஒரு மகிழ்ச்சிகரமான செய்தி. இரண்டாவது 75,000 பழைய முறையிலே இயங்கிக் கொண்டு இருக்கும் கைத்தறிகளை விசைத்தறிகளாக மாற்றுவதற்கு திட் டத்தை வகுத்து 10 ஆண்டு திட்டத்தை வகுத்து இந்த ஆண்டுக்கு ஒரு டோக்கன் கிராண்ட்டாக 30 இலட்சம் ரூபாயைக் கொடுத் திருப்பது மகிழ்ச்சிகரமானது.

முற்பகல் 10-55

மூன்றாவது, கைத்தறிகளை நவீனப்படுத்துவதற்காக 50 ஆயிரம் கைத்தறிகளை 5 ஆண்டு திட்டத்தில் நவீனப்படுத்து வதற்கு 42 கோடியே 30 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பது மிகவும் மகிழ்ச்சிக்குரியது.

இவர்கள் வீடுகள் இல்லாமல் வாடிக்கொண்டிருக்கிறார்கள். கைத்தறி நெசவாளர்களுக்கு தறியோடு கூடிய வீடு (workshed-cum–house) 2 ஆயிரம் வீடுகளை கட்டிக் கொடுப்பது என்பது மிகவும் பாராட்டுக்குரியது.

கடைசியாக ஒரு கைத்தறி நெசவாளர் இறந்து விட்டால் அவர் குடும்பத்திற்கு 10 ஆயிரம் ரூபாயிலிருந்து 15 ஆயிரம் ரூபாய் வரை உயர்த்தி தருகிறார்கள். இந்த 5 அம்சங்களும் உண்மையாகவே இந்த ஏழை எளிய நெசவாளர்கள் குடும்பத் தின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது ஆகும். இன்றைக்கு ஒரு ஏழை விவசாயியைப் போலவே கைத்தறி நெசவாளர்களும் வாடிக் கொண்டிருக்கிறார்கள். காரணம், மில், பவர் லூமி னுடைய போட்டியை எதிர்க்க முடியாமல் கைத்தறி நாள்தோறும் நசிந்து கொண்டு வருகிறது. அதற்குக் காரணம் நாம் என்ன செய்ய வேண்டுமென்று சொன்னால், மத்திய அரசும் மாநில அரசும் சேர்ந்து சில திட்டங்களை வகுத்துக் கொள்ள வேண்டி யிருக்கிறது. அந்தத் திட்டங்களை முன்னிட்டு என்னுடைய சில யோசனைகளைக் கூற விரும்புகிறேன்.

முதன் முறையாக மத்திய அரசு வகுத்தது Reservation of varieties. 22 வெரைட்டிகளை கைத்தறிக்குக் கொடுக்க வேண்டுமென்று வழிவகைசெய்து . அதிலிருந்து



11 இடம்கள் கைத்தறிக்கு கொடுக்கப்பட்டது. இது மகிழ்ச்சிக் குரியது. இது போக மீதம் உள்ள 11 இடம்களை கைத்தறிக்குக் கொடுத்தால் ஓரளவுக்கு கைத்தறி முன்னேறுவதற்கு வாய்ப்பாக இருக்கும்.

அடுத்து, இரண்டாவது, நூல் விலை. 40 : 60 ஆம் நம்பர் நூல் தான் பொதுவாக நெசவாளர்கள் நெய்யக்கூடிய நூல்ஆகும். அதனுடைய விலை 200 ரூபாயிலிருந்து 300 ரூபாயாக உயர்த்தப் பட்டிருக்கிறது. காரணம் முன்பு இருந்த மத்திய அரசு பஞ்சை ஏற்றுமதி செய்ததால் நூல் விலை ஏறிவிட்டது. அதை ஒரு ஒழுங்குபடுத்தி தறிக்காரர்களுக்கு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மில் கேட் பிரைஸ்க்கு பிரைட் சார்ஜ் போன்று எந்தவித மான சார்ஜ்களும் இல்லாமல் ''நேஷனல் ஹேண்ட்லூம் டெவ லப்மெண்ட் கார்ப்பரேஷன்'' மூலமாக அவர்களுக்கு நூல் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மூன்றாவது, நம்முடைய மாநில அரசு எவ்வளவோ நல்ல காரியங்களைச் செய்திருக்கிறது. எவ்வளவோ சப்சிடி, கிராண்டு கொடுக்கிறது. ஆனாலும் கூட இந்த கட்டு நூல் மீது 2 சதவீத சேல்ஸ் டாக்ஸ் போடுகிறது. தயவு செய்து இந்த நேரத்தில் உங்கள் மூலமாக கைத்தறி அமைச்சர் அவர்களையும் மாண்புமிகு புரட்சித் தலைவி முதலமைச்சர் அவர்களையும் நான் கேட்டுக் கொள்ளுவது எல்லாம் அந்த 2 சதவீத சேல்ஸ் டாக்சை அவர் களுக்கு எக்ஸ்சம்ட் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

துணிகளை எல்லாம் நாம் நெய்கிறோம். எக்ஸ்போர்ட் வெரைட்டீஸ் ஹேண்டுலூம் எல்லாம் தேங்கியிருக்கிறது. இப் போது தான் நிறைய பணத்தைக் கொடுத்திருக்கிறார்கள். 42 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். 42 கோடி ரூபாய் கொடுத்திருப்பதால் இனிமேல் தேக்கம் இருக்காது. எல்லா வற்றையும் கம்ப்ளீட் செய்து விட்டோம். ஆகவே, இது நல்ல மகிழ்ச்சியான செய்தி. இதை அப்போதைக்கப்போது கொடுக்க வேண்டும். ஏன் என்றால் சங்கம் தொடர்ந்து நடக்க வேண்டும். அவர்களுக்கு இந்த cash credit accommodation, இந்த Rebate claims எல்லாம் அப்போதைக்கப்போது கொடுத்தால் தான் சங்கம் மாதந்தோறும் 30 நாளும் வேலை செய்வதற்கு வாய்ப்பாக இருக்கும். கைத்தறி நெசவாளர் களுக்கு மாதந்தோறும் வேலை கிடைப்பது இல்லை. இது எல்லோருக்கும் தெரியும். ஜூன், ஜூலை ஆகஸ்டு மாதங் களில் நூல் கிடைக்கவில்லை. இப்போது ஆகஸ்டு 15 ஆம் தேதிக்கு மேல்தான் நூல் கொடுத்து இருக்கிறார்கள். இந்த 2 மாதமாக நூல் கொடுக்கவில்லை என்று சொன்னால் அவர் கள் எப்படி தயார் செய்வது, கூலி எப்படி பெறுவது ? சங்கங்

எப்படி நடப்பது ? ஒரே நேரத்தில் பணத்தைக் கொடுத்து
விடுகிறார்கள். ஒரு சங்கத்திற்கு cash credit accommodaiton
இரண்டு இலட்ச ரூபாய் என்று சொன்னால்,
அவனுக்கு துணி வரவேண்டியது கோ-ஆப்டெக்சிலிருந்து 3 இலட்
சம் ரூபாய்க்கு வர வேண்டியிருக்கிறது.

முற்பகல் 11-00

அந்த மாதிரி நேரத்தில் எப்படி சொசைட்டியிலே பணத்தை
ரொடேட் பண்ணி, சொசைட்டியிலே உள்ள மெம்பர்களுக்கு
வேலை கொடுத்து, அவர்களுக்கு எப்படி கூலி கொடுக்க முடியும்
என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று நான் இந்த
நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதுபோல்
பவர்லூம் இருக்கிறது. இப்போது பவர்லூமில் நிறைய அட்
வான்டேஜ் இருக்கிறது ; சௌகரியங்கள் இருக்கின்றன. புரடக்
ஷன் காஸ்ட் ரொம்ப கம்மியாக இருக்கிறது. புரடக்
காஸ்ட் கம்மியாக இருக்கிற அதே நேரத்தில், கரண்ட் சார்ஜ்
மட்டும் அதிகமாக இருக்கிறது. என்னுடைய தொகுதியில்
இருந்து 2 மைலில் ஆந்திரா இருக்கிறது. ஆந்திரா பகுதி
களிலே கரண்ட் சார்ஜ் 0.55 பைசா தான் வசூல் செய்கிறார்கள்.
நாங்கள் இருக்கிற ஊரிலே 1 ரூபாய் 55 பைசா வசூல் செய்
கிறார்கள். இப்போது இருக்கிற நிலைமையிலே சப்சிடி கொடுத்
தும், கிராண்ட் கொடுத்தும் செய்கிறோம் ; அதை மறக்க முடி
யாது. அதே நேரத்தில் நாம் ஸ்மால் அண்டு மார்ஜினல்
ஃபார்மர்ஸுக்கு சப்சிடி கொடுத்து உதவுகிறோமே, அதே போல
ஒரு தறி, இரண்டு தறி வைத்திருக்கக் கூடிய குடிசைப் பகுதி
களிலே வாழக் கூடிய அந்த ஏழையெளிய பவர் லூம் வைத்திருக்
கக்கூடிய, கைத்தறி நெசவாளர்களுக்கு, இலவசமாகக் கொடுக்க
முடியவில்லை என்றாலும் கூட, கன்சஷன் ரேட்டிலாவது, 0.55
பைசாவுக்குக் கொடுக்கும்படி இந்த நேரத்திலே உங்கள் மூலமாக
மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் அவர்களையும், மாண்பு
மிகு முதலமைச்சர் அவர்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.
கைத்தறித் துணிக்கு இப்போது நிறைய டிமாண்ட் இருக்கிறது.
எக்ஸ்போர்ட் வெரைட்டீஸ்களை நாம் இப்போது நிறைய
கொடுக்கிறோம். அதே அளவில் கான்ட்ரிபியூஷனும் இருக்கிறது.
எக்ஸ்போர்ட் வெரைட்டீஸை நாம் நிறைய அளவில் தயாரிக்கி
றோம். ஜனதா வெரைட்டி என்று வேறு கொடுக்கிறோம்.
ஜனதா வெரைட்டியோடு, எக்ஸ்போர்ட் வெரைட்டிகளையும்
நாம் கொடுப்பதால், நிறைய பேருக்கு வேலை வாய்ப்பு கிடைப்ப
தோடு, அந்நிய செலாவணியை நாம் பெறுவதற்கும் ஒரு
வாய்ப்பாக இருக்கிறது. அதனால், கைத்தறித் துணிக்கு நல்ல
மதிப்பு கொடுத்து, எக்ஸ்போர்ட் வெரைட்டிகளை தேவையான
அளவிற்கு எக்ஸ்போர்ட் செய்தால், நமக்குத் தேவையான பணம்
கிடைக்கும் என்பதை இந்த நல்ல நேரத்திலே கூறிக்கொள்வதற்கு
ஆசைப்படுகிறேன்.



அதே போல், என்னுடைய தொகுதியான பள்ளிப்பட்டிலே
78 சொசைட்டிகள் இருக்கின்றன. அதிலே 40 சொசைட்டிகள்
தான் வேலை செய்கின்றன. 38 சொசைட்டிகள் டார்மெண்டாக
இருக்கின்றன. அதிலேயும் 28 சொசைட்டி பவர் வீவர்ஸ்.
அந்த அளவிற்கு சொசைட்டிகளெல்லாம் இயங்குவதில்லை.
பினாமி லூம்ஸ் அங்கே நிறைய இருக்கின்றன போகஸ்
லூம்ஸ் நிறைய இருக்கின்றன. நாம் ரிபேட் கூட தண்டமாகக்
கொடுக்கிறோம். ரிபேட் கொடுப்பதிலே நாம் எவ்வளவோ
மிச்சம் பண்ணலாம். ரிபேட் கொடுப்பதை எல்லாம் கண்
காணிப்பு செய்தால் நல்லது. உண்மையான கைத்தறி நெச
வாளர்களுக்கு அந்த ரிபேட் பணம் போய் சேருவதில்லை. ஆத
லால், அந்த ரிபேட் கொடுக்கும்போது தனியாக கண்காணிப்பு
செய்வதன் மூலம் அரசாங்கப் பணத்தை அதிக அளவில் மிச்சம்
பண்ணலாம். அதற்கு வாய்ப்பு இருக்கிறது.

அதே போல டையிங் பேக்டரிகள் இருக்கின்றன. எங்கேயோ
ஒரு கோ-ஆப்பரேடிவ் டையிங் பேக்டரி இருக்கிறது.
பிரைவேட்டிலே டையிங் பேக்டரிகளைப் போடுகிறார்கள். 100
ரூபாய் என்று போட்டதை 200 ரூபாய் என்று பில் போடுகிறார்
கள். 100 ரூபாய்தான் கொடுக்கிறார்கள். 100 ரூபாய்
அவர்களுக்குப் போய் சேர்ந்து விடுகிறது. எனவே, கோ-ஆப்ப
ரேடிவ் டையிங் பேக்டரி ஒன்றை என்னுடைய தொகுதியிலே
அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய
தொகுதியிலே ஏராளமான கைத்தறி நெசவாளர்கள் இருப்ப
தாலே, ஒரு ஸ்பின்னிங் மில்லை அம்மையார்புரத்திலோ அல்லது
ஆர். கே. பெட்டிலோ அமைக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்வதோடு கோ-ஆப்பரேடிவ் டையிங் பேக்டரி ஒன்றையும்
அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக்
கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பினுக்கு நன்றி கூறி, விடை
பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு
கைத்தறி மற்றும் நெசவாலைகள் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, கைத்தறி மற்றும் துணி நூல் துறை
மானியக்கோரிக்கை மீது எனக்குப்பேசுகிற வாய்ப்பை உருவாக்கித்
தந்த தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அவர்
களுக்கு என்னுடைய நன்றியினை முதற்கண் தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன். எங்களைப் போன்ற விலாசம் தெரி
யாதவர்களுக்கெல்லாம் விலாசத்தைத் தந்த தலைவி (மேசை
யைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி என்பதை நான் உங்களுக்கு
மெத்த பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.
கொடி கட்டுகிற தொண்டனை, கொடி போட்ட காரில் பவனிவர
வைத்த தலைவி புரட்சித் தலைவி என்பதை நான் உங்களுக்கு
மெத்த பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் தலைவியினுடைய ஆட்சி, பொற்கால ஆட்சியாக இன்றைய தினம் தமிழகத்தினுடைய அரசியல் வரலாற்றில் திகழ்ந்து கொண்டு இருக்கிறது. அந்தத் தலைவியினுடைய அன்பு வேண்டுகோளுக்கு இணங்கி என்னை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்த ஆர். கே. நகர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய நன்றியினை இந்த அவையின் வாயிலாக தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டுள்ளேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம், கைத்தறி மற்றும் துணிநூல் மானியத்தின் மீது பல்வேறு நண்பர்கள் தங்களுடைய சீரிய கருத்துக்களைத் தந்திருக்கிறார்கள். காலத்தையும் நேரத்தையும் கருதி நான் என்னால் இயன்ற அளவு அவர்களுக்கு பதில் அளிப்பேன் என்ற உறுதியினை இந்த அவையில் தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

ஏறத்தாழ 11 பேர் வெட்டுத் தீர்மானங்களைத் தந்திருக்கி றார்கள். அவர்களுக்கும் நான் விளக்கத்தைத் தருகிறேன் என் பதை உங்களுக்கு நினைவூட்டக் கடமைப்பட்டுள்ளேன். மாண்பு மிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் கைத்தறி என்றால் பேரறிஞர் அண்ணா அவர்கள் தான் நினைவுக்கு வரு வார்கள். எப்படி கதர் என்றால் காந்தி நினைவுக்கு வருவாரோ, அதே போன்று கைத்தறி என்றாலே பேரறிஞர் அண்ணா அவர் கள்தான் நினைவிற்கு வருவார்கள். அண்ணா தோளிலே ஏந்தி தன்னுடைய தொண்டர்களையும், தன்னுடைய தம்பிமார் களையும் இந்த கைத்தறி நெசவாளர்கள் நசுக்கப்பட்ட நேரத் தில், வறுமையோடு வாதாடிக் கொண்டிருந்த நேரத்தில், வறுமையோடு போராடிக் கொண்டிருந்த நேரத்தில், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். போன்றவர்கள் அன்றைய தினம் தோளிலே துண்டேந்தி வீதி வீதியாக விற்றது மட்டுமல்லாமல், தன்னுடைய தம்பிமார்களுக்கு மாலைகள் போட வேண்டாம், கைத்தறி ஆடைகளை அணிவியுங்கள் என்று கட்டளை பிறப்பித்தவர், தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆவார்கள்,

முற்பகல் 11-05

அந்த் அண்ணா மறைந்ததற்குப் பிறகு, தமிழகத்தின் தள நாயகன் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் பல்வேறு நன்மை பயக்கக்கூடிய திட்டங்களைத் தமிழகத்தினுடைய அரசி யல் வரலாற்றில் உருவாக்கி மறைந்திருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்களும், புரட்சித் தலைவர் அவர்களும் மறைந்த தற்குப் பின்னால், அண்ணாவினுடைய புகழையும், புரட்சித் தலைவரினுடைய புகழுக்குக் களங்கம் கற்பிப்பதற்காக ஏதோ சிலர் 25 மாத காலத்தில் ஆடாத ஆட்டங்களை ஆடி, சொன்ன தைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம் என்று ஊருக்கு விளம்பரங்களைத் தந்தார்களே தவிர, நாட்டுக்கு நன்மை பயக்கக்கூடிய திட்டங்களை உருவாக்கவில்லை என்பதை நான் உங்களுக்கு மெத்தப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.



பேரவைத் தலைவரவர்களே, இன்றைய தினம் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய இலட்சியங்களையும், புரட்சித் தலைவ ருடைய இலட்சியங்களையும் வழி நடத்துகின்ற ஒப்பற்ற தலைவி யாகத் தாய் உள்ளத்தின் தலைவியாக, தர்மத்தின் தலைவியாக, ஏழைகளினுடைய கண்ணீரைத் துடைக்க வேண்டும் என்பதற் காகப் பணியாற்றிக் கொண்டிருக்கிற ஒப்பற்ற தலைவி புரட்சித் தலைவி என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அப்படிப்பட்ட தலைவி எங்களைப் போன்றவர்களை இந்த அவையில் பேச வைத்தது மட்டுமல்லாமல், நெசவாளர்களுடைய துயர் துடைக்க வேண்டுமென்பதற்காகப் பல்வேறு புரட்சிகர மான திட்டங்களை இன்றைய தினப் தமிழகத்தினுடைய அரசியல் வரலாற்றில் உருவாக்கியிருக்கிறார்கள் என்று சொன்னால் மிகை யாகாது என்று கருதுகிறேன்.

பேரவைத் தலைவரவர்களே, இன்றைய தினம் மட்டுமல்ல; 1984 ஆம் ஆண்டு, நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த பொழுது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொள்கைப் பரப்புச் செயலாளராக இருந்த பொழுது, நாடாளுமன்றத்தில், எந்த நாடாளுமன்றம் தெரியுமா? பேரறிஞர் அண்ணா அவர்கள் அமர்ந்திருந்த நாற்காலியில், அண்ணாவினுடைய இலட்சியங்களை வழி நடத்துவதற்காக, புரட்சித் தலைவருடைய தூதுவராக நாடாளுமன்றத்திற்குச் சென்ற புரட்சித் தலைவி, அண்ணாவினுடைய நாற்காலியில் நின்று கொண்டு, அன்றைய தினம் எந்த அண்ணா அவர்கள் இந்தியத் துணைக் கண்டத்தினுடைய சிறந்த ஜனநாயகவாதி பண்டிட் ஜவஹர்லால் நேரு எதிரில் அண்ணா அவர்கள் எப்படி இந்த நாட்டினுடைய நலனுக்காக, தமிழ் மக்களினுடைய நலனுக் காக போராடினார்களோ, வாதாடினார்களோ, அதே போன்று, அண்ணா அமர்ந்திருந்த நாற்காலியிலிருந்து எழுந்து நின்று நம்முடைய ஒப்பற்ற தலைவி, புரட்சித் தலைவி அவர்கள் நெச வாளர்களுடைய பிரச்சினையைக் குறித்து வாதாடினார்கள், போராடினார்கள். அதனுடைய எதிரொலிதான், பல்வேறு நன்மை பயக்கக் கூடிய திட்டங்களை யார் எதிரிலே தெரியுமா? தலைவரவர்களே, யார் எதிரிலே தெரியுமா, நண்பர்களே ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் களா, உறுப்பினர்களோ பேசுகிறபொழுது அவைத் தலை வரைப் பார்த்துப் பேச வேண்டும் என்ற ஒரு மரபு இருக்கிறது. நீங்கள் அண்ணாவைப் பார்த்துப் பேசிக் கொண்டிருக்கின்றீர்கள்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : தலைவரவர்களே, நான் அண்ணாவைப் பார்த்துப் பேசிக் கொண்டிருக்கிறேன். புரட்சித் தலைவி அரியாசனத்தில் அமர்ந்து கொண்டிருக்கின்ற காரணத்

தினால், பேசினால் பேச்சு வராது என்ற அச்சத்தின் காரணமாக நான் அண்ணாவைப் பார்த்துப் பேசிக் கொண்டிருக்கிறேன். (சிரிப்பு.)

பேரவைத் தலைவரவர்களே, எந்த நாடாளுமன்றத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் அமர்ந்து, பண்டிட் ஜவஹர்லால் நேருவின் எதிரில் பேசினார்களோ, அதே பண்டிட் ஜவஹர்லால் நேரு பெற்றெடுத்த புதல்வி, இந்த நாட்டுக்காகத் தன்னுடைய இன்னுயிரைத் தியாகம் செய்த அன்னை இந்திரா எதிரிலே நின்று கொண்டு புரட்சித் தலைவி பல்வேறு புரட்சிகரமான திட்டங் களை எடுத்துரைத்தார்கள். அதனுடைய எதிரொலி தான் இன்றைய தினம் 22 ரகம், என்று மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் தண்டாயுதபாணி அவர்கள் எடுத்துரைத்ததைப் போல, அன்றைய தினம் புரட்சித் தலைவி 1984-ல் மூடப்பட்டு இருக்கின்ற மில்களைப் பற்றிப் பேசினார்கள். 1985 ஆம் ஆண்டு நெசவாளர்களுடைய நலிவைத் தீர்க்க வேண்டுமென் பதற்காக உரையாற்றினார்கள்.

நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்வது, ஏதோ இன்றைய தினம் தமிழகத்தினுடைய முதலமைச்சராக வந்த பிறகு தான், நெசவாளர்களுடைய துயரைத் துடைக்க வேண்டுமென்பதற்காக புரட்சித் தலைவி திட்டங்களைப் போடவில்லை, சாதாரண கொள்கை பரப்புச் செயலாளராக இருந்த பொழுதே, கொடி கட்டுகின்ற தொண்டர்களுடைய, சாலையோரத்திலே இருக் கின்ற ஏழை எளிய மக்களுடைய, பாட்டாளி மக்களுடைய கண்ணீரைத் துடைக்க வேண்டுமென்பதற்காகப் புரட்சிகரமான திட்டங்களை உருவாக்கிய தலைவி தான், தாயுள்ளத்தின் தலைவி தான், எங்களுடைய தலைவி என்பதை நான் உங்களுக்கு நினைவூட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

அந்தத் தலைவி இந்த மாமன்றத்தில் நின்று கொண்டு, யாருமே சாதிக்க முடியாத சாதனையை, இந்தியத் துணைக் கண்டத்தினுடைய அரசியல் வரலாற்றில் ஒரு வரலாற்றினை, ஏழை எளிய மக்களுக்காக உருவாக்கியிருக்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதுவரையிலும் தமிழகத்தினுடைய அரசியல் வரலாற்றில், சொன்னதைச் செய் வோம் என்பார்கள், செய்வதைச் சொல்வோம் என்பார்கள், உண்டியல் பெட்டி காணோம் என்பார்கள், இதுதான் வரலா றாக இருந்ததே தவிர, ஏழை நெசவாளர்களுக்காக நன்மை செய்வதற்காக எதையுமே செய்ததாக வரலாறு இல்லை.

நான் மரியாதைக்குரிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்தினுடைய அர சியல் வரலாற்றில் (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர்



அவர்களே, 'குடும்ப ஓய்வூதியம்' என்ற தலைப்பின் கீழ், புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பல்லாண்டு காலமாக இந்த நெசவாளர்கள் நசுக்கப்பட்டார்கள் ; ஒதுக்கப்பட்டார்கள் ; மூலையிலே தள்ளப்பட்டார்கள் ; ஒரு வேளை சோற்றுக்கில்லாமல், காச நோய் போன்ற வியாதிகளால் பாதிப்புக்கு ஆளாகி, அவர்களுடைய குடும்பங்களை நடுரோட் டில் நிறுத்தி வைத்தார்கள். அவர்கள் மறைந்ததற்குப் பிறகு, 58 வயதுக்குள்ளாக அந்தக் கூட்டுறவு நெசவாளர்கள், கூட்டுற வில் அங்கமாக இருக்கிற நெசவாளர்கள் மறைவார்களேயானால், அவர்களுடைய குடும்பங்களுக்கு 10 ஆண்டு காலத்திற்கு ரூபாய் 250 வீதமாக ஓய்வூதியம் தரவேண்டுமென்ற கட்டளையைப் பிறப்பித்த தலைவிதான், தாயுள்ளத்தின் தலைவி என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி).

அதோடு மட்டும் நின்றுவிடவில்லை நண்பர்களே, கைத்தறி களை விசைத்தறிகளாக .... மன்னிக்க வேண்டும், மாண்புமிகு உறுப்பினர்களே (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர், 'நண்பர்களே' என்று பேசுவது பொதுக் கூட்டத்திலே பேசுவது போல் அமைந்துவிடும். சட்டமன்றத்திலே பேசுகிறீர்கள் என் பதை மறந்துவிட வேண்டாம்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொறுத்தருள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தினுடைய புரட்சித் தலைவி அவர்கள் பொறுப் பேற்று இன்றைய தினம், எண்பத்திஎட்டே நாட்கள் ஆகின்றன. எண்பத்தி எட்டே நாட்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் பல் வேறு கருத்துக்களைச் சொன்னார்கள். ஒருகணம் நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். 88 நாட்கள் : 3 மாதம் கூட முடியவில்லை. 3 மாதத்திற்குள் எத்தனையோ சாதனைகளை தமிழ் மண்ணுக்குத் தந்திருக்கிறார்கள் புரட்சித் தலைவி அவர்கள் என்பதை ஒருகணம் நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இரண்டாம் கட்டமாக, ஊதியத்தைப் பெற்றுவருகிற நெச வாளர்கள் அவர்களுடைய துயர் துடைக்க வேண்டும் என்பதற் காக அவர்களுடைய கண்ணீரைத் துடைக்க வேண்டும் என்பதற் காக 37,500 குடும்பங்களைச் சார்ந்தவர்களுக்கு 75 ஆயிரம் விசைத் தறிகளை 348 கோடி ரூபாய் செலவில் புரட்சித் தலைவி அவர்கள் தருவதற்கு திட்டமிட்டுள்ளார்கள் என்பதை நான் உங்களுக்கு நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசை யைத் தட்டும் ஒலி).

அதுமட்டுமல்ல, தறிகளை நவீனப்படுத்த ஏறத்தாழ 50
ஆயிரம் தறிகளை ஐந்தாண்டு காலத்திற்குள் 42.30 கோடி
ரூபாய் செலவில், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் நவீனப்
படுத்துகிற திட்டத்தை இங்கே அறிமுகம் செய்திருக்கிறார்கள்
என்பதை நான் உங்களுக்கு நினைவூட்டக் கடமைப்பட்டிருக்
கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதேபோன்று, நெசவாளர்களின் நலனுக்காக மாண்புமிகு
சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜனார்த்தனன் அவர்கள்கூட
சொன்னார்கள்—கடந்த காலத்தில் நெசவாளர்களுக்கு, அவர்கள்
58 வயதுக்குள் காலமாவார்களேயானால், அவர்களுக்கு 10
ஆயிரம் ரூபாய் சேமிப்பு நிதியிலிருந்து தந்து கொண்டிருந்தார்கள்.
அதனை மாற்றி, அந்த ஏழை நெசவாளர்கள் வாழ வேண்டும்
என்பதற்காக, வளர வண்டும் என்பதற்காக, 15 ஆயிரம்
ரூபாயாக உயர்த்திய தலைவி, புரட்சித் தலைவி அவர்கள்தான்.
(மேசையைத் தட்டும் ஒலி).

அதுமட்டுமல்ல, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
பேரறிஞர் அண்ணா அவர்கள், ' ஒரு மனிதனுக்கு தேவை இருக்க
இடம்; உண்ண உணவு; உடுக்க உடை; இவை மூன்றும்,
அவசியம் என்று சொன்னார்கள் ' அண்ணாவினுடைய வழியில்
இருக்க இடத்தைத் தந்தது மட்டுமல்ல; அவர்கள் தொழில்
செய்து பிழைக்க வேண்டும்; " உழைத்து வாழ வேண்டும், பிறர்
உழைப்பில் வாழ்ந்திடாதே; சிரித்து வாழ வேண்டும்; பிறர்
சிரிப்பில் வாழ்ந்திடாதே " என்ற தத்துவத்திற்கு இணங்க
புரட்சித் தலைவி அவர்கள் இரண்டாயிரம் வீடுகளை 5 கோடி
ரூபாய் செலவில் கொடுப்பதற்கு திட்டம் வகுத்திருக்கிறார்கள்
என்பதை நான் இந்த அவைக்கு மெத்தப் பணிவுடன் தெரிவித்துக்
கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இது கைத்தறித்
தொழிலாளர்களுக்கு.

கூட்டுறவு நூற்பாலைகளில் 1965-ஆம் ஆண்டு வரையிலும்
இருந்த 12 கூட்டுறவு நூற்பாலைகளை 26.28 கோடி ரூபாய்
செலவில் நவீனப்படுத்துகிற திட்டத்தை ஐ.டி.பி.ஐ. வங்கியின்
மூலமாக கடன் உதவியோடு நவீனப்படுத்த வேண்டுமென்று
புரட்சித் தலைவி அவர்கள் கட்டளையிட்டிருக்கிறார்கள்.
கட்டளையிட்டது மட்டுமல்ல; 7 கோடி ரூபாய் நிதியும் ஒதுக்கித்
தந்திருக்கிறார்கள் என்பதை நான் உங்களுக்கு மெத்தப் பணிவன்
புடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)
நெசவாளர்களாக இருக்கிறவர்கள், கடுமையான காச நோய்,
மூட்டுவலி, இரணியம் போன்ற வியாதிகளுக்கு ஆளாகி, தங்களு
டைய குடும்பங்களையும் காப்பாற்ற முடியாமல், தங்களையும்
காப்பாற்றிக் கொள்ள முடியாமல், தங்களுடைய பிள்ளைக் குட்டி
களையும் காப்பாற்ற முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்
களே, அந்த ஏழை நெசவாளர்களினுடைய துயர் துடைக்க
வேண்டும் என்பதற்காக ஈரோடு, ஆரணி, காஞ்சிபுரம் போன்ற



அதிக நெசவாளர்கள் வாழ்கின்ற பகுதிகளில் மருத்துவ முகாம்
களை அமைத்து, அவர்களுக்கு சிகிச்சை தரவேண்டுமென்று
புரட்சித் தலைவி அவர்கள் கட்டளையிட்டுள்ளார்கள் என்பதை
நான் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். (மேசையைத்
தட்டும் ஒலி).

முற்பகல் 11-15

ஏற்கெனவே 36 கோடி ரூபாய் தள்ளுபடி—கோ-ஆப்டெக்சின்
வாயிலாக அவர்களுக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இந்த
நிதிநிலை ஆண்டிலே, புரட்சித் தலைவி அவர்கள் 42 கோடி
ரூபாயைத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள் என்று சொன்னால்
அது மிகையாகாது என்று கருதுகிறேன். (மேசையைத் தட்டும்
ஒலி). இத்தனை சாதனைகள் புரிந்த புரட்சித் தலைவி,
பேரறிஞர் அண்ணா அவர்களுடைய லட்சியங்களையும், புரட்சித்
தலைவருடைய லட்சியங்களையும் வழி நடத்த வேண்டுமென்பதற்
காகத் திட்டங்கலை வகுத்துக் கொண்டிருக்கின்ற தலைவி,
இங்கே ஆட்சியில், உழைக்கின்றவர்கள் உயர்த்தப்படவேண்டும்
என்ற தத்துவத்திற்கு இணங்க, ஆட்சி செய்து கொண்டிருக்
கிறார்கள்.

ஏற்கெனவே, ஆட்சிப்பீடத்தில் இருந்த பெரியவர்கள், கைத்
தறி நெசவாளர்களைப் பயன்படுத்தி பல்வேறு உறுப்பினர்கள்
பல்வேறு கருத்துக்களைச் சொன்னார்கள். பின்னாலே விளக்கத்
தைத் தருகிறேன். கூலி உறுப்பினர்களை குறிப்பாகக் காஞ்சிபுரம்
போன்ற பகுதியில் கூலி உறுப்பினர்களைச் சேர்த்து அவர்கள்
நாற்காலியில் அமர வேண்டுமென்பதற்காக, தலைவர்களாக ஆக
வேண்டுமென்பதற்காக அரசாங்கப் பணத்தைத் தவறான வழியில்
பயன்படுத்த வேண்டுமென்பதற்காக, அவர்கள் பொறுப்புகளுக்கு
வரவேண்டுமென்பதற்காக அவர்கள் சொகுசாக வாழ வேண்டு
மென்பதற்காகக் கூலி உறுப்பினர்களைக் கைத்தறித் தொழிலில்
சேர்த்துப் பல்வேறு தவறுகளைச் செய்திருக்கிறார்கள். அதற்குச்
சில அதிகாரிகளும் உறுதுணையாக இருந்திருக்கிறார்கள். இதைப்
பற்றி சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் என்னிடத்திலே புகார்கள்
தந்திருக்கின்றனர். சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல, நான்
காஞ்சிபுரத்திற்கும், மதுரைக்கும் சென்ற நேரத்தில் கூட பல
நெசவாளர்கள், குறிப்பாக என்னிடத்திலே புகார்களை எடுத்
துரைத்தார்கள். நான் இந்தப் பேரவைத் தலைவரின் வாயி
லாகத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்—ஒரு தவறு
செய்தால் அதைத் தெரிந்து செய்தால், அவன் தேவன் என்றா
லும் விடமாட்டேன் என்று சொன்ன தத்துவத்தின் அடிப்படை
யில்தான் இன்றைய தினம் நம்முடைய ஒப்பற்ற தலைவி,
புரட்சித் தலைவி அவர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்
என்பதை நான் உங்களுக்கு நினைவூட்டக் கடமைப்பட்டுள்ளேன்
(பலத்த மேசையைத் தட்டும் ஒலி). இப்படிப்பட்ட தலைவியி

[திரு. இ. மதுசூதனன்] [1991 செப்டம்பர் 20

னுடைய ஆட்சியில் தவறு செய்பவர்கள் தண்டிக்கப்படுவார்கள்; நன்மை செய்பவர்கள் பாராட்டப்படுவார்கள் என்பதை நான் உங்களுக்கு நினைவூட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

இன்றைய தினம், ஏதோ கூட்டுறவு நெசவாளர்களுக்கு மட்டும்தான் இந்தத் தாய் உள்ளம் கொண்ட தலைவி செய்திருக் கிறார்கள் என்று நீங்கள் தவறாகக் கருதக் கூடாது. புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பீடத்தில் வந்தமர்ந்த ஒரு மாத காலத்திற்குள், மதுரை மாநகரத்திலே தனியார் நெசவாளர்கள். ஏற்கெனவே ஆட்சிப் பீடத்தில் இருந்த நல்லவர்கள் செய்யக் கூடாத காரியத்தைச் செய்தார்கள், பஞ்சு ஏற்றுமதி செய்யக் கூடாது, நூல் ஏற்றுமதி செய்யக் கூடாது என்று இருந்தும் கூட அவர்களுடைய சுய இலாபத்திற்காகப் பல இலட்சம் பஞ்சையும், நூலையும் ஏற்றுமதி செய்தார்கள் என்று தெரிவித்தார்கள். அத னுடைய எதிரொலி, திடீரென்று நூல் விலையும், பஞ்சு விலை யும் உயர்ந்தது. அவ்வாறு உயர்த்தியதன் காரணமாக, நாங்கள் வந்த ஒரு மாத காலத்திற்குள் போர்க் குரல் எழுப்பினார்கள். புரட்சித் தலைவியைப் பார்த்து மனுக்களைத் தந்தார்கள். அந் தக் கருணையுள்ளம் கொண்ட தாய், புரட்சித் தலைவி அவர்கள், தட்டாமலேயே, கேட்காமலேயே, அந்த ஏழை நெசவாளர் களுக்கு இரண்டாயிரம் பேல்களைத் குறைந்த விலையில் தர வேண்டுமென்று கட்டளை பிறப்பித்தார் என்பதை நான் நினை வூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே மாண்புமிகு விழுப்புரம் சட்டமன்றத் தொகுதி உறுப் பினர் திரு. தே. ஜனார்த்தனன் அவர்கள் ஒரு கருத்தைத் தெரி வித்தார்கள். டாக்டர் எம். ஜி. ஆர். கைத்தறி நெசவாளர் நல அறக்கட்டளை 1986-ஆம் ஆண்டு 7½ இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புரட்சித் தலைவர் அவர்களால் உருவாக்கப்பட்டது. இருபத்தைந்து மாத ஆட்சியிலே இருந்த பெரியவர்கள் தங்களு டைய ஆட்சிச் சுகத்தின் காரணமாக, தங்களுடைய நாற்காலி களைப் பயன்படுத்திக் கொண்டு, அந்த அறக்கட்டளையினுடைய பெயரை மாற்றி இருக்கிறார்கள். நெசவாளர் நல அறக்கட்டளை என்று பெயர் மாற்றம் செய்துள்ளார்கள். இதை அறிந்த புரட்சித் தலைவி அவர்கள், இன்றிலிருந்து அதை முன்பிருந்த தைப் போல, டாக்டர் எம். ஜி. ஆர். நெசவாளர் நல அறக் கட்டளை என்று அறிவிக்கப்பட வேண்டுமென்று எனக்குக் கட்டளை பிறப்பித்துள்ளார்கள் என்பதை உங்களுக்குத் தெரி வித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இதுமட்டுமல்ல, தனியார்களுக்குக் கைத்தறி வளர்ச்சிக் கழ கத்தின் மூலமாக 3.7 கோடி ரூபாய் செலவில் 2,761 பேல்கள் தனியார் நெசவாளர்களுக்குக் கடன் உதவி தந்து அந்த நெச வாளர்களுடைய வாழ்க்கையை உயர்த்த வேண்டுமென்பதற்காகப் புரட்சித் தலைவி அவர்கள் கடன் உதவி தந்திருக்கிறார்கள் என் பதை தெரிவித்துக் கொள்ள நான் கடமைப்பட்டுள்ளேன்.



1991 செப்டம்பர் 20] [திரு. இ. மதுசூதனன்]

முற்பகல் 11-20

இத்தனையும் செய்த புரட்சித் தலைவி அவர்கள்தான் தேர்தல் நேரத்தில் தேர்தல் அறிக்கையாக வெளியிட்டார்களே அந்தத் தேர்தல் அறிக்கையில் இருக்கிற குறிப்புகள் அனைத்தையும் வெளியிட்ட புரட்சித் தலைவி அவர்கள் இறுதியாக ஒரு கட்டளையையும் பிறப்பிக்கிறார்கள். நெசவாளர்களுக்கு முடிவு காணவேண்டும்; அவர்கள் எப்போதும் போராடிக் கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் வறுமையோடு போராடிக் கொண்டிருக்கிறார்கள்; பட்டினியால் வாடிக் கொண்டு இருக்கிறார்கள்; அந்த நெசவாளர்கள் வாழ்க்கைக்குத் தீர்வு காணவேண்டும் என்பதற்காக ஒரு நிபுணர் குழுவை அமைக்க வேண்டும் என்று கட்டளையைப் பிறப்பித்திருக்கிறார் கள். இது தேர்தல் அறிக்கையில் உள்ளது. அதை இந்த கைத்தறித் துறை ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. மிக விரைவில் நல்ல முடிவுகள் வெளியாகும் என்பதை நான் உங்க ளுக்கு நினைவூட்ட கடமைப்பட்டு இருக்கிறேன (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு உறுப்பினர் திரு. தண்டாயுதபாணி அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். 20 சதவீதம் கூலி தந்தமைக் காக பாராட்டியதோடு மட்டுமல்லாமல்—அந்தப் பாராட்டு தலுக்கு உரியவர் இங்கே அமர்ந்துகொண்டிருக்கிற, எங்களை எல்லாம் ஆளாக்கிக் கொண்டிருக்கிற புரட்சித் தலைவி அவர்கள் தான் என்பதை நான் முதலில் அவருக்குத் தெரிவித்துக் கொள் கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல் 22 ரகங்களாக அதாவது 10 அல்லது 12 ரகங்களாக ஒதுக்கீடு செய்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். அரசின் கைத்தறிப் பாதுகாப்புச் சட்டம் 1985 உச்சநீதிமன்றத்தில் உள்ளது. அந்த வழக்கினு டைய முடிவு தெரிந்த பிறகு—இதற்காக மத்திய அரசுக்கும் கடிதம் எழுதப்பட்டுள்ளது என்பதை நான் உங்களுக்கு நினை வூட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

அதேபோன்று திருமதி சுந்தராம்பாள் அவர்கள் பட்டை சீனாவிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டுமென்ற விண்ணப் பத்தைத் தந்திருக்கிறார்கள். சீனாவிலிருந்து பட்டு இறக்குமதி செய்ய வேண்டும் என்று நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் மத்திய அரசுக்கு கடிதம் தந்திருக்கிறார்கள். என்பதை நான் உங்களுக்கு நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

டாக்டர் சுந்தரராஜ் அவர்கள் உதவி இயக்குநர் அலுவ கத்தை மாற்றுவது குறித்து கேட்டிருக்கிறார்கள். அது அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதை அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தண்டாயுதபாணி அவர்கள சிட்டா நூல் மீதிருக்கிற வரி உயர்வை ரத்து செய்ய வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்ள விரும்புவது இதைப் பற்றி பலமுறை பரிசீலிக்கப்பட்டது. இதனால் அரசுக்கு 50 கோடி ரூபாய் நட்டம் ஏற்படும். இவ்வளவு நிதிநிலை நெருக்கடியிலும், சாராயக் கடைகளை மூடிய நிலையிலும், இந்த நாட்டை ஒழுக்கமான பாதையில் அழைத்துச் செல்கிற நிலையிலும் நெசவாளர்களுக்காக பல்வேறு நன்மைகள் பயக்கக் கூடிய திட்டங்களை உருவாக்கிய பிறகு தற்போது இயலாது என்பதை வருத்தத்தோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன். இத்தனையும் செய்த தலைவி, ஏற்றுமதிக்கும் ஆக்கமும், ஊக்கமும் தரவேண்டுமென்பதற்காக, திருப்பூர் என்றாலே பனியன் என்று உங்களுக்கு நினைவுக்கு வரும். அந்த திருப்பூர் ஏறத்தாழ 800 கோடி ரூபாய்க்கு அந்நிய செலாவணி ஈட்டித் தருகின்றது என்பதற்காக அதை ஏற்றுமதி மையமாக அறிவிக்க வேண்டும் என்று நம் ஒப்பற்றத் தலைவி, புரட்சித் தலைவி அவர்கள் மத்திய அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்கள்.

முற்பகல் 11.25

அதுமட்டுமல்ல. திருப்பூர் நகரத்தினுடைய வசதிகளுக்காக குடிதண்ணீர் வசதி, சாலை வசதி, மின்சார வசதி, இப்படிப் பட்ட வசதிகள் செய்வதற்காக 150 கோடி ரூபாய் அளவில் தமிழக அரசு திட்டம் தீட்டி மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறது என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

வெட்டுத் தீர்மானங்கள் மீது கருத்துக்களைத் தெரிவித்துக் கொளகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களும், திரு. ஆண்டி அம்பலம் அவர்களும், திரு. ஜி. பழனிசாமி அவர்களும் 'கொள்கை பற்றி விவாதிக்க' என்கின்ற வெட்டுத் தீர்மானத்தைத் தந்திருக்கிறார்கள். இதைப் பற்றி விவரமான அறிக்கை அவையில் வைக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினால் விவாதம் தேவையில்லை என்று கருதுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ. ஆண்டி அம்பலம் அவர்கள் நத்தத்திலே புதிய நூற்பாலை தேவை என்று கூறி இருக்கிறார்கள். ஏற்கனவே மதுரை மாவட்டத்திலே 3 நூற்பாலைகள் உள்ளன. அது மட்டுமின்றி தனியாருடைய 45 நூற்பாலைகள் உள்ளன. ஆதலால் தற்போதுள்ள சூழ் நிலையில் மதுரை மாவட்டத்தில் தேவையில்லை என்று அரசு கருதுகிறது.





மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சிங்காரம் அவர்கள் கூட்டுறவு நெசவாளர்களுக்கு தருவதைப்போல், தனியார் நெசவாளர்களுக்கும் சலுகைகள் தரவேண்டும் என்று கேட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் வேண்டுமென்றால், அவர்களுக்குத் தேவையான நெசவாளர்களை அருகாமையிலே உள்ள கூட்டுறவு நெசவாளர்கள் சங்கங்களில் தங்களை இணைத்து கொள்ளச் செய்வார்களேயானால், அவர்களுக்கும் அனைத்து சலுகைகளும் கிடைக்கும் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சிங்காரம் அவர்கள் இன்னொரு வெட்டுத் தீர்மானத்தை கொண்டு வந்திருக்கிறார்கள். கைத்தறி நெசவாளர்களுக்கு பணம் தரக்கூடாது என்று. இப்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. தண்டாயுதபாணி அவர்களுக்குத் தெரிவித்ததுபோல, பணமாக யாருக்கும் தருவதில்லை. அங்கே ஒரு குழுவின் வாயிலாக அவர்களுக்குத் தேவையான தறிகளும், அதற்கான பொருள்களும் தரப்படுகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே உங்கள் வாயிலாக மாண்புமிகு திரு. ஆர். சிங்காரம் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுபோன்ற பல்வேறு தோழர்கள், பல்வேறு உறுப்பினர்கள் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்கள், மூலம் கருத்துக்களைத் தெரிவித்தார்கள். உங்களுடைய கேள்விக்குரிய பதிலை ஏதோ நான் சொல்லக் கூடாது, விளக்கத்தைத் தரக்கூடாது என்பதல்ல. சில எதிர்கால திட்டங்களை இந்த அவையில் நாங்கள் எடுத்துரைக்க இருக்கிறோம். எனக்கு ஒதுக்கிய நேரம் அரை மணி நேரம். காரணம் அடுத்த மாண்புமிகு அமைச்சரின் 'சோசியல் வெல்பேர் டிப்பார்ட்மெண்ட்- மானியக் கோரிக்கை வருகிறது. நான் நேரத்தையும் காலத்தையும் கருதி சுருக்கமாக உறையாற்றி அமரலாம் என்று கருதுகிறேன். உங்களுடைய கருத்துக்களை ஏற்று அதற்கான நடவடிக்கைகளை எடுப்பேன் என்ற உறுதியினை இந்த அவையில் மாண்புமிகு பேரவைத் தலைவரின் வாயிலாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நாட்டினுடைய நலனையும் நெசவாளர்களுடைய நலனையும் கருதி அம்பேத்கார் மாவட்டத்திலே குடியாத்தம் பகுதியில் நெசவுத் தரம் உள்ள லுங்கிகளை உற்பத்தி செய்து அவைகளை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்ய வேண்டுமென்று இந்த துறை முடிவு எடுத்திருக்கிறது என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

கைத்தறி சணலை பயன்படுத்தும் குடும்பங்களுக்கு தேவையான நவீனமயமான ரகங்களை உற்பத்தி செய்து அவைகளை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்வதற்காக திட்டத்தை இந்தத்

துறை உருவாக்கி இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். 6 கோடி ரூபாய் செலவில் காஞ்சி புரத்தில் பல அடுக்கு விற்பனைக்கூடத்தை அனைத்து வசதி களோடு வியாபாரத்தைப் பெருக்குவதற்காக, பல அடுக்கு மாளிகை கட்டி அதன் வாயிலாக வியாபாரத்தைப் பெருக்க திட்டமிடப்பட்டிருக்கிறது என்பதை நான் உங்களுக்குத் தெரி வித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

முற்பகல் 11-30

அதேபோல 3 கோடி ரூபாய் செலவில் ஈரோட்டிலும் கட்ட இருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

5 கோடி ரூபாய் செலவில் 6 இடங்களில் 'கோவாப்டெக்ஸ் மையங்கள்' நிறுவ உள்ளோம் என்பதையும் உங்களுக்கு நினை வூட்ட கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இறுதியாக ஒரு நற்செய்தி. (சிரிப்பு) நம்முடைய ஒப்பற்ற தலைவி, புரட்சித் தலைவி அவர்களைத் தேர்ந்தெடுத்தது தர்மபுரி மாவட்டம். அந்த தர்மபுரியிலுள்ள பர்கூர் தொகுதி தான். அந்தத் தொகுதி வாக்காளர் பெருங்குடி மக்கள் தான். அந்தத் தொகுதி தாய்மார்கள் தான் நம்மை எல்லாம் வழி நடத்துவதற்காக, ஒழுக்கமான, நேர்மையான தமிழகத்தை உருவாக்குவதற்காக, புரட்சித் தலைவி அவர்களைத் தேர்ந் தெடுத்திருக்கிறார்கள். அந்த பர்கூர் திருநகரத்தில், 22.47 கோடி ரூபாய் செலவில், தாய்மார்களுக்காக, 750 தாய்மார் களுக்காக மட்டுமே, ஒரு நூற்பாலை உருவாக்க வேண்டு மென்ற திட்டத்தை வகுத்திருக்கிறோம். அது மட்டுமல்லாமல் அந்த நூற்பாலையின் பெயர் நம்முடைய ஒப்பற்ற தலைவி புரட்சித் தலைவி அவர்களை ஈன்றெடுத்த தாய் இருக்கிறார் களே, அந்த அன்னையின் பெயரால் 'அன்னை சந்தியா கூட்டுறவு நூற்பாலை' என்ற பெயரைச் சூட்டுவதாக இந்தத் துறை முடிவு எடுத்திருக்கிறது என்பதை நான் மெத்த பணிவன் போடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சீக்கிரம் முடியுங்க

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் என்னுடைய கருத்துக் களை முடிந்த அளவுக்கு எடுத்துரைத்திருக்கிறேன். வெட்டுத் தீர் மானங்களை தந்தவர்கள் திரும்பப்பெற்றுக்கொண்டு மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று உங்கள் வாயிலாக கேட்டு அமைகிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். .

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர், அவர் பதில் உரையின்போது, ஓர் இடத்தில் 'நெசவாளர்களுக்கு முடிவு காண வேண்டும்' என்று கூறினார். அதை 'நெசவாளர்களின் பிரச்சினைகளுக்கு முடிவு காண வேண்டும்' என்று திருத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதைப் போலவே இன்னொரு இடத்தில் 'நெசவாளர்கள் வாழ்க்கைக்கு தீர்வு காண வேண்டும்' என்று கூறினார். அதையும் 'நெசவாளர்களின் வாழ்க்கைப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும்' என்று திருத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மற்றும் ஓர் இடத்தில் 'மதுரை மாவட்டம் தேவையில்லை' என்று கூறினார். அதற்குப் பதிலாக 'மதுரை மாவட்டத்தில் தேவையில்லை' என்று திருத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதட்டத்தின் காரணமாக தெரிவித்திருக் கிற இந்த இரண்டொரு சொற்றொடர்களில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்த அத்தகைய திருத்தங்களை அவைக் குறிப்பிலே ஏற்றிக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் 26. கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய வெட்டுத் தீர் மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதி யுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

திரு. ஜி. பழனிசாமி தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதி யுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது.

''கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 59,00,28,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்'' என்னும் மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)
மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. அரசுக்கு கோரிய தொகை வழங்கப் பெற்றது.

## (ஆ) கோரிக்கை எண் 30—சமூக நலன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்.

மானியக் கோரிக்கை எண் 30—சமூக நலன். மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

* மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலன் பற்றிய 30 ஆம் எண் ''மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 345,70,89,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்'' என்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 346. திருமதி ரமணி நல்லதம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சத்துணவு ஊழியர்கட்கு பணி நிரந்தரமும் பிற துறையில் பணி புரியும் எஸ்.எஸ்.எல்.சி. கல்வி கற்ற பணியாளருக்கொத்த ஊதியமும் வழங்க வேண்டிய அவசியம் குறித்த' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''சமூக நலன் பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 345,70,89,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 359. திரு. ஜி. பழனிசாமி.





திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை பெண்கள் திருமண உதவித் திட்டத்தில்; திருமணத்திற்கு முன்னால் மனு செய்தால் திருமணம் முடிந்தும் உதவி கிடைக்காத நிலை இருப்பதை போக்குவது பற்றியும், அனைவருக்கும் காலாகாலத்தில் கிடைக்கச் செய்வது குறித்தும் விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''சமூக நலன் பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 345,70,89,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

முற்பகல் 11-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கையும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அவை முன் வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை நான் இந்த அவையில் படித்ததாக கருதி அவைக் குறிப்பில் ஏற்றிக் கொள்ள வேண்டுமென்று* கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லுகின்ற ஆலோசனைகள், கருத்துக்களின் அடிப்படையில் என்னுடைய பதிலுரையை இறுதியாக அவைக்கு அளிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ரமணி நல்லதம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டம் பற்றிய மானியத்திலே என்னுடைய கருத்துக்களைக் கூறுவதில் மகிழ்வு அடைகிறேன். மகளிர் நலன், குழந்தைகள் நலன், ஊனமுற்றோர் நலன் சமூக பாதுகாப்பு முதியோர் நலன் வேறு சில அம்சங்கள் இதிலே அங்கம் வகிக்கின்றது. அவற்றிக்கு முன்னுரிமை வழங்கப் பட்டுள்ளது. சமுதாயத்திலே ஏற்றத்

*255—323 ஆம் பக்கங்களில் இணைப்பு 2 ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

தாழ்வுகள் இருக்கக்கூடாது ; உயர்ந்தவர் தாழ்ந்தவர்
என்ற நிலை இருக்கக்கூடாது ; வறியவர், பணக்காரர் என்ற
பாகுபாடு இங்கே இருக்கக்கூடாது ; எல்லோருக்கும் எல்லாம்
கிடைக்க வேண்டும்—அதாவது சோஷியல் வெல்பேர் ஸ்டேட்
என்கின்ற நிலை உருவாக வேண்டுமென்ற நிலையிலே இந்த
மானியக் கோரிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையை
உருவாக்கத்தான் பண்டித ஜவஹர்லால் நேரு, அன்னை இந்திரா,
தமிழகத்திலே சிதறிச் சின்னாபின்னமாகி இன்னுயிரை ஈந்த
எங்கள் அருமைத் தலைவன் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி,
பெருந் தலைவர் காமராஜர், புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர்.
எல்லோரும் முயன்றார்கள். அந்த வகையிலே இன்று அத்
தகைய மக்கள் நலன் நாடும் அரசாக, நலிந்த மெலிந்த
பிரிவினர்மீது தனிக் கவனம் செலுத்துகின்ற முனைப்பிலே
ஈடுபடுகின்ற இந்த அரசின் செயல்பாடுகளைப் பாராட்டி,
என்னுடைய கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன்.

இதிலே மகளிர் நலன் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்கள்.
மகளிருடைய வருவாயை அதிகரித்து, மறுவாழ்வு தர, புனர்
வாழ்வு தர, அவர்களுடைய வாழ்க்கை நிலை பிறரைச் சார்ந்
திராத நிலையை ஏற்படுத்த, அதாவது செல்ப்-டிபென்டிங்காக
தன்னைத்தானே சார்ந்திருக்கிற ஒரு நிலை, அதாவது தன்
காலிலேயே தான் நிற்கும் ஒரு நிலையை ஏற்படுத்தித் தர
வேண்டுமென்ற நிலையிலே சுயவேலை வாய்ப்புத் திட்டங்கள்
என்று பல்வேறு திட்டங்களை இங்கே இன்று அறிவித்திருக்
கிறார்கள். மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக காலணி
செய்வது, சாக் பீஸ் செய்வது, அச்சுப் பொருள்கள் செய்வது,
தையல் தொழில், ரெடிமேட் ஆடைகள் செய்வது, கயிறு
செய்தல் இப்படி பல்வேறு தொழில்களை இயக்கி, அந்தத்
தொழிலிலே ஈடுபடுகின்ற பெண்களுக்கு வருவாயைத் தந்து,
அவர்களுடைய வறுமையை ஒழித்து, அவர்களை முன்னுக்குக்
கொண்டுவர பல்வேறு உதவிகள், பயிற்சிகள், கல்விச் சலுகைகள்
என்று இங்கே அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அதற்கு அடுத்தாற்போல் குழந்தைகள் நலன் பேணுதல்.
குழந்தைகள் என்னும்போது ஆதரவற்ற குழந்தைகள், அனாதைக்
குழந்தைகள், பெற்றோரால் கைவிடப்பட்ட குழந்தைகள்
...... (மணி அடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் அமைதி
காக்க வேண்டும்.

திருமதி ரமணி நல்லதம்பி : இவர்கள் மாத்திரமல்ல,
தமிழகத்திலே இருக்கின்ற 15 வயதிற்குக் கீழே உள்ள
அத்தனை குழந்தைகளுக்கும் உணவு வசதியோடு கல்வி



வாய்ப்பை ஏற்படுத்தித் தந்து, அவர்களுக்கு மருத்துவ வசதி
தருகின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்கித் தந்திருக்கிறார்கள்
இந்தச் சத்துணவுத் திட்டத்தின் மூலமாக. இப்படி மகளிர்
நலன் பேணப்படுவதோடு, குழந்தைகள் நலனும் பேணப்பட
வேண்டும். குழந்தைகள் நலன் பேணப்பட்டால்தான் நல்ல
சிட்டிசன்சைப் பெற முடியும். திறமைமிக்க தகுதிமிக்க
உடலுரமிக்க கற்றபிரஜைகள் நமக்கு வருங்காலத்தில் தேவை
என்பதால் இப்படிப்பட்ட குழந்தைகள் நலன் பேணிக்
காக்கப்பட வேண்டும். ஏனென்றால் இன்றைய குழந்தைகள்
எதிர்காலப் பிரஜைகள் என்ற நிலையிலே நல்ல வாய்ப்பை
அவர்களுக்குத் தந்து, கல்வி கற்றவர்களாக, திறமை உடையவர்
களாக ஆக்குவதற்கு, தன் காலிலேயே நிற்கும் ஆற்றல்
உடையவர்களாக ஆக்குவதற்கு நல்ல திட்டங்களைத் தீட்டி
யுள்ளார்கள். இவைகளை எல்லாம் பாராட்டுகின்ற வேளை
யிலே, குழந்தைகள் நலனிலே நாட்டம் கொண்டு சத்துணவுத்
திட்டம் 3 அங்கங்களாக, சத்துணவு, குழந்தைகள் ஊட்டச்
சத்து, ஒருங்கிணைந்த ஊட்டச் சத்து என்று மூன்று பிரிவாகச்
செயல்படுகிறது. இதிலே ஒரு லட்சம் பெண்களுக்கு வேலை
வாய்ப்பு இருக்கிறது. ஆனால் இந்தக் குழந்தைகள் பணியிலே
ஈடுபட்டுள்ள பெண்களுடைய நிலையை நான் சுட்டிக் காட்ட
விரும்புகிறேன். இவர்களுக்கு மிகக் குறைந்த ஊதியம்.
இவர்கள் எம்.ஏ., பி.ஏ., மேல் நிலைக் கல்வி, எஸ். எஸ். எல்..சி.
படித்தவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் வேலை
வாய்ப்பு அலுவலகத்திலே பதிந்துகொண்டு, தங்களுக்கு வேலை
வாய்ப்பு கிடைக்கும், அதன்மூலமாக வருமானம் கிடைக்கும்,
தங்கள் வாழ்விலே ஒரு முன்னேற்றத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம்
என்று காத்திருந்தவர்கள். இவர்களுக்கு அந்த வாய்ப்பு
கிடைக்காத கட்டத்திலே, இந்த வேலை கிடைத்து, இவர்கள்
பத்து ஆண்டுகளாக பணிபுரிந்து வருகிறார்கள்.

முற்பகல் 11-40

குழந்தைகளின் நலனில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிற
இந்த பெண்களின் நிலை எப்படியிருக்கிறது என்று பார்க்க
வேண்டும். பெண்களின் நலனில் நாட்டம் கொண்டிருக்
கிறோம், அவர்களையும் பேணிப் பாதுகாக்க வேண்டுமென்று
திட்டம் தீட்டியிருக்கிறோம். அவர்களுடைய நிலைமை எப்படி
இருக்கிறது என்றால், மிகக் குறைந்த வருவாய்தான் அவர்
களுக்குக் கிடைக்கிறது. இவர்களுக்குப் பின்னாலே தங்க
ளுடைய பெயர்களைப் பதிந்தவர்கள் எல்லாம் இதிலே வந்து
விட்ட காரணத்தால் அவர்கள் நல்ல அரசு வேலையில் ஈடுபட்டு
நல்ல வருவாயைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். 1975-ஆம்
வருடம் இளைஞர் படை என்ற ஒன்றைப் போட்டு 175 ரூபாய்
சம்பளம் கொடுத்து......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள்
தங்களுக்குள் பேசினாலும் வெளியில் சத்தம் வராத
அளவுக்காவது பேச வேண்டும்.

திருமதி ரமணி நல்லதம்பி : இவர்களுக்கு கடைசியில்
சர்வீஸ் கமிஷன் குரூப் 4 மீதாவு எழுதச் செய்து அவர்கள்
எல்லாம் பணியில் அமர்த்தப்பட்டார்கள். அப்படிப்பட்ட
ஒரு நிலையை இவர்களுக்கும் ஏற்படுத்தித் தர வேண்டும்.
இல்லையென்றால் இவர்களுடைய பணியை நிரந்தரப் படுத்தி
அவர்களுக்கும் அரசு ஊழியர்களுக்குத் தரும் சம்பளத்தைத்
தர வேண்டும். குறைந்தபட்சம் எஸ். எஸ். எல். சி. படித்த
ஊழியர்களுக்கான ஊதியத்தையாவது தர முன்வர வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களுடைய வேதனையை
சொல்ல வேண்டிய காலக்கட்டத்தில் நான் இருக்கிறேன்.
அவர்களுக்கு வழங்கப்படுகிற உணவுப் பொருட்கள் சரியாக இருக்
கிறதா என்பதை சரிபார்த்து வாங்கமுடியாத நிலை அங்கே
இருக்கிறது. சிவில் சப்ளை சொசைட்டியில் இருநது வருகிற
போதே அளவு குறைந்த உணவுப் பண்டங்கள்தான் அவர்கள்
கையில் வந்து சேருகிறது. வரலாற்றிலே கூட நாம்
படித்திருக்கிறோம். டெமாஸ்கஸ் தலைக்கு மேலே கத்தி
தொங்கிக் கொண்டிருப்பதாக நாம் படித்திருக்கிறோம்.
அப்படி எப்போது எந்த அதிகாரி வந்து இவர்களை ஆய்வு
செய்து வேலையில் இருந்து நீக்குவார்களோ என்ற
அச்சத்திலேயே நடுங்கி நடுங்கி வாழ்கிற ஒரு நிலை
இருக்கிறது. உதாரணமாக, வில்லிவாக்கம் தொகுதியில் லட்சுமி
புரத்தில் உள்ள 1 முதல் 8 வகுப்பு வரை கொண்ட யூனியன்
பள்ளி இருக்கிறது. அந்தப் பள்ளியில் ஒரு அமைப்பாளர்
பணியாற்றிக் கொண்டிருக்கிறார். 1983 முதல் 1988 வரை
எந்தவிதமான புகாரும் அவர் மீது இல்லை. 1989-ல் ஆடிட்டர்
வந்தார்கள். மூன்றாண்டுக்காலம் யாரும் வரவில்லை. என்ன
செய்தார்களோ தெரியவில்லை. மூன்று வருடம் கழித்து,
வந்து, அங்கேயிருந்த பதிவேடுகளையெல்லாம் கைப்பற்றிக்
கொண்டு போய், இப்போது ரூபாய் 96,746.40 ரிக்கவரி
போட்டு அந்த அம்மாவை வீட்டுக்கு அனுப்பிவிட்டார்கள்.
175 ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டிருந்த அந்த அம்மை
யாரை, உயர் வருவாய் ஈ ங்கிக் கொண்டிருக்கிற உயர் அதி
காரிகள் வந்து இப்படி செய்துவிட்டார்கள். காலா காலத்தில்,
வருடா வருடம் வந்து ஆடிட் பண்ணி இதைச் செய்திருக்கலாம்,
அதை ஏற்றுக் கொள்ளமுடியும், ஒத்துக் கொள்ள முடியும்.
மூன்று வருடம் அவர் தூங்கிக் கொண்டிருந்துவிட்டு, மூன்று
ஆண்டுகளுக்குப் பிறகு வந்து இப்படியொரு ரிக்கவரி என்று
சொன்னால் எங்கேயோ தவறு இருக்கிறது. இது, அதிகாரிகள்
தங்களது இஷ்டப்படி பழிவாங்கும் எண்ணத்தோடு செய்திருப்ப
தாகத் தெரிகிறது. இப்படி ஏழைத் தாய்மார்கள்தான் ப[illegible]
வாங்கப்படுகிறார்கள். ஆகவே இதில் தனிக் கவனம் செலுத்[illegible]
இப்படிப்பட்ட தவறுகள் ஏன் நடந்தன என்று பார்த்து அந்தப்
பதிவேடுகளையெல்லாம் வாங்கிப் பார்த்து, அந்த அம்மை[illegible]
யாரையும் கேட்டு, அப்படிப்பட்ட பெண்களின் துயரம்
நீக்கிட வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.
இப்படிப்பட்ட நிலை அங்கே நிறைய பேருக்கு வந்திருக்கிறதாம்





ஊனமுற்றோருக்கு கல்வி, வேலைவாய்ப்பு, பயிற்சிகள்
[illegible]காடுப்பது, உபகாரணங்கள் வழங்குவது, தங்கும் விடுதிகள்
[illegible]சதி செய்து தருவது, பிறகு டெக்னிகல் எஜுகேஷன்,
ஆசிரியர் பயிற்சி, சுகாதாரப் பணிகளுக்கான பயிற்சி ஆகிய
இப்படிப்பட்ட பயிற்சிகள் அளித்து, வேலைவாய்ப்பிலும் முன்
னுரிமை வழங்குகிறார்கள். பஸ் பாஸ் ஊனமுற்றவர்களுக்குக்
கொடுப்பதில், தமிழக அரசு நல்ல காரியத்தைச் செய்திருக்
கிறது. இந்த சமூக நலத்துறை வழங்குகிற ஒரு அட்டையை
காண்பித்து அந்த பாஸை புதுப்பித்துக் கொள்ளலாம் என்று
இருக்கிறது. இதிலேதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்
களின் தாயுள்ளம் தெரிகிறது. ஊனமுற்றவர்கள் மருத்துவ
அதிகாரிகளை நாடி நாடிச் சென்று அலைந்து அவலப்பட
வேண்டாம் என்ற எண்ணத்தில் அவர்களுடைய சிரமங்களைக்
குறைக்கின்ற இந்த முயற்சியை நான் பாராட்டுகிறேன். அது
மாதிரி, அவர்களுக்கு சில லிமிட்டேஷன்கள் வைத்திருக்கிறார்
கள். அதாவது இத்தனை கருவிகள் தான் கொடுக்கலாம்,
அதாவது மூன்று சக்கர வண்டி, ஊன்றுகோல்கள், கண்ணாடி,
காது கேட்கும் கருவிகள் என்று இப்படிப்பட்டவைகளை இத்தனை
தான் கொடுக்கலாம் என்று இப்போது விதி இருக்கிறது. ஏற்
[illegible]கனவே ஊனமுற்றவர்கள் பெற்றவர்களாலும் குடும்பத்தின
ராலும் சமுதாயத்தாலும் புறக்கணிக்கப்படுகிறார்கள், சமுதா
யத்தால் ஏளனம் செய்யப்படுகிறார்கள். அவர்களுக்கு எதற்கு
லிமிடேஷன் ? காது கேட்கும் கருவி வேண்டுமென்று சொன்
னால் கொடுங்கள். கால் இல்லையென்றால் செயற்கைக் கால்கள்
கொடுங்கள். மூன்று சக்கர வண்டி வேண்டுமானால் வழங்க
வேண்டுமென்று எல்லாம் விதியைத் தளர்த்தி, அவர்களுக்கு
வாழ்வு தர முன்வரவேண்டும். அதுமட்டுமல்ல, ஊனமுற்றோ
ருக்கு பென்ஷன் தருகிறார்கள். ஆனால் அதற்கு வயது
வரம்பு 35 என்று வைத்திருக்கிறார்கள். எனக்குத் தெரிந்து
இரண்டு கால்களுமே இல்லாத பெண்கள் இரண்டுபேர் செட்டி
குளத்தில் இருக்கிறார்கள். சுவிசேஷபுரத்தில் ஒரு பெண்
இருக்கிறார். நான் ஒரு சட்டப் பேரவை உறுப்பினர் ஆக
இருந்தும் அவர்களுக்காக முயற்சி செய்தும் செயற்கைக்கால்
கள் வாங்க முடியவில்லை, பென்ஷன் வாங்க முடியவில்லை. இதை
யெல்லாம் நீங்கள் கனிவோடு பார்க்கவேண்டும். ஏனென்று
கேட்டால் வீட்டிலே உள்ளவர்களும் அவர்களைப் பார்க்க
மாட்டார்கள், கூடப் பிறந்தவர்களும் பார்க்க மாட்டார்கள்.
அவர்களை சுமையாகத்தான் கருதுகிறார்கள். ஆகவே 35
[illegible]யதுக்குள் பசி பட்டினியால் அடிபட்டு, கல்லடி பட்டு,
[illegible]சால்லடி பட்டு, ஏழ்மையில் வாடி அவர்கள் செத்துப் போகிற
சூழ்நிலையே வந்துவிடும். ஆகவே ஊனம் என்பது அவர்
களுடைய தவறல்ல. பெற்றோர்களின் குறைபாடு, அல்லது
இறைவனின் குறைபாடு. ஆக இதைக் கருத்தில் கொண்டு
[illegible] வயது வரம்பைத் தளர்த்தி, ஊனமுற்றவர்கள் பெண்
[illegible]இருந்தாலும் சரி, ஆணாக இருந்தாலும் சரி, அவர்களுக்கு
[illegible] உதவித் தொகையை வள்ளன்மையோடு வழங்க

[திருமதி ரமணி நல்லதம்பி] [1991 செப்டம்பர் 20

வேண்டுமென்று தமிழக அரசையும், மாண்புமிகு முதலமைச்சர்
புவர்களையும், மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் சபா
நாயகர் அவர்கள் மூலமாக கேட்டுக் கொள்கிறேன். பிறகு
ஊனமுற்றோர் என்று சொன்னவுடன் இன்னொரு குறிப்பை
யும் இந்த அவைக்கு எடுத்து வைக்க விரும்புகிறேன். போலீஸ்
சர்வீசில் ஒரு சப் இன்ஸ்பெக்டர், பி.எஸ்.சி., பி.இ.டி., எல்லாம்
படித்து போலீஸ் வேலையில் எங்கள் மாவட்டத்திலிருந்து
தேர்ந்தெடுக்கப்பட்டார். பயிற்சி முடிந்தவுடன் அவரி
டமிருந்து இன்டெம்னிட்டி பாண்ட் எழுதி வாங்கினார்கள்.
ஐந்து வருடத்திற்குள் வேலையை விட்டுப் போய்விட்டால்
அவருக்கு அரசு செலவழித்த தொகையை எல்லாம் திரும்பச்
செலுத்த வேண்டுமென்று சொல்லி அப்படி பாண்ட் எழுதி
வாங்குவார்கள். ஆனால் அவர் இரண்டாண்டுகள் பணிக்
காலம் ஆகியிருக்கும்போதே, பணியில் இருக்கும்போது ஒரு
ஆக்சிடெண்ட்டில் சிக்கி, தன்னுடைய நினைவை இழந்து,
இன்றைக்கு அவர் மதுரை இராஜாஜி ஆஸ்பத்திரியில் மூன்
றாண்டுக் காலமாக படுத்த படுக்கையில் இருக்கிறார்.

முற்பகல் 11-45 மணி

அவருக்கு அரசு எந்தவிதமான உதவியையும் செய்யவில்லை.
நான் நினைக்கிறேன், இப்படி ஊனமுற்றவர் 'Totally
invalid' ஆகிவிடுகிறார். அதாவது 75 சதவீதத்
திற்கு மேல், 99 சதவீதம் ஊனம் என்றே சொல்ல
லாம்; இப்படிப்பட்ட நிலையில் இருக்கின்றவர்களைக் கருத்
தில் கொண்டு, அரசு அவருக்கு ஏதாவது மாதா மாதம் வழங்கு
வதற்கு முன்வருவதோடு, சிறந்த மருத்துவ உதவியையும்
தரவும் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
ஒரு ஐந்து வருடத்திற்கு முன்பு போய் இருந்தால் 'ரெகவரி'
போட்டு இருப்போம். இப்படி ஒரு விபத்து வந்து
இருக்கிறபோது அவருக்குத் தகுந்த உதவியை அரசு செய்து
தர முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அப்புறம் நடைபாதையில் இருக்கிற குழந்தைகள், ஆதர
வற்ற குழந்தைகள்—இவர்களுக்கு எல்லாம் இல்லங்களை
தாயுள்ளத்தோடு செயல்படுத்துகின்ற முறையைப் பாராட்டு
கின்றேன்.

அப்புறம் பெண் குழந்தையாகப் பிறந்துவிட்டால் உடனே
அதை வேண்டாம் என்கிறார்களாம்; இப்படிச் சொல்
கிறார்கள் என்று பத்திரிகைகளில் படித்து இருக்கிறேன்.
இந்த மானியப் புத்தகத்திலே, பெண் குழந்தைகள் வேண்டாம்
என்று சொல்கின்ற பெற்றோர்களின் குழந்தைகளை
எடுத்து வளர்க்கின்ற ஒரு இல்லத்தை ஏற்படுத்தி, அதற்கு
ஆயா மற்றும் பணியாளர்களை எல்லாம் போட்டு சிறப்பான
முறையிலே நடத்தி, அதிலே ஒரு 5 பெண் குழந்தைகள் இருப்



1991 செப்டம்பர் 20] [திருமதி ரமணி நல்லதம்பி]

பதாகக் குறிப்பிடப்பட்டு இருப்பதை நான் அறிகின்றேன்.
இப்படிப்பட்ட நிலையை நான் வரவேற்கின்ற அதே வேளை
யிலே, இந்த நிலை நீடித்து, ஸ்கேனிங் மூலம் இது ஆணா,
பெண்ணா என்பதை அது வயிற்றில் இருக்கும்போதே பார்த்து
விடுகிறார்களாம். இந்த நிலை நீடித்தால், இந்த வர
தட்சிணைக் கொடுமை இப்போது பெண்களை வாட்டுவதைப்
போல எதிர்காலத்திலே ஒரு 20 ஆண்டுகளுக்கு பிறகு ஆண்களை
வாட்ட வேண்டிய ஒரு அவல நிலை வந்துவிடும்.
Shcrtag: cf ladies வந்துவிடும். ஆகவே அதை
யெல்லாம் தடுத்து நிறுத்தி, இப்படிப்பட்ட குழந்தைகளுக்கு
மறுவாழ்வு தருவதற்கு ஊக்கமும் ஆக்கமும் தருவதை நான்
பாராட்டி இன்னும் கூட அதிக கவனத்தை அதற்காக அரசு
செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அப்புறம் இந்த பெண்களுக்கு ஆதரவற்ற பெண்கள்
விதவைகளின் மகள்கள், கைவிடப்பட்ட பெண்கள், விதவை
மணம், கலப்பு மறுமணம், எட்டாம் வகுப்பு படித்த ஏழைப்
பெண்களின் திருமணம், ஊனமுற்றவர்களை மணந்து கொள்
கிறவர்களுக்கெல்லாம் திருமண உதவிக் கடன்கள், தொழில்
செய்வதற்கு கடன்கள்—இவை பற்றியெல்லாம் குறிப்பிடப்
பட்டுள்ளது. ஆனால் இந்தக் கடன்களை எல்லாம் பெறு
வதற்கு முன்னால், கல்யாணம் முடிந்து பிள்ளைகளையும்
பெற்றுவிடுகிறார்கள். பிறகு அவர்கள் அந்த கல்யாண கார்டை
கொண்டுபோய் கொடுத்து, அந்த கடனை அவர்கள் பெற்று
ஏதாவது தொழிலை செய்வதற்கு வாய்ப்பு இல்லாமல்
கையில் வைத்துக் கொண்டு அந்தக் கல்யாணக் கார்டையும்
மனுவையும் எடுத்துக்கொண்டு எங்களை வந்து சந்திக்கும்
அவல நிலை இருக்கின்றது. ஆகவே அப்படிப்பட்ட கடன்
உதவிகள், ஊக்கத் தொகைகள் எல்லாம் உடனடியாகக் கிடைக்கச்
செய்வதற்கு அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுகொள்
கிறேன்.

எல்லாவற்றுக்கும் மேலாக, இன்று தமிழக முதல்வர்
அவர்களை ஒன்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன்.
எல்லோரும் சொன்னார்கள். முதல்வர், 'புரட்சித் தலைவர்'
என்று சொன்னால் புரட்சிகரமான பல திட்டங்களை செயல்
படுத்தி வருகின்ற காரணத்தினாலே அவர்களை நாங்கள்
புரட்சித் தலைவர் என்று சொல்கிறோம் என்று அண்ணா
திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் சொன்
னால், அது அவர்கள் அந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள்
என்று பொருள்படும். ஆனால் எங்களைப் போன்றவர்கள்
சொல்கின்ற வேளையிலே, நாங்கள் மையமாக சில காரணங்
களை வைத்துக்கொண்டு சொல்கின்றோம். எனவே நாங்கள்
பாராட்டுகின்ற பாராட்டு தான், பாராட்டு ஆகும். இன்
றைக்கு சட்டமன்றத்தில் கூட புரட்சிகரமாக, [illegible]

ஆக, ஒரு முதல்வர் என்கிற நிலையில் 'பெர்ஃபெக்ட்' ஆக
முழுமையாக எந்தப் பணியையும் நிறைவுபடச் செயல்படுத்தி
வருகின்றார்கள். அன்றைக்கு 'கட்-மோஷன்'-களுக்கு மரி
யாதை கொடுத்து. 'கட்-மோஷன்'-களுக் கெல்லாம் பதில்
கிடைக்கும் என்று சட்டமன்ற உறுப்பினர்களே அறிந்து
கொள்கின்ற நிலையிலே, பத்திரிக்கைகள் தெரிந்து கொள்
கின்ற நிலையிலே, பொதுமக்கள் புரிந்து கொள்கின்ற நிலை
யிலே, அதை அவர்கள் செயல்படுத்திக் காட்டி எங்களையெல்
லாம் பெரு மகிழ்ச்சிக்கு ஆளாக்கினார்கள். இன்றைக்கு
அமைச்சர் அவர்கள் கூறுகின்ற வேளையிலே சிறு சிறு தவறு
களைக் கூட சுட்டிக்காட்டி அதை நிறைவுப்படச் செய்வதிலே
அவர்களுடைய நாட்டத்தையும் ஈடுபாட்டையும் காட்டி
னார்கள். ஆக ' A Woman of perfec ion '
என்று நான் பாராட்டுகின்ற வகையிலே அவர்கள் செயல்
பட்டு வருகின்ற இந்த நல்ல வேளையிலே (மேசையைத்
தட்டும் ஒலி) இந்த மானியமானது சமூகத்தினுடைய மேம்
பாட்டிலே, சமூக நலனிலே நாட்டம் உள்ளதாக இருக்கின்
றது. அதுமட்டுமல்லாமல், பெண்களுடைய மேம்பாட்டைக்
குறிக்கோளாகக் கொண்டு இருக்கிற காரணத்தினாலே, திக்
கற்றவர்கள், அநாதைகள், கல்யாணம் ஆகாத தாய்மார்கள்—
இவர்களுக்கெல்லாம் பல உதவிகளை இங்கே அறிவித்து இருக்
கின்ற இந்த நல்ல வேளையிலே, பரத்தமை தடுப்பு என்று
'அத்தியாயம் 6-ல் பாரா 8-ல்' குறிப்பிடப்பட்டுள்ள இந்த
மானியப் புத்தகத்திலே அதைப்பற்றி நான் ஒருசில கருத்துக்
களைக் கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்தப் பெண் இனம்
தமிழகத்திலே, இந்தியாவிலேயே இருக்கின்ற வரையில்,
இவர்கள் நீதி தேவதை என்று இவர்களைப் பாராட்டுகின்ற
வகையிலே ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வர வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த விபச்சாரத்தில்
ஆணும் பெண்ணும் சேர்ந்து செய்கிற தவறில் பெண் மட்டும்
தண்டனைக்கு உரியவளாக ஆகின்றாள்: பெண் இழிவு
படுத்தப்படுகின்றாள்; பெண் அலங்கோலப்படுத்தப்படுகின்
றாள்; கொடுமைப்படுத்தப்படுகின்றாள். அதே வேளையில்
தவறைச் செய்கின்ற—இன்னும் கூடச் சொல்லப் போனால்
அவன்தான் அதிகமாகத் தவறு செய்கின்றான்—அவனுக்கு
தண்டனை அளிக்கப் படாமல், குற்றவாளியாகக் கருதப்
படாமல், சாட்சிப் பொருளாக அங்கே —.
றான். இவள் விபச்சாரம் செய்வதற்கு அவன்
இது என்ன கொடுமை என்று பாருங்
இந்த அண் ஆதிக்கம் நிறைந்த சமுதாயத்திலே ஆணு
சரிநிகர் சமானம் என்று ஏற்றுக்கொள்கின்ற வகையிலே
சீர்திருத்தம் ஏற்படுத்தி, விபச்சாரத்திலே
ஆணும் பெண்ணும், இருவரும் தண்டிக்கப்படுகின்
ஒரு சட்டத் திருத்தம் தமிழகத்திலே, ஏன்



ஒரு முன்னோடி சட்டத் திருத்தமாகக் கொண்டு வந்து,
இந்த நீதி தேவதை என்கின்ற பெயரை தமிழகப் பெண்மணி
களால் பெற்றுக்கொள்கின்ற வகையிலே செயல்படுத்தித் தர
தமிழக முதல்வர் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன். இப்படி ஒரு சட்டம் வந்து ஆணும் தண்டிக்கப்பட்
டால் தான் இந்த விபசாரம் ஒழியும். சிறு பெண்களைக் கடத்
திச் செல்வது, பெண்களைக் கட்டாயப்படுத்தி விபச்சாரத்
தில் ஈடுபடச் செய்து அப்புறம் கைவிடுவது, தப்புத்
தண்டா வந்தால் பெண் மீது குற்றம் இல்லாவிட்டாலும்,
பெற்றோர்கள் புறக்கணித்து விடுவது, அபலை இல்லங்
களுக்குச் செல்வது, காப்பு இல்லங்களுக்குச் செல்வது,
சேவை இல்லங்களுக்குச் செல்வது இவையெல்லாம் குறை
யும். ஆகவே', இப்படிப்பட்ட ஒரு சட்ட திருத்தம் தேவை
யென்று கூறி.......

முற்பகல் 11-50

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : திரு. ஜி. விசுவ
நாதன் :

<u>திரு. ஜி. விசுவநாதன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் கூறுகிற கருத்துக்கள் சரியானவை தான். ஆனால்
அவர் சொல்கிற சட்ட திருத்தங்கள் எல்லாம் பாராளுமன்
றத்தில் செய்யப்பட வேண்டிய திருத்தங்கள். அவருடைய
அரசாங்கம், தான் அங்கே நடக்கிறது. அதைச் சொல்லி
பாராளுமன்றத்திலே அந்த சட்ட திருத்தத்தைக் கொண்டு
வரலாம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : அவர் அதைத்தான்
சொல்கிறார். பாராளுமன்றத்திற்கு நாம் இங்கேயிருந்து
சிபார்சு செய்ய வேண்டுமென்று பேசிக் கொண்டிருக்
கிறார்.

<u>திருமதி ரமணி நல்லதம்பி</u> : அந்த உணர்வு நமக்கு
வந்ததை நான் பாராட்டுகிறேன். ஏனென்றால் ஆண்கள்
அதை ஒப்புக் கொண்டு விட்டால், உணர்வு பூர்வமாக
சமுதாயத்தில் இருக்கிற இரு சாராரும் ஏற்றுக்கொண்டால்,
இதுபோன்ற குற்றங்கள் எல்லாம் குறையும். பெண் ஒடுக்
கப்படுவது, பெண் ஒரு சப்-செக்ட் ஆக ஒரு இனமாகக்
கருதப்படாமல், ஒரு சப்-செக்ட் ஆகக் கருதப்படுகிற
நிலையெல்லாம் மாறினால்தான் முன்னேற முடியும்.

அடுத்தபடியாக, முதியோர் பென்ஷன். முதியோர்
பென்ஷனில், பெண்களுக்கு ஆண் குழந்தை பெற்றால்
இல்லையென்று சொல்கிறார்கள். It is a pitiable thing

அதாவது நிறைய டெசர்ட்டட் பேரண்ட்ஸ் இருக்கிறார்கள். ஆம்பளை பிள்ளையெல்லாம் தாய் தகப்பனை காப்பாற்றுவது இல்லை. அடித்து உதைக்கத் தான் செய்கிறார்கள். பெண் பிள்ளைகள் அடிக்க மாட்டார்கள். சோறு போடாமல் விட்டு விடுவார்கள். இந்த ஆண் பிள்ளைகளிடம் சோறு கேட்டால் அடி உதை தான் அந்தத் தாய் தகப்பனுக்கு கிடைக்கிறது. ஆகவே, அதைக் கருத்திற் கொண்டு ஆண் குழந்தையைப் பெற்றாலும், பெண் குழந்தையைப் பெற்றாலும் சரி, டெஸ்பரேட்டாகத் Desert செய்து விட்டார்கள் என்றால்........... (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து எல்லோரும் உட்காருங்கள். உறுப்பினர் அவர்கள் தன்னுடைய கருத்தைச் சொல்லி விட்டார்கள். ஆண்கள் பேசுகிற போது அதை மறுப்பதாக இருந்தால் அவர்கள் அதை மறுதது்ப் பேசலாம். (குறுக்கீடு) அதற்கு அவர்கள் பேசுகிற போது அப்படி துணிச்சல் இருக்கிற ஆண்கள் மறுப்பு தெரிவித்து பேச வேண்டும். (சிரிப்பு)

திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எடுத்துக் காட்டாக கூறமுடியும். என் தொகுதியில் செம்பாடு என்ற ஒரு ஊர் தெற்கு வள்ளியூர் பஞ்சாயத்திலே இருக்கிறது. அங்கே 85 வயதுள்ள ஒரு பெண் இருக்கிறாள். அவளுக்கு 60 வயதில் ஒரு மகன் இருக்கிறான். அவனுக்கும் மூளைக் கோளாறு. அவளுடைய புருஷனுக்கும் மூளைக் கோளாறு. 85 வயதில் அவள் எப்படி பிழைக்க முடியும்? தவிக்கிறாள். எனக்கு மரணம் வரவில்லையே என்று புலம்புகிறாள். இவளுக்கு உதவித் தொகை வேண்டுமென்று கேட்டால் ஆண் மகன் இருக்கிறான் என்று சொல்கிறார்கள். நான் சொல்கிறேன் அந்த ஆண் மகனுக்கும் தர வேண்டும். காரணம் அவனும் வயதானவன். மூளை சரியில்லை. வேலை செய்ய திராணி இல்லாமல் இருக்கிறான். அவனுக்கும் உதவித் தொகை வழங்கப்பட வேண்டும். அந்த கிறுக்கு ஆண் மகனைப் பெற்ற தாய்க்கும் வழங்க வேண்டும். அதுதான் மனிதாபிமானம் என்று நான் எண்ணுகிறேன். இதை எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள் என்று கருதுகிறேன். அப்படி நிறைய பெண்கள், பிள்ளைகள் தங்களை கவனிப்பதில்லை என்றெல்லாம் வந்து முறை செய்கிறார்கள். நான் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அடிக்கடி தபால் எழுதிக்கொண்டே இருக்கிறேன்.

கடைசியாக ஒன்றைக் கூறி அமரலாம் என்று எண்ணுகிறேன். புரட்சித் தலைவி அவர்கள் பல முன்னோடித் திட்டங்களை செயல்படுத்துகிற காரணத்தால் இதைச் சொல்கிறேன். எல்லோருக்கும் பென்ஷன் இருக்கிறது. எந்தத் துறையில் வேலை செய்தாலும், வேலை செய்கிறவர்களுக்கு 55 வயதானவுடன்



பென்ஷன் இருக்கிறது. விவசாயத் தொழிலாளிகளுக்கு ஒரு வகையான பென்ஷன் இருக்கிறது. ஆனால் வீட்டில் இருக்கிறார்களே — இல்லத்தரசிகள் — நாளெல்லாம் உழைத்து, காலமெல்லாம் உழைத்து, மண்டையை கீழே போடுகிற வரை உழைத்து, — முதலில் தாய் வீட்டிலே, அப்புறம் புருஷன் வீட்டிலே, அப்புறம் பிள்ளை குட்டியோடு, பேரப் பிள்ளைகளோடு என்று உழைத்து உழைத்து ஓடாகிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு சேவை இல்லங்கள் அதாவது முதியோர் இல்லங்கள் கட்டுவதாக சில இடங்களில் மானியப் புத்தகத்தில் படித்தேன். அதெல்லாம் கூட போதாது. என்னை என் பிள்ளை விலக்கி விட்டால் நான் எங்கே போவேன்? இப்படிப்பட்ட நிலையையெல்லாம் உணர்ந்து, இப்படிப்பட்ட நிலையில் வாழ்கிற அந்த இல்லத்தரசிகளுக்கு, தாய்மார்கள் அல்லது மனைவிமார்கள், எப்படி வேண்டுமானாலும் நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள். அவர்கள் இல்லத்திலே பணிபுரிந்து — இந்த நாட்டிலே அவர்களுடைய சேவை இல்லையென்றால் எந்தக் குடும்பமும் சரியாக இயங்க முடியாது. இதனை கருத்திற் கொண்டு, அவர்களும் 60 வயதுக்கு மேல் மனுச் செய்தால் அமெரிக்கா போன்ற சில அயல் நாடுகளில் இருப்பதைப் போல, அவர்களுக்கும் உதவித் தொகை வழங்குவதற்கு, பென்ஷன் திட்டத்தை உருவாக்குவதற்கு—Housewives Pension Scheme ஒன்றை உருவாக்கித் தர மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன் வர வேண்டுமென்று கேட்டு அளித்த வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன், நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி மு. சீனியம்மாள்.

முற்பகல் 11-55

டாக்டர் (திருமதி) மு. சீனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'இனி துன்பமில்லை, சோர்வும் இல்லை, தோற்பு இல்லை, அன்பு நெறியில் அறங்கள் வளர்ந்திட, நல்லது தீயது நாமறியோம் அன்னையே, நல்லது காட்டுக, தீயது ஓட்டுக என சூளுரைத்து, தமிழகத்தில் என்றும் நீர்தான் முதல்வர் என்று எத்தனையோ எதிர்பார்ப்புகளைக் கொண்ட $5\frac{1}{2}$ கோடி தமிழ் மக்களின் சுமையை, சுமை தாங்கியாய், தாங்கிக் கொண்டு, இதுவரை வேதனைகளையும், சோதனைகளையுமே அன்றாட வாழ்க்கையென அனுபவித்த மக்களுக்கு என்றென்றும், இளைப்பாறுதல் தருவேன் என சூளுரைக்கின்ற வண்ணம், நல்லாட்சி செய்து கொண்டிருக்கின்ற எங்கள் பாரதியின், புரட்சித் தலைவி பாரதியே, எங்கள் தமிழகத்து முதல்வர் அவர்களே, உங்களுடைய இந்த சமூகத்திலே ஏழை எளிய மக்கள், குறிப்பாக பெண்கள், ஆசிரியர்கள் சமுதாயம், குழந்தைகள், இளைஞர்கள், முதியோர், கைவிடப்பட்டோர், ஊனமுற்றோர் அனைவரும் நலம்.

[டாக்டர் (திருமதி) மு. சீனியம்மாள்] [1991 செப்டம்பர் 30

உங்களை எதிர்ப்பவர்கள் விளக்கெண்ணையை கண்ணில் விட்
டுக் கொண்டு, தேடினாலும் கூட ஒரு குறை கண்டுபிடிக்
இயலாத வகையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள, சமூக நலன் என்
மானியக் கோரிக்கையிலே எனக்குப் பேச வாய்ப்பு கொடுத்
பேச வைத்ததற்காக நன்றி கூறிக் கொள்கிறேன்.

இந்த சமூக நலத்தின் முக்கிய அங்கமே மனித நேயம் தான்.
பதவி வந்தபோதும், தாங்கள் பணிவுடன், பண்புடன், பரிவுடன்,
தமிழகத்தின் மக்களை ஒருங்கிணைக்கும் நோக்கத்திலே மன
தால், முதிர்வால், வாடுகின்ற வாட்டத்தைத் துடைக்கின்ற விதத்
திலும், அறிஞர் அண்ணா அவர்களின் மனம் மகிழும்படி
தந்தை பெரியார் அவர்கள் ஆசிர்வதிக்கும்படி, விழா எடுத்து,
ரூ. 5 லட்சத்தை வயது முதிர்ந்த தாயார் திருமதி ராணி அம்மை
யார் அவர்களுக்கு அளித்தது. ஐயோ நாம் இதனைச் செய்ய
வில்லையே என்று தலை தலையாய் அடித்துக் கொள்ளும் எதிர்
கும்பலுக்கு ஒரு சவுக்கடியாக அமைந்திருக்கிறது.

தந்தை பெரியார் அவர்களுக்கு பிறந்த நாள் விழா எடுத்து,
திராவிடர் கழகத் தலைவரின் கண்கள் பணிக்க, உணர்வு பூர்வ
மாய் பாராட்ட வார்த்தையின்றி, இப்படி ஒரு முதல்வரா என்று
வியக்கும் வண்ணம் மட்டுமல்ல, இயக்கத்தின் இளைஞர் பனை
யின் ஏகோபித்த ஆதரவுடன், பெண்கள் கல்லூரி வளர்ச்சி நிதி
காக பெண்களுக்கு என தொழில் கல்வி ஆரம்பித்து அவர்களின்
சேவை பெருக, துன்பத்தைப் பகிர்ந்து கொள்ளும் தோழர்
களாய் நான் இருப்பேன் என்பது போல, ரூ. 5 லட்சங்களை
கொடுத்தது, பரிணாமத்தின் வளர்ச்சிக்கு நீங்கள் செய்ததை,
பதைபதைப்பாக, போச்சுடா, இனி நாம் அம்பேல்தான் என்று
சமயம் பார்த்துக் கொண்டிருக்கிற சந்தர்ப்பவாதிகளுக்கு நீங்
கள் கொடுத்த சவுக்கடி.

எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும். கல்விக்கு அழகு கசடற
மொழிதல் என்ற வரிகளுக்கு அர்த்தம் சூட்டும் வகையில் அறிவிற்
சிறந்த ஆசிரியர் பெருமக்களை, அறிஞர்களை, இலக்கியவாதி
களை, அன்புக் குழந்தைகளை, பொருத்தமான பெண்களின்
மேம்பாடே தனது குறிக்கோள் என மறைந்த திரு.வி.க. வின்
பிறந்த நாளில், 300 ஆசிரியர்களுக்கு நல்லாசிரியர் விருதுகளும்,
சுமார் 200 மாணவ மாணவியர்களுக்கு பரிசு பெற்றவர்களுக்கு
விருதும் அளித்து, சிறப்பித்த விதம் எதிர்க்கின்றவர்களைக் கூட
உருக்கிவிடும் ஒரு நிலையாகும்.

குழந்தைகளின் நலத்திலே அக்கறைகொண்டு, குழந்தைக
கல்வியைக் கட்டாயமாக ஏற்கும்படிச் செய்ய, அரசுப் பள்ளி
களின் மூலம், காமன்வெல்த் நாடுகளின் அறிவுப் போட்டியில்
கலந்து கொண்டு, பரிசு பெற்று வந்த செல்வி சுதா என்ற
குழந்தைக்கு, அரசு மானியமாக ஆயிரம் ரூபாய் கொடுத்தாலும்,
தனது சொந்த நிதியிலிருந்து ரூபாய் பத்தாயிரம் வழங்கினார்கள்
கனவில்கூட நடக்குமா இது? நடந்தது. அரசுப் பள்ளிகளில் படித்த
பரிசுபெற்ற ஒரு குழந்தை தமிழகத்து முதல்வர் அவர்களால்



1991 செப்டம்பர் 30] [டாக்டர் (திருமதி) மு. சீனியம்மாள்]

கரைவிக்கப்படுகிறது என்று சொன்னால், இது இந்தத்
தன்னிகரில்லாத் தலைவியின் ஆட்சியிலே மட்டும்தான் நடக்கக்
கூடியது. ஏழை மக்களை ஏற்றம் பெற செய்ய இருக்கின்ற
அரசு என்பதை பூரிப்புடன் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்
பட்டு இருக்கிறேன்.

நம் குழந்தைகள் படிக்க வேண்டும், நம் நாட்டின்
முதல்வர் அவர்கள் கையால் பரிசு வாங்க வேண்டும் என்ற
எண்ணத்தினை மட்டுமல்லாமல், ஜாதி, மதம், ஏழை, பணக்
காரன் என்ற பேதம் ஒழித்து, திறமைக்கு ஏற்றம் தந்து, நம்
தலைவியின் வழியிலே என்றும் நாம் நடப்போம்.

பெண்களின் நலனில் உண்மையான அக்கறை கொண்டு,
ஆதரவற்ற பெண்களுக்கு ஆதரவு அளிக்கின்ற வகையில் வாழ்வில்
விரக்தி அடைந்து சாகத் துணிந்த, 3 குழந்தைகளுடன் உள்ள
ஒரு தாய்க்கு, தனது வீட்டில் விருந்தளித்து, 5 ஆயிரம் ரூபாய்
கொடுத்து, புடவை கொடுத்து, கூடவே, வாழ்வை எதிர்த்துப்
போராட வேண்டிய துணிவையும் கொடுத்து, உங்களுக்கு சவாலாக
இருந்தவர்கள், பைத்தியம் பிடித்து தலையைப் பிய்த்துக் கொள்
கின்ற அளவிற்கு, ரோடு ரோடாக அலையும் அளவிற்கு இந்த
தமிழகத்தை அசத்திவிட்டீர்கள் அம்மா. பெண்களின் கண்ணீ
ரைத் துடைக்க மதுவிலக்கை ஒழித்து, நீங்கள், மனிதனுக்கு
மரணம் அணுகும் போது, பிறக்கும்போதே வீடில்லாமல் பிறந்து
சாகும் வரை துன்பத்திலே மூழ்கி மரணம் அடைந்த பின் தன்
னைப் புதைப்பதற்கும் இடமில்லாத ஏழை, தாழ்த்தப்பட்டவர்
களுக்கு ஒரு மயானமும், பிரேதத்தைக் கொண்டு செல்ல ஒரு
பாதையும் அமைத்துத் தர ஒரு சட்டத்தை உங்கள் காலத்திலே
இயற்ற வேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக் கொள்ளக்
கடமைப்பட்டு இருக்கிறேன்.

இந்தக் கைத்தறி நெசவாளர்களுக்கு அம்மையார் அவர்கள்
கருணை கூர்ந்து அளிக்கின்ற நிதியைப் போல, துப்புறவுப் பணி
யாளர்கள் இன்று லெட்ரின்களைக் கிளீன் பண்ணுவதற்கு
யாரும் முன்வராத நாட்களிலே நமது நகரத்தைத் தூய்மை
யாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று முனைகின்ற அந்தச்
சகோதரர்களுக்கு மாதம் 150 ரூபாய் மட்டுமே சம்பளமாகத்
தருகிறார்கள். அவர்களுக்காக அரசு ஊழியர்களுக்கு வழங்கு
கின்ற ஓய்வு ஊதியம் அவர்கள் இறந்து விட்டால் அவர்களுக்கு
நீங்கள் கருணை காட்டி, மற்ற அரசு ஊழியர்களைப் போல
நிதியைக் கொடுத்து உதவிட வேண்டும் என்று நான் கேட்டுக்
கொள்கிறேன்.

[டாக்டர் (திருமதி) மு. சீனியம்மாள்] [1991 செப்டம்பர் 20

நண்பகல் 12.00

நகரங்களிலே இருக்கின்ற ஒரு தாழ்த்தப்பட்ட குடிமகனுக்கு கடைசி பயணம் செல்ல இறுதி ஊர்வல பல்லக்கு தர நீங்கள் உத்திரவிட வேண்டுமென்று நான் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

ஏழைகளும், ஊனமுற்றோர், பெண்கள், இளைஞர்கள் பயன்பெறும்பொருட்டு கிராமத்திலுள்ள அனைத்து மக்களையும் பொருளாதாரத்தில் மேம்படுத்தி எல்லாத் துறைகளிலும் வேலை வாய்ப்பை பெருக்கும் விதத்தில் பணி வசதிகள் அளிக்கும் ஒரு திட்டத்தையும், சிறு தொழில்கள் மூலமும், ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம், ஊரக வேலைவாய்ப்புத் திட்டம், மகளிர் மேம்பாட்டுத் திட்டம், மீன வளம், உணவுப் பொருள் தயாரிப்புத் திட்டம், பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் மற்றும் 58 பயிற்சி நிலையங்களையும், தொழில் உற்பத்திக் கூடங்களையும் அமைத்து வருவாயை பெருக்கி முன்னேற்றப் பாதையிலே அழைத்துச் செல்லும் உங்களுடன் மக்களும் நாங்களும் என்றும் பாதை தவற மாட்டோம்.

ஏழைகளே நிறைந்துள்ள அவிநாசியை பிற்படுத்தப்பட்ட பகுதியாக அறிவித்து, நீங்கள் நினைக்கின்றபடி பெண்களை தொழில் முனைவர்களாக ஆக்குவதற்கு அங்கே வாருங்கள்: எங்கள் ஊரில் தொழிலைத் துவங்குங்கள். உங்களது உதவியினால் அரசாங்கத்தின் வருமானத்தை பெருக்கு வதற்கும் என்றென்றும் நாங்கள் உழைப்பதற்கு கடமைப் பட்டிருக்கின்றோம் என்பதை நான் கூறிக் கொள்ள விழை கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

இதுவரையில் தொழில் துறையில் தொழில் முனைவர் களாக 800 பெண்களை உருவாக்கியிருக்கின்ற உங்களது திசை நோக்கி தாய்க்குலத்தின் வாயிலாக நாங்கள் தலை வணங்கு கின்றோம்.

சத்துணவுக் கூடங்களுக்கு வரும் குழந்தைகளுக்கு நல்ல உணவும், உடல் வளர்ச்சியும், கட்டாயக் கல்வியும் கொடுத்து, நல்ல மருந்துகள் கொடுத்து, நல்ல சமுதாயம் உருவாக்க நினைக்கின்ற நம் தலைவி அவர்கள் சத்துணவு ஊழியர்களை ஊக்குவிக்க சத்தான உணவு, சம்பளம் ஆகியவற்றை அடுத்த ஆண்டிலாவது தரவேண்டுமென்ற பணிவான வேண்டுகோளை நான் விடுக்கின்றேன்.



1991 செப்டம்பர் 20] [டாக்டர் (திருமதி) மு. சீனியம்மாள்]

ஆதரவற்ற குழந்தைகளுக்கு சேவை இல்லம் அமைத்தும், நடை பாதை குழந்தைகளுக்கு நிவாரணப் பணிகளை மேற்கொண்டும், வயது முதிர்ந்தவர்கள் சத்துணவை வீடுகளுக்கு எடுத்துச் சென்று குழந்தைகளுக்கு சாப்பாடு கொடுத்து உண்ணும் வசதியும், இதனால் 2,36,060 முதியோர், முன்னாள் படை வீரர்களின் மனைவி மக்கள் பயனடைகின்ற வகையிலே நீங்கள் உதவியதற்கு மனமார பாராட்ட கடமைப்பட்டிருக்கிறோம்.

கருவுற்ற தாய்மார்கள் இதற்கு முன்னால் உதவித் தொகை மட்டுமே வாங்கிக் கொண்டிருந்தனர். இப்போது முன் நான்கு மாதம், பின் நான்கு மாதமாக நல்ல சத்துணவு சாப் பிட்டு, குழந்தைக்கு சத்தான பாலூட்டி, ஒரு நல்ல அறிவாளிக் குழந்தையைப் பெற்றெடுத்து, வளர்த்து, 'நல்ல நல்ல பிள்ளை களை நம்பி இந்த நாடே இருக்குது தம்பி' என்ற வரிகளுக்கு பொருளூட்டும் வகையில் குழந்தை வளர்ப்பிற்கு உறுதுணை யாக இருக்கின்ற இந்த அரசினை நாங்கள் பாராட்டு கின்றோம்.

ஏழ்மையும் கல்வியறிவில் பின்தங்கியும், வரதட்சிணைக் கொடுமையால் பாதிக்கப்பட்டவர்கள் தங்களது பிறக்கும் பெண் குழந்தைகளை உடனுக்குடன் கொன்றுவிடும் பழக்கம் மதுரை மாவட்டம் உசிலம்பட்டியில் உள்ளதாக எழுதி உள்ளனர். எதையுமே மாற்றிக் காட்டும் சாதனை படைத்த நமது முதல்வர் அவர்கள் உசிலம்பட்டியில் சமூக பொரு ளாதாரத்தை மேம்படுத்துகின்ற வகையில், தொழிற்சாலை களை ஆரம்பித்து, சிறு தொழில்களை ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைய முதல்வர் பாதையில் ஒருங்கிணைந்த பெண் குலத்திலே இணைத்து இந்த சட்டமன்றத்தைப் போல் 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' திக்கெட்டும் முழங்க சபதம் எடுத்த நீங்கள், இனிமேல் இந்த பெண் சிசு கொலைக்கு ஒரு முடிவெடுத்து, 'எங்கும் பெண் எதிலும் பெண்' என்பதை நிரூபித்து காட்டிய நீங்கள் இந்த குழந்தைகளை பராமரிப்பதற்கு இல்லத்தை ஏற்படுத்தி சேவா மையங்களை ஏற்படுத்தியுள்ள நீங்கள் அரைத்த சந்தனமாய் உசிலையில் நீங்கள் மணக்க வேண்டும். மணப்பதற்கு உரிய திட்டங்களை தீட்டியதை நாங்கள் எல்லாம் வழி நடத்திச் செல்வோம். அவர்களுடைய திட்டங்கள் நிறை வேற மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் பாண்டியம்மாள் அவர்கள் உறுதியளிப்பார்கள் என்று நம்புகிறேன். (மணி யடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : டாக்டர் அ. ஸ்ரீதரன்.

[1991 செப்டம்பர் 20

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, சமூக நலத் துறை மானியக் கோரிக்கை
யின் மீது என்னுடைய கருத்துக்களை கூற வாய்ப்பளித்த
உங்களுக்கு இந்த நேரத்தில் நன்றியைக் கூறிக்கொண்டு,
பல ஆன்றோர்களும், சான்றோர்களும, பணியாற்றுகின்ற
இந்த மாமன்றத்தில், மரபுகளும், பண்பாடுகளும் மேலும்
சிறப்புறும் வகையில் புதியவர்களையும், அறிஞர்களையும்,
படித்தவர்களையும், டாக்டர்களையும், வக்கீல்களையும்.....

பிற்பகல் 12-05

ஆசிரியர்களையும் சட்டமன்ற உறுப்பினர்களாக ஆக்கி எப்பொழு
தும் டென்ஷனாக இருக்கிற இந்த சட்டசபையிலே இப்போது
சிரிப்பு ஒலியும் கரவொலியும் நடந்துக் கொண்டு இந்த மாமன்றமே
மகிழ்ச்சிக் கடலிலே மூழ்கிக் கொண்டிருக்கிற இந்த வேளையில்
இந்த மாமன்றத்தின் மகிழ்ச்சி தமிழகத்தினுடைய மக்களின்
மகிழ்ச்சி என்ற நிலையில் சமுதாய மறுமலர்ச்சியையும் சமாதானத்
தையும் நிலை நாட்டிய மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்
தலைவி அவர்களை பத்திரிகை உலகமும், உலகத்திலுள்ள
அனைத்து தரப்பு மக்களும் பாராட்டும் ஒரு நிலையை ஏற்படுத்தி
உள்ள இந்த நிலையில மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்
தலைவி அவர்களை, புரட்சித் தலைவி என்று அழைப்பதற்கு
பதிலாக, டாக்டர் புரட்சித் தலைவி என்று அழைக்கும் நிலை
அடுத்த சட்டமன்றத்திற்குள் வந்து விடும் என்ற நம்பிக்கையை
கொண்டு எனது சில கருத்துக்களைக் கூற கடமைப்பட்டிருக்
கிறேன்.

சமூக நலத் துறையில் குறிப்பாக இன்றைய தமிழகத்தில்
நிலவி இருக்கிற நிலைமையை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது கலப்பு
திருமணம் செய்தவர்களுக்கு நம்முடைய அரசு ஏதாவது ஒரு நல்ல
காரியம் செய்தாக வேண்டும். காரணம் கலப்புத் திருமணம்
செய்து கொண்ட தம்பதிகள் சமுதாயத்தில் எத்தனை சங்கடங்
களுக்கு ஆளாகின்றனர் என்பது ஒரு முக்கியமான பிரச்சினை.
காரணம் நானும் கலப்பு திருமணம் செய்து கொண்டதால் அத
னுடைய கஷ்ட நஷ்டங்கள் எனக்கு நன்றாகத் தெரியும். ஆகவே
பிசிக்கலி ஹேண்டிகேப், எக்ஸ்-சர்வீஸ்மேன் போன்றவர்களுக்கு
அளிக்கப்படும் சலுகை ஒதுக்கீடுகளைப்போல் கலப்புத் திருமண
தம்பதிகளுக்கும் கலப்பு திருமண தம்பதிகளுக்கு பிறக்கும் குழந்
தைகளுக்கும் கல்வியிலும் வேலை வாய்ப்புகளிலும் முன்னுரிமை
கொடுத்து தர வேண்டும் என்ற பணிவான வேண்டுகோளை விடுக்
கிறேன். அதுமட்டுமல்ல சத்துணவு திட்டத்தை ஆரம்பித்த நமது
தமிழக அரசு இந்த சத்துணவு திட்டத்தில் பணியாற்றுகிற ஊழி
யர்களுக்கு ஏதாவது ஒரு நல்ல காரியத்தை இந்த ஆண்டிலே
இல்லாவிட்டாலும் அடுத்த ஆண்டிலோ அல்லது அதற்கும் அடுத்த
ஆண்டிலோ நமது நல்ல கருத்துக்களை இணைத்து ஏதாவது ஒரு



1991 செப்டம்பர் 20] [டாக்டர் அ. ஸ்ரீதரன்]

நல்ல காரியத்தை, வரவேற்கத்தக்க காரியத்தை அவர்களுக்குச்
செய்துக் கொடுக்க வேண்டுமென்றும் பணிவாக கேட்டுக் கொள்
கிறேன்.

அது மட்டும் அல்லாமல் வாலண்டரி அசோசியேஷன் என்று
சமூக நலத்துறை வாரியத்தின் மூலமாக, வாலண்டரி அசோசியே
ஷன் மூலமாக பல நல்ல பணிகளை தமிழகத்திலேயும் சரி, நாட்
டில் உள்ள பல மாநிலங்களிலும் சரி செய்துக் கொண்டு வருகிறார்
கள். அந்த வகையிலே நமது தமிழ்நாடு சமூக நல வாரியத்தின்
மூலமாக பல வாலண்டரி அசோசியேஷனுக்கு பல ஸ்கீம்களைக்
கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். அப்படிக் கொடுக்கும்.
போது ஏ.ஜி.பி. என்ற Awareness Generation Programme, Socio
Economy Programme போன்ற திட்டங்களை நாம் நிறைவேற்றிக்
கொண்டிருக்கிறோம். தமிழகத்தில் ஏ. ஜி. பி. எங்கெங்கு
தேவைப்படுகிறதோ அங்கு நாம் கவனம் செலுத்த வேண்டும்.
குறிப்பாக நம்முடைய சமூக நலத்துறை வாரியம் மூலமாக பெரிய
டெரிய வாலண்டரி அசோசியேஷன்களுக்கு முக்கியத்துவம்
கொடுக்கிறார்கள். அதை மாற்றி ஸ்மால் ஸ்மால் வாலண்டரி
அசோசியேஷன்களுக்கும் ஏ.ஜி.பி. என்ற ஸ்கீமை ஏற்படுத்திக்
கொடுத்து மூலை முடுக்குகளிலுள்ள கிராமங்களுக்கும் அது சென்
றடைய வேண்டும் என்கிற வகையில் ஒரு திட்டத்தை நாம் இந்தச்
சந்தர்ப்பத்திலே நிறைவேற்றியாக வேண்டும் என்ற எனது பணி
வான கருத்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டும்
அல்லாமல் சோஷியோ எக்னாமிக் புரோக்கிராம் என்ற திட்டத்
தின் கீழ் மாடு வளர்ப்பதற்கும் கறவை மாடுகள் வளர்ப்பதற்கும்
மானியமும் கடன்களும் கொடுக்கிற வகையில் சோஷியல் வெல்
பேர் போர்டிலே இருந்து அவைகளை ஒன்றாக இணைத்து, பத்து
யூனிட் இருபது யூனிட்டுகளை ஒன்றாக அமைத்து, 100 கறவை
மாடுகளோ அல்லது 200 கறவை மாடுகளோ ஒன்றாக இணைத்து
எங்கெங்கு மாடு வளர்ப்பதற்கான தட்பவெப்ப நிலை இருக்
கிறதோ அந்த இடங்களில் குறிப்பாக வால்பாறை, குன்னூர்,
ஊட்டி, கொடைக்கானல் போன்ற மலைப்பகுதிகளில் உள்ள
இடங்களில் மொத்தமாக அந்த யூனிட்டுகளை அமைத்து, கேரளத்
திலே இருக்கிற Indo Swiss Dairy Development and Cattle Breeding
Project போன்ற ஸ்தாபனத்தை மலைப்பகுதியில் அமைத்தால்
அரசுக்கும் வருவாய் இருக்கும் பால் உற்பத்தியும் அதிகமாக
ஏற்படும். அது மட்டுமல்ல வேலை வாய்ப்பும் அதிகமாக
இருக்கும். ஆகவே இந்த டையரி யூனிட்டினை ஒன்றாக இணைத்து
செயல்பட மலைப் பகுதிகளில் உள்ள இடங்களுக்கு சிறப்பு
கவனம் காட்டப்பட வேண்டும் என்று இந்த நேரத்திலே தெரி
வித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-10

அதுமட்டுமல்லாமல், இந்த ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற
போஸ்ட் கிராஜுவேட் எஜுகேஷன் ட்ரெயினிங்களில் இந்த உடல்
ஊனமுற்றவர்களுக்கும், கலப்புத் திருமணத்தால் பிறந்த குழந்
தைகளுக்கும் ஒரு கௌன்செல்லிங் சென்டரும் அதுமாதிரி டெஸ்டி

டியூட் விமன், விடோ போன்ற பெண்களுக்கு அந்தந்த மாவட்டத்தில் ஒரு கௌன்செல்லிங் சென்டரை அமைத்து அவர்களுடைய வாழ்வுக்கு மறுமலர்ச்சி ஏற்படுத்தித்தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்த சமூக நலத்துறையினுடைய மானிய கோரிக்கையை வரவேற்று, வரவிருக்கின்ற நிதியாண்டிலும் ஒரு சிறப்பான கவனத்தை சமூக நலத்துறைக்கு கொடுத்து பின் தங்கிய மக்களுக்கும் சமுதாயத்தில் நலிவடைந்த மக்களுக்கும் ஏதுவாக நல்ல பல திட்டங்களை தருவீர்கள் என்ற நம்பிக்கையில் நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருமதி பியாட்ரிக்ஸ் டி. சோசா.

Dr. (Thirumathi) *Beatrix D' Souza* : Honourable Deputy Speaker Sir, I will confine myself to speaking on women's welfare in Demand No. 30. It is fitting that the Honourable the Minister for Women's Welfare in a women. Only a women can understand another women's needs.

Some of the suggestions I am going to make may appear new and revolutionary. But the word 'Puratchi' means revolutionary and al classes of women look towards Tamil Nadu's first women Chief Minister to lead them into a new 'Women's Era'.

As we near the 21st century, the Government's policy on Women's welfare may need to be re-oriented taking into account the new emancipated urban woman, as well as her rural sister. Thier priorities are different. We cannot talk of women in the lumpeach group should be identified and their needs catered to.

The 'new women' in Tamil Nadu is educated, articulate, aware of the rights and willing to fight for them. She is usually a carrer women. Women legislators in Tamil Nadu have often been accused of not representing these women in the Assembly.

In Britain, there is a politically conscious women's group that advises the Government on women's issues. I strongly recommend the constitution of such an Advisory Body in Tamil Nadu, consisting of Social Workers, Lawyers, Educationists, Doctors and Entrepreneurs.



It is a fact that more and more career women are marrying late or opting to stay single. Marriage is no longer the ultimate aim or dream of every women. This new emancipated single women is to be considered. Single women elsewhere in India are being allowed to adopt children. In Tamil Nadu also adoption rules should be relaxed to allow single women to adopt children now languishing in orphanages.

There is another group of women who have "singleness" imposed on them, either through desertion or divorce. It is these women who are looked down upon by society. It is not the widow. There is no longer any religious or social sanction against widow remarriage A financial incentive for widow remarriage is an anachronism. It sounds very much like dowry. In 1990-91, the Government spent 15.75 lakhs on widow remarriage. In 1991-92 the financial commitment is Rs. 10.20 lakhs equal to the out lay on Meals for Old Age Pensioners. The Training Programme for the handicapped gets Rs. 7.57 lakhs in 1991-92. It is a moot point on where the 10 lakhs earmarked for widow remarriage should really go. Only 6.62 lakhs is provided for working women's hostals. Marriage unfortunately does not solve a women's problems and the Government need not encourage It. The various categories of single women need hostels and affordable housing units. The one Working Women's Hostel in Madras is woefully inadequate. There are only 75 inmates and each women can stay only for 3 years. For many single women housing is not a temporary problem. Landlords don't rent houses to single women. The Government must come to the rescue of these women.

Women entrepreneurs and small business women, even flower sellers should be able to get bank loans without having to state the name of husband or father or have some man stand surety for them. Then there is another type of woman, who is married and "house-bound". She needs an income but for some reason, mostly because of small children she cannot leave her home. At present free sewing-machines are distributed under a scheme to self-employed women.

பிற்பகல் 12.15

This assistance can be extended to include typewriters, for job-typing. Financial assistance can be given to women to start some type of small business at home.

Working mothers need creches. Every Government office and Factory should have a creche or a play-school. It should be mandatory or every construction site to have a creche. At present babies hang in bundles from trees.

A creche should include a play area. I have visited the Secretariat Creche managed by the Parents, Association. The children are couped up in one large room. The Government should take it over to provide better facilities for the children and the staff. It could be made into a model creche.

Finally there is the on-going debate on whether a women should go out to work or stay at home. In western Countries, there is the concept of flexi-time This works well for example in factories and the hotel industry where people work around the clock. A women can work her total number of hours a week, at a time of her own choice. Also a single job can be shared by two women on a shift basis. Women, therefore, have both employment and time at home.

Flexi-time is a new concept in India, but it exists in most developed countries and may be considered. Thank you.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருமதி ஜெ. லோகாம்பாள்.

* திருமதி ஜெ. லோகாம்பாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, மாண்புமிகு சட்டப்பேரவை உறுப் பினர்களே, உங்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

அன்னை இந்திராவைப் போல் ஆற்றல் மிகு செயல் திறன் கொண்ட, தமிழகத்தின் மக்களின் பேராதரவு மூலம் முதன் முதலாக முதல்வர் ஆன புரட்சித் தலைவி அவர்களின் தலைமையின் கீழ் நாம் எல்லாம் பணியாற்ற கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

சமூக நலத்துறையில் பெரும்பங்கு மகளிர்களுக்குத்தான் உண்டு. அத்துறைக்கு பொருத்தமான திறமையான அமைச்சர் கீழ் உள்ள சமூக நலத்துறை மானிய கோரிக்கை விவாதத்தில் கலந்து கொண்டு பேசுவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் மகளிர் நல்வாழ்வுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து இருக்கிறார்கள்.

ஒருங்கிணைந்த மகளிர் மேம்பாட்டுத் திட்டம் மூலம் சுமார் 1 லட்சம் பெண்களுக்கு சுய வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் திட்டங்களை அறிவித்துள்ளார்கள். அவைகளை முழுமனத் துடன் வரவேற்று அரசைப் பாராட்டக் கடமை[illegible] [illegible]றுக்கிறேன்







இந்தத் திட்டத்தை முழுக்க, முழுக்க, கிராமப் பகுதிக்கு கொண்டு வந்தால்தான் மக்கள் முன்னேற வழி வகுக்கும்.

இன்னும் சொல்லப்போனால், அந்தந்த பகுதிக்கு ஏற்றவாறு அவர்களுக்கு தொழில் பயிற்சி அளிக்க வேண்டும்.

சென்னையில் ஆட்டோ டிரைவர்களாக பெண்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, அவர்களுக்கு கடன் உதவி வழங்கப்படுவதாக அறிகிறேன்.

இதேபோல் திருச்சி போன்ற முக்கிய நகரங்களிலும் பெண்கள் சுயமாக ஆட்டோ ஓட்டி தொழில் நடத்த மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அனுமதி அளிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அத்தோடு, அரசு போக்குவரத்துக் கழகங்களில், இப்போது மகளிர் சிறப்புப் பேருந்துகள் விடப்பட்டு உள்ளன. இவைகளில் பெண்களே கண்டக்டர்களாக நியமிக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்ற பஸ்களிலும் பெண் கண்டக்டர்கள் படிப்படியாக அறி முகப்படுத்தப்பட்டு, அவர்களை வேலைக்கு அமர்த்த வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நடைபாதை கடைகள், பூ, காய்கறி வியாபாரம் உள்பட பல தொழில்களில் பெண்கள் ஈடுபட்டு உள்ளனர். பால் உற்பத்தியிலும் பெண்கள் தான் முக்கிய பங்கு வகிக் கின்றனர். அவர்களை ஊக்குவிக்க கடன் வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இவர்களுக்கு உதவியளிக்க சிறப்புத் திட்டம் ஒன்றை தொடங்க முடிவு செய்துள்ளதாக அரசு அறிவித்து உள்ளது.

இந்த திட்டத்தில் நலிந்தவர்கள் பெயரைச் சொல்லி, மற்ற வர்கள் எல்லாம் அவர்களுக்கு உரிய பயனைப் பெற்று கொள் கிறார்கள்.

நகரசபை, யூனியன்கள் மூலமாக மானியத்துடன் வழங்கப் படும் கடன்களை கடந்த கால ஆட்சியில், அவர்களே, அனுப [illegible]த்து வந்தனர். இந்த நிலை மாறி உரியவர்களுக்கு, உரிய திட்ட பயன்கள் கிடைக்கும் வகையில் இந்த அரசு கடும் நட வடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்த வகையில் பெண்கள் சிறு தொழில்கள் செய்ய மானியத் துடன் கடன் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். [illegible]

[திருமதி ஜெ. லோகாம்பாள்]

[1991 செப்டம்பர் 20]

வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க இந்த அரசு 'டேனிடா'
உதவியுடன் வேளாண்மைப் பண்ணையில் பெண்களுக்கு பயிற்சி
அளிக்கும் திட்டத்தை செயல்படுத்த இருப்பதாக சொல்லப்
பட்டு இருக்கிறது.

பிற்பகல் 12-20

ஒவ்வொரு ஆண்டும் 9 ஆயிரம் பெண்களுக்கு மேம்படுத்தப்
பட்ட வேளாண்மைப் பயிற்சி அளிப்பதாக கூறி இருக்கிறார்கள்.
என்னுடைய லால்குடி தொகுதியில் பெரும்பான்மையான மக்கள்
விவசாயத்தை நம்பியே இருக்கிறார்கள். உழவர் பயிற்சி
நிலையம், வேளாண்மைக் கல்லூரி உள்பட பல்வேறு விவசாய
அமைப்புக்கள் என்னுடைய தொகுதியில்தான் உள்ளன. மரம்
வளர்த்தல், பால்வளம் பெருக்குதல், தோட்டக்கலை போன்ற
பிரிவுகளில்பெண்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டும். எனவே அரசு
அறிவித்துள்ள இந்த புதிய பண்ணை பயிற்சி திட்டத்தில், என்
னுடைய லால்குடி தொகுதி பெண்கள் அதிகம் இடம் பெற
வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயக் குடும்பத்தில் உள்ள குழந்தைகள், படிக்க முடி
யாமலோ அல்லது படித்துக்கொண்டிருப்பதை பாதியில் நிறுத்த
வேண்டிய சூழ்நிலையோ உள்ளது. ஆகவே அவர்களுக்கு பயன்
அளிக்கும் பள்ளி சாராக் கல்வித் திட்டத்தை தர இருப்பதாக
அரசு அறிவித்து உள்ளது. இது எந்த அளவுக்கு வெற்றிபெறும்
என்று தெரியவில்லை. ஏதாவது அவர்களுக்கு சலுகைகள்,
உதவிகள் அளித்தால்தான் படிக்க வருவார்கள்.

படித்த இளைஞர்களுக்கு புரட்சித் திட்டம் ஒன்றைச்சொல்லி
உள்ளீர்கள். ஒரு வருடத்தில் 10 குழந்தைகளுக்கு படிப்பதற்
கான பயிற்சி அளிப்பதற்கு 100 ரூபாய் வீதம் 1000 ரூபாய்
ஆண்டுக்கு அவர்களுக்கு மதிப்பூதியமாக வழங்க இருப்பதாக
கூறி இருக்கிறீர்கள். இதற்காக ஆண்டுக்கு 20 கோடி ரூபாய்
செலவு செய்ய இருப்பதாகவும் கூறப்பட்டு உள்ளது.

ஒன்றையெல்லாம் நீங்கள் மறந்து இருக்கமாட்டீர்கள்.
புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். முதல் அமைச்சராக
இருந்தபோது, பள்ளி குழந்தைகளுக்கு இலவச பல்பொடி வழங்கப்
பட்டது. தி.மு.க. ஆட்சிக் காலத்தில் இந்த இலவச பல்பொடி
திட்டம் யாருக்கும் தெரியாமல் நிறுத்தப்பட்டு விட்டது.

இதை மீண்டும் புரட்சித் தலைவி அவர்கள் அமுல்படுத்த
வேண்டும். தமிழக அரசு மூலிகைப் பண்ணை மூலம் தயாரிக்
கப்பட்ட பற்பொடி வழங்கும்போது குழந்தைகள் நலம் பேண
வழிவகுக்கும் என்று கருதுகின்றேன். சத்துணவுத் திட்டம்
என்பது உலகத்திலேயே சரித்திரம் படைத்தது. அந்த திட்



[திருமதி ஜெ. லோகாம்பாள்]

1991 செப்டம்பர் 20]

டத்தை, தி.மு.க. ஆட்சியில் நிறுத்துவதற்கு ஏற்பாடுகள் நடந்
தன. இதில் வேலை பார்ப்பவர்கள் எல்லாம் தில்லுமுல்லு
செய்கிறார்கள் என்று எல்லா கலெக்டர்களுக்கும் தி.மு.க. ஆட்சி
யில் ஆணையிடப்பட்டு சத்துணவுக் கூடங்களுக்கு சென்று
சோதனை செய்து ஊழியர்களை எல்லாம் சஸ்பெண்ட் செய்
தார்கள். ஆனாலும் சத்துணவுத் திட்டத்திற்கு மக்கள் மத்தி
யில் அதிக செல்வாக்கு இருக்கிறது என்பதால், அதை அவர்
களால் எடுக்க முடியாமல், கூடுதலாக முட்டை வழங்குவதாக
அறிவித்தார்கள். மக்களோடு மக்களாக ஒன்றிப்போன இந்தச்
சத்துணவுத் திட்டம் செயல்படுத்தப்படும் மையங்களை பார்த்
தால், மிகவும் பரிதாபமாக உள்ளது.

மழை, வெயில் காலங்களில் கேட்கவே வேண்டாம். குழந்
தைகள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். கட்டிட வசதி சரி
யாக இல்லை. மேல் கூரைகளே இல்லாமல் பல சத்துணவுக்
கூடங்கள் உள்ளன.

என்னுடைய லால்குடி தொகுதியில், லால்குடி, புள்ளம்பாடி
யூனியன்களில் சத்துணவுக் கூடங்கள் மிகவும் பழுதுபட்ட நிலை
களில் இருக்கின்றன. அவைகளை விரைவில் சீர்படுத்தி தரு
மாறு புரட்சித் தலைவி அவர்களையும், அமைச்சர் அவர்களை
யும் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

சமீபத்தில் சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் சத்துணவு
மேம்பாட்டுத் திட்டம் குறித்து ஆலோசனை நடத்த திருச்சி
வந்தார்கள். அந்தக் கூட்டத்தில் நானும் கலந்து கொண்டேன்.
சத்துணவு பற்றிய தொலைக்காட்சி நிலைய நிகழ்ச்சியும்,
அமைச்சர் மற்றும் கூடுதல் இயக்குநர் அவர்களின் பேச்சுகளும்
அனைவரின் மனதையும் தொடும்படியாக இருந்தன.

பெரும் முதலாளிகள், தொழில் அதிபர்கள் போன்ற
அனைத்துத் தரப்பு பிரதிநிதிகளுடன் ஆலோசனை செய்தார்
கள். சத்துணவுக் கூட பராமரிப்பிற்கு அப்படிப்பட்ட பெரிய
மனது கொண்டவர்கள் மூலமாக நிதி திரட்டி சத்துணவுக்
கூடங்களை சீர்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி
எடுத்துள்ளதை நான் முழுமனதாக பாராட்டுகிறேன். அவர்கள்
முயற்சியால் கோடிக்கணக்கான மதிப்புள்ள ரூபாயை பராமரிப்புக்
காக செலவுசெய்து, சத்துணவுக் கூடங்களை செப்பனிட பல
தொழில் அதிபர்கள் முன் வந்துள்ளனர்.

எனது தொகுதியில் டால்மியா சிமெண்ட், கோத்தாரி,
சர்க்கரை ஆலை ஆகியவை உள்ளன. இவர்களிடம் பல கோடி
ரூபாய்கள் உள்ளன. அதை சத்துணவுக் கூடங்களுக்கு, லால்குடி
தொகுதியைப் பொறுத்தவரையிலும் புள்ளம்பாடி ஒன்றியத்தை
டால்மியா சிமெண்டிடமும், லால்குடி ஒன்றியத்தை [illegible]
விடமும் ஒப்படைத்தீர்களானால் ரொம்ப நன்றாக இருக்கும்.

அவர்களெல்லோரும் பல கோடி சொத்துள்ளவர்கள். தயவு செய்து அதை அம்மா அவர்கள் பார்த்து, செய்து கொடுக்க வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

சமூக நலத்துறை மூலம் 8 ஆம் வகுப்பு வரை படித்த பெண்களுக்கு 5 ஆயிரம் நிதி உதவி அளிக்கப்பட்டு வந்தது. தி.மு.க.. ஆட்சியில் தொடங்கிய இந்தத் திட்டத்தில் பலன் பெற்றோர் யாருமில்லை. மாறாக, பல முறைகேடுகள் நடந்துள்ளன. திருமண நேரத்தில் 5 ஆயிரம் ரூபாய் கிடைப்பது என்பது ஒரு பெரிய உதவியாகும். இத்தொகையை புரட்சித் தலைவி அவர்கள் 10 ஆயிரம் ரூபாயாக உயர்த்திக் கொடுத்தால் அவர்கள் உள்ளளவும், உங்களை மறக்க மாட்டார்கள். மேலும் இத்திட்டத்தின் மூலம் உதவிகள் பெற 8 ஆம் வகுப்பு தகுதி என்பதை 5 ஆம் வகுப்பு வரை படித்திருந்தால் போதும் என்று குறைத்தால், இன்னும் அதிகம் பேர் பயனடைய வாய்ப்புகள் உள்ளன. அதையும் புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்திலேயே நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

வேலை பார்க்கும் பெண்களுக்கு, தங்கும் விடுதி சமூக நலத் துறை மூலம் கட்டப்பட்டு உள்ளது. அந்த விடுதி சகல வசதிகளும் உள்ள இடத்தில் இருந்தால்தானே, பெண்களுக்கு பயன் உள்ளதாக இருக்கும். திருச்சியில் உள்ள ''பெண்கள் அரசு தங்கும் விடுதி, சுற்றுலா மாளிகை அருகே உள்ளது. அங்கு பஸ் வசதி இல்லை. நீண்ட தூரம் நடந்து சென்றே பஸ்களை பிடிக்க வேண்டும். பெண்கள் நடந்து செல்ல பாதுகாப்பு இல்லை. அந்த ஆஸ்டல் அருகே சமீபத்தில் ஒருவர் சைக்கிளில் தனது மனைவியை பின்னால் வைத்து சென்றபோது கூட வழிப்பறிக் கொள்ளை நடந்தது. அந்தப் பெண்ணின் கழுத்தில் கிடந்த நகையை பறித்துக் கொண்டு ஓடிவிட்டார்கள். இது சம்பந்தமாக கண்டோன்மெண்ட் போலீஸ் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு இருக்கிறது. ஆகையால் திருச்சி பஸ் ஸ்டாண்டுக்கு அருகிலுள்ள திருவள்ளுவர் பஸ் நிற்கின்ற இடத்தில் தனியாகக் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. அந்த இடத்தில் திருவள்ளுவர் பஸ் நிற்காமல், டவுன்பஸ் நிற்கும் இடத்திலேயே திருவள்ளுவர் பஸ்களும் நிற்கின்ற காரணத்தினால் அதிகமான நெருக்கடி ஏற்படுகிறது. இதனால் திருட்டு, வழிப்பறி ஏற்படுவதற்கு வாய்ப்பாக உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே உடனே அதை அப்புறப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்திலாவது, பெண்களுக்கு பல்வேறு நன்மைகள் கிடைத்திட வேண்டும். அத்தனைக்கும் மேலாக மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களது காலத்தில், நாட்டு மக்களுக்கு நல்ல பல திட்டங்கள் கிடைத்திட வேண்டும். அதுவும் அடிப்படை வசதிகள், குறிப்பாக ரேசன் கடையில்







வழங்கும் பொருட்கள் எந்தவித தங்குதடையின்றிக் கிடைத்திட வேண்டும். இதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் புரட்சிகர திட்டம் ஒன்றை அறிவித்தால் நலமாக இருக்கும்.

மக்கள் ரேஷன் கடையைத் தேடிப் போவதை விட மக்களைத் தேடி குறிப்பிட்ட நாட்களில் ரேஷன் பொருட்கள் கிடைத்தால், வாழ்நாள் முழுவதும் மக்கள் உங்களை மறக்க மாட்டார்கள்.

பிற்பகல் 12—25

இதற்காக நீங்கள் தமிழ்நாடு முழுவதும் ''நடமாடும் ரேஷன் கடை'' அமைத்தால் நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

நாட்டில் நடக்கும் வரதட்சணைக் கொடுமைகளைக் கண்டிப்பாக ஒழித்தாக வேண்டும். இதுவரை செயல்படுத்திய திட்டங்கள் மூலம் இதற்குச் சரியான ஒரு வழிவகை கிடைக்கவில்லை.

எனவே, இந்த மாமன்றத்தில் வரதட்சணைக் கொடுமைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கும் அளவில் புதிய திட்டம் ஒன்றை அறிவிக்க வேண்டுகிறேன்.

திருச்சி போன்ற முக்கியமான நகரங்களில் உள்ள பஸ் நிலையங்களில் பெண்கள் தனியாகச் சென்று வெளியூர் பஸ் ஏற முடியவில்லை. ஆம்னி பஸ்களுக்கு ஆள் பிடிப்பதற்காக புரோக்கர்கள் என்ற பெயரில் அவர்கள் சூட்கேசைப் பிடித்து இழுப்பதும், பெண்கள் கையைப் பிடித்து இழுப்பதும் வாடிக்கையாக இருந்து வருகிறது. இவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எனது லால்குடி தொகுதி பெரும்பாலும் விவசாயப் பெருமக்கள் நிறைந்திருக்கும் தொகுதியாகும். இப்பகுதியில் பெண்கள் காலையிலேயே விவசாய வேலைக்குச் சென்று விடுகிறார்கள். அவர்களுடைய குழந்தைகளைச் சற்று வயது வந்த மூத்த பிள்ளைகளின் பொறுப்பில் விட்டு விட்டு வேலைக்குச் சென்று விடுகிறார்கள். இதனால் என் பகுதியிலுள்ள படிக்கும் வயதில் உள்ள குழந்தைகள் பள்ளிக்குச் செல்லும் வாய்ப்பின்றி, கல்வி அறிவு பெறாத நிலையில் இருக்கிறார்கள். நகரங்களில் உள்ள குழந்தைகள் காப்பகத்தைப் போல, கிராமங்களிலும் குழந்தைகள் காப்பகம் என்று அமைத்து, இதுபோன்ற கைக்குழந்தைகளை அக்காப்பகம் பராமரிக்க விட்டுவிட்டு, பள்ளி செல்லும் குழந்தைகள் கல்வி அறிவு பெறும் வகையில் ஒரு புதிய மறுமலர்ச்சித் திட்டத்திற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று, மாண்புமிகு முதல்வர், புரட்சித் தலைவி அவர்களைக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கிராமப்புற மக்களுக்கு மிகச்சிறந்த பலனை அளிக்கக்கூடிய திட்டமாகவும், இத்திட்டம் அமையும் என்பதையும் தான் [illegible] கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய வால்குடி தொகுதியில் கல்லூரி வசதி இல்லை. அனைவரும் திருச்சி வந்தே படிக்கிறார்கள். எனவே, அரசு சார்பில் கல்லூரி ஒன்று அமைத்துத் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

சாலை வசதிகள் இல்லாத கிராமங்கள் என் தொகுதியில் உள்ளன. மிகவும் பின் தங்கிய பகுதியான என் தொகுதிக்கு வந்து நல்லபடியாக புரட்சித் தலைவி அவர்கள் நல்ல பல காரியங்களைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எனக்குப் பேச வாய்ப்பளித்ததற்குச்சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களுக்கும், எதிர்க் கட்சித் தலைவரவர்களுக்கும் நன்றி கூறி, முடிக்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:</u> திரு. தா. வேடியப்பன்.

<u>*திரு. தா. வேடியப்பன்:</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஏழரை கோடி மக்களின் இணையற்ற தலைவியாகவும், ஐந்தரை கோடி மக்களின் ஒப்பற்ற எண்ணம் இரட்டை இலைச் சின்னம் என்று நிரூபித்து இன்று எடுத்துக் காட்டி நமது தமிழகத்தை ஆட்சி செய்து கொண்டிருக்கும், இதயத் தலைவி, இதயத் தாய், தானைத் தலைவி, தங்கத் தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய பொற் பாதங்களைத் தொட்டு வணங்கி, இந்த சமூக நலன் பற்றிய மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் கலந்து கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்று சமூக நலம் என்பது, ஏழை எளிய மக்களுடைய, குறிப்பாக, பெண்களுடைய ஒரு முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நல்ல திட்டம் என்பதைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் மகளிருக்காக எட்டாம் வகுப்பு படித்த பெண்களுக்கு திருமண நிதி உதவித் திட்டம் என ஐயாயிரம் வழங்கப்படுகிறது. இந்த ஐயாயிரம் வழங்கப்படும் திட்டம் அனைத்து ஒன்றியங் களிலும் இன்று கணக்கெடுத்துப் பார்ப்போமேயானால் அதிகப் படியான நபர்கள் அங்கு மனுக்களைத் தந்துள்ளனர். எட்டாம் வகுப்பு படித்த அனைத்துப் பெண்களும் பயனடையும் வகையில் அதிகமான நிதியை ஒதுக்கி அனைத்துப் பெண்களும் பயனடையும் வகையில் இந்தத் திருமண உதவித் திட்டத்தை வழங்க நமது அரசு ஆவன செய்ய வேண்டுமென இங்கு கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று விதவைகள் திருமணத் திட்டம் என்று ஐயாயிரம் ரூபாய் வழங்க அரசு முன் வந்துள்ளது. இந்தத் திட்டத்தில் சிறப்பாக ஒவ்வொரு வட்டத்திலும் எத்தனை நபர்களுக்கு இதைப்போன்ற திருமணங்கள் நடைபெறுகின்றன என்பதைக்



கண்காணித்து இதற்குரிய நடவடிக்கையெடுத்து, விரைவில் இவர்களுக்கு இந்த விதவைகள் திருமணத் திட்டத்தின்கீழ் பணம் வழங்க நமது அரசு ஆவன செய்யக் கேட்டுக் கொள்கிறேன்.

கலப்புத் திருமணத் திட்டத்தின் கீழ் ஐயாயிரம் ரூபாய் வழங்குவதற்கு அரசு ஒரு உத்தரவாதம் அளித்துள்ளது. இந்தக் கலப்புத் திருமணத் திட்டத்தின் கீழ் 5,000 ரூபாய் என்பதை 10,000 ரூபாயாக ஒதுக்கி 5,000 ரூபாய் அவர்களுடைய வாழ்க்கைச் செலவுக்காகவும், 5,000 ரூபாய் அவர்களுடைய பெண் சந்ததிகள் பயனடையும் வகையில் டெபாசிட் டாகவும் செய்யப்பட வேண்டுமென்பதை என்னுடைய கோரிக்கை யாக இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று பெண்களுக்கு மகப்பேறு திட்டத்திற்காக எட்டு மாதங்கள் வழங்கப்பட வேண்டுமென்று நமது புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அது சிறப்பாகச் செயல்பட வேண்டிய ஒரு முக்கியத் திட்டமாகக் கருது கிறேன்.

அதேபோன்று நமது மறைந்த முன்னாள் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பெயரை நமது சத்துணவுத் திட்டத்திற்கு நமது புரட்சித் தலைவி அவர்கள் சிறப்பாகச் செயல்பட வேண்டுமென்ற ஒரே எண்ணத்திற்காகப் புரட்சித் தலைவரவர்களால் ஏற்படுத்தப்பட்ட சத்துணவுத் திட்டத்திற்கு நமது புரட்சித் தலைவரவர்களுடைய பெயரைச் சூட்டியமைக்காக என்னுடைய தொகுதி மக்களின் சார்பி லும், இந்த மாமன்றத்தின் சார்பிலும் அனைவருடைய சார்பிலும் நன்றியைக் கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் நமது புரட்சித் தலைவரால் ஏற்படுத்தப் பட்ட இந்தச் சத்துணவுத் திட்டம் என்றும் சிறப்பாகச் செயல் படும் வண்ணம் அனைத்து சத்துணவு அமைப்பாளர்களையும் நிரந்தரமாக்க வேண்டும் என கூறுகிறேன்.

[பிற்பகல் 12-30]

காரணம் என்னவென்றால், நம்முடைய புரட்சித் தலைவர் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட இந்த சத்துணவுத் திட்டம் அதற் காக நியமிக்கப்பட்ட நபர்கள், அதிலும் குறிப்பாக அதிகமாக பெண்கள் இருக்கிறார்கள். எனவே, தாயுள்ளம் படைத்த தாய் அவர்கள், இவர்களை நிரந்தரமாக்கி, இவர்களுக்கு அதிகப்படியான சம்பளத்தினை அதாவது ரூ. 400 அளவில் கூட்டிக் கொடுக்க வேண்டும். அடுத்த நிதியாண்டிலாவது சேர்த்து வழங்கக் கோருகிறேன்.

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்—தமிழ்நாடு ஊட்டச்சத்துத் திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களின் கீழ் கருவுற்ற தாய்மார்களுக்கும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் தினந்தோறும் காலையில் ஊட்டச்சத்து, நோய்த் தடுப்பு சிகிச்சைகள், சுகாதார வசதிகள் முதலியன அளிக்கப்படுகின்றன.

சேவை இல்லங்கள்—கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், விதவைகள், திக்கற்றோர் ஆகியோருக்கு புகலிடம் கொடுத்து, உணவு, உறைவிடம், கல்வி, தொழில் பயிற்சி ஆகியவை அளிக்கப் படுவதற்காக சேலம், தாம்பரம், கடலூர், தஞ்சாவூர், திரு நெல்வேலி மற்றும் காரைக்குடி ஆகிய இடங்களில் சேவை இல்லங்கள் நடத்தப்படுகின்றன. இந்த இல்லங்களில் 1,185 பேர் தங்கி பயன் பெறுகிறார்கள். இந்த ஆண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் இதற்காக ரூ. 44 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள் என்கின்ற நல்ல தகவலை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள் கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

மகளிர் மன்றங்கள் – கிராமங்களில் வாழும் மகளிர் குடும்ப நலம், சிறு சேமிப்பு, குழந்தை வளர்ப்பு, நோய் தடுப்பு முறைகள் போன்றவற்றில் போதிய அறிவு பெறுவதற்கு இந்த ஆண்டு இவ்வளவு நிதிநிலை நெருக்கடியிலும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் 51.16 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதைத் தவிர, ஆதரவற்ற மகளிர், விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் ஆகியோருக்கு ஆசிரியைப் பயிற்சி அளிப்பதற்காக பல்லாவரத்தில் நடத்தப்படும் ஆசிரியைப்பயிற்சி பள்ளிக்கு இந்த ஆண்டு ரூ. 3.76 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

பணிபுரியும் பெண்களுக்கு விடுதி.—அலுவலகங்களில் பணி புரியும் பெண்களுக்கு போதிய. பாதுகாப்பும் தங்கும் வசதியும் அளிப்பதற்காக கடலூர், திருச்சி, மதுரை, ஓசூர், தூத்துக்குடி மற்றும் புதுக்கோட்டை ஆகிய இடங்களில் அரசு நடத்தி வரு கின்ற விடுதிகளுக்கு இந்த ஆண்டு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ரூ. 6.62 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமுதாயத்தில் நலிவடைந்த மகளிருக்கும் விதவையர், கண வனால் கைவிடப்பட்டோர் ஆகியோருக்கும் சுயவேலை வாய்ப்பு வசதி அளிக்க சட்ட ஆலோசனை வழங்க மாவட்டந் தோறும் வழிகாட்டி மையம் செயல்படுகிறது.





ஏழைத் தாயின் விதவை மகள் திருமண நிதி உதவித் திட்டத் தின் கீழ் ஆண்டு வருமானம் 6,000-க்கும் கீழ் உள்ள விதவைத் தாயின் மகளின் திருமணத்திற்காக ரூ. 2,000 வீதத்தில் 18- லிருந்து 30 வயதுக்குள் உள்ள 1,015 பெண்கள் பயனடையும் வகையில் தாய் உள்ளம் கொண்ட புரட்சித் தலைவி அவர்கள் இந்த ஆண்டு ரூ. 20.30 இலட்சம் ஒதுக்கி இருக்கிறார்கள் என்கின்ற மகிழ்ச்சியான தகவலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக அரசு கலப்புத் திருமண உதவித் திட்டத்தின் கீழ் கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதியருக்கு ரூ. 1,000 ரொக்கமாகவும், ரூ. 4,000 சேமிப்புப் பத்திரமாகவும் வழங்கப் படுகிறது. இவ்வாண்டு 600 தம்பதியர் பயனடையும் வகையில் ரூ. 30 இலட்சம் நிதி ஒதுக்கீட்டினை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு அளித்திருக்கிறார்கள்.

பிற்பகல் 12.55

டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறு மணத் திட்டத்தின் கீழ் ரூ. 5,000 மதிப்புள்ள தேசிய சேமிப்பு பத்திரம் பரிசு அளிக்கும் வகையில் 204 தம்பதியர் பயனடைய இத்திட்டத்திற்கு இவ்வாண்டு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ரூ. 10.20 இலட்சம் ஒதுக்கீடு செய் திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி.)

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டத்தின் கீழ் கருவுற்ற ஏழை மகளிர் தம் மகப் பேறு காலத் திற்கு முன்னும், பின்னும் வழக்கமான பணிகளுக்குச் செல்ல இயலாத நிலைமையினால் வருமான இழப்பு ஏற்படாமல் இருக்க கருவுற்ற தாய்மார்களுக்கு பிரசவத்திற்கு முன்பு 2 மாதத்திற்கும் பின்பு 2 மாதத்திற்கும் ஆக 4 மாதத்திற்கு ரூ. 50 வீதம் ரூ. 200 நிதி வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்திற்கு நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இதுவரை எந்த அரசிலும் இல்லாத அளவிற்கு 2 இலட்சம் தாய்மார்கள் பயனடையும் வகையில் ரூ. 4 கோடி இந்த ஆண்டு நிதி ஒதுக் கீட்டை செய்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி.)

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின் கீழ் நிதி உதவியாக ரூ. 5,000 வீதம் இந்த ஆண்டு சுமார் 10,000 பெண்கள் பயனடையும் வகையில் இந்தத் திட்டத்திற்கு 5 கோடி ரூபாயை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி.)

[திரு. தா. வேடியப்பன்] [1991 செப்டம்பர் 20

அதேபோன்று, தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம் என்று குழந்தைகள் திட்டத்தை ஏற்படுத்தியுள்ளார்கள். அந்தத் திட்டத்திலும் குழந்தைகள் பயன் அடையும் வகையில், அதாவது ஒரு தாய், ஒரு குழந்தை பிறந்து, வளர்ந்து, அதனை ஒரு பெரிய மேதாவியாக ஆக்கும் வரையில் எவ்வளவு சிரமப்படுகிறார்கள் என்பதை அனைவரும் அறிவார்கள் — அப்படிப்பட்ட அந்தத் திட்டத்திலும், ஊட்டச்சத்து திட்டம் என்பது ஒரு முக்கியமான கருத்து. குழந்தைகளை வருங்கால செல்வ வீரர்களாக ஆக்குவதற்கு அடிப்படையான கருத்து. எனவே, அதிலே பணியாற்றும் அனைத்து ஊழியர்களுக்கும் தற்போது வழங்கப்படும் நிதியைவிட கூடுதலாக்கி, அவர்களையும் நிரந்தரமாக்கி, அந்தத் திட்டத்தையும் வலுவூட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, உடல் ஊனமுற்றோர் திட்டத்தின் கீழ் 50 சதவீதம் உடல் ஊனமுற்றோர் இருப்பார்களேயானால் அவர்களுக்கு நிதி வழங்கப்படுகிறது. அவர்களுடைய குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படுகின்றன. அதனைக் கருத்தில் கொள்ளாமல், 30 சதவிகிதம் உடல் ஊனமுற்றவர்கள் இருப்பார்களேயானால், கூட அவர்களுக்கும் நமது தமிழக அரசு — மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் — தனிச் சிறப்பாக அவர்களுக்கு, தனித் திட்டத்தை அறிவித்து, அதற்கு புரட்சித் தலைவர் அவர்களின் பெயரைச் சூட்டி, அந்தத் திட்டத்தின் கீழ் ரூ. 10,000 அவர்களுடைய பெயரில் 'பிக்ஸட் டெபாஸிட்' செய்து, அதிலிருந்து வரக்கூடிய உதவி நிதியிலிருந்து, உடல் ஊனமுற்றோர் அனுபவிக்கும் வண்ணம், அந்தத் திட்டத்தை ஏற்படுத்த வேண்டுமென என்னுடைய கோரிக்கையாக வைக்கிறேன்.

அதேபோல், இந்தத் திட்டத்தில் கண் பார்வையற்றோர்களுக்கு, இலவசமாக கருப்புக் கண்ணாடி வழங்குகிறார்கள். காது கேளாதவர்களுக்கு, காதுகேட்கும் கருவிகள் வழங்குகிறார்கள். உடல் ஊனமுற்றோருக்கு மூன்று சக்கர வண்டிகள் வழங்கப்படுகிறது. இதனையும், அனைத்து வட்டங்களிலும், எந்தெந்த குறைபாடுள்ள மக்கள் எவ்வளவு பேர்கள் உள்ளார்கள் என்பதை அறிந்து, அவர்களுடைய மனுக்களை பரிசீலித்து அதற்குத் தேவையான வண்ணம் அதிகமான நிதியை ஒதுக்கி, உடல் ஊனமுற்ற அனைவரும் பயனடையும் வகையில் இதனை செம்மையாகச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முதியோர் உதவித் தொகை. முதியோர் உதவித் தொகை வயதானவர்களுக்கு கொடுக்கக்கூடிய ஒரு முக்கியமான திட்டம். இதனை எண்ணிப் பார்க்கிறபோது, வயது முதிர்ந்தவர்கள் நம்மிடத்தில் மனுக்களைப் பெற்று, அதற்கான வட்டாட்சியர்களிடம் கொடுக்கிறார்கள். இதனை உடனுக்குடன் ஆவன செய்ய வேண்டும். காரணம் என்னவென்றால், வயது தளர்ந்த



1991 செப்டம்பர் 20] [திரு. தா. வேடியப்பன்]

வர்களுக்கு கூடிய விரைவில் கொடுத்தால்தான், அது சிறப்பாக இருக்கும். மற்ற ஆதரவற்ற விதவைகள், ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர், ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் போன்றவர்களுக்கு ஒரு மூன்று மாதத்திற்குப் பிறகு கூட வழங்கலாம். ஆனால், முதியோர் என்பது வயது முதிர்ந்தவர்கள். வயதானவர்கள் சிலர் மனுக்கள் கொடுக்கப்பட்டும், அந்த மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு அவர்களுக்கு முதியோர் உதவித் தொகை வழங்கப்படுவதற்குள்ளாகவே, அவர்கள் இறந்துவிடுகிறார்கள், ஒரு சிலரைப் பார்க்கும்போது. எனவே, அந்தத் திட்டம் செம்மையாகச் செயல்பட, முதியோர் பென்ஷன் கொடுக்க, மனுக்கள் கொடுக்கப்பட்ட ஒரு சில தினங்களுக்குள் அதனை பரிசீலித்து, உடனுக்குடன் அவர்களுக்கு அந்த முதியோர் உதவித் தொகையை வழங்க, அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கோருகிறேன்.

அதேபோன்று, ஆண்டுதோறும் பொங்கல், சுதந்திர தினவிழாக்களில் வழங்கக்கூடிய புடவையையும், வேட்டியையும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் பிறந்த நாளில், உடல் ஊனமுற்றவர்களுக்கும், முதியோருக்கும், அனைத்துப் பெரியோர்களுக்கும் சிறப்பாக வழங்க வேண்டும் என்பதனை என்னுடைய கோரிக்கையாக இங்கே நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, மலைவாழ் மக்கள் பயனடையும் வகையில், தேனீ வளர்த்தல், கூடைகள் முடைதல் போன்ற பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி, அங்கே மகளிருக்கு ஒரு முக்கியத்துவம் கொடுத்து, மலைவாழ் மக்கள் பயனடையும் வகையில், குறிப்பாக ஜமுனாமாத்தூர் பகுதியில் இந்தத் திட்டத்தை செயல்படுத்த வேண்டுமென்று கோருகிறேன்.

அதேபோன்று, ஜமுனாமாத்தூர் ஒன்றியத்தில் மாவரைக்கும் இயந்திரம் சமூக நலத்துறையின் மூலம் நமது அரசால் வழங்கப்பட்டு இருக்கிறது.

[பிற்பகல் 12-35

அங்கு மாவு அரைப்பதற்குக் காசுவாங்குகிறார்கள். ஆனால் அந்த நிறுவனம் ஏற்படுத்தப்பட்டதும், அதனுடைய பராமரிப்பும், மற்ற அனைத்தும், நமது அரசால் ஏற்று நடத்தப்பட்டு வருகிறது. அதே நேரத்தில் மாவு அரைப்பதற்கு 5 காசு, 10 காசு என்று வாங்குவது ஒரு தேவையற்ற திட்டம். எனவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இதனைக் கண்காணித்து, சுத்தமாக அந்த மலைவாழ் மக்கள் பயனடையும் வகையில் இலவசமாக, அரிசியையும், மாவையும் அரைத்துக் கொடுக்கும் திட்டத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று, மலைவாழ் மக்கள் பயனடையும் வகையிலும் அனைத்துக் கிராமப் பகுதி மக்கள் பயனடையும் வகையிலும், ஒவ்வொரு கிராமத்திலும் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள பால் கூட்டுறவுச் சங்கத்தைப் போல், மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மகளிர் மூலம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தைப் புதிதாக ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு இவ்வளவு நேரம் இந்த சமூக நலத்துறையின் மானியக் கோரிக்கைக் கொள்கை விளக்கக் குறிப்புகளின் மீது பேச வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. சா. பன்னீர்செல்வம்.

திரு. சா. பன்னீர்செல்வம் : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமூக நலம் மற்றும் சத்துணவுத் துறையின் மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பினை அளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைச் சொல்லி, ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

இந்த நாட்டிலே இருக்கின்ற, வளர்கின்ற எதிர்கால சமுதாயம், நல்ல அறிவு வளர்ச்சி பெற்ற சமுதாய மாக மலர வேண்டுமென்ற எண்ணத்திலே இந்தச் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அந்த வகையிலே அன்றைய முன்னாள் இந்தியப் பிரதமர் நேருஜி அவர்கள்

The students are the backbcne of the ccuntry ,
The children are the bzckbone cf the ccuntry,

என்று சொல்லியிருக்கிறார்கள். அவருடைய எண்ணம் நிறைவேற வேண்டுமென்ற வகையில் நம்முடைய முன்னாள் முதல்வர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் இந்தச் சீரிய திட்டத்திற்குப் பல கோடி ரூபாய் செலவு செய்து, இதை நல்ல முறையிலே இன்றைய தினம் வரை நடத்தி வருகின்றார்கள். ஆனால், அந்தத் திட்டமானது, ஏழை மாணவர்களுக்குச் சத்துணவு போடுகின்ற வகையிலே செயல்பட்டாலும், அங்கே அவர்களுக்குக் கல்வி முறையான அளவிலே போதிக்கப்படவில்லை என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். சத்துணவு அமைப்பாளர்கள் அங்கே இருக்கிறார்கள் என்று சொன்னால் அவர்கள் கல்வியையும் புகட்ட வேண்டுமென்று இருக்கிறது. ஆனால் அப்படிப்பட்ட ஒரு நிலை இன்றைக்கு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அவர்களுடைய வேலை, அங்கே அரிசியையும், மற்ற பொருட்களையும் கொடுத்துவிட்டுச் செல்வதுதான் என்பதைப் பல்வேறு இடங்களிலேயும் என்னுடைய தொகுதியிலேயும் பார்க்கின்ற நேரத்திலே காண்கின்றேன். எனவே மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் அவர்கள், அவர்களுக்கு



ஒரு கட்டளையாகக் கூடப் பிறப்பித்து உடனடியாக அங்கே அவர்களுக்குக் கல்வி கற்பித்து அந்த மாணவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, அங்கே சத்துணவுப் பணியிலே வேலை செய்கின்ற அந்த அமைப்பாளர்களும், மற்ற பணியாளர்களும் பெறுகின்ற ஊதியம் போதுமா என்று சொன்னால் கண்டிப்பாக அது போதாது என்றுதான் நான் நினைக்கிறேன். அவர்கள் அப்படிக் குறைந்த ஊதியத்தைப் பெறுகின்ற காரணத்தினால் அங்கே பல்வேறு தவறுகள் செய்வதற்கு இடமேற்படுகிறது என்ற வகையிலே, அதைக் களைகின்ற வகையிலே, இந்த அரசு உடனடியாக அவர்களுடைய ஊதியத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு அந்தப் பணி செய்கின்ற நேரத்திலே அவர்களுக்கு வார விடுமுறை ஒருநாள் அளித்தால் மிக நன்றாக இருக்கும் என்பதையும் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்கிறேன்.

சத்துணவுக் கூடங்களிலே, எல்லாம் இன்றைய தினம் என்னுடைய தொகுதியிலே மட்டுமல்ல, பல்வேறு தொகுதிகளிலேயும் கூட, நான் கேள்விப்பட்டவகையிலே அந்தச் சத்துணவுக் கூடங்களில் சரியான முறையிலே சமையல் கூடங்கள் இல்லாமல் இருக்கின்றன. எனவே, அந்த சத்துணவுக் கூடங்களில் சமையல் கூடங்களை ஏற்படுத்தி, அவைகள் சுகாதார- நிலையிலே இருப்பதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ள விழைகிறேன்.

பிற்பகல் 12-40

அதோடு அங்கே பாத்திரங்களும் மிகக் குறைவாக இருக்கிறது. அதனால் அங்கே வெளியே வைத்து அவர்கள் சமையல் செய்கிறபோது அங்கே மரத்தடியில் வைத்து அவர்கள் சமையல் செய்கிறபோது பல்லிகள் விழுகிற நிலை கூட இருந்துகொண்டிருக்கிறது. எனவே அந்த பாத்திரங்கள் கிடைக்காமல் இருக்கிற அந்தச் சத்துணவுக் கூடங்களுக்கு உடனடியாக புதிய பாத்திரங்கள் வழங்கவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக இங்கே பல்வேறு திட்டங்களை இந்த அரசானது மிகச்சிறப்பான முறையில் செயல்படுத்துவதற்கான வகையில் இந்த மானியக்கோரிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இருந்தாலும் ரூபாய் 6,400-க்குக் குறைவாக ஆண்டு வருமானம் உள்ள விதவைகளின் குழந்தைகளுக்கு புத்தகங்கள் மற்றும் நோட்டுப் புத்தகங்கள் வழங்க ஆரம்பக் கல்வியிலிருந்து மேல்

[திரு. சா. பன்னீர்செல்வம்] [1991 செப்டம்பர் 20

நிலைப்பள்ளி வரையில் பல வகைகளில் அரசு உதவி செய்கிறது. இந்த நிதியுதவியை கல்லூரிப் படிப்பு வரையில் நீட்டிக்க அரசு ஆணை பிறப்பிக்க வேண்டும். மேற்கூறிய நிதியுதவியை விதவை களின் குழந்தைகளுக்கு மட்டுமல்லாமல் கணவனால் கைவிடப் பட்ட பெண்களின் குழந்தைகளுக்கும் அரசு வழங்கிட வேண்டும். விதவைகளின் பெண்களுக்குத் திருமணச் செலவுக்கு அரசு ரூபாய் 2000 நிதியுதவி செய்கிறது. இதை கணவனால் கைவிடப் பட்ட பெண்களுக்கும் நீட்டிக்க வேண்டும். மகளிர் மன்றங்கள் தற்சமயம் ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் 30 என்ற அளவில் உள் ளது. இந்த 30 என்ற அளவில் இருக்கிற இந்த மகளிர் மன் றங்கள் நன்றாகச் செயல்படுகின்றனவா என்று சொன்னால் கண் டிப்பாக இல்லை என்பதைத்தான் நான் சொல்வேன். அவர் களுக்கு ஒரு அமைப்பை ஏற்படுத்தி அங்கே மாவட்ட அதிகாரி யிடத்திலே சென்று அவர்களுடைய கோரிக்கையைச் சொல்லி, செய்யவேண்டும் என்று சொன்னால் அந்த அதிகாரிகள் உட னடியாக அதைச் செய்யாமல் காலம் கடத்தி அந்த மகளிர் அமைப்புக்கே தொந்தரவு ஏற்படுகிற ஒரு நிலையில் அவர்கள் அந்தப் பணியைச் செய்ய முடியாமல் தத்தளித்துக் கொண்டிருக் கிறார்கள் என்பதை எண்ணி அரசு உடனடியாக அந்த மகளிர் மன்றங்கள் எங்கெங்கு இருக்கின்றனவோ அந்த இடங்களுக்கு அந்த மாவட்ட அதிகாரிகள் சென்று அவர்களுடைய பிரச்சினை களைத் தீர்த்து வைத்தால் அந்த அமைப்பானது மிகச் சிறப் பான முறையில் இருக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு முதியோர் உதவித் தொகை என்ற வகையில் 2,58,385 பேருக்கு பண அஞ்சல் மூலம் வழங்கப்படுகிறது. அதற்கான செலவை தமிழக அரசு ஏற்றுக்கொள்கிறது. அவ் வாறு பண அஞ்சலுக்காக அரசு செலவிடும் தொகையை மத்திய அரசு ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று தமிழக அரசு மத்திய அரசை வற்புறுத்தி ஏற்றுக்கொள்ளச் செய்ய வேண்டும்.

அதோடு தட்டெழுத்துப் பயிற்சி பெற்றுள்ள ஏழைப் பெண் களுக்கு தட்டச்சு இயந்திரம் வழங்கிட அரசு நிதியுதவி செய்து அவர்கள் வட்டாட்சியர் அலுவலகம், பத்திரப்பதிவாளர் அலு வலகம் போன்ற இடங்களில் அமர்ந்து பணியாற்ற அனுமதிக்க வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அடுத்து கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்களுக்கு உதவித் தொகை வழங்குவதற்கு வயது வரம்பு குறைந்தபட்சம் 30 என அரசு அறிவித்துள்ளதை மாற்றி கணவனால் கைவிடப் பட்ட ஆதரவற்ற எல்லா பெண்களுக்கும் உதவித் தொகை வழங் கிட வேண்டும். முன்பு அ.தி.மு.க. அரசு முதியோர் உதவித் தொகை பெறுபவர்களுக்கு ஒவ்வொரு வாரமும் அரிசி வழங் கியது. அதை அடுத்து வந்த தி.மு.க. அரசு அதை நிறுத்தி விட்டது. அப்படி நிறுத்தப்பட்டுவிட்ட அந்தத் திட்டத்தைத்



[1991 செப்டம்பர் 20] [திரு. சா. பன்னீர்செல்வம்]

தற்போது அமலாக்கியிருக்கும் நமது மரியாதைக்குரிய முதல் வர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஊனமுற்றவர்கள் ஒவ்வொரு தொகுதியிலும் குறைந்தபட்சம் 25 பேரி லிருந்து 50 பேர் இருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். அத்தனை ஊனமுற்றவர்களையும் கணக்கெடுத்து அவர்கள் அத்தனை பேர்களுக்கும் எந்தெந்தக் கருவிகள் கிடைக்க வேண்டுமோ, அவர்களுக்கு எப்படிப்பட்ட உதவிகளைச் செய்ய முடியுமோ அந்த வகையில் புரட்சித் தலைவி அவர் களுடைய ஆட்சி அவர்களுக்குச் செய்து கொடுக்கவேண்டும் என்று எனது பணிவான வேண்டுகோளை வைத்து இந்த ஆட்சி பல்வேறு நலத்திட்டங்களைச் செய்துகொண்டிருந்தாலும், ஏழைகளுக்கும் முதியோர்களுக்கும் மேலும் உதவ வேண்டும். இன்னும் கிராமத் தில் இருக்கின்ற முதியோர்கள் எல்லாம் மிகவும் வறுமையில் இருக்கிறார்கள். அவர்கள் கவனிப்பார் அற்றுக் கிடக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கையான மாதம் அவர்களுக்கு 50 ரூபாய் வழங்கவேண்டும் என்ற அளவில் வட்டாட்சியர் அலு வலகத்தில் பல கோரிக்கை மனுக்கள் தேங்கிக் கிடக்கின்றன. அந்த மனுக்களை எல்லாம் பரிசீலனை செய்து உடனடியாக விதவைகளுக்கும் ஏழைகளுக்கும், ஆதரவற்ற முதியோர் களுக்கும் எல்லா வகையான உதவிகளையும் செய்கிற வகையில் அந்த பெட்டிஷன்களைப் பரிசீலனை செய்து அந்த உதவிகள் அவர்களுக்குக் கிடைப்பதற்கு வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டு இந்த அளவில் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி வணக்கம்.

பிற்பகல் 12-45

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னைத் தமிழுக்கும் என்னை ஆளாக்கிய புரட்சித் தலைவிக்கும் முதலில் தலை வணங்குகின் றேன். இந்த அவையில் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் தனக்கு வாக்கு அளித்த தன் தொகுதி வாழ் மக்களுக்கு முதலில் நன்றியைத் தெரிவித்தார்கள். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் எனக்கு என்று ஒரு வாக்குச்சீட்டுக்கூட இல்லாத தொகுதியில் 81 ஆயிரம் வாக்குகளை பெற்றுத் தந்த புரட்சித் தலைவியின் புகழுக்கு மட்டுமே என் நெஞ் சார்ந்த நன்றிகளைக் காணிக்கையாக்கக் கடமைப்பட்டு இருக் கிறேன்.

தமிழக மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் தனிப் பெருந் தலைவியாக தேர்ந்தெடுக்கப்பட்ட நமது தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள், தாய்மார்களின் பிரதி

நிதியாக இந்தியத் துணைக்கண்டமே வியந்து போற்றும் வகையில் நல்லாட்சி நடத்தி வருகிறார்கள். அவர்களின் சீரிய தலைமையில் இந்த ஆட்சி பெண்களின் நலனுக்காகவும், குழந்தைகள் நலனுக்காகவும், சமூகத்தில் நலிவடைந்த இதர பிரிவினர்களுக்காகவும் அவர்களின் நல் வாழ்வுக்கு உத்தரவாதம் அளிக்கும் வகையில் பல திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது.

தமிழகத்தை பெருமைக்குரிய நிலைக்குக் கொண்டு வந்து, தமிழக மக்களின் ஒளி மயமான வாழ்விற்கு வழிகோல வேண்டும் என்னும் உயரிய சிந்தனையை இதயத்திலே கொண்டு செங்கோல் ஓச்சுகின்ற எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் சீரிய தலைமையின் கீழ், வழிகாட்டுதலின் கீழ் சேவை செய்யும் வாய்ப்பு பெற்றமை என் வாழ்நாளில் பெறற்கரிய பேராகக் கருதி, இந்த மானியக் கோரிக்கைகளை அவர் பொற்பாதங்களில் தலை வைத்து வணங்கி இந்த அவைக்குச் சமர்ப்பிக்கிறேன்.

சமுதாயத்தில் சரி பாதி எண்ணிக்கையில் உள்ள பெண்கள் எவ்வளவுதான் அறிவும், ஆற்றலும் பெற்றிருந்தாலும் அவர்களில் பலர் இன்னும் கொடுமைப்படுத்தப்படுவதும், அடிமைகளாக நடத்தப்படுவதும் தொடர்ந்து வருகிறது. இந்த நிலை மாறி அவர்கள் ஆண்களுக்குச் சமமாக வாழ்க்கையில் முன்னேறுவதும், சட்டங்கள் அளிக்கும் சம உரிமைகளைப் பெறச் செய்வதும், கல்வி அறிவு, வேலை வாய்ப்பு ஆகியவற்றில் முன்னுரிமை பெறச் செய்வதும், தமிழக முதல்வர் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களால் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. சட்டமன்ற சரித்திரத்தின் ஒரு கருப்பு நாள். தன்னந்தனியாக இந்த பேரவையில் கொடுமைக்குள்ளான நாள், என் உயிரினும் இனிய தாய், தமிழ் இனத்தின் தவப்புதல்வி என் இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு 30 மகளிரை சட்டமன்ற உறுப்பினரகளாக தன்னோடு அழைத்து வந்து அமரச் செய்திருப்பது அவர்கள் பெண்ணுரிமையை நிலை நாட்ட எடுத்த முதல் நடவடிக்கையாகும். (பலத்த மேசையைத் தட்டும் ஒலி) இதை நாடு போற்றுகிறது. நல்லவர்கள் வரவேற்கிறார்கள்.

சமூக நலத்துறையைப் பொறுத்த மட்டில் மகளிர் நலம், குழந்தைகள் நலம், உடல் ஊனமுற்றோர் நலம் என்று மூன்று பிரிவுகளாக பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. குழந்தைகள் நலனில் ஒரு மாபெரும் திட்டமாகப் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் விளங்கி வருகிறது. சமுதாயத்தில் வழி தவறிய மகளிர், சிறுவர்கள் ஆகியோர் நலனைப் பாதுகாக்க் சமூக பாதுகாப்பு துறை செயல்படுகிறது. பெண்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கித் தந்து, அவர்களை, பொருளாதார அடிப்படையில் மேம்பாடு அடையச் செய்



வதற்கு, தமிழ்நாடு மகளிர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் செயல்படுகிறது. இப்படி மூன்று அங்கங்களாகச் செயல்படும் இந்தத் துறையின் நடவடிக்கைகளையும், நிதி நிலைமையையும் சுருக்கமாக இந்த அவையிலே எடுத்துச் சொல்வது என் கடமை என்று கருதுகிறேன்.

மகளிர் நலம்.

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டுமறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை காண்"

என்ற தேசிய கவி பாரதியாரின் கனவை நனவாக்குவதற்காக, ஆதரவற்ற, நலிவடைந்த மகளிர்க்கு அவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தும் வகையில், வேலைவாய்ப்பு வசதிகளை உருவாக்க சில திட்டங்கள் மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்திலே மேம்படுத்தப்பட்டிருக்கின்றன.

பிற்பகல் 12.50

தையல் கூட்டுறவுச் சங்கங்கள் — தமிழ்நாடு முழுவதும் உள்ள பள்ளிகளில் சத்துணவு பெறும் குழந்தைகளுக்கு இலவச சீருடை வழங்குகின்ற திட்டம் மூலமாக 74 மகளிர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் வேலை வாய்ப்பைப் பெற்றிருக்கிற கிராமப்புற ஏழைப் பெண்கள் 20,000 பேர்களுக்கு இந்த ஆண்டு தையல் கூலியாக மட்டும் ரூ. 4.64 கோடியை மாண்புமிகு இதய தெய்வம் தாய் உள்ளம் படைத்த புரட்சித் தலைவி அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

இலவச காலணி வழங்கும் திட்டம்—சத்துணவுத் திட்டம் மூலம் பயன் பெறும் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு 39 மகளிர் காலணி கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக இந்த ஆண்டுக்கு இத்துறை மூலம் சுமார் 3 இலட்சம் காலணிகள் தயாரிக்க வேண்டும்.

கூட்டுறவுச் சங்கங்கள்—குழந்தைகள் நலத் திட்டங்களுக்கு சத்து மாவு தயாரிக்க 22 கூட்டுறவுச் சங்கங்களும், சாக்குக் கட்டி, எழுதுபொருள் பதிவேடுகள், கயிறு தயாரித்தல் போன்ற தொழில்கள் தொடர்பாக 34 கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்றன. இந்த ஆண்டு 3,600 பெண்கள் வேலை வாய்ப்புப் பெறுகின்றனர். கிராமப்புற பெண்களுக்கு பலவாறு கைத் தொழில்களில் பயிற்சி அளிக்க 58, பயிற்சி நிலையங்கள் துணை பெற்று வருகின்றன. இதில் ஆண்டுதோறும் [illegible] பெண்கள் பயிற்சி பெறுகிறார்கள்.

[திருமதி இரா. இந்திரகுமாரி] [1991 செப்டம்பர் 20

" வயிற்றுக்குச் சோறிட வேண்டும்
இங்கு வாழும் மனிதர்க்கு எல்லாம்
பயிற்றிப் பல கல்வி தந்து
இப்பாரை உயர்த்திடல் வேண்டும் "

என்ற அமரக் கவி பாரதியின் கனவை நனவாக்கும் வண்ணம் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் குழந்தைகள் நலன், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டங்களுக்குச் செயல் வடிவம் தந்துள்ளார்கள். சமுதாயத்தில் நலிவுற்ற குழந்தைகள், கருவுற்ற மகளிர் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு ஊட்டச் சத்து மற்றும் அது குறைவதால் உண்டாகும் நோய்களை சமாளிப்பதற்காக மத்திய அரசு உதவியுடன் ஒருங்கிணைந்த முறையில் வடிவமைக்கப்பட்ட ஒரு பணியே இத்திட்டமாகும்.

பெண்களின் நலனில் அதிக அக்கறை கொண்டிருக்கின்ற இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றவுடன் இத்திட்டம் 1-8-1991 அன்று முதல் மேலும் 30 பகுதிகளுக்கு விரிவுபடுத்தப்பட்டு உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

நகர்ப்புறங்களில் 42-ம், கிராமப் புறங்களில் 67-ம், மலைப்புறங்களில் 2-ம் ஆக 111 பகுதிகளில் 10,047 மையங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் வாயிலாக 2 வயதுக்குட்பட்ட 1,30,178 குழந்தைகளும், 79,785 கர்ப்பிணிப் மற்றும் பாலூட்டும் தாய்மார்களும், 2 வயதிலிருந்து 5 வயதுக்குட்பட்ட 1,93,760 குழந்தைகளும் பயனடைகின்றனர். 1991-92 ஆம் ஆண்டுக்கு தாய்மார்களின் நலனில் அக்கறைக் கொண்டிருக்கிற மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் இந்தத் திட்டத்திற்கு ரூ. 20 கோடி நிதி ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டத்தின் கொள்கைக் குறிப்பு. குழந்தைகள் ஊட்டச்சத்து திட்டங்களை அமல்படுத்துவதில் இதய தெய்வம் புரட்சித் தலைவியின் ஆட்சி இந்திய துணைக் கண்டத்திலேயே ஒரு முன்னோடியாகவும், வழிக்காட்டியாகவும் விளங்குகிறது என்று சொன்னால் அது மிகையாக இருக்க முடியாது. உலக வங்கி உதவியுடன் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம்-1, தமிழ்நாட்டில் ஏற்கனவே 6 மாவட்டங்களில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இத்திட்டத்தை பிற மாவட்டங்களிலும் செயல்படுத்த இதய தெய்வம் புரட்சித் தலைவி எண்ணுவதால் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம்-2-க்கும் உலக வங்கி உதவ முன்வந்து திட்டம்-2 1991-ல் துவக்கப்பட்டிருக்கிறது.



1991 செப்டம்பர் 20] [திருமதி இரா. இந்திரகுமாரி]

இத்திட்டத்தில் தாய்நலம் மற்றும் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துவதன் மூலம் கர்ப்பம் தரித்த நாளிலிருந்தே ஊட்டச் சத்து நிலையை உயர்த்தி குழந்தைகள் உயிர் வாழ்தல் மற்றும் குழந்தை வளர்ச்சியினை உறுதிப்படுத்துதலாகும்.

தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம்-2 1991-லிருந்து 1996 வரை ஐந்து கட்டங்களாக செயல்படுத்தப்பட உள்ளது. இதற்கான மொத்த கூடுதல் ஒதுக்கீடு ரூ. 321.34 கோடியாகும். இந்தத் திட்டத்தில் மொத்தம் 20,574 மையங்கள் ஏற்படுத்தப்பட உள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி).

ஆதரவற்ற குழந்தைகளுக்கு பராமரிப்பும், பாதுகாப்பும் வழங்கும் திட்டம். ஆதரவற்ற குழந்தைகளுக்கு மறு வாழ்வு அளித்து அவர்களை வாழ வைக்கும் நோக்கத்துடன் ஆதரவற்ற குழந்தைகள் இல்லம் நடத்தும் தனியார் தொண்டு நிறுவனங்களுக்கு இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் நிரம்ப உதவிகளை வழங்கியிருக்கிறார்கள்.

பிற்பகல் 1-00

இந்த தன்னிச்சை நிறுவனங்களுக்காகும் செலவினத்தில் 90 சதவிகிதத்தை அரசும், 10 சதவிகிதத்தை தன்னிச்சை நிறுவனங்களும் ஏற்றுக்கொள்ளுகின்றன. இதன்படி 1—4—1979-க்கு முன் துவக்கப்பட்ட இல்லங்களின் செலவினங்களில் 90 சதவிகிதம் மாநில அரசே ஏற்றுக்கொள்ளுகிறது. 1—4—1979-க்குப் பின்னர் துவங்கப்பட்ட இவ்வில்லங்களின் செலவினம் 90 சதவிகிதத்தில் பாதியை மாநில அரசும் பாதியை மத்திய அரசும் ஏற்றுக் கொள்கிறது. 1—4—1990 முதல் இந்த உதவித் தொகை ஒரு குழந்தைக்கு 200 ரூபாய் என்று அளிக்கப்பட்டிருக்கிறது. 1991-92-க்கு இந்தத் திட்டத்திற்காக 293.93 இலட்சம் ஒதுக்கப் பட்டிருக்கிறது. பயனடைவோர் 169 தன்னிச்சை நிறுவனங்கள் மூலமாக 14,012 குழந்தைகள் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் மேன்மைபடுத்தப்படுகிறார்கள். (பலத்த மேசையைத் தட்டும் ஒலி.)

மாண்புமிகு புரட்சித் தலைவியின் ஆணைப்படி பெண்களுக்கு 30 சதவிகித வேலை வாய்ப்பு அளிப்பதையும் 5 ஆம் வகுப்புவரை பெண்களையே ஆசிரியைகளாக நியமிப்பதையும் கண்காணிப்பதற்கென சமூக நல இயக்குநர் அலுவலகத்தில் ஒரு தனிக் குழு நிறுவப்படும்.

மகளிர் பொருளாதாரத்தில் தன்னிறைவு பெற வேண்டுமென்ற குறிக்கோளுக்கேற்ப, கிராமப்புறங்களில் வாழும் ஏழைப் பெண்களை சிறு சிறு குழுக்களாக ஒருங்கிணைத்து ஒரு லட்சம் பேருக்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் சுய வேலை வாய்ப்பு கிடைக்கும் வகையில் திட்டம் ஒன்று

தயாரிக்கப்பட்டு நிறைவேற்றப்படும். இதனுடைய முதற் கட்டமாக மாண்புமிகு இதயதெய்வம், எங்கள்தாய், புரட்சித் தலைவி அவர்களின் தொகுதியான பர்கூர் தொகுதியில் 3 பெண்கள் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தி, பர்கூர் ஒன்றியத்தில் ஊறுகாய் செய்கின்ற சங்கத்தையும், மற்றொரு ஒன்றியத்தில் பனை ஓலையால் கைவினைப் பொருள்கள் செய்கின்ற சங்கத்தையும், ஊத்தங்கரை ஒன்றியத்தில் பொம்மைகள் செய்யும் சங்கத்தையும் அமைத்து, அவற்றின் நிதி உதவிக்காக, பர்கூர் தொகுதிக்கு 2.73 இலட்சம் ரூபாய் மகளிருக்காக அளிக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதன் மூலம் பர்கூர் தொகுதியில் 500-க்கும் மேற்பட்ட பெண்கள் வேலை வாய்ப்பு பெறுகிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆங்காங்கே சிறு வணிகத்தில் ஈடுபட்டுள்ள மகளிர், தனியாரிடம் பெரும் வட்டிக்குக் கடன் வாங்கி இன்னலுறுவதை நீக்க வேண்டுமென உறுதிபூண்ட தாயினும் இனிய தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் கூட்டுறவு மத்திய வங்கிகள் மூலம் அவர்களுக்குக் கடனுதவி அளிக்கும் சிறப்புத் திட்டமும் முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு உள்ளது. சமூக நலத் துறையின் கீழுள்ள மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் மட்டுமின்றி சிறு வணிகம் செய்யும் ஏழை மகளிர் பெரும்பாலானோர் இத்திட்டத்தின் கீழ் பயனடைவர்.

குழந்தைகள் நலம்—புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். சத்துணவுத் திட்டம். புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களால் 1982 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட இந்தத் திட்டம் இடையிலே தொய்வடைந்து பல குறைபாடுகள் ஏற்பட வாய்ப்பாகி விட்டது. குழந்தைகளின் ஆரோக்கியத்திற்கும், அறிவு ஆற்றல் வளர்ச்சிக்கும் உறுதுணையாக இந்த மையங்கள் அமையும்படி முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் நேரடி நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களால் உருவாக்கப்பட்ட இந்தச் சத்துணவுக் கூடங்களுக்கு முதல்வர் சத்துணவுக் கூடம் என்ற பெயர் இருந்ததால், அந்தப் பெயர் எம். ஜி. ஆர். அவர்கள் உருவாக்கிய பெயர் என்கின்ற காரணத்தால், முந்தைய ஆட்சி அதை நீக்கி, மாற்றம் செய்து, தமிழக அரசு சத்துணவுத் திட்டம் என்று பெயர் சூட்டியது. ஆனால் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். மீது மிகுந்த அன்பும், பாசமும் கொண்டிருக்கிற நம்முடைய இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக்கு வந்த உடனே, முந்தைய ஆட்சி செய்த சாகசங்களை மாற்றி, ''புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். சத்துணவுத் திட்டம்'' என்ற பெயர் மாற்றத்தை, சத்துணவு இலாக்காவின் முதல் கோப்பிலே கையெழுத்திட்டு, பெருமைப்படுத்தியிருக்கிறார்கள்.



மலிவு விலை மதுத் திட்டத்தினை நிறுத்தியதால் ஏற்பட்ட வருமான இழப்பையும் பொருட்படுத்தாமல் இந்த சத்துணவுத் திட்டத்திற்கு இந்த ஆண்டு 236 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டினை புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். சத்துணவுத் திட்டத்திற்கு செய்திருப்பது, முதலமைச்சர் அவர்கள் சத்துணவுத் திட்டத்தின் மீது கொண்டுள்ள ஆழ்ந்த பற்றையும், அவருடைய அன்பையும் வெளிப்படுத்துகிறது. மேலும் இந்த அவைக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தியைக் கூற விரும்புகிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் குழந்தைகள் நலனில் மிகுந்த அக்கறை கொண்டு, சத்துணவுக் கூடங்களில் வேலை செய்யும் சமையலர் மற்றும் ஆயாக்களின் உடல் நலத்தில் அக்கறை கொண்டு, அவர்கள் 6 மாதங்களுக்கு ஒரு முறை அரசு மருத்துவ மனைகளில் இனிமேல் இலவச மருத்துவப் பரிசோதனை செய்துகொள்ளவும், அவர்களுக்குத் தேவையான சிகிச்சை அளிக்க வேண்டுமென்றும் இன்றைய தினத்திலிருந்து புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 1-05

6 மாதத்திலே இருந்து 2 வயது வரையிலான குழந்தைகளை இத்திட்டத்தின் கீழ் கொண்டுவர புரட்சித் தலைவியின் ஆட்சியில் திட்டமிடப்பட்டுள்ளது. முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் குழந்தைகளின் நலன், கருவில் இருக்கும்போதே துவங்கப்பட்டு, அது தொடர்ந்து பள்ளிப் படிப்பை முடிக்கிற வரையில் தொடர்ந்து கவனிக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இதுவரை இது எந்த முதலமைச்சருடைய ஆட்சியிலும் இல்லையென்பதை தெளிவுபடுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன்.

சத்துணவு மையக் கூடங்கள் தற்போது தமிழ்நாடு முழுவதும் 67,800 கூடங்கள் செயல்படுகின்றன. இவையனைத்தும் 1982-83 ஆம் ஆண்டு முதல் ஏற்படுத்தப்பட்டவை. இடைக்காலத்தில் இவை சரிவர பராமரிக்கப்படாமல் தற்போது பெருமளவில் பழுதுபட்டு பயனற்றவையாகக் கிடக்கின்றன. கூரையில்லாதவை, சரியான தளம் இல்லாதவை, ஜன்னல் கதவுகள் இல்லாதவை, சுற்றுப்புறச் சூழல் மோசமடைந்தவை என இப்படி பல்வேறு நிலைகளில் கிடக்கின்றன. சத்துணவு மையங்கள் வெறும் சாப்பாட்டுக் கூடங்களாக இல்லாமல் அறிவு பூர்வமாக குழந்தைகளை ஆளாக்கும் நர்சரிப் பள்ளிகளாக மாற்றி அமைக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் முடிவெடுத்து, பதவியேற்றவுடனேயே அதற்கான திட்டங்களை மேற்கொண்டார்கள். குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு வந்த எண்ணெயின் அளவு முந்தைய ஆட்சியில் ஒரு கிராம் என்று குறைக்கப்பட்டதை உயர்த்தி மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் அதற்கான உத்தரவைப் பிறப்பித்திருக்கிறார்கள். இந்த ஒரு கிராம் எண்ணெயின் அளவிலிருந்து எந்த அளவுக்கு உயர்த்தலாம் என்பதற்கு உணவியல் வல்லுநர்களின் கருத்துக் கேட்கப்பட்டிருக்கிறது.

சத்துணவு மையக் கூடங்கள் முழுவதும் பழுது பார்க்கப்படவேண்டுமானால் இந்த ஆட்சிக்கு ரூ. 75 கோடி செலவாகும். தற்போதுள்ள நிதி நிலைமையில் இந்தப் பொறுப்பை அரசு ஏற்பது என்பது மிக சிரமமான ஒன்றாகும். அதற்காக இந்த அரசு இந்த முக்கியமானப் பிரச்சினையை தள்ளிப் போடுவதற்கு விரும்பவில்லை. எனவே மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் சிறப்பு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் சத்துணவு மையங்களுக்குப் புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கு இந்த ஆண்டு மனமுவந்து 5 கோடி ரூபாயை புரட்சித் தலைவி அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். இத்துடன் கூடங்களை பராமரிப்பதற்காகவும் ஒரு கோடி ரூபாயும், சமையல் பாத்திரங்களை வாங்குவதற்கு ஒரு கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். இந்த மையங்களை உடனடியாக சீர் படுத்த வேண்டுமென்ற புனிதமான நோக்கத்தைக் கொண்டிருக்கிற மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் அறிவுரையின்படி ஆங்காங்கே தொழில் நிறுவனங்கள், தொண்டுள்ளம் படைத்தவர்கள், பணக்காரப் பெருமக்கள் ஆகியோரிடம் இந்த மையங்களில் பெரும்பாலானவற்றை தத்தெடுத்து பராமரிக்கும் பணியை மட்டும் அவர்களிடம் ஒப்படைக்கவும் முடிவு செய்தோம். அதன்படி 9 மாவட்டங்களில் நானே நேரடியாகச் சென்று அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தினேன். மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தில் தொழில் வளர வேண்டுமென்ற அடிப்படையில் தொழில் அதிபர்களுக்கு செய்து வருகின்ற உதவிகளின் காரணமாக, புரட்சித் தலைவியின் மீது தொழிலதிபர்கள் அளவுகடந்த மரியாதை, பாசத்தின் காரணமாகவும் அன்பின் காரணமாகவும் சத்துணவு இலாக்கா ஏற்றுள்ள இந்த பெரும் முயற்சிக்கு பெருவாரியான அளவில் தொழில் அதிபர்கள் முன்வந்து ஆதரவு கொடுத்தார்கள். இந்தக் கூட்டங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் முன்னிலையில் ஆங்காங்கே நடைபெற்றன. அதனுடைய விளைவாக செங்கை–எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் தொழில் நிறுவனங்கள் 74 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் பழுது பார்க்க ஒப்புக்கொண்டு பணிகள் இன்றைக்கு துவங்கப்பட்டுள்ளன. நெல்லை-கட்டபொம்மன் மாவட்டத்தில் ரூ. 2,80,000-க்கு ஏற்றுக்கொண்டு பணிகள் துவங்கப்பட்டிருக்கின்றன. வ. உ. சி. மாவட்டத்தில் ரூ. 26,19,000-க்கு தொழில் அதிபர்கள் ஏற்றுக்கொண்டு பணிகளைத் துவக்கியிருக்கிறார்கள். சேலம் மாவட்டத்தில் ரூ. 14,67,000-க்கு ஒப்புதல் அளித்து பணிகளை துவக்கியிருக்கிறார்கள். திருச்சி மாவட்டத்தில் 45 லட்ச ரூபாய்க்கு பணிகளை ஏற்றுக்கொண்டு பணிகளை இன்றைக்கு துவக்கியிருக்கிறார்கள். திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டத்தில் ரூ. 15 லட்சத்திற்கு ஒப்புதல் அளித்து, இன்றைக்கு அங்கேயும் பணிகள் துவங்கப்பட்டுவிட்டன. வட ஆற்காடு—அம்பேத்கர் மாவட்டத்தில் ரூ. 41,20,000-க்கு ஒப்புக்கொண்டு பணிகளைத் துவக்கியிருக்கிறார்கள். தர்மபுரி மாவட்டத்தில் ரூ. 63,25,000-க்கு ஒப்புக்கொண்டு வேலைகள் துவங்கப்பட்டு விட்டன. தென்னாற்காடு





மாவட்டத்தில் ரூ. 25 லட்சத்திற்கு ஒப்புதல் அளித்து, அங்கேயும் பணிகள் துவங்கப்பட்டிருக்கின்றன. மீதியுள்ள மாவட்டங்களில் விரைவில் பேச்சுவார்த்தை நடத்தி சத்துணவுக் கூடங்களை பழுது பார்க்கும் பணியைத் துவக்கிவிடுவோம். இவையனைத்தும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவியின் பிறந்த நாள் பிப்ரவரி 24-ம் நாளுக்குள் அனைத்து சத்துணவுக் கூடங்களும் பழுது பார்க்கின்ற பணி முழுவதும் பூர்த்தியாகிவிடும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 1-10

இதுவரையில் பழுது பார்க்க தொழில் அதிபர்கள் எடுத்துக்கொண்ட பணிகளின் மொத்தத் தொகை ரூ.3 கோடியே 7 இலட்சத்து 11 ஆயிரம் ரூபாய் ஆகும். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் பேசுகிறபொழுது எல்லோரும் எங்கள் தொகுதிக்கு இது வேண்டும், அது வேண்டும் என்று கேட்கிறார்களேயொழிய வருவாய் வரக்கூடிய வழியைச் சொல்லவில்லை என்று ஆதங்கப்பட்டார்கள். ஆனால் சமூகநலத் துறை இப்போதைக்கு சத்துணவுக் கூடங்களைப் பழுது பார்ப்பதில் 3 கோடியே 7 இலட்சத்து 11 ஆயிரம் ரூபாயை தங்களுக்கு மிச்சப்படுத்தி இருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்து கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). ஆகவே கொடுத்த பணத்தை திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டாம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, ஊனமுற்றோர் நலன். மலிவு விலையில் சாராயத்தை அறவே ஒழித்ததன் மூலமாக அரசுக்கு 328 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டு இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் ஊனமுற்றோர் நலனுக்காகவும் உயர்வுக்காகவும் மாண்புமிகு தமிழக முதல்வர், இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்று இந்த நாடே ஆச்சரியத்தோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்த வேளையில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவியினுடைய கருணை உள்ளம் ஊனமுற்றோர் நலனுக்காகவும் உயர்வுக்காகவும் தனிக் கவனத்தைச் செலுத்தி, முந்தைய ஆட்சியாளர்கள் 439 இலட்சம் ரூபாய் இதற்கு ஒதுக்கினார்கள் என்றால், எங்கள் தாய், இதய தெய்வம், புரட்சித் தலைவி இந்த நிதிநிலை நெருக்கடியிலும் 542 இலட்சங்களை இதற்காக ஒதுக்கி இருக்கிறார்கள்.(மேசையைத்தட்டும் ஒலி) 1989-90 ஆண்டை விட ரூபாய் 103 இலட்சங்கள் அதிகப்படுத்தி இருக்கிறார்கள் என்றால் உடல் ஊனமுற்றவர்கள் மீது புரட்சித் தலைவி அவர்கள் கொண்டிருக்கிற பரிவு, கருணையை இந்த நாட்டிலே வேறு யார் கொள்ள முடியும்?

[திருமதி இரா. இந்திரகுமாரி] [1991 செப்டம்பர் 20

புதிய அரசு பொறுப்பேற்ற 3 மாத காலத்திற்குள்ளாக பு புதிய திட்டங்களை புரட்சித் தலைவி அவர்கள் உருவாக்கி இரு கிறார்கள். முதியோர்களுக்காக புரட்சித் தலைவி அவர்கள் தேர் தல் அறிக்கையில் தெரிவித்தபடி முதல் கட்டமாக இந்த ஆண்டு 5 இடங்களில் முதியோர் இல்லங்களைத் துவக்க இருக்கிறார்கள். முதியோர் உதவித் தொகை பெறுபவர்களுக்கு இடையிலே நிறுத்தப்பட்டு இருந்த வாரம்தோறும் 1 கிலோ அரிசி மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவியின் ஆட்சியில் திரும்ப வழங்கப் படும். (மேசையைத் தட்டும் ஒலி) சத்துணவு பெறும் முதியவர் களுக்கு மட்டும் வாரத்திற்கு ½ கிலோ அரிசி வழங்கப்படும்.

ஊனமுற்றோருக்கு வழங்கப்பட்டு வந்த இலவச பயணச் சலுகைகளை இலகுவாகவும் விரிவாகவும் அரசு ஆணை எண். 2403, நாள் 20—8—1991-ன் படி ஊனமுற்றோருக்கு கீழ்க் கண்ட இலவச பயணச் சலுகை புதிதாக வழங்கப்பட்டு வருகிறது. கை கால் ஊனமுற்றவர்கள் மற்றும் காது கேளாதவர்களுக்கு பள்ளி, மருத்துவமனை சென்று திரும்புவதற்கு மட்டுமே இந்தச் சலுகைகள் ஏற்கெனவே இருந்த திராவிட முன்னேற்றக் கழகத் தினுடைய ஆட்சியில் வழங்கப்பட்டு வந்தது. ஆனால் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் இந்த இலவச பயணச் சலுகையை இனிகலூல்ரிபயிற்சி நிலையம் சென்று திரும்புவதற்கும் நீட்டித்து இருக்கிறார்கள். 15 வயதுக்கு உட்பட்டவர்கள் மட்டுமே பெற்று வந்த இந்த சலுகை 20 வயது வரை நீட்டிக்கப்பட்டு இருக்கிறது. இதன் மூலமாக பள்ளி, மருத்துவமனைக்குச் சென்று திரும்ப மட்டுமே அளிக்கப்பட்ட இலவசப் பயணச் சலுகை, பணி புரியும் இடங்களுக்கு சென்று திரும்புவதற்கும் நீட்டிக்கப்பட்டு இருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி).

மன வளர்ச்சி குன்றியோர்களுக்கான 23 நிறுவனங்களில் கல்வி பயிலும் குழந்தைகளுக்கு மட்டும் அளிக்கப்பட்ட சலுகை சமூக நலத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து நிறுவனங்களுக்கும் கல்வி பயிற்சியில் பணிபுரிகின்ற மன வளர்ச்சி குன்றியோர் அனை வருக்கும் இது நீட்டிக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

இலவச பயணச் சலுகை பெறுவதற்கு ஆண்டு தோறும் மருத்துவச் சான்றிதழ்களைக் கொடுக்க வேண்டிய அவசிய இல்லை, சமூகநலத் துறை வழங்கும் அடையாள அட்டையிலுள் ஊனத்தின் தன்மை அளவு பற்றிய மருத்துவ அலுவலரின் சான்றி தழ்களை போக்குவரத்துத் துறையில் கொண்டுபோய் கொடுத் தால் இனிமேல் இலவச பயணச் சலுகை வழங்கப்படும் என்பதை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவியின் ஆட்சியில் எளிதாக்கி இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). இந்தப் புதிய ஆணை யால் கூடுதலாக ஊனமுற்றவர்கள் 5 ஆயிரம் பேர் பயனடை கிறார்கள். இதனால் அரசுக்கு 30 இலட்சம் கூடுதல் செலவா கிறது.



1991 செப்டம்பர் 20] [திருமதி இரா. இந்திரகுமாரி].

மன வளர்ச்சி குன்றியவர்களுக்கு உணவு, உடை, உறைவிடம் வசதியுடன் கல்வி வழங்கப்பட ஒரு புதிய நிலையம் தொடங்க இந்த அரசு திட்டம் தீட்டி இருக்கிறது. தமிழக அரசின் உதவி டன் தனியார் சேவை நிறுவனம் நடத்தும் இந்தத் திட்டத்திற்கு ஆண்டுச் செலவு ரூபாய் 2 இலட்சம் ஆகும். மாதம் 100 ரூபாய் வீதம் உதவித் தொகையை இந்த ஆண்டு 420-லிருந்து 1050 பேராக இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் உயர்த்தி இருக்கிறார்கள். இதனால் அரசுக்கு கூடுதல் செலவு 7 இலட்சத்து 56 ஆயிரம் ரூபாயாகும்.

மதுரை, தல்லாகுளத்தில் பார்வையற்றவர்களுக்காக அரசினர் பள்ளி கூடத்தைக் கட்டுவதற்கு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் இன்றைக்கு ஒதுக்கி இருக்கிற இடத்தில் 1500 சதுர அடி கூடத் தில் கட்டிடம் கட்ட வேண்டும். உத்தேச செலவினம் 3 இலட்சம் ரூபாய். இந்த நிதியாண்டில் மதுரை மக்களுக்கு பயன்பெறக்கூடிய அளவுக்கு, பார்வையற்றோர் பயன்பெறக்கூடிய வகையில் மேற் படி கட்டிடம் கட்டித் தர இதய தெய்வம் புரட்சித் தலைவி அரசு தீர்மானித்து இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 1-15.

பணிபுரியும் மகளிருக்கு 3 தங்கும் விடுதிகளை 1991-92 ஆம் ஆண்டில் 3 நிறுவனங்களுக்கு, பணிபுரியும் மகளிருக்கு வீடு கட்டு வதற்கு இதய தெய்வம் புரட்சித் தலைவி அரசு தலா 35 ஆயிரம் ரூபாய் வழங்க பகுதி 2 திட்டம் நிதி வாயிலாக கொண்டுவர விழை கிறது. மொத்த செலவு ரூ. 1.05 இலட்சம்.

அதைப்போல அனாதை சிறுவர்களுக்கு, பணிபுரியும் சிறுவர் களுக்கு நிவாரண மையங்களைத் தொடங்க இந்த அரசு 2½ இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது. அதைப்போல அனாதை சிறுவர்களுக்கு ஒரு பள்ளியில் — மொத்தம் 2 பள்ளி கள் — நெல்லை—கட்டபொம்மன் மாவட்டத்தில் ஒன்றும்; வடாற்காடு—அம்பேத்கர் மாவட்டத்தில் ஒன்றும் ஏற்படுத்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ரூ. 3.96 இலட்சத்தை இந்த ஆண்டு ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள் என்கிற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு அங்கீகாரம் பெற்று ஊனமுற்றவர்களுக்கு சேவை நிலையங்களை நடத்தும் சிறப்புப் பள்ளிகளுக்கு ஆசிரியர் பணி இடங்களை ஏற்படுத்துதல். இந்தப் பள்ளிகளுக்கு மொத்தம் தேவையான இடங்கள் 507, ஆனால் 378 பணியிடங்களே இது வரையில் அரசால் கொடுக்கப்பட்டிருந்தது. இந்தப் பணி யிடங்களை இந்தத் தனியார் பள்ளிகளுக்கு கொடுக்க வேண்டியது அவசியம் என்பதை உணர்ந்து, இந்த ஆண்டு நிதிநிலைமையும் கருத்திற்கொண்டு, இந்த ஆண்டு 30 பணியிடங்களை வழங்க

[திருமதி இரா. இந்திரகுமாரி] [1991 செப்டம்பர் 20

மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் மேலான கருணை உள்ளம் அனுமதி அளித்திருக்கிறது என்பதை இந்த அவைக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டத்தால் அரசுக்கு ஆண்டுதோறும் ரூ. 1.8 இலட்சம் கூடுதல் செலவினம் ஏற்படும்.

காதுகேளாதவர்களுக்கான அரசு பள்ளிகளில் உயர் வகுப்பினைத் துவக்குதல். சமூக நலத்துறையின்கீழ் இயங்கும் 10 காது கேளாதவர்களுக்கான பள்ளிகளில் 823 குழந்தைகள் பயிலுகிறார்கள். இவர்கள் 5-ஆம் வகுப்பு வரையிலும் ஒரு பள்ளியில் 8-ஆம் வகுப்பு வரையிலும், 2 பள்ளிகளில் 7-ஆம் வகுப்பு வரையிலும் இடமுள்ள காரணத்தால் அதோடு தங்களுடைய படிப்பை முடித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. இந்தத் திட்டத்தால் 50 பேர் பயன் பெறுவார்கள். ஆகவே அவர்கள் மேற்கொண்டு கல்வி பயில வேண்டுமென்ற அக்கறையோடு, கல்வித் துறையில் அதிக ஆர்வத்தைக் காட்டுகின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் சென்னை, சேலம், ஈரோடு, விருதுநகர், உதகை ஆகிய இடங்களில் உள்ள பள்ளிகளில் உயர் வகுப்பினைத் துவக்க திட்டமிட்டு இருக்கிறார்கள். 10-ஆம் வகுப்பு வரையில் இனி மேல் காது கேளாதவர்கள் இந்தப் பள்ளிகளில் படிக்க இயலும் என்பதை உருவாக்கி இருக்கிறார்கள். இதற்காக இந்த ஆண்டு ரூ. 2.03 இலட்சம் தொடர் செலவினமும், ரூ. 1.50 இலட்சம் தொடராச் செலவினமும் ஆகும்.

அதைப்போல 3 சக்கர வண்டிகள், சக்கர நாற்காலிகள், காது கேட்கும் கருவிகள், மடக்கும் ஊன்றுகோல்கள், கருப்பு கண்ணாடிகள் பெறுவோர் மொத்தம் எண்ணிக்கை 4,200. ஆனால் அதைக்காட்டிலும் அதிகமான விண்ணப்பங்கள் இன்றைக்கு அரசுக்கு வந்திருக்கிறது. இதற்கு முன்னால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இந்த விண்ணப்பங்கள் எல்லாம் வந்து, குறைவாகக் கொடுக்கப்பட்டு, நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்ற போது, இந்த விண்ணப்பங்கள் — திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியோடு சேர்த்து விண்ணப்பங்கள் நிரம்ப இருந்தது. இதற்காக சமூக நலத் துறையின் சார்பாக நாங்கள் ஒரு நடவடிக்கை எடுத்தோம். நம்மிடையே வந்திருக்கிற விண்ணப்பங்களை பரிவோடு கவனிப்பதற்காக, தமிழகத்தில் உள்ள கலைஞர்கள், சினிமாப்படதயாரிப்பாளர்கள், இயக்குநர்கள், இசை அமைப்பாளர்கள், ஆகியவர்களுக்கு கடிதம் எழுதி, அரசினுடைய நிதிநிலையைத் தெரிவித்து, உடல் ஊனமுற்றவர்களுக்கு இந்தப் பொருள்களை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டோம். அவர்கள் அதற்கிணங்க இந்தப் பொருள்களை சமூக நலத் துறைக்கு இன்றைக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். அதன் விளைவாக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கொடுக்க



1991 செப்டம்பர் 20] [திருமதி இரா. இந்திரகுமாரி]

முடியாத விண்ணப்பங்களையும் சேர்த்து, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய பிறந்த நாளான 24-ஆம் தேதி அனைத்து விண்ணப்பங்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) மூன்று சக்கர வண்டிகளும் மற்ற பொருள்களும் வழங்கப்படும். ஆகவே, புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே குறைபட்டுக்கொண்டதைப் போல எந்த விண்ணப்பமும் தேங்கி நிற்காது என்பதை நான் இந்த நேரத்தில் உறுதியாக தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

சமூகப் பாதுகாப்புத் துறையின்கீழ், ஆதரவற்ற, புறக்கணிக்கப்பட்ட சிறார்கள், குற்றமிழைத்த சிறார்கள் மற்றும் ஒழுக்க நெறி தவறிய, தவறும் வாய்ப்புள்ள ஆதரவற்ற பெண்கள் மற்றும் சிறுமியர் ஆகியோரின் பராமரிப்பு, கல்வி, தொழில் கல்வி மற்றும் மறுவாழ்வு ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பிற்பகல் 1.20

இவ்வாண்டில் புறக்கணிக்கப்பட்ட சிறார்களுக்காக ஒரு இல்லம், தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து, தர்மபுரி மாவட்டத்தில் துவக்கப்பட இருக்கிறது. நடப்பாண்டில் இத்துறைக்கு மேற்படி பணிகளுக்காக 3.36 கோடி ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இந்தச் சட்டமன்றத்தின் மரபுகளைக் காப்பாற்றி, ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர்களும், சட்டசபை விதிகளில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கு நம் அன்புத்தலைவி, இன்றைக்கு நமக்கு ஒரு முன்னோடியாகவும், வழிகாட்டியாகவும் விளங்கிக் கொண்டிருக்கிறார்கள். நாம் பேசுகிறபோது, ஒரு சிறிய தவறு வந்தாலும், அதைத் திருத்தி, இப்படிச் சொல்லக் கூடாது; இப்படித்தான் சொல்ல வேண்டும், சட்ட மன்றத்தில் இப்படித்தான் நடந்து கொள்ள வேண்டும் என்று சொல்லித் தருகிற அந்த உயரிய பாங்கு, உண்மை அன்பு (மேசையைத்தட்டும் ஒலி) அவர்கள் முதலமைச்சர் மட்டுமல்ல, எங்களின் தாய்; என்பதையும் அவர்கள் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் வழி நின்று, கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களுக்குப் பதில் அளிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் தே. குமாரதாஸ், மெ. ஆண்டி அம்பலம், ஆர். சிங்காரம், ஜி. பழனிசாமி, சோ. இராசாராமன், ப. ரங்கநாதன், டி. சுதர்சனம், என். பன்னீர்செல்வம், பி. வி. இராஜேந்திரன், எச். எம். ராஜு, மா. சுந்தரதாஸ், ரமணி நல்லதம்பி, ச. இராமச்சந்திரன் ஆகியோர், சத்துணவுக் கூடங்களைப் பராமரிப்பதற்கும், சத்துணவுக் கூடங்களைச் சீர் படுத்துவதற்கும், புதிய வேலை வாய்ப்பினைப் பெண்களுக்கு உருவாக்கித் தருவதற்கும், சத்துணவுக் கூடங்களில் ஊழல் நடக்காமல் பார்த்துக் கொள்வதற்கும், சத்துணவுக் கூடங்கள்

Y811,31 N91 N91.9.1 158376

[திருமதி இரா. இந்திரகுமாரி] [1991 செப்டம்பர் 20

சிறப்புற பணியாற்றுவதற்கும், கொண்டு வந்திருக்கிற வெட்டுத் தீர்மானங்கள் அனைத்திற்கும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தினுடைய உரையில் நான் விளக்கமாக என்னுடைய பதிலை அளித்திருக்கிறேன்.

மரியாதைக்குரிய மாண்புமிகு சட்டப்பேரவையினுடைய உறுப்பினர் ஞானசேகரன் அவர்களும், மரியாதைக்குரிய சட்டப் பேரவை உறுப்பினர் ரமணி நல்லதம்பி அவர்களும், சத்துணவுப் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டது, புரட்சித் தலைவியின் கவனத்தில் இல்லாமல் இல்லை. ஏன் என்றால், இந்தியத் துணைக் கண்டத்தில் இப்படிப்பட்ட கருணை உள்ளம் படைத்த முதலமைச்சர் வேறு எந்த மாநிலத்திற்கும் கிடைத்திருக்க மாட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

சத்துணவுத் திட்டத்தின் மீது அதிகப் பற்று கொண்டிருக்கிற புரட்சித் தலைவி அவர்கள், சத்துணவு ஊழியர்கள் மீதும் நிரம்ப பாசத்தையும் பற்றையும் வைத்திருக்கிறார்கள். நிச்சயமாக இந்தக் கோரிக்கைகளை எல்லாம், அவர்கள் முதலமைச்சராக இருக்கிற காலத்தில், பரிசீலிக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள், அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொள்வார்கள் என்று நான் மனதார நம்புகிறேன். புரட்சித் தலைவியின் ஆட்சிக் காலத்தில் தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும், நம்பிக்கையூட்டும் பொன்னான எதிர்காலம் உருவாகி வருகிறது என்பதை இந்த நிதிநிலை அறிக்கை தெளிவாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளது. எங்கள் துறையின் சார்பாக, மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்களையும், ஆலோசனைகளையும், புரட்சித் தலைவி வகுத்துக் கொடுத்துள்ள பாதையில் நாங்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடிக்கும் ஊக்கம் ஊட்டுவதாக எடுத்துக் கொண்டு, இந்தத் துறை செயல்படும் என்ற உறுதியை அளிக்க விரும்புகிறேன்.

இந்த அரசு அறிவித்துள்ள நல்ல திட்டங்களை வரவேற்ற நல்ல உள்ளங்களுக்கு என்னுடைய நன்றியை உரித்தாக்குகின்றேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு முறை தெரிவித்தார்கள். 'அல்லி மலர்களில் மணம் இருக்காது, ஆற்றுப் பரல்களை வைத்து ஆரம் தொடுக்க இயலாது' என்றார்கள். அதைப் போல, அரசின் நல்ல திட்டங்களைப் பாராட்டி, ஊக்கம் அளிப்பதைச் சிலரிடம் எதிர்பார்க்க இயலாது. அப்படிப்பட்டவர்களைப் பற்றிக் கவலைப்படாது, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்களுடைய இலட்சியப் பயணத்தில் எத்தனை இன்னல்கள், இடர்பாடுகள் வந்தாலும், அவற்றைக்



1991 செப்டம்பர் 20] [திருமதி இரா. இந்திரகுமாரி]

கடக்க, ராமனுக்கு சிறு உதவி செய்த அணிலைப் போல சமூக நல, சத்துணவு இலாக்கா, மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவிக்கு உறுதுணையாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளப் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இதுவரை எத்தனையோ முதலமைச்சர்கள் தமிழகத்தில் இருந்திருக்கிறார்கள். ஆனால் எந்த முதலமைச்சர் காலத்திலும், இந்தச் சமூக நலன், சத்துணவு இலாகா, தான் ஆற்றாத பணியை எங்களுடைய ஜான்சி ராணி, இதய தெய்வம், புரட்சி தலைவியின் காலத்தில்தான் ஆற்றியது என்கிற வரலாற்றை இந்த இலாகா நிச்சயமாக உருவாக்கும். இந்த இலாகாவின் தாயாக, இந்த இலாகாவின் தலைவியாக, இந்த இலாகாவின் தலைநாயகியாக, விளங்கும் எங்கள் இதய தெய்வம், புரட்சித் தலைவியின் புகழுக்கு மாசு ஏற்படா வண்ணம் அதே நேரத்தில் அவர்களுடைய புகழுக்கு மெருகூட்டும் வகையில், சமூக நல சத்துணவு இலாகா தன்னுடைய அடிகளை கவனத்தோடு எடுத்துவைக்கும் என்பதை இந்த நேரத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் திரும்பப் பெற்றுக் கொண்டு, சமூக நல இலாகாவினுடைய மானியக் கோரிக்கையை வெற்றி பெறச் செய்வார்கள் என்ற உறுதியோடு நம்பி, அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. சி. ஞானசேகரன்.

<u>திரு. சி. ஞானசேகரன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுக் கூடங்களில், உயர்நிலைப் பள்ளிகளிலே பணியாற்றுகிற அமைப்பாளர்களுக்கு, கோடை விடுமுறை நாட்களான, மே மாதத்திலே சம்பளம் கொடுப்பதில்லை. அதே போல், 1984 ஆம் ஆண்டிலிருந்து காய்கறிகள் வாங்குவதற்கும், உப்பு வாங்குவதற்கும், விறகு வாங்குவதற்கும் 13 பைசாதான் மானியம் அளிக்கப்பட்டு வருகிறது. ஆனால், இன்று விலைவாசி விஷம் போல் ஏறிக் கொண்டிருக்கிற இந்தக் காலத்தில், இந்த 13 பைசா என்பது மிகக் குறைவாக இருக்கிறது. அதே போல், காய்கறிகளினுடைய....

பிற்பகல் 1.25

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> ஏதாவது ஒரு கேள்வி கேளுங்கள். இது பழையபடி ஒரு டிஸ்கஷன் மாதிரி போய் விடும். ஒன்று விறகு பற்றிக் கேளுங்கள். இல்லையென்றால் காய்கறி பற்றிக் கேளுங்கள். ஒவ்வொன்றையும் கேட்பது என்றால் இன்னொரு டிஸ்கஷன் மாதிரி போகும். அதற்கு நேரமில்லை.

திரு. சி. ஞானசேகரன் : இப்போது காய்கறிகளை அமைப்பாளர்கள் மூலமாக வாங்கிப் போடவேண்டுமென்ற உத்தரவு இருந்தும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக சில இடங்களிலே இப்போது நிலவிக் கொண்டிருக்கிறது. ஆகவே இதை தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : கோடை விடுமுறையின் போது 45 நாட்களுக்கு ஊதியம் வழங்க நேரிட்டால் அரசுக்கு ரூ. 57,09,225 செலவு ஏற்படுகிறது. தற்போதுள்ள நிதிநிலை நெருக்கடியில் இதனை ஏற்க இயலாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு பேரவைத் தலைவரின் மூலமாக தெரிவித்துக் கொள்கிறேன்.

விறகிற்கு ஆகின்ற செலவைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். இன்றைக்கு சமூக நலத் துறையின் சார்பாக சூளாஸ் என்கின்ற அடுப்புகளை சத்துணவுக் கூடங்களுக்குக் கொடுப்பதற்கு முடிவு செய்திருப்பதால் விறகிற்கு ஆகின்ற செலவைவிட குறைவான செலவே இந்த அடுப்புகளுக்கு ஆகும். ஆகவே அடுத்த நிதியாண்டில் இதில் எவ்வளவு மிச்சப்பட்டது என்பதை அறிந்து அதற்குப் பின்னால் இதைப் பற்றி முடிவு செய்யப்படும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு பேரவைத் தலைவர் மூலம் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் அ. ஸ்ரீதரன்.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமத்துவமும் சமுதாய மறு மலர்ச்சியும் நிறைந்து, நல்லாட்சி நடைபெறுகின்ற இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதிகளுக்கும், அவர்களுக்கு பிறக்கும் குழந்தைகளுக்கும் வேலை வாய்ப்பிலும், கல்வியிலும், முன்னுரிமை அளிக்கவேண்டுமென்று என்னுடைய பேச்சிலே நான் சொல்லியிருந்தேன். அதைப் பற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் நல்ல ஒரு பதில் தருவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் இந்த அரசு இதைப்பற்றி பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ம. தனபால்.

திரு. ம. தனபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி. மு. க. ஆட்சிக் காலத்தில் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டத்தைக் கொண்டு வந்து, அந்தத் திட்டத்தில், அந்த நேரத்தில் தி.மு.க.



...றுப்பினர்கள் தான் பெரும்பாலும் பயனடைந்திருக்கிறார்கள். [illegible]தத் திட்டத்திலே 8 ஆம் வகுப்பு வரை படித்தவர்களுக்கு என்று இருக்கும்பொழுது பொதுவாக மற்றவர்களுக்குதான் பயன் கிடைக்கக் கூடிய சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. 8 ஆம் வகுப்பு வரை படித்தவர்களுக்கு என்று சொல்வதை ஆதி திராவிடர்களுக்கு, எஸ். சி., எஸ். டி.-க்கு 5 ஆம் வகுப்பு வரை படித்திருந்தால் போதும் என்ற திட்டத்தை கொண்டுவர அரசு ஆவன செய்யுமா என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு திருமதி. இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர்களும், கல்வித் துறையிலே மிகவும் முன்னுக்கு வரவேண்டுமென்ற அக்கறையோடு இருக்கிற புரட்சித் தலைவியினுடைய அரசில் 8 ஆம் வகுப்பு வரையில் படித்தால் இந்த உதவி கிடைக்கும் என்று சொல்லப்படுகிற போது அவர்களும் அதுவரை படிப்பதற்குரிய வாய்ப்பு ஏற்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு பேரவைத் தலைவரின் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். ஈஸ்வரன்

திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டத்தின் மூலமாக சனி, ஞாயிறு மற்ற அரசு விடுமுறை நாட்களில் இதை நிறுத்தினால் அரசுக்கு பல கோடி ரூபாய் லாபமும், அதே நேரத்தில் அரசு விடுமுறை நாட்களில் பள்ளிக்கு குழந்தைகள் சரியாகச் செல்வதில்லை....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதே கேள்வியை கேள்வி நேரத்தின் போது கேட்டு, அதற்குப் பதிலும் கொடுத்திருக்கிறார்கள்.

விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண். 30—சமூக நலன் பற்றிய வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திருமதி. [illegible]ணி நல்லதம்பி.

திருமதி. ரமணி நல்லதம்பி : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி. ரமணி நல்லதம்பி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''மாவட்ட நிர்வாகம் பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 152,32,74,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'' என்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண். 579 திரு. எச். எம். ராஜு.

திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மாவட்ட நிர்வாகம் சிறந்த முறையில் நடைபெற நீலகிரி மாவட்டத்திற்கு உதகையில் ஒரு புதிய கட்டிடம் கட்டுவதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மாவட்ட நிர்வாகம் பற்றிய 11 ஆம் எண். மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 152,32,74,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண். 568. திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, 'சாதிச் சான்றுகள், வருமானச் சான்றுகள்மற்றும் இதர சான்றுகள் வழங்குவதில் கால தாமதம் ஏற்படாமல் இருக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மாவட்ட நிர்வாகம் பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 152,32,74,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண். 565. திரு. வி. தம்புசாமி.

திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தஞ்சை மாவட்டம் நிர்வாக வசதிக்காக மூன்று மாவட்டங்களாக பிரிக்கப்படும் என்று முன்னாள் முதல்வர் மாண்புமிகு அமரர் எம். ஜி. ஆர். அவர்கள் அறிவித்ததை நிறைவேற்றுவது குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மாவட்ட நிர்வாகம் பற்றிய 11 ஆம் எண். மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 152,32,74,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''



மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 1 நிலவரித்துறை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''நிலவரித் துறை பற்றிய 1 ஆம் எண். மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 9,84,41,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'' என்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண். 585. திருமதி ரமணி நல்லதம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ராதாபுரம் தொகுதியின் கிராமப்புற நிலங்களில் உள்ள நிலங்களின் உண்மை விலை மதிப்புக்கும், அரசு விலை மதிப்புக்கும் உள்ள வித்தியாசத்தைக் குறைக்க வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''நிலவரித் துறை பற்றிய 1 ஆம் எண் மானிய கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 9,84,41,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண். 588. திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழகத்தில் உள்ள ஏழை, எளிய மக்களுக்கும் ஆதிதிராவிட மக்களுக்கும், குடியிருப்பு மனை பட்டாக்கள் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''நிலவரித் துறை பற்றிய 1 ஆம் எண். மானிய கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 9,84,41,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.'

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண். 5 முத்திரைத் தாள்கள்— நிர்வாகம். மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''முத்திரைத் தாள்கள்— நிருவாகம் பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 2,07,93,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'' என்று கோருகிறேன்.

திரு. ஜி. பழனிச்சாமி தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது.

''சமூக நலன் பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 345,70,89,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'' என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்', என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்கு கோரிய தொகை வழங்கப்பெற்றது.

பிற்பகல் 1.30.

## 5. அறிவிப்பு.

### பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவையின் நிகழ்ச்சி நிரலில் கீழ்க்கண்ட மாற்றங்கள் பேரவையின் ஒப்புதலோடு செய்யப்பட்டுள்ளன என்பதை அறிவிக்கின்றேன் :

| | | |
|---|---|---|
| 24—9—1991 செவ்வாய்க்கிழமை | காலை | மானியக் கோரிக்கை எண். 20 வேளாண்மை<br>மானியக் கோரிக்கை எண். 53 வேளாண்மை குறித்த மூலதனச் செலவு. |
| | மாலை | கோரிக்கை எண். 13 நீதி நிர்வாகம் மற்றும் 14 சிறைச்சாலைகள். |



| | | |
|---|---|---|
| 25—9—1991 புதன்கிழமை | காலை | கோரிக்கை எண். 4 பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும் தீர்வைகளும் நிர்வாகம். |
| | மாலை | கோரிக்கை எண். 10 பால் வழங்கு திட்டங்கள், 21. மீனளம்<br>22 கால்நடை வளர்ப்பு<br>25 சின்கோனா,<br>45 காட்டு வளத்துறை<br>மற்றும் 59 காட்டு வளம் குறித்த மூலதனச் செலவு. |

அதாவது ஏற்கெனவே 24—9—1991 மாலையில் உங்களுக்கு குறித்து அனுப்பப்பட்ட கோரிக்கை எண்கள் 25—9—1991 புதன்கிழமையும், அதேபோல புதன்கிழமை மாலை அறிவிக்கப்பட்டிருந்தது 24—9—1991 மாலையும் எடுத்துக் கொள்ளப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றது. பேரவை மீண்டும் இன்று பிற்பகல் 4 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை 1-31 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

பிற்பகல் 4.00

பேரவை மீண்டும் பிற்பகல் 4.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் கூடியது.

### மானியக் கோரிக்கைகள், 1991—92, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(இ) கோரிக்கை எண். 11— மாவட்ட நிர்வாகம்.
கோரிக்கை எண். 1— நிலவரித் துறை.
கோரிக்கை எண். 5— முத்திரைத் தாள்கள் நிர்வாகம்.
கோரிக்கை எண். 6— பத்திரப் பதிவு.
கோரிக்கை எண். 41— இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு
கோரிக்கை எண். 44— எழுதுபொருள் அச்சுத்துறை.
கோரிக்கை எண். 46— இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும்— தொடர்ச்சி. மானியக் கோரிக்கை எண். 11— மாவட்ட நிர்வாகம். மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண். 606. திரு. எம். எம். எஸ். அபுல் ஹசன். இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண். 605. திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தாலுகா தலை நகரங்களில் தட்டுப்பாடு இன்றி பத்திரங்கள் கிடைக்க வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''முத்திரைத் தாள்கள்—நிர்வாகம் பற்றிய 5 ஆம் எண். மானிய கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,07,93,000ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண். 6—பத்திரப் பதிவு. மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''பத்திரப் பதிவு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 16,24,72,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'' என்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண். 623. திரு. சி. ஞானசேகரன். இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண். 612. திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''பத்திரப் பதிவு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 16,24,72,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண். 41—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு. மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 69,24,76,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'' என்று கோருகிறேன்.





பிற்பகல் 4.05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண். 630. திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணி தொகுதியில் கடலோரப் பகுதியான சேதுபாவாசத்திரம், மல்லிப்பட்டணம், மரக்காவலசை, தாவுத்தன்வயல், அடைக்கத்தேவன், செந்தலை வயல்குப்பத்தேவன், திருவத்தேவன் ஆகிய ஊராட்சிகளில் கடுமையான வறட்சியின் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளதால் வரி வஜா செய்வது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

'' இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 41-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 69,24,76,000-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும் ''.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண். 629. திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் தொண்டியங்காட்டில் புயல் பாதுகாப்பு இல்லம் கட்ட வேண்டியது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

'' இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 41-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 69,24,76,000-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும் ''.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண். 44—எழுதுபொருள் அச்சுத்துறை. மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' எழுதுபொருள் அச்சுத்துறை பற்றிய 44-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூபாய் 25,81,39,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் ''
என்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண். 639. திரு. மா. சுந்தரதாஸ். இருக்கையில் இல்லை.

[பேரவைத் தலைவர்] [1991 செப்டம்பர் 20

மானியக் கோரிக்கை எண். 46— இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும். மாண்புமிகு வருவாய் துறை அமைச்சர் அவர்கள்.

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் பற்றிய 46-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூபாய் 48,54,14,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் '' என்று கோருகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண். 642. திரு. ஆர். சிங்காரம்.

<u>திரு. ஆர். சிங்காரம் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ' கொள்கை பற்றி ' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டு தீர்மானத்தை மொழிகிறேன்.

'' இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் பற்றிய 46-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 48,54,14,000-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும் ''.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கைகளின் கொள்கை குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு இங்கே வைக்கப்பட்டிருக்கின்றன. தமிழில் வைக்கப்பட்டுள்ளதை நான் படித்ததாக எடுத்துக்கொண்டு, அவைக் குறிப்பில் ஏற்றிக்கொள்ள * * * * வேண்டுமென்று, கேட்டு மாண்புமிகு உறுப்பினர்கள் பேசிய பிறகு என் சார்பிலும், அரசின் சார்பிலும் பதிலைத் தெரிவிக்கிறேன் என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. எஸ். டேனியல்ராஜ்

<u>திரு. எஸ். டேனியல்ராஜ் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட நிர்வாகம், நிலவரித்துறை, முத்திரைத் தாள் நிர்வாகம், பத்திரப்பதிவு, இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு, எழுதுபொருள் அச்சுத் துறையின் பணிகள்,

---

* * 324—380 ஆம் பக்கங்களில் 3 முதல் 6 ஆம் இணைப்புகளாக அச்சிடப் பெற்றுள்ளன.



1991 செப்டம்பர் 20] [திரு. எஸ். டேனியல்ராஜ்]

இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துக்களை கூற விழைகின்றேன்.

தமிழகத்தில் வாழ்கின்ற ஏழை எளிய மக்களுடைய வாழ்வு வளம் பெறுவதற்கு நல்ல பல திட்டங்களைத் தீட்டி வருகின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசில் பணியாற்றுகின்ற ஊழியர்கள் தங்களுடைய கோரிக்கைகளை நிச்சயமாக நிறைவேற்றித் தருவார்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் என்னுடைய ஒருசில கோரிக்கைகளை முன் வைக்க கடமைப் பட்டிருக்கிறேன்.

தமிழகத்தில் பணியாற்றிக் கொண்டுவருகின்ற 32,600 தலையாரிகள், வெட்டியான், பாசன காவலர்கள் ஆகிய பகுதி நேர ஊழியர்களை நிரந்தர ஊழியர்களாக அரசு அறிவித்து ஊதிய நிர்ணயமும் அவர்களுக்கு செய்து தரவேண்டுமென்று இந்த நேரத்தில்நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அண்டை மாநிலங்களான கேரளா, ஆந்திரா, கர்நாடகா ஆகியவற்றில் பகுதி நேர ஊழியர்களாக இருந்த கிராமப் பணியாளர்கள், உயர்த்தப்பட்டு, இன்றையதினம் முழு நேர ஊழியர்களாக அவர்கள் பணியாற்றி வருவதோடு மட்டும் அல்லாமல் ஊதிய நிர்ணயமும் அவர்களுக்கு செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. நமது தமிழகத்தைப் பொறுத்தவரையில் கிராமப் பணியாளர்கள் பெரும்பாலும் 90 சதவீதத்திற்கு மேல் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாகவும், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாகவும் இருக்கின்ற காரணத்தால் ஏழை எளிய மக்களுடைய துயர் துடைக்கின்ற இந்த அரசு பகுதி நேர கிராமப் பணியாளர்களை முழு நேர பணியாளர்களாக அறிவிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 4—10

அதோடு மாத்திரமல்லாமல், நிலவுடமை பதிவு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 1,500 பேர், 1983ஆம் ஆண்டு சர்வேயராகவும், டிராப்ட்ஸ்மேனாகவும் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், தற்போது வருவாய்த் துறையினுடைய அமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள்தான் அந்த நேரத்திலேயும் வருவாய்த் துறை அமைச்சராகப் பணியாற்றினார்கள். அந்த நேரத்திலே 1,500 பேர் டிராப்ட்ஸ்மேனாகவும் சர்வேயராகவும் நியமிக்கப்பட்டார்கள். 9 ஆண்டுக்காலமாக அவர்கள் முழு நேரப் பணியாளர்களாகப் பணியாற்றியும்கூட இன்னும் கன்சாலிடேட்டட் பே என்று சொல்லப்படுகின்ற தொகுப்பு ஊதியத்தைத்தான் அவர்கள் பெற்றுக்கொண்டு வருகிறார்கள்,

[திரு. எஸ். டேனியல்ராஜ்] [1991 செப்டம்பர் 20

ஆகவே, அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில் அவர்களுடைய நீண்டகால கோரிக்கைகளை ஏற்றுக்கொள்கிற விதத்திலே முழு நேர ஊழியர்களாக பணியாற்றிக்கொண்டிருக்கிற அவர்களுக்கு, தொகுப்பு ஊதியம் வாங்கிக்கொண்டிருக்கிற அவர்களுக்கு, ஊதியம் நிர்ணயம் செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதே போன்று பழையன கழிதலும் புதியன புகுதலும் என்ற தத்துவத்தின் அடிப்படையிலே புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே கிராமங்களிலே கிராம நல அதிகாரிகள் நியமிக்கப்பட்டார்கள். கிராமப்புறங்களிலே வாழ்கின்ற மக்கள் ஜாதிச் சான்றிதழ்களை வாங்கவேண்டுமென்றாலும், வருமான வரி சான்றிதழ்களை வாங்கவேண்டுமென்றாலும், இன்னும் பல சான்றிதழ்களை வாங்கவேண்டுமென்றாலும் அவர்கள் கிராம நல அதிகாரிகளைச் சந்தித்துத்தான் பெறவேண்டிய நிலையிலே இருந்து வருகிறார்கள். ஆனால், கிராம நல அதிகாரிகள் கிராமங்களிலே தங்காமல் இருப்பதன் காரணமாக கிராமப்புறங்களிலே வாழ்கின்ற ஏழைஎளிய மக்கள் கிராம நல அலுவலர்களைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டிய கட்டாய சூழ்நிலையிலே வாழ்ந்து வருகிற நிலைமைதான் இன்று தமிழகத்திலே இருந்து வருகிறது. ஆகவே, அரசைப் பொறுத்தமட்டிலே, கிராம நலப் பணியாளர்கள், கிராம நல அதிகாரிகள் அந்தந்த கிராமத்திலேயிருந்து பணியாற்றவேண்டுமென்ற உத்தரவை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு கிராம நல அதிகாரிகள் அந்தந்த கிராமத்திலே தங்கி பணியாற்றுவதற்குரிய வசதிகளை அதாவது அரசின் மூலமாக வீடு கட்டித்தரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாவட்டங்களைப் பொறுத்தமட்டிலே, மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவர் தலைமையிலே ''மனுநீதி நாட்கள்'' நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு வாரத்தினுடைய திங்கட்கிழமையிலே மனுநீதி நாள் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. பொதுமக்களைப் பொறுத்தமட்டிலே தங்களுடைய கோரிக்கைகள் நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்ற ஒரு நம்பிக்கையோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலே, மனுக்களைக் கொடுக்கிறார்கள். ஆனால், அந்த மனுக்களை பெற்றுக் கொண்ட மாவட்ட ஆட்சித் தலைவரைப் பொறுத்தமட்டிலே ஒருசில மனுக்களினுடைய கோரிக்கைகள் நிறைவேற்றப்படக்கூடியதாக இருந்தால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கிறார்கள். அதேநேரத்திலே சில கோரிக்கைகள் நிறைவேற்ற முடியாது என்று தெரிந்திருந்தும்கூட அந்த மனுக்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி பதிலைப் பெற்றுத் தருகிறேன் என்று உண்மைக்குப் புறம்பாக பொதுமக்களிடத்திலே சொல்வதன் காரணமாக, அவர்களை அலைக்கழிப்பதன் காரணமாக, பொது மக்கள் மத்தியிலே ''மனுநீதி நாள்'' நம்பிக்கையை இழந்து வரக்கூடிய நிலைமை தமிழகத்திலே, ஒவ்வொரு மாவட்டத்திலேயும் உருவாகி வருகிறது. ஆகவே, மனுநீதி நாள்



1991 செப்டம்பர் 20] [திரு. எஸ். டேனியல்ராஜ்]

மாவட்டத்தினுடைய அதிகாரிகள் உண்மை நிலையை பொது மக்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டுமென்று, அரசு அவர்களுக்கு உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 4-15

சிதம்பரனார் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களுடைய திருக்கரங்களால் கிட்டத்தட்ட 6 ஆண்டுகளுக்கு முன்னதாக ஆரம்பிச்கப்பட்டது. ஆறாண்டுகளுக்கு முன்னதாக ஆரம்பிக்கப்பட்ட நேரத்தில், சிப்காட் நிறுவனத்திற்குக் கையகப்படுத்தப்பட்ட நிலத்திலே மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவருடைய வளாகத்தை அமைக்க வேண்டுமென்று 300 ஏக்கர் நிலத்தை ரெவின்யூ அதிகாரிகளுக்கு வழங்கி 120 ஏக்கரா நிலத்தைப் பொதுப் பணித் துறையின் மூலமாகக் கட்டிடங்களைக் கட்டுவதற்கு வேண்டிய ஆரம்ப வேலைகளெல்லாம் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால், என்ன காரணத்தினாலோ இப்பொழுது திடீரென்று தூத்துக்குடியிலே இருக்கின்ற பெருமாள் கோயிலுக்குச் சொந்தமான இடமான புளிம்பாச்சான்குளத்திலே மாவட்ட ஆட்சித் தலைவருடைய வளாகத்தைக் கட்ட வேண்டுமென்று அதிகாரிகள் நடவடிக்கைகள் எடுத்து வருவதாக நான் கேள்விப்படுகிறேன். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவர் வளாகத்தை சிப்காட் வளாகத்திலே கட்ட வேண்டுமென்று ஆணை பிறப்பித்திருந்தும் கூட, இந்த நேரத்திலே தேவையில்லாத இடத்திலே மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவருடைய வளாகத்தைக் கட்ட வேண்டுமென்று முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். புரட்சித் தலைவர் தேர்ந்தெடுத்த இடமான அந்த இடம் சிதம்பரானார் மாவட்டத்திலேயிருக்கின்ற ஏழு தாலுகாக்களுக்கு இணைப்புள்ள இடமாகவும், பொது மக்கள் எளிதாகச் சென்று வருகின்ற இடமாகவும் இருக்கின்ற காரணத்தினால் புரட்சித் தலைவரவர்களால் தேர்வு செய்யப்பட்ட, சிப்காட் நிறுவனத்தால் கையகப்படுத்தப்பட்ட அந்த இடத்திலே மாவட்ட ஆட்சித் தலைவருடைய வளாகத்தைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தமட்டிலே, தொழில் துறையிலே முதலாவது மாநிலமாக உருவாக வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் சிந்தித்துக் கொண்டிருக்கின்ற இந்தக் கால கட்டத்தில், சிதம்பரானார் மாவட்டத்தில் பழையகாயல் கிராமத்திலே ஒரு டைட்டானியம் தொழிற்சாலை அமைப்பதற்காக மத்திய அரசு 400 கோடி

[திரு. எஸ். டேனியல்ராஜ்] [1991 செப்டம்பர் 20

செலவில் அனுமதி வழங்கியும்கூட, இதுவரையிலே நிலத்தைக் கையகப்படுத்தாதன் காரணமாக, அந்த டைட்டானியம் தொழிற்சாலையை வேறு மாநிலத்திற்கு மத்திய அரசு கொண்டு செல்ல இருப்பதாக இன்றைய தினத்திலே நாங்கள் கேள்விப் பட்டுக் கொண்டிருக்கிறோம். ஆகவே, புரட்சித் தலைவியினுடைய அரசு போர்க்கால நடவடிக்கையின் அடிப்படையிலே, தமிழகத்திலேயே அது இருக்க வேண்டுமென்ற ஒரு நல்லெண்ணத்தின் அடிப்படையிலே நிலங்களைக் கையகப்படுத்தி மத்திய அரசுக்கு ஒப்படைக்க வேண்டிய நடவடிக்கைகளிலே உடனடியாக ஈடுபட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழகத்திலே இருக்கின்ற ] கிராமப்புறங்களிலே ஏரி புறம்போக்கு, ஆற்றுப் புறம்போக்கு, மயான புறம்போக்கு போன்ற பகுதிகளிலே இப்பொழுது ஏழை தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும் குடிசைகளைப் போட்டு அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இருபதாண்டு காலமாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற அவர்களுக்கு இது வரையிலே அரசு வீட்டுமனை பட்டாக்களை வழங்கவில்லை, ஆகவே உடனடியாக இலவச வீட்டுமனைப் பட்டாக்களை அந்த ஏழை எளிய மக்களுக்கு வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல, மந்தை புறம்போக்கு பகுதிகளிலேயும் வாழ்ந்து கொண்டிருக்கும் ஏழைகளுக்கும் வீட்டு மனைப் பட்டாக்களை வழங்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அரசுக்குச் சொந்தமான நிலங்களிலே ஏழை, சிறு விவசாயிகள் விவசாயம் செய்து கொண்டு வருகிறார்கள். இருபதாண்டுக் காலமாக விவசாயம் செய்து கொண்டு வருகின்ற அந்த ஏழை விவசாயிகளுக்கு இதுவரையிலே பட்டா வழங்கப்படவில்லை. ஆகவே, அரசு உடனடியாக ஏழை விவசாயிகளினுடைய நலன் கருதி அவர்களுக்கு இலவச பட்டாக்களை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 4—20

சிதம்பரனார் மாவட்டத்தைப் பொறுத்த வரையிலே உப்பளத் தொழிலாளர்கள் பெரும்பாலும் ஏழை, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் வாழ்ந்து கொண்டு வருகிறார்கள். ஏழை, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஐந்து ஏக்கர் நிலத்திலே உப்பளங்களை அமைத்து, பாத்திகள் கட்டி, தற்போது உப்பளத் தொழிலைச் செய்து கொண்டு வருகிறார்கள். ஆனால், அவர்களுக்கு இதுவரையிலே பட்டாக்கள் வழங்கப்படவில்லை. பலமுறை அந்த ஏழை, எளிய, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த சிறு உப்பளத்



1991 செப்டம்பர் 20] [திரு. எஸ். டேனியல்ராஜ்]

தொழிலாளர்கள் அரசுக்கு கோரிக்கை வைத்தும் கூட இதுவரையில் பட்டாக்கள் வழங்கப்படவில்லை. ஆகவே, உடனடியாக ஏழை எளிய உப்பளத் தொழிலாளர்களுக்கு அந்தப் பட்டாக்களை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்வ தோடு, சிதம்பரனார் மாவட்டத்திலே தூத்துக்குடி தாலுகா, விளாத்திகுளம் தாலுகா ஆகிய தாலுகாக்களில், இன்றைய தினத்திலே உப்பளத்தினுடைய முதலாளிகள், பெரிய தொழிலதிபர்கள் எல்லாம் நூற்றுக்கும் மேற்பட்ட ஏக்கரா நிலத்திலே, உப்பளங்களை அமைப்பதற்காக மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலே சென்று, அவர்களிடத்திலே பேசி, அவர்களுக்கே நீண்டகால குத்தகை கொடுப்பதாக பரவலாகப் பேசப்பட்டு வருகிறது. ஏழை எளிய மக்கள் மீது நலன் கொண்ட புரட்சித் தலைவியினுடைய அரசு, இந்த நடைமுறை, அரசின் கொள்கைக்கு விரோதமாக இருக்கிற காரணத்தினால், உடனே தலையிட்டு நூற்றுக்கு மேற்பட்ட ஏக்கராவிலே அவர்களுக்கு வழங்கவிருக்கிற அந்த குத்தகைக் கொள்கையை, நிலைமையை தடை செய்து, சாதாரண ஏழை, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கு 5 ஏக்கர் அடிப்படையிலே உப்பளம் தொழில் செய்வதற்கு 5 ஏக்கர் நிலத்தை அவர்களுக்கு வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்வ தோடு, நீண்டகால குத்தகையைப் பெற்றுக் கொண்டு, உப்பளத் தொழில் செய்து கொண்டிருப்பவர்களுடைய காலக்கெடு முடி நற நேரத்திலே, அந்த நிலங்களையும் அரசு கையகப்படுத்தி, கிழை எளிய மக்களுக்கு வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று, கிராமப்புறத்திலே இருக்கிற ஏழை, எளிய மக்கள் சாதிச் சான்றிதழ் வாங்குவதற்காக கிராம நல அதிகாரிகளை அணுகுவது மிகவும் சிரமமாக இருக்கிற காரணத்தினாலும், கிராம நல அதிகாரிகளிடத்திலே சென்று வாங்குகிற நேரத்திலே இலஞ்சம் தாண்டவமாடுகிற காரணத்தினாலும், அரசைப் பொறுத்த மட்டிலே, சாதி, மதம், பெயர், போட்டோக்கள் இணைக்கப்பட்ட ஒரு நிரந்தர அடையாள அட்டையை ஒவ்வொருவருக்கும் வழங்குவதற்கு, ஒரு முன்மாதிரியாக தமிழகம் விளங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று, இயற்கைச் சீற்றத்தின் காரணமாக, சில நேரங்களில் ஏழை, எளிய, விவசாய மக்கள் நிலவரியைச் செலுத்து வதற்கு காலதாமதம் ஆகிவிடுகிறது. அரசு சில சலுகைகளை வழங்குவதற்கு முன்வந்தாலும் கூட, அதிகாரிகள் அரசாங்கத் திற்கு கெட்டப் பெயர் ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத் தோடு நிலவரியை ஜப்தி செய்வதிலும், கெடுபிடி வசூல் செய் வதிலும் தீவிர நடவடிக்கைகளைக் காட்டி வருகிறார்கள். அப்படி தீவிர நடவடிக்கைகளைக் காட்டி வருகிற அந்த அதிகாரிகள் மீது, அரசு தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய சிதம்பரனார் மாவட்டத்திலே இருக்கிற தூத்துக்குடியைப் பொறுத்தமட்டில், தூத்துக்குடி ஒரு தொழில் நகரமாக விரைவாக உருவாகி வருகிற காரணத்தினாலும், தூத்துக்குடியிலே மக்கள் தொகை அதிகமாகப் பெருகி வருகிற காரணத்தினாலும், தூத்துக்குடி மிகப் பெரிய தாலுகாவாக உருவாகி வருகிற காரணத்தினாலும், தூத்துக்குடி தாலுகாவையும், ஸ்ரீவைகுண்டம் தாலுகாவையும், இந்த இரண்டு தாலுகாக்களோடு, மூன்றாவதாக, புதுக்கோட்டையை மையமாக வைத்து ஒரு புதிய தாலுகாவை உருவாக்கித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழகத்திலே, செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்தைப் பொறுத்த மட்டிலே, மிகப்பெரிய மாவட்டமாக இன்றைய தினம் அது இருந்து கொண்டு வருகிறது. ஒரு நேரத்தில்—மூன்று ஆண்டு காலத்திற்கு முன்னதாக, மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவர், வாரத்தின் திங்கட்கிழமையில் காஞ்சிபுரத்திலும், வாரத்தின் வெள்ளிக்கிழமை சைதாப்பேட்டையிலும் இரண்டு நாட்களை மனுநீதி நாட்களாக நடத்தி வந்தார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், அது தடை செய்யப்பட்டு வாரத்தின் திங்கட்கிழமை மட்டும் காஞ்சிபுரத்திலே மனு நீதி நாளாக இன்றைய தினம் நடைபெற்று வருகிறது. அந்த மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், மிகப் பெரிய மாவட்டமாக இருக்கிற காரணத்தினாலும், அதனால் மக்களுக்கு மிகவும் சிரமமாக இருக்கிற காரணத்தினாலும், வாரத்திற்கு இரண்டு முறை, இரண்டு தினங்களில் மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவர் மனுநீதி நாளை நடத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

பிற்பகல் 4.25

அதோடு மட்டுமல்ல, செங்கற்பட்டு—எம்.ஜி.ஆர். மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, ஸ்ரீபெரும்புதூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய மாவட்டத்தை உருவாக்க வேண்டுமென்றும், எங்களுடைய மறைந்த அன்புத் தலைவர் திரு. இராஜிவ் காந்தி அவர்களை நினைவுபடுத்துகின்ற வகையிலே அந்தப் புதிய மாவட்டத்திற்கு இராஜிவ் காந்தி அவர்களுடைய பெயரைச் சூட்ட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் மெத்தப் பணிவோடு கேட்டுக் கொண்டு விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. செ. து. வரதராஜன்.





<u>திரு. செ. து. வரதராஜன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தின் எங்கள் தங்கத் தலைவி, புரட்சித் தலைவியையும், இன்றைய அரசையும் பாராட்டுகின்றபோது நாங்கள் எல்லாம் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம். எங்களைப் பொறுத்தவரை, தங்கத் தலைவி பாராட்டுக்குரியவர் என்பது அவர்கள் 1984 ஆம் ஆண்டு—எங்களுக்கு நன்றாகத் தெரியும்—கொள்கைப் பரப்புச் செயலாளராகக் கழகத்தில் பணியாற்றியபோது, 1952 இல் திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பிக்கப்பட்ட போதும் சரி, 1972 இல் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பிக்கப்பட்ட போதும் சரி, கொள்கைப் பரப்புச் செயலாளராகப் பலர் பணியாற்றியிருந்தாலும், தங்கத் தலைவி பொறுப்புக்கு வந்தபோதுதான், கொள்கைப் பரப்புச் செயலாளர் பதவிக்குள்ள மதிப்பும், மரியாதையும், கழகத்தினுடைய வளர்ச்சிகளும் ஏற்பட்டன. தங்கத் தலைவி அவர்களை 1983 ஆம் வருடம் புரட்சித் தலைவர் அவர்கள் அமெரிக்காவில் இருந்த போது, அவர்களை ஏசியும், தூற்றியும், சதம்பல் மலைத் தொடரின் பூலான்தேவிக்கு ஒப்பிட்டுப் பேசியும் கூட, கழக வெற்றிக்குப் பாடுபட்டு, புரட்சித் தலைவருடைய ஆட்சியைத் தமிழகத்திலே அமைத்த தங்கத் தலைவிக்கு எங்களது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

டில்லியிலே தங்கத் தலைவி அவர்கள் இந்திய ஜனாதிபதி மாண்புமிகு ஜெயில்சிங் அவர்களைச் சந்தித்த போது, புரட்சித் தலைவி அவர்கள் மாலை அணிவிக்கச் சென்றபோது, தமிழ் நாட்டின் வெற்றியைத் தேடித் தந்த தங்களுக்கு நான் மரியாதை செய்ய வேண்டுமென்று சொல்லி பொன்னாடை போர்த்தி பாராட்டினார்கள். பத்திரிகைகள் எல்லாம், தமிழகத்திலே கருணாநிதிக்கு எதிராக அரசியல் நடத்துகின்ற தகுதியைப் பெற்றவர் என்று பாராட்டினார்கள். அந்தத் தங்கத் தலைவி அவர்கள் கழகத்தின் பொதுச் செயலாளராகப் பொறுப்புக்கு வந்ததும், தைரியமாகப் பலர் மீது நடவடிக்கை எடுத்தும் பலரை தாய் உள்ளத்தோடு அரவணைத்தும் பாராட்டிக் கழகத்தைக் காப்பாற்றினார்கள். அவர்களையே நம்பிய எங்களுக்கெல்லாம் சிறப்பூட்டினார்கள். தங்கத் தலைவியை நம்பாதவர்கள் மீது நடவடிக்கை எடுத்தார்கள். அவர்கள் பர்மா அகதிகளைப் போல், இலங்கைப் போராளிகளைப் போல், அரசியல் அனாதைகளாக, இருக்கிற இடம் தெரியாமல் வீதிகளிலே அலைந்து கொண்டிருக்கிறார்கள்.

தவறு செய்தவர்கள் திருந்தி வந்தபோது அவர்களுக்கு உரிய மரியாதையைத் தந்து சிறப்பித்தார்கள். தப்புச் செய்தவன் வருந்திக் கொண்டிருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இந்தச் சபையிலே முன்னாள் முதல்வராக

[திரு. செ. து. வரதராஜன்] [1991 செப்டம்பர் 20

இருந்த கருணாநிதியை, இந்தியப் பிரதமராக வர வேண்டும் என்று வாயளவிலே புகழ்ந்தவர்களைத் தாய் உள்ளத்தோடு, இன்று நீங்கள் அவர்களுக்கு அளித்த சிறப்பினைப் பார்த்து, அவர்கள் உங்களை உளமாரப் பாராட்டுகின்ற காட்சியைக் கண்டு நாங்கள் எல்லாம் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம்.

எங்களது தங்கத் தலைவியே, எங்களை வாழ வைக்கின்ற தெய்வமே, நீங்கள் ஆட்சிக்கு வந்தவுடன், எங்களது மாவட்டத்திற்குப் புரட்சித் தலைவர் பெயரை வைத்தும், புரட்சித் தலைவர் பெயரிலே போக்குவரத்துக் கழகம் ஆரம்பித்தும், புரட்சித் தலைவர் நினைவகத்தை ரூ. 70 இலட்சம் செலவில் அழகுபடுத்தவும், நம்மை வளர்த்து ஆளாக்கிய புரட்சித் தலைவர் புகழை நிலைநாட்டவும், நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ள உங்களுக்கு எங்களது மாவட்ட மக்களின் சார்பாகவும், எங்கள் சார்பாகவும், கழகத்தினுடைய தொண்டர்கள் சார்பாகவும், மிகவும் பணிவான வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே, 48-வது பக்கத்திலே 108-வது பிரிவிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் என் தொகுதியான மாமல்லபுரத்தில் நகர வளர்ச்சிப் பணிக்காக 1.2 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்ததற்காக என்னுடைய நன்றியை அவர்களுடைய பாதங்களிலே சமர்ப்பிக்கின்றேன்.

பிற்பகல் 4.30

அதுபோல் திருக்கழுக்குன்றம் சிறப்பு மிக்க இடமாக இருக்கிறது. 'திரு' என்றால் இரண்டு, 'கழு' என்றால் 'கழுகு'. குன்றம் என்றால் 'மலை'. அந்தத் திருக்கழுக் குன்றம் நீண்ட காலமாக, நூற்றாண்டுக் காலமாக, சிறப்பும் பெயரும் பெற்ற இடமாக விளங்குகிறது. அந்தத் திருக்கழுக் குன்றத்திற்கு உல்லாசப் பயணிகளும், தேசயாத்திகளும், பக்தர்களும் வந்து சேவிக்கின்ற அந்தப் பகுதிக்கு முக்கியமான வி.ஐ.பி. ஆக இருக்கின்ற கவர்னர் அவர்கள் கூட சென்ற சில வாரங்களுக்கு முன்பாக வருகை தந்தார்கள். எந்த ஒரு அடிப்படை வசதியும் இல்லாமல் அங்கே வருகை தருபவர் கள் தவிக்கிற காரணத்தால், நம்முடைய தமிழக மக்கள் மட்டுமல்லாமல், இந்தியாவில் இருக்கின்ற மக்களும், அகில உலகத்தில் இருக்கின்ற மக்களும் அங்கே வருகை தந்து எந்த அடிப்படை வசதியும் இல்லாமல் அவர்கள் தவிக்கின்ற நிலையைப் போக்க நிதியினைத் தந்து திருக்கழுக் குன்றத்திற்கு சிறப்பான ஏற்பாடு செய்ய வேண்டு மாய் எங்களுடைய தங்கத் தலைவி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய பகுதியில் செங்கற்பட்டுக்கு சி.சி.ஏ. மற்றும் எச்.ஆர்.ஏ. தரப்பட வேண்டும் என்ற



1991 செப்டம்பர் 20] [திரு. செ. து. வரதராஜன்]

கோரிக்கை நீண்ட நாளைய கோரிக்கையாக இருக்கிறது. அதைப் பார்க்கிறபோது மிகவும் கவலையாக இருக்கிறது. செங்கற்பட்டு நகரத்தைப் பொறுத்தவரையில் அரசு ஊழியர் களுக்கு சி.சி.ஏ. மற்றும் எச்.ஆர்.ஏ. வழங்கப்படவில்லை. ஆனால் செங்கற்பட்டுக்கு முன்பு இருப்பவர்களுக்கும், செங்கற்பட்டைச் சுற்றி இருக்கிற அத்தனை பேர் களுக்கும் சி.சி.ஏ. மற்றும் எச்.ஆர்.ஏ. வழங்கப்படுகிறது. ஆனால் இவர்கள் என்ன பாவம் செய்தார்களோ தெரிய வில்லை. நீண்ட நாட்களாக நாங்கள் சொல்லிக் கொண் டிருந்தாலும் அதைப் பரிசீலனைக்கு எடுக்காத காரணத்தால் தங்கத் தலைவியாகிய நீங்கள் அதைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு சி.சி.ஏ. மற்றும் எச்.ஆர்.ஏ. வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமாய் இந்த மன்றத்தின் சார்பாக வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

நாங்கள் இந்தச் சட்டமன்றத் தேர்தல் நேரத்தில் அங்கே சென்றபோது வாக்காளப் பெருமக்கள் அத்தனை பேரும், நாங்கள் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும், என்ன குறை இருக்கிறது என்று கேட்டபோது, நாங்கள் 40 ஆண்டு காலமாக, 30 ஆண்டு காலமாக அதாவது நீண்ட காலமாக இருக்கிறோம். எங்களுக்கு நீங்கள் பட்டா வாங்கிக் கொடுத்தால் போதும், வேறு ஒன்றும் எங்களுக்குச் செய்ய வேண்டியதில்லை, என்று சொல்கிறார்கள். 30, 40 ஆண்டு காலமாக பல அரசியல்வாதிகளைப் பார்க்கிறோம். அதோ வாங்கித் தருகிறேன், இதோ வாங்கித் தருகிறேன் என்று சொல்கிறார்கள். ஆனால், வாங்கித் தரவில்லை. எனவே, நீங்களாவது எப்படியாவது பட்டாவை வாங்கித் தாருங்கள் என்று அங்கே இருக்கின்ற மக்கள் மிகவும் வேதனையோடு கேட்கிறார் கள். மேய்க்கால் புறம்போக்கு என்று சொல்கிறார்கள். மேய்க் கால் புறம்போக்கு மாடு மேய்வதற்காக ஒதுக்கப்பட்ட இடம் என்று சொல்கிறார்கள். ஆனால் 40 ஆண்டு காலமாக அங்கே குடிசை போட்டுக் கொண்டு தெரு வீதிகளையும் போட்டு, அவர் களுக்கு சுகாதார வசதிகளைச் செய்து, விளக்குகளை ஏற் படுத்தி, அவர்களுக்கு ஓட்டுக்களையும் கொடுத்து விட்டு பிறகு அவர்களுக்கு பட்டா கொடுக்க மாட்டேன் என்பது எந்த அளவில் சாத்தியக்கூறு என்பது எங்களுக்கு விளங்க வில்லை. ஆகவே, அவர்கள் 20 ஆண்டு காலமாக அங்கே இருக்கிறார்கள் என்பதால் அவர்களுக்குப் பட்டா வழங்க வேண்டும். அல்லது அவர்களை அந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்த வேண்டும். ஆனால் அவர்களை அங்கே வைத்துக் கொண்டு ஏமாற்றுகிற வகையிலே அரசியல்வாதிகள் இருக் கிறார்கள் என்கிற வகையிலே அங்கே அவர்கள் நாம் செல்லும் போதெல்லாம் பட்டா வாங்கித் தாருங்கள் பட்டா வாங்கித் தாருங்கள் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே,

கருணை உள்ளத்தோடு பட்டா வழங்குவதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். எங்களது தொகுதியில் இருக்கிற தாலுகா அலுவலகம், செங்கற்பட்டு தொகுதிக்கும், திருப்போரூர் தொகுதிக்கும் சேர்த்தே இருக்கிறது. ஆனால் இந்த இரண்டு தொகுதிகளுமே பெரிய தொகுதிகளாக இருக்கின்றன. சுமார் 4 லட்சம் வாக்காளர்கள் இருக்கின்ற தொகுதி அது. அந்தத் தொகுதியில் பெரிய தொழில் வளங்கள் அதிகமாக இருக்கின்றன. அந்தத் தொகுதியில் டூரிஸம் அதிகமாக இருக்கிறது. ஏரியா அதிகமாக இருக்கிறது. அங்கே டவுன்ஷிப் என்று பார்க்கிறபோது இரண்டு நகரியங்கள் இருக்கின்றன. பேரூராட்சிகள் இரண்டு இருக்கின்றன. ஒன்றியங்கள் 3 இருக்கின்றன. நகரசபை ஒன்று இருக்கிறது. இவ்வளவு இருந்தும் அங்கே நிர்வாகம் செய்வதற்கு ஒரே ஒரு தாசில்தார் தான் இருக்கிறார். மகாபலிபுரத்தில் டூரிஸ்ட் அதிகமாக வருவதால் அது ஒரு டூரிஸ்ட் இடமாக இருப்பதால் மிக முக்கியமான பிரமுகர்கள் வருகிற காரணத்தால் அங்கே தாலுகா ஆஃபீஸிலே இருக்கிற தாசில்தாரை எந்த விவகாரத்திற்கும் அணுகி எந்தப் பணியும் செய்ய முடியவில்லை. ஆகவே தயவுகூர்ந்து செங்கற்பட்டுக்கு தனியாக ஒரு தாலுகா அலுவலகம் ஏற்படுத்தித் தர ஏற்பாடு செய்ய வேண்டுமாய் அருமைக்குரிய வருவாய்த் துறை அமைச்சர் அவர்களை வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே வருவாய்க்கு என்ன வழி என்று சொன்னால் எங்களுடைய செங்கற்பட்டு தொகுதியில் மணல் எடுக்கிற வகையில் எக்கச்சக்கமான, கோடிக்கணக்கான பணம் அநியாயமாக வீணாகிக் கொண்டிருக்கிறது. அங்கே தனியாராக இருப்பவர்கள் அந்த மணலை யாரும் ஏலம் எடுக்காத அளவுக்கு கோர்ட்டிலே சென்று வழக்குகளைத் தொடர்ந்து ஸ்டே வாங்கியிருக்கிறார்கள். அப்படி ஸ்டே வாங்கிவிட்டு அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று சொன்னால் ஒரு பத்தாயிரம் ரூபாய் கட்டி விட்டு இலங்கை அகதி என்ற பெயரால் பெர்மிட் வாங்கி, லைசன்ஸ் வாங்கி வைத்துக் கொண்டு ஒரு நாளைக்கு 45 ஆயிரம், 60 ஆயிரம் என்று அவர்கள் அந்த மணலில் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 4.35

அரசுக்கு இதனால் ஒன்று இரண்டு அல்ல பல கோடி ரூபாய்கள் நஷ்டமாகிக் கொண்டிருக்கிறது. 2 ஆண்டு காலமாக அந்த ஸ்டே-யை வெக்கேட் பண்ணாமலேயே அதி நடைமுறையிலே ஏலம் விடாமலேயே இருக்கின்ற காரணத்தினாலே தனியார்கள், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே யார் யார் ஏலம் எடுத்தார்களோ அவர்களே தொடர்ந்து ஏலம் எடுத்து மணலிலே எக்கச்சக்கமாக பணத்தை சம்பாதித்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் பணத்தை சம்பாதிப்பது மட்டுமல்ல நம்முடைய அரசுக்குப் பல கோடி ரூபாய் அதனால் நஷ்டம ஏற்படுகிறது.





அதே போல செம்மண் அடிப்பது, அதுவும் ஏலம் விடப்பட
வில்லை. எங்கள் பகுதிகள் மலைப் பகுதிகள். அங்கே
இருக்கின்ற கருங்கல்லை வெட்டியெடுப்பதற்கு இந்த அரசால்
ஏலம் விடப்படவில்லை. அது மட்டுமல்ல, ஆற்றிலே இருந்து
எக்கச்சக்கமான தண்ணீர் எடுக்கப்படுகின்றன. அங்கே
எடுக்கப்படுகின்ற தண்ணீருக்கு அதற்கான கட்டணங்கள்
வசூலிக்கப்படுவதில்லை. ஆனால் ஏழை விவசாயிகள் அந்த ஆற்றில்
தண்ணீர் வேண்டும் என்று மோட்டர் போடவேண்டுமென்றால்
ஆற்றுப் படுகையிலே பாலாறு கிளியரன்ஸ் சர்டிப்கேட் வாங்கவேண்
டும் என்று அதற்குத் தடை விதித்து இருக்கின்றார், ஆனால் தனி
யார் ஒருவர் லட்சக்கணக்கான லிட்டர் தண்ணீர்
எடுத்து அவர்கள் பயன்படுத்திக்கொண்டு இருக்கின்றார்கள். ஆக
இதையெல்லாம் கணையெடுத்தோமானால் நிச்சயமாக இந்த
அரசுக்கு எங்களுடைய தொகுதியிலே மட்டும், எங்கள் பகுதியில்
மட்டும் இருந்து குறைந்தது 4, 5 கோடி ரூபாய் வருவாய்
தந்திருக்கமுடியும். ஆனால் அதில்லாமல், ஒரு தனி
யாரைச் சம்பாதிக்க விட்டுவைத்து இருப்பது அவ்வளவு சாலச்
சிறந்ததாக தெரியவில்லை. அதுவும் திராவிட முன்னேற்றக்
கழக ஆட்சி இருந்தபோது யார் யார் கொள்ளை அடித்துக்
கொண்டிருந்தார்களோ அவர்களே தொடர்ந்து கொள்ளை
அடித்துக் கொண்டு இருப்பது எந்த அளவிலே சாத்தியக் கூறு
என்று எனக்கு விளங்கவில்லை. அது மட்டுமல்ல, அங்கே
அதிகாரிகளைப் போய்க் கேட்கிறபோது....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 12 நிமிடங்கள் ஆகி
யிருக்கின்றன.

திரு. செ. து. வரதராஜன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, அந்த அதிகாரிகளைப் போய் கேட்ட
போது அவர்கள் எங்களுக்குச் சட்டச் சிக்கல்கள் இருக்கின்றன.
கோர்ட்டிலே ஸ்டே வாங்கியிருக்கின்றார்கள். ஆனால்
அந்தப் பகுதிக்கு மாவட்டக் கலெக்டராக இருந்தவர்கள்
இந்தப் பகுதியிலே மணல் எடுக்கக் கூடாது என்று பேன்
ஏரியா ' என்று திரு. பாண்டியன் ஒரு கெசட் பப்ளிகேஷன்
பண்ணியிருக்கின்றார். அங்கே குடிநீர் எடுக்க சென்று
அதாவது ஆலந்தூருக்கு, தாம்பரத்திற்கு, செங்கற்பட்டுக்கு
இன்னும் இருக்கின்ற சுற்றுபுறத்தில் இருக்கின்ற எல்லா ஊர்
களுக்கும் அங்கே தண்ணீர் எடுக்கின்ற காரணத்தினாலே
அங்கே மணல் எடுக்கக்கூடாது என்று கசட் பப்ளிகேஷன்
செய்தும்கூட, சட்டத்திற்குப் புறம்பாக ' இல்லீகலாக '
அங்கே இருந்து மணல் எடுக்கப்படுகின்றது. அங்கே மணல்
எடுக்கப்படுவதைப் பற்றி கலெக்டரைக் கேட்டால் நாங்கள்
அதை தடுப்பதற்கில்லை ' கண்டெம்ப்ட் ஆப். கோர்ட் '
என்று சாக்குபோக்கு சொல்லி அவர்கள் தப்பித்துக் கொள்
கிறார்கள். இப்படி அவர்கள் தப்பித்துக்கொள்வதற்கு இந்த
அரசும் உதவி செய்யுமானால், பார்க்கின்றவர்கள் எங்களைப்
பார்த்து ஏளனம் செய்கின்றார்கள். தி. மு. க. காலத்திலே

கொள்ளை அடிக்கப்பட்டது. இப்போதும் கொள்ளை அடித்துக் கொண்டு இருக்கிறார்கள். கேட்பதற்கு ஆள் இல்லை [illegible] என்று சொல்கிறார்கள். ஆகவே நம்முடைய அரசு அதிக[illegible] மான பற்றாக்குறை உள்ள பட்ஜெட்டைப் போட்டிருக்கின்ற காரணத்தினாலே இது போன்ற நிலைகளை தடுக்க அறிவிப்பு களை செய்வார்களானால், நிச்சயமாக அவை அனைத்தையும் பெற்று நமக்கு கூடுதலான நிதி பெற்று அந்த முறையிலே நிர்வாகம் செய்ய ஏதுவாக இருக்கும் என்று வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. தம்புசாமி.

திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற வருவாய்த் துறை மானியக் கோரிக்கை மீது ஒரு சில கருத்துக்களை சொல்வதற்கு அனுமதி கொடுத்த தங்களுக்கு நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

பொதுவாக இந்த தஞ்சை மாவட்டத்தை முன்னாள் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அமரர் எம். ஜி. ஆர். அவர்கள் மூன்று மாவட்டங்களாகப் பிரித்து அறிவித்திருந் தார்கள். இப்போது இரண்டு மாவட்டங்களாகப் பிரித்து அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதை மீண்டும் பரிசீலித்து, எம். ஜி. ஆர். அவர்கள் அறிவித்த அந்த அறிவிப்பை அடிப்படை யாகக் கொண்டு தஞ்சை மாவட்டத்தை மூன்று மாவட்டங்க ளாகப் பிரிப்பதற்கு அரசு பரிசீலிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 4.40

மாவட்ட நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் இன்றைய தினம் தேவையான ஊழியர்கள் இல்லாத காரணத்தால் அவ்வப் போது எழுதப்படுகின்ற கடிதங்களுக்கு பதில் கொடுப்பதில் அவர்களுக்கு சங்கடங்கள், சிரமங்கள் இருக்கின்றன. ஆகவே, மாவட்ட நிர்வாகத்தில் அதிகமான ஊழியர்களை நியமிக்க வேண்டும். அந்தவகையில் விரைவாக பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதை இந்த நேரத்தில் [illegible] வித்துக் கொள்கிறேன்.

அதோடு பள்ளி மாணவர்களைப் பொறுத்தவரையில் சாதிச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. அப்படி வழங்கப்படு கின்ற சாதிச் சான்றிதழை ஒவ்வோர் ஆண்டும் சென்று பெற வேண்டிய அவசியம் இருக்கிறது. வருவாய்த் துறை மூலம் வழங்கப்படுகின்ற அந்த சாதிச் சான்றிதழ் ஆரம்பப் பள்ளி



முதல் அவர்கள் கல்லூரிப் படிப்பை முடிக்கும் வரையில் செல்லு படியாகும் வகையில் ஒரு நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மற்றவர்களும் ஒவ்வோர் ஆண்டும் சாதிச்சான்றிதழை பெறுவதில் பல்வேறு சிரமங்கள் ஏற்படு கின்றன. அதைத் தவிர்க்கின்ற வகையில், ஒரு முறை வாங்கிய சாதிச் சான்றிதழே கடைசி வரை செல்லும் அளவுக்கு ஒரு நல்ல நிலையை உருவாக்க வேண்டுமென்று இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இன்றையதினம் இருக்கக்கூடிய வட்டாட்சி அலுவலகங்கள் சில சொந்தக் கட்டிடங்களில் இருக்கின்றன. சில வாடகை கட்டிடங்களில் இருக்கின்றன. சொந்தக் கட்டிட டங்களில் இருக்கின்ற சில அலுவலகங்கள் பழம் பெரும் அலு வலகங்களாக, குறுகிய இடத்தில் இருக்கிற காரணத்தினால் மக்களுடைய தேவைகளை அந்தக் கட்டிடங்களிலே இருந்து நிறைவேற்ற முடியவில்லை. அங்கே பணியாற்றக் கூடிய ஊழியர்கள் நெருக்கமாக இருந்து பணிகளைப் பூர்த்தி செய்ய முடியாத ஒரு நிர்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த கட்டிடங்களை எல்லாம் மாற்றி, வாடகைக் கட்டிடங்களாக இருந்தால் அவைகளை அரசு கட்டிடங்களாக மாற்றியும், அரசுக் கட்டிடங்களை எல்லாம் ஒரு தேவையான அளவிற்கு அவற்றை கட்டக் கூடிய வகையிலும் ஏற்பாடு செய்து அந்தக் கட்டிடங் களை எல்லாம் புதுப்பிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு கொல்லிமலைப் பகுதி மூன்று வட்டங்களாக இப்போது இருப்பதை மாற்றி, கொல்லிமலையை மட்டும் தனிப்பட்ட ஒரு வட்டமாக மாற்றி அமைத்துத் தர வேண்டு மென்பது அப்பகுதி மக்களுடைய நீண்டநாள் கோரிக்கை. அந்த வகையில் அதைத் தனியாகப் பிரித்து அமைத்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இன்றைய தினம் கிராமப்புறங்களில், கிராமங் களுக்கென்று 12,498 கிராம நிர்வாக அலுவலர்கள் இருப்ப தாக கொள்கைக் குறிப்பிலே கூறப்பட்டிருக்கிறது. அப்படி யானால் ஒரு வருவாய் கிராமத்திற்கு ஒரு அலுவலர் என்ற நிலை இல்லை. ஒன்றுக்கு மேற்பட்ட கிராமங்களை ஒரு அலுவலர் கவனிக்க வேண்டியிருப்பதால் அந்த கிராமத்தில் இருக்கிற அத்தனை மக்களுடைய தேவைகளையும், வேலை களையும் பூர்த்தி செய்ய முடியாத ஒரு நிலை இருக்கிறது. ஆகவே, ஒரு கிராமத்திற்கு ஒரு அலுவலர் என்ற விகிதத்தில் கிராம நிர்வாக அலுவலர்களை நியமிக்க வேண்டும். அப்படிப் பட்ட நிலைமையில் பதவிகளை ஏற்படுத்தி நியமிக்கிறபோது, இன்றையதினம் அவர்களுடைய தேவை 4,777 வருவாய் கிராமங்களில் கிராமத்திற்கு ஒருவர் என்ற முறையிலே போதிய

நிர்வாக அலுவலர்களைப் போட வேண்டும். அப்படிப் போட்டால் ஏறத்தாழ 5 ஆயிரம் பேர்களுக்கு இன்றையதினம் வேலை வாய்ப்பு உருவாக்க முடியும். அதை அரசு பரிசீலித்து எதிர்காலத்தில் அதை பூர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று அவர்களுக்கு அங்கே குடியிருக்க சொந்த வீடு கிடையாது. ஆகவே, அவர்களுக்கு குடியிருப்பு அமைத்து கொடுப்பதோடு, அலுவலகங்களும் அமைத்துக் கொடுக்க அரசு எதிர்காலத்திலே பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல கிராமத்திலே இருக்கிற கிராம அலுவலர்கள் சாராயம் காய்ச்சுபவர்களைக் கண்டுபிடிக்க வேண்டும். இல்லையென்றால் அவர்கள் தான் பொறுப்பு ஆக்கப்படுவார்கள், வேலையிலிருந்து இடைக்கால நீக்கம் செய்யப்படுவார்கள் என்று அரசு அறிவித்திருப்பது சரியானதல்ல. கள்ளச் சாராயத்தைக் கண்டுபிடிக்கும் வேலையில் கிராம நிர்வாக அலுவலர்களைப் பயன்படுத்துவதை அரசு கைவிட வேண்டுமென்று இந்த நேரததில் கேட்டுக் கொள்கிறேன்.

கிராமத்திலே கிராமப் பணியாளர்கள் 17,247 வருவாய் கிராமங்களில் இன்றையதினம் 30,747 கிராமப் பணியாளர்கள் இருப்பதாகவும், அவர்களுக்கு மொத்த ஊதியம் 577 ரூபாய் தருவதாகவும் கொள்கைக்குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவர்களை அரசு ஊழியர்களாக ஏற்றுக் கொண்டு, அரசின் கடைநிலை ஊழியர்களாக அவர்கள் பணியாற்றுவதற்கு அரசு அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு கூட ரொம்ப குறைந்த வருவாயில் அவர்கள் அன்றாடம் பணி புரிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஊதியம் ஏறத்தாழ 750 ரூபாயாக உயர்த்துவது பற்றி அரசு பரிசீலக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நிலவரியைப் பொறுத்தவரையில் இன்றையதினம் மிகவும் பழமையான நலையிலே நிலவரி வசூலிக்கப்பட்டு வருகிறது. நிலவரி, நீர்வரி பல தலைப்புகளில் போடப்பட்டு ஒன்று சேர்க்கப்பட்டிருக்கிறது. எதற்காக இந்த வரி, என்னென்ன வரி என்று புரிந்துகொள்ள முடியாத ஒரு புதிராக இது விவசாயிகளுக்கு இருக்கிறது. எனவே இந்த வரியை மாற்றி, எந்தெந்தத் தலைப்புகளில் விவசாயிகளுக்கு வரி விதிக்கப்படுகிறது என்பதைப் புரிந்துகொள்ளும் அளவுக்கு அந்த வரி விதிப்பை எதிர்காலத்தில் சீரமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



பிற்பகல் 4-45]

அதோடு ஐந்து ஏக்கர் நஞ்சை அல்லது அதற்குச் சமமான 10 ஏக்கர் புஞ்சை நிலம் உள்ளவர்களுக்கு நிலவரி முழுவதுமாக ரத்து செய்யப்பட வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன. ஒரு ஏக்கருக்கு நிலவரி சொந்தமாக எவ்வளவு, நீர்வரி எவ்வளவு என்று அறிவித்து, நிலவரி முறைகளை சீராக்கி வசூலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பலவேறு காரணங்களால் நிலவரி இதுவரை கட்டப்படாமல் பாக்கி இருக்கிறது. அப்படி தொடர்ந்து பாக்கியாக உள்ள நிலவரியை அரசு ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் நில மறு அளவை திட்டத்தின்கீழ் சில இடங்களில் அளக்கப்படுகின்றன. அப்படி அளக்கப்படுகிறபோது அதிகமான கட்டணங்கள் வசூலிக்கப்படுகிறது. இது விவசாயிகளுக்கு ரொம்ப சிரமத்தையும், சங்கடத்தையும் கொடுக்கும் சூழ்நிலையாக இருக்கிறது. இதை அரசு பரிசீலனை செய்து, அதைக் குறைக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல பட்டா பாத்தியம் வழங்கும் திட்டம் நிறைவேறி எட்டு ஆண்டுகள் ஆகியும், இன்னமும் பூர்த்தி யாக்கப்படவில்லை. இன்னமும் அது ஒரு சோதனைக் கட்டத்தில்தான் உள்ளது. அதற்கு ஒரு கால வரையறை நிர்ணயித்து அதற்கு மாநிலம் முழுவதும் பட்டா புத்தகம் வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குடிமனைப் பட்டா நடப்பாண்டிலே 3.75 லட்சம் வழங்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதை நாங்கள் வரவேற்கிறோம். சென்ற ஆண்டு 3.77 லட்சம் வீட்டு மனைப் பட்டா வழங்கியிருக்கும்போது இந்த ஆண்டு குறியீடு அதற்குக் குறைவாக உள்ளது. எனவே இலக்கை இன்னும் அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் பட்டா வழங்குவது என்பது இரண்டு சென்ட் என்று இருக்கிறது. எதிர் காலத்தில் இரண்டு சென்ட் என்பதை ஐந்து சென்ட், பத்து சென்ட்வரை அவர்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காரணம், கிராமத்தில் இருக்கிறவர்கள் குடியிருப்பு வசதி ஏற்படுத்திக் கொள்வதோடு, காய்கறி போடுவது அல்லது மரம் வளர்ப்பது அல்லது தான் வாங்கிய ஆடு மாடுகளை கட்டி வைப்பதற்கு அல்லது வைக்கோல் போர் போடுவதற்கு இடமில்லாமல் சங்கடப்படும் சூழ்நிலைகள் இருக்கின்றன. எனவே எதிர் காலத்தில் கூடுதலாக நிலப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்க

[திரு. வி. தம்புசாமி] [1991 செப்டம்பர் 20

வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் அப்படி வழங்குகிறபோது நஞ்சையாக இருந்தால் பட்டா வழங்கக் கூடாது என்று தடை இருக்கிறது. ஆகவே புஞ்சை இல்லாத பகுதிகளில் குடியிருப்புக்கு நிலம் எடுக்கும்போது நஞ்சையை எடுக்கும் நிலை இருக்கிறது. அப்படி நஞ்சை நிலத்தை எடுக்கும் காரணத்தால், பட்டா அதற்கு வழங்கக்கூடாது என்று தடை இருப்பதால், அதை குடியிருப்பு இல்லாதவர்களுக்கு வழங்க முடியாத நிலை இருக்கிறது. அதனால் ரோடு ஓரங்களிலே, பாசனப் பகுதி ஓரங்களிலே குடியிருக்கும் நிலைமை இருக்கிறது. அப்படிக் குடி இருக்கக்கூடியவர்களை வெளியேற்றும்போது, பாசனப் பகுதியாக இருந்தால், போக்குவரத்துப் பகுதியாக இருந்தால். வெளியேற்றப்படும் அவசியம் ஏற்படுமானால், அரசு அவர்களுக்கு மாற்று இடம் கொடுத்து, அவர்களை வெளியேற்ற வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள் கிறேன். மற்ற இடங்களிலே இருக்கக் கூடியவர்களாக இருந் தால், வகை மாற்றம் செய்து, அவர்களுக்குக் குடியிருப்பு கட்ட மனை வழங்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். அதே போன்று கோவில் அல்லது மடம் இவைகளுக்குச் சொந்தமான இடங்களில் குடியிருப்பவர்களுக்கு பட்டா வழங்குவதிலே தடை உள்ளது. அந்தத் தடையையும் நீக்கி, அவர்களுக்குப் பட்டா வழங்க வேண்டும். அதோடு, கோவில், மடம் ஆகியவற்றின் நிலங்களில் பல வசதி படைத்தவர்கள், கோடீஸ்வரர்கள் தங்களுக்கு வேண்டிய அளவுக்கு வளைத்துக் கொண்டு, அதிலே பல வீடுகளைக் கட்டி, இன்றைக்கு வாடகைக்கு விடும் சூழ்நிலையைப் பார்க்கிறோம்

பிற்பகல் 4-50

அதுமாதிரி நிலைமையைப் பரிசீலித்து அந்த நிலங்களை எல்லாம் கைப்பற்றி நிலமற்றவர்களுக்கும் குடிமனை இல்லா தவர்களுக்கும் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தமிழகம் முழுமைக்கும் இரண்டு ஆண்டு காலத்திற்குள் யாருமே குடிமனை சொந்தம் இல்லாத வர்கள் இல்லை என்ற நிலையை உருவாக்கி அனைவருக்கும் குடிமனைப் பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

நிலக் கொள்கையில் அவசியமான மாற்றங்கள் தேவைப் படும் வகையில் அரசு எதிர்காலத்தில் உச்சவரம்பு சட்டத்தைக் கொண்டுவர வேண்டும். தமிழ்நாட்டில் நில உச்சவரம்பு சட்டம் வந்து 30 ஆண்டுகளுக்கு மேலாகியும் கூட, அதன் பலன் முற்றுப் பெறவில்லை. நஞ்சை என்றால் 15 ஏக்கர் புஞ்சை என்றால் 25 ஏக்கர் என்று இருக்கிறது. மற்றவைகளுக்கு விதிவிலக்கு ஏதும் இல்லை என்று இருப்பதை ரத்து செய்து உபரி நிலங்களை எடுத்து நிலமற்றவர்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1991 செப்டம்பர் 20] [திரு வி. தம்புசாமி]

அதேநேரத்தில் இந்த இடத்தில் அரசின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். மேற்கு வங்கத்தில் இருக்கக்கூடிய அரசு சரியான நிலச் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்ததன்மூலம் 10 ஆண்டுகளுக்குள்ளாகவே உணவு தானிய உற்பத்தியில் 70 லட்சம் டன்னிலிருந்து 116 லட்சம் டன்னாக உற்பத்தியை உயர்த்தியிருக்கிறது. இந்த உற்பத்தி ஏழை களின் கையில் அந்த நிலங்கள் மாறியதால்தான் இந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்பதைக் கவனத்தில் கொண்டு எதிர்காலத்தில் உற்பத்தி பெருக வேண்டுமானால் தமிழகத்தில் நில உச்சவரம்புச் சட்டம் உபரி நிலம் கிடைக்கும் வகையில் திருத்தம் செய்யப்படவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். உபரி நிலத்தை எடுத்து நிலமற்றவர்களுக்கு வழங்கி உற்பத் திப் பெருக்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன். முன்பு உச்சவரம்பில் எடுக்கப்பட்ட நிலம் வினி யோகிக்கப்பட்டு இருந்தாலும் இன்னமும் ஒப்படைத்தவர்களி டம் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. அவர்களிடமிருந்து நிலங்களுக்கு உரிய பணமும் வசூல் செய்யப்படுகிறது. இப் படி பட்டா வழங்காமல் ஏராளமான நிலம் தஞ்சை மாவட்டத் தில் உள்ளது. அதை அரசு பரிசீலித்து நிலத்தை ஒப்படை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். உபரி நிலத்தை எடுக் கிற போது வழக்கு மன்றத்திற்குப் போய் அதற்கு தடை வாங்கி விடுகிறார்கள். இப்படி பல வழக்குகள் முடியாமல் இருப்பதால் நிலம் எடுக்கப்பட முடியாமல் இருக்கிறது. இதற்கு ஒரு நீதிமன்றம் தனியாக அமைத்து சட்டம் நிறை வேற்றி பல ஆண்டுகள் ஆகியும் அது இதுவரை செயல்படத் துவங்கியதாகத் தெரியவில்லை. அப்படி கிடப்பில் போடப் பட்டு இருக்கிற சட்டத்தை விரைவில் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் உபரி நிலம் எடுக்கிற போது அதில் பல சிக்கல்கள் இருக்கின்றன. அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நிலக்காரர்கள் தங்கள் நிலங்களை குடிமனைக்கு விற்றுவிட்டார்கள். அப்படி குடி மனைக்கு வாங்கியவர்கள் அரசு ஊழியர்கள் மற்றும் சாதாரண நபர்கள். அவர்கள் வீடு கட்டுவதற்காக மனைகளை வாங்கி யிருக்கிறார்கள். அந்த மனைகளை இப்போது நாங்கள் உபரி நிலச் சட்டத்தின் கீழ் எடுக்கப்போகிறோம் என்று அதிகாரிகள் கூறுகிறார்கள். அந்தக் குடிமனைகளை வாங்கியவர்கள், வீடுகட்டும் கடன் வாங்க முயற்சிக்கிறபோது அது உச்ச வரம்பின் கீழ் வருகிற நிலம், ஆகவே கடன் கொடுக்க முடி யாது என்று சொல்கிற நிலை இருக்கிறது. அப்படிப் பட்ட சூழ்நிலையில் மனைகளை வாங்கியவர்கள் இன்றைய தினம் சங்கடப் படக்கூடிய சூழ்நிலையில் இருக்கிறார்கள். எனவே அரசு அதைப் பரிசீலித்து அந்த நிலத்தை விற்றவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர குடிமனைகளை வாங்கிய வர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் அதை அவர்கள் அனு பவித்துக் கொள்ள அரசு உரிய ஆணையை வழங்கவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

(திரு வி. தம்புசாமி) [1991 செப்டம்பர் 20

அரசுக்குச் சொந்தமான நரிக புறம்போக்கு நிலங்களை எடுத்து நிலமற்றவர்களுக்கு வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் தலைமுறை தலைமுறையாக அனுபவத்தில் இருக்கிற மலைவாழ் மக்கள் வைத்திருக்கிற இடங்களை அரசு வகைப்படுத்தி பட்டா வழங்குவது என்ற அடிப்படையில் மலைவாழ் மக்களுக்கு நிலத்தைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குத்தகை விவசாயிகள் சென்ற பசலி வரை குத்தகை செலுத்தியிருக்கிறார்கள். அதை வரவு வைத்துக் கொண்டு மீதி பாக்கி முழுவதையும் ரத்து செய்யவேண்டும். நடப்பு பசலி முதல் குத்தகையை நீக்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். கோவில், மடம், தனியார், அறக்கட்டளை நிலங்களை சாகுபடி செய்துவரும் குத்தகை விவசாயிகளுக்கு இந்த ஆண்டு இறுதிக்குள் நிலத்தை அவர்களுக்கு சொந்தமாகச் செய்வதற்கு அரசு விரைவாக சட்டத்தைக் கொண்டு வரவேண்டும்.

இன்றைய தினம் மத்திய அரசு விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச கூலியாக 20 ரூபாய் வழங்கவேண்டுமென்று அறிவித்துள்ளது. தஞ்சை மாவட்டத்தில் குறைந்த பட்ச கூலியாக 14—15 என்ற விகிதாச்சார சட்டம் போடப்பட்டிருக்கிறது. இப்போது சில இடங்களில் 17—19 என்ற அளவுக்கு தஞ்சை மாவட்டத்தில் இருக்கிறது. விரைவாக அதைப் பரிசீலனை செய்து விவசாயத் தொழிலாளர் ஊதியத்தை 18—20 என்று உயர்த்தி அறிவிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 4-55

அதேபோன்று புயல் மற்றும் இதர இயற்கை பாதிப்புகளால் பாதிக்கப்படக்கூடிய பொது மக்களுக்கு, வீடு இடிந்தவர்களுக்கு இதுவரையில் 400 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. விலைவாசி உயர்ந்து இருக்கின்ற காரணத்தினால், இனிமேல் அப்படி வீடு இடிந்தவர்களுக்கு 1000 ரூபாய் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று உடை வழங்கும்போது ஒரு குடும்பத்தில் உள்ளவருக்கு மட்டும் வழங்கப்படுகிறது. அந்தக் குடும்பத்தில் இருக்கிற அனைவருக்கும் உடைகள் வழங்கி அவர்களை பாதுகாக்க வேண்டும். கடலோரப் பகுதியில் இன்னும் அந்தப் புயல் சீற்றத்திலே இருந்து அந்த மக்களைப் பாதுகாப்பதற்கு புயல் கட்டிடங்கள் அமைக்க, இன்னும் கூடுதல் புயல் கட்டிடங்கள் அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டு, பேசுவதற்கு அனுமதி தந்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. ஆர். சிங்காரம் : தலைவர் அவர்களே, ஒரு "க்ளாரிபிகேஷன்".

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதில் என்ன இருக்கிறது?



1991 செப்டம்பர் 20]

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்ற போது கள்ளச்சாராயத்தை ஒழிப்பதற்கு கிராம நிர்வாக அதிகாரிகளைப் பயன்படுத்தக் கூடாது என்று இங்கே பேசினார்கள். கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்கு கிராம நிர்வாக அதிகாரிகளைப் பயன்படுத்திய காரணத்தினாலே தான் இன்று கள்ளச் சாராயம் ஒழிந்து இருக்கிறது என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால் அவர் கள்ளச் சாராயத்தை ஒழிக்கக் கூடாது என்று கருதுகின்றாரா அல்லது கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்கு வேறு ஏதாவது யோசனையை இந்த அரசுக்கு சொல்கின்றாரா என்பதை அறிய விரும்புகின்றேன்.

திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளச் சாராயத்தை ஒழிக்கக் கூடாது என்பதல்ல. அதிலே கருத்து வித்தியாசம் கிடையாது. நிச்சயமாக கள்ளச் சாராயத்தை ஒழிப்பதிலே நாங்கள் முன்னணியிலே இருக்கக் கூடியவர்கள். இன்னொன்றும் சொன்னால் எங்கள் கட்சியிலே இருக்கிறவர்கள் யாரும் சாராயம் குடிக்க மாட்டார்கள். குடித்தால் கண்டிப்பாக கட்சியிலிருந்து நீக்குவோம். ஆகவே அதிலே வித்தியாசம் கிடையாது. அந்த கிராமங்களில் இருக்கிற ரெவின்யூ வேலைகளைச் செய்வதற்கே முடியாத சூழ்நிலையில், இந்த நிர்வாகத்தை அவர்களிடம் ஒப்படைப்பதை விட இன்னும் காவல் துறையை அதிகப்படுத்தி அந்த கள்ளச் சாராயத்தை ஒழிப்பதிலே கடுமையான நடவடிக்கை எடுப்பதிலே ஆட்சேபணை கிடையாது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மற்ற கட்சிகளிலேயும் குடிக்கிறவர்களை ஊக்குவிப்பது கிடையாது. ஏதோ உங்கள்............................அடுத்து, திரு வி.என் சுப்பிரமணியன்.

திரு. வி. என். சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் இதய தெய்வம் புரட்சித்தலைவியின் ஆட்சியில் மாவட்ட நிர்வாகமும், வருவாய்த் துறை நிர்வாகமும் சீராகவும் செம்மையாகவும் செயல்படுகின்றது என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கு ஒரே ஒரு சான்று. கள்ளச் சாராயத்தை—தனிப் போலீஸ் படையால் ஒழிக்க முடியாத ஒன்றை, வருவாய்த் துறை நிர்வாகமும் சேர்ந்து செயல்பட்ட காரணத்தால் தான் இந்த கள்ளச் சாராயத்தை ஒழிக்க முடிந்தது என்பதை நான் ரொம்ப பெருமையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆகையால் வருவாய்த்துறை மாவட்ட நிர்வாகம் சட்டம் ஒழுங்கையும் நிர்வகிப்பதிலே அதற்கு அதிகமான பங்கும்

[திரு. வி. என். சுப்பிரமணியன்] [1991 செப்டம்பர் 20

அவர்களுக்கு அதிக அதிகாரங்களும் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், இந்த கள்ளச் சாராயத்தை ஒழிப்பதிலே அவர்களுடைய பங்கு இருந்த காரணத்தினாலே தான் இன்று கன்னச்சாராயம் இல்லாத அளவுக்கு செய்ய முடிந்ததை இந்த மன்றமே பாராட்டுகிறது என்பதை பெரு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியின் கோரிக்கையாக ஒன்றிரண்டு சொல்ல விரும்புகின்றேன். ஏற்கெனவே இராமநாதபுரம் மாவட்டம் மூன்றாக பிரிக்கப்படுகின்றபோது, மானாமதுரை தாலுகாவை இரண்டாகப் பிரித்து திருபுவனத்தை ஒரு வட்டாட்சியர் நிலையிலுள்ள தனித் தாலுகாவாக அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை இருந்தும், அது அப்போது அமைக்கப்படவில்லை. நான் கேட்பதற்குக் காரணம், மானாமதுரை தாலுகா பெரிய தாலுகாவா இருப்பதோடு மட்டுமல்லாமல், அந்தத் தாலுகாவிலுள்ள கிராமங்கள் பல மைல்களுக்கு அப்பால், அதாவது தலைமையிடத்தில் இருந்து 50 அல்லது 60 மைல் தூரத்திலே—சொல்லப் போனால் மதுரை நகருக்கு அருகிலே கூட பல கிராமங்கள் இருக்கின்றன. அந்த கிராமங்களிலிருந்து நேராக வந்து மானாமதுரைக்கு வருகின்ற எந்த போக்குவரத்தும் கிடையாது. அந்த மானாமதுரை தாலுகாவை இரண்டாகப் பிரித்து, திருபுவனத்தை தனித் தாலுகாவாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் இன்னொன்றையும் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன். மூன்று மாவட்டங்களாக பிரிக்கின்ற சமயத்திலே நரிக்குடி ஒன்றியத்திலே ஒரு 14 பஞ்சாயத்துகள் மானாமதுரை சட்டமன்ற தொகுதியிலே உள்ளடங்கி இருந்தன. அந்த 14 பஞ்சாயத்துகளிலுள்ள மக்கள், மாவட்டம் பிரிகின்றபோது தங்கள் பகுதியை பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தோடு சேர்த்து விடுங்கள், நாங்கள் இருந்துகொள்கிறோம் என்று கோரிக்கை விட்டும் அந்தக் கோரிக்கை என்ன காரணத்தினாலோ ஏற்கப்படவில்லை. ஆகவே, அதை மறுபரிசீலனை செய்து திருபுவனத்தை தாலுக்கா அந்தஸ்த்தில் பிரிக்கிறபோது 14 பஞ்சாயத்துகளை உள்ளடக்கி ஒரு தாலுக்காவாக ஆக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 5-00

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இந்தப் பெருமையுள்ள மாமன்றத்தில் நான் சொல்லிக் கொள்ள விரும்புவது நான் ஒரு தாழ்த்தப்பட்டவன் என்ற காரணத்தால் எங்களுடைய தலைவர் புரட்சித் தலைவி அவர்களுக்கு



1991 செப்டம்பர் 20] [திரு. வி. என். சுப்பிரமணியன்]

என் நன்றியைச் சொல்லக் கொள்ள விரும்புகிறேன். கிராமங்களில் குறுநில மன்னர்களாக கிராம நிர்வாக அதிகாரிகள் இருந்ததை ஒழித்து, அந்த நியமனத்தை ஒழித்து, தாழ்த்தப்பட்டவர்களும் அந்த குறுநில மன்னர்கள் இருந்த இடத்தில், அந்தப் பதவிக்கு வரலாம் என்ற நிலையை எங்களுடைய புரட்சித் தலைவர் அவர்கள் ஏற்படுத்திக் கொடுத்தார்கள் என்பதைப் பெருமையுடன் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில் தலையாரி நியமனத்தில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு அதிகமான பங்கு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதில் நடைமுறையில் பல சிக்கல்கள் இருக்கின்றன. அரசு தாழ்த்தப்பட்டவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று நினைத்தாலும் கூட அது பல காரணங்களால், அரசியல் காரணங்களால், பொருளாதார காரணங்களால், தாலுக்காவில் தாசில்தார் நினைத்தால் கூட தாழ்த்தப்பட்டவர்களை நியமனம் செய்ய முடிவதில்லை. ஆகவே, தாழ்த்தப்பட்டவர்களை தலையாரி ஆக்குவதற்கு, அதிகமான எண்ணிக்கையில் நியமிப்பதற்கு இந்த அரசு கண்டிப்பான உத்தரவை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, புறம்போக்கு நிலங்கள் எல்லாம் பல ஆண்டுகளாக எத்தனையோ லட்சம் ஏக்கர் நிலம், எத்தனையோ லட்சம் ஏழை மக்கள் இருந்தும் கூட, ஏழை மக்களுக்கு இதுவரையில் வழங்கப்பட்டதாகத் தெரியவில்லை. புறம்போக்கு நிலங்கள் எல்லாம் தனவந்தக்காரர்களும், கிராமத்தில் ஆள்பலம், பணபலம் உள்ளவர்கள், நில பிரபுக்கள் தான் அவற்றை பினாமி மூலமாக பல லட்சக்கணக்கான ஏக்கர்களை கையகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த புறம்போக்கு நிலங்களை அவர்களிடமிருந்து பிடுங்கிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நிலச் சீர்திருத்தச் சட்டத்தை கொண்டு வந்ததைப் போல, நிலச் சீர்திருத்தச் சட்டத்தில் இதையும் உள்ளடக்கி, இந்த புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிற பணக்காரர்கள், நில பிரபுக்களிடமிருந்து பிடுங்கி நிலமில்லாத லட்சக்கணக்கான ஏழை மக்களுக்கு பங்கிட்டு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கண்மாய்களில் நீர்பிடிப்பு பரப்பு இருக்கிறது. அதிலே நியாயமாக விவசாயம் செய்யக் கூடாது. இருந்தாலும் கூட எங்கள் பகுதியில் அனைத்து கண்மாய்களிலும் உள்வாய் மட்டுமல்லாமல், எல்லா இடங்களிலும் விவசாயம் செய்கிறார்கள். அந்த நில பிரபுக்கள், பணக்காரர்கள் கரும்பு போன்றவற்றை பயிர் செய்கிறார்கள். அந்த கண்மாய்க்கு தண்ணீர் வருவதைக் கூட அவர்கள் தடுத்து விடுகிறார்கள். காரணம் பணக்காரர்களுக்கு பம்ப் செட் இருக்கிறது. ஏழை மக்களுக்கு பம்ப் செட் இல்லை. கண்மாய்க்கு வருகிற தண்ணீரை, ஆற்றுத் தண்ணீரோ, மற்ற தண்ணீரோ வருவதைத் தடுத்து விட்டால், சிறுசிறு விவசாயிகள் வேலை இல்லாதது மட்டுமல்ல, சிறுசிறு அண்டு நிலங்

களை கூட கண்மாய்த் தண்ணீர் இல்லாத காரணத்தால், பம்ப்
செட் வைத்துக் கொள்ள இயலாத நிலையில், பணக்காரர்கள்
தயவை அவர்கள் நாடியிருப்பதால், அந்த துண்டு நிலங்களை
பணக்காரர்களுக்கு விற்றுவிட்டு, ஊரை விட்டே ஓடி, நகரங்களுக்கு
போய்விடுகிறார்கள். இந்த நிலைமையை நீங்கள் மாற்ற
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பணக்காரர்களும், நில
பிரபுக்களும் கண்மாய் பரப்பில் செய்திருக்கிற ஆக்கிரமிப்புகளை
அகற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.
ஒன்றும் தெரியாதவர்களிடம் தங்கள் உரிமையைக் கொண்டாடு
கிறார்கள். மற்றவர்கள் அந்த உரிமையை ஏற்றுக் கொள்ள
அவர்கள் அனுமதிப்பது இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்
கிறேன்.

சட்டம் ஒழுங்கு நிர்வாகம் என்பது மாவட்ட அலுவலகத்
திலும் சரி, தாலுக்காவிலும் சரி, அது ரெவின்யூ துறையில்
இருக்கிற காரணத்தால், சட்டம் ஒழுங்கு நிர்வாகத்திலே மிகத்
திறமையாக வருவாய்த் துறை செயல்படலாம். ஏனென்றால்
தாசில்தார் அவர்களுக்கே எக்சிகியூடிவ் மாஜிஸ்ட்ரேட் பவர்
இருக்கிற காரணத்தால், ஒழுங்கான முறையில் கிராமப்புறங்
களில் இருக்கிற சீர்கேடுகளையும், தீண்டாமையையும் ஒழிக்க
லாம் என்பது என்னுடைய யோசனை. காரணம் கிராமங்களில்
தாழ்த்தப்பட்ட மக்கள் ஒரு இம்மி அளவு கூட தங்கள் உரிமை
களை அனுபவிக்க முடியவில்லை. அவற்றின் பயனைப் பெற
முடியவில்லை. ஒரு கிராமத்தில் டீ விற்கிறார்கள் என்றால்,
அந்த டீயை பார்ப்பதற்கு கூட தாழ்த்தப்பட்ட மக்கள் அங்கே
செல்ல முடியாது. காரணம் அந்த இடத்தில் ஜாதி இந்துக்கள்
இருக்கிற காரணத்தால் தாழ்த்தப்பட்ட மக்கள் அந்த இடத்
திற்கு போக அஞ்சுகிறார்கள். போக முடியாத சூழ்நிலையில்
பயப்படுகிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலை இருக்
கிறது. ஏற்கனவே பொது கிணறுகளில் தண்ணீர் பிடிப்பது
பற்றி பிரச்சினை வந்த போது, அது ஜாதி கலவரமாக ஏற்பட்
டது. வழக்காக போட்டாலும் எந்தத் தீர்வும் ஏற்படுவது

பிற்பகல் 5.05

இல்லை. மீண்டும் அந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அந்த உரிமை
களை நிலை நாட்டுவதற்கு வாய்ப்பே கிடைக்கவில்லை. ஏற்
கனவே பட்ட அனுபவங்களும், துன்பங்களும் அவர்களுக்குக் காட்
டுவது, இனிமேல் இந்தப் பிரச்சினையிலே அவர்கள் தலையிடக்
கூடாது என்பதுதான். என்றும்போல் அவன் அடிமையாக
இருந்து விட்டால், உயிராவது தப்பிக்கலாம் என்று சொல்கிறார்
கள். ஆகையினால், இந்த நிலை மாற்றப்பட வேண்டும். தாசில்
தார்கள் நினைத்தால், அவர்கள் கள்ளச் சாராயத்தை ஒழிப்ப
தற்கு எப்படி தீவிரம் காட்டுகிறார்களோ, அதேமாதிரி தீவிரத்
தைக் காட்டினால், இந்தத் தீண்டாமையை ஒழிப்பதற்கும்,





அந்தக் கிராமத்தில் உள்ள அனைத்து நலன்களைப் பெறு
வதற்கும் உண்மையிலே இது நன்றாக இருக்கும் என்று நான்
சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மக்களுடைய குறையைத் தீர்ப்பதிலே அரசு இன்றைக்கு
குறை தீர்க்கும் நாள் ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறது. நான்
சட்டமன்ற உறுப்பினராக ஆனபிறகு, என்னுடைய தொகுதியில்
உள்ள குறைகளைக் கேட்கிறபோது, பல குறைகளை மக்கள்
சொன்னார்கள். ஏன் நீங்கள் இந்தக் குறைகளை எல்லாம்
மாவட்ட ஆட்சி தலைவரிடத்திலோ அல்லது மற்ற அதிகாரிகளிடத்
திலோ சொல்லக்கூடாது என்று நான் கேட்டதற்கு, நாங்கள்
இதோடு பத்து தடவை கொடுத்துவிட்டோம், எந்தப் பதிலும்
இல்லை. எந்த நடவடிக்கையும் இல்லை என்று சொன்னார்கள். ரொம்
பவும் நிர்வாகத்தின் மீது நம்பிக்கையில்லாத நிலைமை முன்னாலே
ஏற்பட்டிருந்தது. அப்படிப்பட்ட நிலைமை இனிமேல் ஏற்படக்
கூடாது. ஏன் என்றால், புரட்சித் தலைவியினுடைய ஆட்சி,
நல்ல ஆட்சியாக இருக்கிற காரணத்தால், இந்த நிலைகளை
எல்லாம் களைந்து, நடவடிக்கை எடுக்கவேண்டும். அவர்கள்
சொல்கிற குறைகளை சட்டமன்ற உறுப்பினர்கள்தான் தீர்க்க
வேண்டும் என்பதில்லை. சிறிய சிறிய குறைகளை, எல்லாம்
நிர்வாகத்தின் மூலமாக தீர்த்துவிடலாம். தேவைகள் அதிகமாக
இருக்கலாம். அதற்காக மக்கள் சொல்கிற தேவைகள் அனைத்
தையும் தீர்த்துவிட முடியாது. முடிந்தவரையிலும் நடக்கின்ற
காரியத்தை நடத்திக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு
எனக்கு பேச வாய்ப்பு அளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு
நன்றி கூறி, அமர்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:</u> நா.சா. பழனிசாமி

<u>திரு. நா. சா. பழனிசாமி</u>: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, வருவாய்த்துறை மானியக் கோரிக்கையின்
மீது உழவர் உழைப்பாளர் கட்சியின் சார்பிலே ஒரு சில கருத்துக்
களை முன் வைப்பதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறு
கிறேன். வருவாய்த்துறை என்பது நீண்ட பாரம்பரியம் உள்ள
ஒரு துறை என்பதோடு மட்டுமல்லாமல், வானளாவிய அதிகாரத்
தையும் கொண்டதான ஒரு துறையாக இருந்து வருகிறது. வரு
வாய்த்துறைக்கு, விவசாயிகளிடத்திலே நிலவரி, நீர் வரி
போன்றவற்றை வசூலிப்பதற்கு, ரெவின்யூ ரெக்கவரி ஆக்ட்
என்ற நில வரி வசூல் சட்டத்தின் மூலமாக ஜப்தி செய்து, வசூலிக்
கின்ற அதிகாரம் இருக்கிறது. அந்த அதிகாரத்தைப் பயன்
படுத்தி, இப்போது சட்டத்திற்குப் புறம்பாகக் கூட வருவாய்த்
துறை அதிகாரிகள் ஜப்தி செய்கின்ற நிலை இன்னும் நீடித்துக்
கொண்டு இருக்கிறது. லார்டு வெல்லெஸ்லி, இந்தியாவினு
டைய கவர்னர்-ஜெனரலாக இருந்த காலத்திலே, விவசாயிகளு
டைய நிலவரியை வசூலிப்பதற்காக-அன்று, ஆங்கில ஆட்சிக்கு

காரணத்தினால், இந்த ஜமாபந்தி முறை தேவை தானா என்பதை சற்று எண்ணிப்பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த நிதியாண்டு என்பது ஆங்கில ஆண்டினுடைய முறையாக, மற்ற துறைகளிலே கடைப்பிடிக்கப்பட்டு வருகின்ற போது இந்த பசலி என்ற முறையை, விவசாயிகளுக்கே அது என்ன வென்றே புரிந்து கொள்ள முடியாத ஒரு முறையை தொடர்ந்து இந்த வருவாய்த்துறை கடைப்பிடிக்க வேண்டுமா என்பதை வருவாய்த்துறை அமைச்சர் அவர்களுக்கு நான் ஒரு வேண்டுகோளாகச் சொல்லி, அதை நவீனப்படுத்தி விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு இவ்வளவுதான் தீர்வை என்று விதிக்கப்பட வேண்டும். இப்போது பலமுனை வரி என்பது ஒரு முனை வரியாக ஆக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நில வரி என்பது, சர்சார்ஜ் என்றும், அடிஷனல் சர்சார்ஜ் என்றும் அடிப்படைத் தீர்வை என்றும் எப்படியோ கணக்கைப்போட்டு, அந்தக் கணக்குகளுக்கு வரியை செலுத்துகின்ற விவசாயிகளுக்கே அது என்னவென்றே புரியாத நிலை இருந்து கொண்டிருக்கிறது.

பிற்பகல் 5-15

அதற்குப் பதிலாக ஏக்கர் நஞ்சை என்றால் இவ்வளவு தீர்வை. புஞ்சை என்றால் இவ்வளவு தீர்வை, கிணற்றுப் பாசனம் என்றால் இவ்வளவு தீர்வை என்று ஒரு தீர்வையை விதித்துவிட்டு பட்டா பாஸ் புத்தக முறையைக் கொடுத்து அவர்களுடைய நிலத்தின் அளவு என்ன, அதிலே கடன் எவ்வளவு இருக்கிறது, வில்லங்கம் என்ன இருக்கிறது என்ற அனைத்தும் அதிலே வந்துவிடுமானால் விவசாயிகள் நிலவரி செலுத்துவதிலே பிரச்சினைகள் இருக்காது. நில வரியை ஒழுங்காகச் செலுத்தி விடுவதற்கும் வாய்ப்பு ஏற்படும். அதோடு அல்லாமல் இந்த பாசன பகுதிகளில் குறிப்பாக கோவை பெரியார் மாவட்டங்களில் பரம்பிக்குளம் ஆளியாறு பாசனத்திலும், லோயர் பவானி பாசனத்திலும் பயிர் வாரி தீர்வு விதிக்கின்ற முறையை வைத்திருக்கிறார்கள். நெல்லுக்கு என்று ஒரு தீர்வை, கடலைக்கென்று ஒரு தீர்வை, வாழைக்கென்று ஒரு தீர்வை, கரும்புக்கென்று ஒரு தீர்வை என்று பயிர்வாரி முறையை வைத்திருக்கும்போது, அதை அஜ்மாஷ் செய்கிற அதிகாரிகள் நெல்லை புல் என்றும் எழுதிவிடுகிறார்கள். புல்லை நெல் என்றும் எழுதி விடுகிறார்கள். இப்படிச் செய்கிற நேரத்திலே நெல்லை அவர்கள் அனுமதிக்காத பகுதியில் விவசாயம் செய்கிறபோது அதற்கு தண்டத் தீர்வையை விதிக்கின்றார்கள். அந்தத் தண்டத் தீர்வையை 20 மடங்கு சாதாரண தீர்வையிலிருந்து விதிக்கலாம் என்று சட்டத்திலே இடம் இருக்கிறது. அப்படி 20 மடங்கு தீர்வையை விதிக்கின்ற போது ஒரு ஏக்கருக்கு 2 ஆயிரம் ரூபாய் வரை கட்ட வேண்டியிருக்கிறது. ஆகவே அந்தத் தண்டத் தீர்வையை விதிக்கக் கூடாது என்று சொல்லி, விவசாயிகளுக்கு சென்ற முறை விதித்த தண்டத் தீர்வையைக் கூட ரத்து செய்திருக்கிறார்கள். தண்டத் தீர்வையை விதிப்பதும் மீண்டும் அதை ரத்து செய்வதும் என்ற



நிலையை எதற்காகத் தொடரவேண்டும்? விவசாயிகள் தண்ணீரைப் பாய்ச்சி பயிர்தானே விளைவிக்கிறார்கள். அவர்களுடைய நிலத்திலே என்ன பயிரை விளைவித்தால் நன்கு வரும் என்பதை விவசாயிகள் உணர்ந்துதான் பயிர் செய்கிறார்களே அல்லாமல் இன்ன பயிரைத்தான் விளைவிக்க வேண்டும் என்று கட்டுப்படுத்தி சட்டம் போட்டு ஒரு பயிரை விளைவித்தால் அந்த விவசாயிகளுக்கு நஷ்டம்தான் வரும். மேல் பகுதி இருப்பவன் நெல்லை பயிரிட்டிருந்தால் அதற்கு கீழ் பகுதியில் கடலை பயிரிட்டிருப்பான். அந்த வரப்பு தண்ணீரிலேயே அவனுடைய கடலை பாழ்படுகிற வாய்ப்பு இருக்கிறது. இப்படி பல சூழ்நிலைகள் இருக்கிற காரணத்தால் அதற்குத் தண்டத் தீர்வை விதிப்பதற்குப் பதிலாக, பயிர்வாரி தீர்வை விதிப்பதற்குப் பதிலாக ஏக்கர் வாரியாக விதிக்க வேண்டுகிறேன். ஆளியாறு பாசனம் நம்முடைய மாநிலத்திலேயும் பாய்கிறது. கேரள மாநிலத்திலேயும் பாய்கிறது. கேரளத்திலே அவர்கள் ஏக்கருக்கு இவ்வளவு என்ற முறையில் தான் தண்ணீர் வரி வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள். அதைப்போல் நம்முடைய தமிழ்நாட்டிலும் ஏக்கர் வரியாக தண்ணீர் வரி வசூலிக்கவேண்டுகிறேன்.

இப்போது ஒரு விவசாயி பரம்பிக்குளம்—ஆளியாறு பகுதியிலே தண்ணீர் பாய்கின்ற நேரத்திலே கிணற்றிலேயிருந்து தண்ணீரை பாய்ச்சினால் அதற்கு 4 மடங்கு தீர்வை விதிக்கின்ற அதிகாரம் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். ஆனால் பரம்பிக்குளம்-ஆளியாறு பாய்கின்ற தண்ணீர் பகுதியில் இன்று திருப்பூரிலே உள்ள சாய சலவைப்பட்டறையினைச் சேர்ந்தவர்கள் நாள் ஒன்றுக்கு நான்கு, ஐந்து லாரி தண்ணீரை பரம்பிக்குளம்–ஆளியாறு பாசனப் பகுதியிலேயிருந்து விலைக்கு கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். விவசாயிகள் தண்ணீரை விவசாயத்திற்கு பயன்படுத்துவதற்குப் பதிலாக விற்றுக்கொண்டிருக்கிறார்கள். நான்காயிரம், இரண்டாயிரம் ரூபாய்க்கு விற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிற நேரத்திலே, தண்ணீரை விவசாயிகள் விற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். குளங்களிலேயிருந்து விற்றுக்கொண்டிருக்கிறார்களா. தங்களுடைய சொந்த பட்டா நிலத்தில் உள்ள கிணறுகளில் இருந்து விற்றுக்கொண்டிருக்கிறார்களா அல்லது அரசுக்குச் சொந்தமான இடங்களிலே தேக்கிவைக்கப்பட்டிருக்கும் குளங்களிலே, கண்மாய்களிலே இருந்து விற்றுக் கொண்டிருக்கிறார்களா, என்று தெளிவுபடுத்தாமல் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அரசு தரப்பிலே இருக்கின்ற குளங்களிலே இருந்து கண்மாய்களிலேயிருந்து யாராவது தண்ணீரை [illegible] அதற்குரிய நடவடிக்கையை [illegible]

நிலவரி ஒன்றுதான் வருமானம் என்று கருதினார்கள். அந்த நில வரியை வசூலிப்பதற்காக-கலெக்டர் என்ற அதிகாரியையும் அவருக்கு அந்த நிலவரியைக் கடுமையாக நடவடிக்கை எடுத்து வசூலிப்பதற்கு நில வரி வசூல் சட்டத்திலே பாதுகாப்பையும் கொடுத்து இருந்தார்கள். அந்த நிலவரி வசூல் சட்டத்திலே கூட எந்தந்தப் பொருட்களை ஜப்தி செய்யலாம், எதை ஜப்தி செய்யக்கூடாது என்று வரைமுறையை அவர்கள் வைத்திருந்தார்கள்.

ஒரு விவசாயினுடைய ஒரு ஜோடி உழவு மாட்டை ஜப்தி செய்யக்கூடாது. ஒரு விவசாயினுடைய விதை தானியத்தை ஜப்தி செய்யக்கூடாது. அவனுடைய கறவை மாடுகளை ஜப்தி செய்யக் கூடாது. அவனுடைய சமையல் பாத்திரங்களை ஜப்தி செய்யக் கூடாது. அவனுடைய படுக்கை சாமான்களை ஜப்தி செய்யக் கூடாது. அவனுடைய கதவு நிலவுகளை ஜப்தி செய்யக்கூடாது, அவனுடைய நீர் இறைக்கின்ற கருவிகளை ஜப்தி செய்யக்கூடாது என்று ஜப்தி செய்வதிலே கூட, எதை எதை எல்லாம் ஜப்தி செய்யக்கூடாது என்று வரைமுறையை வைத்துத்தான் அந்த அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.
(குறுக்கீடு).

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள்.

<u>மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்</u> : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் சொன்னது எல்லாம், புரட்சித் தலைவர், இதய தெய்வம், எம்.ஜி.ஆர். போட்ட உத்தரவை அப்படியே படிக்கிறார் என்று கருதுகிறேன்.

*பிற்பகல் 5:10*

<u>திரு. நா. சா. பழனிசாமி</u> : புரட்சித் தலைவர் அவர்கள் அப்படி ஒரு உத்தரவைப் போட்டிருந்தால் நிச்சயமாக நான் அதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் புரட்சித் தலைவி தமிழகத்தினுடைய முதலமைச்சராக இன்று பதவி பொறுப்பேற்றிருக்கின்ற இப்பொற்காலத்தில் விவசாயிகள் எல்லாம் புரட்சித் தலைவி அவர்களை பாதுகாவல் தெய்வமாக எண்ணிக்கொண்டிருக்கின்ற நேரத்திலே, இன்று வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம் குடியாத்தம் தாலுக்காவிலே, வட்டாட்சித் தலைவருடைய உத்தரவின் பேரிலே 1981ஆம் ஆண்டு சிறு விவசாயிகளுக்காக கிணறுகளை ஆழப்படுத்த கொடுத்திருந்த ரூ. 2,500-கடனுக்காக, அந்தக் கடனை வசூலிப்பதற்காக இப்போது குடியாத்தம் வட்டாட்சியர் அவர்கள் முக்குன்றம் என்ற கிராமத்திலே ஜப்தி நடவடிக்கை மேற்கொண்டு நான்கு விவசாயிகளுடைய கறவை மாடுகளை ஜப்தி செய்து சென்றிருக்கிறார்கள். கறவை மாடுகளை. கன்றை விட்டுவிட்டு மாட்டை ஜப்தி செய்து சென்றிருக்கிறார்கள். அதனால் தாமோதரன் என்ற விவசாயி



யினுடைய கன்றுக்குட்டி இறந்திருக்கிறது. 9—9—1991-ஆம்தேதி யன்று நடைபெற்ற அந்த ஜப்தி, அந்தப் பொருளானது இன்று வரையிலும் திருப்பித் தரப்படவில்லை. அவர்களுக்குக் கொடுத்த கடன் ரூ. 2,500 கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக. ரூ. 2,500 -லே இன்று இரண்டு அடி கிணற்றைக்கூட ஆழப்படுத்தமுடியாது. அவ்வளவு சிறு தொகை தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் அனைவருமே ஐந்து ஏக்கருக்கும் குறைவான நிலத்தை வைத்திருக்கின்ற மிகச் சிறிய விவசாயிகள். அவர்களை ஈவு இரக்கமில்லாமல் கன்றை விட்டுவிட்டு மாட்டை ஜப்தி செய்துவிட்டு இன்று வரை அந்த மாட்டைத் திருப்பிக் கொடுக்கவில்லை. கன்று கூட இறந்திருக்கிறது. அதிலே ஒரு விவசாயி கன்று இறந்துவிடும் என்ற பயத்திலே அவர் ரூ. 2500 பணத்தைக் கட்டி மாட்டைத் திருப்பி பிடித்து வந்திருக்கிறார்கள். இப்படி புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் தாய் உள்ளம் கொண்ட முதலமைச்சருடைய ஆட்சியில் கன்றை விட்டு விட்டு தாயை பிடித்துச் செல்கின்ற இந்த செயலை அந்த வட்டாட்சியர் அவர்கள் செய்திருக்கிறார்கள். அவர்கள் மீது இந்த அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று விவசாயிகள் இயக்கத்தின் சார்பில் நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

எனவே இப்படிப்பட்ட ஜப்தி நடவடிக்கைகளை எதிர் காலத்திலாவது புரட்சித் தலைவியினுடைய அரசிலே விவசாயிகள் மீது அவமானப்படுத்துகின்ற, கேவலப்படுத்துகின்ற அந்த ஜப்தி நடவடிக்கை தொடரக்கூடாது என்ற வேண்டுகோளை இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்று வருவாய்த்துறையினுடைய கணக்குகள் வருவாய்த் துறையினுடைய நடைமுறைகள் எல்லாம் அக்பர் காலத்திலே இருந்து கொண்டிருக்கிறது. பசலி என்ற கணக்கு முறை மொகலாய மன்னர் அக்பர் காலத்திலே துவக்கப்பட்டு இன்று 1441 பசலி நடந்து கொண்டிருக்கிறது. பசலி என்பது என்னவென்று எத்தனை சராசரி விவசாயிகளுக்கு தெரியும்?

அதுமாதிரி ஜமாபந்தி என்ற ஒரு முறை வைத்திருக்கிறார்கள். அந்தக் கணக்கு முறை எவ்வளவு பழமையானது. அந்தக் கணக்கு முறையிலே இப்போது என்ன நடந்து கொண்டிருக்கிறது? கிராம நிர்வாக அதிகாரிகள் அங்கே விவசாயிகளிடத்தில் ஜமாபந்தி செலவுக்கென்று ஒரு பணத்தை வசூலிக்கிறார்கள். அந்த வசூல் தொகை மேல் மட்டம் வரை செல்கிறது. அன்று அவர்கள் மூட்டை கட்டிக்கொண்டு அந்த ஜமாபந்தி கணக்குக் கொண்டு செல்கிறார்கள். அந்த கணக்குசரி என்று திரும்பவும் மூட்டை கட்டப்பட்டு வருகிறது. இன்றைக்கு எவ்வளவோ நவீன முறையில் கணக்குகளின் தணிக்கை முறை வந்திருக்கிறது. 'சார்ட்டர்ட் அக்கௌண்டண்ட்ஸ்' வந்திருக்கிறார்கள். ஆடிட்டர்கள் இருக்கிறார்கள். அவர்களை வைத்து சரியான முறையில் கணக்கு செய்யக் கூடிய அளவிற்கு வசதி வாய்ப்புகள் ஏற்பட்டிருக்கின்ற

என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். பட்டா நிலங்களிலே உள்ள கிணறுகளிலேயிருந்து தண்ணீரை விற்றுக் கொண்டிருப்பவர்களுக்கு எந்த அளவுக்கு இந்த அரசால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை பரிசீலிப்போம்.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு நீர் ஆதாரத்தின் மூலமாக பாசனம் பெறுகிற பரம்பிக்குளம்-ஆளியாறு பாசனப் பகுதியில் அந்தத் தண்ணீர் பாய்வதால் தான் கிணறுகளுக்கு தண்ணீர் வருகிறது. அந்தக் கிணறுகளிலேயிருந்து தான் அவர்கள் தண்ணீரை விலைக்கு விற்றுக்கொண்டிருக்கிறார்கள். பாசனத்திற்கு விடப்பட்ட தண்ணீரை அந்த பாசன காலத்தில் கிணற்றிலேயிருந்து நேரிடையாக பாய்ச்சினால் 4 மடங்கு தீர்வை விதிக்கின்ற அதிகாரம் வருவாய்த் துறைக்கு இருப்பதாகச் சொல்லுகிறார்கள். பாசனத்திற்கு விடப்பட்ட தண்ணீரை இன்னொரு தொழிற்சாலைக்கு விற்றிருக்கிறபோது அதைத் தடுப்பதற்கான அதிகாரம் அந்த வருவாய்த் துறைக்கு இல்லையா என்றுதான் நான் அதைச் சொன்னேன்.

பிற்பகல் 5-20

எனவே வருவாய்த் துறை அதிகாரிகளிடம் நாங்கள் இதை முறையிடுகின்றபோது. அவர்கள் எங்களுக்கு தனியார் கிணற்றிலிருந்து தண்ணீரை விற்பதை தடுப்பதற்கு அதிகாரம் இல்லை. சட்டத்திலே இடம் இல்லை என்று சொல்கிறார்கள். காவல் துறையைச் சேர்ந்தவர்கள், விவசாயிகள் அந்தத் தண்ணீர் லாரியைத் தடுக்கின்றபோது நீங்கள் தடுக்கக்கூடாது என்று அவர்களைத் கைது செய்கிறார்கள். எனவே இதற்கு ஏதாவது ஒரு சட்ட வழி முறையை ஏற்படுத்தி பாசனத்திற்காக விடப்படுகின்ற தண்ணீரை ஏதோ குடிநீருக்காக ஒருசில லாரிகள் எடுத்துச்செல்வதை யாரும் ஒரு பிரச்சினையாக எடுத்துக் கொள்வது இல்லை. ஆனால் பல்லாயிரக்கணக்கான லாரிகள் நாள் ஒன்றுக்கு 4,000 லாரி லோடு, ஒவ்வொரு லாரியும் 30,000 லிட்டர் கொள்ளளவு உள்ள லாரிகளில் எடுத்துச் செல்கின்றபோது அந்தப் பகுதியினுடைய நிலத்தடி நீர்வளமே அடியோடு சென்றுவிடுகிறது. விவசாயிகள் அந்தத் தண்ணீரை 2 ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் பாசனத்திற்குப் பெறுகிறார்கள். அந்தத் தண்ணீர் எல்லாம், நிலத்திலே ஊறுகின்ற தண்ணீர் எல்லாம் அந்த லாரிகளிலே எடுத்துச் செல்லப்படுகின்ற காரணத்தினால் ஒரு சில மாதங்களில் அந்தப் பகுதி மீண்டும் [illegible] அந்தப் பகுதியிலே உள்ள கிராமங்



களில் குடிப்பதற்கே தண்ணீர் இல்லாமல் சென்றுவிடுகிறது. பஞ்சாயத்து ஒன்றியம் பிறகு மீண்டும் லாரியிலே தண்ணீர் எடுத்து வந்து கிராமத்திற்கு ஊற்றவேண்டிய நிலை ஏற்படுகிறது. எனவே இதைக் கருத்திலே கொண்டுதான் லாரிகளில் தண்ணீர் எடுத்துச் செல்வதை வருவாய்த் துறை அதிகாரிகள் தடுக்கின்ற அதிகாரத்தை கொடுக்கவேண்டும் என்று இந்த மன்றத்தின் சார்பாக கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இந்த வருவாய்த் துறையிலே இருக்கின்ற கிராம நலப் பணியாளர்கள், இவர்களுக்கு இப்பொழுது கூடுதலாக கள்ளச் சாரயத்தை பிடிக்கும் வேலையைத் தருகிறார்கள். அவர்கள் எல்லாம் ஆதிதிராவிட மக்கள். அந்தக் காலத்திலேகூட ஒரு பழமொழி உண்டு. நாட்டிற்கு நல்ல தொரை வந்தாலும் தோட்டிக்கு புல் சுமை போகாது என்று சொல்வார்கள். யார் அதிகாரத்திலே வந்தாலும் கூட அவர்கள் கொத்தடிமைகளாக இருக்கின்ற நிலைமை தான் இருந்து கொண்டிருக்கிறது. வருவாய்த் துறையிலே கொத்தடிமையை விடுதலை செய்கின்ற அதிகாரிகள் இன்று கிராம நலப் பணியாளர்களை அவர்களுடைய வீட்டு வேலைக்கும் மற்றும் தோட்ட வேலைக்கும் எல்லாம் பயன்படுத்தி கொத்தடிமைகளாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு பணி நிரந்தரம் செய்யப்பட வேண்டும். அதேபோல கிராம நல அலுவலர்களுக்கு எல்லா சான்றிதழ்களும், கேரள மாநிலத்திலே கொடுக்கப்பட்டிருப்பதைப் போல ஜாதிச் சான்றிதழ், வருமானச் சான்றிதழாக இருந்தாலும், குடியிருப்புச் சான்றிதழாக இருந்தாலும் எப்படி ஜாமீன் கொடுப்பதற்கு நீதிமன்றத்திற்கு சான்றிதழ் கொடுக்க அதிகாரம் இருக்கிறதோ அதைப்போல அவர்களுக்கு எல்லா சான்றிதழ்களையும் கொடுக்கின்ற அதிகாரத்தை கொடுத்து அவர்களுக்கு ஒவ்வொரு கிராமத்திலும் கிராம நிர்வாக அலுவலர்கள் அலுவலகத்தைக் கட்டி, அங்கே அவர்கள் தங்கியிருக்க ஏற்பாடு செய்யவேண்டும். இப்போது கிராம நிர்வாக அலுவலர்களுக்கு எங்குமே கட்டிடம் அதிகம் கிடையாது. ஆனால் ஊராட்சி மன்றங்களுடைய கட்டிடங்கள் பெரும் பகுதி உபயோகப்படுத்தடாமல் இருக்கின்றன. அந்த ஊராட்சி மன்ற கட்டிடத்திலாவது கிராம நிர்வாக அலுவலர்களுக்கு கட்டிடத்தைக் கொடுத்து அவர்களுடைய அலுவலகத்தை அங்கே வைத்து விவசாயிகள் அவர்களை எந்தநேரத்திலும் சென்று சந்திப்பதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று தெரிவித்துக்கொண்டு இந்த வாய்ப்பினை கொடுத்ததற்கு நன்றி தெரிவித்து முடிக்கிறேன்.

மாணபுமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. மு. தென்னவன்.

திரு. மு. தென்னவன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய துறை

அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்டு விவாதித்துக் கொண்டிருக்கின்ற வருவாய்த்துறை மானியத்திலே சில கருத்துக்களை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 5-25

வருவாய்த துறை என்பது பெரும்பான்மை மக்களோடு தொடர்புடைய ஒரு துறையாகும். ஒரு அரசுக்கு நல்ல பெயர் வரவேண்டுமென்றால், வருவாய்த் துறை சிறப்பாகச் செயல்பட வேண்டும். அதிலே சிறு ஓட்டை இருந்தால்கூட, எவ்வளவு பெரிய சக்திமிக்க அரசாக அந்த அரசாங்கம் இருந்தாலும், அந்த அரசுக்கு மிக விரைவிலே கெட்ட பெயர் வந்துவிடும். ஆகவே அப்படி பெருமைக்குரிய மக்களுக்கு பயன்படுகிற, மக்களோடு தொடர்புள்ள வருவாய்த் துறை மானியத்திலே சில கருத்துக்களை இங்கே நான் எடுத்துவைக்க விரும்புகிறேன். அரசாங்கத்திற்கு வருவாயே தராத துறைக்கு வருவாய்த் துறை என்று பெயர் இருக்கிறது.

கண் இல்லாதவனுக்கு கண்ணாயிரம் என்று பெயர் இருப்பதுபோல, கருணை இல்லாதவனுக்கு கருணாநிதி என்று பெயர் இருப்பதுபோல வருவாய் தராத துறைக்கு வருவாய்த் துறை என்று பெயர் நீடிக்கலாமா என்று நான் கேட்க விரும்புகிறேன். ஆகவே அந்தப் பெயரை மாற்றி நில நிர்வாகத் துறை என்று பெயர் சூட்ட வேண்டுமென்று ஒரு கோரிக்கையை நம்முடைய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் மூலம் நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் முன்வைக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் மாண்புமிகு சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தென்னவன் அவர்கள் வருவாய்த் துறை அமைச்சருக்கு வருவாய் இல்லை என்று சொன்னார்கள். அவருடைய பொறுப்பிலேதான் பத்திரப் பதிவு இன்றைக்கு இருக்கிறது. அதன்மூலம் ஆண்டு ஒன்றுக்கு 300 கோடி ரூபாய்க்கு மேல் வருவாய் வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

திரு. மு. தென்னவன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பத்திரப் பதிவுத் துறை என்றுதான் சொல்லுகிறார்களே தவிர வருவாய்த் துறை என்று சொல்லுவது இல்லை. மக்களுக்குப் பயன்படுகிற காரணத்தால் சுகாதாரத் துறை என்று இருந்ததை மக்கள் நல்வாழ்வுத் துறை என்று மாற்றினார்கள். சமூகத்தில் இருக்கின்றவர்களுக்கு



சமுதாயத்தில் இருக்கின்றவர்களுக்குப் பயன்படுகின்ற காரணத்தால் சமூக நலத்துறை என்று சொல்லுகிறார்கள். ஆனால் வருவாய்த்துறையின் மூலம் நிலவரி போன்ற வரிகள் வந்தாலும் அந்த வரிகள் எல்லாம் அந்த அதிகாரிகளுக்குத்தான் போகிறதே தவிர அதனால் அரசுக்கு எந்த லாபமும் இல்லை என்பதை நான் சுட்டிக்காட்டுவதற்காகத்தான். . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைக் துணைத் தலைவர் அவர்களே, அந்தத் துறைக்கு வருவாய்தான் இல்லை. பெயராவது இருந்து விட்டு போகட்டுமே, அதற்கு அவர் இவ்வளவு தூரம் சொல்லுவது வருத்தமாக இருககிறது. பெயராவது இருக்கலாமே என்பதுதான் என்னுடைய கருத்து.

திரு. மு. தென்னவன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கருணை இல்லாதவனுக்கு கருணாநிதி என்று பெயர் இருப்பது போல இதுவும் இருந்து விட்டு போகட்டும். எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்கு வருவாய்த் துறை என்று பெயர் வந்ததற்குக் காரணமே 1937ஆம் ஆண்டு இந்த மாநிலத்தின் மொத்த வருவாய் 16 கோடி ரூபாய்தான். அதிலே 8 கோடி ரூபாய் நிலவரியின் மூலமாக வந்தது. அந்த அளவுக்கு இப்போது உயர்த்தித் தருவீர்களானால், பெயரை எல்லாம் நீங்கள் காப்பாற்றுவீர்களானால் நிதித்துறையைப் பொறுத்தவரையில் ரொம்ப நன்றாக இருக்கும் என்பதைதான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (சிரிப்பு).

திரு. மு. தென்னவன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போதுள்ள நிலவரி முறை 1923 ஆம் ஆண்டு நிலஅளவு வந்தபோது உருவான முறை. அடிப்படை வரி, உள்ளூர் வரி, தண்ணீர் வரி, தண்ணீர் கூடுதல் வரி, போன்றவை இன்னும் காசு கணக்கிலே தான் உள்ளது. பல மாநிலங்களிலே நிலவரி முறை மாற்றப்பட்டு மக்கள் புரிந்துகொள்ளும் வகையில் ஒட்டுமொத்த வரி 'பிளாட் ரேட்' கொண்டுவரப்பட்டுள்ளது. அதைப்போலவே தமிழகத்திலும் ஒட்டுமொத்த வரி முறையைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. மு. தென்னவன்] [1991 செப்டம்பர் 20

இங்கே எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் ஜமாபந்தியைப் பற்றி சொன்னார்கள். நம்முடைய வருவாய்த் துறை அமைச்சருக்கு ஒரு வரலாறு உண்டு. இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது வருவாய்த் துறையிலே ஒரு புரட்சியை ஏற்படுத்தினார்கள். வெள்ளைக்காரன் காலத்தில் இருந்த ரெவின்யூ போர்டு என்று சொல்லப்படுகின்ற அந்த போர்டை கலைக்க வேண்டும் என்பதற்காக பல முயற்சிகள் எடுக்கப்பட்ட நேரத்திலும், கலைக்காத நேரத்திலும், அந்த வருவாய் போர்டை கலைத்தார்கள். அதைப்போல கிராம உத்தியோகஸ்தர்களை நீக்கி விட்டு கிராம நிர்வாக அலுவலர்களை உருவாக்கி கிராமத்திலே ஒரு மறுமலர்ச்சியை உருவாக்கினார்கள். ஒரு ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்தவன் மாவட்ட ஆட்சித் தலைவராக வரலாம்; மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளராக வரலாம்: அமைச்சராகக் கூட வரலாம்; ஏன் ஜனாதிபதியாகக்கூட வரலாம்; ஆனால் கிராமத்தில் ஒரு ஹெட்மேன் ஆகவோ, கணக்குப்பிள்ளையாகவோ வந்ததாக சரித்திரம் இல்லை. ஆனால் அப்படிப்பட்ட அந்த துறையிலே சற்று ஏறக்குறைய 3 ஆயிரம் ஆதி திராவிடர்களைக் கிராம நிர்வாக அலுவலர்களாக உருவாக்கி ஒரு புரட்சியைச் செய்த பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசுக்கும் உண்டு; நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சருக்கும் உண்டு. ஆகவே அப்படிப்பட்ட சரித்திரத்தைப் படைத்ததைப் போல நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல ஜமாபந்தி முறையை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வெள்ளைக்காரன் காலத்தில் தான் ஜமாபந்தி முறை தொடங்கப்பட்டது. அன்றைக்கு அதிகாரிகளைச் சந்திப்பதற்கு மக்களால் முடிய இல்லை; மக்களை அதிகாரிகள் சந்திப்பது இல்லை. அந்த நிலை இருந்தது.

பிற்பகல் 5.30

ஆனால் இன்றைக்கு அந்த நிலை தேவையில்லை. ஆகவே, ஜமாபந்தி முறை என்பது இன்றைக்கு சமபந்தியைப்போல் ஆகிவிட்டது. பந்தியிலே பரிமாறுவதைப் போல ஒவ்வொரு கட்டத்திலும் அதிகாரிகளுக்கு லஞ்சத்தைக் கொடுத்துத்தான் கணக்குகளைக் கிராம நிர்வாக அலுவலர்கள் முடிக்க வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே, அந்த ஜமாபந்தி முறையை, கிராம நிர்வாக அலுவலர்களை உருவாக்கியதைப் போல, ரெவின்யூ போர்டை கலைத்ததைப் போல, ஜமாபந்தி முறையை நீக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, கேரளா போன்ற மாநிலங்களில் கணக்குகளைத் தணிக்கை செய்கின்ற முறை இருக்கிறது. அந்த முறையை தமிழ்நாட்டிலும் பின்பற்றலாம் என்று நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். நம்முடைய மாநிலத்திலே கிராம நிர்வாக அதிகாரிகள் 12,500 பேர் இருக்கிறார்கள்



1991 செப்டம்பர் 20]

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கேரளாவிலே இருக்கும் வரி முறையைப்பற்றி அங்கே எப்படி வசூலித்து இருக்கிறார்கள் என்பதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிந்தால் அதை இப்போது சொல்லலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. மு. தென்னவன்.

திரு. மு. தென்னவன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் கேட்டுத் தெரிந்து கொள் வதைவிட மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கேரள அரசோடு தொடர்பு கொண்டால் நிச்சயம், எங்களை விட அதிகமான ஆதாரங்களை......

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பழங்காலத்திலே கிராமங்களிலே சொல்வார்கள். ''இக்கரைக்கு அக்கரை பச்சை'' என்று. அதேபோல, பிற மாநிலங்களுக்குச்சென்று அதைப்பற்றித் தெரியாமல், பல்வேறு உறுப்பினர்கள் கேரளாவைப் பார்; கர்நாடகாவைப் பார்; மேற்கு வங்கத்தைப் பார் என்று சொல்கிறார்கள். அதேபோல நம்முடைய ஆளுங்கட்சி உறுப்பினர் அவர்களும் கேரளாவை, என்னைப் பார்க்கச் சொல்கிறார்கள்.

திரு. மு. தென்னவன் : மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுக்குத் தெரிந்த கருத்துக்களை இந்த மன்றத்தில் நாங்கள் எடுத்துச் சொல்கிறோம். ஆகவே எந்த முறையைப் பின்பற்றினால் நம்முடைய நாட்டு மக்களுக்கு நல்லது என்பதனை உணர்ந்து செயல்படுகிற இந்த அரசு, அந்த அடிப்படையில் செயல்படுவதற்கு நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் உறுதுணையாக இருக்க வேண்டுமென்று நான் மெத்த பணிவன்போடு கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தொடங்குகிறேன் என்று சொல்லக்கூடாது. உறுப்பினர் அவர்கள் உரையை முடிக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இதற்கெல்லாம் உறுதுணையாக இருக்க வேண்டுமென்று சொல்வது அவ்வளவு பொருத்தமாக இல்லை என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. மு. தென்னவன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கருத்துக்குத்தான் துணையாக இருக்க வேண்டுமென்று சொன்னேனே தவிர, வேறு அர்த்தத்தில் நான் சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் பேசுகின்றபோது அவர்களுடைய கருத்துக்களைச் சொல்லலாம். ஆனால், ஒரு அமைச்சரை, உறுப்பினர்கள், இதற்கெல்லாம் உறுதுணையாக இருக்கவேண்டுமென்று சொல்வது அவ்வளவு பொருத்தமாக இல்லை என்று நான் கருதுகிறேன்.

**திரு. மு. தென்னவன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ்நாட்டிலே 12,500 கிராம நிர்வாக அலுவலர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஒரே சங்கமாக இருக்கிறார்கள். ஆனால் அந்த கிராம நிர்வாக அலுவலர்களையெல்லாம் மாற்ற வேண்டும் என்கிற உணர் விலே கடந்த கால ** **

**மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே ** **

**திரு. மு. தென்னவன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1984ஆம் ஆண்டு தேர்வாணைக் குழு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம நிர்வாக அலுவலர்கள் இன்னும் கிராம நல அலுவலர்களாகத்தான் இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஊரக வளர்ச்சித் துறையில் உள்ளவர்களை அலுவலகத்தில் நியமிப்பதுபோலவும், அலுவலகத்தில் உள்ளவர்களை கிராம நல அலுவலர்களாக நியமிப்பதைப் போலவும், கிராம அதிகாரிகளை..............
(மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மத்திய பேரரசு தன்னுடைய வரவு-செலவுத் திட்டத்தை ரொம்ப

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பெற்றது.



நெருக்கடியான நிலையில் அறிவித்து, மாநில அரசுகளையும் ...லே இக்கட்டான நிலையிலே வைத்திருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் மத்திய அரசிடம் சென்று பல்வேறு கோரிக்கைகளுக்கு நிதிகளை ஒதுக்க வேண்டுமென்று கேட்டு வந்திருக்கிறார்கள்.

பிற்பகல் 5.35

வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். ஆனால் எந்தவிதமான பயனும் இல்லை. ஆனால் அதை எதிர்பார்த்துக் கொண்டேயிருக்கிறோம். இன்றைக்கு நாம் 1,000 கோடிக்கும் மேலே அதிகமான பற்றாக்குறையாக வருவதைக் குறைத்துக்கொண்டு, அதை எப்படி—நம்முடைய நிதிநிலையைச் சரிக்கட்டுவது என்ற சங்கடத்திலே இந்த அரசு இருக்கிறது. இப்படிச் சங்கடத்திலே இந்த அரசு இருக்கிறபொழுதுகூட, இன்றைக்கு மலிவு விலை சாராயத்தை ஒழித்ததற்காக 350 கோடி நஷ்டம் என்றாலும், நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இவைகளையெல்லாம் மக்கள் நலப் பணி என்பதற்காகச் செய்து கொண்டிருக்கிறார்கள். இப்படிச் செய்து கொண்டிருக்கிறபொழுது இன்றைக்கு அவர்களுக்கெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் சம்பளப் பணத்தை ஏற்ற வேண்டும், ஏற்ற வேண்டும் என்று சொல்வது, இவைகளையெல்லாம் அறியாமல் சொல்கிறார்களோ என்று நான் கருதுகிறேன்.

**திரு. மு. தென்னவன் :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, நம்முடைய புஞ்சை நிலங்களுக்கு விதிக்கப்படுகின்ற நில வரியை ரத்து செய்திருப்பதை நான் பாராட்டுகிறேன். ஐந்து ஏக்கர்களுக்கும் குறைவாக நஞ்சை நிலங்களை வைத்திருக்கின்ற சிறு விவசாயிகளுக்கு நில வரியை ரத்து செய்ததை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல, தமிழ்நாடு நலிந்தோர் குடும்ப நல நிவாரணத் திட்டத்தின் மூலம் 3,000 ரூபாயாக இருந்ததை 5,000 ரூபாயாக உயர்த்தியதற்கு நான் பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது) ஒரே ஒரு கருத்தை மட்டும். .......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. கோ. ஜானகிராமன்.

**திரு. கோ. ஜானகிராமன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே. மாவட்ட நிர்வாகம் மற்றும் வருவாய்த் துறை மானியக் கோரிக்கைகளின் பேரில் எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவரவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாவட்ட நிர்வாகத்தைச் சீர்படுத்தவும், செம்மைப்படுத்த
யும் பெரிய மாவட்டங்களை இரண்டாகப் பிரிக்கின்ற தி
ங்களை நாங்கள் வரவேற்கின்றோம்.

எங்களுடைய தென்னாற்காடு மாவட்டம் மிக மிகப் பின்
ங்கிய மாவட்டமாக இருந்து வருகிறது. அது குறித்து இந்த
அவையிலேகூட எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அடுத்த நிதி
ஆண்டில் எங்கள் மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கப் போவ
தாக இந்த அவையிலேயே மாண்புமிகு வருவாய்த் துறை
அமைச்சர் அவர்கள் வாக்குறுதி அளித்திருக்கின்றார்கள். அதற்
காக எங்களுடைய மாவட்டத்தின் சார்பில் மாண்புமிகு முத
லமைச்சர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், மாண்புமிகு
வருவாய்த் துறை அமைச்சரவர்களுக்கும் எங்களுடைய நன்றி
யைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதே நேரத்தில் நான் அன்போடு கேட்டுக் கொள்வதெல்
லாம், எந்தவித காரணத்தை முன்னிட்டும் தள்ளிப் போடாமல்
இந்தத் திட்டத்தை அடுத்த ஆண்டிலேயே நிறைவேற்றுமாறு
கேட்டுக்கொள்கிறேன்.

அப்படிப் பிரிக்கின்ற காலத்தில் செஞ்சி, திண்டிவனம்,
வானூர், விழுப்புரம், திருக்கோயிலூர், உளுந்தூர்ப்பேட்டை,
கள்ளக்குறிச்சி, ஆகிய தாலுக்காக்களை உள்ளடக்கிய மாவட்ட
மாகப் பிரிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

செஞ்சி, திருக்கோயிலூர் தாலுக்காக்கள் இவை இரண்டுமே
பெரிய தாலுக்காக்களாக இருந்துகொண்டு இருக்கின்றன.
இவைகள் பிரிக்கப்பட வேண்டும் என்பது இந்தப் பகுதியிலே
இருக்கின்ற மக்களினுடைய நீண்ட நாள் கோரிக்கையாக
இருந்து கொண்டிருக்கிறது.

செஞ்சியை இரண்டாகப் பிரிக்கும்பொழுது, மலையனூரை
மையமாகக் கொண்டு புதிய தாலுக்காவையும், திருக்கோயி
லூரை இரண்டாகப் பிரிக்கும்பொழுது முகையூரைத் தலைமையிட
மாகக் கொண்டு புதிய தாலுக்காவையும் உருவாக்குமாறு இந்த
நேரத்திலே மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர்களை
நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று முகையூரில் துணைப் பதிவாளர் அலுவலகம்
ஒன்று திறக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.
இதனால் இந்தப் பகுதியிலே இருக்கின்ற 50-க்கும் மேற்பட்ட
கிராமப் பொது மக்கள் பயனடைவார்கள் என்பதையும் எடுத்துச்
சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தற்பொழுது ஒவ்வொரு தாலுக்காவிலும் மூன்று மண்டலத்
துணை வட்டாட்சியர்களை நியமனம் செய்து அவர்கள் மூலம்
ஜாதிச் சான்று மற்றும் வருமானச் சான்றிதழ்களை] வழங்கு



வதற்கு வழிவகை செய்துள்ளீர்கள். இதற்காக எங்கள் பாராட்டு
தலைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.
அதே நேரத்தில், சிட்டா, அடங்கல் கிடைப்பதிலே கால
தாமதம் இருந்து கொண்டு இருக்கிறது. இவற்றைப் போக்கு
கின்ற வகையில் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்
கிறேன்.

மாவட்ட அளவிலே மனு நீதித் திட்டம் நடைபெற்றுக்
கொண்டு வருகிறது. இதனை வட்டாட்சியர் அளவில் குறை
கேட்கும் திட்டத்தை விரிவுப்படுத்தி மக்களுடைய சிரமங்களைக்
குறைத்தமைக்கு உண்மையிலேயே எங்களுடைய நன்றியையும்,
பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்
கிறேன்.

குறை கேட்கும் நாட்களில் வாங்கப்படுகின்ற மனுக்களை
பத்து நாட்களிலேயே நடவடிக்கை எடுத்து மனுவைப் பைசல்
செய்து சம்பந்தப்பட்டவருக்குத் தகவல் தெரிவிக்குமாறு
கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 5.40

பொது மக்களின் நலன் கருதி, கிராம நிர்வாக அதிகாரிகள்
சம்பந்தப்பட்ட கிராமத்திலே குடியிருக்கவும், அலுவல்களை
கவனிக்க சரியான அலுவலகக் கட்டிடங்கள் கட்டித் தரவும்
கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முதியோர் உதவித் தொகை கேட்டு மனு செய்த மூன்று
மாத காலத்திலேயே அந்த மனு பைசல் செய்து, அவர்
களுக்கு முதியோர் ஊதியம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு
கேட்டுக்கொள்கிறேன்.

ஏரி புறம்போக்கு, குளம் புறம்போக்கு, மந்தை புறம்போக்கு
ஆகியவற்றில் சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாக வீடு கட்டி
குடியிருந்து வரும் ஏழைகளுக்கு, விதிமுறைகளைத் தளர்த்தி,
கருணைக்கூர்ந்து, அவர்களுக்கு பட்டா வழங்குமாறு மாண்புமிகு
முதலமைச்சர் அவர்களையும், வருவாய்த் துறை அமைச்சர்
அவர்களையும் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய மேல்மலையனூர் தொகுதியில், செஞ்சி தாலுக்
காவில், அத்தியூர் கிராமத்தில் ஏரி புறம்போக்கிலும், தச்சம்
பட்டு கிராமத்தில், மந்தைவெளிப் புறம்போக்கிலும், பெர
வள்ளூர் கிராமத்தில் குளம் புறம்போக்கிலும் வீடுகள் கட்டிக்
இவற்றில் குடியிருந்து, அதற்காக வீட்டு வரியையும் செலுத்தி,
குடியிருந்து வருகிறார்கள். இவர்களுக்கு விரைவிலே பட்டா
கிடைக்க வழிவகை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. கோ. ஜானகிராமன்] [1991 செப்டம்பர் 20

கள்ளச் சாராயம் காய்ச்சும் சமூக விரோதிகளை ஒழிப்பதற்காக, கிராம நிர்வாக அதிகாரிகளைப் பயன்படுத்தியதன் மூலம், பெருமளவிலே இன்றையதினம் கள்ளச் சாராயம் காய்ச்சுவதும் விற்பதும் குறைந்திருக்கிறது. அதனை முழுமையாக அகற்ற கிராம நிர்வாக அதிகாரிகளுக்கு போலீசார் துணையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கண்காணிப்புக் குழுக்களை மாவட்ட அளவிலும் வட்டார அளவிலும் ஏற்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் மாவட்டத்தில் ஐந்து ஆண்டுகளாக தொடர்ந்து நல்ல மழை இல்லாதக் காரணத்தினால், எங்கு பார்த்தாலும், வறட்சி நிலவி உள்ளது. மலையனூர், செஞ்சி தொகுதிகள் முழுவதும் மலைகளாலும், பாறைகளாலும் சூழ்ந்த நிலங்களைக் கொண்ட காரணத்தினால், குடி தண்ணீர் பிரச்சினை தலைவிரித்தாடுகிறது என்பதை இந்த அவையிலே நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும், புஞ்சை, நஞ்சை மகசூல் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியை வறட்சிப் பகுதியாக அறிவித்து, கடன் வசூல்ப்பதை நிறுத்தி வைக்குமாறும், சிறு விவசாயிகள் கடன்களை தள்ளுபடி செய்தும், குடி தண்ணீர் அளிப்பதில் முன்னுரிமை அளித்தும் நிவாரணப் பணியை வேகமாகச் செய்ய மாவட்ட நிர்வாகத்தை முடுக்கிவிடுமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறத்தை மாற்றியமைக்கிற கிராம முன்னேற்றத்தின் ஜீவாதாரமே, நில உச்சவரம்பு சட்டத்தை அமல்படுத்துவதிலே இருக்கிறது என்பதை பண்டித ஜவஹர்லால் நேருஜி அவர்கள் குறிப்பிட்டார்கள். இவைகளையெல்லாம் நாம் அமல்படுத்தத் தவறினோமென்றால், மக்களே அந்தச் சட்டத்தை கையிலே எடுத்துக்கொள்வார்கள் என்று 1976 ஆம் ஆண்டு உலக வர்த்தக மாநாட்டில் மறைந்த முன்னாள் பிரதமர் அன்னை இந்திராகாந்தி அவர்கள் எச்சரித்தார்கள். இந்தச் சட்டம் வளைந்துவிட்டது என்று தான் நான் கருதுகிறேன். இதனால், நிலச்சுவாந்தார்கள் தலை நிமிர்ந்து நிற்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதனைப் போக்குகின்ற வகையில், நிலச்சுவான்தார்களிடமுள்ள பினாமி நிலங்களையும், உபரி நிலங்களையும் அரசு கையகப்படுத்தி, நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்களை நிலச் சொந்தக்காரர்களாக்க தமிழக முதலமைச்சர் அவர்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தி, அவர்களுக்கு அந்த உபரி நிலம் கிடைக்க வழிவகை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். உபரி நிலங்களை விநியோகிக்கும்போது, ஆதிதிராவிட விவசாயத் தொழிலாளர்களுக்கு முன்னுரிமை அளிக்குமாறு இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1991 செப்டம்பர் 20] [திரு. கோ. ஜானகிராமன்]

தேசப்பிதா மகாத்மா காந்தியடிகளின் உயிர்க் கொள்கையான, 'உழுபவனுக்கே நிலம் சொந்தம்' என்ற கொள்கையை நிறைவேற்ற மறைந்த முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் முழு முயற்சி எடுத்தார்கள். அப்பொழுது இதே மாண்புமிகு வருவாய் துறை அமைச்சர் அவர்கள்தான் அப்போதும் வருவாய்த்துறை அமைச்சராக இருந்தார்கள். அவர்கள் இந்தச் சட்டத்தை இந்த அவையிலே கொண்டு வந்து, அவையின் ஒப்புதல் பெற்று, சட்டமாக்கப்பட வேண்டுமென்று முயற்சிகள் எடுத்தார்கள். ஆனால், இதுநாள் வரையில் சட்டமாக்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தச் சட்டத்தை உடனடியாக நிறைவேற்றி, நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எல்லா மாவட்டங்களிலும் புதிய 20 அம்ச பொருளாதாரக் கொள்கையை அமல்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். இதனால், ஏழை, எளிய, ஆதி திராவிட மக்களும், விவசாயக் கூலி மக்களும், கூலி வேலை செய்து பிழைக்கும் மக்களும் பயன் அடைவார்கள் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 5.45

என்னுடைய மாவட்டத்தில் பட்டா பாஸ் புத்தகம் இது வரை வழங்கப்படவில்லை. அப்படி வழங்குகிற நேரத்திலே நிலத்தினுடைய வரைபடம் உட்பட, பட்டா எண், சொத்தின் மதிப்பு, வில்லங்கக் குறிப்பு இவை உட்பட, பட்டா பாஸ் புத்தகம் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய மேல்மலையனூர் தொகுதியில் வாழ்கின்ற மக்கள் பெரும்பாலானவர்கள் குடிசையில் வாழ்பவர்கள். மிகவும் ஏழைகள். அடிக்கடி அங்கு தீ விபத்து ஏற்படுகின்றது. எனவே, அதைத் தடுக்குகின்ற வகையில், மலையனூரை மையமாகக் கொண்டு ஒரு தீயணைப்பு நிலையத்தை ஏற்படுத்திக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். தீ விபத்தினால் பாதிக்கப்படுகின்ற குடும்பத்திற்குச் சொந்தமான சொந்தக்காரர்களுக்கு நிவாரணம் அளிக்கும்போது ரூபாய் நானூறு வழங்கப்படுகின்றது. இந்தத் தொகையை ஆயிரம் ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது).

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> முடியுங்கள்.

<u>திரு. கோ. ஜானகிராமன் :</u> தமிழகத்தில், குறிப்பாக, நீலகிரித் தைல மரங்கள், வேலிகாத்தான் மரங்கள் அதிகமாக இருக்கின்றன. இதனால், நிலத்தடி நீர் உறிஞ்சப்படுவதாக

விஞ்ஞான அறிக்கை தெரிவிக்கின்றது. இதனால் வறட்சி கடுமையாகவும், மழை வருவது கூட பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கின்றார்கள். அரசாங்கம் இதைப் பரிசீலனை செய்து, உண்மையாக இருக்குமாயின், தைல மரங்கள் நடுவதை நிறுத்தி வைக்கவும், வேலிக்காத்தான் மரங்களை அழிப்பதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். புறம்போக்கு.. (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் தென்னவன் அவர்கள் பேசுகிற போதும், அதைத் தொடர்ந்து வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் பதிலுரை தந்தபோதும் ** என்று தொடங்கி சொன்ன சொற்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாங்கள் சொன்னது சரியென்று ஏற்றுக்கொள்கிறேன். திரு. மு. தென்னவன் பேசியதில் ** ** வரை சேர்த்து நீக்கினால் சரியாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அப்படித்தான் நீக்கும்படி உத்தரவிடப்பட்டிருக்கிறது. திரு. செ. கு. தமிழரசன்.

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை மானியத்தின் மீது இந்தியக் குடியரசுக் கட்சியின் சார்பிலே, இந்தப் பேரவையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் தெரிவித்த கருத்துக்களையும், நான் மீண்டும் இன்றியமையாதது என்பதால், ஒரு சிலவற்றை வலியுறுத்திப் பேசுவதற்கு வாய்ப்புத் தந்தமைக்காக முதலிலே நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் குறித்த நேரத்திற்குள் வலியுறுத்திப் பேசக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் தொடக்கத்திலே சொல்லியிருப்பதைப் போல நேரத்தின் அருமை கருதி, மிகமிகச் சுருக்கமாக, இன்றைக்கு நான் முடித்துக்கொள்வேன்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



நம்முடைய வருவாய்த் துறையிலே புதிய மாவட்டங்கள் பல உருவாக்கப்பட்டிருக்கின்றன. பல மாவட்டங்கள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. தஞ்சை மாவட்டத்தைக் கூட மூன்று மாவட்டமாகப் பிரிக்கவேண்டுமென்ற ஒரு நிலை இருந்தது. அது மாறிப்போய் இப்பொழுது இரண்டு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்புசாமி அவர்கள் குறிப்பிட்டுப் பேசினார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் முதல்வராக இருந்தபோது, தஞ்சை மாவட்டத்தைப் பிரித்து, நாகப்பட்டினத்தைத் தலைநகராகக் கொண்டு, தில்லையாடி வள்ளியம்மை மாவட்டம் அறிவிக்கப்படும் : உருவாக்கப்படும் என்று அறிவித்திருந்தார்கள். இன்றைக்குச் சூழ்நிலை மாறிப் போய், நாகப்பட்டினத்தைத் தலைநகராகக் கொண்ட மாவட்டத்திற்குப் புரட்சித் தலைவி அவர்கள் வேறு பெயரை வைத்திருக்கிறார்கள் என்றாலும்கூட, தில்லையாடி வள்ளியம்மை, வெறும் நாகப்பட்டினத்திற்கு மட்டும் சொந்தக்காரர் அல்ல. இந்த தேசத்தின் தந்தை அண்ணல் காந்தியடிகளுடைய அரும் உயிரைக் காப்பாற்றிய ஒரு தாழ்த்தப்பட்ட பெண்மணி, வீரப் பெண்மணி என்கிற வகையிலே அவர் பெயரைத் தமிழகத்தினுடைய எந்தப் பகுதிக்கு வேண்டுமானாலும் வைத்து அழைத்தால் அது பொருத்தமாக இருக்கும். எனவே, நாகப்பட்டினத்திற்கு வைக்க முடியாவிட்டாலும், இனி தொடங்கப்படவிருக்கின்ற புதிய மாவட்டத்திற்குப் புரட்சித் தலைவர் அவர்கள் அறிவித்த அந்தத் தில்லையாடி வள்ளியம்மை மாவட்டம் என்கிற பெயரை அறிவிக்கவேண்டுமென்பதை முதலிலே என்னுடைய அன்பு வேண்டுகோளாக இங்கே விடுக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 5.50

மாண்புமிகு திரு. கே. எ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்—காந்தியார் அவர்களையே உருவாக்கிய பெருமை நம்முடைய தமிழ்ப்பெண் தில்லையாடி வள்ளியம்மை அவர்களுக்கு உண்டு. தென்னாப்பிரிக்காவிலே போராடுகின்றபோது, சாதாரண மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியாக இருந்த அவரை உலக உத்தமர் காந்தியாக ஆக்கியவர் நம்முடைய தஞ்சை மாவட்டத்திலே பிறந்த தில்லையாடி வள்ளியம்மை அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுக்குப் பெருமை சேர்க்க வேண்டும் என்ற வகையில்— மாண்புமிகு தமிழரசன் அவர்களுக்கும் தெரியும்— கோ-ஆப்-டெக்ஸ்-னுடைய அந்தத் தலைமையகம் தில்லையாடி வள்ளியம்மை மாளிகை என்று மிக அழகாக எழும்பூரில் இன்றைக்குக் காட்சி அளித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதற்காக என்னுடைய நன்றியையும், மகிழ்ச்சியையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். இருந்தாலும் இந்தப் பெயர்கள் அறிவிக்கப்பட்டு அப்படியே நிலுவையில் இருக்கிறது என்பதற்காகத்தான் நினைவுப்படுத்த விரும்புகிறேன். இனி வருகிற மாவட்டத்திற்காவது அந்தப் பெயர் வைக்கப்பட வேண்டுமென்ற என்னுடைய வேண்டுகோளாகத்தான் நான் இங்கே குறிப்பிட்டு இருக்கிறேன். அதேபோல் டி. சி. புறம்போக்கு என்று சொல்லப்படுகிற தரிசு நிலத்தைத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்க வேண்டும் என்கிற ஒரு ஆணை இருக்கிறது. ஆனால், இதுவரையிலும் அந்தத் தரிசு நிலப் புறம்போக்குகள் ஒடுக்கப்பட்ட அடித்தள மக்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. கடந்த ஆண்டு நாம் தந்து இருக்கிற புள்ளிவிவரம் மிகக் குறைந்தபட்சமாக இருக்கிறது. 284 பேர்களுக்குத்தான் தந்திருக்கிறோம். ஆனால் ஏராளமான தரிசு நிலங்கள் இன்னும் கணக்கில் இருக்கிறது. இந்த டி. சி. புறம்போக்கில், அதை, தாழ்த்தப்பட்டவர்களுக்கு சம்பந்தம் இல்லாதவர்கள் எவ்வளவோ பேர் முறைகேடாக அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த விவரங்கள் எல்லாம் வருவாய்த்துறை அதிகாரி அவர்களுக்கும் தெரியும். அவர்கள் அதைத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். ஆனாலும் கூட இதைத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒப்படைக்காமலே இருக்கிறார்கள். வெறும் 284 பேர்களுக்குத்தான் கடந்த ஆண்டு தந்திருக்கிறார்கள். எனவே கடுமையான ஒரு சட்டத்தின் மூலமாக அவர்களுக்குரிய நிலத்தை அவர்களுக்குத் தந்தாகவேண்டும். அதுதான் மரபு என்கிற வகையில் வேக, வேகமான நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ள வேண்டும் என்று நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இப்போது கூட இங்கே பல மாண்புமிகு உறுப்பினர்கள் ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டா தர வேண்டும். அவர்களுக்கு ஏராளமாக வழங்கவேண்டும் என்று நல்லெண்ணத்தோடு குறிப்பிட்டார்கள். பொதுவாகவே எங்கே எடுத்துக் கொண்டாலும் வீட்டுமனைப் பட்டா என்றால் அது ஆதி திராவிட மக்களுக்கு மட்டும் தான் இலவசமாகத் தரப்படுகிறது. அவர்களுக்கு ஏராளமாகத் தரப்படுகிறது என்கிற ஒரு பெரிய விளம்பரம் இருக்கிறது. கடந்த ஆண்டிலே பார்த்தால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டுமனை தந்திருப்பது 21,432 பேருக்கு, பிற்பட்ட மக்களுக்குத் தந்திருப்பது 29,521 பேருக்கு. தாழ்த்தப்பட்டவர்களுக்கு 21,432. ஆனால் பிற மக்களுக்கு 29,521 ஆக மிகக் குறைந்த அளவில்தான நாம் தந்திருக்கிறோம். மிகப் பெரிய மக்கள் தொகையாக இருப்பவர்களுக்கு, நலிந்த பிரிவினர்களாக, நடித்தளத்து மக்களாக, வீடு இல்லாதவர்களாக இருக்கின்ற



அவர்களுக்குத்தான நாம் அதிகம் செய்திருக்கவேண்டும். ஆனால் அவர்களுக்குத் தந்திருப்பது 21 ஆயிரம் தான். நான் இனனொன்றையும் சொல்வேன. இந்த ஆண்டு ஆதிதிராவிட மக்களுக்கு நாம வழங்கி இருக்கிற வீடு கட்டுவதற்கு— அதாவது 45,000 வீடு கட்டித் தருகிறோம். ஆனால் வீட்டுமனை 21 ஆயிரம்தான் தந்திருக்கிறோம். ஆனால் கிராமத்தில் என்ன நிலைமை ? வீட்டுமனைப் பட்டா இருந்தால்தான வீடு தர முடியும். இல்லாவிட்டால் உங்களுக்கு வீடு தரமுடியாது. மூன்று சென்ட் அரசு தந்திருக்கிற பட்டாவைக் காட்டினால் தான் வீடு தரமுடியும். இல்லாவிட்டால் வீடு கிடையாது என்கிறார்கள். எனவே பல பகுதிகளில் இந்த அரசு வீட்டை வழங்கினாலும்கூட, அதைக் கட்டுவதற்கு வீட்டுமனைப பட்டா இல்லாத நிலைமையில் தேங்குகின்றன. வீட்டுக்குக் கொடுக்கப்படுகிற தொகை பின்னாலே வேறு வழி இல்லாமல் வேறு துறைக்கு மாற்றப்படுகிறது. என்னுடைய தொகுதியில் கூட அப்படி நடக்கிறது. வீடு கட்டுவதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பல தொகுப்பு வீடுகளை வழங்கி இருக்கிறார்கள். ஆனால் அங்கே அவற்றைக் கட்டுவதற்கு வீட்டுமனைப் பட்டா இல்லை. பட்டா இல்லாததால் கட்ட முடியவில்லை. எனவே நத்தம் புறம்போக்கில் இருந்தால்கூட உடனே அதற்கு பட்டா போட்டுத் தாருங்கள். மூன்று சென்ட் இருந்தால் தான் தருவோம் என்கிறார்கள். நத்தம் புறம்போக்கிலே மூன்று சென்ட் இருக்காது. புதிதாக வருகிற பட்டாவில்தான் மூன்று சென்ட் இருக்கும். ஏற்கெனவே அனுபவித்து வந்தால் மூன்று சென்ட் இருக்காது. என்ன செய்வது ? எனவே தொகையை வேறு துறைக்கு மாற்ற வேண்டிய அவலநிலை பின்னாலே நமக்கு வந்துவிடுகிறது. எனவே அதிகப்படியாக குறைந்தபட்சம் ஒரு ஆண்டுக்கு ஒரு இலட்சம் பேருக்காவது வழங்க வேண்டும் என்று ஒரு வரைமுறையை வருவாய்த் துறை மேற்கொள்ள வேண்டும் என்று நான் இங்கே நினைவு படுத்த விரும்புகிறேன்.

மேய்க்கால் புறம்போக்கு, ஏரிப் புறம்போக்கு என்று இப்படி ஏராளமான புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன. 50 ஆண்டுகாலமாக அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். மேய்க்கால் புறம்போக்கு மேய்க்காலுக்குப் பயன்படுவதில்லை. ஏரிப் புறம்போக்காக இருந்தால் அங்கே தண்ணீர் இல்லை. ஆனால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இவைகள் எல்லாம் தடையாக இருக்கின்றன பட்டா கொடுப்பதற்கு. இவைகளை மாற்ற வேண்டும். பழைய சட்டங்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அது கூடாது என்பதற்காகத்தான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கிராம நிர்வாக அலுவலர்களுக்கு அதிலே இட ஒதுக்கீடு தந்து அதிலே ஒரு புரட்சி செய்தவர் நமது மாண்புமிகு முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள்.

கிராம நிர்வாக அலுவலர்களைப் பொறுத்தவரையில் பழைய வி. ஏ. ஓ. முறையை ஒழித்துவிட்டு புதிய முறையைக் கொண்டு வந்தார்கள். அன்றைக்கு வருவாய்த் துறை அமைச்ச ராக இருந்தவர்கள் மாண்புமிகு அமைச்சர் திரு. எஸ். டி. எஸ். அவர்கள்தான். அவர்களுக்கு மிகப்பெரிய பாராட்டை அன்றிலிருந்தே தெரிவித்துக் கொண்டிருக்கிறோம். மூவாயிரத்துச் சொச்சம் தாழ்த்தப்பட்ட மக்கள் வருவதற்கு அருமை **எஸ்.டி.எஸ். அவர்கள் அன்றைக்கு உறுதுணையாக இருந் தார்கள்; உருவாக்கினார்கள்.

பிற்பகல் 5-55

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ** என்பது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. செ. கு. தமிழரசன் : வழக்கமான அந்தச் சொல் வந்துவிட்டது. மாண்புமிகு அமைச்சர் எஸ்.டி.எஸ். அவர்கள் உருவாக்கினார்கள். கடந்தமுறை திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்தபோது ஆயிரம் பேர்களுக்கு கிராம மணியக் காரர் பதவி தந்தார்கள். ஆனால் அதிலே இட ஒதுக்கீடு இல்லை; டி.என்.பி.எஸ்.சி. இண்டர்வியூ இல்லை. இட ஒதுக்கீடு இல்லாமல் அப்படியே ஆயிரம் பேர்களுக்குத் தந்தார்கள். அதைப்போல கிராமப் பணியாளர்கள் 30,000-க்கு மேற் பட்டவர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய பணி இன்னமும் நிரந்தரமாக்கப்படவில்லை. அந்த 30,000 பேர்களிலே 28,000 பேர்கள் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள். அது கிட்டத்தட்ட 90 விழுக்காடு என்று சொல்கிறார்கள்; அதற்கு மேலேயும் இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் குறிப்பிட்டதைப்போல ''நாட்டுக்கு நல்ல துரை வந்தாலும் தோட்டிக்கு புல் சுமப்பதே வேலை'' என்கிற வகையிலே அவர்கள் இன்னமும்கூட மிகக் கேவலமான வேலைகளையே அங்கே மணியக்காரர்கள் வீட்டிலிருந்து ஆர். ஐ. வீட்டியிலிருந்து, இன்னும் யார், யார் வந்தாலும் 24 மணி நேரமும் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். ஆனா லும் கூட அவர்களுடைய பணி நிரந்தரமில்லை. அவர்களுடைய பணியை நிரந்தரமாக்க வேண்டும் என்ற கோரிக்கையை மிக மிக வலியுறுத்துகிறேன்.

அந்தவகையிலேகூட மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் எஸ்.டி.எஸ். அவர்கள்தான் அன்றைக்கும் வருவாய்த் துறை அமைச்சராக இருந்தபோது வெட்டியான்,

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





தோட்டி என்று இருக்கிற பெயர்களை எல்லாம் மாற்ற வேண்டு மென்ற எங்களுடைய கோரிக்கையை ஏற்று அந்தப் பெயர்களை மாற்றி 'கிராமப் பணியாளர்கள்' என்று பெயர் மாற்றம் செய்து தந்தார்கள். இந்தக் கோரிக்கையையும் அவர்களே, இப்போது செய்துதரவேண்டுமென்று நினைவுபடுத்த விரும்புகிறேன்.

ஒரு குடும்பத்திற்கு 30 ஸ்டான்டர்டு ஏக்கரா நிலம் என்று இருக்கிறது. ஆனால் பினாமி முறையில் எவ்வளவு நிலத்தை வைத்துக்கொண்டிருக்கிறார்கள்? எப்போதாவது இந்த 30 ஸ்டான்டர்டு ஏக்கரா சட்டம் செல்லுபடியாகி இருக்கிறதா? எங்கேயாவது இந்தச் சட்டம் பாய்ந்திருக்கிறதா? பினாமி நிலங்களைக் கைப்பற்றி இருக்கிறார்களா? இல்லை. தஞ்சா வூரில் 200 ஏக்கர், 300 ஏக்கர், 500 ஏக்கர், 1000 ஏக்கர் வைத் திருக்கிற பெரிய பெரிய நிலச்சுவான்தார்கள் எல்லாம் இருக் கிறார்கள். அரசியல்வாதிகளும் இருக்கிறார்கள். 30 ஸ்டான் டர்டு ஏக்கர் சட்டத்தை யார் பின்பற்றியிருக்கிறார்கள்? எங்கே யாவது இந்தச் சட்டத்தின்கீழ் நிலம் கைப்பற்றப்பட்டிருக் கிறதா என்றால் இல்லை. சட்டம் யார்மீதும் பாயவில்லை. இந்தச் சட்டம் வெறும் சட்டமாக இருக்கிறது. இதை உண்மை யான சட்டமாக நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் செயல்படுத்த வேண்டுமென்று நினைவுபடுத்த விரும்பு கிறேன்.

உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்று நம்முடைய அரசியல் சட்டத்திலும் அதற்குப் பின்னாலே நம்முடைய பாராளுமன்ற நடவடிக்கைகளிலும், நம்முடைய மாநில சட்டமன்ற நட வடிக்கைகளிலும் எவ்வளவோ முறை வலியுறுத்தியிருக்கிறோம். இருந்தாலும் வெறும் சட்டம்தான் இருக்கிறது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அதிலே கடுமையாக இருந் தார்கள். உழுபவனுக்கே நிலத்தைச் சொந்தமாக்க வேண்டு மென்பதில் கடுமையாக இருந்தார்கள். 1,72,000 பேர் இன்றைக்குக் குத்தகைதாரர்களாக இருக்கிறார்கள். இவர்கள் அத்தனை பேர்களும் குத்தகைச் சட்டத்தின்கீழ் பதிவுசெய் தவர்கள். பதிவுசெய்யாமல் இன்னும் ஏராளமான பேர்கள் இருக்கிறார்கள். இந்தக் குத்தகையாளர்களிலே அதிகமாக இருப்பவர்கள் யார் என்று பார்த்தால் தாழ்த்தப்பட்ட மக்கள் தான். 25 ஆண்டு காலமாக, 40 ஆண்டு காலமாக, பல தலைமுறையாக ஆண்டாண்டு காலமாக குத்தகைதாரர் களாக தாழ்த்தப்பட்ட மக்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களில் யாருக்காவது நிலம் சொந்தமாக்கப்பட்டிருக்கிறதா? அவர்களுக்கு நிலத்தைச் சொந்தமாக்குகிற முயற்சியை நாம் செய்திருக்கிறோமா என்றால் நிச்சயமாக இல்லை.

கோவில் நிலங்கள் ஏராளமாக இருக்கின்றன. ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலம் இருக்கிறது. அந்த நிலங்களை எல்லாம் பினாமி முறையிலே அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள்,

கோவில் நிலங்களை அடித்தளத்தில் இருக்கிற தாழ்த்தப்பட்ட மக்களுக்கு குத்தகைக்கு விடவேண்டும். அரிசனங்கள் என்றாலே கடவுளின் குழந்தைகள் என்று சொன்னார் அண்ணல் காந்தியடிகள். கடவுளின் குழந்தைகளுக்கு கடவுளின் நிலத்திலே குத்தகைகூட கிடைப்பதில்லை. ஆயிரக்கணக்கான ஏக்கர் கோவில் நிலம் மற்றவர்களுக்குத்தான் போய்ச்சேருகிறது. உண்மையான கடவுளின் குழந்தைகளுக்குக் கிடைக்கவில்லை என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

வருவாய்த் துறையிலே ஜமாபந்தி முறை இருக்கிறது. இந்த ஜமாபந்தி முறை பிரிட்டிஷ் காலத்திலிருந்தே இருக்கிறது. இந்த முறையை ஒழிக்க வேண்டும். அதேமுறை இன்னும் மாறவில்லை. தமிழே ஆட்சிமொழி என்கிறோம். தமிழை ஆட்சிமொழியாகப் பயன்படுத்துகிறோம். தூய தமிழைப் பயன்படுத்த வேண்டுமென்று சொல்கிறோம். ஆனால் வருவாய்த் துறையிலே இன்றைக்கும் பயன்படுத்துகின்ற சொற்களைப் பாருங்கள். ஜமாபந்தி, முசிலி, நமூனா, சிட்டா, முச்சலிக்கா, கிஸ்தி, ஜப்தி, பசலி இப்படிப்பட்ட வார்த்தைகளை எல்லாம் பாருங்கள். நாம் தமிழ் ஆட்சிமொழி என்று சொல்கிறோம் ; ஆட்சிமொழி பற்றிப் பேசுகிறோம். அழகான திருக்குறளைச் சொல்லி இந்த மன்றத்திலேகூட நிகழ்ச்சிகளைத் தொடங்குகிறோம். ஆனால் வருவாய்த் துறையில் இப்படிப்பட்ட வார்த்தைகள்தான் இன்றைக்கும் பயன்படுத்தப்படுகின்றன. இது பலருக்கும் புரியாது. இதை எல்லாம் எழுதுவதற்கு என்று தாலுக்கா ஆபீசில் வெளியே சிலர் இருக்கிறார்கள். அவர்களிடம் காசு கொடுத்து எழுதவேண்டும். இப்படிப்பட்ட நிலைமை வருவாய்த் துறையில் இருக்கிறது. இவைகளை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 6.00

இந்த முத்திரை ஸ்டாம்ப் இருக்கிறதே,—இந்த ரிஜிஸ்ட்ரேஷன் டிப்பார்ட்மெண்டிலேயே,—தாழ்த்தப்பட்டவர்களை நாம் பொருளாதார ரீதியாக உயர்த்தவேண்டும் என்று நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள்—நேற்றைக்குக்கூட மிக அக்கறையோடு ஆதிதிராவிடர்கள் மானியக் கோரிக்கை நடக்கும்போது உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் எவ்வளவு அக்கறையோடு எங்களுடைய விஷயத்திலே இருக்கின்றார்கள் என்பதை நேற்று நான் பார்த்துப் பார்த்துப் பூரித்துப்போனேன். தாழ்த்தப்பட்ட மக்களைப் பொருளாதார ரீதியாக உயர்த்தவேண்டுமென்பதற்காக ஸ்டாம்ப் விஷயத்திலே அவர்களுக்கு கன்செசன் தரவேண்டும், சொத்து வாங்குகிறபோது பதிவு செய்கிறபோது ஸ்டாம்ப் டியூட்டி இருக்கிறதே அதிலே கன்செசன் தரவேண்டுமென்று மரபு இருக்கிறது. அது நம்முடைய தமிழகத்திலே இல்லை. எனவே அவர்களுக்கு அதிலே கன்செசன் தரவேண்டுமென்று சொல்லி கோரிக்கையை வைத்து நேரமற்ற நிலையிலே என் உரையை முடித்து அமைகிறேன். நன்றி. வணக்கம்.





மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ஏ ரவிக்குமார்.

*திரு. ஏ ரவிக்குமார் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி எனது உரையைத் தொடங்குகிறேன். வருவாய்த் துறை மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு மக்கள் நம்பிக்கை இழந்த ஒரு துறை உண்டென்றால் அது வருவாய்த் துறையாகத்தான் இருக்கமுடியும் என்பதை மிகவும் வருத்தத்துடன் கூறிக்கொள்கிறேன். அந்த நிலையை ஏற்படுத்திய பெருமை தி.மு.க.-வைச் சேரும். அப்படிப்பட்ட ஒரு நிலையை ஏற்படுத்திச் சென்றவர்கள் தி.மு.க.-வினர் தான் என்பதை அனைவரும் அறிவார்கள்.

மக்கள் நேரடியான தொடர்புடைய துறையில் முக்கியமான துறை வருவாய்த்துறைதான் இதில் வி ஏ.ஓ., ஆர்.ஐ., தாசில்தார், ஆர்.டி.ஓ., டி.ஆர்.ஓ., கலெக்டர் என்று அடிமட்டத்திலிருந்து 6 பதவிகள் இருக்கின்றன. வி.ஏ.ஓ. தவறு செய்தால் ஆர்.ஐ. கண்டிப்பதில்லை. ஆர்.ஐ. தவறு செய்தால் தாசில்தார் கண்டிப்பதில்லை. தாசில்தார் தவறு செய்தால் ஆர்.டி.ஓ. கண்டிப்பதில்லை. ஆர் டி.ஓ. தவறு செய்தால் டி.ஆர்.ஓ.-வும் கலெக்டரும் கண்டிப்பதில்லை. எனவேதான் இந்தத் துறையில் பல்வேறு ஊழல்கள் நடைபெறுகின்றன. இதில் விசித்திரம் என்னவென்றால், வி.ஏ.ஓ.-வும் வானளாவிய அதிகாரம் பெற்றுள்ளதாக நினைக்கிறார். தாசில்தாரும் வானளாவிய அதிகாரம் பெற்றதாக நினைக்கிறார். கலெக்டரும் வானளாவிய அதிகாரம் பெற்றுள்ளதாக நினைக்கிறார். சாதாரண கிராமத்தில் வசிக்கின்ற ஒரு ஏழைக் குடியானவன் ஒரு சான்றிதழுக்காக அவன் அலைகின்ற அலைச்சல் இருக்கின்றதே அதை வார்த்தைகளால் சொல்லமுடியாது. எந்த வி.ஏ ஓ.-வும், ஆர்.ஐ.-யும் சரியாக காலை 10-00 மணிக்கு வருவதில்லை. 10 மணிக்கு வருபவர் 12 மணிக்கு வருவார். 12 மணிக்கு வருபவர் 3 மணிக்கு வருவார், வராமலும் போய் விடுவார். கேட்டால் போய்க் கம்ப்ளெயிண்ட் பண்ணுங்கள் என்பார்கள். போய் கம்ப்ளெயிண்ட் செய்தால் நடவடிக்கை கிடையாது. இதற்குக் காரணம் தாசில்தாரே ஒழுங்காக வந்தால்தானே, அவரும் இதற்கு விதிவிலக்கல்ல.

முதியோர் ஓய்வூதியம், சாதிச் சான்றிதழ் மற்றும் பிறப்பு இறப்புச் சான்றிதழ்கள். வீட்டிற்கு மின்சாரம் மற்றும் தொகுப்பு வீடு கட்டத் தடையிலாச்சான்று, பட்டா வழங்குதல், பட்டா மாற்றுதல் என்று பல்வேறு பணிகளை [illegible]க்கத் துறையில் உள்ள

வர்கள் செய்வதால் தான் இதில் பல்வேறு தவறுகள் நடக்கின்றன. அதே போல் அரசுக்குச் சொந்தமான நிலங்களை இந்த வி.ஏ.ஓ.-க்களும், தாசில்தாரும் சேர்ந்து பட்டா போட்டு விற்றுவிடுகிறார்கள். பலர் லட்சாதிபதிகளாக மாறியுள்ளனர் என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

எனவே எத்தனையோ புரட்சித் திட்டங்களைத் தீட்டி சாதனை படைத்துக்கொண்டிருக்கும் எங்கள் இதய தெய்வம் இந்த வருவாய்த் துறையையும் சீரமைத்து சாதாரண ஏழைகளும் பயன் பெறுகின்ற வகையில் அவர்களின் உரிமைகளும் பாதிக்காத வகையில் தவறு செய்கின்றவர்கள் மீது புகார் செய்தால் உடனே விசாரணை செய்து கடுமையான நடவடிக்கை எடுக்க ஒரு கண்காணிப்புக் குழு என்ற அமைப்பை ஏற்படுத்தி அதில் கலெக்டர், சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள், ஆர்.டி.ஓ., டி.ஆர்.ஓ., டி.எஸ்.ஓ. என்று 6 பேர்களை உறுப்பினர்களாக்கி அதில் தவறு செய்பவர்களை விசாரணை செய்து கடுமையான நடவடிக்கை எடுக்க மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஆவன செய்யவேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அதே போல வருவாய்த் துறையில் சுமார் 20 ஆண்டுகளாக அங்கேயே வேலை செய்கின்ற அதிகாரிகள் இருக்கின்றார்கள். அவர்களை மாற்றவேண்டும். அதே போல் 3 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிபவர்களைக் கட்டாய இடமாற்றம் செய்யவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

அப்போதுதான் மக்களுக்கு அந்தத் துறையின்மீது நம்பிக்கை ஏற்பட வாய்ப்பிருக்கும். வருவாய்த் துறை என்ற பெயர் உள்ள இத்துறையினால் அரசுக்கு வருமானம் வருவதை விட தனிப்பட்டவர்களுக்குத்தான் அதிக வருமானம் வருகிறது. எனது பொன்னேரி தொகுதியில் இருக்கின்ற ஆறுகளில் மணல்களை லாரி லாரியாக எடுத்துச் சென்று விற்கிறார்கள். இதற்கான ஆர்டரை ரூ. 5,000-த்தை சப்-கோர்ட்டில் கட்டி உடல் ஊனமுற்றவர்கள் இலங்கை அகதிகள் என்ற பெயரில் ஒரு ஆர்டர்-ஐ வாங்கி வந்துவிடுகிறார்கள். அதைப் பயன்படுத்தியும், சட்ட விரோதமாகவும், தினமும் இரவு பகல் என்று பாராமல் நூற்றுக்கணக்கான லாரிகளில் எடுத்துச் செல்கின்றனர். இதில் பல்வேறு பிரச்சினைகள் எழுகின்றன. ஆற்றின் அருகே இருக்கின்ற சுடுகாடுகள் அழிக்கப்படுகின்றன. அந்தப் பகுதியில் விபத்துகள் ஏற்படுகின்றன. இரவில் லாரிகள் சப்தங்களால் தூங்க முடியவில்லை என்று பொதுமக்கள் புகார் கொடுக்கின்றனர். சாலை ஓரங்களில் மணலைக் கொட்டி விடுகிறார்கள்.



அதைப்பற்றி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் புகார் கொடுத்தால் எந்தப் பயனும் கிடைப்பதில்லை. வருவாய் துறையின் அனுமதியும் இன்றி, மைன் அன்ட் மினரல்ஸ் அனுமதியும் இன்றி, பி.டபிள்யு.டி. அனுமதியும் இன்றி, நீதிமன்றத்தில் எந்தவிதத்தில் இதற்கு அனுமதி தருகிறார்கள் என்பது வியப்பாக இருக்கிறது. இதனைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று பணிவன்புடன் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அதுபோல் எனது தொகுதியில் சுமார் 25-க்கும் மேற்பட்ட செங்கல் தொழிற்சாலைகள் இருக்கின்றன. இங்கிருந்து செங்கல் எடுத்துச் செல்லும்போது, அதற்கான சேல்ஸ் டாக்ஸ்-ஐ கட்டுவதில்லை. ஆண்டார்குப்பத்தில் இருக்கின்ற செக்-போஸ்டில் அதற்கான முறையான ரசீதைப் பெறுவதில்லை. இப்படி அரசுக்கு வருகின்ற வருமானங்கள் தடுக்கப்பட்டு தனிப்பட்டவர்களுக்கு சென்று விடுகிறது. இதேபோல் பொன்னேரி நகரத்தில் இருக்கின்ற பல தியேட்டர்களில் டிக்கெட்டுக்கு ஒட்டுமொத்தமாக 5 ரூபாய் வசூலிக்கின்றனர். அதற்கான கேளிக்கை வரியையும் சரியான முறையில் செலுத்துவதில்லை. இப்படி அரசு வருமானங்கள் பாதியிலே சென்றுவிடுகின்றன. இப்படிப்பட்ட நிலையை தடுத்தாலே வருகின்ற ஆண்டுகளில் நிச்சயமாக உபரி பட்ஜெட் தாக்கல் செய்யப்படும் என்பதை நான் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 6,05

அதேபோல வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கும்போது நத்தம் புறம்போக்குக்கு மட்டும் தான் வழங்குகிறார்கள். அந்த நிலையை மாற்றி, கால்வாய்ப் புறம்போக்கு, குட்டைப் புறம்போக்கு, களர் புறம்போக்கு என்ற அனைத்துப் பகுதிகளிலும் வசிக்கின்ற மக்களுக்கு, சுமார் 20 ஆண்டுகளாக வசிக்கின்ற அனைத்து மக்களுக்கும் அங்கே பட்டா வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன் (மணியடிக்கப் பெற்றது).

நான் கூட சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட உடன் 41 கிராமங்களுக்கு பட்டா மனுச் செய்தேன். இதுவரை அதனால் எந்தப் பயனும் ஏற்படவில்லை. அதை மாற்றி அனைத்து மக்களுக்கும் உடனே பட்டா கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் செங்கல்பட்டு மாவட்டத்திற்கு 'செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டம்' என்று பெயரிட்டார்கள். ஆனால் தி.மு.வினர் மட்டும் அவர்கள் போடுகின்ற போஸ்டர்களில் செங்கை-அண்ணா டிஸ்ட்ரிக்ட் என்று போடுகிறார்கள். அது போல கடிதம் எழுதும்போதும் 'செங்கை அண்ணா மாவட்டம்,

என்று தான் எழுதுகிறார்கள். எனவே, அப்படி அரசு ஆணைக்கு எதிராகச் செயல்படுகின்றவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு பேச வாய்ப்பளித்த பேரவைத் தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி கே. பஞ்சவர்ணம்.

திருமதி கே. பஞ்சவர்ணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நமது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் இந்தியாவிலுள்ள மாநிலங்களில், தமிழ் மாநிலம் அவர்களுடைய பொறுப்புக்கு வந்த பிறகு நல்லொழுக்கத்திலும், நாணயத்திலும், கல்வியிலும், கலாசாரத்திலும், விவசாய முன்னேற்றத்திலும், தொழில் வளர்ச்சி முன்னேற்றத்திலும் மிகவும் அக்கறை செலுத்தி அனைத்து மாநிலங்களையும் விட நமது மாநிலம் ஒரு சிறப்புத் தன்மையை அடைய வேண்டுமென்ற குறிக்கோள்களோடு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நாமெல்லோரும் அறிவோம். இப்படி அத்தனையையும் முழுமையாக நிறைவேற்ற வேண்டுமென்றால் நமது முக்கியமான ஒரு மானியமாக இருக்கிறது வருவாய் துறை ஆகும். அந்த வருவாய் துறையிலே ஏற்படக் கூடிய வருவாயை வைத்துத் தான் தமிழகத்தைச் செழுமைப் படுத்தக்கூடிய பல்வேறு காரியங்களை, நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கக்கூடிய திட்டங்களை நிறைவேற்ற முடியும் என்பதையும் அனைவரும் அறிவோம். அந்தத் திட்டத்தின் அடிப்படையில் இன்றைய தினம் இந்த வருவாய் துறையில் ஏற்பட்டிருக்க்க்கூடிய சில சங்கடமான நிலைமைகளை நான் எடுத்துச் சொல்வதற்கு என்னுடைய தொகுதியான வலங்கைமான் தொகுதியின் சார்பிலே இங்கே பேச விழைகின்றேன்.

குறிப்பாக நமது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தின் முதல்வர் பொறுப்பை ஏற்றுக்கொண்ட உடனே ஏழையெளிய, நலிவுற்றவர்கள், குறிப்பாக பெண்களுடைய கண்ணீரைத் துடைப்பதற்கு, சாராயத்தை, மலிவு விலை மதுவை ஒழிப்பதற்கான திட்டத்தில் முதன் முதலாகக் கையெழுத்திட்டார்கள். அது அப்படி இருப்பினும், அது முழுமையாக நிறைவேறவில்லையென்ற காரணத்தினால் நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் வருவாய்த் துறை அதிகாரிகளுக்கு ஆணையிட்டு அவர்கள் மூலமாக அதை அழிப்பதற்கான திட்டத்தைத் தீட்டினார்கள். அப்படி இருந்தபோதிலும் கூட என் தொகுதியிலுள்ள ஒரு தி.மு.க. பெரிய நபர் பெரிய தொழிற்சாலை மாதிரி நடத்திக்



கொண்டு குறிப்பிட்ட கிராமங்களில் அதை இன்றும் விற்பனை செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் இங்கே சொல்வதற்கு கடமைப்பட்டிருக்கிறேன் வேதனையோடு. அது யார் யார், எந்தெந்தப் பகுதியில் உள்ளவர்கள், எப்படி விற்கப்படுகிறது என்பதை நான் அமைச்சரிடம் சொல்வதற்குக் காத்திருக்கிறேன். அதை உடனடியாக சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் சம்பந்தப்பட்ட வருவாய்த் துறை அதிகாரிகள் மீது என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, விவசாயத் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கக் கூடியவர்களே, தஞ்சை மாவட்டத்தில் அதிகமாக இருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக கிராமப் புறத்தில் இருக்கிற அரிசன மக்கள் அதிக அளவில் நெரிசலாக வாழ்கிற மக்கள் அதிகம் கொண்டது என்னுடைய தொகுதி ஆகும். அந்த அரிசன மக்கள் குடியிருக்கக் கூடிய பகுதி என்று சொல்லக் கூடிய வகையில் 20, 30 வருடமாக குடியிருக்கக் கூடிய பல்வேறு புறம்போக்கு அங்கே இருக்கிறது.

பிற்பகல் 6.10

நத்தம் புறம்போக்கு என்றால்தான் பட்டா செய்து கொடுப்பதற்கு தனி அதிகாரிகள் ஆவன செய்கிறார்கள். ஏரிப் புறம்போக்கு, பாட்டைப் புறம்போக்கு, குளம் புறம்போக்கு —இப்படி பல்வேறு புறம்போக்குகள். பெயர் சொல்வதை புரிந்துகொள்ளவே முடியவில்லை, அப்படிப்பட்ட புறம்போக்குகளில் அதிகமானவர்கள் இருக்கிறார்கள், அப்படிப்பட்ட புறம்போக்குகளில் குடியிருக்கக் கூடியவர்கள் லைட் வசதி செய்துகொள்ள வேண்டுமென்றால், பட்டா இருந்தால்தான் மின்சார இணைப்பு கொடுப்போமென்று மின்சாரத் துறை அதிகாரிகள் சொல்லுகிறார்கள். அதே நேரத்தில் அவர்களால் கடன் வாங்கி வீடு கட்ட முடியவில்லை. எந்த லோன் வாங்க வேண்டுமென்றாலும், தொழில் செய்வதானாலும், பட்டா அவசியம் தேவைப்படுகிறது. அது கொடுக்கப்படவில்லை. ஏரிப் புறம்போக்கு, பாட்டைப் புறம்போக்கு, மேய்ச்சல் புறம்போக்கு—இப்படிப்பட்ட புறம்போக்குகளை மாற்றி, நத்தம் புறம்போக்காக்கி, அதை உறுதி செய்து, அவர்களுக்கு பட்டா செய்து கொடுக்கக்கூடிய வகையில் இந்தத் துறை ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி இல்லையென்று சொன்னால் நிச்சயமாக ஏழை எளிய மக்கள் பட்டா வசதியில்லாமல் மிகவும் சங்கடப்படுவார்கள். அதோடு மட்டுமல்லாமல், இப்படிப்பட்ட புறம்போக்கில் இருக்கக் கூடியவர்களுக்கு இன்றைக்கு அரசாங்கம் பட்டா செய்து கொடுப்பது 2 சென்ட் நிலம்தான். அவர்கள் பூர்வீகமாக 30, 40, 50 வருடங்களாக புறம்போக்கில் 4 அல்லது 5 சென்டை வளைத்து விவசாயம் அல்லது தோட்டம் போட்டோ,

வைக்கோல் போர் போட்டோ, மாடுகளைக் கட்டியோ அந்த இடத்தை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இதை பட்டா செய்து கொடுங்கள் என்று கேட்கும்போது, வரம்புக்கு உட்பட்ட 2 சென்ட் நிலத்தைப் பட்டா செய்து கொடுத்துவிட்டு, மீதத்தை எடுத்துவிடுகிறார்கள். நிரந்தரமாக அவர்கள் உபயோகித்துக்கொண்டிருக்கும் நிலத்தை அவர்களுக்குக் கொடுக்காமல் போய்விடுவார்களோ என்ற அந்த அச்சத்தில் நீண்ட நாட்களாக குடியிருக்கிறவர்கள்கூட பட்டா வேண்டாம்; அனுபவத்தில் இருந்துவிட்டுப் போகட்டும் என்ற அடிப்படையில் இருக்கிறார்கள். எனவே அவர்கள் உபயோகிக்கும் நிலத்தை அவர்களுக்கே பட்டா செய்து கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வருவாய்த் துறையில் கிராம நிர்வாக அதிகாரிகள் இருக்கிறார்கள். ஒருவர் புறம்போக்கில் குடியிருந்தால், 5 வருடம் இருந்தால், 10 வருடம் இருந்தால் அவர்கள் வீட்டு வரி செலுத்தி அதற்கு ரசீது கொடுக்கிறார்கள். அடிமனைக்கு பி. மெமோ என்று போடுகிறார்கள். 10 வருடங்கள் ஒருவர் குடியிருந்த இடத்தை திடீரென்று மற்றொருவருக்கு, அங்கே குடியிருக்கிறவர்களை நீக்கிவிட்டு, அடுத்தவருக்கு ரசீது போட்டுக் கொடுத்து விடுகிறார்கள். இதனால், ஆரம்பத்தில் குடியிருக்கிறவர்களுக்குக் கிடைக்காமல் போய் விடுகிறது. இப்படிப்பட்ட தர்மசங்கடமான சூழ்நிலை இருக்கிறது என்னுடைய தொகுதியில். அருந்தவபுரம் என்று இருக்கிறது. அரிஜன மக்கள் 240 குடியிருப்புகளில் இருக்கிறார்கள். கிட்டத்தட்ட 35 வருடங்களாக இருக்கிறார்கள். அவர்கள் ஏரி புறம்போக்கில் இருக்கிறார்கள். ஏரி புறம்போக்காக இருக்கிற காரணத்தால் இதுவரை அவர்களுக்குப் பட்டா வழங்கவில்லை. ஆகவே நம்முடைய அமைச்சரவர்கள் அவர்களுக்குப் பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது).

தமிழகத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஏழை எளிய மக்களுடைய கண்ணீரைத் துடைக்கும் இந்த நல்ல வேளையில், நீங்கள் இப்படிப்பட்ட கோரிக்கையை செய்து கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். மேலும் ஒரு வீட்டில், 4, 5 குடும்பங்கள் இருக்கின்றன. 5 பேர் கொண்ட குடும்பம் என்ற நிலை மாறி, 15 பேர், 20 பேர் ஒரே வீட்டில் குடிமனை இல்லாமல் குடியிருக்கிறார்கள். அவர்களுக்கும் குடிமனையைத் தனித் தனியாக வழங்குவதற்கு ரெவின்யூ அதிகாரிகள், கிராம நிர்வாக அதிகாரிகள், கிராம நல அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து, புறம்போக்கு நிலங்களில் அவர்களுக்கு மாற்று ஏற்பாடு செய்து கொடுக்க முன்வர வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.



அதைப்போல சீலிங் நிலம் என்று சொல்லி உபரி நிலத்தைப் பகிர்ந்து கொடுத்திருக்கிறார்கள். அப்படி பகிர்ந்து கொடுக்கும்போது 1½ ஏக்கர் நிலம் ஒவ்வொருவருக்கும் கொடுக்க வேண்டுமென்று அளவு இருக்கிறது. 1½ ஏக்கர் நிலம் இருக்கும்போது, அதைப் பிரித்து அடுத்தவர்களிடம் கொடுத்திருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய தோட்டம் என்ற கிராமத்தில் அப்படிப்பட்ட நிலை இருக்கிறது. 30 வருடங்களாக சாகுபடி பண்ணிக்கொண்டிருந்தவர்கள், ஒரு ஏக்கர் வைத்திருந்தார்கள். அதை அடுத்த விவசாயத் தொழிலாளிக்குக் கொடுத்து, அவர்களும் இவர்களும் மோதிக் கொள்ளும் நிலைமை இருக்கிறது. அது பற்றி வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடம் தனியாகக் கொடுக்கிறேன் என்று கூறி வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

பிற்பகல் 6–15

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : திரு. கே. கந்தசாமி.

* <u>திரு. கே. கந்தசாமி</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட நிர்வாகத்துறை மானியக் கோரிக்கை மீது எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சேலம் கோட்டம் ஏறத்தாழ 100 கிலோ மீட்டர் நீளத்தையும், 70 கிலோ மீட்டர் அகலத்தையும் கொண்ட பெரிய கோட்டமாக உள்ளது. 7 சட்டமன்ற தொகுதிகளையும், மூன்று நகராட்சிகளையும் ஓர் நகரியத்தையும், 10 ஊராட்சி ஒன்றியங்களையும் கொண்டதாக உள்ளது. கவர்ப்பனை, லத்துவாடி, திட்டச்சேரி, கிழக்கு ராஜபாளையம், புனல்வாசல், நாவலூர், வீரகனூர், நல்லூர், பெரியேரி, ஆறகலூர், சிறுவாச்சூர், ஊனத்தூர், புத்தூர் போன்ற கிராம மக்கள் கோட்டாட்சித் தலைவரைச் சந்தித்து தங்கள் குறைகளைச் சொல்லவேண்டுமானால் 100 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள சேலத்திற்குச் செல்ல வேண்டியுள்ளது. மக்கள் நலன் கருதி சேலம் கோட்டத்தை இரண்டாகப் பிரித்து ஆத்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய்க் கோட்டம் அமைக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், தலைவாசல் ஒன்றியம் 36 வருவாய் கிராமங்களையும் நூற்றுக்கு மேற்பட்ட குக்கிராமங்களையும் கொண்ட பெரிய ஒன்றியமாக உள்ளது. இதனை இரண்டாகப் பிரித்து வீரகனூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய ஒன்றியம் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். பெரிய மாவட்டங்களை இரண்டாகப் பிரிக்கின்றபோது, புதிய மாவட்டத்திற்கு அந்த மாவட்டத் தலைநகரின் பெயரையும் இணைத்து பெயர்

[திரு. கே. கந்தசாமி] [1991 செப்டம்பர் 20

வைக்க வேண்டும். உதாரணமாக பெரியார் மாவட்டம் என்று பெயர் வைத்துள்ளோம். வெளி மாநிலத்தில் உள்ளவர்களுக்கு பெரியார் மாவட்டம் எங்கே உள்ளது என்று குழப்பம் வருகிறது. அதோடு பெரியார் மாவட்டம் என்றும், தூத்துக்குடி சிதம்பரனார் மாவட்டம் என்றும் பெயர் வைத்தோமானால் குழப்பம் வராமல் இருக்கும். தபால் தந்தி துறையினருக்கும் இது வசதியாக இருக்கும்.

சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் மிகவும் பழுதடைந்துள்ளது. அதற்குப் புதிய அலுவலகம் கட்ட வேண்டும். திங்கட்கிழமை தோறும் பொதுமக்கள் அதிகாரிகளைச் சந்தித்து தங்கள் குறைகளை நேரில் தெரிவிப்பதற்காக அதற்கு வசதியாக அதிகாரிகள் திங்கள் கிழமைகளில் வெளியில் செல்லக்கூடாது என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அப்படியிருந்தும் சில அதிகாரிகள் முகாம் என்று சொல்லி வெளியில் சென்று விடுகிறார்கள். எந்த அதிகாரியும் திங்கட்கிழமையன்று வெளியில் போகக்கூடாது என்பதில் அரசு கண்டிப்பாக நடந்துகொள்ள வேண்டும். மக்கள் குறைகளை நேரில் கண்டறிய மனு நீதி முகாம்கள் நடத்தப்படுகின்றன. மனுநீதி முகாம்களில் கொடுக்கப்படும் மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அரசு ஆணை இருந்தாலும் அந்த மனுக்கள் மீது சரிவர நடவடிக்கை எடுக்காத நிலை இருந்து வருகிறது. இதுபற்றி அரசு தனிக்கவனம் செலுத்த வேண்டும்.

சமுதாய வளர்ச்சியில் வருவாய்த்துறை ஊழியர்களின் பங்கு மகத்தானது. கள்ளச்சாராயத்தை ஒழிப்பதில் கிராம நிர்வாக அலுவலர்களை ஈடுபடுத்தியது முதலமைச்சரின் சாணக்கியத் தனத்தைக் காட்டுகிறது. இந்த நல்ல நடவடிக்கையின் காரணமாக கள்ளச் சாராயம் 80 சதவீதம் வரை ஒழிந்துள்ளது. நிலவரியின் மூலம் அரசுக்கு வருகின்ற வருவாய் பெரியதாகத் தெரியவில்லை. அதைக் காட்டிலும் நிலவரி வசூல் செய்யும் ஊழியர்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும் அரசு செய்யும் செலவு அதிகமாக உள்ளது. எனவே மலைப் பகுதிகளில் விளையும் தோட்டப் பயிர்களைத் தவிர மற்ற விவசாய நிலங்களுக்கு விதிக்கப்படும் நில வரியை முழுமையாக ரத்து செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அரசு புறம்போக்கு நிலங்களை நிலமில்லாதவர்களுக்கு ஒப்படை செய்கின்றபோது, கிராம மக்கள் தங்கள் கால்நடைகளை மேய்ப்பதற்கு மேய்ச்சல் நிலங்கள் இருக்குமாறு பார்த்துக் கொள்ளவேண்டும். ஏழைகளுக்கு இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் கொடுக்கும்போது பெண்கள் பெயரில் கொடுப்பதற்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது ஒரு நல்ல செயலாகும். புறம்போக்கு நிலங்களை ஆதி திராவிட மக்கள் பயிர் செய்வதற்காக நிலப்பட்டாக்கள் கொடுத்த பிறகும், சில இடங்களில் ஒப்படை செய்த நிலங்களில் பக்கத்து பட்டாதாரர்கள்



91 செப்டம்பர் 20] [திரு. கே. கந்தசாமி]

ழுது கொண்டு நிலத்தை தங்கள் கை வசமே வைத்துக் காண்டு இருக்கிறார்கள். யாருக்கு பட்டா கொடுக்கப் ட்டதோ அவர்களிடம் முழுமையாக நிலத்தை ஒப்படைக்கும் ணியை மாவட்ட வருவாய் நிர்வாகம் பார்த்துக் கொள்ள வண்டும்.

சேலம் அரசினர் பொறியியல் கல்லூரிக்காக ஒதுக்கப்பட்ட ூற்றுக்கணக்கான ஏக்கர் நிலம் பயன்படுத்தப்படாமல் உள்ளது. சலம் கோரிமேட்டில் உள்ள அரசினர் தொழிற் பயிற்சி லையத்தை பொறியியல் கல்லூரி வளாகத்திற்கு மாற்றி ட்டு தற்போதுள்ள தொழிற் பயிற்சி நிலையக் கட்டிடத்தை ்கத்தில் உள்ள அரசினர் மகளிர் கல்லூரிக்கே கொடுத்து களிர் கல்லூரியின் இடப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டு மன்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 6·20

புறம்போக்கு நிலங்களில் ஏராளமான புளிய மரங்களும்பிற ரங்களும் இருக்கின்றன. இந்த மரங்களுக்கு வெள்ளைக்கார ட்சியில் நிர்ணயித்த விலையே இன்னும் உள்ளது. உதாரண க ஒரு புளிய மரம் இன்று சாதாரணமாக 3 ஆயிரம் ரூபாய் ஆயிரம் ரூபாய் வரை விற்கிறது. சிலசமயம் புறம்போக்கு லங்களில் உள்ள மரங்களை வெள்ளைக்காரன் நிர்ணயித்த ரூபாய் 60 காசை செலுத்திவிட்டு வெட்டிக் கொள்ள னுமதிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

பரம்பரையாக கூட்டுப் பட்டாக்கள் இருப்பதால் விவசாய த்தை மேம்படுத்த கூட்டுறவு நிறுவனங்களிடமிருந்து கடன் ளைப் பெற முடிவதில்லை என்பதைக் கருத்தில் கொண்டு 83 ஆம் ஆண்டு நிலவுடமை மேம்பாட்டுத் திட்டம் கொண்டு ரப்பட்டது. இந்தத் திட்டம் நல்ல திட்டமாகும். இந்தத் ட்டத்தை நல்ல முறையில் அமல்படுத்துவதுடன் இன்னும் வலாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முத்திரைத் தாள்களை போதுமான அளவில் அரசாங்கம் நியோகம், செய்தபோதிலும் முத்திரைத்தாள்களை விற்கும் ற்பனையாளர்கள் செயற்கைப் பஞ்சத்தை உருவாக்கி 5 பாய் பத்திரத்தை 10 ரூபாய்க்குக் கூட விற்கிறார்கள். ரூபாய் பத்திரம் கேட்டால் இல்லை என்று கூறி பத்து ரூபாய் த்திரத்தைத் தருகிறார்கள். உடனே பத்திரத்தைப் பதிவு ய்ய வேண்டுமே என்ற அவசரத்தில் மக்கள் 5 ரூபாய் பத் ரத்தை 10 ரூபாய் கொடுத்து வாங்கிச் செல்ல வேண்டிய லையும் ஏற்படுவதைக் கவனத்தில் கொண்டு இதுபோன்ற

புகார்கள் வந்தால் சம்பந்தப்பட்ட விற்பனையாளர்களின் லைசென்ஸை தயவு தாட்சண்யம் பார்க்காமல் ரத்துச் செய்ய வேண்டும்.

விபத்துக்களில் இறந்து போகின்றவர்களின் குடும்பத்தார்க்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து 3 ஆயிரம் ரூபாய் உதவித் தொகை அளிப்பதை 5 ஆயிரம் ரூபாயாக உயர்த்திக் கொடுக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளதைப் பாராட்டி இந்தத் தொகை சம்பந்தப்பட்டவர்களுக்குத் தாமதம் இல்லாமல் கிடைக்க நிர்வாக இயந்திரத்தை முடுக்கி விட வேண்டும் என்று மெத்தப் பணிவோடு கேட்டுக் கொள்கின்றேன்.

வாழ்க வையகம் என்று சொல்லி ஆயிரம் ரூபாய் கட்டினால் 2,000 ரூபாய் கிடைக்கும் என்றெல்லாம் விளம்பரப்படுத்தி பொது மக்களிடமிருந்து கோடிக் கணக்கான ரூபாய்களை வசூல் செய்து திடீரென ஓர் இரவில் பொது மக்களிடமிருந்து வசூல் செய்த பணத்தைத் தூக்கிக் கொண்டு போய் விடுகிறார்கள். சாதாரண பொது மக்கள் மட்டுமல்லாமல் விபரம் தெரிந்த அரசு ஊழியர்கள் கூட ஏமாந்து விடுகிறார்கள். இம்மாதிரியான சீட்டு கம்பெனிகளிடம் சேலம் மாவட்ட மக்கள் ஏமாந்து ஏமாந்து கோடிக் கணக்கான ரூபாய்களை அண்மையிலே இழந்திருக்கிறார்கள். இம்மாதிரியான போலித்தனமாக உள்ள சீட்டுக் கம்பெனிகளை அரசு கட்டுப்படுத்தி கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சென்னை, மதுரை, கோவை, திருச்சி போன்ற நகரங்களில் பணியாற்றிவரும் பத்திரிக்கை நிருபர்களுக்குச் சலுகை விலையில் வீட்டு மனைப் பட்டாக்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இன்னும் ஒதுக்கப்படாத சேலம் போன்ற மாவட்டத் தலை நகரங்களில் உள்ள நிருபர்களுக்கும் உடனே ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டு அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். டி. அரங்கநாதன்.

திரு. ஆர். டி. அரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைபெற்றுக் கொண்டிருக்கும் வருவாய்த் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி வழியிலே தமிழக ஏழை மக்களின் கண்ணீரைத் துடைக்கும் வகையில் நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் பொற் பாதங்களைத் தொட்டு வணங்கி எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்குத் தமிழகத்திலே நடைபெறுகின்ற புரட்சித் தலைவியின் அரசு ஏழை எளிய மக்களின்



அரசாக, ஏழை எளிய மக்களுக்கு இருக்கின்ற அன்றாடம் இருக்கின்ற தொல்லைகளை, துயரங்களைத் துடைக்கின்ற அரசாக இன்றைக்குச் செயல்படுகின்ற இந்த அரசு வருவாய்த் துறை நிர்வாகத்தைத் துரிதப்படுத்தவும், வருவாய்த் துறையை முடுக்கி விடவும் ரூபாய் 220 இலட்சம் செலவில் நவீன கருவிகளை மாவட்ட அதிகாரிகளுக்கு அளிக்கலாம் என்று அரசு முடிவு செய்துள்ளதை மனமாரப் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

பல்வேறு கிராமப்புற பணியாளர்களின் மதிப்பூதியம் 1-1-1991 முதல் ரூபாய் 577 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. கிராம பணியாளர்களின் பின்தங்கிய சமூக நிலையை, மற்றும் பொருளாதார நிலையைக் கருத்தில் கொண்டு அரசு ஊழியர்கள் பணியில் இருக்கும்போது மரணம் அடைந்தால் வழங்கப்படும் நிதி ரூ. 60 ஆயிரம், கிராமப்புற பணியாளர்களுக்கும் விரிவுபடுத்தப்படுவதை மனமார வாழ்த்தி வரவேற்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

பொதுமக்களின் தேவைகளை நிறைவு செய்யவும் வருவாய் நிர்வாகத்தை மேம்படுத்தவும் மாவட்ட நிர்வாகத்தை சிறப்பாக அமைக்கும் நோக்கத்துடன், பெரிய மாவட்டங்களைப் பிரிப்பதில் அரசுக்கு நிதி நெருக்கடி இருந்த போதும், தஞ்சாவூர் மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க அரசு முடிவு செய்துள்ளதை வரவேற்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

பிற்பகல் 6-25

தமிழ்நாட்டில் மிகப் பெரிய மாவட்டங்களில் ஒன்றான தென்னாற்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, வள்ளலார் பிறந்த எங்கள் பகுதியான தெற்கு பகுதிக்கு கடலூரைத் தலைநகராகக் கொண்டு வள்ளலார் மாவட்டம் என்று பெயரிட்டு அமைக்க மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

வட்டாட்சியர் எல்லைக்குட்பட்ட பெரிய குறு வட்டங்களில் துணை வட்டாட்சியர்களை நியமித்து, மூன்று வட்டங்களுக்கு பொறுப்பாக மண்டல துணை வட்டாட்சியரை நியமனம் செய்து, கிராமப் பொது மக்களின் குறைகளைப் போக்கவும், சான்றிதழ்கள் துரிதமாகக் கிடைக்கவும் வழிவகை செய்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேற்படி திட்டத்தில் என் தொகுதியில் பெரிய குறுவட்டமாக இருக்கிற கம்மாபுறத்திற்கு துணை வட்டாட்சியர் அலுவலகம் அமைத்து, அங்கேயிருக்கிற மக்களின் குறைகளை அன்றாடம் விரைவில் தீர்ப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

கிராம நிர்வாக அலுவலர்கள் கிராமங்களில் தங்கி சரிவர நிர்வாகப் பணிகளை கவனிப்பது இல்லை. அவர்களுக்கு குடியிருப்பு வசதி அந்த கிராமங்களில் இல்லாததுதான் அதற்குக் காரணம். அவர்கள் அருகில் உள்ள நகரங்களில் தங்கிக் கொண்டு கிராமங்களுக்கு வந்து பணி செய்வதில் கால தாமதம் ஏற்படுகிறது. இதைத் தவிர்க்க வருவாய்த்துறை மூலமாகவோ அல்லது ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாகவோ கிராம நிர்வாக அலுவலர்களுக்கு அவர்கள் பணிபுரியும் இடங்களில் குடியிருப்புகளை ஏற்படுத்தி, அந்த நிர்வாக அலுவலர்கள் கிராமங்களில் தங்கி பொது மக்களின் குறைகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்ய ஏதுவாக ஒரு நிலையை ஏற்படுத்தித் தர மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் பணி நியமனம் செய்யப்பட்ட 13,000 கிராம நிர்வாக அலுவலர்கள் பதவி உயர்வு எதுவும் இல்லாமல், இன்னும் அதே நிலையில் பணியாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். அரசு தேர்வாணைக் கழகம் மூலம் நியமிக்கப்பட்ட கிராம நிர்வாக அலுவலர்கள் மற்ற அரசு ஊழியர்களைப் போல பதவி உயர்வும், அரசால் வழங்கப்படுகிற சலுகைகளும் இவர்களுக்கு கிடைக்க வாய்ப்பு ஏற்படுத்தித் தருமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் முன்பெல்லாம் பட்டிகள் பராமரிக்கப பட்டு வந்தன. இப்போது எந்தக் கிராமத்திலும் பட்டிகள் பராமரிக்கப்படுவது இல்லை. இதனால் கிராம மக்கள் என் நிலத்தில் உன் மாடு மேய்ந்தது; உன் ஆடு மேய்ந்தது என்று ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டு, சில சமயங்களில் அது பெரிய கலவரமாகவே ஆகி விடுகிறது. இந்தக் குறைகளைப் போக்குவதற்கு ஆங்காங்கு இருக்கிற வி.ஏ.ஒ.க்கள் லிமிட்டில் பட்டிகளை அமைத்துப் பராமரித்தால் கிராம மக்களுக்கு நன்மை தரும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, அதனை அமைத்து தருமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள் கிறேன்.

பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் ஏழையெளிய மக்களுக்கு மனைப் பட்டாக்கள் வழங்குவதில் ஏற்படும் தேவையற்ற கால தாமதத்தைப் போக்க அரசு முயற்சி யெடுக்க வேண்டும். மேற்படி நிலைமை ஏற்படாமல் பார்த்துக் கொள்வதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் விருத்தாச்சலம் நகரில் அதைச் சுற்றி இருக்கிற கிராமங்களில் சுமார் 30, 40 ஆண்டுகளாக வாழ்ந்து கொண்டிருக்கும் பொதுமக்களுடைய குடியிருப்புகளுக்கு இதுவரையில் வீட்டு மனைப்பட்டா வழங்கப்படாமல்



இருக்கிறது. எனவே, வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைத் துரிதப்படுத்தி நீண்ட காலமாக பட்டா வழங்கப்படாமல் இருக்கிற அந்தக் குடியிருப்புகளுக்கு, வீட்டு மனைப் பட்டாக்களை வழங்குவதற்கு உடனடியாக ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழக மக்களின் காவல் தெய்வம், புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் ஏழையெளிய மக்களின் குறைகளை உடனடியாகப் போக்க மிகச் சிறப்பான திட்டங்களை அறிவித்து, பொது மக்களுக்கு உறுதுணையாக இருக்கும் வருவாய்த் துறை மாண்புகளைப் பாராட்டி, வாய்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி:

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை மானியக் கோரிக்கையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களைச் சொல்ல நான் முன் வருகிறேன். வருவாய்த்துறை என்பது அரசினுடைய முக்கியமான பல துறைகளில் ஒன்றாகும். கிராமப் புற ஏழை மக்களுடைய முன்னேற்றத்திற்கு அடிப்படையாக இருக்கக்கூடிய இந்தத் துறையில் அனுபவமிக்க நம்முடைய வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் பொறுப்பு ஏற்றிருப்பது மிகவும் சாலச் சிறந்தது.

பிற்பகல் 6.30

தஞ்சை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, இன்றைய தினத்திலே அந்த மாவட்டத்தினுடைய வளர்ச்சிப் பணிகளை விரைவாகச் செய்வதற்கு தஞ்சை மாவட்டத்திலே அமைக்கப்பட்டு இருக்கிற குழு வரவேற்கத்தக்கது. இன்றைய தினம் தமிழகத்தில் உள்ள பல்வேறு மாவட்டங்களைப் பிரிக் கின்றபோதும், வட்டங்களைப் பிரிக்கின்றபோதும், அவைகளுக்கு புதிதாக பெயர்களை வைக்கின்றோம். அப்படி புதியதாக பல் வேறு பெயர்களை வைப்பதன் மூலமாகவும், அல்லது இருக்கின்ற பெயர்களை மாற்றுவதன் மூலமாகவும், எந்த ஒரு மாற்றத்தை யும் அந்த மாவட்டத்திலே நாம் காண முடியவில்லை. இதற்காக நிதிநிலையை ஒதுக்கி, முன்னேற்றமான திட்டங்களைச் செய்வ தன் மூலமாகத்தான் அந்த மாவட்டத்திற்கு பெருமைகளைத் தேட முடியும். இப்படி நான் சொல்கிறபோது, தியாகம் புரிந் திருக்கிற பல்வேறு தலைவர்களுடைய பெயர்களை குறை சொல்லவேண்டும் என்பதற்காக இதை நான் சொல்லவில்லை. பொதுவாக, பல்வேறு தலைவர்களுடைய பெயர்களை வைப்ப தன் மூலமாகவும், அல்லது இருக்கிற பெயரை மாற்றுவதன் மூலமாகவும், புதிய பிரச்சினைகள் அந்த மாவட்டங்களிலே உருவாகின்றன. அப்படிப்பட்ட நிலைமைகள் இன்றைய தினம்

ஏற்பட்டிருக்கிறது. ஆகையினால், அரசாங்கம், இனிமேல் பெயர்களை வைக்கிறபோது, இதுபற்றி ஒரு தீர்க்கமான பரிசீலனை செய்ய வேண்டும் என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

எனக்கு முன்பாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் பல பேர்கள் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில் கூட்டம் என்று சொன்னால், இன்றைய தினம், 6 மாதம் இல்லை என்றால் 3 மாதத்திற்கு ஒரு முறைதான் நடத்தப்படுவது பழக்கமாக இருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும், சட்டமன்றம் போன்று, சட்டமன்ற உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், தங்களுடைய தொகுதியிலே இருக்கிற பல்வேறு பிரச்சினைகளை அஜெண்டாவாக எழுதிக் கொடுத்து, அந்த மாவட்டத்தினுடைய அபிவிருத்திக் கவுன்சில் கூட்டத்தைக் கூட்டுவதன் மூலமாக, அதிலே பேசுவதன் மூலமாக, அந்தப் பணிகளை முழுமையாக நிறைவேற்றுவதற்கு, நேரடியாக தொடர்பு கொள்வதற்கு ஒரு நல்ல வாய்ப்பு ஏற்படுகிறது. எனவே, பல மாதமாக கூட்டப்படாமல் இருக்கிற அந்த மாவட்ட கவுன்சில் கூட்டங்களை, மாதாமாதம் நடத்துவதற்கு நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் ஆணையிடவேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று சாதாரண ஏழை எளிய மக்கள் சம்பந்தப்பட்டு இருக்கிற பிரச்சினைகள் குறித்து, அவர்கள் தாசில்தார், ஆர்.டி.ஓ. கலெக்டர் போன்றவர்களிடத்தில் மனுநீதி நாளில் மனுக்களைக் கொடுத்தாலும் கூட மாதக்கணக்கில் அவர்களுக்குப் பதில் கிடைப்பதில்லை. ஏழை எளிய மக்கள், கிராமப்புற மக்கள் மனுக் கொடுத்து பதில் பெறுவதைவிட சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுக்கின்ற மனுவிற்கு, அநேகமாக வருடக்கணக்கிலே ஆனபிறகு பதில் கிடைக்கிறது. சிலருக்கு கிடைக்காமலே போய்விடுகிறது.

நான் சென்ற தடவை சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது கொடுத்த மனுவிற்கு, சமீபத்திலே கிடைத்த பதில் அந்த மனு பரிசீலனையில் இல்லை என்பதுதான். இப்படிப்பட்ட நிலைமைகளை வருவாய்த்துறையில் இருந்து மாற்றுவதற்கு உடனடியாக பதில் கிடைப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் பள்ளி மாணவர்கள் ஜாதிச் சான்றிதழ் வாங்குவதற்கு, வட்டாட்சியர் அலுவலகத்தில் தனி அதிகாரிகளை நியமித்து, தாசில்தார் மற்ற பணிகளை முடித்துவிட்டு, வந்தவுடன், அவரிடத்திலே கையெழுத்து வாங்கிக் கொடுப்பதற்காக ஒரு இலாக்காவை நீங்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.





1983 ஆம் ஆண்டு, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் இருக்கிறபோதுதான், அன்றைய தினம் நிலப்பட்டாவிற்கு தனியாக ஒரு புத்தகம் கொடுக்கின்ற திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். உண்மையிலே அதிலே பல சிக்கல்கள் இருந்தன. புதிய சிக்கல்களும் உருவெடுத்தன. பொதுவாக என்னை எடுத்துக் கொண்டால், என்னுடைய நிலத்தினுடைய பெயர், அந்த அடங்கலலே இருக்கிற பெயர் இன்னொரு நபருக்குப் போனது. இன்னொருவரின் நிலத்தினுடைய பெயர் என் பெயருக்கு வந்தது. இப்படிப்பட்ட சிறிய சிறிய குறைபாடுகள் இருந்தாலும் கூட, அது ஒரு நல்ல திட்டமாக அமைந்திருந்தது. அதிலே இருக்கிற குறைபாடுகளைக்கூட இன்னும் திருத்தி அமைக்க முடியாத ஒரு நிலைமை இன்றும் இருக்கிறது.

அதேபோன்று நிலம் வாங்கக்கூடியவர்கள், நிலம் விற்கக் கூடியவர்கள் இவர்களைப் பொறுத்தவரையில், இன்றைக்கு சாதாரணமாக யாரும் இதைச் செய்வதற்கு முன்வருவதில்லை. ஏன் என்றால், பத்திரத்தினுடைய விலை, ஸ்டாம்ப் டியூட்டியினுடைய விலை அவ்வளவு அதிகமாக இருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டும் என்றால், 18 ஆயிரம் ரூபாய்க்கு நிலம் வாங்கினால், 43 ஆயிரம் ரூபாய்க்கு ஸ்டாம்ப் வாங்க வேண்டியதாக இருக்கிறது. இல்லை என்றால், 47-ஏ என்கிற பெயரில், ஆர்.டி.ஓ.-விற்கு அனுப்புகிறார்கள். நிலத்தை வாங்கக்கூடியவர்களுக்கு பட்டா கிடைக்கவில்லை. இப்படிப்பட்ட சட்டச் சிக்கல்கள் இன்றைய தினத்திலே தமிழகத்திலே இருக்கின்றன.

அதேபோன்று சென்னை, கோவை, மற்றும் திருச்சி போன்ற நகரங்களில் யாரும் குடியிருப்பதற்கு மனைகளை வாங்குவதற்கு விரும்பவில்லை. அதைவிட வாடகை வீடுகளிலே இருந்தால் போதும் என்ற நிலைமைக்குப் போய்விடுகிறார்கள். காரணம் 40 ஆயிரம் ரூபாய்க்கு நிலம் பட்டா வாங்க வேண்டும் என்று சொன்னால், சுமார் 60 ஆயிரம் ரூபாய்க்கு ஸ்டாம்ப் டியூட்டி கட்ட வேண்டிய நிலைமைகள் இருக்கின்றன.

பிற்பகல் 6–35

இப்படிப்பட்ட நிலைகளிலிருந்து விடுபட வேண்டும். அதற்கு மேலாக நகர உச்சவரம்புச் சட்டம் என்ற ஒன்று கொண்டு வந்திருக்கிறீர்கள். குறிப்பாக சென்னை, மதுரை, கோவை போன்ற நகரங்களை எடுத்துக்கொண்டால் — சென்னை பெருநகரைப் பார்க்கின்றபோது பல தனி நபர்கள் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை வாங்கி விற்பனை செய்துகொண்டிருக்கிறார்கள். அதை அரசு உடனடியாகத் தடை செய்ய வேண்டும். அவர்கள் எப்படி இந்த வியாபாரங்களைப் பண்ணிக்

[திரு. ஜி. பழனிசாமி] [1991 செப்டம்பர் 20

கொண்டிருக்கிறார்கள்? அரசு பட்டா வழங்குகின்ற திட்டத்தை
அவர்களே இன்றைக்கு பினாமியாக வியாபாரம் செய்து கொண்
டிருக்கிறார்கள். அதைக் கட்டுப்படுத்தக் கூடிய ஒரு சட்டம்
வந்தால் தான் நகர்ப்புறத்திலே இருக்கக்கூடிய, மனைப்பட்டா
வழங்கக் கூடிய சட்டத்தை முழுமையாக அரசாங்கம் நிறை
வேற்ற முடியும். இல்லையென்று சொன்னால் 40 ஆண்டுக்
காலமாக பட்டா வழங்குகின்ற அந்த மனைப்பட்டா
வழங்குகின்ற திட்டத்தைத் தொடர்ந்து சொல்லிக் கொண்டுதான்
இருக்க வேண்டும்.

அதேபோன்றுதான் வீட்டுமனைப் பட்டா கூட. ரூ. 4,500
வருமானத்திற்கு உட்பட்டவர்களுக்குத்தான் பட்டா வழங்க
வேண்டுமென்று இருக்கிறது. அதிலிருந்து தளர்த்த வேண்டும்.
ரூ. 12,000 வரையிலும் வருமானம் உள்ளவர்களுக்கு பட்டா
வழங்க வேண்டுமென்று அரசு சட்ட திருத்தங்களைக் கொண்டு
வரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று 3,75,000 பேர்களுக்கு பட்டா வழங்குவதாக
சொல்லப்பட்டிருக்கிறது. குறிப்பாக ஒன்றை நான் அமைச்ச
ருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். சென்ற
வருடம் தஞ்சை மாவட்டத்தில் அநேகமாக கிராமப் பணி
யாளர், கிராமத்தினுடைய நிர்வாக அலுவலர், ஆர்.ஐ.,
தாசில்தார், ஆர்.டி.ஓ. இவர்கள் எல்லாம் சேர்ந்து பூர்த்தி
செய்து பட்டா வழங்கக்கூடிய அந்த பாரங்கள் அத்தனையுமாக
அதிலே இணைத்து 6,000 பேருக்கு அந்த மனுக்களை வட்டம்
வட்டமாக பிரித்து, அவ்வளவும் மாவட்ட ஆட்சித் தலைவர்
மூலமாக அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டு, இன்றைக்கு நடை
முறையில் அதைக் கொண்டு வந்திருக்கிறோம். ஒரு அரசாங்கத்
தில் செய்வது போன்று மிகப் பெரிய பணியை எடுத்துக்கொண்டு
பட்டா வழங்குவதற்கான பணிகளை நான் துவங்கியிருந்தேன்.
அந்த மனுக்கள் எல்லாம் கூட இன்னும் பரிசீலனை செய்யப்
படாமல் பெண்டிங்கில் இருக்கின்றன. அதை அமைச்சரவர்கள்
கவனத்தில் எடுத்து, அதிலே துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்
அப்படிச் செய்தால் அரசில் இருக்கக்கூடிய அதிகாரிகளுக்கு அந்த
வேலைகள் எல்லாம் குறையும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில்
நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல்தான் இன்றைக்கு இருக்கக்கூடிய நில உச்ச
வரம்புச் சட்டம் என்கிற சட்டம் . (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிறைய உறுப்பினர்கள்
ஊருக்குச் செல்ல வேண்டுமென்று ஒவ்வொருவராக வந்து
சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதை மனதில் வைத்து
விரைந்து முடிக்கவும்.



1991 செப்டம்பர் 20)

திரு. ஜி. பழனிசாமி: நில உச்சவரம்புச் சட்டத்தைப்
பொறுத்தமட்டில் அநேகமாக தஞ்சாவூர் மாவட்டத்தில்
நாங்கள் மிகப் பெரிய ஒரு போராட்டத்தை நடத்தினோம். நில
உச்சவரம்புச் சட்டத்தில் இருக்கக்கூடிய நிலங்களை, யார் யார்
எல்லாம் பினாமிகளாக எழுதி வைத்திருக்கிறார்கள், யார் சட்டத்
திற்கு விரோதமாக வைத்திருக்கிறார்கள் என்பதை நாங்கள்
எல்லாம் போராட்டம் நடத்தி அநேகமாக சென்ற ஆண்டுதான்
அந்த வழக்கிலிருந்து எங்களுக்கெல்லாம் விடுதலை கிடைத்
திருக்கிறது. 6,000 பேருக்கு மேலே சிறை சென்று வந்திருக்
கிறோம்.

சுந்தரபெருமாள் கோவில், கபிஸ்தலம் போன்ற இடங்களில்
சுமார் 4,000-க்கும் மேற்பட்ட நிலங்கள் பினாமியாகவே எழுதி
வைக்கப்பட்டிருக்கிறது. இது அரசாங்கத்திற்குத் தெரியும்.
வேண்டுமென்று சொன்னால், மேலிடங்களில் உள்ள அதிகாரி
களுக்குத் தெரியவில்லை என்று சொன்னால், நான் அவர்களுக்கு
சாட்சி அளிக்கத் தயாராக இருக்கிறேன். நிலங்களுடைய நம்பர்
வட்டம், கிராமம், எந்த நபர் பெயரிலே எழுதி வைக்கப்பட்
டிருக்கிறது என்ற விவரத்தை அரசுக்குக் கொடுப்பதற்கு இந்த
அவையிலே ஏற்றுக்கொள்வதற்கு நான் தயாராக இருக்கிறேன்.
கொடுப்பேன். அப்படிப்பட்ட நிலங்களை எல்லாம் கையகப்
படுத்த வேண்டும். இது இல்லாமல் நில உச்சவரம்புச் சட்டம்
என்று சொன்னால், அநேகமாக இது ஏமாற்றுகிற சட்டமாகத்
தான் அமையுமேதவிர இது ஒரு முழுமையான சட்டமாக அமைய
முடியாது.

ஏற்கெனவே கோவில் தர்ம ஸ்தாபனங்களுக்குச் சொந்தமான
நிலங்களைப் பொறுத்தவரையில், முன்னாள் முதலமைச்சர்
மரியாதைக்குரிய முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களால் இந்த
சட்டமன்றத்திலே சட்டங்கள் நிறைவேற்றப்பட்டு மத்தியஅரசுக்கு
அனுப்பப்பட்டது. அப்படி அனுப்புகிறபோது அந்தச் சட்டத்தி
னுடைய திருத்தங்களில் ஏதோ ஒரு வரியில் மிஸ்டேக் இருக்கிறது
என்பதற்காக திருப்பி தமிழக அரசிற்கு அனுப்பப்பட்டது.
அனுப்புகிறபோது திரும்பவும் தமிழகத்தில் திராவிட முன்னேற்
றக் கழக அரசு கலைக்கப்பட்ட காரணத்தினால் இங்கே இருக்கக்
கூடிய அதிகாரிகள் திருப்பி அனுப்பாமல் அந்தக்கோவில் நிலங்கள்
உழுபவனுக்குச் சொந்தம் என்ற சட்டம் நிறைவேற்றப்படாமல்
போய்விட்டது. ஆகவே, கோவில் நிலங்கள் உழுபவனுக்குச்
சொந்தம் என்ற அடிப்படையில் நீங்கள் கோவில் நிலங்களை
எல்லாம் எடுக்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே
கேட்டுக்கொள்கிறேன்.

குத்தகை விவசாயிகள் பற்றி எனக்கு முன்பாக பேசி இருக்
கிறார்கள். தஞ்சாவூர் ஜில்லாவில் குத்தகை விவசாயிகள் பல்
லாண்டுக் காலமாக குத்தகை நிலங்களை அளக்கமுடியாமல் பல்
வேறு வேதனைகளுக்கு உள்ளாகியிருக்கிறார்கள். பல இயற்கைச்

சிற்றங்களினால் அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்
களுக்கு அந்த குத்தகை சாகுபடியிலிருந்து நீங்கள் விதி விலக்கு
அளிக்க வேண்டுமென்றும், குத்தகை தள்ளுபடி செய்ய வேண்டு
மென்றும் நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்
கிறேன். ஆகையால் மாண்புமிகு அமைச்சரவர்கள் இது
போன்ற ரெவின்யூ இலாக்காவிலே இருக்கின்ற நல்ல பல
சட்டத்திருத்தங்களை முடிப்பதோடு — இறுதியாகச் சொல்லி
முடித்துவிடுகிறேன்.

கிராமப் பணியாளர்கள் சம்பந்தமாக சொன்னார்கள். அநேக
மாக அவர்களுக்கு இறந்து போனதற்குப் பிறகு ரூ. 60,000
கொடுப்பதற்கு பதிலாக — அவர்கள் 40 ஆண்டுகாலம் பணி
யாற்றினாலும், அந்தப் பணத்தைப் பார்க்க முடியாது.
அவர்கள் இருக்கிறபோதே அவர்களையெல்லாம் அரசு ஊழியர்
களாக ஆக்கி, அவர்களுக்கு சம்பள உயர்வினைக் கொடுக்க
வேண்டும்.

பிற்பகல் 6-40

அதேபோல நிலம் அளக்கின்றவர்கள், நிலப்பட்டாக்களை
வரைகின்றவர்கள் என்று சுமார் 2 ஆயிரம் பேர் தமிழ்நாட்டில்
பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ரூபாய் 450-
லிருந்து 600 வரை சம்பளத்தை பெற்றுக்கொண்டு பணியாற்றிக்
கொண்டிருக்கிறவர்கள், 2 ஆயிரம் பேர் தான். அவர்கள்
அனைவரையும் அரசு ஊழியர்களாக ஆக்கி அடிப்படையான
அந்த சட்டத்திலே அவர்களுக்கு இடம் அளிக்க வேண்டும் என்று
இந்த சந்தர்ப்பத்திலே அமைச்சர் அவர்களைக் கேட்டு பேசு
வதற்கு வாய்ப்பு அளித்த பேரவைத் தலைவருக்கு நன்றி கூறி
விடைபெறுகிறேன். வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. ம. சின்னசாமி.

<u>*திரு. ம. சின்னசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாவட்ட நிர்வாகம், வருவாய்த்துறை ஆகிய மானி
யக் கோரிக்கைகளின் மீது என்னுடைய கருத்துக்களைத் தெரி
விப்பதற்கு வாய்ப்பு அளித்தமைக்காக பேரவைத் தலைவ
ருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் நீங்கள்
குறிப்பிடுகிற நேரத்திற்கு முன்னாலேயே என்னுடைய கருத்துக்
களை முடித்துக்கொள்கிறேன் என்று உங்கள் மூலமாக மாண்பு
மிகு உறுப்பினர் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

* * * * *

ஆகையினால் என்னுடைய கருத்தை சுருக்கமாக முடித்துக்
கொள்கிறேன். நம்முடைய மாவட்ட நிர்வாகத்தைப் பொறுத்த
வரையில்

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்
பெற்றன.



* *

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u>
[illegible] சொல்லியிருக்கிற வாசகங்கள் அவைக் குறிப்பிலேயிருந்து
[illegible]படுகின்றன.

<u>திரு. ம. சின்னசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்
களே, நம்முடைய தமிழ்நாட்டை பொறுத்தவரையில் மாவட்ட
நிர்வாகம் சரியாக நடக்கிறது என்று சொன்னாலும் கூட
இன்னும் பிரிக்கப்படாத பெரிய மாவட்டங்கள் இருக்கின்றன.
குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் உத்திரப் பிரதேச
மாநிலத்திலே மாவட்டங்களையெல்லாம் மிக சிறிய மாவட்ட
மாகப் பிரித்து, சிறிய மாவட்டங்கள்தான் நிர்வாகத்திற்கு
உகந்தது என்ற முறையில் அவர்கள் 3 தாலுக்காக்களைக்கொண்ட
பகுதிகளை மாவட்டங்களாக பிரித்து நிர்வாகத்தை சிறப்பாக
நடத்துவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதைபோலவே
நம்முடைய தமிழக அரசின் மாண்புமிகு முதல்வர்
புரட்சித் தலைவி அவர்களும், இந்தத் துறையில் அனுபவம் மிக்க
வருவாய்த்துறை அமைச்சர் அவர்களும் அதற்கு ஏற்பாடு
செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். திருச்சி
மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அது பெரிய மாவட்டங்
களில் ஒன்று. பத்து வருவாய் கோட்டங்களையும், 18 சட்ட
மன்ற தொகுதிகளையும் 33 ஊராட்சி ஒன்றியங்களையும் 6
நகராட்சிகளையும் உள்ளடக்கிய பெரிய மாவட்டம். அந்த
மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து திருச்சியை தலைநகரமாகக்
கொண்டும் பெரம்பலூரை தலைநகரமாகக் கொண்டும் பிரிக்க
வேண்டும் என்று சொல்லி மாண்புமிகு முதல்வர் டாக்டர்
எம். ஜி. ஆர். அவர்கள் 1982 ஆம் ஆண்டு அறிவித்தார்கள்.
ஆனால் அந்த மாவட்டம் இன்னும் பிரிக்கப்படவில்லை
என்ற காரணத்தாலே அதை மூன்றாக பிரித்து கரூரை தலை
நகரமாகக் கொண்டு ஒரு மாவட்டத்தை அமைக்க வேண்டும்
என்று நான் ஏற்கெனவே கேள்வி நேரத்தின் போது கேட்டிருந்
தேன். நம்முடைய மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்
அவர்கள் நிதி நெருக்கடி இருப்பதாக சொன்னார்கள். அதை
கொள்கை அளவிலேயாவது அறிவிக்க வேண்டும் என்று சொன்ன
போது கேள்வி நேரத்திலே கொள்கை அறிவிப்பு கிடையாது
என்று சொன்னார்கள். ஆகவே மானியக் கோரிக்கை நேரத்திலே
கொள்கையை அறிவிக்கலாம். நீங்கள் பிரிப்பது பின்னாலே
இருந்தாலும் அதற்கு உத்திரவாதமாக சொல்லாவிட்டாலும்
[illegible] வாரியத்தை [illegible] தெரிவித்தால் அடுத்த ஆண்
[illegible] அதற்கு அடுத்த ஆண்டிலோ [illegible] பெறுவதற்கு வாய்ப்பாக
இருக்கும் என்று நான் அவர்களை விரும்பி வேண்டி கேட்டுக்
கொள்கிறேன். [illegible] கரூரிலிருந்து திருச்சிக்கு செல்லவேண்டும்
[illegible] கிலோ மீட்டர் தூரம் போக
[illegible]

---

[illegible] பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்
[illegible]

வேண்டும். இன்னும் கரூருக்கு அப்பால் இருக்கிற பகுதிகளுக்கு செல்லவேண்டுமென்றாலோ திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவ ரையோ அல்லது வருவாய்த்துறை அதிகாரிகளையோ பார்ப்பதற்கு மிக சிரமமாக இருக்கிறது. ஏற்கெனவே கரூரைப் பொறுத்த வரையில் ஒரு மாவட்ட அளவிலே என்னென்ன அலுவலகங்கள் இருக்க வேண்டுமோ அத்தனை அலுவலகங்களும் இருக்கின்றன. குறிப்பாக மாவட்ட பதிவுத் துறை அலுவலகம், மாவட்டக் கல்வி அலுவலகம், மாவட்ட சுகாதார அலுவலகம், [illegible] வரியில் இருக்கிற அனைத்து அலுவலகங்களும் இருக்கின்றன. சுருக்கமாக சொன்னால் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக மும், மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகமும் தவிர மற்ற எல்லா அலுவலகங்களையும் கரூர் தன்னகத்தே கொண்டிருக்கிறது.

ஆகவே எதிர்காலத்தில் திருச்சி மாவட்டத்தை மூன்றாகப் பிரித்து கரூரை தலைநகரமாகக் கொண்டு தனி மாவட்டமாக அறிவிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே கரூர் வருவாய் வட்டத்தைப் பொ[illegible] வரையில் மிகப் பெரிய வட்டமாக இருக்கிறது. ஆகவே 11 பிர்க்கா என்று சொல்லக்கூடிய உட்கோட்டங்கள் இருக்கின் றன. ஆகவே கரூர் வட்டத்தை இரண்டாகப் பிரித்து அரவக்குறிச்சியை தலைநகரமாகக் கொண்டு ஒரு தாலுக்காவை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போலவே திருச்சி தாலுக்காவும் மிகப் பெரிய தாலுக்கா. ஆகவே திருச்சியை இரண்டாகப் பிரித்து ஸ்ரீரங்கத்தை தலைநகராகக்கொண்டு ஒரு வட்டத்தை உருவாக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போலவே மாவட்டத்தை, வட்டத் தைப் பிரிக்கின்றபோது பெரிய வருவாய் கிராமங்களையும் இரண் டாகப் பிரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 6-45

அடுத்து நம்முடைய இந்த நிர்வாகத்திற்கெல்லாம் மிக அடிப்படையாக இருப்பது கிராம நிர்வாகிகள். நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் [illegible] கனவே கிராமங்களிலே ஆதிக்கம் செலுத்திக்கொண்டி[illegible] பழைய கிராம கணக்கர்களை எல்லாம் ஒழித்துவிட்டு 12,500 பேர்களை புதிய கிராம நிர்வாக அதிகாரிகளாக தேர்ந்தெடுத்து கிராம நிர்வாகத்திலே ஒரு புதிய ரத்தத்தை பாய்ச்சினார்கள். அதிலே தாழ்த்தப்பட்டவர்களும், தாய்க் குலத்தைச் சேர்ந்தவர் களும் இன்றைக்கு கிராம நிர்வாக அதிகாரிகளாக இருக்கிறார்கள். அவர்கள் பல்வேறு கோரிக்கைகளை எல்லாம் அவ்வப்போது வலியுறுத்தி வருகிறார்கள். அவர்களுக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் ஒரு பெரிய ஆபத்து ஏற்பட்டது. இவர்



கள் எல்லாம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக் காலத்திலே தேர்ந்தெடுக்கப்பட்டவர் கள் என்று சொல்லி அன்றைக்கு இருந்த முதலமைச்சர் கருணா [illegible] இவர்கள் எல்லாம் எம்.ஜி.ஆர். ஆட்கள் என்று சொல்லி வீட்டிற்கு அனுப்புவதற்கு பார்த்து ஒரு திட்டத்தை கொண்டு வந்தார்கள். அதாவது லட்சுமிகாந்தன் பாரதி, ஐ.ஏ.எஸ். என்ற அதிகாரியின் தலைமையிலே ஒரு குழுவைப் போட்டு அந்தக் குழுவின் மூலம் பரிந்துரை செய்யப்பட்டு அவர்களை வேறு வேலைக்கு அமர்த்துவது அல்லது வீட்டிற்கு அனுப்புவது என்ற ஒரு திட்டத்தைக் கொண்டு வந்த நேரத்தில் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அதைப் பார்த்தவுடனே யாரும் சொல்லாமலேயே 12,500 கிராம நிர்வாக அதிகாரிகளை வீட்டிற்கு அனுப்புவீர்கள் என்று சொன்னால் நான் போராட்டம் நடத்துவேன். நீதி மன்றத்திற்கு செல்வேன் என்று அன்றைக்கு ஒரு கண்டன அறிக்கையை எல்லா பத்திரிகைகளுக்கும் அனுப்பி அதைத் தடுத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் 19-8-1989 அன்று நடந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக பொதுக் குழு கூட்டத்தில் அதற்காக ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து அந்தத் திட்டத்தை தடுத்தி நிறுத்தினார்கள். ஆகவே, கருணாநிதியினுடைய திட்டமான கிராம நிர்வாக அதிகாரிகளை வீட்டிற்கு அனுப்புவது கைவிடப்பட்டு கடைசியில் அவர் தான் வீட்டிற்குப் போனார். அப்படிப்பட்ட ஒரு பாதுகாப்பு நிலைமையை கிராம நிர்வாக அதிகாரிகளுக்கு ஏற்படுத்தியவர் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள். அடுத்து இங்கே எல்லா உறுப்பினர்களும் சொன்னார் கள். இந்த ஜமாபந்தி முறையைப் பற்றி. ஜமாபந்தி முறை என்பது வெள்ளைக்காரன் காலத்தில் ஏற்பட்ட ஒரு முறை. அந்த முறையை மாற்றி அதை வேறு வகையிலே அந்தக் கணக்கு களைத் தணிக்கை செய்கின்ற ஒரு முறையைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த கணக்குகளில் ஏறத்தாழ 24 கணக்குகள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் மாற்றி அந்தக் கணக்குகளை எளிதாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கிராம நல அதிகாரிகளுக்கு வீடு இல்லாத காரணத் தினாலே அவர்கள் பல்வேறு இடங்களிலே குடியிருக்கிறார்கள். ஆகவே அவர்களை போய் பார்ப்பது என்பது மிக அரிதாக இருக்கிறது. ஆகவே நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் அவர்களுக்கு ஜவஹர் வேலைவாய்ப் புத் திட்டத்தின் மூலமாக அலுவலகத்துடன் கூடிய வீடுகளைக் கட்டிக்கொடுத்து அவர்கள் கிராமத்திலேயே இருந்து பொது மக்களைச் சந்திக்கின்ற வாய்ப்பினை ஏற்படுத்தித் தரவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சான்றிதழ் வழங்குகின்ற முறை. இன்றைக்கு [illegible] அலுவலகத்திலே போய் கல்லூரிகளில், பள்ளிகளில் [illegible] நேரத்திலே [illegible] வேண்டியதாக [illegible] அவற்றை கிராம நிர்வாக அலுவலகத்திலேயே இருக்[illegible].

[திரு. ம. சின்னசாமி] [1991 செப்டம்பர் 20

அந்த சான்றிதழ்கள் வழங்குகின்ற பொறுப்பை விட்டால் இன்னும் எளிதாக இருக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அவர்கள் அடிப்படைச் சம்பளத்தை எல்லாம் கேட்டிருககிறார்கள். நம்முடைய வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் நம்முடைய அரசாங்கத்தினுடைய நிதி நெருக்கடியைப் பற்றிச் சொன்னார்கள். ஆகவே அவர்களுக்கு எதிர்காலத்தில் ஆசிரியர்களுக்கு இருப்பதைப் போல அடிப்படைச் சம்பளத்தை 1,500 ஆக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இப்போது காலியாக இருக்கின்ற கிராம நிர்வாக அலுவலர்களுக்குப் பதிலாக டெம்பரவரியாக அதாவது 10(எ)(1) முறையிலே கிராம நிர்வாக அதிகாரிகளை நியமிக்கிறார்கள் அதிலே பெரிய தவறுகள் நடைபெறுகின்றன. ஆகவே காலியாக இருக்கின்ற இடங்களுக்கு எவ்வளவு இடங்கள் காலியாக இருக்கின்றன என்பதை முன் கூட்டியே அறிந்து தேர்வாணைக் குழுவின் மூலமாக அவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப் போலவே இந்த பணி மூப்பு பட்டியல் என்று..................

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : முதலிலே சொன்னீர்கள் சீக்கிரம் முடித்துவிடுகிறேன் என்று. இப்பொழுது 10 நிமிடம் ஆகிவிட்டது. சீக்கிரம் முடியுங்கள்.

பிற்பகல் 6-50

<u>திரு. ம. சின்னசாமி</u> : பத்திரப் பதிவுத் துறையைப் பற்றி யாருமே பல பேர் பேசாமல் பத்திரமாக விட்டுவிட்டார்கள். ஒரே ஒரு கருத்தைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

இப்போது நம்முடைய தமிழகத்திலே பதிவுத்துறை கட்டணம் அதிகமாக இருப்பதால் இன்றைக்கு பல பேர் கேரளாவுக்குசென்று பத்திரங்களை அங்கே பதிவு செய்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு இதுபற்றி ஆதாரத்தோடு சொல்ல முடியும். குறிப்பாக என்னுடைய கரூர் தொகுதியைப் பொறுத்த வரையில் வாரத்திற்கு 10 பேர் கேரளாவுக்குப் போய் பதிவு செய்கிறார்கள். காரணம் இங்கே ஒரு பதிவுக்கு 75 ஆயிரம் ரூபாய் ஆகிறது என்று சொன்னால் அங்கே 10 ஆயிரம் [illegible] தான் பதிவுக் கட்டணம். ஆகவே அங்கே போய் பதிவு செய்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையை தடுத்து பதிவுத் துறைக்கு இங்கே நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில் வருமானத்தை அதிகப்படுத்தவேண்டுமென்று கேட்டு, [illegible] நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். [illegible]



1991 செப்டம்பர் 20]

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : திரு. ம. தனபால். ரத்தினச்சுருக்கமாக பேசி முடித்தார் என்று பெயர் எடுக்கிற வகையில் பேசி முடிக்கவும்.

<u>திரு. ம. தனபால்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் மணி அடிப்பதற்கு முன்பாக நான் முடித்து விடுகிறேன். அதனால் மணி அடிக்காமல் இருக்குமாறு தங்களை பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். (சிரிப்பு) இப்போது என்னுடைய உரையைத் துவக்குகின்றேன்.

இங்கே பேசுகின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் பொதுவாக பேசும்போது மனைப் பட்டா பற்றி பேசினார்கள். மந்தை வெளி புறம்போக்கு, ஓடை புறம்போக்கு; களம் புறம்போக்கு இவைகளில் வாழ்கின்ற மக்களுக்கு 20, 30 வருடங்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்களுக்கு நிலப் பட்டா கொடுக்கப்படவில்லை. அதற்கு என்.ஓ.சி. கூட கொடுக்கப்படுவதில்லை. இது போன்ற ஒரு நிலையை மாற்றி ஆதி திராவிட மக்களுக்கு அதுவும் குறிப்பாக மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இன்றைய தினம் ஆதி திராவிட மக்களுக்கு பல்வேறு சலுகைகளை செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையில் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இதில் சற்று கவனம் செலுத்தி மனைப் பட்டா வழங்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது என்னுடைய கருத்து மட்டுமல்ல, இந்த மாமன்றத்தில் உள்ளவர்களின் ஏகோபித்த கருத்தாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

அதேபோல் இன்னும் ஒன்று, செங்கற்பட்டு மாவட்டத்தை இரண்டாக பிரித்து செங்கற்பட்டு மாவட்டத்தின் கிழக்குப் பகுதிக்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் மாவட்டம் என்று ஏற்கனவே இருக்கிறது. செங்கற்பட்டு மாவட்டத்தின் மேற்குப் பகுதிக்கு புரட்சித் தலைவி நம்முடைய தெய்வத் தாய் நம்முடைய ஏகோபித்த தமிழக மக்களுடைய தெய்வமாக விளங்கிக்கொண்டிருக்கிற அந்த தெய்வத்தின் தாயின் பெயரை அன்னை சந்தியா அவர்கள் பெயரை வைக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏழை எளிய மக்கள் பிறப்பு, இறப்பு சான்றிதழ் வாங்க வேண்டுமென்றால் ஒவ்வொரு நாட்கள் ஆகிவிடுகின்றன. அந்த பிறப்பு, இறப்பு சான்றிதழ் தாசில்தாரிடம் சென்று வாங்க வேண்டியிருக்கிறது. பொதுவாக பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகளில் இந்த சான்றிதழ்கள் வாங்க வேண்டும் என்றால் ஆங்காங்கே இருக்கின்ற அதிகாரிகளிடத்தில் வாங்கிக் கொள்கிறார்கள். [illegible] என்ற ஒரு நிலை இருக்கிறது. அந்த நிலையில் ஏற்கனவே சாதி சான்றிதழ், வருமான சான்றிதழ் பெறவேண்டும் என்றால் மிகவும்

கடுமையான நிலை இருக்கிறது. அப்படி இருக்கும்போது இதையும் அவர்களிடம் வைத்து இருந்தால் நன்றாக இருக்காது. ஆகவே அதை ஊராட்சி மன்றத் தலைவர்கள், அல்லது ஊராட்சி தனி அலுவலர்கள் மூலம் தருகின்ற அளவுக்கு மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராம நிர்வாக அலுவலர்களைப் பற்றி சொன்னார்கள். இவர்களுக்கு ஒரு அலுவலக கட்டிடம் இல்லை. எப்படி ஊராட்சி மன்றத்திற்கு அலுவலக கட்டிடம் நிச்சயம் தேவையோ அதுபோல் அவர்களுக்கும் அலுவலக கட்டிடம் இருந்தால்தான் ஆவணங்களை பாதுகாக்க ஒரு சூழ்நிலை உண்டாகும். இப்போது முக்கியமான ஆவணங்கள் அவர்களிடத்திலே இருக்கிறது. அந்த ஆவணங்களைப் பாதுகாப்பாக வைத்து இருக்க வசதி இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே அவர்களுக்கு அந்த அலுவலகக் கட்டிடத்தை கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் அவர்கள் உட்காருவதற்கு சேர், மேசைகூட இல்லாமல் இருக்கிறது. அந்த நிலையை போக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நில அளவர்களுக்கு தொகுப்பூதியம் என்ற அடிப்படையில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அப்போது வழங்கினார்கள். இப்போதும் அந்த நிலையில்தான் இருந்துகொண்டு இருக்கிறார்கள். ரூபாய் 600 ஊதியமாக வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். அந்த தொகுப்பு ஊதியத்தை மாற்றியமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் கிராமப் பணியாளர்கள் இருக்கிறார்களே அவர்களுடைய பணியை நிரந்தரமாக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிலக்குத்தகைதாரர்கள் கோவில் நிலங்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இவற்றை எல்லாம் மாற்றியமைத்து நிலக் குத்தகைதாரர்களுக்கே நிலம் சொந்தம் என்றும், அதேபோல் கோவில் நிலங்களை பிரித்துக்கொடுத்து ஏழை எளிய மக்களுக்கு நில உச்சவரம்பு சட்டம் என்று ஒன்று இருக்கிறது. அதன் மூலம் பிரித்துக் கொடுக்கின்ற போது அவர்களுக்கு நிலம் சரியாக போய் சேரவில்லை என்று நினைக்கிறேன். இப்போது இருக்கின்ற சூழ்நிலையில் நிலச்சீர்திருத்தச் சட்டத்தின்கீழ் எடுக்கப்படுகின்ற நிலங்களை அவர்களுக்கு விநியோகிப்பதில் எப்போதும் போலவே காலியாக தரிசு நிலமாக இருப்பதால் அந்த தரிசு நிலத்தை மீண்டும் அந்த நிலச் சொந்தக்காரர்கள் எடுத்துக் கொள்ளும் நிலை இருந்து கொண்டிருக்கிறது. அந்த நிலையை மாற்றி அனைவருக்கும், ஏழை எளிய மக்கள் அனைவருக்கும் சென்று அடையக்கூடிய வகையில் செயல்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன். நன்றி வணக்கம்.



பிற்பகல் 6.55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சோ. பாலகிருஷ்ணன்.

*திரு. சோ. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாவட்ட நிர்வாகம் என்பது மிக முக்கியமான ஒரு துறை என்கிற முறையில் இந்தத் துறைக்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து இங்கே நம்முடைய மாமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேரும் இங்கே மிகச் சிறப்பாக எடுத்துச் சொன்னார்கள். நம்முடைய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களிடம் எங்களுடைய இராமநாதபுரம் மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று நாங்களெல்லாம் அவரிடம் முறையிட்டோம். எங்கே தலைநகர் வைக்கலாம் என்று எங்களிடம் கேட்டார்கள். நாங்களெல்லாம் இராமநாதபுரத்தை தலைநகராக வைக்க வேண்டுமென்று கேட்டோம். உடனே சிவகங்கையிலே இருப்பவர்கள் சிவகங்கையை தலைநகராக வைக்க வேண்டுமென்று அவரிடம் சொன்னார்கள். தூதுக் குழுவில் போனவர்களே இரண்டு கோஷ்டியாகப் பிரிந்து அங்கேயே நாங்கள் சண்டை போடத் தொடங்கியவுடன் நம்முடைய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் நீங்கள் சண்டை போட வேண்டாம்; இரண்டு பேருக்கும் இரண்டு மாவட்டம் கொடுத்து விடுகிறேன் என்று சொன்னார்கள். அந்த முறையில் இராமநாதபுரம் மாவட்டம் மூன்றாகப் பிரிக்கப்பட்டு மூன்று மாவட்டங்களாக இப்போது மிகச் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருப்பதற்கு முதலில் நம்முடைய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். மாவட்டங்கள் சிறியதாக இருப்பதன் மூலம் பல நல்ல காரியங்கள் நடைபெறுகின்றன. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஒவ்வொரு பகுதியாக இன்று சுற்றுப் பயணம் மேற்கொண்டு அத்தனை மக்களையும் நேரடியாகப் பார்க்கின்ற ஒரு நல் வாய்ப்பு ஏற்படுகின்றது. அதே நேரத்தில் இன்று மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு இருக்கின்றனவே தவிர, மாவட்டங்களில் இருக்கின்ற அதிகாரிகள், மாவட்ட ஆட்சித் தலைவருக்கு, அவருடைய ஆணைக்கு கட்டுப்பட்டு நடக்கிறார்களா என்பதில் கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. மாவட்ட ஆட்சித் தலைவரை நாங்கள் அணுகி, கோரிக்கைகள் வைக்கின்றபோது, சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம், அவர்கள் சொல்கிறார்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அதைச் செயல்படுத்துவதில் கால தாமதம் செய்கிறார்கள். ஆகவே, நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் கேட்டுக் கொள்கிறேன், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முழு அதிகாரம் பெற்றவர்களாக இருக்க வேண்டும். எந்தத் துறையிலே இருக்கிற அதிகாரிகளாக இருந்தாலும் மாவட்ட ஆட்சித் தலைவர் சொல்வதைக் கேட்காத

[திரு. சோ. பாலகிருஷ்ணன்] [1991 செப்டம்பர் 20

எந்த அதிகாரிக்கும் தண்டனை கொடுக்கின்ற அதிகாரம் அந்த மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் கொடுத்தாக வேண்டும் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இப்போது எங்களுடைய பகுதியிலே பஸ் போக்குவரத்து மிக மோசமாக இருக்கிறது என்று சொல்லி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொன்னால், அவர் அங்கேயிருக்கின்ற எம்.பி.டி.சி. போன்ற பஸ் நடத்துகின்ற துறையிடம் . அவரால் சொல்லத் தான் முடிகிறதே தவிர, அதை அவர்கள் செயல்படுத்த உத்தர விட முடியவில்லை.

அதேபோல் குடிநீர் என்பது மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. குடிதண்ணீர் இல்லை என்று மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொன்னால், மாவட்ட ஆட்சித் தலைவரும் குடிநீர் வாரியத்திடம் சொல்கிறார்கள், குடிநீர் வாரியம் ஆயிரம் காரணங்களைச் சொல்லி, அந்தக் கோரிக்கைகளெல்லாம் நிறைவேற்றப்படாமல் கிடக்கின்றன.

அதேபோல், மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையில், கிராமங்களிலே விளக்கு எரிவதேயில்லை என்று நாம் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொல்கிறோம். அவர்கள், அதை செயல் படுத்துவதற்கு மாவட்ட மின் வாரியத்திடம் கோரிக்கைதான் விட முடிகிறதே தவிர, செயல்படுத்துகின்ற அதிகாரம் அவர் களுக்கு இல்லாமல் இருக்கிறது. இதுபோன்ற குறைபாடுகளை யெல்லாம் நிவர்த்தி செய்வதற்கு, மாவட்ட ஆட்சித் தலைவர் களுக்கு, முழுமையான அதிகாரம் பழைய காலத்திலே இருந்தது போல் இருக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

குடிநீர் வாரியம், மின் வாரியப் பணியாளர்கள் நாள்தோறும் கிராமங்களுக்குச் சென்று விளக்கு எரிகிறதா; குடிதண்ணீர் கிடைக்கிறதா என்பதைப் பார்த்து, மாவட்ட ஆட்சித் தலை வருக்கு அவர்கள் அறிக்கை கொடுக்க வேண்டும்.

ஆழ்குழாய்க் கிணறுகள் ஏராளமாகப் போட்டப்பட்டிருக்கின் றன. ஆனால் பல குழாய்க் கிணறுகள் இன்று செயல்படுத்தப் படுவதில்லை. எனவே, நாள்தோறும் அந்தந்த பணியாளர்கள் சென்று ஆழ்குழாய்க் கிணறுகள் செயல்படுகின்றனவா என் பதைப் பார்க்கின்ற பொறுப்பினை மாவட்ட ஆட்சித் தலைவர் கள் தங்களுடைய அதிகாரிகள் மூலம் கண்காணிக்க வேண்டிய பெரிய பொறுப்பினை ஏற்படுத்த வேண்டும்.

அதைப்போலவே, இங்கே டி.டி.சி.-ஐப் பற்றி இங்கே உறுப்பினர்களெல்லாம் சொன்னார்கள். மாவட்ட வளர்ச்சி மன்றக் குழு என்பது இரண்டு மாதங்களுக்கு ஒரு நாள் நடை பெறுகிறது. காலையிலே 11-00 மணிக்கு கூடி 1-00 மணிக்கு



1991 செப்டம்பர் 20] [திரு. சோ. பாலகிருஷ்ணன்]

அது நிறைவு பெறுகிறது. அந்தச் சூழ்நிலையை மாற்றி அமைக்க வேண்டும். 2, 3 தினங்கள் நம்முடைய சட்டமன்றம் நடப்பது போல மாவட்ட வளர்ச்சி மன்றக் குழுக்கள் நடைபெற வேண் டும். அங்கே நாமெல்லாம் இருந்து நம்முடைய மாவட்டத் தினுடைய கோரிக்கைகள் அனைத்தையும் வைத்து அதிகாரி களிடம் விளக்கங்கள் பெற்று அங்கேயே முடிக்க வேண்டிய காரியங்களை முடித்து, முடிக்க முடியாத காரியங்களை அரசுக்கு சிபாரிசு செய்கின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும். அதற்கு, மாவட்ட வளர்ச்சி மன்றக் குழுக்கள், ஒரு நாள் நடப் பதை, மூன்று நாளாக மாற்றி அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மதுவிலக்குக் கொள்கையில் ஒரு புதிய திட்டத்தை உருவாக்கி இருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதவியேற்ற அன்று, முதல் கட்டமாக இந்த மலிவு விலை மதுவை ஒழித்து இருக்கிறார்கள்.

பிற்பகல் 7-00

அது நம்முடைய மகாத்மா காந்தியினுடைய கனவை நனவாக்கு கின்ற மிக நல்ல திட்டம் என்பதை நான் மிகுந்த மன மகிழ்வோடு அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

நம்முடைய வருவாய்த் துறை அமைச்சரவர்கள் ஒவ்வொரு மாவட்டமாக வந்து, அதிகாரிகளையெல்லாம் அழைத்து, எப்படி கள்ளச் சாராயத்தை ஒழிக்கலாம் என்று ஆலோசனையை நடத்தி கடைசியாக, இறுதியாக, ஒரு உத்தரவினைப் போட்டார்கள். கிராம அதிகாரிகள், அங்கே யார் யார் கள்ளச் சாராயம் காய்ச்சு கிறார்கள் என்பதையெல்லாம் கணக்கெடுத்து போலீஸ் அதிகாரி களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இது கிராம அதிகாரிகளுக்கு உயிருக்கு ஆபத்தான ஒரு சூழ்நிலையை இன்றைக்கு உருவாக்கியிருக்கிறது என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன். திட்டம் நல்ல திட்டமாக இருந்தாலும் கூட கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் எல்லாம் மிக மோசமான ஆட்கள் என்பதை நம்முடைய அமைச்சரவர்கள் அறிவார்கள். நம்முடைய கிராம நிர்வாக அதிகாரிகள் பட்டியலைக் கொண்டு சென்று இவர்கள் இவர்களெல்லாம் கள்ளச் சாராயம் காய்ச்சு பவர்கள் என்று அங்கே இருக்கின்ற போலீஸ் அதிகாரிகளிடம் கொடுக்கிறார்கள். போலீஸ் அதிகாரிகளிலே நல்லவர்கள் இருக் கிறார்கள். சில கெட்டவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால், உடனே அந்தக் கள்ளச் சாராயக்காரர்களிடத்திலே இந்த லிஸ்டைக் கொடுத்து விடுகிறார்கள். உங்கள் ஊர்க் கிராம அதிகாரி இந்த லிஸ்டைக் கொடுத்திருக்கிறான் என்று சொல்

கிறார். அந்தக் கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் அரிவாளைத்
தூக்கிக்கொண்டு விரட்டு விரட்டு என்று விரட்டுகிறார்கள்.
இந்தச் சூழ்நிலையைத் தயவுசெய்து மாற்றுகின்ற ஒரு ஆலோ
சனையை நம்முடைய அமைச்சரவர்கள் கருத வேண்டுமென்று
நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதனால் அதை விட்டுவிட வேண்டியதில்லை. கள்ளச்
சாராயம் ஓரளவு நம்முடைய உறுப்பினர்களெல்லாம் சொன்
னதைப் போல, 80 சதவீதம் குறைந்துவிட்டது என்பதிலே எந்த
விதமான சந்தேகமும் கிடையாது. ஆனால், நம்முடைய
கிராம அதிகாரிகள், கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களுடைய
பட்டியலைப் போலீஸ் அதிகாரிகளிடத்தில் கொடுப்பதற்குப்
பதிலாக நம்முடைய கோட்ட அதிகாரி அவர்களிடம்—அதாவது
ஆர்.டி.ஓ. அவர்களிடம் கொடுத்து, ஆர்.டி.ஓ, அந்த லிஸ்டை
யெல்லாம் தயார் செய்து, அங்கேயிருக்கிற டி.எஸ்.பி. லெவலிலே
கொடுத்தார்கள் என்றால் இந்தச் சூழல்கள் எல்லாம் ஓரளவு
மாறலாம் என்று நான் கருதுகிறேன். ஏனென்றால் உயர் அதி
காரிகள் அதைப் பரிசீலனை செய்தார்கள் என்று சொன்னால்
இதுபோன்ற சில சூழ்நிலைகளெல்லாம் இந்த உயிருக்கு ஆபத்
தான நிலைமையெல்லாம் வராது என்பதை நான் மிகப் பணி
வோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

பத்திரப் பதிவு பற்றி இங்கே சொன்னார்கள். நம்முடைய
அமைச்சரவர்களுக்கு நம்முடைய பேரவைத் தலைவர் மூலமாக
ஒரு செய்தியைச் சொல்ல விரும்புகிறேன். இந்தப் பத்திரத்
தாளிலே இப்பொழுது கள்ள நோட்டு நிறைய வந்துவிட்டது.
கள்ளப் பத்திர நோட்டு இப்பொழுது ஆங்காங்கு புழங்க ஆரம்
பித்துவிட்டது. பத்தாயிரம் பத்திரப் பதிவுத் தாள்களை ஐயா
யிரம் ரூபாய்க்கு வேண்டுமா என்று கேட்கிறான். எப்படிக் கேட்க
முடியும்? அப்பொழுது அது கள்ள நோட்டாகத்தான் இருக்கும்
என்பதில் எந்தவிதமான சந்தேகமும் கிடையாது. கோயம்
புத்தூர் பகுதியிலே இது பரவலாக, மேட்டுப்பாளையம் பகுதி
யிலே எல்லாம் ஆங்காங்கே வைத்துக் கொண்டு, பத்தாயிரம்
பத்திரப் பதிவுத் தாள்களை ஐயாயிரம் ரூபாய்க்கு வாங்கிக்
கொள்ளுங்கள். வாங்கிக் கொள்ளுங்கள் என்று கேட்கிறான்.
அதனால் இதிலே இன்னும் கொஞ்சம் பரிசீலனை செய்து, ஏனென்
றால், இதெல்லாம் நோட்டு அடிக்கிற மாதிரி இதையும் அடிக்க
ஆரம்பித்து விடுவார்கள். ஆகவே, இதனை ரூபாய் நோட்டிலே
நம்பர் போடுவது மாதிரி, அதற்கும் நம்பர் போட்டு அச்சடிப்
பீர்களேயானால், இந்தச் சூழ்நிலை மாறும் என்பதை இந்
நோக்கில் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய நாட்டில் மரம் வளர்க்க வேண்டுமென்று ஏராள
மான திட்டங்களைப் போடுகிறோம். மரங்களெல்லாம் வளர்க்
கிறோம். ஆனால் ஒரு மரம் கூட உயிரோடு இருப்பதே கிடை
யாது. இதற்கு 2-சி பட்டா—நம்முடைய அமைச்சரவர்[illegible]



[illegible] பட்டாவைப் பற்றி இங்கே விரிவாகச் சொல்லியிருக்கிறார்
[illegible]. ஆனால், இந்த 2-சி என்ன என்றே விவசாயிகளுக்கே
தெரியாது; கிராம மக்களுக்கே தெரியாது. இதையெல்லாம்
நன்றாக விளம்பரப்படுத்த வேண்டும். எப்படி இந்த விடுதலைப்
புலி, கொடியவனை, சிவராசனை, எங்கேயெல்லாம் விளம்பரம்
பண்ணினார்களோ அதுமாதிரி நல்ல காரியங்களுக்கும் விளம்
பரப்படுத்த வேண்டும். 2-சி பட்டா—புறம்போக்கு நிலத்திலே,
ஊருணிக் கரையிலே, கண்மாய் கரையிலே இதுபோன்ற புறம்
போக்கு இடங்களிளெல்லாம்; நீங்கள் தாராளமாக மரம் வளர்க்க
லாம்; அந்த மரம் உங்களுக்கே சொந்தம்; அதாவது மரத்தை
மட்டும்தான் வெட்டக் கூடாது; அதிலே வருகின்ற பலன்களை
நீங்கள் எடுத்துக் கொள்ளலாம் என்று எங்கு பார்த்தாலும்
விளம்பரங்கள் இருக்க வேண்டும். அப்படி விளம்பரப்படுத்து
வதன் மூலம், மக்கள் ஆர்வத்தோடு மரம் வளர்ப்பார்கள். இந்த
2-சி பட்டா, ஒரு நல்ல அருமையான திட்டம், காலம் காலமாக
சட்டம் இருக்கிறது. ஆனால் மக்கள் மத்தியிலே அது விளம்பரமே
ஆகவில்லை. ஆகவே, அந்த ஒரு நல்ல திட்டத்தை மக்கள்
மத்தியிலே விளம்பரப்படுத்தி, எங்கு பார்த்தாலும் புறம்போக்கு
இடங்களில் 2-சி பட்டா மூலம் கொடுத்து, மரங்கள் வளர்க்கின்ற
ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று நான்
கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 7-05

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், முதுகுளத்
தூர் தொகுதியில், முதுகுளத்தூர் தாலுகா அலுவலகம்
ஒன்று இருக்கிறது. கமுதி தாலுக்கா அலுவலகம் என்று ஒன்று
இருக்கிறது. இந்தத் தாலுக்கா அலுவலகங்களுக்குப் போவ
தற்கே நமக்குப் பயமாக இருக்கிறது. 200, 300 வருஷங்களுக்கு
முன்னாலே வெள்ளையர்கள் முதன் முதலாக இந்த நாட்டில்
வந்த நேரத்தில் கட்டிய அலுவலகங்கள், அதைப் பார்த்தாலே
நமக்கே பயமாக இருக்கிறது. ஆகவே, தயவுசெய்து உடனடியாக
எங்களுடைய இரண்டு தாலுக்கா அலுவலகங்களுக்கும் நல்ல
அலுவலகங்கள் கட்டி—அதோடு மட்டுமல்ல, நல்ல அதிகாரிகளே
வர மாட்டேன் என்கிறார்கள். ஏனென்றால் அங்கே தண்ணீர்
கிடையாது. குடியிருக்க வீடு கிடையாது. ஒழுங்கான பள்ளிக்
கூடங்கள் கிடையாது. போக்குவரத்து கிடையாது. இப்படிப்
பட்ட ஒரு மோசமான சூழ்நிலையில், அங்கே அதிகாரிகளே வர
மாட்டேன் என்கிறார்கள். பரமக்குடியிலே வந்து தங்கிவிட்டுப்
போய்க் கொண்டிருக்கிறார்கள்; அல்லது மதுரையிலே இருந்து
வந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பகுதியில்,
எங்களுடைய முதுகுளத்தூர், கமுதி தாலுக்காக்களுக்கு நல்ல
கட்டிடங்கள் கட்டி, அங்கே வருகின்ற அதிகாரிகளுக்கு வீடுகள்

கட்டிக் கொடுக்க வேண்டுமென்று நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்களை, பேரவைத் தலைவர் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, இந்த மாவட்டங்களைப் பிரிக்கிறபோது, மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள்—மாவட்டங்களைப் பிரிக்க வேண்டியது மிக முக்கியம். வட நாட்டிலே, உ.பி.-யிலே எல்லாம் போய்ப் பார்த்தோமேயானால், 60, 70 மாவட்டங்கள் இருக்கின்றன. முன்பு காங்கிரஸ் ஆட்சி காலத்திலே 16 மாவட்டங்கள் இருந்தன. இப்போது 21 மாவட்டங்களாகி இருக்கிறது. இன்னும் அவை ஒரு 30 மாவட்டங்கள், 35 மாவட்டங்கள் ஆக வேண்டுமென்று விரும்புகிறேன்.

மாவட்டங்களுக்கு பேர் வைக்கிறபோது, பெரிய தலைவர்கள், மரியாதைக்குரிய தலைவர்களின் பெயர்களை வைப்பதிலே எனக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை. ஆனால், அவர்கள் பெயருக்கு முன்னால் அந்த அந்த மாவட்டத் தலைநகரையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். நம்முடைய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் நெல்லை கட்டபொம்மன் என்று பெயர் வைத்தார்கள். நம்முடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் எம்.ஜி.ஆர். செங்கை மாவட்டம் என்று பெயர் வைத்தார்கள். அதுபோல பெயர் வைக்கிறபோது, அந்த தலைநகரினுடைய பெயரையும் சேர்த்து வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், ஏராளமான குழப்பங்கள் இருக்கின்றன. எந்த ஊரிலே இருக்கிறது என்று ரொம்பப் பேருக்குத் தெரிய மாட்டேன் என்கிற நிலைமை இருக்கிறது. ஆகவே, அந்தத் தலைநகரையும் சேர்த்து, மாவட்டங்களுக்குப் பெயர் வைக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய வருவாய்த் துறையைப் பொறுத்தவரையில் இன்னும் ஏராளமான சீர்திருத்தங்கள் செய்ய வேண்டும். 'பிளாக் டெவலப்மெண்ட் ஆபிஸ்' என்று சொல்லக்கூடிய வட்டார வளர்ச்சி அலுவலகங்களையெல்லாம் இந்தத் துறையோடு இணைத்து நாம் இங்கே பேசப்பட வேண்டுமென்று நான் விரும்புகிறேன். காரணம், ஏராளமான நல்லத் திட்டங்களை, மத்தியிலும், சரி, மாநிலத்திலேயும் சரி, நாம் போடுகிற அத்தனை திட்டங்களும் மாவட்டங்களிலே தான் செயல்படுகிறது. இப்போது இருக்கிற பி.டி.ஓ.-க்கள் எல்லாம் என்ன செய்கிறார்கள் என்றால்—முன்பெல்லாம் முறையாக பயிற்சி கொடுத்து, அவர்களையெல்லாம் வட்டார வளர்ச்சி அதிகாரிகளாகப் போட்டார்கள். ஆனால், இப்போது கிளார்க்குகளாக இருந்தவர்கள் பி.டி.ஓ.-க்களாக பதவி உயர்வு பெற்று வருகிறார்கள். அவர்களுக்கு பயிற்சியே கிடையாது. இந்தப் பதவிகளுக்கு நம்முடைய அரசாங்கம்—ஏராளமான படித்த இளைஞர்கள் எம்.ஏ. படித்தவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள்—அவர்களுக்கெல்லாம் தனி



யாக வட்டார வளர்ச்சி அதிகாரிகளாக, தாசில்தார்களாக இவை போன்ற உயர் பதவிகளைப் பெறுவதற்கு, தேர்வாணைக் குழு மூலம் தனியாகத் தேர்ந்தெடுத்து, நல்ல பயிற்சி கொடுத்து, மக்களுடைய குறைகளை நேரடியாக கண்காணிக்கிற ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும். இன்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எல்லாம் நல்ல விறுவிறுப்பான இளைஞர்களாக வருகிறார்கள். சுறுசுறுப்பாக செயல்படுகிறார்கள். அதுபோல வட்டார வளர்ச்சி அதிகாரிகளும், வட்டார தாசில்தார்களும்கூட நல்ல இளைஞர்களாக வர வேண்டுமென்ற சூழ்நிலை உருவாக வேண்டும். இப்போது மக்களுக்கு ஏராளமான தேவைகள் இருக்கின்றன. அவர்கள் அத்தனை காரியங்களும் அரசாங்கத்திலே செய்ய வேண்டுமென்று விரும்புகிறார்கள். ஆகவே, அதற்குத் தகுந்தபடி, அவர்களுடைய உணர்வுகளைப் புரிந்துகொள்கிற அதிகாரிகள் வர வேண்டும். ரொம்ப 'கன்டெம்ட்' அதிகாரிகளை வைத்துக் கொண்டு நாம் ஒரு வேலையும் செய்ய முடியாது. கொஞ்சம் பேரை வீட்டுக்குப் போகச் சொல்லிவிட்டால்கூட பரவாயில்லை. ஆகவே, அந்தச் சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய மாவட்டங்களைப் பொறுத்த வரையில், மாவட்ட சீர்திருத்தத்தில் முக்கிய கவனம் செலுத்துவதோடு, நம்முடைய பகுதிகளில் பொதுவாக—என்னுடைய இராமநாதபுரம் மாவட்டம் போன்ற பகுதிகள் எல்லாம் மிகுந்த வறட்சிக்குள்ளான பகுதிகள். அங்கேயெல்லாம் நல்ல அதிகாரிகள் வர வேண்டும் என்று சொன்னால், குடிப்பதற்கு தண்ணீர் வேண்டும்; அந்த சூழ்நிலையில் இப்போது எப்படி காவிரி இந்த அரசாங்கத்தினுடைய முழு கவனத்தில் இருக்கிறதோ, அதேபோல் எங்களுக்கு வைகையிலே தண்ணீர் வருவதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அப்போதுதான் நல்ல அதிகாரிகள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எல்லாம் அங்கே இருப்பார்கள். இப்போது இருக்கிற கலெக்டர் இல்லை: முன்பு இருந்த ஒரு கலெக்டரிடம் நான் பேசிக் கொண்டிருந்தேன். மதுரைக்குப் போனால், இராமநாதபுரத்திற்கு வரவே எனக்கு மனம் வரவில்லை என்று சொல்வார். ஏனென்றால் அப்படிப்பட்ட ஊரிலே நீங்கள் தலைநகரம் அமைத்து வைத்திருக்கிறீர்கள் என்று வருத்தப்பட்டார். அந்த ஒரு சூழ்நிலையை மாற்றுவதற்கு எங்களுக்கு கேரளாவிலிருந்து நிறைய தண்ணீர் கடலிலே போய்க் கொண்டிருக்கிறது—அதையெல்லாம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரடியாக அந்த அரசாங்கத்தோடு கலந்து பேசி, எங்களுக்கு குடிநீர் வசதியாவது ஒழுங்காகச் செய்து கொடுப்பதற்கான வழிமுறைகளைச் செய்ய வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய அரசாங்கம் புதிதாக வந்த அரசாங்கம். நல்ல திட்டங்களோடு செயல்படுகிறார்கள். என்னுடையத் தொகுதியைப் பொறுத்தவரையில், நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் இந்த அவைக்குள்ளே

தலைவராக இருந்தாலும், எங்களுடைய தொகுதிக்கு ஒரு அக்கறை செலுத்தி—என்னுடைய தொகுதியில் மலட்டாறு திட்டம் என்பது, ஒரு 50 ஆண்டுக்கான கோரிக்கை, பொதுப் பணித் துறை அமைச்சர் அதை இந்தச் சட்டமன்றத்திலே அறிவித்திருக்கிறார்கள். 17 கோடி ரூபாயில் இந்தத் திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள். அதிலே என்னுடைய கோரிக்கை என்னவென்றால் நம்முடைய அதிகாரிகள் என்ன செய்வார்கள்? அணை கட்டுவதற்கு அவர்கள் டெண்டர் விட்டு விடுவார்கள். ஆனால், பிறகு அங்கேயிருக்கிற நிலச்சுவான்தார்கள் கோர்ட்டுக்கு போவார்கள். பிறகு தொல்லைகள் எல்லாம் உருவாக்குவார்கள். அந்தச் சூழ்நிலை உருவாகாமல் ஆரம்பத்திலேயே அந்த நிலச் சுவான்தாரர்களையெல்லாம் பார்த்து, நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவர்களும், மற்றவர்களும் நேரிடையாகச் சென்று எந்த அளவிற்கு நிலம் ஆர்ஜிதம் செய்ய வேண்டுமோ அதையெல் லாம் முன்னாலேயே முடித்துப் பிறகு, வேலையைத் தொடங்க வேண்டும். டெண்டர் விடவேண்டும். இல்லையென்றால் அவர் கள் கோர்ட்டுக்குப் போவார்கள், போராட்டம் நடத்துவார்கள். இன்னொரு பக்கத்திலே பாதிக்கிறது என்பார்கள். அப்படிப் பட்ட சூழ்நிலைகளையெல்லாம் உருவாக்காமல் நல்ல சூழ் நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனக்கு இந்த வாய்ப்பினைக் கொடுத்ததற்காகப் பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

பிற்பகல் 7-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் மானியக் கோரிக்கைகளில் தங்களுடைய கருத்துக்களைத் தெரி வித்திருக்கிறார்கள். வெட்டுப் பிரேரணைகளில் எல்லாம் அது சம்பந்தப்பட்ட விவரங்களையெல்லாம் பேசுகின்றபோது, மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இன்றைக்கு நான் பேசுவதற்கு முன்பு, இதுவரையிலும் சுதந்திரம் அடைவ தற்கு முன்பும், சுதந்திரம் அடைந்ததற்குப் பின்பும், இப்படிப் பட்ட வருவாய்த் துறை சிறப்பு வெளியீடு இன்றைக்குத்தான் முதன்முதலிலே இங்கே வைக்கப்படுகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி). அதை வெளியிடுவதற்குக் காரணம் இங்கே பல்வேறு உறுப்பினர்கள், நீங்கள் கேள்வி கேட்கிறபோதும், பல்வேறு விவரங்களைச் சொல்கிறபோதும், தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இங்கே இல்லாவிட்டாலும், இவைகளையெல்லாம் கவனித்துக்



கொண்டிருக்கிறார்கள். அப்படிக் கவனித்துக் கொண்டிருக்கிற போது, அவர்கள் வருவாய்த் துறையில் இருக்கின்ற நிர்வாகி களுடைய பணியைப் பற்றிப் பொதுமக்களுக்கு மிக நன்றாகத் தெரிந்திருக்க வேண்டுமென்று கருதி அவர்கள் இந்த வருவாய்த் துறையிலே பல்வேறு துறை அதிகாரிகளுக்கெல்லாம் என்னென்ன அதிகாரங்கள் இருக்கின்றன, இவர்களுடைய பணி என்ன? அவர்கள் என்ன செய்ய வேண்டுமென்பதையும், அதேபோல் பலதரப்பட்ட பொது மக்களுக்கும் தெரிவிக்க வேண்டுமென் பதற்காக, அவர்கள் இப்படிப்பட்ட புத்தகத்தை வெளியிட வேண்டுமென்று விருப்பம் தெரிவித்தார்கள். அவர்களுடைய விருப்பத்தின் பேரிலேதான், இன்றைக்கு வெளியிடப்பட்டது. இன்றைக்கு நான் பேசுகிற போதும் சரி, மற்ற அமைச்சர்கள் பேசினாலும் சரி, நாங்கள் எந்த அறிவிப்புச் செய்தாலும் சரி, அவைகள் அனைத்தையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர் களுடைய பெயரிலே அறிவிக்கின்றோம் என்பதுதான் பொருத்த மேயொழிய, வருவாய்த் துறை அமைச்சர் அறிவிக்கிறார் என்று அர்த்தம் அல்ல. பொருளும் அல்ல.

அதே போலத்தான், வருவாய்த் துறை என்று சொல்லுகிற போது, அங்கே மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரி, கோட்ட வருவாய்த் துறை அதிகாரி, வட்ட வருவாய்த் துறை அதிகாரி, மண்டல வட்ட அலுவலர் ஆகியோர் இருக்கின்றார்கள். அதேபோலத் துணை வட்டாட்சி யாளர்கள், அதே போல கிராம நிர்வாக அதிகாரிகள், அதேபோல கிராமப் பணியாளர்கள். அப்படிப் பார்க்கின்றபோது, யாருக்கு எந்த வேலை? யார் எதைச் செய்வது என்கிற குழப்பம் வருகிறது. சில நேரங்களில் கிராமப் பணியாளர்கள் என்ன செய்கிறார்கள்? வட்டாட்சியர்கள் செய்ய வேண்டியதை கோட்ட ஆட்சியாளரிடம் எடுத்துப் போய் விடுகிறார்கள். கோட்ட ஆட்சியாளர் செய்ய வேண்டியதை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் எடுத்துப் போய்விடுகிறார்கள். இதனால் காலமும், நேரமும் அதிகமாகிறது. யாரிடம் போய் எதைச் செய்ய வேண்டும் என்று தெரியாமல் இருப்பதனால்தான் இந்தக் குழப்பம் எல்லாம் வருகிறது. இன்றைக்குச் சொல்கிற போது, யார் யாருக்கு என்னென்ன பணி என்று முழுவதும் சொல்ல முடியாவிட்டாலும், மாவட்ட ஆட்சித் தலைவருக்கு என்ன பணி என்று சொல்கிறபோது, இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. சோ. பாலகிருஷ்ணன் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இன்னும் அதிகமான அதிகாரம் தரவேண்டுமென்று சொன்னார்கள். அந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும், அந்த மாவட்டத்திலே இருக்கின்ற வருவாய்த் துறையிலே சகல பொறுப்புக்களையும் வகிக்கின்றவர் களிடத்திலே வேலை வாங்குவதும், அவர்களைக் கண்காணிப்பதும் மாவட்ட ஆட்சித் தலைவருக்குண்டான பொறுப்பு.

பிற்பகல் 7-15

அதேபோல் மாவட்டத்தைப் பொறுத்த வரையிலும் அந்த மாவட்டத்தின் எல்லைக் கோட்டுக்குள்ளே இருக்கிற வளர்ச்சிப் பணிகள் அத்தனைக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள்தான் பொறுப்பு என்பதையும் அவருக்கு அந்த அதிகாரம் உண்டு என்பதையும் இங்கே நான் தெரிவித்துக் கொள்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு இருக்கின்ற அதிகாரத்தை பயன்படுத்தி அவர்களே அங்கே உத்தரவு போடலாம், உத்தரவு போட முடியாத போது மேலே இருக்கிற அரசுக்கோ இல்லாவிட்டால் வருவாய்த் துறையில் இருக்கிற சிறப்பு ஆணையாளருக்கோ அல்லது வருவாய்த் துறையிலே இருக்கிற துறைத் தலைவர்களுக்கோ கடிதம் மூலமாகவோ, தொலைபேசி மூலமாகவோ தெரிவித்து விவரங்களைப் பெற்று உரிய நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சித் தலைவருக்கு எல்லாவிதமான அதிகாரமும் இருக்கிறது. மாவட்டத்தைப் பொறுத்த வரையில் எல்லாவிதமான காரியங்களையும் செய்வதற்கு முழுப் பொறுப்பும் அதிகாரமும் வழங்கப்பட்டு இருக்கிறது என்பதை நான் சொல்லக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், அதற்கடுத்ததாக இருக்கின்ற அதிகாரி மாவட்ட வருவாய்த் துறை அதிகாரி. அந்த மாவட்டத்தினுடைய வருவாய்த் துறை அதிகாரியினுடைய பணிகளைப் பற்றி கடைசி நேரத்தில் நான் அச்சடித்ததால் இங்கே சேர்க்க முடியவில்லை. அவருக்கு இருக்கிற பணிகளைப் பற்றி உங்களிடத்திலே நான் சொல்லிவிடலாம். அவர்களுக்கு எவ்வளவு பணிகள் இருக்கின்றன என்பதை நீங்கள் எல்லாம் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக இங்கே இருக்கிற பணிகள் பூராவையும் நான் படிக்க மாட்டேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த முழுக் குறிப்பையும் அச்சடித்து உறுப்பினர்களுக்கு சுற்றறிவிப்பாக அனுப்பி உதவலாம் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான அதைத்தான் சொல்ல வந்தேன். இப்போது நான் என்ன நினைக்கிறேனோ அதைப்பேரவைத் தலைவர் தெரிந்து கொள்கிற ஆற்றல் பெற்று இருக்கிறார்கள். இந்த மாவட்டத்தினுடைய வருவாய்த்துறை அதிகாரிகளின் கடமை என்ன என்பதை கடைசி நேரத்தில் அச்சிட முடியாததால் அதை நான் இங்கே முழுவதுமாகப் படிக்க போவதில்லை. நான் முன்கூட்டியே சொன்னப்படி 74, 75 பணிகள் இருக்கின்றன. இதை நான் சொல்வதற்குக் காரணம் 75 பணிகள் அவர்களுக்கு இருக்கின்றன. அவை என்னென்ன பணிகள் இருக்கின்றன என்





பதை இங்கே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் அதை நான் தெரிவித் தேன். அதேபோல் கோட்டாட்சியர். அந்த புத்தகம் உங்கள் எல்லோருக்கும் கொடுக்கப்பட்டு இருக்கிறது. கடைசி நேரத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தப் புத்தகத்தை நாங்கள் எப் போதும், ஒவ்வொரு முறையும் கொடுப்பது வழக்கம் இல்லை என் பதுதான் நான முதலிலே தெரிவித்தபடி.

இந்தியத் துணைக்கண்டம் விடுதலை அடைவதற்கு முன்பே முதன்முதலில் ஏற்பட்ட துறை வருவாய்த்துறைதான். அந்த வரு வாய்த் துறையிலே இருந்துதான் எல்லா துறைகளும் பிரிந்திருக் கின்றன. அப்போது எல்லாம் இப்படி யார், யாருக்கு என்னென்ன பொறுப்பு என்றெல்லாம் அச்சடித்து கொடுப்பதில்லை. அதற்குப் பிறகு இந்த நாடு சுதந்திரம் அடைந்தது. சுதந்திரம் அடைவதற்கு முன்னால் கூட ஜனநாயக முறைப்படி தேர்தல் நடைபெற்றது. முதலமைச்சர் வந்தார். தொடர்ந்து வந்தார்கள். நான் கூட வருவாய்த் துறை அமைச்சராக இருந்திருக்கிறேன். ஆனால் என்னுடைய மூளையில் கூட இது படவில்லை. ஆனால் இதைப் பற்றியே எப்போதும் சிந்தித்து, சிந்தித்து, ஜனங்களுக்கு நல்ல காரியம் செய்ய வேண்டும், விரைவில் செய்ய வண்டும் என்று சிந்தித்து, சிந்தித்து, எண்ணிப்பார்த்து என்னென்ன வழிவகை செய்ய வேண்டும் என்று சிந்தித்துக் கொண்டிருப்பதால்தான் புரட்சித் தலைவி அவர்களுக்கு இப்படிப்பட்ட திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்று தோன்றியது. எனவே தான் அவர்கள் சார்பிலே இங்கே அச்சடித்து வைத்திருக்கிறேன். கோட்ட வருவாய்த்துறை அதிகாரியை எடுத்துக் கொண்டால் அவருக்கு 57 கடமைகள் இருக்கின்றன. அதேபோல் வட்டாச்சியருக்கு 58 பணிகள் இருக்கின்றன. அதேபோல் மண்டல வட்டாச்சியர் பணி 79 இருக்கிறது. அதேபோல் வருவாய் ஆய்வாளர்கள் இருக்கிறார் களே அவர்களுக்கு 28 பணிகள் இருக்கின்றன. அதேபோல கிராம நிர்வாக அதிகாரிகளுக்கு 24 பணிகள் இருக்கின்றன. அதேபோல் கிராம பணியாளர்கள் இருக்கிறார்களே அவர்களைப் பொறுத்த வரையிலே கிராம நிர்வாக அதிகாரிகளுக்கு என்னென்ன வேலை கள் இருக்கின்றனவோ அந்த வேலைகள் அத்தனைக்கும் உதவி புரிவது தான் அவர்களுடைய பணி. ஆனால் இதில் சொல்லப் பட்டது மட்டுமா என்றால் அல்ல, மற்றும் பல இருக்கின்றன என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

இங்கே பேசுகின்றபோது அந்த வருவாய்த்துறை தான் முக்கிய மான ஒரு துறை என்று பலரும் பேசினார்கள். திரு. பால கிருஷ்ணன் அவர்கள் கூடச் சொன்னார்கள். நான் அதைச் சொல் வதற்குக் காரணம் என்ன என்பதைச் சொல்கிறேன். அரசியல் சட்டத்தைப் பார்த்தால் தெரியும். அந்த அரசியல் சட்டத்தை எழுதுகிறபோது எந்தெந்த அதிகாரம் மத்தியப் பேரரசுக்கு, எந்தெந்த அதிகாரம் மாநில அரசுக்கு, எந்தெந்த அதிகாரம் இரண்டுக்கும் என்று வகுக்கப்பட்டிருக்கிறது. இப்படி கன்கரண்ட்

[திரு எஸ். டி. சோமசுந்தரம்] [1991 செப்டம்பர் 20

லிஸ்ட், ஸ்டேட் லிஸ்ட், சென்ட்ரல் லிஸ்ட் என்கிறபோது இரண்டிலும் சேர்த்த அதிகாரங்கள் எல்லாம் யாருக்கு என்று சொல்கிறபோது இன்றைக்கு மத்திய அரசுக்குதான் இருக்கிறது. அதைப்போல இங்கே சொல்லப்படாத பணிகள் பூராவும் வருவாய்த்துறையைச் சேர்ந்த அதிகாரிகளுக்குத்தான் இருக்கிறது. அதாவது எதிலும் சொல்லப்படாத அதிகாரங்கள். அதை நான் இங்கே சொல்வதற்குக் காரணம், இங்கே சொல்கிறபோது சிலர், ''இன்றைக்கு புரட்சித் தலைவர் அவர்கள் எப்படியாவது இந்த கள்ளச்சாராயத்தை நாம் ஒழிக்க வேண்டும் என்பதற்காக கிராம அதிகாரிகளை அவர்கள் பயன்படுத்துகிறார்களே '' என்றார்கள். திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் சொன்னார்கள். நான் ஊரெல்லாம் சென்று யோசனைக் கேட்கவில்லை. புரட்சித் தலைவி சொன்னதை நான் அங்கே போய்ச் சொன்னேன். அதுதான் என்னுடைய வேலை அங்கே. ஆனால் இந்த கிராம நிர்வாக அதிகாரிகளை இதிலே பயன்படுத்தியது நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் தான். அவர்களை எப்படிப் பயன்படுத்தினார்கள் என்று பொதுவாகவே நான் எடுத்துப் பார்த்தேன். கிராம நிர்வாக அதிகாரிகளுக்கு என்ன பணிகள் என்று. இங்கே நான் சொல்வதற்குக் காரணம் சில உறுப்பினர்கள் இங்கே பேசுகிறபோது கிராம நிர்வாக அதிகாரிகளுக்கு பல வேலைகள் இருக்கின்றன. அப்படி வேலைகள் பல இருக்கின்றன. இதையும் செய்யக்கூடாது என்று பலர் சொன்னார்கள். ஆனால் இந்த வேலையை கொடுத்தது நல்லது என்று பலர் சொன்னார்கள். ஆனால் நான் இங்கே சொல்வதற்குக் காரணம் அந்த வேலையைச் செய்வதற்கு அவர்களுக்கு கடமை இருக்கிறது என்பதை சொல்லிக் கொள்கிறேன். அவர்களுக்குள்ள பொறுப்புகளிலே ஒன்றாக இருக்கிறது. சொல்லப்பட்ட பொறுப்புகளிலே 23வது பொறுப்பு. ''அரசு அவ்வப்போது தொடரும் ஏனைய நல திட்டங்கள் முதலியவற்றை நடைமுறைப்படுத்த அளிக்கப்படும் பணிகளைநிறைவேற்றுவதாகும். அரசு அவ்வப்போது ஆரம்பிக்கிற மக்கள் நலப் பணிகளில் அவரே தன்னை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டுமென்பது கிராம அதிகாரிகளுக்கு நிருவாக அதிகாரிகளுக்குள்ள கடமைகளில் ஒன்றாக இருக்கிறது. அப்படி அந்த கடமைகள் இருப்பதால்தான் இன்றைக்கு அவர்கள்கள்ளச்சாராயத்தை ஒழிப்பதும் அவர்களுடைய கடமைகளிலே ஒன்று என்பதையும் நான் இங்கே உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 7-20

இப்படி பல்வேறு துறைகளைப்பற்றி நான் சொல்கிறபோது எல்லாவற்றையும் நான் சொல்ல முடியா விட்டாலும் எல்லோரும் பேசியதை எல்லாம் நான் குறிப்பெடுத்து வைத்திருக்கிறேன். ஆனால் பொதுவாகச் சொல்கிறபோது, உறுப்பினர்கள் இரண்டு விவரங்களைத்தான் சொன்னார்கள். அந்த இரண்டு



1991 செப்டம்பர் 20] [திரு. எஸ்.டி. சோமசுந்தரம்]

விவரங்களில் மிகத் தலைமையானதாக இருப்பது வீட்டுமனைப் பட்டா கொடுக்க வேண்டுமென்பது, இன்னொன்று எல்லோரும் சொன்னது சாதி சான்றிதழ் கொடுக்க வேண்டும் என்பது. இது இரண்டைத்தான் எல்லோருப் சுற்றி சுற்றி வளைத்து வந்துபேசினாலும் இங்கே வந்து அதைத்தான் எல்லோரும் சொன்னார்கள். அதைப் பற்றி புரட்சித் தலைவி அவர்களிடம் கேட்டு இருக்கிறேன். அதையும் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உதாரணமாக, திரு. ராஜு என்று கருதுகிறேன். உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது கிராம பணியாளர்கள் பற்றி சொன்னார்கள். கிராமத்திலே இருக்கின்ற நிர்வாக அதிகாரிகளைப்பற்றி பேசினார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைப் பற்றி எல்லாம் ஒவ்வொன்றாகப் பேசினார்கள்.

இன்னொன்றைப் பேசுகிறபோது 2-சி பட்டாவைப் பற்றி சொன்னார்கள். அந்த 2-சி பட்டா என்ன ? 2-சி என்ன என்று தெரியாது இருக்கிறார்கள். அது என்ன என்று கேட்டார்கள். 2-சி என்பது அது செக்ஷனில், 2-சி பிரிவு என்று வருகிறது. வேறு ஒன்றும் இல்லை. அதைப்பற்றி இங்கே பலர் பேசியிருக்கிறார்கள்.

அதே போலவே, நிலவுடமை மேம்பாட்டுத் திட்டத்தைப் பற்றி பேசியிருக்கிறார்கள். வீட்டுமனைப் பட்டா கொடுக்க வேண்டும் என்று பேசியிருக்கிறார்கள். நம்முடைய திரு. தம்புசாமி அவர்கள் பேசுகிறபோது, சாதி சானறிதழ்கள் ஒவ்வொரு ஆண்டும் வாங்க வேண்டியிருக்கிறது என்று சொன்னார்கள். இப்படி பலபேர்கள் பலவற்றை சொன்னாலும் நான் இதை சொல்கிறபோது எல்லாவற்றிற்கும் உங்களுக்கு கிட்டத்தட்ட பதில் வரும் என்று கருதுகிறேன். அப்படி ஒவ்வொன்றாக நான் சொல்கிறபோது ஒன்றைச் சொல்கிறேன். முதலிலே சொல்கிறபோது அதைத்தான் இங்கே மிகவும் முக்கியமானது என்று சொன்னார்கள். இன்றைக்கு தமிழகத்தைப் பொறுத்த வரையில், 22,22,314 மரங்கள் இருக்கின்றன. அந்த மரங்களை இன்றைக்கு அவர்களுக்குக் கொடுக்கிறபோது, அதை யாரும் எடுத்துக் கொள்ள முடியாது. அதை எதிர்காலத்திலே எப்படி கொடுக்க வேண்டும் என்று புரட்சித்தலைவி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்றால் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளவர்களுக்கு, நிலமற்ற ஏழைகளுக்கு, நிலம் அற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு ஆதிதிராவிடர்களுக்கு இதைக்கொடுக்க வேண்டும் என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

பிற்பகல் 7.25

அதுபோல அதைப்பற்றி விளம்பரம் செய்ய வேண்டுமென்று இங்கே அருமை சகோதரர் மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் சொன்னார். புறம்போக்கு நிலம், கால்வாய் நிலம், குளக்கரை நிலம் இவைகளிலே வைக்கிற மரங்களை

யார் வைத்தாலும் அவர்களே அதைப்பயன்படுத்திக் கொள்ள லாம் என்கிற ஒரு நிலைமையை உருவாக்கலாம் என்று இன்றைக்கு சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே வைக்கிற பழ மரங்களாக இருந்தால், தென்னை, பலா போன்ற மரங்க ளாக இருந்தால் அவற்றை அவர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம், காய்களை அறுத்துக் கொள்ளலாம். ஆனால் விறகு மரங்களிலே ஒன்றும் காய்க்காது. ஆகவே, விறகு மரங்களை வைக்கிற வர்களே வெட்டிக்கொள்ளலாமென்ற நிலைமையை உருவாக்க லாம் என்று எண்ணிக்கொண்டிருக்கிறோம்.

'மனு நீதி நாள்' திட்டம் குறித்து, பொது மக்களிடமிருந்து மனு பெறுவது மற்றும் அவர்களது குறைகளைத் தீர்ப்பது பற்றி இங்கே சொன்னார்கள். மனு நீதி நாள் எங்கே சிறப் பாக நடைபெறாவிட்டாலும், அதுபற்றி அரசின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டால் அது சிறப்பாக நடைபெற இந்த அரசு அதில் இருக்கிற குறைபாடுகளை நீக்கி நல்லமுறையில் அதை செயல்பட செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மனு நீதி நாள் என்று சொன்னால் 6 தினங்களுக்கு முன்னால் எந்த கிராமத்தில்அது நடைபெறுகிறது என்று அறிவிக்கப்படுகிறது அதற்கு பின்னால், சில நாட்களுக்குப் பின்னால், தகுதியுடைய அதிகாரி நேரில் அங்கே சென்று மனுக்களைப் பெற்று, தேவை யான விவரங்களைப் பெற்று, பிறகு எந்த நாளைக்கு அந்த கிராமத்திற்கு போக வேண்டுமோ அந்த ஒரு குறிப்பிட்ட நாளில் எல்லா அதிகாரிகளும் நேரில் சென்று உத்தரவுகளை போடுகிறார்கள். அதில் ஏதாவது குறைபாடுகள் இருக்குமேயானால் இந்த அரசு நிச்சயமாக அவற்றை நீக்க முயற்சிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

வருவாய்த் துறை நல்ல முறையில் நடைபெறுகிறது என்று இங்கே பலரும் பேசினார்கள். வருவாய்த் துறை நல்ல முறையில் நடைபெறுகிறது என்று சொல்வதை அப்படியே நான் ஏற்றுக்கொள்ளவும் மாட்டேன், மகிழ்ச்சியாக உங்களிடம் அதைப்பற்றி சொல்லவும் மாட்டேன். வருவாய்த்துறையில் பல சீர்திருத்தங்களையும் செய்ய வேண்டுமென்று சொன் னார்கள். வருவாய்த் துறையில் பல சீர்திருத்தங்களை செய்ய வேண்டும் என்பது தான் உண்மையும் கூட. அதை நான் ஏற்றுக் கொள்கிறேன் என்பதையும் இங்கே சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல உறுப்பினர்கள் சொல்கிறபோது, அவர்களுடைய பெயர்களைச் சொல்லாமல் இருப்பதற்குக் காரணம் விரைவில் சொல்ல வேண்டும் என்பதற்காக தான், பொதுமக்களுடைய 'குறை தீர்க்கும் நாள்' சரிவர நடைபெறவில்லையென்று சொன்னார்கள். குறை தீர்க்கும் நாளில் அதிகாரிகள் அங்கே இருப்பதில்லை என்று சொன்னார்கள்.



ஆனால் திங்கட்கிழமையைப் பொறுத்தவரையில் எல்லா அதிகாரிகளும் தலைமையிடத்தில் இருக்க வேண்டும். பொது மக்கள் குறைகளை அதிகாரிகளிடத்தில் கொடுக்க வேண்டும். அதிகாரிகள் அந்தக் குறைகளுக்கு, அங்கேயே தீர்க்கக் கூடிய பிரச்சினைகளுக்கு திருப்பி பதில் சொல்ல வேண்டுமென்று இன்றைக்கு சொல்லப்பட்டிருக்கிறது. அதுபோல குறைகளைக் கேட்கிறபோது என்னென்ன குறை என்பதை அதிகாரிகள் எழுதி அவர்கள் திருப்பி எந்தநாள் வரவேண்டுமென்று அவர்களுக்குஎழுதி ஒரு வெள்ளை அட்டை கொடுக்க வேண்டும். அதை அவர்கள் கொடுக்கிறார்களா இல்லையா என்பதை இங்கே உறுப்பினர்கள் தான் சொல்ல வேண்டும். அப்படி கொடுக்கப்படவில்லை யென்றால் அது கொடுக்கப்படும். அதில் திருப்பி திருப்பி வந்தால் அவர்களுக்கு இளம் சிகப்பு அட்டை கொடுக்கப்படு கிறது. அவைகளை எல்லாம் பார்த்து, குறை தீர்க்கும் நாளில் உள்ள குறைகளை உள்ளபடியே தீர்ப்பதற்கு அரசு எல்லா விதமான உதவிகளையும் செய்யும். பொது மக்களுக் குரிய ஓய்வூதியம், அரசு அலுவலர்களுக்குரிய குறைகள் இவைகளை எல்லாம் பார்த்து இந்த அரசு ஏற்பாடு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பல்வேறு இடங்களுக்குச் சென்றும் பார்ப்பார்கள். அவர்கள் அவ்வாறு சென்று பார்ப்பதற்கு அரசு ஆவன செய்யும்.

பலர் இங்கே ஒன்றை பேசுவார்கள் என்று பார்த்தேன். ஆனால் பேசவில்லை. ஆனால் இங்கே வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். வெட்டுத் தீர்மானம் பூராவையும் படித்துச்சொல்ல இங்கே வாய்ப்பு இருக்காது, என்று கருதுகிறேன். ஆகவே, சிலவற்றை மட்டும் சொல்கிறேன். எங்கு பார்த்தாலும் வறட்சி, தண்ணீர் வரவில்லை என்று இங்கே பலரும் சொன் னார்கள். அதற்கு இதுவரையிலும் இந்த அரசு வந்தபிறகு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள், நேற்றைக்கு முதல்நாள் வரையிலும், இதற்காக அவர்கள் அனுமதித்த பணம் எவ்வளவு என்றால் 6 கோடியே 28 லட்சம் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி).

ஆனால் அதற்குப் பல இடங்களில் வறட்சி காரணமாக இந்தப் பணம் போதவில்லை, இன்னமும் இயற்கை இடர்ப்பாடு இருக்கிறது. பல இடங்களில் லாரிகளில் தண்ணீர் கொண்டு வர வேண்டியிருக்கிறது. பல இடங்களில் ஆழ் துளை குழாய் கள் போட வேண்டியிருக்கிறது. பல இடங்களிலே ஆழப் படுத்த வேண்டுமென்று மீண்டும் சொன்னபிறகு, நேற்றைக்கு அவர்கள் மீண்டும் ஒரு உத்தரவு போட்டு, 2 கோடியே 40 இலட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். இன்றைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குக் கொடுப்பதற்காக, 2 கோடியே 40 இலட்சம் கொடுப்பதற்காக உத்தரவிடப்பட்டி ருக்கிறது என்று சொன்னார்கள். அதையும் சேர்த்து மொத்தம் 8 கோடியே 69 இலட்சம் இன்றைக்கு வழங்கப்பட் டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

[திரு. எஸ்.டி.சோமசுந்தரம்] [1991 செப்டம்பர் 20

பிற்பகல் 7-30

இதைச் சொல்கிறபோது, இங்கே பல்வேறு இடங்களிலிருந்து சட்டமன்ற உறுப்பினர்கள் வந்திருக்கிறார்கள். இதிலே ஏதாவது விடுபட்டுப் போனால், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலமாக அறிக்கை பெற்று அனுப்பி வைத்தால், அந்த மாவட்டங்களுக்கும் கொடுக்க ஏற்பாடு செய்வேன் என்பதை சொல்லிக்கொள்கிறேன். எந்தெந்த மாவட்டங்களுக்குத் தரப்பட்டிருக்கிறதென்றால், புதுக்கோட்டை, சேலம், திண்டுக்கல் அண்ணா, தர்மபுரி, திருவண்ணாமலை—சம்புவராயர், வட ஆற்காடு, பெரியார், திருச்சி, கோவை, தென்னாற்காடு, கன்னியாகுமரி, திருநெல்வேலி, தஞ்சாவூர், மதுரை, செங்கை, இராமநாதபுரம், சிதம்பரனார் — ஏறக்குறைய எல்லா மாவட்டங்களும் இதில் வந்திருக்கிறது என்று நினைக்கிறேன். வராத மாவட்டங்கள் இருந்தால், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நிலைமைக்கு ஏற்றவாறு அவர்கள் எழுதினால், வருவாய் சிறப்பு ஆணையாளர் அவர்கள் மூலமாக அரசுக்கு வந்து, அவைகளும் கவனிக்கப்படுமென்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் ஒன்று இங்கே சொன்னது, மீண்டும் மீண்டும் சொன்னது, சாதிச் சான்றிதழ் வழங்குவது பற்றியதாகும். சாதிச் சான்றிதழ்கள் வழங்குவதில் சில சங்கடங்கள் இருக்கின்றன. புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் தான் சாதிச் சான்று அன்றைக்கே கொடுக்க வேண்டுமென்று அரசு உத்தரவு போட்டிருக்கிறது. அந்த உத்தரவை எங்கேயாவது நடைமுறைப்படுத்தவில்லை என்றால் அதை நீங்கள் எங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்தால், நிச்சயமாக ஆவன செய்வோம் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு இங்கே சாதிச் சான்றிதழ் பற்றிப் பேசும்போது வருடாவருடம் கொடுக்காமல், ஒரேயடியாகக் கொடுக்கலாமென்று சொன்னார்கள். இங்கே மாடலைக்கூட கொண்டு வந்தேன். சாதிச் சான்றிதழ்கள் ஒரு தடவை கொடுத்து விட்டால் போதும். அப்படிக் கொடுக்கிறபோது முறையாகக் கொடுக்க வேண்டுமென்பதற்காகத்தான், சில சங்கடங்கள் அதிலே வந்தாலும், அதை முறையாகச் செய்யலாம் என்று ஏற்பாடுகளை வைத்திருக்கிறோம். அந்தச் சாதிச் சான்றிதழ்கள் கொடுக்கும்போது மலைச் சாதியினர் — பழங்குடியினர், கொண்டா ரெட்டி, காட்டு நாயகர் — அங்கேதான் சங்கடங்கள் இருக்கின்றன. இப்படி கொடுக்கிறபோது, பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவர் ஆதி திராவிடர் சர்ட்டிபிகேட்டை வாங்கி, எம்.பி.பி.எஸ். படித்து, பாஸ் செய்துவிட்டு, முதன்முதலாக நான் எம்.பி. யானவுடன் 1967—லே மாலை போட்டார். நீங்கள் யார் என்று அவரை நான் கேட்டேன். நான் வேறு சமுதாயத்தைச் சேர்ந்தவன் என்று சொன்னார்கள். எனவே அன்றையிலிருந்தே தவறுகள் நடக்கின்றன என்பதை எண்ணிப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். சாதிச் சான்றிதழ்களை தவறாக வாங்கியவர்கள்



1991 செப்டம்பர் 20] [திரு. எஸ்.டி. சோமசுந்தரம்]

தொழிற் கல்லூரிகளில் சேர்ந்து படிக்கும்போது, பின்னால் அது
தெரியும்போது, அவர்கள் கல்வி பாதியில் நிறுத்தப்படுகிறது.
சான்றிதழ் கொடுத்த அதிகாரிகள்மீதும் நடவடிக்கை எடுக்கப்
படுகிறது. அதனால்தான் சாதிச் சான்றுகள் கொடுக்கும்
போது, மலைசாதியினர் — பழங்குடியினர், கொண்டா ரெட்டி,
காட்டு நாயகர் ஆகியவர்களுக்குக் கொடுக்கும்போது விசாரித்து
கொடுக்கப்படுகிறது. அதுவல்லாமல் ஆதி திராவிடர்
எல்லோருக்குமே உடனே வட்டாட்சியர் கொடுத்து விடுவார்.

பிற்பகல் 7.35

அது இல்லாமல் மற்ற பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், அல்லது
மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் யாராக இருந்தாலும், அல்லது
டிநோட்டிபைடு ஆக இருந்தாலும், அவர்களுக்கு எல்லாம்
சாதிச் சான்று கொடுப்பதில் எந்த விதமான சங்கடமும் இல்லை.
அப்படி சங்கடம் இருந்தால் அதை சரி செய்கிறேன் என்பதை
உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போல சொத்து சான்று. அதைக் கொடுக்கிறபோது
வட்டாட்சியரே வழங்குகிறார்கள். சங்கடம் இல்லை.
சொத்துச் சான்று வழங்குகிறபோது அதைப் பயன்படுத்திக்
கொண்டு அதை வைத்துக் கொண்டு பெரிய வங்கிகளில் அதைக்
காட்டி பணம் வாங்குவது, அதை வைத்துக் கொண்டு பெரிய
தொழில்கள் செய்வதற்காக கோடிக் கணக்கில் பணம் வாங்கு
வதற்கு பல முயற்சிகளில் ஈடுபடுகிறபோதுதான், அந்தச்
சொத்துச் சான்று, வருமானச் சான்று எதற்கு என்று விசாரித்து
விட்டு கொடுக்கப்படுகிறது. அதுவும் ஒப்பந்தக்காரர்களாக
இருந்தால் அவர்களுக்கு கொடுக்கிறபோது மாவட்ட கோட்ட
வருவாய் (ஆர்.டி.ஓ.) அதிகாரிகள் தான் கொடுக்க வேண்டும்.
அப்படி கொடுத்தாலும் மாவட்ட ஆட்சித் தலைவர் கையெழுத்து
போட வேண்டும். அதுவும் 6 மாதத்திற்குத்தான் செல்லும்.
காரணம், சான்றிதழ்களை வாங்கி பிறகு பாங்கில் பணம் வாங்கி
விட்டு அதற்குப் பின்னால் சொத்துக்களை விற்று விடுகிறார்கள்
என்பதால் தான் 6 மாதம் வைத்திருக்கிறோம் என்பதை தெரி
வித்துக் கொள்கிறேன்.

பட்டா வழங்குவதைப் பற்றி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச்
சேர்ந்த உறுப்பினரும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச்
சேர்ந்த உறுப்பினரும் தான் சொன்னார்கள். அதிலே சில
குறைபாடுகள் இருந்தாலும் இந்த அரசு அதைக் கவனத்தில்
எடுத்துக் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
அதிலே வீட்டுமனைப் பட்டா கொடுப்பதில் சிலர் இந்த இரண்
டையும் சேர்த்துப் பேசினார்கள். வீட்டுமனைப்பட்டா, குடி
மனைப் பட்டா என்று சொன்னார்கள். ஒவ்வொரு குடும்பத்
திற்கும் கொடுக்கிறோம். அதில் ஒரு பிரச்சினை. முதலிலே

குடியிருக்கிற இடங்களில் உழவர்கள், உழவுத் தொழில் செய்கிறவர்கள், கிராமக் கைவினைஞர்கள், தச்சர்கள், கொல்லர்கள், முடிதிருத்துவோர், சலவைத் தொழிலாளர்கள், சுமை தூக்குவோர் இப்படிப்பட்டவர்களுக்கு வழங்குவது குடியுரிமைப்பட்டா என்று பெயர். ஆனால் இருவரும் அதைத்தான் சொன்னார்கள் என்று நினைக்கிறேன். இப்படிப்பட்டவர்களுக்கு எல்லாம் குடி உரிமைப் பட்டா வழங்கப்பட்டது. இந்த ஆட்சியில் மட்டுமல்ல, மொத்தமாக 1991 ஆம் வருடம் இந்த ஆண்டில், 1,80,652 வழங்கப்பட்டிருக்கிறது. இன்னமும் எது எது பாக்கியிருக்கிறதோ அதையெல்லாம் கொடுப்பதற்கு இந்த அரசு உதவி செய்யும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே பேசிய பல உறுப்பினர்கள், விவசாயக் கடனைப் பற்றிச் சொன்னார்கள். முன்பிருந்த மத்திய அரசு, விவசாயிகளுக்கான கடன்களைத் தள்ளுபடி செய்வோம் என்றார்கள். அப்படித் தள்ளுபடி செய்கிறபோது, அப்போது இங்கே இருந்த அரசும் சில முயற்சிகளை செய்தார்கள். அதை நிறைவேற்றினார்களா என்ற தகவல் என்னிடம் இல்லை. ஆனால் இந்த அரசு வந்த பிறகு, அதை நிறைவேற்றுவதற்காக மைய அரசுடன் தொடர்பு கொண்டு, அந்தக் கடன்களை தள்ளுபடி செய்வதற்கான முயற்சிகளை எடுத்துக் கொண்டு வருகிறது. இப்படி எடுத்துக் கொண்டு வருகிறபோது, 50 சதவீதம் மையப் பேரரசு தர வேண்டும். மைய அரசுதான் எல்லாக் கடன்களையும் தள்ளுபடி செய்கிறார்கள் என்றுதான் எண்ணினோம். அதாவது விவசாயிகள் கடன் என்றால், கோவாபரேடிவ் கடன், நேஷனலைஸ்ட் பாங்கில் கடன், ஷெட்யூல்டு பாங்கில் கடன், இங்கெல்லாம் கடன் வாங்கியிருப்பார்கள். இவைகளையெல்லாம் கணக்கு எடுக்க வேண்டும். விவசாயக் கடன்கள் என்று சொல்லி, கூட்டுறவு கடன்கள் மட்டுமே என்று சொல்லப்பட்டிருக்கிறது. மீண்டும் அவர்களுடன் தொடர்பு கொள்கிறபோது 50 சதவீதம் அவர்கள் தருவதாகவும், 50 சதவீதம் மாநில அரசு கொடுக்க வேண்டுமென்றும், அதற்கு பணம் நம்மிடம் இல்லாவிட்டாலும் நபார்டு மூலம் பணம் வாங்கிக் கொள்ளலாம் என்றும் அதற்கு 10 சதவீதம் குறைந்த வட்டியில் அதை மூன்றாண்டுகளில் கொடுக்க வேண்டுமென்றும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிலத்தை எடுப்பதைப் பற்றிச் சொன்னார்கள். 'இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்' என்ற தலைப்பே அதற்கு இருக்கிறது. அந்தத் தலைப்பிலே எல்லோரும் பேசா விட்டாலும் அரசு அடிக்கடி சட்டங்களைக் கொண்டு வருகிறபோது, அதன் மூலம் நிலங்களை எடுக்கிறபோது சில இழப்பீடுகள் வருகிறது. அதற்காக ஒதுக்கீடு செய்ய வேண்டியிருக்கிறது. அதற்கு பணத்தைக் கொடுக்கிறபோது, அரசு அதுவரைக்கும் நேரடியாக செய்ய முடியாது. நிலம் எடுத்ததற்கு பணம் சில இடங்களில் கொடுக்கவில்லை என்று சிலர் இங்கே சொன்னார்கள். பெரும் நிலச் சொந்தக்காரர்களிடம் தான் எடுக்கப்படுகிறது. அவர்களுக்



கெல்லாம் பணம் கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். அந்தப் பணத்தை நஷ்ட ஈடாகக் கொடுக்கிறபோது, அதை நேரடியாகக் கொடுக்காமல் நீதிமன்றத்தில் தான் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படுகின்றது. அதை முன்கூட்டியே கொடுத்து மற்றவைகளையும் கொடுப்பதற்காக இந்த அரசு ஏற்பாடு செய்கிறது என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

பிற்பகல் 7.40

கட்டிடத்தைப் பற்றி இங்கே சொன்னார்கள். அந்தக் கட்டிடத்தைப் பற்றிச் சொல்கிறபொழுது, இன்றைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டிடத்தைப் பொறுத்த வரைக்கும், 21 மாவட்டங்களில் 20 மாவட்டங்களுக்கு இன்றைக்குக் கட்டிடங்கள் இருக்கின்றது. இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் தூத்துக்குடியைப் பற்றிப் பேசுகிறபோது (உறுப்பினர் திரு. எஸ். டேனியல்ராஜை பார்த்து) நீங்கள் தான் பேசினீர்கள் என்று நினைக்கிறேன், தூத்துக்குடியில் புரட்சித் தலைவர் எந்த இடத்தை சொன்னார்களோ அந்த இடத்தில் [illegible] கட்டிடம் கட்டுவதற்கு இந்த அரசு முயற்சி செய்யும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அது நீதிமன்றத்திற்குச் சென்று விட்டது ; அந்த இடத்தில் உள்ளவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று விட்டார்கள். அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்றாலும், உடனே அதைக் கையகப்படுத்தி செய்ய வேண்டும் என்று இருந்தார்கள்.

திரு. எஸ். டேனியல் ராஜ் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, அங்கே சிப்காட் இடத்திலிருந்து 300 ஏக்கர் நிலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகக் கட்டிடம் கட்டுவதற்கு வழங்கப்பட்டது. அதிலே 120 ஏக்கர் எந்தவிதப் பிரச்சினையும் இல்லாமல் பொதுப் பணித் துறையினரிடம் வழங்கப்பட்டு விட்டது. மீதியுள்ள 180 ஏக்கருக்குத்தான் நீதிமன்றத்திற்குச் சென்று இருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்களுடைய தகவலுக்காகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னது சரிதான் என்றாலும், சில விவரங்கள் இன்றைக்கு பலருக்குத் தெரிவதில்லை. ஆனால், நிலங்கள் இருக்கிறதே, அந்த நிலம் இந்தியாவில் இருக்கிற நிலமானாலும் சரி, தமிழ்நாட்டில் இருக்கிற நிலமானாலும் சரி மத்திய அரசுக்குச் சொந்தம் இல்லை, முதலிலே அதுபோல் நிலம் தமிழ் நாட்டுக்குச் சொந்தம் என்கிறபொழுது, நிலத்தை நிர்வகிக்கின்ற பொறுப்பு—வருவாய்த் துறைதான் அந்த நிலத்தை நிர்வகிக்க முடியும். ஆனால் நிலம் யார் நிலமாக இருந்தாலும், அந்த நிலம் வருவாய்த் துறைக்குத்தான் சொந்தம். ஆனால் சில வழக்கறிஞர்களுக்கு அது தெரிவதில்லை; வழக்கறிஞர்களுக்கு [illegible] இல்லை என்பதோடு நிறுத்திக் கொள்கிறேன். அதற்கு [illegible] தவறு என்று

கருதுகிறேன். ஆனால் அந்த நிலத்தை வருவாய்த்துறை எடுத்து யாருக்கு வேண்டுமானாலும் கொடுக்கலாம். நிலத்தை மைய அரசுக்குக் கொடுத்தாலும், மைய அரசுக்கு எந்தக் காரணத்திற்காகக் கொடுக்கிறோமோ அதற்குப் பயன் படுத்திக் கொள்ள வேண்டும்.

திரு. மா. சுந்தரதாஸ் : தலைவர் அவர்களே, வழக்கறிஞர் என்று சொல்லும்போது எல்லோரையும் பாதிக்கிறது ; குறிப்பிட்டுச் சொன்னால் பிரச்சினை இல்லை. வழக்கறிஞர்களுக்குத் தெரியவில்லை என்று சொன்னால், நாங்கள் எல்லாம் வழக்கறிஞர்கள் ; நாங்கள் தெரியாமல் இல்லை. ஆகையினால், அந்த ஒரு வார்த்தை....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, பொதுவான கருத்துத்தான்.

திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட வழக்கறிஞர்களுக்குத் தெரியவில்லை என்றால், சரி. ஆனால் 'காமன்' ஆக வரக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த மாதிரி வழக்குகளைப் பொறுத்து இருக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : வழக்கறிஞர்களுடைய மனம் புண்பட்டால் அதற்காக நான் என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். சாதாரணமாக அது ஒன்றுமில்லை. ஆனால், நான் சொல்கிறபொழுது 'சில வழக்கறிஞர்கள்' என்று சொல்லி விட்டேன் ; அடைமொழியே போட்டு இருக்கிறேன் ; சில வழக்கறிஞர்கள் என்று சொல்லி இருக்கிறேன் ; எல்லா வழக்கறிஞர்களையும் சொல்லவில்லை. நான் அதோடு நிறுத்திக் கொள்கிறேன் என்பதற்குக் காரணம், அதை அதற்கு மேலே எங்கே தீர்ப்பு வழங்கினார்களோ அங்கேயும் சில குறைபாடுகள் இருந்தது என்பதைத்தான் நான் தெரிவித்தேன். அந்த நிலத்தை எடுத்து மத்திய அரசுக்கே நாம் தருவதாக இருந்தாலும் கூட, இந்தக் காரணத்திற்காகக் கொடுத்தோம் என்றால், அந்தக் காரணத்திற்கு அவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் திருப்பி அதை மாநில அரசுக்குக் கொடுத்துவிட வேண்டும். அவர்களே அதை வேறு இலாக்காவுக்கு மாற்றுவதற்கு அவர்களுக்கு உரிமை இல்லை. அது போலத்தான் மாநில அரசு நிலங்களை எடுக்கிறபோது அதை தனி இலாக்காவுக்குக் கொடுத்தாலும் சரி, சிப்காட் நிறுவனத்திற்குக் கொடுத்தாலும் சரி அல்லது வேறு எதற்கு கொடுத்தாலும் சரி அவர்கள் அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம் ; அவர்கள் பயன்படுத்திக் கொள்ளா விட்டால் மீண்டும் வருவாய்த் துறைக்கே கொடுத்துவிட வேண்டும். வருவாய்த் துறை வேண்டுமானால், வேறு இலாக்காவுக்குத் தரலாம். ஆனால், இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறபொழுது, சிப்காட்



டுக்குக் கொடுத்ததை திருப்பி வருவாய்த் துறை எடுத்துக்கொள்ளக்கூடாது என்று அங்கே சட்டத்திலே விதி இல்லை. ஆனாலும் எப்படியோ அதற்கு நீதிமன்றம் தடை விதித்து இருக்கிறது என்பதை நான் இங்கே வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஆகையினால் தான் இப்படிப்பட்ட நிலைமை இன்றைக்கு தாமதம் என்றாலும், அந்தத் தாமதம் மீண்டும் வராதபடி நான் பார்த்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்

இங்கே ஒன்றைச் சொல்கிறபோது, இன்றைக்குப்பட்டா எல்லாம் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள் ; வீட்டு மனைப் பட்டா கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அது போல் மற்ற விவரங்களை எல்லாம் இங்கே சொல்வதற்காக் எல்லாவற்றையுமே நான் உங்களிடத்திலே சொல்லிக் கொண்டு இருக்கிறேன்.

பிற்பகல் 7-45

மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இங்கே முதலமைச்சராக வந்த பிறகு அவர்கள் செய்த காரியங்களில் இன்னொன்றைச் சொல்ல வேண்டுமென்றால்—இங்கே சொன்னார்கள். விவசாயம் செய்வதில் எங்களுக்கு எந்தவிதமான லாபமும் வரவில்லை என்று சொன்னார்கள். அப்படி லாபம் வராவிட்டாலும், அதற்காக தான் அவர்கள் ஒன்றைச் செய்திருக்கிறார்கள். விவசாயம் செய்கிறவர்களுக்கு மலைத் தோட்டம் அல்லாமல் தென்னை மரம், வாழை மரம், சோளம், கரும்பு, நிலக்கடலை, பருத்தி, எள், மஞ்சள், நெல், கரும்பு, வெற்றிலை இப்படிப்பட்ட பயிர்களை பயிர் செய்பவர்களுக்கு. அவர்கள் எவ்வளவு செய்தாலும் விவசாய வருமான வரியை புரட்சித் தலைவி ரத்து செய்து விட்டார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). அதனால் எவ்வளவு லாபம் அடைவார்கள் என்றால் ஏறக்குறைய 45 ஆயிரம் பேருக்கு அதிகமாக—லட்சக்கணக்கான பேர்கள் லாபம் அடைவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பேசியபோது பலவற்றைச் சொன்னார்கள். அவர்கள் முதலமைச்சராகி இங்கே பதவி ஏற்ற பிறகு,—பதவியேற்றது 24 ஆம் தேதி பதவியேற்றார்கள். ஆனால் 30 ஆம் தேதியோ 1 ஆம் தேதியோ ஒரு உத்தரவைப் போட்டார்கள். ஆதி திராவிட மக்கள் தான் அதிகமாக இருக்கிறார்கள் இந்த கிராமப் பணியாளர்களில் என்று சொன்னார்கள். அந்த கிராமப் பணியாளர்கள் வேலையில் இருக்கும் போது இறந்தால் 60 ஆயிரம் ரூபாய் பணம் உண்டு என்று பதவிக்கு வந்த 15 நாட்களில் அந்த உத்தரவைப் போட்டார்கள் என்பதை நான் உங்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1991 செப்டம்பர் 20

அதுமட்டுமல்லாமல் அவர்களுக்கு அந்த கிராம நல அதிகாரிகளுக்கு சிறப்பு நலத் திட்டத்தில் 10 ஆயிரம், அவர்களுக்கு அட்வான்ஸ் 800 ரூபாய், அதேபோல திருமணமாக இருந்தால் ஆயிரம் ரூபாய் மற்ற அரசு அதிகாரிகளுக்கு என்னென்ன சலுகைகள் உண்டோ அவ்வளவு சலுகைகளும் அவர்களுக்கு கொடுக்கப்படுகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப் போல இன்னொன்றைச் சொல்ல வேண்டுமென்றால் ஆச்சார்யா வினோபா அவர்கள் தமிழ்நாட்டுக்கு பாதயாத்திரை வருகிறபோது பூதான இயக்கத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை வாங்கி வைத்திருக்கிறார்கள். அப்படி அவர் வாங்கிய நிலங்களை முறைப்படுத்தி எப்படி கொடுக்க வேண்டும் என்று பார்த்து, கொடுக்கிற போது அதிலே முன்னுரிமை ஆதிதிராவிட மக்களுக்கு வருவதற்கு நாம் வாய்ப்பளிப்போம் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

கடைசியாக வருவாய்த்துறையைப் பற்றி ஒன்றைச் சொல்ல வேண்டுமென்றால்—பல பேர் ஒன்றைச் சொன்னார்கள். வருவாய்த் துறைப்பற்றி சொல்லுகிற போது புரட்சித் தலைவி அவர்கள் இங்கே முதலமைச்சராக வருவதற்கு முன்னாலே எங்களுடைய தேர்தல் அறிக்கையில், இந்தப் புத்தகத்தில் சொல்கிறபோது, ''உழுபவனுக்கே நிலம் சொந்தம்'' என்ற கொள்கையை நிறைவேற்றி நடைமுறைப்படுத்த வேண்டுமென்ற நீண்ட நாள் கனவை நினைவாக்க சட்டப்பூர்வமாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இந்த முயற்சிகளின் பயனால் நீண்ட காலமாக வெளிச் சந்தைக்கு வராமல் இருக்கிற பல்லாயிரக்கணக்கான ஏக்கர் பினாமி நிலங்களை கையகப்படுத்தி, அந்தநிலங்களை உழவு செய்த அந்த விவசாயிகளுக்கு கொடுக்கப்படும். இந்த முயற்சியில், இந்த அரசுக்கு, நாங்கள் வந்தால் தீவிரமாக ஈடுபடுவோம், இதைத் தான் அவர்கள் இங்கே வருவதற்கு முன்னாலே சொன்னார்கள். அதை நடைமுறைப்படுத்துவோம் என்பதை நான் உங்களுக்குக் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மற்றொன்றை இங்கே சொல்கிற போது சொன்னார்கள். இந்த வருவாய்த்துறை நன்றாக நடக்கிறது என்று நீங்கள் சொன்னாலும் நான் பூராவும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஏனென்றால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்பதற்கு காரணங்கள் இருக்கின்றன. அவை சாதாரண காரணங்கள் அல்ல. உண்மையான காரணங்கள் இருக்கின்றன. பல தவறுகள் இருக்கின்றன. இங்கே மட்டுமல்ல, எல்லா இடங்களிலும் தவறுகள் இருக்கின்றன. எப்படி தவறுகள் வந்திருக்கிறது என்றால்—இங்கே பேசுகிறபோது இரண்டு தினங்களுக்கு முன்னால் கூட எதிர் வரிசையில் உள்ள நீங்கள் எல்லாம் ஜாதிச் சான்றிதழ் கேட்டால் லஞ்சம் கேட்கிறார்கள் என்று சொன்னீர்கள்.



1991 செப்டம்பர் 20] [திரு. எஸ்.டி. சோமசுந்தரம்]

பிற்பகல் 7-50

நான் சொன்னேன், இந்த லஞ்சத்தைப் பற்றி 20 ஆம் தேதி பேசுங்கள் என்று சொன்னேன். ஆனால் 20 ஆம் தேதி அதிகம் பேர்கள் பேசவில்லை அதைப் பற்றி. இதைச் சொல்வதற்குக் காரணம், அன்றைக்கு இது ஒரு நிலைமையாக வந்துவிடக் கூடாது. கேள்வி நேரங்களில் வந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் இதை நான் தெரிவித்தேனே ஒழிய, நான் சொல்லக்கூடாது என்றோ அல்லது லஞ்சம் இல்லை என்றோ தெரிவிக்கவில்லை. ஆனால் புரட்சித் தலைவி இதிலே எப்படி இருக்கிறார்கள் என்பதை நான் உங்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். லஞ்சத்தை ஊற்றுக் கண் என்று சொன்னார்கள். நான் ஊற்றுக்கண் என்பதை ஏற்றுக்கொள்ள மாட்டேன். ஊற்றுக்கண் என்றால் கீழேயிருந்து வருகிறது. தண்ணீரிலேயிருந்து வருகிறது. இந்த லஞ்சம் கீழேயிருந்து, அதிகாரிகளடத்திலேயிருந்து தான் வருகிறதா என்று சொன்னால், அப்படி அல்ல. ஆனால் லஞ்சம் எப்படி வருகிறது என்றால், மலையிலேயிருந்து, கங்கை எப்படி மேலேயிருந்து வருகிறதோ, அப்படித் தான் லஞ்சம் வருகிறது. அங்கேயிருந்து மேலே போய்க் கொண்டிருக்கிறது. ஆனால் அந்த லஞ்சத்தை அடைத்தாலும், இன்றைக்கு ஆற்றிலே தண்ணீரை அடைத்துவிட்டாலும், போன தண்ணீர் போய்க் கொண்டிருக்கிறது. அது காயும், வற்றும். அப்படிச் செய்வதற்கு புரட்சித் தலைவி, இந்த லஞ்சத்தை ஒழிப்பதற்கு இங்கே அடைத்தாலும், அது போனது ஆற்றிலே போய்க் கொண்டிருப்பது, அது காய்கிற வரையிலே அது அங்கே நடக்கும், ஆனால், காய்ந்த பிறகு அது நடக்காது என்பதை உங்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அவர்கள் இங்கே சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொல்வதைப் பூராவையும் படிக்காவிட்டாலும், நிர்வாக சீரமைப்பு, லஞ்ச ஒழிப்புதான்; அதற்குத் தலைப்பு, ஒரு பக்கம் போட்டு இருக்கிறார்கள். நான் ஒரு பக்கத்தையும் படிக்க வேண்டியதில்லை. உங்களுக்கு எல்லாம் தெரியும். லஞ்ச ஊழலற்ற, நேர்மையான நியாயமான, நிலையான ஒரு அரசை அமைப்போம், நீதி நிர்வாக சிறப்புக்கு, லஞ்ச ஊழலற்ற ஆட்சிக்கு, மக்களின் நிம்மதியான வாழ்விற்கு, தமிழகத்தில் புரட்சித் தலைவியின் ஆட்சியை, இந்தியாவிலே எடுத்துக்காட்டாக—இந்த ஆட்சி இந்தியாவிலே எடுத்துக்காட்டாக, இந்த ஆட்சியை—கொண்டு வருவோம்'' என்பதுதான் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவியினுடைய எண்ணம் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

வருவாய்த்துறையைப் பற்றி இங்கே பேசியவர்கள் எல்லாம் நான் ஜெயிலுக்குச் சென்றேன் என்று சொன்னார்கள். ஆனால் எதற்கு ஜெயிலுக்குச் சென்றார்கள் என்

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1991 செப்டம்பர் 20

அடுத்து பினாமி வந்து விட்டது. அது போன்று இங்கே பலர் கேரளா கேரளா என்று சொன்னார்களே, நீங்கள் மட்டுமல்ல. பல பேர் முதலிலே சொல்லிக் கொண்டிருந்தார்கள். 2, 3 நாட்களாக நான் பதில் சொல்லவில்லை. கேரளா என்று சொன்னார்கள், கர்நாடகா என்று சொன்னார்கள். அங்கே போய் இங்கே வருமா என்றால், அங்கேயெல்லாம் போய்ப் பார்த்தால் அதெல்லாம் ஒன்றும் நடக்கவில்லை. ஆனால் இங்கே இந்த ஆட்சி இருந்தாலும் சரி, முதலில் உங்கள் ஆட்சி இருந்தாலும் சரி, யார் ஆட்சி இருந்தாலும் சரி கேரளா! கேரளா என்று சொன்னதில் அக்கரைக்கு இக்கரை பச்சை என்று சொன்னார்கள். உழைப்பவர்களுக்கே நிலம் சொந்தம் என்ற தலைப்பிட்டு ஒரு சட்டம் இந்திய துணைக் கண்டத்தில் எங்கேயும் வரவில்லை. உழைப்பவர்களுக்கு நிலம் சொந்தம் என்ற தலைப்பிட்டு ஒரு சட்டம் இந்த சட்டமன்றத்திலேதான் வர இருக்கிறது என்பதை உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக இங்கே பேசுகிறபோது ஒன்றைச் சொன்னார்கள். ஆகையால் வெட்டுத் தீர்மானத்தைப் பற்றி ஒன்று சொல்லவேண்டுமென்று நினைக்கிறேன். சொல்வதென்றால் முழுவதையும் படித்துச் சொல்ல நேரமில்லை (குறுக்கீடு) பத்திரப் பதிவைப் பற்றி நான் உங்களிடத்திலே சொல்கிறபோது இங்கே பல பேர் பலவற்றைச் சொன்னாலும் ஒன்றை நான் இங்கே சொல்லவேண்டுமென்றால், அதிலே பல விதமான கள்ள நோட்டு வந்து விடுகிறது. கோயம்புத்தூரிலே வருவதைப் போல என்றெல்லாம் சொன்னார்கள். அப்படியெல்லாம் வராமல் இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் இதை நாங்கள் அச்சடிப்பதில்லை. மத்தியில் எங்கேயிருந்து நோட்டு அடிக்கிறார்களோ, அங்கே தான் இதுவும் அடிக்கப்படுகிறது. என்றால் கள்ள நோட்டு அடிக்கிற இடத்தில் அல்ல. மத்திய அரசு எங்கே நோட்டு அடிக்கிறதோ, அங்கேதான் இதையும் அச்சடித்து எங்களுக்குத் தருகிறார்கள். நாசிக்கில் அடித்துத் தருகிறார்கள். ஹைதராபாத்தில் அச்சடித்துத் தருகிறார்கள். அதிலே அவர்களே கள்ள நோட்டு அச்சடிக்க முடியாத அளவிற்கு எப்படி செய்கிறார்களோ, அதையும் இதிலே செய்கிறார்கள் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே பேசும் போது வெட்டுத் தீர்மானத்திலே இருக்கிறது. அந்த வெட்டுத் தீர்மானத்தையும் சேர்த்தே சொல்கிறேன். காங்கிரஸ் கட்சியின்

பிற்பகல் 8-00

மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் சொல்லியிருக்கிறார் எங்களுக்கு பல இடங்களில் பத்திரம் கிடைப்பதில்லை என்று சொல்லியிருக்கிறார். ஆனால் பத்திரங்கள் கிடைக்காமல் இல்லை. பத்திரங்கள் எல்லா இடங்களிலும் இருக்கிறது. எங்கேயாவது பத்திரங்கள் இல்லை என்று சொன்னால் உடனே அந்த இடங்



1991 செப்டம்பர் 20] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

...களுக்கு நாங்கள் பத்திரங்களை அனுப்பி விடுகிறோம். அதே ...ல் இன்றைக்கு எழுத்தர்கள் இல்லை என்று சொல்கிறார்கள். ...றாக எழுதுபவர்கள் யார் இருந்தாலும் அவர்களை எழுத்தர்களாக பயன்படுத்துவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். அடுத்து ஆவணங்கள் எழுத்தர்கள், அதேபோல் நகல் எழுத்தர்கள். ஆவண எழுத்தர்கள் கொஞ்சம் விவரம் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும். இன்றைக்கு ஆவண எழுத்தர்கள் 18,000 பேர் இருக்கிறார்கள். அரசு அதிகாரம் பெற்றவர்கள். அதேபோல நகல் எழுத்தர்கள் 16,119 பேர் இருக்கிறார்கள். அதேபோல டைப் அடிப்பவர்கள் 2,240 பேர் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட கோரிக்கைகள் எல்லாம் வரும் என்பது எங்களுக்கு முன்பே தெரியும். பல இடங்களில் சொன்னார்கள். எங்களிடத்திலே சொன்னார்கள் எழுத்தர்கள் போதவில்லை என்று சொன்னார்கள். இதை எல்லாம் எண்ணிப் பார்த்து 1992 ஆம் ஆண்டு ஜனவரிக்குள் இன்றைக்கு மீண்டும் இதற்காக தேர்வு வைத்து அந்த தேர்விலே தேறியவர்களுக்கு—இப்போது இருப்பவர்கள் எல்லாம் சேர்ந்து ஒரு 5,000 பேர் வேலையில் இருக்கின்றார்கள் என்று சொன்னால்—மேலும் 10,000 பேர் இளைஞர்களுக்கு இதில் வேலை வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்று முதல்வர் அவர்கள் எண்ணியிருக்கிறார்கள். அதிலும் உடல் ஊனமுற்ற...களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் மாநிலம் பூராவும் 1,874 பேர் இருக்கிறார்கள். அதை 5 ஆயிரம் பேராக ஆக்க வேண்டும் என்று இந்த அரசு கருதுகிறது. அதில் உடல் ஊனம் உற்றவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று புரட்சித் தலைவி அவர்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல் இங்கே பேசுகிறபோது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கரூர் சின்னசாமி அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். பத்திரங்கள் அதிகமாகப் பதிவு செய்யப்படுவதால் நம்முடைய பணம் பூராவும் கேரளத்திற்கு போய்விடுகிறது என்று சொன்னார்கள். இன்றைக்கு இருக்கிற சட்டப்படி அண்டை மாநிலத்தில் அங்கே ஏதாவது கொஞ்ச நிலம் இருந்தாலும் அந்த நிலத்தையும் இங்கே உள்ள நிலத்தையும் ஒன்றாகச் சேர்த்து இன்றைக்கு எழுதிவிடுகிறார்கள். அப்படி எழுதுகிறபோது அந்தப் பத்திரம் இங்கே வருகிறபோது இரண்டு ஆண்டுகளுக்குள் அதை மீண்டும் இங்கே ...ந்த பத்திரங்களைக் காட்டி பதிவு செய்ய வேண்டும் என்று ...ருக்கிறது. அப்படி இருந்தாலும் அதிகமான பத்திரங்கள், "கேரளாவைப் பார், கேரளாவைப் பார்" என்று சொல்லி சொல்லி பல பேர் கேரளாவிற்கே பத்திரங்களை எழுதச் சென்று விடுகிறார்கள். ஆகையினால் இன்றைக்குச் சட்டம் ஒன்று வர இருக்கிறது. ஆனால் தமிழ்நாட்டில் இருக்கிற நிலங்களுக்கு தமிழ்நாட்டில்தான் பத்திரங்களை எழுத வேண்டும். அப்படி ஒரு சட்டம் இங்கே வர இருக்கிறது என்பதை நான் உங்களுக்கு

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1991 செப்டம்பர் 20

தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி வந்தபின் இப்படிப்பட்ட தவறுகள் நடக்காது என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல பத்திரங்கள் எழுதுவது என்பது பத்திரங்களை வாங்கித்தான் எழுத வேண்டும் என்பது இல்லை. சாதாரண பேப்பரில் கூட நீங்கள் பத்திரங்களை எழுதலாம். அந்தப் பத்திரங்களைக் கொண்டு போய் கொடுத்தால் அதற்கு இவ்வளவு கூறி என்று வழிகாட்டி இருக்கிறது. அதன் அடிப்படையில் பணத்தைப் பெற்றுக் கொண்டு ஸ்டாம்ப் அடித்துக் கொடுத்தால் அந்தப் பத்திரம் உங்களுக்குச் செல்லும். வெற்றுத் தாளில் எழுதுவதா என்று யோசிக்க வேண்டாம். நல்ல பேப்பராக வாங்கி எழுதலாம். அப்படி இல்லை என்றால் முதல் பக்கத்திற்கு என்று வைத்து 2, 3 முத்திரைத்தாள்களை மட்டும் வாங்கிவிட்டு மற்றவைகளுக்கு வெள்ளைத்தாளில் எழுதலாம். அப்படி எழுதினால் அந்தப் பத்திரங்கள் செல்லும். அத்தோடு பத்திரங்கள் விற்பனையில் சங்கடங்கள் இருக்கிறது, பத்திரங்கள் பிளாக்கிலே விற்கிறது என்கிற எண்ணமெல்லாம் உங்களுக்கு வராது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து சில உறுப்பினர்கள் சொல்லுகிறபோது சீட்டுக் கம்பெனியைப் பற்றிச் சொன்னார்கள். அந்தச் சீட்டுக் கம்பெனிகளை எல்லாம் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறோம். எனவே அதில் தவறுகள் நடந்தால் அவர்களுக்கு 5,000 ரூபாய் வரை அபராதம் போடலாம் வழக்குகள் தொடரலாம் என்று இருக்கிறது. அதிலே சில சங்கடங்கள் இருப்பதை தெரிந்து கொண்டாலும் எதிர் காலத்தில் அப்படி இல்லாமல் இருப்பதற்கு பார்த்துக் கொள்வோம் என்பதையும் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 8-05

அதைவிட மோசம் இன்னொன்று. தமிழ்நாட்டை பொறுத்த வரையிலும் 4,300 சங்கங்கள் இருக்கின்றன. எல்லா சங்கங்களும் நல்ல சங்கங்கள் இல்லை என்று சொல்வதில்லை. நல்ல சங்கங்களும் இருக்கின்றன. வழக்கறிஞர்களில் நன்றாகப் படித்து விட்டு சிறந்த வழக்கறிஞர்களாக இருப்பதைப்போல அதிலே சிறந்த சங்கங்களும் இருக்கின்றன. பல சங்கங்கள் கல்வியின் பெயரால், கலாச்சாரத்தின் பெயரால், சமூகத்தின் பெயரால், விளையாட்டின் பெயரால் இன்றைக்கு பதிவு செய்து கொண்டு, அந்தச் சங்கங்கள் பெயரால் பணத்தை வசூல் செய்து கொண்டு, தனிப்பட்டவர்கள் யாராவது அதை வைத்துக் கொண்டு, அந்த சங்க உறுப்பினர்களில் யாருக்காவது மாறுபட்ட கருத்து வந்தால், மாறுபட்ட கருத்தை வைத்துக்கொண்டு பல பொதுமக்களுடைய பணம் இதிலே வீணாகிக் கொண்டிருக்கிறது. ஆனால் அப்படிப்பட்ட சங்கங்கள் வந்தால் அதைக் கலைத்து விட்டு தனி அலுவலர்களை நியமிப்பதற்கு இன்றைக்கு ரிஜிஸ்ட்-



1991 செப்டம்பர் 20] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

ரேஷன் டிப்பார்மெண்டுக்கு இருக்கின்ற பதிவுச் சட்டத்திலே அதற்கு அதிகாரம் இல்லை. விரைவிலேயே, இந்த சட்டமன்றத்திலேயே இங்கே இப்படிப்பட்ட சங்கங்கள் எங்கேயாவது தவறு செய்தால் அதை கலைத்துவிட்டு தனி அதிகாரி போடுவதற்கு இந்த அரசுக்கு அதிகாரம் இருக்கின்ற அளவிற்கு ஒரு சட்டமுன்வடிவைக் கொண்டுவந்து நிறைவேற்ற இருக்கிறோம் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே பேசுகின்ற போது பலர் இந்தப் பத்திரப் விலை எல்லாம் அதிகமாகப் போய்க்கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். இங்கே வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறீர்கள். அதில் திருமணத்திற்கு நீங்கள் ரெஜிஸ்ட்ரேஷன் பீஸ் என்று வாங்கக் கூடாது என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் சுயமரியாதைத் திருமணம் எல்லாம் செய்ய வேண்டுமென்று சொல்கின்ற கட்சியைச் சேர்ந்தவர்கள் தான் நாங்கள். ஆனால் அப்படிச் சொன்னாலும், பணம் கொடுத்தால் அதிலே சில தவறுகள் இல்லாமல் உண்மை வரவேண்டும் என்பதற்காகத்தான் 5 ரூபாய் பணம் வாங்குகிறோம். அது சாதாரணப் பணம் என்பதனாலே அதை எடுக்க வேண்டும் என்று ஒரு கணக்காக அதைச் சொல்ல வேண்டாம் என்பதைத் தெரிவித்துச் கொள்கிறேன்.

அதைப்போலவே, சில பேர்களுக்கு பத்திரம் எல்லாம் உடனே வருவதில்லை என்று சொன்னார்கள். அந்தப் பத்திரங்கள் உடனே வராததற்கு இரண்டு மூன்று காரணங்கள் இருக்கின்றன. ஒரு காரணம் என்னவென்றால் அந்தப் பத்திரத்தை எழுதுகின்றபோது எந்தவிதமான தவறும் இல்லாமல் பத்திரத்தை எழுதினால் 3 நாளிலே பத்திரத்தைக் கொடுத்துவிடுகிறார்கள். ஒரு பத்திரத்தை எழுதுகிறார்கள் அந்த பத்திரம் எழுதுகின்றபோது அந்த இடத்திலே எதுவுமே இல்லை என்று சொல்லிவிடுகிறார்கள். அங்கே கட்டிடம் இருக்கிறது. மாடிச் கட்டிடம் இருக்கும். பல மாடிக் கட்டிடங்கள் இருக்கும் அதைப் பற்றி நாங்கள் கவனிக்க வேண்டியிருக்கிறது. இருக்கின்ற கட்டிடத்தினுடைய விஸ்தீரணத்தை பார்க்க வேண்டியிருக்கிறது. வடவதைப் பார்க்க வேண்டியிருக்கிறது. மதிப்பைப் பார்க்க வேண்டியிருக்கிறது. அப்படிப் பார்க்கின்றபோதுதான் சில நேரங்களிலே பத்திரங்கள் உங்களுக்கு வருவதற்கு காலதாமதமாக ஆகிவிடுகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். சாதாரணமாக சென்னையிலே பல மாடிக் கட்டிடம் என்றால் எவ்வளவு கிரயம் போகும் என்பதெல்லாம் உங்களுக்குத் தெரியும். ஆனால் அப்படி கிரயம் போகின்ற கட்டிடத்திற்கு சாதாரணமாக 2, 3 கிரவுண்டுக்கு ரிஜிஸ்டர் பண்ணிவிட்டார்கள் என்றால் அரசுக்கு நஷ்டம். அதில் குடியிருப்பவர்களுக்கும் கஷ்டம். குடியிருப்பவர்கள் கட்டிடத்தைக் கட்டி அவர்களுக்கு விற்றுவிடுகிறார்கள். ஒன்றாவது மாடி, மூன்றாவது வீடு நான்காவது மாடி ஐந்தாவது வீடு என்று விற்றுவிடுகிறார்கள். அந்த வீடு அவர்களுக்குச் சொந்தம் என்பதற்கு அத்தாட்சி இல்லை. இது அரசுக்கு பணம் வேண்டும் என்பதற்கு மட்டும்

நீங்கள் கவனிக்கவில்லை. இந்த அரசு என்பது மக்களுடைய கஷ்டங்களை உணர்ந்து, மக்களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டும். அதுதான் நல்ல ஆட்சியினுடைய கடமையாகும். அந்த நல்ல ஆட்சியினுடைய கடமை என்று சொல்லுகின்றபோது தான் அந்த மாடி கட்டிடத்தைக் கட்டி யாரோ யாரிடத்திலோ கொடுத்துவிட்டு, அதில் யாரோ குடிவந்து விட்டு பின்னாலே அவர்களுடைய பேரப் பிள்ளைகள் வருகின்றபோது, அந்த நேரம் வருகின்றபோது, அவர்களை யாராவது பலவந்தமாக வெளியே பிடித்து தூக்கியெறிந்து விட்டால் உயிர்தான் போகும். சொத்தும் போகும். உயிரும் போகும். இதையெல்லாம் பார்த்துத்தான் அவைகளைப் பதிவு செய்கின்றபோது சிலவற்றைச் செய்திருக்கிறோம். இன்றைக்கு நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இன்றைக்கு இருக்கின்ற அதிகாரிகளை வைத்துக் கொண்டு, இந்த தமிழகத்தை பொறுத்த வரையிலும் 18,000 வழிகாட்டிகள், எந்தெந்த ஊரிலே எவ்வளவு பத்திரங்கள் என்று கிரயம் என்றால் 18,000 இடங்களிலே அதை நேரடியாகப் பார்த்து அதைச் செய்ய வேண்டியிருக்கிறது என்றால், இருக்கிற அதிகாரிகள் எவ்வளவு திறமையாக இதில் வேலை செய்கிறார்கள் என்பதற்கு அப்படிப்பட்ட அதிகாரிகள் முதலில் தவறு செய்தார்கள் என்று சொன்னாலும் அவர்களை இப்போது இந்த நேரத்தில் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 8-10

அப்படி சிலர் தவறு செய்கிறபோது அதை கண்டுபிடித்து இப்போது சில தினங்களுக்குள் கண்டுபிடித்ததில் மட்டும் அதிலே இழப்பு ஏற்பட்டு இருந்தது 2 கோடியே 21 இலட்சம் ரூபாய் ஆகும். இன்றைக்கு கண்டுபிடித்து அதிலே 1 கோடியே 23 இலட்சம் ரூபாய் வசூல் செய்யப்பட்டிருக்கின்றது. மற்றும் மீதியுள்ள பணத்தை வசூல் செய்வதற்கு இந்த அரசு ஏற்பாடுகளைச் செய்திருக்கிறது என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போல் பத்திரங்கள் இல்லை என்று இன்றைக்குச் சொன்னார்கள். இன்றைக்கு அரசின் கைவசம் எவ்வளவு பத்திரங்கள் இருக்கின்றன என்றால் 485.49 கோடி ரூபாய்க்கு. இன்றைக்கு, எல்லாயிடங்களிலும் பத்திரங்கள் இருக்கின்றன. 25 பைசா, 50 பைசா, 1 ரூபாய் என்ற அளவுகளில் பல கோடி ரூபாய் பத்திரத்தாள்கள் இன்றைக்கு அரசின் கைவசம் இருக்கின்றன. அந்தப் பத்திரத் தாள்கள் இல்லாமலும் எழுதலாம் என்பதையும் நான் உங்களுக்கு ஏற்கெனவே தெரிவித்திருக்கின்றேன். இதிலே உள்ள பல்வேறு விவரங்களைச் சொல்லியிருக்கிறேன். இதிலே பலபேர் பல வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். பொதுவாக ஒரு வெட்டுத் தீர்மானம் கொடுத்து இருக்கிறார்கள். ஒரு ஊருக்கு சார் பதிவாளர் அலுவலகம்





வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள் அதைப்போல பலர் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். வேதாரண்யத்திற்கு வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இதுபோல் பல ஊர்களைக் கொடுத்திருக்கிறார்கள். ஒருவர் ஒரு ஊருக்கு சார்பதிவாளர் அலுவலகம் வேண்டும் என்கிறார், அப்படி பார்க்கும்போது அதைச் சுற்றிலும் உள்ள சார் பதிவாளர் அலுவலகத்தில் நாள் ஒன்றுக்கு எவ்வளவு பத்திரங்கள் எழுதப்படுகிறது என்று கேட்கிறோம். அப்படி எழுதப்படுவது குறைந்தது ஒரு சார் பதிவாளர் அலுவலகத்தில் 200, 300 பத்திரங்களாவது ஒரு ஆண்டுக்கு அங்கே எழுதவேண்டும். ஒரு ஆண்டுக்கு 300 பத்திரங்கள் என்றால் ஒரு நாளைக்கு ஒன்று கூட வராது. ஆனால் இப்படிப்பட்ட இடங்களில் எல்லாம் இன்றைக்கு தேவையான அளவுக்கு இல்லை என்பதையும் அப்படி தேவைப்பட்டால் எதிர்காலத்தில் அவைகளை இந்த அரசு கவனிக்கும் என்பதையும் நான் உங்களுக்குத் தெரிவித்து வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்தவர்கள் எல்லாம் இந்த என்னுடைய பதிலை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பத்திரங்கள் இல்லை, சார் பதிவாளர் அலுவலகம் வேண்டும், இங்கே சிலவற்றில் ஏமாற்றுகிறார்கள் என்று எல்லாம் சொல்லியிருக்கிறீர்கள். இதற்கெல்லாம் இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன் எல்லா வெட்டுத் தீர்மானங்களுக்கும் தனித்தனியாக பதில் சொல்லாமல் மொத்தமாக பதில் சொல்லிவிட்டேன்.

அடுத்து, கோரிக்கை எண் 44. எழுதுபொருள், அச்சகம். இதைப் பொறுத்தவரையில் இன்றைக்கு இந்த அரசு எல்லாவற்றையும் வாங்கித் தருகிறது. இன்றைக்கு தமிழகத்தைப் பொறுத்தவரையில் எல்லா அரசு அலுவலகங்களுக்கும், தலைமை செயலகம் ஆனாலும் சரி, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் ஆனாலும் மற்றும் எல்லா அரசு அலுவலகங்களுக்கும் பல்வேறு விதமான கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள எழுதுபொருட்களையும், தட்டச்சு இயந்திரங்களையும், படிபெருக்கி இயந்திரங்களையும், கணக்கிடு பொறிகளையும் இத்துறையின் மூலம் வாங்கிக் கொடுக்கிறோம். இது மட்டுமல்லாமல் தலைமைச் செயலகத்திற்கும் மற்றும் பல்வேறு அரசுத் துறை அலுவலகங்களுக்கும் தேவைப்படுகிற படிவங்கள், பதிவேடுகள் இவைகள் எல்லாம் இந்தத் துறையின் மூலம் கொடுக்கப்படுகிறது.

மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களில் இவைகள் எல்லாம் சரியாக கொடுக்கப்படுவதில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். நல்ல பேப்பர்களை நீங்கள் வாங்கிக் கொடுக்கவில்லை என்று வெட்டுத் தீர்மானங்களில் சொல்லி

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1991 செப்டம்பர் 20

யிருக்கிறார்கள் பேப்பர்களை எங்கே வாங்குகிறோம் என்றால் தமிழ்நாடு காகித ஆலை நிறுவனத்திடமிருந்து 50 சதவீத பேப்பர்களை வாங்குகிறோம். அதேபோல் மத்திய அரசினுடைய

பிற்பகல் 8-15

மேற்பார்வையிலிருந்து 20 சதவீதம் வாங்குகிறோம். 30 சத வீதத்தை வெளிச் சந்தையிலிருந்து தேவைப்படுகின்றபோது, வாங்குகிறோம்.

அதேபோல், இந்தப் பேரவை, சிறப்பாக நடை பெறுகிறதென்றால், இதற்குத் தேவைப்படுகின்ற எல்லா வற்றையும் அப்போதைக்குப்போது அச்சடித்துக் கொடுக் கிறோம். தேவையானபோது உடனுக்குடன் அச்சடித்துக் கொடுக்கிறோம். நிறைய ரகசியங்களை அச்சடித்துக் கொடுக் கிறோம். யாருக்கும் தெரியாதவைகளை அச்சடித்துக் கொடுக் கிறோம். இதுபோன்றவை யெல்லாம் அச்சடித்துக் கொடுக்கின்ற வேலைகளை இந்த அரசு செய்கிறது என்பதை நான் உங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்; அச்சகத்தைப் பொறுத்தவரைக்கும் இந்த அரசு எல்லா வகையிலும் சிறப்பாகச் செய்கிறது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். இந்த அரசு அச்சகத்தில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு எல்லா விதமான நன்மைகளையும் செய்துகொண்டு வருகிறது. அங்கே இருக்கிற தொழிலாளர்களுக்கு மற்ற தொழிலாளர்களைப் போல அவர்கள் இரவிலே வேலை செய்தால் பணம் தரப்படு கிறது. சென்னையைப் பொறுத்தவரையிலும் 3 ஷிப்ட் வேலை அவர்களுக்கு இருக்கிறது. மற்ற இடங்களிலே இரண்டு ஷிப்ட் வேலை செய்கிறார்கள். இரவிலே வருபவர்களுக்கு எக்ஸ்ட்ரா வாக பணம் கொடுக்கப்படுகிறது. இப்படி பல்வேறு வகைகளிலே அவர்களுங்கு பால், தேநீர் போன்றவைகளை யெல்லாம் கொடுக் கப்படுகின்றன. இவைகளெல்லாம் தொழிலாளர்களுக்காக இன்றையதினம் நமது அரசால் கொடுக்கப்படுகின்றன. மேலும் இன்றைய தினம் தொழிலாளர்களுக்கு 2 ஜோடி சீருடைகள் வழங்கப்படுகின்றன. இவைகள் அல்லாமல் இப்போதுதான் இந்த அரசு அங்கேயே இருக்கின்ற தொழிலாளர்களுக்கு, ஏனைய மற்ற அரசு அலுவலர்களைப்போல 220 நாள் கொடுப்பதும், அதேபோல, அங்கே இருக்கிற பெண்மணிகளுக்கு, அதிலும் கர்ப்பஸ்திரியாக இருக்கிறவர்களுக்கு, மகப்பேறுக்கு செல்கின்ற பொழுது.—மற்ற இடங்களிலே இதுவரையில் இல்லை,—நம்முடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் அங்கேயே இருக்கிற பெண்களுக்கு மற்ற அரசு பெண்களுக்கு என்ன சலுகை கள் கொடுக்கப்படுகின்றனவோ அந்தச் சலுகைகளை அவர் களுக்கும் கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தை தெரிவித்து இருக்கிறார்கள் என்ற செய்தியை (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுக்குச் சொல்லி நான் என் உரையை முடிக்கின்றேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : திரு. வி. கே. லட்சுமணன்.



1991 செப்டம்பர் 20]

*<u>திரு. வி. கே லட்சுமணன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்திரைத்தாள் சட்டத்திலே எங்களுக்கு உள்ள ஒரு சிறிய பிரச்சினைபற்றி விளக்கம் தர வேண்டுகிறேன். சென்ற சில மாதங்கள் வரை கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்களி லிருந்து அதன் உறுப்பினர்களுக்கு 'கன்வேயன்ஸ் டீட்' மூலமாக வழங்கப்பட்ட மனைக்கட்டுகளுக்கு ஸ்டாம்ப் டியூட்டியிலே யிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டு இருந்தது. ஆனால் இப் பொழுது சில சார்பதிவாளர்கள் அந்த 'கன்வேயன்ஸ் டீட்'-களுக்கு ஸ்டாம்ப்டியூட்டி கட்டவேண்டுமென்று வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதிலே அரசின் நிலை என்ன என்பதை தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி அரசு ஆய்வு செய்து, அது சரியென்றால் ஏற்றுக்கொள்ளும் சரியில்லை என்றால் மறுத்துவிடும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : திரு. வி. நடேசன் பால்ராஜ்.

<u>திரு. வி. நடேசன் பால்ராஜ்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் ஜாதிச் சான்றிதழ் வழங்குவதிலே, மிக எளிதாகக் கொடுத்து விடுகிறார்கள் என்று சொன்னார்கள். என் தொகுதியைச் சேர்ந்த காட்டுநாய்க்கன் என்ற சமூகத்தினர் இந்தச் சாதிச்சான்றிதழ் கிடைக்காததால் பலரும் மிகவும் சிரமப்பட்டு தங்களுடைய பிள்ளைகளைப் படிக்கவைக்க முடியாத நிலையிலே இருக்கின்றார்கள். இப்போதுதான் அந்தப் பிள்ளை களைப் படிக்க வைக்கவேண்டுமென்ற எண்ணத்தோடு அவர்கள் பள்ளிக்கு அனுப்பவேண்டுமென்ற எண்ணத்திலே இருக்கிறார் கள். ஆனால் ஜாதிச் சான்றிதழ் பெற முடியாத நிலையிலே படிக்கவைக்க முடியாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஜாதிச் சான்றிதழ் கிடைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கையை எடுப்பார்களா என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் காட்டுநாய்க்கர்தான் என்பதை நிரூபிக்க வேண்டியது அவர்களுடைய கடமை. அதை நிரூபித்தால் நிச்சயமாக அவர்களுக்கு சான்றிதழ்கள் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : திரு. நடேசன் பால்ராஜ் உட்காருங்கள். அமைச்சர் அவர்கள், நிரூபித்தால் சான்றிதழ் கொடுப்பார்கள் என்று சொல்லிவிட்டார்கள். மற்றவைகளை மாண்புமிகு அமைச்சரிடம் எழுதிக் கொடுங்கள். திரு. நா. சா. பழனிசாமி.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது, வடாற்காடு அம்பேத்கார் மாவட்டம், குடியாத்தத்தில், முக்குன்றம் கிராமத்திலே நடைபெற்ற ஜப்தியை பற்றி நான் சொல்லியிருந்தேன். அந்த ஜப்தி தொடருமா அல்லது ஜப்தி கொண்ட பொருள்களை அரசு திருப்பிக் கொடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது என்னுடைய கவனத்திற்கு இப்போதுதான் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆய்வு செய்து நடவடிக்கை எடுப்பேன்.

பிற்பகல் 8-20

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. தம்புசாமி.

திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத் தொழிலாளர்களுடைய கூலி, குத்தகைத் தள்ளுபடி இது சம்பந்தமாக அமைச்சர் பதில் கூறுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும், கீழ்த் தஞ்சைக்கு ஒரு விவசாயக் கூலி, ஆனால் தஞ்சை மாவட்டத்தினுடைய மேலத் தஞ்சைக்கும், அதேபோல தமிழ் நாட்டிலுள்ள மற்ற எல்லா இடங்களுக்கும் ஒருவிதமான கூலியாக இன்றைக்கு இருக்கிறது. அதைப் புரட்சித் தலைவி அவர்கள், மாநிலம் பூராவும் ஒரேவிதமான கூலி நிர்ணயம் செய்யலாம் என்ற கருத்துக்களை அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும். உங்களுக்குக் கூலி எப்பொழுதும் குறையாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோலத்தான், குத்தகைதாரர்களுக்கு எப்போதும் போல, வழக்கம்போல, புரட்சித் தலைவரைப் போல புரட்சித் தலைவியும் பாதுகாப்பு கொடுப்பார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : செல்வி எல்: சுலோசனா.

செல்வி எல். சுலோசனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்கள் பயன் பெறத் தக்க வகையில் கைட்லைன் வேல்யூஸ்-ஐ பொதுமக்களும் அறிந்து கொள்ளுமாறு சார்பதிவாளர் அலுவலகத்தில், அறிவிப்புப் பலகையின் மூலம் அறிவிக்க இந்த அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, எதுவும் இரகசியம் இல்லை. இது நல்ல யோசனை தான். இதை நான் தெரிவித்துக் கொண்டிருக்கிறேன். இதற்குப் புரட்சித் தலைவி அவர்களிடத்தில் அனுமதி பெற்று இதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி மணிமேகலை.

திருமதி வி. ஜி. மணிமேகலை : பேரவைத் தலைவரவர்களே, என்னுடைய தொகுதியான அருப்புக்கோட்டை தொகுதியிலே காலனி வீடுகளுக்கு மயான வசதி இல்லை. அதனால் பொதுவான மயானத்தில் பிணங்களை எரிக்க முடியாமல் சில நாட்களுக்கு—இரண்டு மூன்று நாட்களுக்குப் பிணங்கள் நாறிக்கொண்டிருக்கின்றன. இந்த நிலை மாறுவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்களை உங்கள் மூலமாக ஏதாவது ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத தலைவர் அவர்களே, இந்தக் காலனி என்பது இல்லாமல் இருந்தால்தான் அப்படிப்பட்ட நிலைமை இல்லாமல் போகும். காலனியே இல்லாமல் எல்லோரும் ஒரேயிடத்தில் இருக்கின்ற நிலைமை எதிர்காலத்திலே வர வேண்டுமென்று நான் எண்ணுகிறேன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ச. காந்திராஜன்.

திரு. ச. காந்திராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிரயப் பத்திரங்கள் முடிக்கின்றபொழுது பட்டா மாறுதலுக்கான படிவங்களும் பெறப்படுகின்றன. ஆனால், அந்தப் பட்டா மாறுதலுக்கான படிவங்கள் பெறப்பட்டு அப்படியே வைக்கப்பட்டு விடுகின்றன. எனவே, பட்டா மாறுதல் செய்யப்படாத காரணத்தினால் இதற்கு என்று . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி. என்ன கேள்வி என்று சடார் என்று கேளுங்கள்.

திரு. ச. காந்திராஜன் : ஒன்று, இந்த விதிமுறைகளைக் கடைப்பிடிக்குமாறு அரசாங்கம் கண்டிப்பான ஒரு நடவடிக்கை எடுக்குமா அல்லது இந்த—ஏற்கனவே போட்ட உத்தரவை வாபஸ் பெற்றுக் கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, காலம் இடம் தராததால் சிலவற்றை நான் இங்கே சொல்லவில்லை. நில அளவை மேம்பாட்டுத் திட்டத்தைப் பற்றி இங்கே பலர் நன்றாக வரவேற்றுப் பேசினார்கள். அந்தத் திட்டம் வந்து இடையிலே அதைக் கவனிப்பாரற்றுப் போய் விட்டது. அதிலே பல சிக்கல்கள் இருக்கின்றன என்று என்னிடம் சொன்னார்கள். ஆனால் அந்தச் சிக்கலை இந்த அரசு நிச்சயமாகப் போக்கடிக்கும். எவ்வளவு சிக்கலாக இருந்தாலும், அதைப் போக்கடித்துவிட்டு, நில அளவை மேம்பாட்டுத் திட்டத்தை மீண்டும் புதுப்பித்து பட்டாவையும்

கொடுத்து, பட்டா பாஸ் புத்தகத்தையும் கொடுத்து அதிலே எல்லாவற்றையும், அந்தப் பட்டா பாஸ் புத்தகத்திலே இருக்கிற எல்லாவற்றையும் மீண்டும் எழுதி, எல்லா ஏற்பாடுகளும் செய்வோம் என்று சொல்லி, இதிலே பத்திரம் எழுதுகிற பொழுது இப்பொழுதுள்ள சங்கடங்களைப் போக்குவதற்கு இந்த அரசு விரைவிலே முடிவெடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே எங்களுடைய பகுதியிலே மக்கள் வாழும் இடங்களிலே காடு புறம்போக்கு என்று ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். காடு புறம்போக்கு என்று சொல்லிவிட்டு, ரெவின்யூ டிபார்ட்மெண்ட் டாக்ஸ் கலெக்ட் செய்கிறது. பட்டயம் கேட்டால் எங்கள் பொறுப்பு இல்லை, அது காட்டுப் புறம்போக்கும் ஃபாரஸ்ட்தான் செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். ஃபாரஸ்ட் அங்கே வருவதும் இல்லை: ஃபாரஸ்ட் டிபார்ட்மெண்டுக்கு சம்பந்தமும் இல்லை. ரெவின்யூ டிபார்ட்மெண்ட் டேக்ஸையும் வாங்குகிறார்கள். பட்டயம் கேட்டால் எங்களுக்குத் தெரியாது என்றும் சொல்கிறார்கள். இத்தகைய நிலங்களுக்குப் பட்டயம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, நான் நாடாளுமன்றத்தில் உறுப்பினராக இருக்கின்றபொழுது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொள்கை பரப்புச் செயலாளராக இருக்கின்றபொழுது அங்கே இருக்கிற பிரதம அமைச்சர் திரு. மொரார்ஜி தேசாய் அவர்களிடம், நீங்கள் காட்டையும் கல்வியையும் மத்திய கன்கரன்ட் லிஸ்டிலேயிருந்து எடுக்க வேண்டுமென்று நான் சொன்னேன். அவர்கள் நீண்ட பல காலமாக காங்கிரஸ்காரர். தியாகி.. ஆனால் அந்தப் பிரதமர் ஒத்துக்கொண்டார். அப்பொழுது அது ஜனதா ஆட்சி. பிரதமர் ஒத்துக்கொண்டார். ஆனால் அப்பொழுது திரு.ஒய்.பி. சவாண், அதை ஒத்துக்கொள்ளவில்லை. அவர் யார் என்று உங்களுக்குத் தெரியும். அதனால் காடு இன்றைக்கு எங்களுடைய கையில் இல்லை. காடு, மலையிலே இருந்தாலும் இன்றைக்கு காட்டிலே இருக்கிற அதிகாரம் பூராவும் மத்திய பேரரசிடம் தான் இருக்கிறது. ஆகவே, நாங்கள் எதையும் செய்வதற்கு இயலாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.



பிற்பகல் 8-25

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண். 11—மாவட்ட நிருவாகம். பற்றிய வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. எச். எம். ராஜு.

திரு. எச். எம். ராஜு : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எச். எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையில் அனுமதியுடன் திரும்பப் பெற்றுச் கொள்ளப்பெற்றது.

திரு. ஜி. பழனிசாமி தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது.

திரு. வி. தம்புசாமி தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. வி. தம்புசாமி : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. தம்புசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது.

''மாவட்ட நிருவாகம் பற்றிய 11–ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 152,32,74,000–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'' என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம்; தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்கு கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண். 1— நிலவரித் துறை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண். 1— நிலவரித் துறை பற்றிய வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திருமதி ரமணி நல்லதம்பி, இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றதாகக் கருதப் பெற்றது.

திரு. ஜி. பழனிசாமி, தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

''நிலவரித் துறை பற்றிய 1–ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 9,84,41,000 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'' என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்கு கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண். 5— முத்திரைத் தாள்கள் நிருவாகம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண். 5— முத்திரைத் தாள்கள்— நிருவாகம் பற்றிய வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

''முத்திரைத் தாள்கள்–நிருவாகம் பற்றிய 5–ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 2,07,93,000–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'' என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம்; தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்கு கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண். 6— பத்திரப் பதிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண். 6— பத்திரப் பதிவு. பற்றிய வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது.

''பத்திரப் பதிவு பற்றிய 6–ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 16,24,72,000–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'' என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம் : தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்கு கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண். 41— இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண். 41— இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. ஆர். சிங்காரம். இருக்கையில் இல்லை.

திரு. ஆர். சிங்காரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாக கருதப் பெற்றது.

திரு. ஜி. பழனிசாமி தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது.

''இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 41-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 69,24,76,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'' என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் இல்லை என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம்; தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்கு கோரிய தொகை வழங்கப் பெற்றது.

**கோரிக்கை எண். 44— எழுதுபொருள் அச்சுத்துறை.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மானியக் கோரிக்கை எண். 44— எழுது பொருள் அச்சுத்துறை வெட்டுத் தீர்மானம் ஏதும் முன்மொழியப்படவில்லை.

''எழுதுபொருள்— அச்சுத்துறை பற்றிய 44-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 25,81,39,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'' என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம்; தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்கு கோரிய தொகை வழங்கப்பெற்றது.

**கோரிக்கை எண். 46— இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மானியக் கோரிக்கை எண். 46— இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் பற்றிய வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. ஆர். சிங்காரம். இருக்கையில் இல்லை. திரு. ஆர். சிங்காரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெறுகிறது.

'இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் பற்றிய 46-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 48,54,14,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்'' என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம்: தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்கு கோரிய தொகை வழங்கப் பெற்றது.

பேரவையின் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றது. பேரவை மீண்டும் (23-9-1991) திங்கட்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 8-29 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது

பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

104. கோவை, திருவாளர்கள் ஆர். ஏ. வி. டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்தாரால் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரியை 27-11-1990 முதல் மூன்று ஆண்டு காலத்திற்கு தள்ளிப் போடுவது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 3-4-1991-ஆம் நாளிட்ட 193-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ் நாடு) சட்டம் 1/1959 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

105. கோவை, திருவாளர்கள் ரவீந்திரா மில்ஸ் லிமிடெடினால் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரியை 27-1-1990 முதல் மூன்று ஆண்டு காலத்திற்கு தள்ளிப் போடுவது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 27-8-1990-ஆம் நாளிட்ட 517-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனைச் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு) சட்டம் 1/1959 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது .]

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

73. கோரிக்கை எண். 26— கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை மீதான கொள்கை விளக்கக் குறிப்பு, 1991-92 (தமிழ், ஆங்கிலம்).

74. சமூக நலத் துறை பற்றிய செயல் முறைத் திட்டம், 1991-92 (ஆங்கிலம்).

75. நிலவரித் துறை, மாவட்ட நிருவாகம், இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு மற்றும் இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள், 1991-92 (தமிழ், ஆங்கிலம் . கோரிக்கை எண்கள் 1, 11, 41 மற்றும் 46.)

76. கோரிக்கை எண். 5— முத்திரைத் தாள்கள் — நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு. 1991-92 (தமிழ் -ஆங்கிலம்).



77. கோரிக்கை எண். 6— பத்திரப் பதிவுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1991-92 (தமிழ், ஆங்கிலம்).

78. கோரிக்கை எண். 44— எழுதுபொருள் அச்சுத் துறையின் பணி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1991-92 (தமிழ், ஆங்கிலம்).

79. சர்க்கரைத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 1991-92 (தமிழ், ஆங்கிலம்).

80. பெருந்தொழில்கள் பற்றிய செயல்திட்ட ஆய்வுரை, 1991-92 (தமிழ், ஆங்கிலம்).

81. புவியியல் மற்றும் சுரங்கத் துறை பற்றிய செயலாக்கத் திட்டம், 1991-92 (தமிழ், ஆங்கிலம்).

82. கோரிக்கை எண். 31— ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலத்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1991-92 (தமிழ், ஆங்கிலம்).

83. தொழில்கள் பற்றிய சாதனைத் திட்டம், 1991-92 (தமிழ், ஆங்கிலம்).

84. ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 1991-92 (ஆங்கிலம்).

85. பொது நிறுவனங்கள் குழுவின் எட்டாவது அறிக்கை, 1991-92.

86. பொது நிறுவனங்கள் குழுவின் ஒன்பதாவது அறிக்கை, 1991-92.

87. பொது நிறுவனங்கள் குழுவின் பத்தாவது அறிக்கை, 1991-92.

88. உடுக்குறியிடப்பெறாத வினாக்களும், விடைகளும் முதல் பட்டியல் (எண்கள் 1 முதல் 25 வரை).

## இணைப்பு- I

8 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.

### கைத்தறி மற்றும் துணி நூல் துறைக்கான 1991—92 ஆம் ஆண்டிற்கான கொள்கையும் திட்டங்களும்.

முன்னுரை :

தமிழ்நாட்டில் கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதில் வேளாண்மைக்கு அடுத்தபடியாக கைத்தறித் தொழிலே முக்கிய பங்கு வகிக்கிறது. அது மட்டுமின்றி மாநிலப் பொருளாதார முன்னேற்றத்தில் இத்தொழிலின் பங்கு கணிசமானதாகும். கைத்தறிக்கு முன்னிலை அளித்துள்ள தமிழ்நாடு அரசு இத்தொழிலின் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மத்திய மற்றும் மாநில அரசுகள் கைத்தறித் தொழிலின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்காக பல்வகை திட்டங்களை செயல்படுத்தி அதன் மூலம் கிராமப் புற வறுமையை ஒழிப்பதில் தனிக் கவனம் செலுத்தி வருகின்றன.

கைத்தறி தொழில் மற்ற கிராமத் தொழில்களைவிட குறைந்த மூலதனத்தில் அதிக நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக் கூடியதாகும். மேலும் கிராமப்புறத்திலிருந்து நகர் புறத்துக்கு மக்கள் குடிபெயர்வதை தடுக்கவல்ல இத்தொழில், சுற்றுப்புற தூய்மைக்கு கேடு விளைவிக்காததாகும். கைத்தறித் தொழில் மற்றும் நெசவாளர்களின் நல்வாழ்வைக் கருத்தில் கொண்டு இந்த அரசு கைத்தறி தொழிலுக்கு மேலும் ஊக்கம் அளிக்க எண்ணியுள்ளது.

மூலப் பொருட்கள் தட்டுப்பாட்டினால் கைத்தறித் தொழில் உற்பத்தி பாதிக்கப்படுவதை தடுப்பதற்காக கூட்டுறவு நூற்பாலைகளின் உற்பத்தி திறனை அதிகரிக்க தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அது மட்டுமின்றி தேவையான அளவு நூல் ஒதுக்கீடு செய்யுமாறு மைய அரசு கோரப்பட்டுள்ளது.

நாட்டின் மிகப் பழமையான தொழிலான துணி நூல் தொழில் கடந்த பல ஆண்டுகளில் பல்வேறு மாற்றங்களைச் சந்தித்துள்ளது. இந்த ஆண்டில் இத்தொழிலின் நிலை திருப்தி அளிப்பதாக உள்ளது. பல நூற்பாலைகள் லாபத்தில் இயங்கத் தொடங்கியது மட்டுமின்றி அவற்றில் சில ஆலைகளை நவீன மயமாக்கவும் தலைப்பட்டுள்ளன.

மாநிலத் துணித் தேவையை பூர்த்தி செய்வதில் விசைத் தறி தொழில் முக்கிய பங்கு வகிக்கிறது. கைத்தறித் தொழில் வளர்ச்சி ஒரு குறிப்பிட்ட எல்லைக்குட்பட்டதால் நாட்டில்



கூடுதல் துணி தேவைகளை விசைத்தறித் தொழில் ஈடு செய்கிறது. புதிய ஜவுளிக் கொள்கையின் மூலமாக சான்றிதழ் வழங்குதல் எளிதாக்கப்பட்டதாலும் விசைத்தறித் தொழில் தற்போது வளர்ச்சி பெற்றுள்ளது.

கைத்தறி நெசவாளர்களது சமுதாய மற்றும் பொருளாதார நிலையினை உயர்த்தும் பொருட்டு அரசு சுமார் 75,000 கைத்தறிகளை பத்து வருடங்களில் மாற்றியமைக்க ஒரு தகுந்த கால வரையிலான திட்டம் தயாரிக்க முடிவு எடுத்துள்ளது. இந்தத் திட்டம் செயலாக்கம் பெறும்போது, குறைந்த வருவாய் பெறும் 37,500 கைத்தறி நெசவாளர்கள் தங்களுடைய வாழ்க்கை நிலையில் மேம்பாடு அடைவார்கள்.

### 1. தறிகளைக் கூட்டுறவின்கீழ் கொணருதல் :

கைத்தறிகளை அதிக அளவில் கூட்டுறவு அமைப் பின்கீழ் கொண்டு வருதல் அரசின் முக்கியக் கொள்கைகளில் ஒன்றாகும். கூடுதலான தறிகளை கூட்டுறவு அமைப பின்கீழ் கொணரும் பொருட்டும், அவர்கள் பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் பங்கு முதலீடு செய்யும் பொருட்டும் அவர்களுக்கு அரசு நிதி உதவியை கடன் வடிவில் வழங்குகின்றது. அதிகபட்சமாக பருத்தி தறிக்கு ரூ. 180-ம், பட்டு மற்றும் கம்பள தறிக்கு ரூ. 315-ம் பாலியஸ்டர் தறிக்கு ரூ. 900-ம் நிதியுதவியாக வழங்கப்படுகிறது. இக்கடன் தொகையானது மாநில மற்றும் மத்திய அரசால் சமமாகப் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. 1987 ஆம் வருட கைத்தறி கணக்கெடுப்பின்படி தமிழகத்தில் உள்ள 4.27 லட்சம் கைத்தறிகளில் 31-3-1991 தேதியில் 3.25 லட்சம் தறிகள் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் கொணரப்பட்டுள்ளன. இதன் மூலம் தேசியக் குறியீடான 60 விழுக்காட்டிற்கும் மேலாக நமது மாநிலத்தில் 76 விழுக்காட்டிற்கு உயர்ந்துள்ளது. பங்குத் தொகை கடனைத் தவிர அரசு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு பங்கு மூலதன உதவி அளிக்கிறது. தற்சமயம் அரசு பங்கு முதலீட்டுத் திட்டம் மத்திய அரசின் விற்பனை மேம்பாட்டு உதவித் திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

31-3-1991 தேதியில் மாநிலத்தில் மொத்தம் உளள நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை 1503. 1990-91 ஆம் ஆண்டில் 15,000 நெசவாளர்களை கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டுவர இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 36,799 நெசவாளர்கள் கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர். 1990-91 ஆம் ஆண்டின் அரசு பங்கு மூலதனமாக ரூ. 50 லட்சம் ஒப்பளிப்புச் செய்யப்பட்டதன் மூலம் 295 சங்கங்கள பயனடைந்துள்ளன. 1991-92 ஆம் ஆண்டில் 12,000 நெசவாளர்கள் கூட்டுறவு அமைப்பின்கீழ் கொணர இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**2. கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு சலுகை அடிப்படையில் நடைமுறை மூலதனம் அளித்தல் :**

அனைத்து பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் ஆகியவற்றிற்கு மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் மாநில தலைமைக் கூட்டுறவு வங்கியின் வாயிலாக தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கியினால் வங்கி வட்டி விகிதத்திலிருந்து சலுகை அடிப்படையில் 7½ விழுக்காடு வட்டி விகிதத்தில் நடைமுறை மூலதனம் வழங்கப்படுகின்றது. கூட்டுறவு வங்கிகள், தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கியினால் அளிக்கப்படும் நிதி உதவியினை சலுகை அடிப்படையில் வழங்குவதற்கு ஏதுவாக தமிழக அரசு, தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி அளிக்கும் கடன் தொகைக்கு 1 சதவீதமும், மத்திய கூட்டுறவு வங்கிகள் அளிக்கும் கடன் தொகைக்கு 3 சதவீதமும் வட்டி மான்யமாக வழங்கி வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் 1988-89 ஆம் ஆண்டுக்கான கோரிக்கைக்காக அரசு 1990-91 ஆம் ஆண்டில் ரூ. 300 இலட்சம் வழங்கியுள்ளது. 1989-90 ஆம் ஆண்டில் இருந்து இத்திட்டம் விற்பனை மேம்பாட்டு உதவித் திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளது. பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் ஆகியவற்றிற்கு 1991-92 ஆம் ஆண்டில் நடைமுறை மூலதனமாக ரூ. 217.11 கோடி நபார்டு நிறுவனம் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

**3. 90 சதவித நட்டத்தை ஈடு செய்யும் திட்டம்.**

நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்படும் நடைமுறை மூலதனம் வசூலாகாதலினால் ஏற்படும் இழப்பில் 90 சதவீதம் அரசினால் ஈடு செய்யப்படுகிறது. எஞ்சிய 10 சதவீதம் சம்பந்தப்பட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளே ஏற்கின்றன. இத்திட்டத்தின் கீழ் அரசினால் 1990-91-ல் ரூ. 22,000 அனுமதிக்கப்பட்டு செலவிடப்பட்டுள்ளது.

**4. நூல் விநியோகம்.**

தமிழ்நாட்டில், ஆண்டொன்றுக்கு 4.27 இலட்சம் கைத்தறிகளுக்கு 1.8 இலட்சம் கிலோ கிராம் சிட்டநூல் தேவைப்படுகிறது. கூட்டுறவு நூற்பாலைகளின் மூலம், ஆண்டொன்றுக்கு 80,000 பேல்கள் சிட்ட நூலினை 1,503 கைத்தறி நெசவாவர் கூட்டுறவு சங்கங்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. பொதுவாக மாநிலத்தில் சிட்ட நூலின் உற்பத்தி உபரியாக உள்ளது.

மத்திய அரசின் பஞ்சு ஏற்றுமதிக் கொள்கையினால் கடந்த மூன்று மாதங்களாக உள்நாட்டில் பஞ்சின் விலை 50 விழுக்காடு முதல் 70 விழுக்காடு வரை உயர்ந்துள்ளதினைத் தொடர்ந்து சிட்ட நூலின விலை 13.8 விழுக்காடு அதிகரித்துள்ளது



இவ்வாறு சிட்டநூலின் விலை அபரிதமாக உயர்ந்திருப்பதை அரசு தனது கவனத்தில் கொண்டு, சிட்ட நூலின் விலையைக் குறைக்கும் முகமாக பஞ்சின் ஏற்றுமதிக் கொள்கையை மறு பரிசீலனை செய்யும்படி மத்திய அரசின் துணிநூல் அமைச்சகத்திடம் இவ்வரசு கேட்டுக்கொண்டுள்ளது.

நூற்பாலைகள், மத்திய அரசின் "சிட்ட நூல் உற்பத்தி செய்யும்படியான கடமைக்குட்பட்ட திட்டத்தின் 'கீழ்" பதுக்கலைத் தவிர்த்து சிட்டநூலின் விலையை சீரான முறையில் நிர்ணயிக்கும் பொருட்டு இத்திட்டத்தின் கீழ் உள்ள உத்தரவுகளை திறம்பட நிறைவேற்றும்படி மாவட்ட ஆட்சியாளர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

பின்னல் ஆடைகள் துணிகளின் உற்பத்திக்கு தேவையான பின்னல் ஆடை நூல் உற்பத்தி செய்யும்பொருட்டு, சோதனை முயற்சியாக ஆறு கூட்டுறவு நூற்பாலைகள் இந்நூலை உற்பத்தி செய்யப் பணிக்கப்பட்டுள்ளது. தனியார் துறையின் கீழ் உள்ள கைத்தறி நெசவாளர்களின் தற்போதைய துயரினைத் துடைக்கும்பொருட்டு, வெளிச்சந்தையின் நூலின் விலையை கட்டுப்படுத்தும் பொருட்டும் இவ்வரசு கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தியாகும் சிட்ட நூலில், 2,000 பேல்களை, தனியார் கைத்தறி நெநசவாளர் சங்கங்களுக்கு 1991 ஜூலை மாதத்திய விலையின் அடிப்படையில், கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு விநியோகிக்கப்படுகின்ற சலுகை விலையில் சிட்டநூல் விநியோகிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

**5. விற்பனை மேம்பாட்டு உதவி திட்டம் (தள்ளுபடி மான்யத் திட்டம்).**

கூட்டுறவின்கீழ் வரும் நெசவாளர் சங்கங்கள் மேற்கொள்ளும் கைத்தறி துணிகளின் விற்பனையின்மீது, வெவ்வேறு விகிதங்களில் தள்ளுபடி அளிக்கும் திட்டமும், அதற்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளும் கடந்த 37 ஆண்டுகளாக நடைமுறையில் இருந்து வருகின்றன. கைத்தறி துணி விற்பனைகட்கு தள்ளுபடி அளிக்கும் திட்டமானது பொது மக்கள் கைத்தறி துணிகளை ஆர்வத்துடன் வாங்குவதற்கு உதவி வருகிறது. இத்திட்டமானது, இதர விசைத்தறி மற்றும் ஆலைத் துறைகளுடன் கூட்டுறவுத் துறையிலுள்ள சங்கங்கள் போட்டியிட்டு விற்பனை செய்ய தேவையான பக்கபலத்தை தருகிறது. மேலும் தள்ளுபடி மூலம் ஊக்கம் அளிப்பதன் பயனாக விற்பனை அளவு பெருகவும், அதன் மூலம் நெசவாளர்கள் தொடர்ந்து வேலை வாய்ப்பு பெற்று அவர்களின் கூலி வருமானம் பெருகவும் வழி செய்கிறது.

கடந்த ஆண்டுகளில், ஓராண்டிற்கு அளிக்கப்படும் தள்ளுபடி கால அளவு மாறுபட்டிருந்தது. டிசம்பர் 1990 திங்களில் 90 நாட்களாக இருந்த தள்ளுபடி காலம் 100 நாட்களாக

உயர்த்தப்பட்டு இது பண்டிகை காலங்களுக்கு 60 நாட்களும், மாதாந்திர தள்ளுபடி 40 நாட்களுமாக கீழ்க்கண்டவாறு அளிக்கப் பட்டு வருகிறது.

| கைத்தறி வார விழா | | நாட்கள் |
|---|---|---|
| | .. | 15 |
| பெரியார் மற்றும் அண்ணா பிறந்த நாட்கள் | .. | 10 |
| தீபாவளி | | |
| | .. | 25 |
| பொங்கல் | | |
| | .. | 10 |
| மாதாந்திர தள்ளுபடி 6-ம் தேதியிலிருந்து 10-ம் தேதி வரை | | |
| | .. | 40 |
| மேற்கூறிய பண்டிகை வராத எட்டு மாதங்கட்கு | | |
| மொத்தம் | .. | 100 நாட்கள் |

கைத்தறி துணிகளின் விற்பனைக்கு ஓராண்டிற்கு 100 நாட் களுக்கு தொடர்ந்து தள்ளுபடி அளிக்க மாநில அரசு விரும்பு கிறது.

31–3–1 989 வரை கைத்தறி துணி விற்பனை மீது அளிக்கப் படும் தள்ளுபடி மானிய செலவினத்தை மத்திய மற்றும் மாநில அரசுகள் 50 : 50 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொண்டு வந்தன. 1–4–1989 முதல் மத்திய அரசு விற்பனை மேம் பாட்டு உதவி திட்டம் என்ற தலைப்பில் புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. விற்பனை மேம்பாட்டு திட்டத்தின்கீழ் ஓராண்டிற்கு பெறப்படும் உதவித் யானது, சென்ற நிதி ஆண்டில் பிரதம நெசவாளர் சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவு பெற்ற பெற வேண்டிய தள்ளுபடி மானியம் மற்றும் அரசு பங்கு மூலதனம் (கூடுதலாக பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கம் பொருத்தவரை மேலாண்மை மானியம்) இவற்றிற்கு சமமானத் தொகையாகும் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் விதிமுறைகளின்படி இத்திட்டத்தின்கீழ் பெறப்படும் உதவித் தொகையில் ஜனதா தவிர பிற கைத்தறி துணிகளின் விற்பனை மீது 75 சதவிகிதம் மிகாமல் தள்ளுபடி கழிவு மற்றும் நுகர்வோர்கட்கு ஊக்கமளிக்கும் இதர செயல் பாடுகட்கு பயன்படுத்த வேண்டும். மீதமுள்ள 25 சதவிகிதத் தொகை கைத்தறி துணிகளின் விற்பனையை அதிகரிக்கும் வகையில் பல்வேறு அபிவிருத்தி செயல்பாடுகளுக்கு பயன் படுத்தப்பட வேண்டும். 1989–90 ஆம் ஆண்டிற்கு விற்பனை மேம்பாட்டு உதவி தொகை ரூ. 3,462.40 இலட்ச மாகும். 1990–91 ஆம் ஆண்டிற்கு தள்ளுபடி மானியத் திட்டத்திற்கு செலவிடப்பட்ட மொத்த தொகை





ரூ.30,455 இலட்சம். இத்தொகையிலிருந்து 1988–89 ஆம் ஆண்டு கோரிக்கைகளில் முழுமையாகவும், 1989–90 கோரிக் களில் ஒரு பகுதிக்கும் தள்ளுபடி மான்யம் வழங்கப்பட்டது.

பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கம் மற்றும் கோ-ஆப்டெக்ஸின் நிலுவையிலுள்ள தள்ளுபடி மான்ய கோரிக்கை களை ஒப்பளிப்பு செய்வதற்காக நடப்பு நிதியாண்டில் ரூ. 42 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அண்மையில் 28–8–1991 அன்று டெல்லியில் நடைபெற்ற துணி நூல் அமைச்சர்கள் மாநாட்டில் 1988–89-ல் நிர்ணயம் செய்யப் பட்ட தள்ளுபடி மான்யத் தொகைக்காக ரூ. 37 கோடி என்ற உச்சவரம்பினை, நூல், சாயப் பொருட்கள் மற்றும் கூலி உயர்வின் காரணமாக மேலும் அதிகரிக்க வேண்டும் என மாநில அரசு வலியுறுத்தியுள்ளது.

## 6. கைத்தறிகளை நவீனமயமாக்கும் திட்டம் :

கைத்தறித் துணிகளின்கீழ் கைத்தறியின் உற்பத்தி திறன் மற்றும் தரம் ஆகியவற்றை உயர்த்தும் நோக்குடன் நெசவாளர் களின் சோர்வை அகற்றவும் கூட்டுறவின்கீழ் இயங்கும் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு தறிகளை நவீனப்படுத்தும் திட்டம் 1980–81 முதல் அமுல் படுத்தப்பட்டு வருகிறது. மத்திய அரசும் மாநில அரசும் 50 : 50 என்ற விகிதாச்சார அடிப்படையில் நிதியுதவி அளிக்கின்றன. இதில் 3-ல் 2 பகுதி கடனாகவும் 3-ல் 1 பகுதி மான்யமாகவும் வழங்கப்பட்டு வருகிறது.

இத்தொகை கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகிறது.

| | | (ரூபாய்) |
|---|---|---|
| 1. சாதா தறிகள் வாங்க தறி ஒன்றுக்கு | | 2,000 |
| 2. ஜாக்கார்டு/தானியங்கி தறிகள் வாங்க தறி ஒன்றுக்கு. | | 4,000 |
| 3. தறி உபகரணங்கள் வாங்க | .. | 1,000 |

இத்திட்டத்தின் மூலம் 47,038 தறிகள் பயன் பெற்றுள்ளன.

தறிகள் மற்றும் தறி உபகரணங்களின் விலை ஏற்றத்தை கருத்தில் கொண்டு, இத்திட்டத்தின் கீழ் நிதியுதவியினை அதிகப்படுத்தவும் ஏற்றுமதி இரகங்கள் தயாரிக்கக்கூடிய 110 '' அகல தறிகளுக்கும் புதிதாக நிதியுதவியினை வழங்கவும், மத்திய அரசுக்கு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் நெசவாளர்களுக்கு உயர்ந்த ரகம் நெய்வதற்கு தேவையான பயிற்சி அளிப்பதற்கான செலவினத்தை, இத்திட்டத்தின் கீழ் சேர்ந்து முழுவதும் மானியமாக அளிக்கும் ஒரு கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

## 7. ஜனதா துணி திட்டம் :

ஜனதா துணி உற்பத்தி திட்டமானது கைத்தறி நெசவாளர்களுக்கு தொடர்ந்து தொழில் கொடுக்கவும், கிராமப்புற மக்களுக்கு வாங்கத் தகுந்த விலையில் துணிகள் வழங்கவும் கைத்தறி துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு, இத்திட்டத்தின்கீழ் கணிசமான தொகையினை மானியமாக வழங்குகிறது. 1990–91 ஆம் ஆண்டில் மட்டும் மத்திய அரசு ரூ. 17.90 கோடி மான்யத் தொகை வழங்கியுள்ளது. ஜனதா துணிகள் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் வாயிலாகவும் பொது விநியோக முறை வாயிலாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

தற்போது மத்திய அரசு ஜனதா துணிகளை தேசிய நுகர்வோர் கூட்டுறவு இணையத்தின் மூலமாக விற்பனை செய்யத் தீர்மானித்துள்ளது.

ஜனதா ரக துணி உற்பத்தி பற்றி மறு கவனம் தேவை என்பதால் தரமான மற்றும் நேர்த்தியான வேலைப்பாடும் திறமையும் தொழிலை நவீனப்படுத்துதல் திட்டத்துடன் சேர்ந்து உயர் ரக கைத்தறி துணிகளை உற்பத்தி செய்வது அதன் மூலம் நெசவாளர்கள் தங்கள் வருமானத்தை மேம்படுத்திக் கொள்ளும் வகையில் ஒரு தகுந்த திட்டத்தை உருவாக்குகிறது.

## 8. ஏற்றுமதியாளர்களுக்கு அரசு பரிசு வழங்கும் திட்டம் :

தமிழக அரசு கைத்தறி துணி ஏற்றுமதியாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டும், தமிழகத்தில் உற்பத்தியாகும், கைத்தறி துணிகளின் ஏற்றுமதியை வெளி நாட்டுச் சந்தையில் அதிகரிக்கும் பொருட்டும் சிறந்த ஏற்றுமதியாளர்களுக்கு அரசு, பரிசு வழங்கும் திட்டத்தை 1975 முதல் செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் திறமையான ஏற்றுமதியாளருக்கு பரிசு வழங்க வருடத்திற்கு ரூபாய் 22,500 வீதம் செலவிட அரசு உத்திரவிட்டுள்ளது.

## 9. கைத்தறிகளை விசைத்தறிகளாக மாற்றுவது :

கைத்தறி தொழில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக பெரும்பாலோருக்கு வேலை வாய்ப்பு அளிப்பதுடன் கிராம பொருளாதார முன்னேற்றத்திலும் முக்கிய பங்கேற்கிறது. மேலும் 10 இலட்சத்திற்கு மேலான மக்கள் நேரிடையாகவும், மறைமுகமாகவும் இத்தொழிலின் வாயிலாக பயனடைகிறார்கள். ஆனால் நெசவாளர்களில் ஒரு பகுதியினரே விலை உயர்ந்த ரகங்களை உற்பத்தி செய்வதன் மூலம் வருவாய் அதிகம்





பெற்று, பொருளாதார உயர்வு பெற்றார்கள் என்றும், பெரும்பாலோர் குறைந்த மற்றும் சராசரி வருவாய் பெறுபவர்கள் என்றும் பல ஆய்வுகள் மூலம் தெரிய வருகிறது. இத்தொழில்ன் நிலையற்ற தன்மையால் நெசவாளர்களின் வருவாய் ஈட்டுப் திறன் வருடா வருடம்குறைந்து வருகிறது. எனவே, நெசவாளர்களின் வருவாய் ஈட்டும் திறனை அதிகரிக்கவும், அவர்களது வாழ்க்கை தரத்தை மேம்படச் செய்யவும் ஏதுவாக கைத்தறி நெசவாளர்களை விசைத்தறி நெசவாளர்களாக மாற்றும் நோக்கத்தோடு 37,500 நெசவாளர்களுக்கு (ஒரு நெசவாளருக்கு இரண்டு தறிகள் வீதம்) 75,000 விசைத்தறிகளை அடுத்த 10 ஆண்டு காலத்தில் நபார்டு நிறுவனத்தின் உதவியுடன் அமைத்துக் கொடுக்கும் வகையில் திட்டம் ஒன்றினை அரசு தீர்மானித்துள்ளது.

இந்த சீரிய திட்டத்தின் முதலாம் கட்ட நடவடிக்கை யெடுக்க ரூ. 30 லட்சம் செலவிற்கு இந்த ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ரூ. 42.30 கோடி செலவில் 50,000 கைத்தறிகளை ஐந்து ஆண்டுகளில் நவீனமயமாக்குதல் என்ற மிகப் பெரிய திட்டத்தை அரசு நிறைவேற்ற நினைத்துள்ளது.

## 10. தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டம் :

கைத்தறி நெசவாளர்கள் நலனுக்காக தமிழக அரசினால் ஏற்படுத்தப்பட்ட பல சிறப்பு திட்டங்களில் இத்திட்டமும் ஒன்றாகும். இத்திட்டத்தின் கீழ் ஒரு நெசவாளி பெறும் கூலியில் ரூபாய்க்கு 6 பைசா வீதம் செலுத்த வேண்டும். அதற்கு அரசு 3 பைசா வீதம் வழங்குகிறது. இந்த தொகை அரசுக் கருவூலத்தில் செலுத்தப்பட்டு அத்தொகைக்கு 7 சத வீதம் வட்டி கணக்கிடப்பட்டு வழங்கப்படுகிறது. மேலும், இத்திட்டத்தில் சேர்க்கப்பட்ட நெசவாளர் ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர். திட்டத்தில் இருக்கும்போது உறுப்பினர் இறக்க நேரிடின் அன்னாரின் வாரிசுதாரருக்கு ஆயுள் காப்பீட்டு தொகை உறுப்பினரது சேமிப்பு தொகை ஆகியவை வழங்கப்படுகின்றன. இந்தத் தொகையை ரூ. 10,000-லிருந்து ரூ. 15,000 ஆக உயர்த்த அரசு தீர்மானித்துள்ளது. மேலும் நெசவாளர்களின் வயது வரப்பு 55-லிருந்து 58 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. நாளது தேதியில் 1,25,030 நெசவாளர்கள் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு பயனடைகின்றனர்.

## 11. மத்திய சேம 11. மத்திய சேம நல நிதித் திட்டம் :

இத்திட்டம் மைய அரசால் துவங்கப்பட்ட ஒன்றாகும். இத்திட்டத்தின் கீழ் மைய அரசு தனது பங்காக நெசவாளர்கள் பெறும் கூலித் தொகையில் 3 சதவீதம் ஆனால் ஒருவருக்கு

ரூ. 90 மிகாமல் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டத்தில் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இத்தொகை உறுப்பினர்களின் கணக்கில் வரவு வைக்க அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டு வருகின்றது. 1990—91 ஆம் ஆண்டில் ரூ. 42.13 லட்சம் இத்திட்டத்தின் கீழ் செலவழிக்கப்பட்டுள்ளது.

## ஒய்வூதியத் திட்டம்.

இறந்த நெசவாளர்களின் குடும்பங்களுக்கு மாதாந்திர ஒய்வூதியம் கொடுக்கும் திட்டத்தினை இவ்வரசு அறிவித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக உள்ள ஒரு நெசவாளர் இறக்க நேரிட்டால், அவருடைய குடும்பத்திற்கு ஒய்வூதியமாக மாதம் ஒன்றுக்கு ரூ. 250 வீதம் வழங்க உத்தேசித்துள்ளது. இவ் ஒய்வூதியம் 10 ஆண்டு காலத்திற்கு வழங்கப்படுவதின் மூலம் இறந்த நெசவாளரின் வாரிசுதாரர்கள் வாழ்க்கையில் முன்னேற்றமடையும் வழிகோலாக அமையும்.

## 12. நெசவாளர் வீட்டு வசதி மற்றும் தொழிற்கூடத் திட்டம் :

நெசவாளர்களுக்கு அவர்களது வாழ்க்கை தரத்தை உயர்த்தும் வகையில் அளிக்கப்படும் மற்றொரு நல்வாழ்வு திட்டம் நெசவாளர் வீட்டு வசதி மற்றும் தொழிற்கூட திட்டமாகும்.

இத்திட்டத்தின் கீழ் நெசவாளர் உறுப்பினர்கள் குறைந்த பட்சம் 50 உறுப்பினர்களுக்கு வீட்டு வசதி அளிக்கும் வகையில் நிலத்தை கொள்முதல் செய்து சங்கத்தின் பெயரில் பதிவு செய்ய வேண்டும். இத் திட்டத்திற்கு கீழ்க்கண்டவாறு நிதி வசதி அளிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| ஒரு வீட்டிற்கான மதிப்பீடு | ரூபாய். 25,000 |
| ஹட்கோ கடன் | ரூபாய் 15,000 |
| மத்திய அரசு மான்யம் | ரூபாய் 5,000 |
| மாநில அரசு மான்யம் | ரூபாய் 5,000 |
| மொத்தம் | ரூபாய் 50,000 |

மத்திய அரசின் அங்கீகாரத்தை எதிர்நோக்கி உள்ளது.

மேற்படி நிதி வசதிப்படி 1990-91-ம் ஆண்டில் 2,000 தொழிற்கூடத்துடன் கூடிய வீடுகள் கட்டுமானப்பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. மாநில அரசு ஹட்கோ நிறுவனத்திற்கு நிதி உதவி அளித்தலுக்கு காப்புறுதி அளிக்கிறது.



(1) இத்திட்டத்தினை அமுல்படுத்துவதில் முக்கிய தடையாக உள்ளது நெசவாளரின் நிதி மற்றும் இட வசதிகேற்றப்படி தகுதியான நிலம் கிடைக்காததே ஆகும்.

(2) தற்போது கட்டுமானப் பொருட்களில் ஏற்பட்டுள்ள விலை ஏற்றத்தினால் மேற்படி நிதி வசதியினை கொண்டு கட்டுமானப் பணியினை முடிப்பது மிகக் கடினமான செயலாக உள்ளது.

ஆனால் இருக்கும் குறைபாடுகளை களைந்து வீடு கட்டுவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. 1991-92-ல் ரூபாய் 5 கோடி மொத்த செலவில் 2,000 வீடுகள் கட்டுவதற்கு கருதப்பட்டுள்ளது.

## 13. பள்ளிச் சிறார்களுக்கு இலவச சீருடை வழங்கும் திட்டம்

1 முதல் 8-ம் வகுப்பு வரை பயிலும் பள்ளிச் சிறார்களுக்கு ஒரு செட் இலவச சீருடை வழங்கும் திட்டம் தமிழ்நாடு அரசினால் 1985-86 முதல் துவங்கப்பட்டது. இத்திட்டம் கைத்தறி மற்றும் துணிநூல் துறை, கல்வித்துறை மற்றும் சமூக நலத்துறை ஆகியவைகளின் மூலம் செயல்படுத்தப்படுகின்றது. இத்திட்டத்திற்காக வழங்கப்படும் சீருடை துணிகளை கைத்தறி துறை வழங்குகின்றது. அளவு மற்றும் அதற்கான செலவினத்தை கணக்கிடும் பணியை கல்வித்துறை ஏற்கின்றது. வழங்கப்படும். துணி ரகங்களை சீருடையாக தைத்து வழங்கும் பணியை சமூக நலத்துறை ஏற்று திட்டம் செயல்பட்டு வருகின்றது. 1990-91 ஆண்டிற்கு 122.05 லட்ச மீட்டர் துணி ரகங்கள் ரூபாய் 14.26 கோடி மதிப்புக்கு இத்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டது.

## 14. நெசவாளர் நல்வாழ்வு அரசு அறக்கட்டளை :

1986-ம் ஆண்டு ' கோவாப்டெக்ஸின் ' பொன் விழாக் கொண்டாட்டத்தின்போது, கைத்தறி நெசவாளர்களின் நல்வாழ்விற்காக எம். ஜி. ஆர். கைத்தறி நெசவாளர்கள் நல்வாழ்வு அறக்கட்டளை ஒன்று அமைக்கப்பட்டது.

கோ ஆப்டெக்ஸ் மற்றும் இதர பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் இந்த அறக்கட்டளையை நிறுவ பொதுநிதி மற்றும் பொது நல நிதியிலிருந்து கணிசமான தொகையைக் கொடுத்துதவியுள்ளன. இவ்வாறு பெறப்பட்ட தொகை கீழ்க்கண்டவாறு சேமிப்பு கணக்கில் வைக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு போக்குவரத்துக் கழகம், சென்னை. (கால இட்டு வைப்பு) | ரூ. 7.50 இலட்சம். |
| 2. | தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியின் சேமிப்பு கணக்கு. (31—5—1991-ல்) | ரூ. 2.67 இலட்சம் |

[1991 செப்டம்பர் 20

மேற்படி அறக்கட்டளை, 1989-ம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் நெசவாளர் நல்வாழ்வு அரசு அறக்கட்டளை என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

நெசவாளர்களின் வாரிசுகளுக்கு மேல்படிப்பிற்காக இந்த அறக்கட்டளை உதவித் தொகைகளை வழங்குகிறது. 1986-ல் கொண்டு வரப்பட்ட இத்திட்டத்தின் கீழ் மருத்துவம், பொறி யியல், விஞ்ஞானம், பட்டயக்கணக்கு மற்றும் பல கல்விக்காக உதவித் தொகை வழங்கப்படுகிறது. இதுவரை நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்களின் வாரிசுகள் 60 பேர் இத்திட்டத்தின் கீழ் பயன் அடைந்துள்ளனர்.

## 15. தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கம் :

பல நெசவாளர்கள் சொந்தமாக தறியில்லாத காரணத்தால் கூலிக்காக வேலை செய்கிறார்கள். இவர்களது இந்த நிலையை மாற்ற அரசு தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களை தொடங்கியது. இத்தகைய சங்கங்களில் தறி மற்றும் மூலப் பொருட்கள் நெசவாளர்களுக்கு வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் 190 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கங் கள் உள்ளன. (31-3-1991-ல்) இவற்றில் 29 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் பிரத்யேகமாக ஆதி திரா விடர்களுக்காகவும், 11 சங்கங்கள் பெண்களுக்காகவும் ஏற் படுத்தப்பட்டவையாகும்.

## 16. "நொராட்" திட்டத்தின் கீழ் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள்.

கிராமப்புறங்களிலுள்ள மகளிர்க்கு வேலை வாய்ப்பு அதிக பட்சமாக வழங்க மாநில அரசின் கொள்கைப்படி 10 தொழி லியல் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மகளிர்க்காக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு கழக "நொராட்" திட்டத்தின் கீழ் மான்ய மாக கீழ்க்கண்டவாறு நிதியுதவி பெறப்பட்டு இத் திட்டத்தினை செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

| | | | |
|---|---|---|---|
| 1. | நிலம் கொள்முதல் செய்ய | ரூ. | 50,000 |
| 2. | கட்டிடம் கட்ட | ரூ. | 5,50,000 |
| 3. | தறி மற்றும் உபகரணங்கள் வாங்க | ரூ. | 2,50,000 |
| 4. | பயிற்சி | ரூ. | 1,50,000 |
| | மொத்தம் | ரூ. | 10,00,000 |

31—5—1991-ல் இந்த தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் 987 பெண் நெசவாளிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர்



1991 செப்டம்பர் 20]

## 17. பட்டு நெசவுத் தொழில்.

தமிழகம் பட்டு உற்பத்திக்கு மிகவும் பிரசித்தி பெற்ற மாநிலமாகும். அதிலும் குறிப்பாக காஞ்சிபுரம், கும்பகோணம், சேலம் போன்ற நகரங்களில் உற்பத்தி செய்யப்படும் பட்டு இரகங்கள் நமது நாட்டிலேயே வியாபார ரீதியில் பிரதான இடத்தை வகிக்கின்றன. 1990-91-ம் ஆண்டில் புதிதாகத் துவக்கப்பட்ட பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு ரூ. 1.77 இலட்சம் மான்யம் மற்றும் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1990-91-ஆம் ஆண்டில் பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் உற்பத்தி விபரம். | மீ. 27.32 இலட்சம்<br>மதிப்பு ரூ. 6,458.37 இலட்சம் |
| விற்பனை | மீ. 26.78 இலட்சம்<br>மதிப்பு ரூ. 8,060.24 இலட்சம் |

## 18. சென்னிமலை நூல் முறுக்கேற்றும் பிரிவு.

சென்னிமலை பகுதியில் உள்ள நெசவாளர் கூட்டுறவு சங்கங் களுக்கு 2/17 மற்றும் 2/10 நெ. நூல் தடையின்றி கிடைக்கும் நோக்கத்துடன் 1990-91-ம் ஆண்டில் சென்னிமலை நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் நூல் முறுக்கேற்றும் பிரிவு அமைக்க அரசு ஆணை பெறப்பட்டுள்ளது.

சென்னிமலை அருகில் உள்ள பெரியார் மாவட்ட கூட்டுறவு நூற்பாலையிலிருந்து 20-ம் நெம்பர் கோன் நூலை பெற்று முறுக்கேற்றி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. முறுக்கேற்றும் நூலுக்கு மத்திய கலால் வரியிலிருந்து, இது கைத்தறிக்கு மட்டும் உபயோகப் படுத்தப்படுவதால் விதிவிலக்கு அளிக்க மத்திய அரசிடம் கோரப்பட்டுள்ளது.

திட்ட மொத்த தொகை ரூ. 22 இலட்சத்தில் 1990 டிசம்பரில் ரூ. 19.00 இலட்சம் அரசால் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நூல் முறுக்கேற்றும் பிரிவு 3—6—1991-ல் தனது சோதனை உற்பத்தியை துவங்கியுள்ளது.

## 19. சங்கரன்கோவில் கைத்தறி வடிவமைப்பு மற்றும் சேவா மையம்.

தமிழ்நாட்டின் தென்பகுதியில் உள்ள நெசவாளர்களுக்கு நவீன வடிவமைக்கும் பயிற்சி அளிக்கவும் நடைமுறை சந்தைக் கேற்ற வடிவங்களை அமைக்கவும் சங்கரன்கோவில் வடி வமைப்பு மற்றும் சேவா மையத்தை ரூ.4,862 லட்சம் திட்டத்தில்

துவங்க (தொடரா செலவு ரூ. 1.75 இலட்சம், ரூ. 3.112 இலட்சம் தொடரும் செலவு) 3—7—1990ல் அரசால் ஒப்புதலளிக்கப்பட்டது.

இந்த மையம் தொடங்கப்பட்டு சேலை, படுக்கை விரிப்பு, துண்டுகளுக்கான புதிய வடிவமைப்புக்களை தயாரித்துள்ளது. மேலும் நெசவாளர்களுக்கு புதிய ரக வடிவங்கள் உற்பத்தி குறித்தும் பயிற்சி அளித்து வருகிறது. அரசிடமிருந்து திட்டத் தொகை அனைத்தையும் பெற்று முழு அளவில் செயல்பட உள்ளது.

## 20. தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் .

தனியார் துறையிலுள்ள கைத்தறிகளை மேம்படுத்தவும், உதவுவதற்கும் மற்றும் இதன் வளர்ச்சிக்கு துணைபுரியும் பொருட்டு தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் நிறுவப்பட்டது. இக்கழகத்தின் தற்போதைய பங்கு மூலதனம் ரூ. 400.02 இலட்சம் ஆகும். அதில் அரசின் பங்கு ரூ. 267 இலட்சம் ஆகும். 1990–91 ஆண்டில், கடன் வழங்குவதற்காக நிர்ணயிக்கப்பட்ட இலக்கு ரூ. 450 இலட்சத்தில், மேற்படி கழகம் ரூ. 376.81 இலட்சங்கள் கடனாக தனியார் துறையிலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கியது. மேலும் இக்கழகம் ரூ. 29.33 இலட்சத்திற்கு வங்கிகளின் மூலமாக நூல் விற்பனை செய்துள்ளது. மேலும் ரூ. 6.11 இலட்சத்திற்கு கைத்தறி ஆடைகளை பொருட்காட்சி மூலம் விற்பனை செய்துள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில் இக்கழகம் ஈட்டியுள்ள லாபம் கீழே அளிக்கப்பட்டுள்ளது :—

| வருடம். | லாபம் (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1989–90 | 5.83 |
| 1990–91 | 7.80 |
| ஜூலை 91 வரையில் | 2.25 |

1991–92இல் இக்கழகம், ரூ. 450 இலட்சம் கடனாக வழங் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## 21. தமிழ்நாடு சரிகை நிறுவனம் :

தமிழ்நாடு சரிகை நிறுவனம், 1971 ஆம் ஆண்டு டிசம்பரில் பொது நிறுவனமாக பதிவு செய்யப்பட்டு செயல்பட்டு வருகிறது. நல்ல தரமான சரிகையை உற்பத்தி செய்து



சூரத்தின் சரிகை விலையைவிட குறைந்த நியாயமான விலையில், பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு விற்பனை செய்ததை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு இந்நிறுவனம் தனது பணியை செய்து வருகிறது. கூட்டுறவுத் துறையில் உள்ள பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் தேவையில், 10 விழுக் காட்டினை இந்நிறுவனம் பூர்த்தி செய்கிறது. 1990–91 இல் இந்நிறுவனம் 16,002 மார்க்குகள் சரிகை உற்பத்தி செய்து, இவற்றுள் 15,647 மார்க்குகள் சரிகையை ரூ. 341.62 இலட்சத்திற்கு விற்பனை செய்துள்ளது. 1991–92 ஆண்டிற்கு 22,600 மார்க்குகள் சரிகை உற்பத்தி செய்வதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டில் ரூ. 13 இலட்சம் செலவில் 12 நூற்பு இயந்திரங்கள், மற்றும் 4 வெள்ளி இழை தட்டை இயந்திரங்கள் நிறுவி வெள்ளி உற்பத்தியைப் பெருக்க தீர்மானித்துள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் இந்நிறுவனத்தின் உற்பத்தித் திறன் மற்றும் விற்பனை பற்றிய விவரம் கீழே அளிக்கப்பட்டுள்ளது :—

| வருடம். | உற்பத்தி மார்க்குகள். | சரிகை விற்பனை மார்க்குகள். | விற்பனைத் தொகை. | நிகர லாபம். |
|---|---|---|---|---|
| (1) | (2] | (3] | (4) | (5) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1989–90 | 14,494 | 14,679 | 318.09 | 6.20 |
| 1990–91 | 16,002 | 15,647 | 341.62 | 6.13(*) |

## 22. கூட்டுறவு கைத்தறி வளர்ச்சித் திட்டங்கள்.

பெரும்பான்மையான நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்துவதற்கும், ஏற்றுமதி துணி விற்பனையினை ஊக்குவிக்கும் நோக்கத்துடனும் 4 தீவிர கைத்தறி வளர்ச்சி திட்டங்கள் மற்றும் 2 கைத்தறி ஏற்றுமதி உற்பத்தி திட்டங்கள் முறையே காஞ்சிபுரம், சேலம், ஈரோடு, மதுரை, கரூர், குறிஞ்சிப்பாடி ஆகிய இடங்களில் மைய மற்றும் மாநில அரசு நிதியுதவியுடன் இயங்குகின்றன. இத்திட்டங்கள் வாயிலாக

*ரிக்கு முற்பட்டது.

மொத்தம் 15,711 நெசவாளர்கள் பயன் பெறுகின்றனர். இத்திட்டங்களின் உற்பத்தி மற்றும் விற்பனை விவரங்கள் கீழ் வருமாறு :

| வரிசை எண்ணும் பெயரும். | | பங்கு மூலதனம் (ரூபாய் இலட்சத்தில்). | தறிகளின் எண்ணிக்கை 31-3-1991. | உற்பத்தி மீட்டர். |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| 1 காஞ்சிபுரம் | .. | 61.25 | 4,668 | 20.02 |
| 2 ஈரோடு | .. | 60.85 | 1,288 | 13.97 |
| 3 சேலம் | .. | 45.93 | 4,218 | 12,07 |
| 4 மதுரை | .. | 29.87 | 2,840 | 15.14 |
| 5 கரூர் | .. | 24.35 | 1,168 | 8.76 |
| 6 குறிஞ்சிப்பாடி | .. | 19.10 | 1,529 | 5.16 |

| வரிசை எண்ணும் பெயரும். | | உற்பத்தி மதிப்பு. | விற்பனை மீட்டர். | விற்பனை மதிப்பு. |
|---|---|---|---|---|
| (1) | | (5) | (6) | (7) |
| | | (இலட்சத்தில்.) | | |
| 1 காஞ்சிபுரம் | .. | 213.97 | 15.06 | 185.29 |
| 2 ஈரோடு | .. | 217.70 | 12.60 | 216.12 |
| 3 சேலம் | .. | 130.78 | 10.41 | 124.89 |
| 4 மதுரை | .. | 184.20 | 11.41 | 162.91 |
| 5 கரூர் | .. | 163.45 | 9.05 | 165.54 |
| 6 குறிஞ்சிப்பாடி | .. | 100.36 | 4.98 | 114.23 |

தறிகளை நவீனப்படுத்துதல் மற்றும் பழைய ரகங்களுக்கு பதிலாக புது வகையான ரகங்களை அறிமுகப்படுத்துதல் ஆகியன இத்திட்டங்களின் முக்கிய அம்சமாகும். சேலைகள், லுங்கிகள், சட்டை துணிகள், கைக்குட்டைகள், துண்டுகள், திரைச்சீலைகள், படுக்கை விரிப்புகள் ஆகியன பொதுவாக இந்தத் திட்டங்களினால் உற்பத்தி செய்யப்படுகின்றன. காஞ்சிபுரம் கூட்டுறவு தீவிர கைத்தறி வளர்ச்சி திட்டம், காஞ்சி காட்டன் சேலைகள், பட்டு மற்றும் பருத்தி



சேலைகள், கடிதார் வகைகள், அக்ரலிக் போர்வைகள் ஆகியவைகளை உற்பத்தி செய்கின்றது. உற்பத்தி வகையை, வாங்கும் மக்களின் விருப்பத்திற்கு ஏற்ப மாற்றும் முகத்தான் இத்திட்டம் 1990–91 ஆம் ஆண்டில் பெங்கால் மற்றும் கலாஷேத்ரா சேலைகள் உற்பத்தியினை மேற்கொண்டுள்ளது. மேலும் ஈரோடு கூட்டுறவு தீவிர கைத்தறி வளர்ச்சி திட்டமும் மாற்று வகையான உற்பத்தி திட்டத்தின் அடிப்படையில் புதிய வடிவில் படுக்கை விரிப்புகள், பட்டு மற்றும் பருத்தி இணைந்த படுக்கை விரிப்புகள், பெங்கால் பருத்தி சேலைகள் ஆகியவற்றின் உற்பத்தியினை நெசவாளர் சேவா மையத்தின் தொழில் நுட்ப உதவியுடன் மேற்கொண்டுள்ளது.

இதுகாறும் வழக்கமான மற்றும் விலை குறைவான துணி வகைகளையே உற்பத்தி செய்து வந்த சேலம் கூட்டுறவு தீவிர கைத்தறி வளர்ச்சி திட்டம், தற்போது மலிவு விலை பட்டு சேலைகள் கலாஷேத்ரா வடிவு சேலைகள் ஆகியவற்றினை முக்கியமாக தினக்கூலி பெறும் திறனை உயர்த்துவதற்கும், உடனுக்குடன் விற்பதற்கும் ஏற்ற வகையில் திட்ட உற்பத்தி மாற்றப்பட்டுள்ளது.

மதுரை மற்றும் கரூர் திட்டங்கள் பெரும்பான்மையாக ஏற்றுமதிக்கு உகந்த படுக்கை விரிப்புகள், நாப்கின்ஸ், டெரி டவல்கள் ரகங்களை தயார் செய்கின்றன. அதிக விலை மதிப்புள்ளதும் விலை மதிப்புள்ள பொருட்களையே வாங்குபவர்களை கவரும் வண்ணம் ஏற்றுமதி உகந்த துணி வகைகளை உற்பத்தி செய்ய ஏதுவாக மிக அகலமான புதிய தறிகளை நடப்பு நிதியாண்டில் இத்திட்டங்களில் நிறுவப்பட உள்ளது.

மின்சார கட்டணத்தை குறைத்து அதன் மூலமாக உற்பத்தி செலவை குறைக்கும் வகையில் ''சோலார் கியர் பாய்லர்'' எனும் சூரிய ஒளியில் மின்சாரம் பெறும் இயந்திரத்தை குறிஞ்சிப்பாடி திட்டத்தில் புவனகிரி சாயத் தொழிற்சாலையில், புதுடெல்லி, இந்திய தொழில் மையத்திடம் இருந்து இலவசமாக பெற்று நிறுவி, செயல்பட்டு வருகின்றது.

## 23. தமிழ்நாடு கூட்டுறவு துணி நூல் பதனிடும் ஆலை, ஈரோடு.

கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், தனியார் துறையிலுள்ள கைத்தறியாளர்கள் மற்றும் காகித துறையால் உபயோகப்படுத்தப்படும் நூல் மற்றும் துணிகளுக்கு சாயம் ஏற்றல் மற்றும் பதனிடும் நோக்கத்துடன் 1973 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு துணி நூல் பதனிடும் ஆலை கூட்டுறவுத் துறையின் கீழ் துவக்கப்பட்டது. 333 தொழிலாளர்கள் இந்த ஆலையில் பணிபுரிந்து வருகிறார்கள்.

[1991 செப்டம்பர் 20

கடந்த மூன்று ஆண்டுகளில் இந்த ஆலையின் செயலாக்கம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:—

(கி.கி./மீட்டர்/ரூபாய் இலட்சத்தில்.)

| விபரம். | 1988-89. | 1989-90. | 1990-91 |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| வெளுத்தல் | 14.31 | 9.87 | 9.67 |
| சாயமிடல் | 10.26 | 9.11 | 9.36 |
| அச்சிடல் (மீட்டர்) | 9.20 | 9.90 | 4.84 |
| நூல் சாயமிடல்(கி.கி.) | 2.57 | 2.25 | 2.16 |
| பாலியெஸ்டர் | 5.66 | 4.89 | 6.09 |
| நிகரலாபம் (ரூபாய் லட்சத்தில்) | 24.73 | 1.93 | 28.02 (உத்தேசிக்கப் பட்டது.) |

## 24. தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிட். (கோ-ஆப்டெக்ஸ்).

''கோ-ஆப்டெக்ஸ்'', என புகழ் பெற்று விளங்கும் தமிழ் நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் அனைத்து பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கும் தலைமை சங்கம் ஆகும். அதில் தமிழகத்தில் உள்ள அனைத்து பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களும் அங்கம் வகிக்கின்றன. இச்சங்கமானது 1935 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்குத் தேவையான மூலப் பொருட்களை கொள் முதல் செய்து விநியோகிப்பதுடன் அவைகள் உற்பத்தி செய்யும் பெரும்பாலான கைத்தறி துணிகளை விற்பனை செய்கிறது.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் தனது கடந்த காலத்தில் கைத் தறி துணி விற்பனையில் நல்ல மேம்பாடு அடைந்துள்ளது. மேலும் இக் கைத்தறித் துணிகள் தமிழகத்தில் உள்ள 277 கிளை விற்பனை நிலையங்கள் மூலமாகவும் வெளி மாநிலங்களில் உள்ள 183 கிளை விற்பனை நிலையங்கள் வாயிலாகவும் விற்பனை செய்யப்படுகின்றன.



1991 செப்டம்பர் 20]

கடந்த மூன்றாண்டுகளில் கோ-ஆப்டெக்ஸின் கொள்முதல் மற்றும் விற்பனை விவரங்கள் பின்வருமாறு:—

| வருடம். | கொள் முதல். | விற்பனை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (மதிப்பு கோடியில்.) | |
| 1988-89 .. | 72.55 | 100.60 |
| 1989-90 .. | 104.00 | 170.00 |
| 1990-91 .. | 95.03 | 135.27 |

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் பட்டு விற்பனைக்கென, பிரத்தியேகமாக சென்னை, சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, பெங்களூர் மற்றும் ஹைதராபாத் போன்ற இடங்களில் கிளை விற்பனைநிலையங்களை ஆரம்பித்துள்ளது. 1990–91 ஆம் ஆண்டில் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் பட்டு விற்பனைக் கென, மதுரை மற்றும் தஞ்சாவூர் ஆகிய நகரங்களில் புதிதாக கிளை விற்பனை நிலையங்களை துவக்கியுள்ளது. கோ-ஆப் டெக்ஸ் நிறுவனம் 1990-91 ஆம் ஆண்டில் ரூ. 29 கோடி மதிப் புள்ள பட்டுத் துணிகளை விற்பனை செய்துள்ளது. மேலும் 1990–91 ஆம் ஆண்டில் திரைச் சீலைகள் மற்றும் தரை விரிப்புகள் போன்ற அலங்காரப் பொருட்கள், விற்பனைக்கென பிரத்யேக மாக சென்னையில் விற்பனை நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தனியார் துணிக் கடைகளைப் போல், வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கேற்ப கோ-ஆப்டெக்ஸின் விற்பனை நிலையங் களை நவீனப் படுத்தியதின் விளைவாக, கோ-ஆப்டெக்ஸ் விற்பனையில் உன்னத நிலையை அடைந்துள்ளது. அதற்கான நிதியுதவி, தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் மற்றும் தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கியிடமிருந்து பெறப் படுகின்றது. 1990-91 ஆம் ஆண்டில் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் 17 கிளை விற்பனை நிலையங்களை நவீனப்படுத்தியுள்ளது.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம், தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் நிதியுதவியுடன் திருநெல்வேலி, மதுரை, சேலம், கடலூர், கோயம்புத்தூர் மற்றும் சென்னை ஆகிய இடங்களில் ரூ. 241.24 லட்சம் மதிப்பில் 6 கிட்டங்கிகள் கட்டப்பட்டு வருகின்றன. கட்டுமானப் பணிகள் விரைந்து செயல்பட்டு வருகின்றன.

கோ-ஆப்டெக்சின் நிரந்தர விற்பனை காட்சியரங்கு.

பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் தேங்கிக் கிடக்கும் துணிகளை விற்பனை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் கோ-ஆப்டெக்ஸ் ஆண்டுதோறும் ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் ரூ. 19 இலட்சம் செலவில் தற்காலிக விற்பனைக் கூடங்களை தமது மைதானத்தில் நிறுவி கைத்தறிக் கண்காட்சியை நடத்தி வந்தது. ரூ. 61 இலட்சம் செலவில் ஒரு நிரந்தர விற்பனைக் காட்சியரங்கு கட்டப்பட்டு இதனை கோ-ஆப்டெக்ஸ் தனது நிரந்தர சொத்தாக ஆக்கிக் கொண்டு விட்டது. இந்த நிரந்தர விற்பனை காட்சியரங்குக்கு பத்மஸ்ரீ நாச்சிமுத்து கைத்தறி திடல் எனப் பெயரிடப்பட்டுள்ளது. திரு. நாச்சிமுத்து அவர்கள் 1953 ஆம் ஆண்டு முதல் 1969 ஆம் ஆண்டு வரை கோ-ஆப்டெக்ஸ் தலைவராகப் பணிபுரிந்த காலத்தில் இந்த கண்காட்சித் திடல் வாங்கப்பட்டது. தமிழ்நாட்டில் கைத்தறி வளர்ச்சியின் முன்னேற்றத்திற்கு இவர் தமது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்துள்ளார்.

25. தமிழகத்தின் தொழிலியல் வளர்ச்சிக்கு ஜவுளித் துறையே முன்னோடியாகும். இதில் தனிச் சிறப்பாக இருப்பது என்னவென்றால் தமிழகத்தில் அதிகமாக நூற்பாலைகள் காணப்படுவதுதான். அதிலும் பஞ்சு நூற்பாலைகளே அதிகமாகும். இந்தியாவில் உள்ள 1051 நூற்பு ஆலைகளில் தமிழகத்தில் மட்டுமே 451 நூற்பு ஆலைகள் உள்ளன. இதன் மொத்த கதிர்கள் 7.6 மில்லியன் ஆகும். இது இந்தியாவின் மொத்த கதிர்களில் 28 சதவீதம் ஆகும். மேலும். 2.2 இலட்சம் தொழிலாளர்கள் இதில் ஈடுபட்டுள்ளனர்.

26. கூட்டுறவு நூற்பாலைகள் :

தமிழக அரசால் கைத்தறி நெசவாளர்களுக்கு, குறிப்பாக கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள நெசவாளர்களுக்கு தரமான நூல் ரகங்கள் நியாயமான விலையில் கிடைக்கும் வகையில் 1958-லிருந்து 1984 ஆம் ஆண்டுகளுக்கு இடையில் 18 கூட்டுறவு நூற்பாலைகள் அமைக்கப்பட்டன. தமிழ்நாட்டில் உள்ள 18 கூட்டுறவு நூற்பாலைகள் மொத்தம் 4.69 கதிர்களுடன் சுமார் 12,000 தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து, மாதத்திற்கு சுமார் 28.62 இலட்சம் கிலோ நூல் (40-ம் நெ.) மாற்றப்பட்டுள்ளது. சிட்ட நூல் மற்றும் கோன் நூல் வகையில் உற்பத்தி செய்து வருகின்றன.

1990-91 ஆம் ஆண்டில் கூட்டுறவு நூற்பாலைகளின் செயல்பாடு:

1990-91-ம் ஆண்டில் 18 கூட்டுறவு நூற்பாலைகள் செயல்பாடு பற்றி கீழே கொடுக்கப்பட்டுள்ளன.



சில கூட்டுறவு நூற்பாலைகளில், வேலை நிறுத்தங்கள் இருந்த போதிலும், 1990-91 ஆம் ஆண்டில் சராசரி இயந்திரங்களை உபயோகித்தல் 91.73 விழுக்காடு வரை இருந்தது. சராசரி நூற்பு உற்பத்தி இந்த ஆண்டில் 77.04 கிராம் வரை இருந்தது. எல்லா கூட்டுறவு நூற்பாலைகளின் நூல் உற்பத்தி 343.48 இலட்சம் கிலோ கிராம் (40-க்கு மாற்றப்பட்டது) அளவுக்கு இருந்தது.

உற்பத்தி மதிப்பு, இந்த ஆண்டில் ரூ. 16,463.53 இலட்சமாகும். விற்பனையின் மதிப்பு ரூ. 15,776.91 இலட்சமாகும்.

எல்லா ஆலைகளும் சேர்ந்து மொத்தமாக ரூ. 2:322.26 இலட்சம் அளவிற்கு மொத்த இலாபம் ஈட்டியுள்ளன. ஆனால், நிகர இலாபம், இந்த ஆண்டில் ரூ. 921.85 இலட்சமாகும். தென்னாற்காடு, வட ஆற்காடு மற்றும் மிசிரியர் கூட்டுறவு நூற்பாலைகள் தவிர மற்ற எல்லா நூற்பாலைகளும் நிகர இலாபம் ஈட்டியுள்ளன.

31-3-1990 வரை, எல்லா ஆலைகளும், சுமார் ரூ. (—) 5,178.53 இலட்சத்திலிருந்து ரூ.(—) 4,510.50 இலட்சத்திற்கு கூடுதல் இழப்பு அடைந்துள்ளன. தென்னிந்திய மற்றும் கன்னியாகுமரி கூட்டுறவு நூற்பாலைகள் கூடுதல் இழப்பினை இந்த ஆண்டு சரிப்படுத்தியுள்ளன. இவ் நூற்பாலைகளின் சாதனை விபரங்கள் இணைப்பு 1-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

27. கூட்டுறவு நூற்பாலைகள் நவீனப்படுத்துதல்

1958-ம் ஆண்டிற்கும், 1963-ம் ஆண்டிற்கும் இடையில் நிறுவப்பட்ட 12 கூட்டுறவு நூற்பாலைகளின் இயந்திரங்கள் தேய்ந்து பழுதடைந்து உள்ளதால், அக்கூட்டுறவு நூற்பாலைகளில் தரமான நூலை போதுமான அளவு உற்பத்தி செய்ய மேற்படி கூட்டுறவு நூற்பாலைகள் ரூ. 26.38 கோடி செலவில் நவீனப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. ''சித்ரா'', கோயம்புத்தூர் நிறுவனத்தின் பரிந்துரையின் பேரில் இந்திய தொழில் வளர்ச்சி வங்கிக்கு பிரேரணைகள் அனுப்பப்பட்டுள்ளன.

தமிழக அரசு கூட்டுறவு நூற்பாலைகள் நவீனப்படுத்தவும், புனரமைப்பிற்கும் ரூ. 7 கோடி அனுமதி வழங்கியுள்ளது.

28. கூட்டுறவு நூற்பாலைகள் விரிவாக்கம்:

1982 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இராமநாதபுரம், தர்மபுரி, பாரதி மற்றும் அண்ணா கூட்டுறவு நூற்பாலைகள் தற்சமயம் உள்ள 75,000 கதிர்கள் 1,50,000 கதிர்களாக ரூ. 31 கோடி செலவில் விரிவாக்கம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இவ் விரிவாக்கம் செய்யப்படுவதால் கூடுதலாக 1,000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்க வழிவகை உள்ளது. 4 பிராந்திய நூல் பரிசோதனை நிலையங்கள் ஒவ்வொன்றும் ரூ.10.45 இலட்சம் மதிப்பில் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## 29. மூடப்பட்ட நூற்பாலைகள் மீண்டும் திறந்து நடத்தல்:

தமிழக அரசு, மூடப்பட்ட நூற்பாலைகள் அனைத்தும் மீண்டும் திறக்க அனைத்து நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதற்காக பல்வேறு சலுகைகளை தமிழக அரசு அளித்து வருகிறது. இருந்தபோதிலும், இன்னும் சில நூற்பாலைகள் தொழிலாளர் பிரச்சினைகள், நிதி நெருக்கடி, நிர்வாகத் திறமை குறைவுபோன்ற பல்வேறு காரணங்களினால், மூடப்பட்டு உள்ளன. நூற்பாலைகள் வலிவுள்ள நூற்பாலைகள் என அறியப்பட்டு, நூற்பாலையின் நிர்வாகங்கள் நூற்பாலையினை மீண்டும் திறந்து நடத்த முன்வரும் பட்சத்தில் தமிழக அரசு—

(அ) மின்வெட்டிலிருந்து விலக்கு;

(ஆ) விற்பனை வரி செலுத்துவதை தள்ளி வைத்தல்;

போன்ற சலுகைகளை அளித்து வருகிறது. அரசு சலுகை பெற்ற மூடப்பட்ட நூற்பாலைகளுக்கு நிதி நிறுவனங்களும் நடைமுதல் மூலதன தேவைகளை அளிக்கின்றன:—

பின்வரும் நூற்பாலைகள், தமிழ்நாடு துயர்துடைப்பு சட்டம் 1969 (சிறப்பு விதிகள்)-ன்கீழ் நிவாரணம் பெறும் நிறுவனமாக அறிவிக்கப்பட்டுள்ளன.

1. ஜோதி மில்ஸ், கோவை.

2. மகாலட்சுமி நூற்பாலை, மதுரை.

3. மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், மேட்டூர்.

4. ருக்மணி மில்ஸ் லிமிடெட், சிலைமான்.

தமிழ்நாட்டிலுள்ள 21 நூற்பாலைகளுக்கு, மின்வெட்டிலிருந்து விலக்கும், விற்பனை வரி தொகையினை செலுத்துவதை மூன்று ஆண்டுகளுக்கு தள்ளி வைத்தல் ஆகிய சலுகைகளை தமிழக அரசால் அளிக்கப்பட்டது.

பின்வரும் நூற்பாலைகள் கூட்டு நிர்வாகத்தின்கீழ், நூற்பாலையின் உரிமையாளர்களுடன் ஏற்பட்ட உடன்படிக்கையின் விளைவாக தமிழக அரசால் ஏற்கப்பட்டு மீண்டும் திறக்கப்பட்டன:—

1. மகாலட்சுமி நூற்பாலை, மதுரை.

2. மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், மேட்டூர்.



பின்வரும் நூற்பாலைகளுக்கு தமிழக அரசால் பொறுப்புறுதி வழங்கப்பட்டுள்ளன :—

1. காவேரி ஸ்பின்னிங் அண்ட் வீவிங் மில்ஸ் லிமிடெட், புதுக்கோட்டை.

2. தமிழ்நாடு துணி நூல் கழகம்.

3. பின்னி லிமிடெட், சென்னை.

கோவையிலுள்ள, ஸ்ரீஹரி ஆலை 22—10—1986 அன்று கூட்டு நிர்வாகத்தின் கீழ், ஏற்றுக்கொள்ளப்பட்டது. அவ்வாலைக்கு ரூ. 30 இலட்சத்திற்கு அரசுபொறுப்புறுதி அளித்தது. ஆலையின் உரிமையாளர்கள், ஆலையை திரும்ப தங்களிடம் ஒப்படைக்குமாறு தொடர்ந்து கோரிக்கை விடுத்த வண்ணம் இருந்தனர். அவர்களின் கோரிக்கையை அரசு பரிசீலித்து, 11–8–1991 முதல் ஆலையின் கூட்டு நிர்வாகத்தை விலக்கிக் கொண்டது. ரூ. 30 லட்சத்திற்கு தான் அளித்த பொறுப்புறுதியையும் அரசு விலக்கிக் கொண்டது. உயர்நீதி மன்றத்தின் புதிய திட்டத்தின் கீழ், ஜோதி ஆலையின் நிர்வாகத்தில் சில மாறுதல்கள் செய்யப்பட்டது. அரசால், பொது மேலாளர் நியமிக்கப்பட்டவர், அவ்வாலையின் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

## 30. பின்னல் வேலைத்தொழில் :

நாட்டில் கடந்த ஆண்டுகளில் பின்னல் ஆடை ஏற்றுமதியில் திருப்பூர் மிகப்பெரிய அளவில் வளர்ச்சி அடைந்துள்ளது. ஏற்றுமதியில் நேர்முகமாகவும், மறைமுகமாகவும், ரூ. 650 கோடிக்கு மேல், இத்தொழில் ஈட்டியுள்ளது. இத்தொழில், பெரும்பாலும் சிறுதொழிலின் கீழ் நிறுவப்பட்டுள்ளது. திருப்பூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் சுமார் 2,000 தொழிற்கூடங்கள் நிறுவப்பட்டு, சுமார் 4,00,000 நபர்களுக்கு இத்தொழிலினால் வேலைவாய்ப்பு கிடைத்து வருகிறது. நாட்டில் உற்பத்தியாகும் நாட்டுப்பருத்தி பின்னல் ஆடைகளில் 90 விழுக்காடு அளவிற்கு, அபரிமிதமாக வளர்ச்சி அடைந்துள்ள இந்த திருப்பூரில்தான் உற்பத்தியாகின்றது. தற்பொழுது பின்னல் ஆடை உற்பத்தியில் பெருமளவிற்கு திருப்பூர் வளர்ச்சியுற்றிருப்பதற்கும், பன்னாட்டளவில் இதன் வளர்ச்சி பரவியிருப்பதற்கும் காரணமாகத் திகழ்வது திருப்பூரிலுள்ள தொழில் முனைவோர்களின் சொந்த முயற்சியேயாகும். தற்பொழுது திருப்பூரிலுள்ள பின்னல் ஆடைக்கூடங்கள் பெரிய அளவிற்கு சந்திக்கவிருக்கும் பிரச்சினையாக திகழ்வது, அந்நகருக்குத் தேவையான அடிப்படை வசதிகளான மின்சாரம், சாலை, குடிநீர் மற்றும் கழிவுநீர் பற்றாக்குறை ஆகும். திருப்பூருக்கு அளிக்கப்படவிருக்கும் அடிப்படை வசதிகளுக்குத் தேவையான செயற் குறிப்புகளுக்கு ஒப்புதல் அளித்தல், தேவையான நிதி ஆதாரங்களை கண்டறிவது மற்றும் இத்திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்தல் போன்ற பணிகளை விரைந்து செயல்படுத்தும் பொருட்டு, தமிழ்நாடு அரசு இரண்டு

[1991 செப்டம்பர் 20

உயர்மட்டக் குழுக்களை அமைத்துள்ளது. திருப்பூர் நகருக்குத் தேவையான அடிப்படை வசதிகளை அளிப்பதற்கு பெரிய அளவில் நிதியுதவி தேவைப்படுகிறது. இந்த அளவிற்கான நிதி வசதியினை சம்பந்தப்பட்ட உள்ளாட்சிகளோ, தமிழக அரசோ அளிக்க இயலாது. எனவே, திருப்பூர் நகருக்கு அளிக்கப்பட உள்ள அடிப்படை வசதிகளுக்கு தேவைப்படும் பெரிய அளவிலான நிதியினை மத்திய அரசு தனது வரவு-செலவுத் திட்டத்தில் சிறப்பு ஒதுக்கீடு செய்ய வேண்டும் என, தமிழக அரசு மத்திய அரசிடம் வலியுறுத்தியுள்ளது. மத்திய அரசின், துணிநூல் துறையின் இணைச் செயலாளர் அவர்களை உயர்மட்டக் குழுவில் உறுப்பினராக நியமித்துள்ளது. 28—8—1991 அன்று மத்திய அரசின் துணிநூல் அமைச்சர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், திருப்பூரில் உற்பத்தியாகும் பின்னல் ஆடையின் மூலம் ஈட்டப்பட்டு வரும் அந்நியச் செலாவணியை கருத்திற்கொண்டு, அந்நகருக்கு தேவைப்படும் அடிப்படை வசதிகளுக்கான சிறப்பு நிதி ஆதாரத்தினை மத்திய அரசு அளிக்க வேண்டும் என்கின்ற இவ்வரசின் கோரிக்கை மீண்டும் வலியுறுத்தப்பட்டது.

## 31. விசைத்தறிகள் :

தமிழ்நாட்டின் பெரும்பாலான ஜவுளி வகைகள் விசைத்தறிகளில் உற்பத்தி செய்யப்படுகின்றன. மொத்த உற்பத்தியில் 70 சதவிகிதம் விசைத்தறியிலேயே உற்பத்தியாகிறது என மதிப்பிடப்பட்டுள்ளது. விசைத்தறிகளில் உற்பத்தி செய்யப்படும் இரகங்களை, ஆலைகளில் உற்பத்தி செய்யப்படும் இரகங்களுடன் ஒப்பிடுகையில் செலவினங்கள் மற்றும் விலை, ஆலைகளிலிருந்து வெளிவரும் துணிகளைவிட குறைந்து காணப்படுகிறது. 30—6—1991 வரை தமிழ்நாட்டில் 2,08,838 விசைத் தறிகள் பதிவாகியுள்ளன. தமிழ்நாட்டில் சேலம், பெரியார், கோவை, திருச்சி, மதுரை, காமராஜர் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் விசைத்தறிகள் அதிகம் உள்ளன. இத்துறையின் கீழ் 49 விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 4,962 விசைத்தறிகளைக் கொண்டு இயங்கி வருகின்றன.

## 32. விசைத்தறி சேவா மையங்கள் நிறுவுதல் :

இந்த மையத்தின் முக்கிய நோக்கம் விசைத்தறி இயக்கம் பராமரித்தல், நூல் எண் மதிப்பீடு கணித்தல், விசைத்தறி துணிகளின் உற்பத்தி தரத்தை உயர்த்துதல், புதிய வடிவங்களை உருவாக்குதல், விசைத்தறி நவீனமயமாக்குதல் போன்றவற்றில் பயிற்சி அளித்தல் ஆகிய அடிப்படை நோக்கங்களை கருத்தில் கொண்டு ஒவ்வொன்றும் ரூ. 14.11 இலட்சம் திட்ட செலவில் இரண்டு விசைத்தறி சேவா மையங்கள் அரசு கடனுதவியுடன் நெல்லை மாவட்டம் சங்கரன்கோவிலிலும் கோவை மாவட்டம் கண்ணம்பாளையத்திலும் துவக்க அரசு ஆணை பெறப்பட்டு சேவா மையங்கள் தொடங்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



1991 செப்டம்பர் 20]

## 33. தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் :

நலிவுற்ற நூற்பாலைகளை நிர்வகித்தல், விசைத்தறி கூடங்களமைத்தல், கூட்டுறவு நூற்பாலைகளுக்கும், அரசால் ஏற்கப்பட்ட நூற்பாலைகளுக்கும் தொழில் நுட்ப உதவி அளித்தல் விசைத்தறிக் கூடங்களில் தயார் செய்யப்பட்ட விசைத்தறித துணிகளை விற்பனை செய்தல் ஆகிய நோக்கங்களை பூர்த்தி செய்வதற்காக 1969ஆம் ஆண்டு தமிழ்நாடு துணிநூல் கழகம் தோற்றுவிக்கப்பட்டது. தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம், அருப்புக்கோட்டை, சிவகிரி, ஜெயங்கொண்டான் ஆகிய மூன்று இடங்களில் சொந்தமாக விசைத்தறிக் கூடங்களை நிறுவியுள்ளது மற்றும் சோமசுந்தரப் நூற்பாலை தமிழ்நாடு பஞ்சாலைக் கழக நிர்வாகத்தின்கீழ் செயல்பட்டுவருகிறது. இதன் செயல்திறன இணைப்பு 2-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

## இணைப்பு I

**1990-91ஆம் ஆண்டில் அனைத்து கூட்டுறவு நூற்பாலைகளின் நிதி செயல்பாடு —**

| வரிசை எண்ணும் கூட்டுறவு நூற்பாலையின் பெயர். (1) | மொத்த இலாபம். (2) | நிகர இலாபம். (3) | 31—3—1991 அன்று மொத்த இழப்பீடு. (4) |
|---|---|---|---|
| 1. தென்னிந்தியா கூட்டுறவு நூற்பாலை | 263.81 | 169.10 | |
| 2. ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு நூற்பாலை | 91.87 | 2.98 | (—)607.58 |
| 3. திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பாலை | 100.09 | 60.05 | (—)87.00 |
| 4. சேலம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை | 326.23 | 180.35 | .. |
| 5. மதுரை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை | 164.20 | 62.78 | (—)556.75 |
| 6. பெரியார் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை | 135.38 | 92.88 | (—)18.95 |
| 7. திருச்சி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை | 108.42 | 49.69 | (—)204.02 |
| 8. கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை. | 152.02 | 109.66 | .. |
| 9. காஞ்சீபுரம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை. | 110.16 | 30.00 | (—) 447.98 |
| 11. வட ஆற்காடு மாவட்ட கூட்டுறவு நூற்பாலை ... ... | 37.71 | (—) 61.71 | (—) 598.93 |
| 12. தஞ்சாவூர் கூட்டுறவு நூற்பாலை ... | 170.97 | 73.28 | (—) 358.27 |
| 13. புதுக்கோட்டை கூட்டுறவு நூற்பாலை | 133.37 | 18.17 | (—) 325.09 |
| 14. தர்மபுரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை. | 109.93 | 30.89 | (—) 144.59 |
| 15. அண்ணா கூட்டுறவு நூற்பாலை ... | 173.96 | 49.84 | (—) 69.91 |
| 16. பாரதி கூட்டுறவு நூற்பாலை ... | 129.94 | 54.86 | (—) 252.36 |
| 17. இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை ... ... | 51.12 | 13.30 | (—) 102.50 |
| 18. மிசிரியர் கூட்டுறவு நூற்பாலை ... | (—) 2.54 | 7.05 | (—) 82.10 |
| மொத்தம் ... | 2,322.56 | 921.85 | (—) 4,510.50 |

## இணைப்பு 2.

(தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தின் கடந்த மூன்றாண்டுகளின் செயல் திறன் பின்வருமாறு)

| (1) | 1983—89. (2) | 1980—90. (3) | 1990—91. (4) |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| துணி உற்பத்தி ... ... ... ... | 32.07 | 32.20 | 28.37 |
| துணி கொள்முதல்/மாற்றம் செய்தல் ... | 66.70 | 78.90 | 28.99 |
| துணி விற்பனை (மீட்டரில்) ... ... | 90.89 | 111.80 | 54.80 |
| மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) ... | 787.85 | 939.28 | 699.48 |
| மொத்த இலாபம்/நட்டம் (ரூபாய்இலட்சத்தில்) | (—) 32.27 | (—) 53.19 | 9.05 (தற்காலிகமாக) |
| சோமசுந்தரம் நூற்பாலையின் நூல் உற்பத்தி (இலட்சம் கிலோவில்) ... ... | 6.10 | 6.92 | 5.50 |
| நூல் உற்பத்தி மதிப்பு ... ... | 261.98 | 282.00 | 285.46 |
| விற்பனை (ரூபாய் இலட்சத்தில்) ... ... | 242.03 | 274.73 | 299.99 |
| மொத்த இலா..ம்/நட்டம்(ரூபாய் இலட்சத்தில்) | (—) 28.75 | (—) 17.61 | 1.81 (தற்காலிகமாக) |



## இணைப்பு 3.

கைத்தறி மற்றும் துணிநூல் துறை—முன்னேற்றம் பற்றிய அறிக்கை.

| (1) | 1985—86 (2) | 1986—87 (3) | 1987—88 (4) | 1988—89 (5) | 1989—90 (6) | 1990—91 (7) |
|---|---|---|---|---|---|---|
| **1. பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் :** | | | | | | |
| 1. நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை .. .. .. .. | 1,606 | 1,667 | 1,673 | 1,665 | 1,680 | 1,503 |
| 2. தறிகளின் எண்ணிக்கை (லட்சத்தில்) .. | 3.82 | 3.92 | 3.97 | 2.58 | 2.85 | 3.25 |
| 3. உற்பத்தி (ரூபாய் கோடியில்) .. .. | 162.47 | 174.31 | 193.24 | 203.68 | 236.08 | 218.92 |
| 4. விற்பனை (ரூபாய் கோடியில்) .. | 182.43 | 169.94 | 209.15 | 216.00 | 270.05 | 246.65 |
| 5. நடைமுறை மூலதனம் (ரூபாய் கோடியில்). | 70.54 | 80.78 | 97.69 | 102.26 | 115.00 | 110.45 |
| **2. கோ-ஆப்டெக்ஸ் :** | | | | | | |
| 1. கொள்முதல் (ரூபாய் கோடியில்) .. | 81.00 | 66.85 | 63.15 | 71.50 | 104.00 | 95.03 |
| 2. விற்பனை (ரூபாய் கோடியில்) .. | 110.00 | 94.05 | 113.14 | 100.00 | 170.00 | 135.77 |
| 3. நடைமுறை மூலதனம் (ரூபாய் கோடியில்) | 70.00 | 75.00 | 75.00 | 78.50 | 75.00 | 85.00 |
| **3. கூட்டுறவு நூற்பாலை :** | | | | | | |
| 1. கதிர்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | 4.50 | 4.60 | 4.53 | 4.59 | 4.59 | 4.69 |
| 2. உற்பத்தி (ரூபாய் இலட்சத்தில்) .. | 7,960.67 | 8,196.00 | 10,955.19 | 13,507.37 | 14,891.00 | 16,163.53 |
| 3. விற்பனை (ரூபாய் இலட்சத்தில்) | 7,862.86 | 9,099.00 | 10,915.16 | 13,886.61 | 14,453.41 | 15,776.91 |
| 4. நடைமுறை மூலதனம் (ரூபாய் இலட்..த்தில்) | 1,048.00 | 2,157.00 | 2,285.00 | 2,825.00 | 2,395.00 | 2,486.00 |

**4. தமிழ்நாடு கூட்டுறவு துணி நூல் பதனிடும் ஆலை :**

ஈரோடு :

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. நூல் வெளுத்தலும், சாயமிடுதலும் (இலட்சம் மீட்டரில்). | .. | 32.00 | 28.86 | 32.65 | 24.57 | 28.98 | 19.03 |

**5. தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் :**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. கடன்களின் எண்ணிக்கை .. | .. | 2,870 | 2,520 | 2,600 | 2,906 | 2,773 | 2,761 |
| 2. அனுமதிக்கப்பட்ட கடன் தொகை (ரூபாய் இலட்சத்தில்). | .. | 441.17 | 311.20 | 400.63 | 360.68 | 386.05 | 254.77 |

**6. தமிழ்நாடு சரிகை ஆலை : காஞ்சிபுரம் :**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. சரிகை உற்பத்தி (மார்க்குகளில்) | .. | 12,453.00 | 11,775 | 14,499 | 8,408 | 14,494 | 16,002 |
| 2. விற்பனை மதிப்பு (இலட்சத்தில்) | .. | 196.80 | 168.34 | 368.71 | 170.04 | 318.09 | 341.61 |



1991 செப்டம்பர் 20]

## இணைப்பு 2.

55 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.

பொருளடக்கம்.

பக்கங்கள்.

அத்தியாயம் :


1. முன்னுரை ..

2. மகளிர் நலம் ..

3. குழந்தைகள் நலம் ..

4. ஊனமுற்றோர் நலம் ..

5. தமிழ்நாடு சமூக நல வாரியம் ..

6. சமூக பாதுகாப்பு ..

7. முதியோர் உதவித் தொகைத் திட்டம் ..

கோரிக்கை எண். 30.

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை.

கொள்கை விளக்கக் குறிப்பு 1991—1992.

முன்னுரை :

கோரிக்கை எண். 30-ன்கீழ் 1991–92 ஆம் ஆண்டிற்கு ரூ. 3,45,70,89 ஆயிரங்கள் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுகிறேன்.

1.1. ''எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓரினம்
எல்லாரும் ஓர் நிறை, எல்லாரும் ஓர் விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர்''

என்று எல்லாரும் எல்லாம் பெற்றிருக்கும் சமதர்ம சமுதாயத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறார் மகாகவி பாரதியார்.

''எல்லார்க்கும் தேசம், எல்லார்க்கும் உடைமை எலாம்
எல்லார்க்கும் எல்லா உரிமைகளும் ஆகுகவே''

என்று பாடுகிறார் பாவேந்தர் பாரதிதாசன்.

1.2. நம் முன்னோர்கள் கண்ட கனவெல்லாம் :

''சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வுகள் இருக்கக் கூடாது ; உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற பேதம் மறைய வேண்டும் ; வறியவர், வசதி படைத்தவர் என்ற பாகுபாடு இல்லாமல் எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும்''

என்பதாகும்.

1.3. இத்தகைய நாட்டைத்தான் மக்கள் நலன் நாடும் அரசு அதாவது '' Welfare State '' என்று கூறுகிறோம். இந்த அரசு அத்தகைய ''மக்கள் நலன் நாடும் அரசாக'' இயங்குகிறது ; நலிந்த பிரிவினர், இயல்பால்மெலிந்த பகுதியினர் ஆகியோரின் நலனுக்கும், வாழ்வுக்கும், தனிக் கவனம் செலுத்துகிறது ; குறிப்பாக சமுதாயத்தில் பின்தங்கிய நிலையிலிருக்கும் பெண்கள், ஊனமுற்றவர்கள் ஆகியவர்களின் உயர்வுக்காகவும், வருங்காலத்தில் இந்நாட்டின் உயிர் நாடியாக விளங்கப் போகும் குழந்தைகளின் நலனுக்காகவும் இந்த அரசு தனிக் கவனம் செலுத்துகிறது ; சிறப்புத் திட்டங்களைத் தீட்டி, அவற்றைச் செம்மையுறச் செயல்படுத்தி, நலிந்த பிரிவினரும் வளம் பெற்று சிறப்புடன் வாழும் நிலையை உருவாக்க உழைக்கிறது. அதன் மூலம் ஏற்றத்தாழ்வற்ற எல்லோரும் எல்லாமும் பெற்றிருப்பதுதான், புதிய சமதர்ம சமுதாயத்தை உருவாக்கும் புரட்சிகர நோக்குடன் சமூக நலத்துறை செயல்படத் தொடங்கியுள்ளது.



அத்தியாயம் 2.

மகளிர் நலம்.

2.1. பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டுமறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளப்பில்லை காண்
—என்ற தேசிய கவி பாரதியாரின்

கனவை நனாவாக்குவதற்காக மகளிருக்குப் புதிய வாய்ப்பினை வழங்க வேண்டும். அதன் மூலம் உயர் கல்வி பெற வேண்டும். தொழில் கல்வி பெற வேண்டும். ஆடவரைப் போல் தாங்களும் சுயமாகப் பொருளீட்டும் வாய்ப்புக்களைப் பெற வேண்டும். அதன் மூலம் சமுதாயத்தில் அவர்களுக்கு ஓர் கௌரவமான இடத்தைப் பெற உதவ வேண்டும் என்பது இந்த அரசின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்று ஆகும். இந்த இலட்சியத்தைத் தொலை நோக்கமாகக் கொண்டு தமிழ்நாடு அரசு சமூக நலத் துறையின் வாயிலாக மகளிர் நலனுக்காகப் பல சீரிய திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது.

2.2. மகளிர் பொருளாதாரத்தில் தன்னிறைவு பெற்றால் தான் அவர்களுடைய முன்னேற்றத்தை உறுதி செய்ய முடியும் என்ற அடிப்படையில் தற்போது மகளிருக்கான சிறுசிறு பயனுள்ள திட்டங்கள் பல்வேறு துறைகளில் இடம் பெற்று இருப்பவை அனைத்தையும் ஒன்றாக இணைத்து ஒருங்கிணைந்த மகளிர் மேம்பாட்டுத் திட்டம் என்ற சீரிய திட்டத்தை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் கிராமப் பகுதிகளிலுள்ள பெண்களை குழுக்களாகச் சேர்த்து, அவர்களுக்கு ஆர்வமும், ஈடுபாடும் தரும் வகையில் பயிற்சியளித்து, தக்கதொரு சுயவேலை வாய்ப்பு ஏற்பாட்டினைச் செய்து அவர்களது வருவாயை பெருக்க திட்டமிடப்பட்டுள்ளது.

2.3. மகளிர் தொழில் முனைவோர் உருவாக்கும் திட்டம் என்று நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட இப்புதிய திட்டத்தின் கீழ் 800 மகளிர் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்கள் தொழில் முனைவோர் ஆவதற்கு உரிய பயிற்சி இவ்வாண்டில் அளிக்கப்படும்.

2.4. இது தவிர, சிறு வணிகங்களில் ஈடுபட்டுள்ள பெண்கள் அதிக வட்டி விகிதங்களில் கடன் பெற்று தொழில் நடத்துகின்ற காரணத்தால் அவர்களுக்கு கிடைக்க வேண்டிய நிகர வருவாய் குறைகிறது. கூட்டுறவு மத்திய வங்கிகள் வழங்கும்

மொத்த கடனில் குறைந்தது 1 சதவீதம்ஆவது எவ்வித அமைப்
பின் கீழும் வராத சிறு வணிகத்தில் ஈடுபட்டுள்ள மகளிருக்கு,
நிதி நிலை அறிக்கையில் அறிவித்தவாறு நிறைவேற்றுவதற்கான
எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளப்படும்.

### தையல் தொழில் கூட்டுறவு சங்கங்கள் :

2.5. இத்துறையில் 1987–88–ம் ஆண்டில் 13 தையல் தொழிற்
கூட்டுறவு சங்கங்கள் மட்டுமே இருந்தன. பிறகு இதே ஆண்டில்
16 புதிய தையல் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் தொடங்
கப்பட்டன. இத்துடன் 43 மகளிர் தொழில் கூட்டுறவு தையல்
சங்கங்கள், தொழில் வணிகத்துறையிடமிருந்து இத் துறைக்கு
மாற்றப்பட்டன. 1989–90–ல் மேலும் 3 தொழிற் கூட்டுறவு
சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் காமராசர்
மாவட்டத்திலுள்ள கூட்டுறவுசங்கம் மட்டும் தற்பொழுது கலைக்
கப்பட்டது. தற்சமயம் மொத்தத்தில் 74 மகளிர் தையற்தொழிற்
கூட்டுறவு சங்கங்கள் இத் துறையின் கீழ் மாநிலம் முழுவதும்
இயங்கி வருகின்றன. புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத்
திட்டத்தின் மூலம் பயனடையும் ஒன்று முதல் எட்டாம் வகுப்பு
வரை பயிலும் பள்ளி மாணவ மாணவியர் பிற்படுத்தப்பட்ட
நல இயக்ககக் கட்டுப்பாட்டின்கீழ் பயிலும் பள்ளி மாணவ மாண
வியர், மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்
துறைக் கட்டுப்பாட்டின் கீழ் பயிலும் மாணவ மாணவியர் ஆகி
யோருக்கு இலவசமாக வழங்கப்படும் சீருடைகளை இந்த 74
மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் தைத்து வருகின்றன.

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இவ்விலவச சீருடை
களை வெட்டுவதற்கு தானியங்கி துணி வெட்டும் கருவிகளை
அரசு இலவசமாக வழங்கியுள்ளது. துணிகள் அனைத்தும்
அந்தந்த மாவட்டத்திலுள்ள துணி வெட்டும் மையத்தில் மாவட்ட
சமூக நல அலுவலர் முன்னிலையில் வெட்டப்பட்டு, வெட்டப்
பட்ட துணிகளை சீருடைகள் தைப்பதற்காக இச் சங்கங்
களுக்கு வழங்கப்படுகிறது. 1990–91-ல் பள்ளிக் குழந்
தைகளுக்கான 64 இலட்சம் சீருடைகளை சமூக நலத் துறையின்
கீழ் இயங்கும் 74 மகளிர் தையற் தொழிற் கூட்டுறவு சங்கங்
களும், சில சேவை நிறுவனங்களும் தைத்துக் கொடுத்தன.
இச்சீருடை தைக்கும் பணியின் மூலம் 20,000 மகளிருக்கு வேலை
வாய்ப்பு வழங்கப்பட்டது. ஏறக்குறைய மூன்று கோடியே
எண்பத்தேழு இலட்சம் ரூபாய் தையற் கூலியாக வழங்கப்பட்டன.
ஒவ்வொரு உறுப்பினரும் ஏறக்குறைய மாதம் ஒன்றுக்கு ரூ. 400
முதல் ரூ. 500 வரையில் மூன்று அல்லது நான்கு மாதங்களுக்கு
குடும்பத்திற்கு கூடுதல் வருமானமாக இச்சீருடை தைக்கும்பணி
யின் மூலம் பெற்றனர்.

துணி வெட்டும் பணிக்காக அரசு ஒவ்வொரு மாவட்டத்திற்
கும் ஒரு துணி வெட்டுநருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 1,000
தொகுப்பூதியமாக மூன்று மாதங்களுக்கு வழங்குகிறது.
இத்துணி வெட்டுநர்களே சீருடை தைக்கும் துணிகளை வெட்டு
கின்றனர்.



2.6. சீருடை தைக்கும் மகளிர்க்கு 25 சதவிதம் கூலி 1988–89
வரை முன் பணமாக வழங்கப்பட்டது. மீதமுள்ள 75 சதவிதம்
கூலித் தொகை சீருடைகள் யாவும் தைத்து முடித்து
கல்வித் துறைக்கு ஒப்படைக்கப்பட்ட பின்னர் வழங்கப்பட்டது.
இம்முறையினால் சங்க உறுப்பினர்கள் தங்களுடைய முழு கூலித்
தொகையையும் பெற நீண்ட காலம் காத்திருக்க வேண்டியிருந்
தது. எனவே 1989–90 முதல் 90 சதவீதம் தையல் கூலியை
முன்பணமாகவும், மீதமுள்ள 10 சதவீதம் கூலித் தொகையை
சீருடைகள் அனைத்தும் தைத்து முடித்த பின்னர் வழங்கவும்
அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

### காலணி தயாரிக்கும் மகளிர் கூட்டுறவு சங்கங்கள் :

2.7. புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத்திட்டம்மூலம்
பயனடையும் ஒன்று முதல் எட்டாம் வகுப்புவரை பயிலும் பள்ளி
மாணவ மாணவியருக்கு அரசு இலவச காலணிகள் வழங்கும்
பொருட்டு அக்காாலணிகளை தயாரிபதற்காக சமூகநலத்துறையின்
கட்டுப்பாட்டின் கீழ் 39 மகளிர் காலணிக் கூட்டுறவுச்
சங்கள்சங் 1987–88-ம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டன. இரண்டா
யிரம் ஆதி திராவிடர் மகளிர்க்கு இச்சங்கங்கள் மூலம் வேலை
வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. காலணிகளைத் தயாரிப்ப
தற்கு சங்க உறுப்பினர் அனைவருக்கும் ஒருமாத காலம் பயிற்சி
யளிக்கப்பட்டது. பயிற்சி காலத்தில் ஒவ்வொரு மகளிருக்
கும் ரூ. 200 உதவித் தொகையாக வழங்கப்பட்டது. காலணி
களைத் தயாரிப்பதற்காக ரூ. 250 மதிப்புள்ள கருவிகள் மற்றும்
உபகரணங்கள் ஒவ்வொரு மகளிருக்கும் இலவசமாக அரசால்
வழங்கப்பட்டது. இம்மகளிர் காலணிக் கூட்டுறவுச் சங்
கங்கள் 1987–88 மற்றும் 1988–89-ம் ஆண்டுகளில் இத்துறைக்கு
ஒதுக்கப்பட்ட 12.17 இலட்சம் ஜோடி காலணிகளைத் தயாரித்து
கல்வித்துறைக்கு வழங்கியுள்ளன. மகளிர்க்கு கூலியாகவும்
காலணி கூட்டுறவு சங்கங்களுக்கு சேவை கட்டணமாகவும் ரூ. 40
லட்சம் 1987–88-ம் ஆண்டில் வழங்கப்பட்டது. அரசுக்குத்
தேவையான காலணிகள் தயாரிப்பதோடு மட்டுமின்றி ஏனைய
பிற காலணிகளைத் தயார் செய்வதற்கும் மகளிர் காலணி கூட்டு
றவு சங்க உறுப்பினர்களுக்கு செயல்விளக்கம் அளிக்கப்படுகிறது.
பள்ளி மாணவ மாணவிகளுக்கு சீருடை வழங்குவது தவிர கிரா
மப்புறத்தில் உள்ள ஏழை மகளிருக்கு 1988–89-ம் ஆண்டில் இத்
துறையால் 3.27 இலட்சம் ஜோடி காலணிகள் தயாரிக்கப்
பட்டன. 1988–89-ம் ஆண்டில் ரூ. 11.45 இலட்சம் கூலியாகப்
பெண் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 1989–90-ம் ஆண்
டின் முதல் கட்டத்தில் 3.00 லட்சம் காலணிகள் தயாரிக்கப்பட்
டது. அதற்காக ரூ. 10.50 இலட்சம் கூலியாகவும் சேவைக்
கட்டணமாகவும் வழங்கப்பட்டது. இரண்டாவது கட்டத்தில்
42,005 காலணிகள் தயாரிக்கப்பட்டு ரூ. 1,47,017.50 கூலியாக
வும் சேவைக் கட்டணமாகவும் வழங்கப்பட்டுள்ளது. 1990–91ம்
ஆண்டிற்கு இத்துறை 6.00 லட்சம் காலணிகள் தயாரித்து வழங்க
கூலிக்காகவும் சேவைக் கட்டணத்திற்காகவும் அரசு ரூ. 24
இலட்சம் வழங்கியுள்ளது.

பள்ளி செல்லும் பிள்ளைகளுக்கு இலவச காலணி வழங்கும் திட்டம் 1991–92–ம் ஆண்டிலும் தொடர்கிறது. இத்திட்டத்தின் கீழ் 1991–92ம் ஆண்டிற்கு இத்துறை 3.00 லட்சம் காலணிகள் தயாரிக்கவேண்டும்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்துடன் இணைந்த திட்டங்கள் :—

இலவச சீருடை வழங்குதல் :—

2.8. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயனடையும் 1 முதல் 8–ம் வகுப்பு வரை பயிலும் பள்ளிச் சிறார்களுக்கு கல்வித் துறை வாயிலாக இலவச சீருடைகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டம் 1985–86ம் ஆண்டு முதல் அரசால் செயல் படுத்தப்பட்டு வருகிறது. இது போன்ற இலவச சீருடைகள் பிற்பட்டோர் நல இயக்ககத்தினராலும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் இயக்ககத்தினராலும், அவர்கள் கட்டுப்பாட்டில் இயங்கும் பள்ளிச் சிறார்களுக்கு வழங்கப்படுகிறது. ஆண்டொன்றுக்கு சுமார் 64 லட்சம் சீருடைகள் தைத்து வழங்கப்படுகிறது. இச் சீருடைகள் தைக்கும் பொறுப்பு சமூக நல இயக்ககத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சீருடைகளை தைக்கும் பணி அனைத்தும் அந்தந்த மாவட்ட சமூக நல அலுவலர்களின் நேரடி கண்காணிப்பில் நடைபெறுகிறது. சீருடைகளை தைப்பதற்கு தேவைப்படும் துணிகள் அனைத்தும் கைத்தறி துணி இயக்ககத்தினரால் நேரடியாக அந்தந்த மாவட்ட சமூக நல அலுவலருக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

இலவச காலணி வழங்குதல் :

2.9. புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத்திட்டத்தின் கீழ் பயனடையும் ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் பள்ளிச் சிறார்களுக்கு இலவசக் காலணிகள் வழங்கும் திட்டம் 1987–88 ஆம் ஆண்டு தமிழக அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் பள்ளிச் சிறார்களுக்கு உரிய காலணியை தயார் செய்யும் பணி தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம், கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் மற்றும் சமூக நல இயக்ககம் ஆகிய 3 நிறுவனங்களுக்கும் 50 : 30 : 20 என்ற விகிதத்தில் ஒப்படைக்கப்பட்டது. 1988–89 ஆம் ஆண்டில் சுமார் 65 இலட்சம் பள்ளிச் சிறுவர்களுக்கான காலணிகள் 3 நிறுவனங்களால் தயார் செய்யப்பட்டு வழங்கப்பட்டது. 1989–90 ஆம் ஆண்டில் முதல் கட்டத்தில் 3:00 இலட்சம் காலணிகள் தயாரிக்கப்பட்டது. அதற்காக ரூ. 10. 50 இலட்சம் கூலியாகவும் சேவைக் கட்டணமாகவும் வழங்கப்பட்டது. இரண்டாவது கட்டத்தில் 42,005 காலணிகள் தயாரிக்கப்பட்டு ரூ. 1,47,017.50 கூலியாகவும் சேவை



கட்டணமாகவும் வழங்கப்பட்டுள்ளது. 1990–91ஆம் ஆண்டிற்கு இத்துறை 6.00 இலட்சம் காலணிகள் தயாரித்து வழங்க வேண்டும். அதற்காக அரசு கூலிக்காகவும் சேவைக் கட்டணத்திற்காகவும் ரூ. 24 இலட்சம் வழங்கியுள்ளது.

பள்ளிச் செல்லும் பிள்ளைகளுக்கு இலவச காலணி வழங்கும் திட்டம் 1991–92 ஆம் ஆண்டிலும் தொடர்கிறது. இத்திட்டத்தின் கீழ் 1991–92 ஆம் ஆண்டிற்கு இத்துறை 3.00 இலட்சம் காலணிகள் தயாரிக்கவேண்டும்.

மகளிர் எழுதுபொருள் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் :

2.10. 1979 முதல் 1981 வரையிலான ஆண்டுகளில் 15 மகளிர் எழுது பொருள் கூட்டுறவு சங்கங்கள் தொடங்கப்பட்டன. இவற்றில் 2 சங்கங்கள் சரிவர வேலை செய்யாததால் அவைகள் கலைக்கப்பட்டன. 1987–88 மற்றும் 1988–89 ஆம் ஆண்டுகளில் மகளிர் எழுதுபொருள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தங்கள் வியாபாரத்தை அபிவிருத்தி செய்யும் பொருட்டு 7 சங்கங்களுக்கு அச்சு இயந்திரம், 13 சங்கங்களுக்கு இரு கோடிடும் இயந்திரங்களும், 12 சங்கங்களுக்கு காகித உறை தயாரிக்கும் இயந்திரங்களும் வழங்கப்பட்டன. எழுது பொருள் கூட்டுறவு சங்கங்களுக்குத் தேவையான நோட்டுப் புத்தகங்கள் தயாரிக்கும் ஆர்டர்கள் தமிழ்நாடு பாட நூல் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டன. ஏறக்குறைய 700 மகளிர் எழுதுபொருள் கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினராக உள்ளனர்.

மகளிர் கயிறு பொருட்கள் தயாரிக்கும் கூட்டுறவு சங்கம் :

2.11. 1981 ஆம் ஆண்டில் கயிறு மற்றும் கயிறு சம்பந்தப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் மகளிர் கூட்டுறவு சங்கம் ஒன்று இத்துறையின் கீழ் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள நல்லூரில் தொடங்கப்பட்டது. இச்சங்கம் உற்பத்தி நிலையமாகவும், மகளிருக்கு பயிற்சி அளிக்கும் நிலையமாகவும் செயல்படுகிறது. இது தவிர இங்கு 100 மகளிர்க்கு முறையாக வேலை வாய்ப்பும் அளிக்கப்படுகிறது.

சாக்குக்கட்டி தயாரிக்கும் கூட்டுறவுச் சங்கம் :

2.12. ஏற்கனவே இத்துறையின் கீழ் இயங்கும் இரண்டு சாக்குக் கட்டி தயாரிக்கும் கூட்டுறவு சங்கங்களோடு மகளிர் சாக்குக் கட்டி தயாரிக்கும் மகளிர் கூட்டுறவு சங்கங்கள் 19 1988–89 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டன.

இதில் ஒரு சங்கம் சரிவர வேலை செய்யாததால் கலைக்கப்பட்டது. புதிதாகத் துவங்கப்பட்ட 19 சாக்குக்கட்டி கூட்டுறவு சங்கங்களில் உள்ள மகளிர் உறுப்பினர்கள் அனைவருக்கும் சாக்குக் கட்டி தயாரிப்பதில் ஒரு மாத காலம் பயிற்சி அளிக்கப்

பட்டது. இவற்றில் நான்கு உடல் ஊனமுற்றோருக்காக ஆரம்பிக்கப்பட்டது. பயிற்சி காலத்தில் இவர்களுக்கு உதவித் தொகையாக ரூ. 150 அளிக்கப்பட்டது. இம்மகளிர் கூட்டுறவு சங்கங்கள் உற்பத்தி செய்யும் சாக்குக் கட்டிகள் அனைத்தையும் கல்வித் துறையினர் எடுத்துக்கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது. சுமார் 1,150 மகளிர்க்கு இக்கூட்டுறவு சங்கங்கள் மூலம் வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது. இச்சங்கங்களில் உள்ள மகளிர் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இனத்தைச் சார்ந்தவர்கள். எஞ்சிய ஒரு பங்கினர் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள்.

இணை உணவு தயாரிக்கும் கூட்டுறவுச் சங்கம் :

2.13. 1988–89 ஆம் ஆண்டில் 22 மகளிர் இணை உணவு தயாரிக்கும் மகளிர் கூட்டுறவு சங்கங்கள் தொடங்கப்பட்டுள்ளன. சுமார் 1,650 மகளிர்க்கு ஒரு வார காலம் இணை உணவு தயாரிப் பதில் பயிற்சி அளிக்கப்பட்டது. உதவித் தொகையாக ரூ. 50 மகளிருக்கு வழங்கப்பட்டுள்ளது. 1989 ஆம் ஆண்டு மத்தியில் முறையான உற்பத்தியை இக்கூட்டுறவுச் சங்கங்கள் துவக்கி ஒருங் கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் மற்றும் தமிழ்நாடு ஒருங் கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டத்தின் மையங்களுக்குத் தேவை யான இணை உணவு தயாரித்து விநியோகம் செய்கின்றன.

கடந்த 1990–91 ஆம் ஆண்டு வரை சுமார் 7,350 மெட்ரிக் டன் இணை உணவு/சத்துணவு தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டுள் ளது. மேலும் சங்க உறுப்பினர்களுக்கு 1990–91 ஆம் ஆண்டு வரை ரூ. 30 இலட்சம் கூலியாக வழங்கப்பட்டுள்ளது. இச்சங்க உறுப்பினர்கள் தொடர்ந்து வேலை வாய்ப்பைப் பெற்று வருகிறார்கள்.

மகளிர் பயிற்சி நிலையங்கள் :

2.14. சமூக நல இயக்ககத்தின்கீழ் 58 பயிற்சி மற்றும் உற் பத்தி நிலையங்கள் மகளிருக்காக நடத்தப்படுகின்றன. இவை 41 தையல் பயிற்சி நிலையங்கள், 4 பனை ஓலை பயிற்சி நிலையங்கள், 3 கம்பளி பயிற்சி நிலையங்கள், ஒரு பாய் முடையும் பயிற்சி நிலையம், ஒரு மூங்கில் பயிற்சி நிலையம், ஒரு பிரம்பு பயிற்சி நிலையம், ஒரு ஆயத்த ஆடைத் தயாரிப்பு நிலையம், ஒரு துணி பொம்மை தயாரிப்பு நிலையம் மற்றும் 5 உற்பத்தி நிலையங்கள் (இரண்டு சாக்குக் கட்டி உற்பத்தி மையம், இரண்டு மெழுகு வர்த்தி உற்பத்தி நிலையம், ஒரு பெட்சிட் மற்றும் டவல் தயாரிப்பு நிலையங்கள்) ஆகும். இந்த பயிற்சி நிலையங்கள் 1958 முதல் வெவ்வேறு ஆண்டுகளில் துவக்கப்பட்டவை. ஆண்டு தோறும் சுமார் 900 பெண்களுக்கு இப்பயிற்சி நிலையங்களில் பயிற்சி அளிக்கப்படுகின்றன.



தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து பயிற்சி அளித்தல் :

2.15. இந்த தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துப் பயிற்சியா னது 1978 ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வருகின்றது. ஒவ் வொரு ஆண்டும் தட்டச்சு பயிற்சி சுமார் 1,000 பெண்களுக்கும் மற்றும் சுருக்கெழுத்துப் பயிற்சி சுமார் 500 பெண்களுக்கும் அளிக்கப்படுகிறது. தட்டச்சுப் பயிற்சியாளர்களுக்கு ரூ. 150 வீதமும் மற்றும் சுருக்கெழுத்து பயிற்சியாளர்களுக்கு ரூ. 220 வீதம் ஆண்டொன்றுக்கு உதவி தொகையாக அளிக்கப்படுகின்றது. 1990–91 ஆம் ஆண்டில் சுமார் 1,200 பயிற்சியாளர்கள் பயிற்சி பெற்றனர். இதன் பொருட்டு 1990–91 ஆம் நிதியாண்டில் ரூ. 2.6 இலட்சம் ஒதுக்கப்பட்டது.

வழிகாட்டி மையங்கள் :

2.16. 1978–79 ஆம் ஆண்டு வழிகாட்டி மையங்கள், நான்கு மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டன. இதனைத் தொடர்ந்து 1983–84-ல் மேலும் நான்கு மாவட்டங்களில் வழிகாட்டி மையங் கள் நிறுவப்பட்டது. 1988–89 ஆம் ஆண்டு மேலும் பன்னி ரெண்டு மாவட்டங்களிலும் வழிகாட்டி மையங்கள் நிறுவப்பட் டுள்ளன.

வழிகாட்டி மையம் மாவட்ட சமூக நல அலுவலகத்தில் செயல்பட்டு வருகிறது. வழிகாட்டி மையங்கள், கணவனால் கைவிடப்பட்டவர், கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற பெண் களுக்கு வங்கி மூலம் கடனுதவி பெறுவதற்கு உதவி புரிகின்றன. ஏழைக் கைம்பெண்கள் ஆயுள் பாதுகாப்பு ஈட்டுத் தொகை, ஓய்வூதியம், பொது வைப்பு நிதியிலிருந்து கிடைக்க வேண்டிய தொகை ஆகியவற்றினைப் பெறுவதற்கும் இதர துறைகளுடன் தொடர்பு கொண்டு அவர்களுக்கு வழிகாட்டி உதவி புரிகின்றன. வழிகாட்டி மைய அலுவலர்கள், அரசு ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லத்தில் குழந்தைகளை சேர்க்க தக்க நடவடிக்கை மேற்கொள்கின்றனர். மகளிர் மேம்பாட்டிற்கு உருவாக்கப்படும் திட்டங்கள் அனைத்தும் மாவட்ட சமூக நல அலுவலர்களாலும் வழிகாட்டி மைய அலுவலர்களாலும் செயல்படுத்தப்படுகிறது.

சேவை இல்லம் :

2.17. இத்துறையின்கீழ் தாம்பரம், கடலூர், தஞ்சாவூர், சேலம், திருநெல்வேலி, காரைக்குடி ஆகிய இடங்களில் சேவை இல்லங்கள் நடைபெற்று வருகின்றன. 18 முதல் 40 வரையுள்ள விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள் மற்றும் ஆதர வற்றோருக்கு கல்வி வசதி அளிப்பதே இவற்றின் நோக்கமாகும். இவர்களுக்கு 8 ஆம் வகுப்பு, 10 ஆம் வகுப்பு மற்றும் மேல் நிலைக் கல்வியில் தேர்வு எழுத பயிற்சியளிக்கப்பட்டு வருகின்றது. இதில் ஆர்வமில்லாதோருக்கு தையல், பூவேலை, துணி நெய்தல் போன்றவற்றில் பயிற்சியளிக்கப்படுகிறது. தையல் மற்றும் பூ வேலையில் ஓராண்டு பயிற்சி முடித்[illegible]ர்கள் அரசின் தொழில் நுட்பத் துறையால் நடத்தப்படும் [illegible]வுகளுக்கு அனுப்பப்

சேவை இல்லங்களில் பயிலும் உள்ளுறை மாணவிகளுடன் இரண்டு குழந்தைகள் தங்குவதற்கும் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. அவர்கள் தொடர்ந்து மூன்று ஆண்டு காலம் மேற்படி இல்லத்தில் இருக்கலாம். உள்ளுறை மாணவிகளுக்கு மாதம் ரூ. 120 வீதமும், குழந்தைகளுக்கு ரூ. 90 வீதமும், உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. உள்ளுறை மாணவிகளுக்கு ஆண்டிற்கு ரூ. 100 வீதம் சீருடையும், குழந்தைகளுக்கு ரூ. 60 வீதம் சீருடையும் வழங்கப்பட்டு வருகின்றன. 6 ஆம் வகுப்பிலிருந்து 8 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவிகளுக்கு பாட நூல் மற்றும் குறிப்பேடுகள் வாங்குவதற்கு ரூ. 40 வீதமும், 9 மற்றும் 10 ஆம் வகுப்பு மாணவிகளுக்கு ரூ. 60 வீதமும் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், குழந்தைகள் பிரிவில் படிக்கும் குழந்தைகளுக்கு (5 ஆம் வகுப்பு வரை) பாட நூல்களுக்காக ரூ. 15 வீதமும் வழங்கப்பட்டு வருகிறது.

தாம்பரம் மற்றும் கடலூர் சேவை இல்லங்களில் தலா 60 மாணவிகள் பயன் பெறும் வகையில் மேல்நிலைக் கல்விப் பிரிவு நடத்தப்பட்டு வருகின்றது. இப்பிரிவில் பயிலும் மாணவிகளுக்கு பாட நூல்கள் மற்றும் குறிப்பேடுகளுக்காக ஆண்டொன்றுக்கு ரூ. 100 வீதமும் சீருடைக்காக ரூ. 100 வீதமும் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. தஞ்சாவூரில் 1988–89-ல் தொடங்கப்பட்டுள்ள மேல்நிலைப் பிரிவில் 60 மாணவியர் அறிவியல் பயின்று வருகின்றனர். இவர்களுக்கு மாதம் ரூ. 120 வீதம் உதவித் தொகையும், ஆண்டொன்றிற்கு ரூ. 100 வீதம் பாட நூல்கள் மற்றும் குறிப்பேடுகளுக்காகவும் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. 1988–89-ல் தாம்பரம் மற்றும் கடலூர் சேவை இல்லங்களில் இப்பிரிவில் சேர்க்கப்படும் மாணவிகளின் எண்ணிக்கை 60 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

உடல் ஊனமுற்ற மகளிருக்காகவும், குழந்தைகளுக்காகவும் முறையே 30 மற்றும் 20 பேர் பயன்படத்தக்க அளவில் தாம்பரம் சேவை இல்லத்தில் ஒரு தனிப் பிரிவு நடைபெற்று வருகிறது.

2.18. தாம்பரம், கடலூர் மற்றும் தஞ்சாவூர் சேவை இல்லங்களில் செயலகப் பிரிவு நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு சேவை இல்லத்திலும் தலா 20 பெண்கள் பயன்பெற்று வருகின்றனர். ஓராண்டு பயிற்சிக்குப் பின்னர் இம்மாணவிகள் அரசு தொழில்நுட்பத் தேர்வுக்கு அனுப்பப்படுகின்றனர். இப்பயிற்சியாளர்களுக்கு மாதம் ரூ. 20 வீதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது. 1985–86 ஆம் ஆண்டு முதல் தையல் பயிற்சி பெறும் மாணவிகளுக்கு ஆண்டுக்கு ரூ. 250 வீதம் உதவித் தொகை மொத்தமாக வழங்கப்படுகிறது.

1983–84 முதல் இத்துறையின் சேவை இல்லங்கள் மற்றும் அரசு மானியம் பெறும் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் சேவை இல்லங்களில் 10 ஆம் வகுப்பு தேறியவர்கள் பொது சுகாதாரத்



துறையால் நடத்தப்படும் பலநோக்கு சுகாதாரப் பணியாளர் பயிற்சிக்கு அனுப்பப்படுகின்றனர். பொது சுகாதாரத் துறையினரால் தமிழ்நாட்டில் 9 இடங்களில் நடத்தப்படும் பயிற்சி நிலையங்களில் $1\frac{1}{2}$ ஆண்டுகள் இப்பயிற்சி அளிக்கப்படுகிறது. இதுநாள் வரை 827 சேவை இல்ல மாணவிகள் பயிற்சிப் பெற்றுள்ளனர். அரசு சேவை இல்லங்களுக்காக ரூ. 44.03 இலட்சங்கள் 1991–92 ஆம் ஆண்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

உள்ளுறை மாணவிகள் மற்றும் குழந்தைகளுக்கு வழங்கப்படும் உணவில் உள்ள மன நிறைவின்மையைப் போக்க வழங்கப்படும் உதவித் தொகையினை 1990–91-ல் மாதம் ஒன்றிற்கு ரூ. 75-லிருந்து ரூ. 120 ஆகவும், ரூ. 60-ல் இருந்து ரூ. 90 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

2.19. தற்போது தாம்பரம் சேவை இல்லத்தைச் சுற்றி எழுப்பப்பட்டுள்ள முட்கம்பி சுவர் சேதமுற்றிருப்பதால், மாணவிகளின் பாதுகாப்பிற்காக நான்கு புறங்களிலும் சுற்றுச் சுவர் படிப்படியாக கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. 1991-92-ல் ரூ. 3.80 இலட்சம் செலவில் வடக்குப்புறச் சுவர் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## ஆசிரியர் பயிற்சிப் பள்ளி :

2.20. ஒவ்வொரு பிரிவிலும் 50 பேர் பயிலும் வண்ணம் இளநிலைப் பிரிவு, முதுநிலைப் பிரிவு என இரு பிரிவுகளுடன் 1966–67-ல் தாம்பரத்தில் தொடங்கப்பட்ட ஆசிரியர் பயிற்சிப் பள்ளி தற்போது பல்லாவரத்தில் செயல்பட்டு வருகிறது.

சேவை இல்லங்கள் மூலம் மேல்நிலைப் பிரிவில் தேர்ச்சி பெற்று வயது வரம்பு கடந்த விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள் மற்றும் ஆதரவற்ற பெண்களுக்கு இப் பயிற்சியில் சேர முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இரண்டாண்டு கால இப்பயிற்சியில் பயிலும் ஒவ்வொருவருக்கும் மாதந்தோறும் ரூ. 120 வீதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது. பயிற்சி முடிந்த பின் அவர்கள் இடைநிலை ஆசிரியர்களாக இத்துறையால் நடத்தப்படும் பள்ளிகளிலும், கல்வித்துறை மற்றும் தனியாரால் நடத்தப்படும் பள்ளிகளிலும், மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பள்ளிகளிலும் பணியமர்த்தப்படுகிறார்கள். இவ்வேலைக்காக அவர்கள் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் தங்கள் பெயரைப் பதிவு செய்திருந்தால் மட்டும் போதுமானது. வேலை வாய்ப்பில் இவர்களது வயது வரம்பு 40 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 1991–92 ஆம் ஆண்டிற்கு ரூ. 3.76 இலட்சங்கள் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

[1991 செப்டம்பர் 20

அரசு நிதியுதவியுடன் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் சேவை இல்லங்கள் :

2.21. அரசு நிதியுதவியுடன் கஸ்தூரிபா சேவிகாஸ்ரமத்தினால் காந்தி கிராமம், ஈரோடு, மதுரை ஆகிய இடங்களிலும் முறையே ஜூன் 1968, ஜூலை 1981, நவம்பர் 1981 இல் சேவை இல்லங்கள் தொடங்கி நடத்தப்பட்டு வருகின்றது.

காந்தி கிராமத்திலுள்ள சேவை இல்லத்தில் 120 மாணவிகளுக்கும், மதுரை மற்றும் ஈரோட்டிலுள்ள சேவை இல்லங்களில் தலா 40 மாணவிகளுக்கும் இரண்டாண்டு குறுகிய கால 10 ஆம் வகுப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது. இவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 75 வீதம் உதவித்தொகை மானியம் வழங்கப்படுகிறது. ஒரு பட்டதாரி ஆசிரியர், ஒரு தமிழ் ஆசிரியர் ஆகிய இருவருக்கான ஊதியத் தொகை ஒவ்வொரு சேவை இல்லத்திற்கும் மானியமாக வழங்கப்படுகிறது. சமூகத்தில் மிகவும் பின் தங்கிய மகளிருக்காக, தட்டச்சு, சுருக்கெழுத்து மற்றும் செயலகப் பிரிவு நடத்தும் சென்னை ''ஸ்திரி சேவா மந்திர்'' என்னும் நிறுவனத்திற்கு உதவித் தொகை மானியம் வழங்கப்படுகிறது. 1991-92 ஆம் ஆண்டிற்கு ரூ. 1.08 இலட்சங்கள் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அரசால் நடத்தப்படும் பணிபுரியும் மகளிர் விடுதிகள் :

2.22. பணிபுரியும் மகளிருக்கு குறிப்பாக நடுத்தர வருவாய் உள்ளவர்களுக்கு பாதுகாப்பும், வசதியும் செய்து கொடுக்கும் பொருட்டு, பணிபுரியும் மகளிர் விடுதிகள் அமைக்கும் திட்டத்தை அரசு பல நகரங்களில் செயல்படுத்தி வருகிறது. சென்னை, கடலூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, மதுரை, ஒசூர், மற்றும் தூத்துக்குடி ஆகிய ஏழு இடங்களில் பணிபுரியும் மகளிர் விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. சென்னையிலுள்ள இல்லததில் 75 பேரும், கடலூரில் 30 பேரும், இதர ஐந்து இடங்களில் தலா 50 பேரும் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர்.

இவ்விடுதிப் பணியாளர்கள் ஒரு கண்காணிப்பாளர், இரண்டு சமையலர்கள், ஒரு அலுவலக உதவியாளர், ஒரு காவலர் மற்று ஒரு துப்புரவாளரின் ஊதியத்திற்கான மொத்த செலவையும் அரசு ஏற்றுக் கொள்கிறது. உணவுச் செலவு, கட்டட வாடகை, மின் கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் உள் உறுப்பினர்களிடமிருந்து சம அளவில் ஈடு செய்யப்படுகிறது. ரூ. 6.62 இலட்சங்கள் 1991-92 ஆம் நிதி ஆண்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



1991 செப்டம்பர் 20]

பணிபுரியும் மகளிர் விடுதி கட்ட நிதி உதவி அளித்தல் :

2.23. தொண்டு நிறுவனங்கள், உள்ளாட்சி மன்றங்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களால், பணிபுரியும் மகளிர் விடுதிக் கட்டிடம் கட்டுவதற்கான மொத்த செலவில் 75 சதவிகிதம் மத்திய அரசால் மானியமாக வழங்கப்படுகிறது. மொத்த மதிப்பீட்டில் 15 சதவிகிதம் அல்லது ரூ. 35,000 இவற்றில் எது குறைந்த தொகையோ அத்தொகை மாநில அரசால் மானியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தை பயன்படுத்த விரும்பும் நிறுவனங்கள் கட்டிடம் கட்ட சொந்தமாக நிலம் வைத்திருக்க வேண்டும். இவ்வகைக்காக பிற அரசிடமிருந்தோ, நிறுவனங்களிடமிருந்தோ, உதவிகள் பெற்றிருத்தல் கூடாது. கட்டிடம் கட்டப்படும் நிலத்தின் மதிப்பில் 50 சதவிகிதம் மத்திய அரசால் மானியமாக அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் மத்திய மாநில அரசுகளின் நிதியுதவியுடன் 1990-91 வரை 49 பணிபுரியும் மகளிர் இல்லக் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. 1991-92 ஆம் ஆண்டிற்கு மேலும் மூன்று பணிபுரியும் மகளிர் இல்லக் கட்டிடங்கள் கட்டுவதற்காக ரூ. 1.05 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மகளிர் மன்றங்கள் :

2.24. கிராம மகளிர் மத்தியில் விழிப்புணர்வு ஏற்பட மகளிர் மன்றங்கள் உருவாக்கப்பட்டன. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 30 மகளிர் மன்றங்கள் வீதம் மாநிலத்தில் மொத்தம் 11,520 மகளிர் மன்றங்கள் உள்ளன. இம்மகளிர் மன்ற அமைப்பாளர்களுக்கு காலாண்டிற்கு ஒரு முறை ரூ. 90 மதிப்பூதியமாக வழங்கப்படுகிறது. குழந்தைகள் கண்காட்சி மற்றும் கல்விச் சுற்றுலாவிற்காக முறையே ரூ. 200-ம், ரூ. 400-ம் வழங்கப்படுகிறது. புத்தகங்கள், பத்திரிகைகள் வாங்கப்பட்டு அதன் மூலம் சமூகக் கல்வியை வளர்க்கும் பொருட்டும் ஆண்டொன்றிற்கு ரூ. 360 வழங்கப்படுகிறது. ரூ. 51.16 இலட்சம் 1991-92 ஆம் ஆண்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சிறப்பாகச் செயல்படும் மகளிர் மன்றங்களுக்கு ஆண்டு தோறும் பரிசுத் தொகை வழங்கப்படுகிறது. 75 மகளிர் மன்றங்கள் தேர்வு செய்யப்பட்டு ஒரு மகளிர் மன்றத்திற்கு ரூ. 1,000 வீதம் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

1991-92 ஆம் ஆண்டிற்காக ரூ. 0.75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

விதவைகளின் குழந்தைகளுக்கு பாட நூல்கள் மற்றும் குறிப்பேடுகள் இலவசமாக வழங்குதல் :

2.25. ஆண்டு வருமானம் ரூ. 6,400-க்கு குறைவாக உள்ள விதவைகளின் குழந்தைகளுக்கு இலவசமாக பாட நூல்கள் மற்றும் குறிப்பேடுகள் வழங்கும் திட்டம் 1978-79 ஆம் ஆண்டில்

துவக்கப்பட்டது. இத்திட்டத்தின்படி ஆரம்பப் பள்ளிகளில் பயிலும், மாணவ, மாணவிகளுக்கு ரூ. 15 வீதமும், நடுநிலைப் பள்ளியில் பயில்வோருக்கு ரூ. 30 வீதமும், உயர்நிலைப் பள்ளியில் பயில்வோருக்கு ரூ. 90 வீதமும், மேல்நிலைக் கல்வி பயில்வோருக்கு ரூ. 190 வீதமும் ஆண்டு தோறும் வழங்கப் படுகிறது. இத்திட்டத்தினால் ஒவ்வொரு ஆண்டும் 4,000 குழந்தைகள் பயனடைகிறார்கள். 1991-92 ஆம் ஆண்டிற்கு ரூ. 2.10 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

<u>மகளிருக்கான திருமண உதவித் திட்டங்கள் :</u>

<u>ஏழை விதவையரது மகள் திருமண நிதி உதவித் திட்டம் :</u>

2.26. ஏழைவிதவையரது மகளிர் திருமணத்திற்காக ரூ.2,000 வீதம் வழங்கப்படுகிறது. திருமண உதவி கோரும் மகளிர் 18-க்கும் 30-க்கும் இடைப்பட்ட வயதுடையவராக இருத்தல் வேண்டும். ஒரு மகளின் திருமணத்திற்கு மட்டுமே இவ்வுதவி பெற முடியும். இத்திட்டத்தால் ஒவ்வொரு ஆண்டும் 1,015 பெண்கள் பயன் பெறுகின்றனர். 1991-92 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 20.30 இலட்சங்களாகும்.

<u>மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம் :</u>

2.27. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின் கீழ் 8 ஆம் வகுப்பு படித்த ஏழைப் பெண் களுக்கு திருமண உதவியாக ரூ. 5,000 வழங்கப்படுகிறது. பழங்குடி இன மகளிர் 5-வது வகுப்பு படித்திருந்தால் போது மானது. மாநிலம் முழுதும் கிராமங்கள் மற்றும் நகர்ப்புறங் கள் உட்பட இத்திட்டம் இவ்வாண்டு நடைமுறைப்படுத்தப் படுகிறது. இதற்கான நிபந்தனைகள் பின் வருமாறு :—

வயது : திருமணம் செய்யும் காலத்தில் 18 வயது நிரம்பிய வராக இருக்க வேண்டும்.

உச்சவரம்பு : ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ. 5,000.

2.28. செயலாக்கம் : சென்னை, மதுரை மற்றும் கோவை ஆகிய மாநகராட்சிகளில் மாநகராட்சி ஆணையரும், ஊரகங் களில் ஊராட்சி ஒன்றிய அலுவலர்களும், நகராட்சியில் நக ராட்சி ஆணையரும், நகரியத்தின் தனி அலுவலரும், அந்தந்த மாவட்ட சமூக நல அலுவலருக்கு இதற்கான தொகையினைப் பெறவும், வழங்கவும் அனுமதிக்கப்பட்டு இத்திட்டம் சீரியமுறை யில் செயல்பட பொறுப்பானவர்கள் ஆவார்கள். மாநில அளவில் சமூக நல இயக்குநர் திட்ட செயலாக்கத்திற்கு பொறுப்பானவர்.



நடைமுறை : இவ்வுதவி கோரும் மணப்பெண், நிர்ணயிக் கப்பட்ட படிவத்தில் விண்ணப்பங்களை இரு நகலாக அனுப்ப வேண்டும். இவ்விண்ணப்பங்களில் குறித்துள்ள விவரங் களைக் கண்காணிப்பாளர்களால் நேரடியாகச் சென்று சரி பார்த்து உரிய சான்று வழங்கப்பட்ட பின்னரே மனுதாரருக்கு உதவித் தொகை வழங்கப்படும்.

<u>இத்திட்டத்தின்கீழ் 1991-92-ல் ரூபாய் 5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.</u>

<u>டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டம் :</u>

2.29. வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பத்தைச் சார்ந்த பெண்களுக்கு பேறு காலத்திற்கு முன் இரு மாதங் களுக்கும், அதற்குப் பின் இரு மாதங்களுக்கும் நிதி உதவி செய்யும் பொருட்டு '' டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டம் '' செயல்படுத்தப்பட்டு வருகிறது.

18 வயது நிரம்பிய பெண்டிருக்கு இத்திட்டத்தின் கீழ் முதல் இரண்டு குழந்தைகளுக்கு பண உதவி செய்யப்படும். ஆண்டு வருமானம் ரூ. 5,000-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

உதவித் தொகை ரூ. 200 மொத்தமாக (மாதம் ரூ. 50 வீதம்) முதலிரண்டு மற்றும் பின்னிரண்டு மாதங்களுக்கு வழங்கப் படும். விண்ணப்பங்களில் குறித்துள்ள வயது, வருமானம் (குடும்ப அட்டை) மற்றும் இவ்வுதவி பெறவேண்டிய தகுதி (மருத்துவ செவிலியரது சான்று) ஆகியவற்றிற்கான ஆதாரங் களும் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

ஊரகங்களில் ஊராட்சி ஒன்றிய ஆணையர்களும், நகராட்சி மற்றும் நகரியங்களில் ஆணையர்களும், சென்னை, மதுரை மற்றும் கோவை ஆகிய மாநகராட்சிகளில் அந்தந்த மாநகராட்சி ஆணையரும் இத்திட்டத்தினை செயல்படுத்துவர். கிராம மருத் துவ செவிலியர் நோக்கு சுகாதாரப் பணியாளர் மூலமாக கரு வுற்ற பெண்களுக்கு இத்தொகை பட்டுவாடா செய்யப்படும்.

மாநில அளவில் இத்திட்டத்தின் சீரிய செயலாக்கத்திற்கு சமூக நலத்துறை இயக்குநர் பொறுப்பானவர். இத்திட்டத்திற் கென 1991-92 ஆம் நிதியாண்டிற்கு ரூ. 4 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் திட்டம் (விதவை மறுமணத் திட்டம் :

2.30. விதவை ஒருவர் மறுமணம் செய்து கொண்டால் அத் தம்பதியரின் பெயரில் ரூ. 5,000-க்கான தேசிய சேமிப்புப் பத்திரம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெற 18 வயது முதல் 30 வயதுடைய விதவைகளே தகுதியுடையவர் களாவர்.

மேற்கண்ட திட்டத்தின் மூலம் பயனடைவோர் வருமானம் அல்லது அவர்களது குடும்ப வருமானம் ரூ. 6,400-க்குள் இருத்தல் வேண்டும். 1991-92 ஆம் ஆண்டிற்கு ரூ. 10.20 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அனாதைப் பெண்களுக்குத் திருமண உதவித் திட்டம் :

2.31. ஆண்டு வருமானம் ரூ. 6,400-க்கு குறைவாக உள்ள குடும்பங்களிலுள்ள 18 முதல் 30 வயதுக்கு இடைப்பட்ட அனா தைப் பெண்கள் திருமணத்திற்கு தலா ரூ. 1,000 நிதியுதவி அளிக்கப்படுகிறது. இந்நிதியாண்டில் ரூ. 1 இலட்சம் நிதி ஒதுக் கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழக அரசு கலப்புத் திருமண உதவித் திட்டம் :

2.32. இத்திட்டத்தின்கீழ் தம்பதியரின் ஆண்டு வருமானம் ரூ. 12,000-க்கு குறைவாக உள்ள கலப்புத் திருமணம் செய்துக் கொண்ட தம்பதிகளுக்கு, திருமண செலவிற்காக, ரூ. 1,000 மற்றும் தேசிய சேமிப்பு பத்திரமாக ரூ. 4,000 ஆக மொத்தம் ரூ. 5,000 வழங்கப்படுகிறது. இந்நிதியாண்டு 1991-92-ல் ரூ. 30.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் இலவச தையல் இயந்திரம் வழங்குதல் :

2.33. ஒவ்வொரு ஆண்டும் சுமார் 1,000 தையல் இயந்திரங் கள் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள் மற்றும் ஊனமுற்ற ஆண், பெண் இரு பாலருக்கும் இலவசமாக வழங்கப்படுகிறது. 1991-92 ஆம் ஆண்டுக்கு ரூ. 10.70 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம்.

2.34. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம், 1956 ஆம் ஆண்டு நிறுமச் சட்டத்தின்கீழ், ஓர் மாநில அரசின் நிறுவன மாக 1983 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் பதிவு செய்யப்பட்டது. இக்கழகத்தின் அனுமதிக்கப்பட்ட மூலதனமான ரூ. 100 இலட்



சத்தில் மாநில அரசு ரூ. 40 இலட்சமும் மைய அரசு ரூ. 38.42 இலட்சமும் முதலீடு செய்துள்ளன. ஆக இக்கழகம் மேற்கண்ட வாறு மொத்தம் ரூ. 78.42 இலட்சம் பங்கு மூலதனத்துடன் இயங்கி வருகிறது. இக்கழகத்தின் பங்கு மூலதனத்தில் மாநில அரசு 51 விழுக்காடு, மைய அரசு 49 விழுக்காடு என்ற விகிதாச் சாரத்தில் முதலீடு செய்வதென கொள்கையளவில் சம்மதித்து, இந்த நிறுவனம் தோற்றுவிக்கப்பட்டது.

இக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட 1983 ஆம் ஆண்டு முதல் இன்று வரையிலான கால கட்டத்தில், சுமார் 13.151 கிராமப் புற மகளிர்களுக்கு சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் பயிற்சி மூலமும் மற்ற வகையிலும் வாய்ப்புக்களை அமைத்துத் கொடுத்து, அதன் வழி அவர்கள் சுமார் 1,119 இலட்ச மதிப் பீட்டில் பல தொழில்கள் அமைத்திட உதவியுள்ளது. இதில் மானியத் தொகை ரூ. 768 இலட்சமும், பல வங்கிகளின் மூலம் கடனாகப் பெறப்பட்ட ரூ. 351 இலட்சமும் அடங்கும். மேலும் பன்னாட்டு வளர்ச்சிக்கான நார்வே நாட்டு நிதியுதவியுடன் அமைக்கப்பட்டுள்ள மகளிர் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மத்திய அரசின் வேலைவாய்ப்புக்கான உதவியளிக்கும் திட்டம் (STEP) மற்றும் சிறப்பு நிதியுதவித் திட்டம் (SCA) இவற் றின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட ஆடுகள் மற்றும் கறவை மாடுகள் வழங்கும் திட்டம் மற்றும் விவசாய வளர்ச்சிக்கான பன்னாட்டு நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் ஆகியவை இக்கழகம் நிறைவேற்றிடும் திட்டங்களில் குறிப்பிடத் தக்கவையாகும்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம்:—

விவசாய வளர்ச்சிக்கான பன்னாட்டுநிதி (Inter Naticna Fucds for Agric Iral Develpment) எனும் நிதி நிறுவன உதவியுடன் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு மகளிர் மேம் பாட்டுத் திட்டம் எனும் பெரும் திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. மொத்தம் ரூ. 45.92 கோடி செலவில் செயல்படுத்தப் பட்டு வரும் இத்திட்டத்தின் மூலம், ஏழு ஆண்டுகளில் வறுமைக் கோட்டின் கீழ் இருக்கும் சுமார் 40,500 மகளிர் பயன்பெறுவர். தருமபுரி மாவட்டத்தில் 1989 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் முதல் செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டம் 1991-92-ல் சேலம் மற்றும் தென்னாற்காடு மாவட்டங்களுக்கு விரிவாக்கப் பட்டுள்ளது. இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மகளிருடைய சமூக மற்றும் பொருளா தார நிலையை உயர்த்துவதாகும். இதன் பொருட்டு வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் பெண்கள் தேர்வு செய்யப்பட்டு கிராம அளவிலான மகளிர் குழுக்களாக அமைக்கப்பட்டு, அப்பெண் களுக்கு வருவாய் ஈட்டும் தொழில்களை மேற்கொள்ளுவதற்காக கடன் மற்றும் மானியம் கொடுத்து உதவி அளிக்கப்படுகிறது. இதேசமயம் மாறிவரும் சமூக சூழ்நிலையைக் குறித்த விழிப்

புணர்ச்சியை அப்பெண்களுக்கு ஏற்படுத்தி அவர்களது தன்னம்பிக்கையை வளரச் செய்தலும் இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

மார்ச் 1991 உடன் முடிந்த 19 மாத காலத்தில் தர்மபுரி மாவட்டத்தில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 8,399 மகளிர் தேர்வு செய்யப்பட்டு 321 குழுக்களாக அமைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 3,173 பயனீட்டாளர்கள் கீழ்க்கண்டவாறு வருவாய் ஈட்டும் தொழில்களுக்காக ரூ. 162.49 இலட்சம் நிதி உதவி பெற்றுள்ளனர்:—

| வரிசை எண். | விவரம். | பயனீட்டாளரின் எண்ணிக்கை. | வருவாய் ஈட்டும் தொழில்களுக்காக நிதி உதவி |
|---|---|---|---|
| | | (ரூபாய் | இலட்சத்தில்.) |
| (1) | (2) | (3) | (4) |
| 1 | விவசாய நிலமேம்பாட்டுப் பணிகள் | 693 | 34.58 |
| 2 | விவசாயம் .. .. .. | 372 | 10.86 |
| 3 | பட்டு வளர்ச்சி .. .. .. | 462 | 33.70 |
| 4 | தோட்டக் கலை .. .. .. | 209 | 12.55 |
| 5 | கால்நடை வளர்ச்சி .. .. | 823 | 47.08 |
| 6 | எண்ணெய்வித்துக்கள் வளர்ச்சி .. | 75 | 4.88 |
| 7 | குடிசை மற்றும் கிராமத் தொழில்கள் | 539 | 18.84 |
| | மொத்தம் .. .. | 3,173 | 162,49 |





1991-92ஆம் ஆண்டில் தருமபுரி, சேலம் மற்றும் தென் ஆற்காடு மாவட்டங்களைச் சார்ந்த வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 15,000 பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு குழுக்களாக அமைக்கப்பட உள்ளனர். இந்த 15,000 பெண்களில் சுமார் 7,500 பெண்களுக்கு பல்வேறு வருவாய் ஈட்டும் தொழில்களுக்காக மொத்த நிதி ஒதுக்கீடான ரூ.674 இலட்சம் செலவில் உதவி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## தொழில் முனைவோர் :

2.35. சிறு தொழில் சேவை மையம். இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி, தொழில் நுட்பக் கலந்தாய்வு நிறுவனம் போன்ற அமைப்புகளின் மூலம் இக்கழகம் மகளிரில், தொழில் முனைவோர் மேம்பாட்டிற்காக பல பயிற்சித் திட்டங்களை நடத்தி வருகின்றது. 1990-91ஆம் ஆண்டில் 75 மகளிர் பயனடைந்துள்ளனர். 1991-92ஆம் ஆண்டில் 75 மகளிர் பயன்பெறும் வகையில் தொழில் முனைவோர் திட்டங்களை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மகளிர் தொழில் முனைவோரின் தக்க பயிற்சிக்குப் பின்னர் தொடர் நடவடிக்கையாக, அவர்கள் பெற்ற பயிற்சியையொட்டி எவ்வகைத் தொழிலில் அவர்கள் ஈடுபடுவது பலனளிக்கும் என எடுத்துச் சொல்வது அதற்கான திட்ட அறிக்கைகளை தயார் செய்வது, வங்கிக் கடன் பெறுவது போன்றவற்றிற்கு இக்கழகம் உதவி புரிந்து வருகின்றது.

## வாழ்க்கைத் தொழில் திட்டங்கள் :

2.36. இக்கழகம் மகளிருக்கு 535 தோல் பொருட்கள் உற்பத்தி, தையற்களை, மின் மற்றும் மின்னணு சாதனங்களை செப்பனிடுதல், அச்சகம், தச்சு வேலை, கயிறு திரித்தல், பனை நார் பொருட்கள் உற்பத்தி ஆகிய பல்வேறு தொழில் பயிற்சித் திட்டங்களை ரூ. 10 இலட்சம் செலவில் 1990-91 ஆம் ஆண்டில் தொண்டு நிறுவனங்களின் மூலம் செயல் படுத்தியுள்ளது. 1991-92 ஆம் ஆண்டில் 437 மகளிர் பயன்பெற திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளன.

## மகளிர் முன்னேற்றத்திற்கான ஆய்வுகள் :

2.37. 1990-91ஆம் ஆண்டில் இக்கழகம் "மகளிர் தொழில் முனைவோர் பட்டியல்" என்ற ஆய்வினை இந்தியன் வங்கி நிதி உதவியுடன் மேற்கொண்டு ஒரு தொகுப்புரை தயாரித்து வெளியிட்டுள்ளது. மேலும் "தமிழ்நாட்டில் மகளிர் தொழில் முனைவோரின் வாய்ப்புகளும் மற்றும் நிலையும்" என்ற ஆய்வை தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மற்றும் இந்திய தொழில் வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் மேற்கொண்டுள்ளது. இதன் மூலம் இக்கழகம் தொழில் முனைவோர்க்குத் தேவையான உதவிகளைப் புரிய ஏதுவாகும்.

**1991–92ஆம் ஆண்டிற்கான திட்டங்கள் :**

2.38. 1991–92 ஆம் ஆண்டிற்கு ரூ. 779 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் 9,087 கிராமப்புற பெண்கள் பயன்பெறும் வகையில் இக்கழகக் திட்டங்களை வகுத்துள்ளது. அதில் மானியம் மட்டுமே ரூ. 499 இலட்சங்கள் ஆகும். திட்ட விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :

| வரிசை எண். | திட்டம். | வரவு ஊக்குவிப்புத் தொகை/ உதவி மானியம் ஆதாரம். | பயன்பெறுவோர் எண்ணிக்கை. | ஊக்குவிப்புத் தொகை உதவி மானியம். | மொத்தம் நிதி முதலீடு. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1 | தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம். | பன்னாட்டு விவசாய வளர்ச்சி நிதி. | 7,500 | 531.81 | 674.25 |
| 2 | வாழ்க்கைத் தொழில் பயிற்சி திட்டங்கள். | மாநில அரசு | 437 | 5.00 | 5.00 |
| 3 | தொண்டு நிறுவனங்கள் மூலமாக தையல் மற்றும் எம்பிராய்டரி பயிற்சி மற்றும் தயாரிப்பு நிறுவனங்கள் நிறுவுதல். | நார்வே நாட்டு நிதி உதவித் திட்டம். | 50 | 1.60 | 1.70 |
| 4 | பனை மற்றும் வாழை நார் உற்பத்திப் பொருட்கள் பயிற்சி மற்றும் உற்பத்தி கூடத்தினை தொண்டு நிறுவனங்கள் மூலம் நிறுவுதல். | — | 20 | 0.81 | 0.91 |
| 5 | தொண்டு நிறுவனம் மூலம் வீட்டுப் பணிப் பெண்கள் பயிற்சித் திட்டம். | — | 240 | 0.44 | 0.94 |
| 6 | காளான் வளர்ப்பு கூடத்தினை தொண்டு நிறுவனங்களின் மூலம் நிறுவுதல். | — | 200 | 11.80 | 12.10 |
| 7 | நுண்ணலை தொடர்பு கருவிகள் பயிற்சி மற்றும் உற்பத்திக் கூடத்தினை ''எல்காட்'' மூலம் நிறுவுதல். | — | 50 | 4.09 | 4.09 |
| 8 | ரெக்சின் மற்றும் பட்டு நூற்பு கூடங்களை நம்பியூர் சர்வோதய சங்கம் மூலம் நிறுவுதல். | — | 32 | 2.56 | 4.68 |
| 9 | பட்டு நூற்பு கூடத்தினை செங்கல்பட்டு சர்வோதய சங்கம் மூலம் நிறுவுதல். | — | 40 | 3.20 | 7.10 |
| 10 | சான்றிதழ் பெற்ற சர்வோதய சங்கங்கள் மூலம் குடிசைத் தொழில்களை அமைத்தல். | சிறப்பு மைய உதவி | 402 | 34.03 | 59.81 |
| 11 | ஆவாரம் பாளையம் சர்வோதய சங்கம் மூலம் தயாரிக்கும் நிறுவனம் அமைத்தல். | பயிற்சி மற்றும் வேலை ஆதரவு திட்டம். | 16 | 1.28 | 5.98 |
| 12 | தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டங்கள். | இந்திய தொழில் வளர்ச்சி வங்கி. | 100 | 2.50 | 2.50 |
| | | மொத்தம் — | 9,087 | 499.42 | 779.06 |

[1991 செப்டம்பர் 20

## அத்தியாயம் 3.

## குழந்தைகள் நலம்.

3.1. குழந்தையை நாம் ''குழந்தைச் செல்வம்'' என்றே அழைக்கிறோம். அவர்கள் வீட்டிற்கு மட்டும் செல்வங்கள் அல்ல. நாட்டிற்கும் செல்வங்கள். அச்செல்வங்கள் உடல் வலுவும், உயரிய அறிவாற்றலும் படைத்தவர்களாக இருக்க வேண்டும். அப்பொழுது தான் இக்குழந்தைச் செல்வங்கள் தாங்களும் சீராக வளர முடியும். சிறப்பாக வாழ்வில் உயர முடியும். நாட்டு நிலையையும் உயர்த்த இயலும். இளம் பருவத்தில் ஊட்டச் சத்துணவும் உரிய கல்வியும், மருத்துவ வசதியும் வழங்கப்பட்டால்தான் நல்ல குழந்தைச் செல்வங் களை உருவாக்க முடியும். எனவே சமூக நல இயக்ககத்தின் பணிகளில் குழந்தைகள் நலம் முக்கிய பங்கு வகிக்கிறது. இத் துறை கீழ்க்காணும் சத்துணவுத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது—

(1) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்.

(2) தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம்'

(3) ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்.

பொருளாதாரத்தில் நலிவுற்ற குழந்தைகளுக்கு சத்துணவு வழங்குவது மட்டுமல்லாமல் 0—5 வயது வரையுள்ள குழந்தை களின் சீரான முழுமையான வளர்ச்சிக்கு வழிவகை காண்பதே இத்திட்டங்களின் நோக்கமாகும்.

### புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் :

3.2. இத்திட்டம் தமிழ்நாட்டில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் 1-7-1982 முதல் கிராமப் புறங்களிலும் 15-9-1982 முதல் நகர்ப்புறங்களிலும் தொடங்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. தற்போது 29,951 குழந்தைகள் நல மையங்கள், நகர்ப் புறங்களிலும், கிராமப் புறங்களிலும் நடைபெற்று வருகின்றன. இதில் 108 குழந்தைகள் நல மையங்கள் மலைவாழ் பகுதியினர் மற்றும் பழங்குடியினர் நலனுக்காக நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தின் மூலம் பயன் பெறும் குழந்தைகளின் எண்ணிக்கை 16.37 இலட்சங் களாகும்.

குழந்தைகளுக்கு நேரடியாக பயன் அளிப்பதுடன் ஆயிரக் கணக்கான வேலையற்ற ஏழை மகளிர் பலர், இத்திட்டத்தின் மூலமாக வேலை வாய்ப்பும் பெற வகை செய்யப்பட்டுள்ளது. நாடு முழுவதும் சுமார் 29,951 பெண்கள் குழந்தைகள் நல அமைப்பாளர்களாகவும், அங்கன்வாடி பணியாளர்களாகவும், 59,902 பெண்கள், குழந்தைகள் நல உதவியாளர்கள் ஆயாக் களாகவும், வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர்.



1991 செப்டம்பர் 20]

இத்திட்டத்தில் முக்கியமான மூன்று அம்சங்கள் பொருந்தி யுள்ளன. அவை குழந்தைகளுக்கு—

1. ஊட்டச் சத்து
2. முன் பருவக் கல்வி
3. சுகாதார பாதுகாப்பு

வழங்குவதாகும்.

3.3. ஊட்டச்சத்து குறைவினை தடுப்பதற்கு குழந்தை களுக்கு சுகாதார முறையில் தலத்திலேயே சமைக்கப்பட்ட சூடான உணவு மதிய உணவாக மையங்களில் வழங்கப்படுகிறது. இந்த உணவு கீழ்க்கண்ட அளவுப் பொருளைக் கொண்டு சமைக் கப்படுகிறது :—

| | | |
|---|---|---|
| 1. | அரிசி | 80 கிராம் |
| 2. | பருப்பு | 10 கிராம் |
| 3. | எண்ணெய் | 1 கிராம் |
| 4. | தானியம் மற்றும் காய்கறி | 50 கிராம் |

இச்சத்துணவு மூலமாக ஒவ்வொரு குழந்தைக்கும் தேவை யான சுமார் மூன்றில் ஒரு பகுதி புரதச் சத்து மற்றும் ஊட்டச் சத்து தினந்தோறும் கிடைக்கும் என ஊட்டச்சத்து வல்லுநர் களால் கணக்கிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு மையத்திற்கும் ரூ. 2.000 மதிப்புள்ள சமையல் உபகரணங்கள் வழங்கப்பட் டுள்ளன. எரி பொருட்களுக்கான செலவினை மீதப்படுத்த குழந்தைகள் நல அமைப்பாளர்கள் வைக்கோல் பெட்டியை உபயோகிப்பது குறித்து அறிவுரைகளுடன் பயிற்சியும் அளிக்கப் பட்டுள்ளார்கள்.

### 3.4. முட்டை விநியோகம் :

சத்துணவு மையங்களில் குழந்தைகளுக்கு 15 நாட்களுக்கு ஒரு முறை தலா ஒரு கோழி முட்டை வழங்கப்படுகிறது.

### 3.5. முன் பருவக் கல்வி :

அனைத்து சத்துணவு மையங்களும் நர்சரிப் பள்ளிகளாகவும் செயல்படுகின்றன. ரூ. 1,500 மதிப்புள்ள கல்வி உபகரணங்கள் விளையாட்டு சாமான்கள் மற்றும் மேஜைகள் எல்லா மையங் களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

### 3.6. உடல் நலம் பேணுதல் :

சீரான உடல் நிலையைப் பராமரிப்பதற்காக அடிக்கடி மருத்துவப் பரிசோதனை செய்வதன் மூலமும் தடுப்பூசிகளின் மூலமும் குழந்தைகளின் உடல் நலம் பேணப்படுகிறது. கிராமப் புறங்களிலும், நகராட்சிகளிலும், பொது சுகாதார துறையினர் குழந்தைகள் உடல் நலத்தைப் பேணுகின்றனர். குழந்தைகள் உடல் வளர்ச்சியையும் ஊட்டச்சத்து நிலையையும் மதிப்பிடுவதற்கு அவர்களின் எடைகள் அவ்வப்போது எடுக்கப்பட்டு அதற்கென்று உள்ள சுகாதார அட்டைகளில் பதிவு செய்யப்படுகின்றன. இதற்காக அனைத்து குழந்தைகள் நல மையங்களுக்கும் எடை பார்க்கும் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன

3.7 மையங்களில் குடிநீரைச் சேமிப்பதற்கு மூடியுள்ள ஜி ஐ டிரம்கள் முதற் கட்டமாக 14,007 வழங்கப்பட்டது இரண்டாவது கட்டமாக டிரம்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

3.8 வடஆற்காடு அம்பேத்கார் ,தர்மபுரி, சேலம், செங்கற்பட்டு-எம்,ஜி,ஆர், ஆகிய மாவட்டங்களில் 7,607 குழந்தைகள் நல மையங்களில் பழைய பாய்களுக்குப் பதிலாக ஒரு மையத்திற்கு 5 பாய்கள் வீதம் 37,93! புதிய பாய்கள் வழங்கப்பட்டுள்ளன,

### 3 9 முதியோர்க்கு சத்துணவு :

15–1–1983 முதல் முதியோர் உதவித் தொகை பெறும் முதியோருக்கும் இத்திட்டத்தின்கீழ் உணவு வழங்கப்பட்டு வருகிறது ஒவ்வொருவருக்கும் நாளும் 200 கிராம் அரிசி, 15 கிராம் பருப்பு, 1 கிராம் எண்ணெய், 50 கிராம் காய்கறி மற்றும் தாளிதம் அடங்கிய சத்துணவு வழங்கப்படுகிறது அவர்கள் தங்களது உணவை முன் பருவக் கல்வி பயிலும் குழந்தைகளுக்குத் தொந்தரவு இல்லாத வகையில் வீடுகளுக்கு எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள்,

1–11–1984 முதல் அரசு இத்திட்டத்தை முன்னாள் படைவீரர் நிதியிலிருந்து ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும், அவர் தம் விதவையர்கட்கும் விரிவுபடுத்தியுள்ளது.

3·10. தற்போது இத்திட்டத்தினால், 2,36,080 முதியோரும் முன்னாள் படை வீரர்களும் அவர் தம் மனைவியரும் பயன் பெற்று வருகின்றனர் தாய்மார்களுக்கு, குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் சத்துணவு பற்றிய சமுதாயக் கல்வியினை போதிக்கும் மையங்களாகவும், மேற்படி குழந்தைகள் நல மையங்கள் செயல்பட்டு வருகின்றன.



### குழந்தைகள் நல மையங்களின் எண்ணிக்கை :

| | |
|---|---|
| ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் சாராதது. | 21,572 |
| ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் சார்ந்தது. | 8,379 |
| மொத்தம் .. | 29,951 |

### பள்ளிக் குழந்தைகளுக்கு சத்துணவு அளிக்கும் திட்டம்

3.11. 1–7–1982லிருந்து கிராமப்புறங்களில் உள்ள 5 முதல் 9 வரையான வயது பள்ளிக் குழந்தைகளுக்காக புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர், சத்துணவுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டம் 15–9–1982 முதல் அதே வயதுக்குட்பட்ட நகர்ப்புற பள்ளிக் குழந்தைகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. 15–9–1984லிருந்து இத்திட்டம் 10 முதல் 15 வயதுக்குட்பட்ட பள்ளிக் குழந்தைகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. இவ்வாறாக 5 வயதுக்கு மேற்பட்டு ஒன்று முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் பள்ளிக் குழந்தைகள் 39,000 பள்ளிச் சத்துணவு மையங்களின் மூலம் உணவளிக்கப்படுகின்றனர். அரசுதவி பெறும் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கு சத்துணவு அளிக்கும் திட்டத்திற்கு ஊரக வளர்ச்சி ஆணையர் பொறுப்பாவார் நகராட்சி/மாநகராட்சிப் பள்ளி சத்துணவு மையங்களுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் பொறுப்பாவார் இத்திட்டத்தின்கீழ் பயன்பெறும் பள்ளிக் குழந்தைகள் எண்ணிக்கை 67.24 இலட்சமாகும்.

இத்திட்டத்தின்கீழ் பயன்பெறும் வெவ்வேறு வயதுடைய பள்ளிக் குழந்தைகளுக்காக வரையறுக்கப்பட்ட உணவின் அளவு கீழ்வருமாறு :—

| வரிசை எண். | உணவுப் பொருளின் பெயர். | 5+ முதல் 9— வயது வரை. (ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை). | 10 முதல் 15 வரை. 6 முதல் 8-ஆம் வகுப்பு வரை. அளவு | 10 முதல் 15 வரை. 9 மற்றும் 10-ஆம் வகுப்பு வரை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) (கிராம்) | (4) (கிராம்) | (5) (கிராம்) |
| 1 | அரிசி | 100 | 100 | 120 |
| 2 | பருப்பு | 15 | 15 | 15 |
| 3 | எண்ணெய் | 1 | 1 | 1 |
| 4 | காய்கறிகள், எரிபொருள் மற்றும் தாளிதப் பொருட்கள். | 13 (பைசா) | 13 (பைசா) | 13 (பைசா) |

ஜூன் 1989-லிருந்து முட்டை சாப்பிட விரும்பும் பள்ளிக் குழந்தைகளுக்கு பதினைந்து நாட்களுக்கொருமுறை வேக வைத்த முட்டையொன்று வழங்கப்படுகிறது. முட்டை சாப்பிடாத பள்ளிக் குழந்தைகளுக்கு நாளொன்றுக்கு 50 கிராம் வீதம் பதினைந்து நாட்களுக்கொருமுறை புரதச் சத்து மிகுந்த சத்துருண்டை வழங்கப்படுகிறது.

**புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்திற்கு 1991-92-க்கான ஒதுக்கீடு :**

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்திற்காக 1991-92-ன்கீழ் ரூ. 235.94 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வொதுக்கீட்டில் பழுதடைந்த மையங்களில் புதுப்பிக்கப்பட வேண்டிய கட்டிடங்களுக்கான செலவுக்கு ரூ. 1 கோடியும், புதிய பாத்திரங்கள் வழங்குவதற்காக ரூ. 1 கோடியும் அடங்கும்.

**மையங்கள் அமைந்துள்ள கட்டிடங்களின் பழுதடைந்த நிலையைச் சரி செய்தல் :**

மாநிலத்திலுள்ள குழந்தைகள் நல மையம் சத்துணவு மையக் கட்டிடங்களையும் அதிலுள்ள வசதிகளையும் சீர்படுத்த வேண்டியது மிக அவசியமாகும். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் உள்ள மேற்படி கட்டிடங்களைச் சீர்படுத்த ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 1 கோடி தவிர, சத்துணவு மையங்களுக்காக புதிய கட்டிடங்கள் கட்டும் பணி சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் ரூ. 5 கோடிக்கு மேற்கொள்ளப்படும். தவிர, பெரிய தொழில் நிறுவனங்கள் மற்றும் வணிக நிறுவனங்கள் உதவியுடன் எல்லா மாவட்டங்களிலும் பெரிய அளவில் மையங்களைப் பழுது பார்த்தல், புதுப்பித்தல் ஆகியவற்றை மேற்கொள்ள முடிவெடுக்கப்பட்டுள்ளது. இம்முடிவின்படி சுயவிருப்பத்துடன் இப்பணிகளை எடுத்து நிறைவேற்ற முன் வந்துள்ள தொழில் நிறுவனங்களின் உதவியுடன் செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர்., வட ஆற்காடு-அம்பேத்கார், சிதம்பரனார், திருச்சிராப்பள்ளி மற்றும் சென்னை மாவட்டங்களில் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஏனைய மாவட்டங்களிலும் இவ்வாறு தாமாகவே முன்வந்து உதவப்பங்கு கொள்ளும் இத்திட்டம் மேற்கொள்ளப்படும்.

தற்போது இத்திட்டத்தில் குழந்தைகளுக்காக உபயோகப்படுத்தும் எண்ணெயின் அளவான ஒரு கிராமிலிருந்து தேவையான அளவு உயர்த்தும் செயற்குறிப்பை ஆய்வு செய்யும் பொருட்டு ஒரு வல்லுநர் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம் :**

3.12. தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டம்-2-ற்காக உலக வங்கியுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டு வளர்ச்சிக் கடன் 1990-ஆம் ஆண்டு டிசம்பர் 5-ஆம் நாள் முதல் அமுலுக்கு வந்துள்ளது.



தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம்—2 மூலம் தாய்-சேய் நலம், ஊட்டச்சத்து, சுகாதாரம் மற்றும் முன்பருவக்கல்வி ஆகிய பணிகள் கிராம அளவில் அளிக்கப்படும். சத்துணவு மையங்கள் மூலம் கிராம அளவில் தாய்-சேய் நலம் மற்றும், 3—5 வயதுள்ள குழந்தைகளுக்கு முன்பருவக் கல்வி அளிக்கப்படும். இதற்கென பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள் செயல்பாட்டினை மேற்பார்வை செய்யப்படும். கூடுதலாகத் வேவைப்படும் உணவு மற்றும் மருந்துப் பொருட்கள் போதுமான பயிற்சி மற்றும் புதிய மேற்பார்வை முறை ஆகியவற்றின் மூலம் தாய்-சேய் ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரப் பணிகள் ஒருங்கிணைக்கப்பட்டு திட்டத்தின் செயலாக்கம் சீர்படுத்தப்படும். ஊட்டச்சத்து, உடல் நலக் கல்வி பற்றியத் தொடர்பு பணிகளுக்காகவும் திட்டத்தில் மக்கள் பங்கை அதிகரிக்கச் செய்யவும் ஒரு தகவல் தொடர்பு மையம் இத்திட்டத்தின் கீழ் செயல்பட்டு வருகிறது.

**3.13. இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள்களாவன :**

1. தாய்நலம் : தாய் நலம் மற்றும் ஊட்டச் சத்து நிலையை மேம்படுத்துவதன் மூலம் கர்ப்பம் தரித்த நாளிலிருந்தே ஊட்டச்சத்து நிலையை உயர்த்தி குழந்தை உயிர்வாழ்தல் மற்றும் குழந்தை வளர்ச்சியினை உறுதி படுத்துதல்.

2. 1—6 வயது குழந்தைகளின் ஊட்டச்சத்து மற்றும் சுகாதார நிலையைக் கீழ்க்கண்ட வழிமுறைகள் மூலம் மேம்படுத்துதல் :

(அ) மிதமான மற்றும் கடுமையான ஊட்டச்சத்து குறையினை தவிர்ப்பது :

(ஆ) தொற்று நோய்களைக் கட்டுப்படுத்தவும், தவிர்க்கவும், நோய்த் தடுப்பு மற்றும் பயனுள்ள திட்டத்தைச் செயல்படுத்துவது ;

(இ) குறிப்பிட்ட சில ஊட்டச்சத்து பற்றாக்குறை நோய்கள் வராமல் காப்பது.

3. மூன்று முதல் ஆறு வயது குழந்தைகளுக்குப் பயனுள்ள முன்பருவக் கல்வி அளிப்பது.

4. தனி நபர் மற்றும் சமுதாய நலத்தை மேம்படுத்த தாய்மார்கள், குடும்பம் மற்றும் இளம்பெண்கள் ஆகியோரின் செயல்திறத்தை அதிகரித்தல்.

5. சுகாதார நலக்கல்வி அளித்தல் மற்றும் ஊட்டச்சத்துத் திட்டங்களைத் திட்டமிடுவதிலும், செயல்படுத்துவதிலும்-மதிப்பீடு செய்வதிலும் சமுதாயத்தில் ஈடுபாட்டை கிராம அளவில் அதிகப்படுத்துதல்.

6. மேற்கூறிய சுகாதாரம், ஊட்டச்சத்து மற்றும் மற்ற நோக்கங்களை நிறைவேற்றத் தேவையான மனித ஆற்றலை மேம்படுத்துதல்.

7. மாநிலத்தில் உள்ள ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரத் திட்டங்களை சரிவர நிறைவேற்றுவதற்குத் தேவையான செயல் ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளுதல்.

3.14. இத்திட்டம் மாநிலத்தில் உள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படாத கிராமப்புற வளர்ச்சி வட்டாரங்களில் படிப்படியாக செயல்படுத்தப்படும். மொத்தமுள்ள 385 வட்டாரங்களில், 316 வட்டாரங்கள் இத்திட்டம் மூலம் பயன்பட உள்ளன. ஏற்கெனவே, திட்டம் ஒன்றில் இயங்கிவரும் 122 வட்டாரங்கள் மற்றும் இத்திட்டம் அல்லது குழந்தை வளர்ச்சித் திட்டம் செயல்படாத 194 வட்டாரங்களில் செயல்படுத்தப்படும். இத்திட்டம் 1991 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 20 ஆம் நாள் முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

<u>திட்டத்தின் அமைப்பு :</u>

<u>கிராம அளவு அமைப்பு.</u>

3.15. இத்திட்டம் செயல்படுத்த தேவைபபடும் பொருட்கள் முதலில் சமுதாய ஊட்டச்சத்து மையங்களுக்கு வழங்கப்படும். 1,500 மக்கள் தொகை உள்ள கிராமங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு மையம் துவங்கப்படும். குறைவான மக்கள் தொகை உள்ள குக்கிராமங்களில் மகளிர் பணிக்குழு மற்றும் மகளிர் மூலம் திட்டம் நிறைவேற்றப்படும். சமுதாய ஊட்டச்சத்து மையத்தை அந்தப் பகுதியில் நன்கு அறிமுகமான ஆயாவின் உதவியுடன் சமுதாய ஊட்டச்சத்து பணியாளர் இயங்கச் செய்வார். கிராம, சுகாதார செவிலியர் மாதந்தோறும் குறிப்பிடப்பட்ட நாட்களில் நான்கு முறை அந்த நிலையத்திற்கு வந்து மகளிருக்கும், குழந்தைகளுக்கும் நலச் சேவை புரிவார்கள்.

3.16. கர்ப்பிணி, பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் பிறந்த குழந்தை நலத் திட்டங்கள் :—

1. மகப்பேறுக்கு முன் பதிவு.

2. மகப்பேறுக்குப் பின் பரிசோதனை.

3. மகப்பேறு இடர்ப்பாட்டை அறிந்து அதற்கான மருத்துவம் மேற்கொள்ளுதல்.

4. இரண ஜன்னி தடுப்பூசி.

5. இரும்புச் சத்து மற்றும் ஃபோலிச் சத்து அளித்தல் ;



6. இணை உணவு அளித்தல்.

7. பயிற்சி பெற்ற பணியாளர்கள் மகப்பேறு காலத்தில் உதவி செய்தல்.

8. மகப்பேறுக்குப்பின் கவனித்தல்.

9. சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்துக் கல்வி.

10. பிறந்த குழந்தைகள் பாதுகாப்பு.

3.17. 0—3 ஆண்டு வரையான குழந்தைகளுக்கான சேவை :

1. மருந்தளித்தல்.

2. நோய்த் தடுப்பு.

3. வயிற்றுப்போக்குத் தடுத்தல்.

4. கடுமையான சுவாச நோய் கண்டறிதலும், சிகிச்சையளித்தலும்.

5. நுண்ணிய ஊட்டச்சத்தளித்தல்.

6. கடுமையான ஊட்டச்சத்துக் குறைவினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு மருத்துவம்.

இத்திட்டத்தில்
3.18. கிராமத்தின் ஊட்டச்சத்து மையம்
கொண்டுவரப்பட்டு மேற்பார்வைக்காக இணைக்கப்படும்.
இந்த நிலையம் குழந்தைகள் நல அமைப்பாளர் மற்றும்
ஆயாவால் நிர்வகிக்கப்படும். புதிய சத்துணவுத் திட்டம்
தேவையான இடத்தில் திறக்கப்படுவதோடு, தற்போதுள்ள
நிலையம் சீரமைக்கப்படும். அவற்றிற்குத் தேவையான
பொருட்கள் வழங்குவதோடு பயிற்சி பெற்ற ஊழியர்களால்
முன்பருவக் கல்வி வழங்கப்படும். மூன்று முதல் ஐந்து வரை
யான குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கப்படுவதோடு,
அவர்களுக்கு ஊட்டச்சத்தும் வழங்கப்படும். கிராம
மருத்துவச் செவிலி இத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள
அனைத்து சேவைகளையும் இக்குழந்தைகளுக்குச் செய்வார்.
ஆரம்ப சுகாதார மருத்துவ அலுவலர் குழந்தைகளை முறை
யாக பரிசோதித்து மேலும் தேவையான மருத்துவ உதவி
அளிப்பார்.

3.19. மூன்று முதல் ஆறு வயது குழந்தைகளுக்கான சேவைத் திட்டங்கள் :

1. முன்பருவக் கல்வி.

2. இணை உணவு அளித்தல்.

3. மருத்துவ பரிசோதனை மற்றும் சிகிச்சை அளித்தல்.

4. வயிற்றுப்போக்கைத் தடுத்தல்.

5. கடுமையான சுவாச நோய்த் தடுப்பு.

6. நுண்ணிய இணை உணவு அளித்தல்.

ஆரம்ப சுகாதார நிலையப் பணிகள் :

3.20. ஒவ்வொரு பதினைந்து கிராமங்களுக்கும் ஒன்றாக ஊட்டச்சத்து மேற்பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டு அப்பகுதி ஊட்டச்சத்துப் பணியாளர் மற்றும் குழந்தை நல அமைப்பாளர் பணிகளை வகைப்படுத்தி மேற்பார்வையிடும் பணியினையும் மேற்கொள்வார். மூன்று முதல் ஐந்து கிராமங்களுக்கு ஒன்றாக ஒரு கிராமச் செவிலியர் நியமிக்கப்பட்டு, அவர் இத்திட்ட பணியாளர்களுக்கு தேவையான உதவிகளைச் செய்வார். கிராமச் சுகாதார செவிலியர், ஊட்டச்சத்துப் பணியாளர், குழந்தைகள் நலப் பணியாளர் மற்றும் ஆயாக்கள் இவர்களின் பணிகளை செம்மைப்படுதத 30,000 மக்கட் தொகைக்கு ஒன்றாக அமைந்துள்ள ஆரம்ப சுகாதார மருத்துவம் அப்பகுதி சுகாதார செவிலியும், ஊட்டச்சத்து மேற்பார்வையாளர்களும் உதவுவார்கள். ஊட்டச் சத்துப் பணியாளர்களும் சுகாதாரப் பணியாளர்களும் மாதம் ஒருமுறை மேலதிகாரிகளைச் சந்திப்பார்கள்.

வட்டார அளவிலான அமைப்பு :

3.21. ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அதிகாரி, வட்டார திட்ட அலுவலராகப் பணியாற்றுவார். அவருக்கு உதவி யாகச் சமுதாயச் சுகாதாரச் செவிலியும், வட்டார விரிவாக்கக் கல்வியாளர், சமுதாய ஊட்டச்சத்து பயிற்றுநர் ஆகியோர் இருப்பார்கள்.

மாவட்ட அளவிலான அமைப்பு :

3.22. இணை இயக்குநர் (மருத்துவப் பணிகள்) மாவட்டத் திட்ட அலுவலராகப் பணிபுரிவார். அவருக்கு உதவியாக மாவட்ட ஊட்டச்சத்து திட்ட அலுவலர், மாவட்டத் தொடர்பு அலுவலர் மற்றும் புள்ளியியல் அலுவலர் ஆகியவர் இருப்பார்கள். மாவட்டத்தின் திட்ட செயல்பாடு மற்றும் முன்னேற்றத்திற்கு இவர்கள் பொறுப்பாவார்கள்.





மாநில அளவிலான அமைப்பு :

3.23. துணைத் தலைவர் அளவிலான (ஒரு இந்திய ஆட்சிப் பணி அலுவலர்) திட்ட ஒருங்கிணைப்பாளராக செயல்படுவார். ஒரு இணை ஒருங்கிணைப்பாளரும் மற்றும் இரு துணை இயக்குநர்களும் அவருக்கு உதவியாக இருப்பார்கள். இந்தத் திட்ட அலுவலகத்திற்குப் பொது சுகாதாரத் துறையும், சமூக நலத் துறையும் உதவியாக இணைந்து செயல்படும். தலைமைச் செயலாளரின் தலைமையில் இயங்கும் அதிகாரமளிக்கப்பட்ட குழு இத்திட்டத்தின் ஆண்டுத் திட்டம், முன்னேற்றத்தை பரிசீலித்தல், திட்ட செயலாக்கத்திற்கான நிதித் தேவைகளை அனுமதித்ததல் போன்றவற்றை மேற்கொள்ளும்.

3.24. தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம்-2, 1991-லிருந்து 1996 வரை ஆறு கட்டங்களாகச் செயல்படுத்தப் பட உள்ளது. இதற்கான மொத்தக் கூடுதல் ஒதுக்கீடு கீழ்க் கண்டபடி ரூ. 321.34 கோடியாகும்:—

| | ரூபாய் கோடியில். |
|---|---|
| 1. ஊட்டச்சத்து சேவை | 154.72 |
| 2. சுகாதாரப் பணிகள் | 51.21 |
| 3. பயிற்சி | 11.24 |
| 4. தொடர்பு | 5.99 |
| 5. திட்ட மேலாண்மை | 8.48 |
| 6. தொடர்பு மற்றும் பயிற்சி மையம் | 1.82 |
| 7. முறைப்படுத்துதல் மற்றும் மதிப்பாய்வு | 2.34 |
| 8. இதர எதிர்பார்ப்புச் செலவினங்கள் | 85.54 |
| மொத்தம் .. | 321.34 |

முன்னேற்றம் :

3.25. இம் மாநிலத்தில் 10 மாவட்டங்களில் 1981 முதல் 1991 வரையில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டத்தின் மூலம் 23.30 இலட்சம் குழந்தைகள் மற்றும் 19.50 இலட்சம் தாய்மார்கள் பயனடைந்தார்கள் 1991 சனவரியில் தொடங்கப்பட்ட ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டம்-2ல் மாநிலம் அனைத்திலும் உள்ள குழந்தைகள் மற்றும் தாய்மார்கள் பயன் பெறுவார்கள்.

## முறைசாரா முன்பருவக் கல்வி :

3.31. ஒவ்வொரு குழந்தைகள் நல மையத்திலும் 3 முதல்
5 வயது வரையிலுள்ள குழந்தைகளுக்கு முறை சாரா முன்
பருவக் கல்வி அளிக்கப்படுகிறது. நல்ல மனப்போக்கையும்,
நடத்தையையும் வளர்க்க முன்பருவக் கல்வி வலியுறுத்தப்படு
கிறது. குழந்தைகளுக்கு ஊக்கம் அளிக்கும் வகையிலும்,
குழந்தை நல பணியாளர்கள் திட்டமிட்டு செயல்படத் தக்க
வகையிலும் கருத்தனுகு முறை செயல்படுத்தப்படுகிறது.
ஒவ்வொரு மையத்திற்கும் விளையாட்டுச் சாதனங்களும்
வழங்கப்பட்டுள்ளன. மேலும் குறைந்த செலவில் கல்வி
மற்றும் விளையாட்டு உபகரணங்கள் செய்ய பணியாளர்
களுக்கு பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

## மருத்துவ பரிசோதனை :

3.32. 6 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்குச் சுகாதாரம்
மற்றும் சத்து நிலைமைகளை கண்காணிக்கும் வகையில்
அவர்களின் எடை பார்க்கப்பட்டு அவ்வப்போது மருத்துவ
உதவிகள் வழங்கப்படுகின்றது. மருத்துவ அலுவலரால்
மாதத்திற்கொரு முறை பொதுவான மருத்துவச் சோதனை
களும் செய்யப்படுகின்றன குழந்தைகளுக்குப் போலியோ
மற்றும் முத்தடுப்பு ஊசிகள் முதலியன போடப்படுகின்றன'
மேலும், அவ்வப்போது வயிற்றுப் பூச்சியை நீக்க மருந்து.
மற்றும் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை வைட்டமின் '' ஏ ''
மாத்திரைகள் கொடுக்கப்படுகின்றன. அனைத்து நகர்ப்புறத்
திட்டங்களிலும் உபகரணங்களுடன் 144 துணை மருத்துவ
மையங்கள் அந்தந்த பகுதியிலுள்ள நோயாளிகளுக்கு
மருத்துவ வசதி அளிப்பதற்காக நிறுவப்பட்டுள்ளது. சுகாதார
திட்டத்தில் இது ஒரு கூடுதல் அங்கமாகும். பெண்கள் கருவுற்ற
காலத்திலும் மகப்பேறுக்குப் பின் பாலூட்டும் காலத்திலும்
இச்சுகாதாரத் திட்டத்தின்கீழ் அவர்கள் கவனிக்கப்படுகிறார்
கள்.

## நோய்த் தடுப்பு :

3.33. ஆறு வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும்
இளம்பிள்ளைவாதம், தட்டம்மை, கக்குவான், காச நோய்,
தொண்டை அடைப்பான் போன்ற நோய்களைத் தடுக்க
தடுப்பூசிகள் போடப்படுகின்றன. அனைத்துக் கருவுற்ற
பெண்களுக்கும், இரண ஜன்னிக்கான தடுப்பூசியும் போடப்
படுகிறது.

## ஊட்டச் சத்து மற்றும் சுகாதாரக் கல்வி :

3.34. 15 வயது முதல் 45 வயது வரையிலுள்ள அனைத்து
பெண்களுக்கும் ஊட்டச் சத்து மற்றும் சுகாதாரக் கல்வி
புகட்டப்படுகிறது. குறிப்பாக, கருவுற்ற மற்றும் பாலூட்டும்



தாய்மார்கள் அதிகக் கவனம் செலுத்தப்படுகிறார்கள். சுகா
தாரம் மற்றும் ஊட்டச் சத்து கல்வியானது கிராம மகளிர்
குழுக்கள் மற்றும் தனி வகுப்புகள் மூலமும், திட்டப் பகுதி
களில் அங்கன்வாடி பணியாளர்களின் செயல்முறை விளக்கக்
கூட்டங்கள், வானொலி போன்ற தொடர்புப் பிரிவுகள் மூலமும்
இச்செய்திகள் எல்லாப் பகுதியினருக்கும் எட்டும் வகையில்
செயல்படுத்தப்படுகிறது. அங்கன்வாடி பணியாளர்களுடன்
தொடர்பு வைத்துக் கொள்ள '' பிள்ளைக் கனியமுதே''
என்ற ஏடு இயக்ககத்திலிருந்து வெளியிடப்படுகிறது.

3.35. மொத்தமுள்ள 111 திட்டப் பகுதிகளில், முப்பது
பகுதிகளில் இத்திட்டம் 1-8-1991 முதல் செயல்படுத்தப்
பட்டு வருகிறது.

செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்திலுள்ள 8 கிராமப்
புற குழந்தைகள் வளர்ச்சித் திட்டங்கள் ஸ்வீடன நாட்டு
உதவியுடன் 1990 முதல் செயல்படுகின்றன. இப்பகுதி
களுக்கான திட்டச் செலவை ஸ்வீடன் நாட்டு நிறுவனம் முழுவது
மாக ஏற்கிறது.

## 3.36. குழந்தைகள் வளர்ச்சித் திட்டப் பகுதிகள் விவரம் :

| | |
|---|---|
| நகர்ப்புற பகுதி .. ... .. .. | 42 |
| கிராமப்புறப் பகுதி .. ... .. ... | 67 |
| மலைப்புறப் பகுதி .. ... .. .. | 2 |
| மொத்தம் .. .. .. .. | 111 |
| மையங்களின் எண்ணிக்கை .. | 10,047 |
| 2 வயதிற்குட்பட்ட பயன் பெறும் குழந்தைகள். | 1,30,178 |
| கர்ப்பிணிகள், தாய்மார்கள் .. | 79,785 |
| 2 வயதிற்கு மேற்பட்டு ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகள் | 1,93,760 |

## ஆதரவற்ற குழந்தைகளுக்கான அரசு இல்லம்

3,37. 5 வயது முதல் 18 வயது வரை உடைய ஆதரவற்ற
குழந்தைகளைப் பராமரிப்பதற்காக தமிழ்நாடு முழுவதும்
அரசு ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லங்கள் இயங்கி
வருகின்றன. மேற்படி இல்லங்கள் இயங்கிவரும் இடங்களில்
அனுமதிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை 20 இல்லங்களில்
50-ம் 2 இல்லங்களில்) 100-ம் ஆகும்.

இவ்வில்லங்களில் குழந்தைகளுக்கு இலவச உணவு, உறைவிடம், உடை, பாட நூல், குறிப்பேடுகள், மருத்துவப் பாதுகாப்பு மற்றும் கல்வி ஆகியவை அளிக்கப்படுகின்றன. இல்லத்திலேயே 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை கல்வி அளிக்கப்படுகிறது. ஆறாம் வகுப்பு முதல் குழந்தைகள் அரசு மாநகராட்சி, நகராட்சி பள்ளிகளுக்கு உயர் கல்வி பயில அனுப்பப்படுகின்றனர். 1991-92 ஆம் ஆண்டிற்கு ரூ. 140.73 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

உணவிற்காக ஒரு குழந்தைக்கு ஒரு மாதத்திற்கு ரூ. 90-ம் உடைக்காக ஓராண்டிற்காக ஒரு குழந்தைக்கு ரூ. 35 வீதமும் படுக்கை பொருட்களுக்காக ரூ. 20 வீதமும் வழங்கப்படுகிறது. குளிர்பிரதேசமான நீலகிரி மாவட்டத்திலுள்ள அரசு ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லக் குழந்தைகளுக்கு ஒரு குழந்தைக்கு ஆண்டொன்றுக்கு உடைக்காக ரூ. 60 வீதமும் படுக்கைப் பொருள்களுக்காக ரூ. 50 வீதமும் வழங்கப்படுகிறது.

1 முதல் 5-ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 35 வீதமும் ஆறு முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு ரூ. 50 வீதமும், 9 மற்றும் 10 ஆம் வகுப்புகளில் பயிலும் குழந்தைகளுக்கு ரூ. 90 வீதமும் மேல் நிலை வகுப்பில் பயிலும் குழந்தைகளுக்கு ரூ. 190 வீதமும் பாட நூல் மற்றும் குறிப்பேடுகள வாங்கி வழங்கப்படுகிறது. தற்பொழுது மாதாந்திர உணவூட்டுச் செலவினமாகிய ரூ. 90-க்குப் பதிலாக உணவு அளவீட்டு முறை எற்படுத்தப்பட்டுள்ளது. பெண் கைதிகளின் குழந்தைகளுக்கு இவ்வில்லங்களில் சேர்த்து கொள்ளப்படுகின்றனர். அனைத்து அரசு ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லங்களில் தையல் மற்றும் இதர கைவேலைகளில் பயிற்சி அளிக்க தனிப் பிரிவு 1988–89 முதல் அமைக்கப்பட்டுள்ளது. வடாற்காடு—அம்பேத்கார் மற்றும் நெல்லை—கட்டபொம்மன், மாவட்டங்களில் ஒவ்வொன்றிலும் ஓர் '' ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லம் '' தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு இல்லத்திலும் 100 குழந்தைகள் சேர்க்கப்பட்டு, உதவி செய்யப்படும். இதற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 3.96 இலட்சம் ஆகும்.

**நடைபாதையில் வாழும் குழந்தைகளுக்கு நிவாரண மையம் தொடங்குதல் :**

பெற்றோரின் ஆதரவு இன்றி, பல குழந்தைகள் நடைபாதையில் வாழ்கிறார்கள். அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் நோக்குடன் ஓர் நிவாரண மையம் இந்த ஆண்டு தொடங்கப்படும். இதனை ஒரு சேவை நிறுவனம் எடுத்து நடத்த ஏற்பாடு செய்யப்படும். இதற்கு ஆகும் ஆண்டுச் செலவு ரூ. 2,50 இலட்சம் ஆகும்.



**பராமரிப்பும் பாதுகாப்பும் தேவையான குழந்தைகளுக்கான மத்திய, மாநில அரசின் நலத் திட்டம்.**

3.38. ஆதரவற்ற குழந்தைகளுக்கு மறுவாழ்வு அளித்து தனது சொந்த குடும்பங்களில் வசிப்பது போன்ற உணர்வில் அவர்களை வாழவைக்கும் நோக்கத்துடன் 1974–75-ல் குடில் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. 25 குழந்தைகளைக் கொண்ட பிரிவு ஒரு குடில் ஆகும். ஒவ்வொரு குடிலும் ஒரு இல்லத்தாயின் பொறுப்பில் இருக்கும். இவ்வில்லத்தாய் தனது குடிலிலுள்ள குழந்தைகளை தன் குழந்தைபோல் பாதித்து அவர்களுக்கு போதிய உணவு, உடை, இருப்பிடம், மருத்துவ வசதி, கல்வி வசதி, பொழுதுபோக்கு வசதி முதலியன வழங்கி அறிவுரை கூறி வழிகாட்டியாக நடந்து கொள்வார். குடில் திட்டப்படி குழந்தைகளை பராமரிக்கவும் இக் குடில்களைக் கட்டவும் தனியார் தொண்டு நிறுவனங்களுக்கு மானியம் வழங்கப்படுகிறது. நிர்ணயிக்கப்பட்ட தொகையில் 90 சத வீதம் மானியமாக வழங்கப்படுகிறது. 10 சதவீதம் செலவை நிறுவனமே ஏற்கவேண்டும். 90 சதவீதம் மானியத் தொகை மத்திய அரசாலும், மாநில அரசாலும் 50 : 50 என்ற விகிதத்தில் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. 01—04—1989 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டு இயங்கிவரும் நிறுவனங்களிலுள்ள குழந்தைகளுக்கான முழு பராமரிப்புத் தொகையையும் மாநில அரசே ஏற்கிறது. இத்திட்டத்தின்படி தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்படும் நிதி உதவிகள் பற்றிய விவரம் பின் வருமாறு :—

**தொடரும் செலவு :**

1. உணவு, உடை மற்றும் இதர செலவினங்களுக்காக : ஒரு குழந்தைக்கு மாதமொன்றிற்கு ரூ. 200 வீதம்.

   வாடகை :—ஒரு குழந்தைக்கு மாதமொன்றிற்கு ரூ. 40 வீதம் (கட்டிடம் கட்ட மானியம் வழங்கப்பட்டவுடன் இது நிறுத்தப்படும்.)

**தொடராச் செலவு :**

இருக்கைகள், படுக்கைகள், மரச்சாமான்கள் முதலியவற்றிற்காக குழந்தை ஒன்றுக்கு ரூ. 500 வீதம்.

கட்டிடம் கட்டத் தொடங்கியதும் ஒரு குழந்தைக்கு ரூ. 6,000 வீதம் அல்லது பொதுப்பணித்துறையால் நிர்ணயம் செய்யப்படும் தொகை இதில் எது குறைவானதோ அத்தொகை கட்டிடம் கட்ட மானியமாக வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் 170 தொண்டு நிறுவனங்கள் இவ்வாறு மானியம் பெறுகின்றன. இத்திட்டத்தினால் 14,032 ஆதரவற்ற குழந்தைகள் பயனடைகின்றனர். 1991–92 ஆம் ஆண்டிற்கு ரூ. 294.20 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**இந்திய குழந்தைகள் நலச் சங்கத்தின் தஞ்சைக் கிளையால் நடத்தப்படும் குழந்தைகள் நல இல்லத்திற்கு மானியம் அளித்தல்.'**

3.39. இந்திய குழந்தைகள் நலச் சங்கத்தின் தஞ்சைக் கிளையால் நடத்தப்படும் குழந்தைகள் இல்லத்தின் நிர்வாகம் 8—11—1982 முதல் சீர்திருத்தப்பள்ளித் துறையிலிருந்து சமூக நலத் துறைக்கு மாற்றப்பட்டு 1982–83-ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் ரூ. 30,000 பராமரிப்பு மானியமாக வழங்கப் பட்டுவருகிறது.

பெண் சிசுவதையை தடுப்பதற்கான நடவடிக்கைகள் :

3.40. பெண் சிசுவதைப் பிரச்சினை சமீப காலமாக மிகவும் முக்கியமான பிரச்சினையாக விவாதிக்கப்பட்டு வருகிறது.

இக்கொடிய பழக்கம் நமது மாநிலத்தில் மதுரை மாவட்டத்தில் உசிலம்பட்டியைச் சுற்றியுள்ள சில பகுதியினரிடையே பரவியுள்ளது.

இப்பகுதி வறட்சி மிகுந்த பகுதி. இங்கு வாழ்பவரில் பெரும்பாலானவர்கள் வேளாண்மைத் தொழிலாளர்கள்; ஏழ்மையாலும், கல்வி அறிவின்மையாலும், வரதட்சணைக் கொடுமையாலும் பாதிக்கப்படும் இம்மக்களில் சிலர் பெரும் சுமையென எண்ணி, பிறந்த பெண் குழந்தையை அப்பொழுதே உயிர் வாழவிடாமல் செய்யும் நிலை உள்ளதெனத் தெரிகிறது.

3.41. இவ்வாறு பாதிப்புக்கு உள்ளாகும் குழந்தைகளை மீட்பதற்காகவும், காப்பதற்காகவும், ஒரு வரவேற்பு மையம் உசிலம்பட்டியில் அரசு மான்ய உதவியுடன் இந்திய குழந்தை நலச் சங்கத்தினால் தொடங்கப்பட்டுள்ளது. இவ்வில்லம் 1—8—1990 முதல் ஒரு மூதாய் மற்றும் இரு ஆயாக்களின் உதவியுடன் உசிலம்பட்டியில் உள்ள கேசவன்காளை புதூரில் நடத்தப்பட்டு வருகிறது.

சமூக மற்றும் பொருளாதார சூழ்நிலை காரணமாக பெண் குழந்தைகளை வளர்க்க விரும்பாத பெற்றோர்கள் இவ்வில்லத்தில் தங்கள் பெண் குழந்தைகளை விட்டுச் செல்லலாம். இக்குழந்தைகளை நன்கு பராமரிக்க இல்லத்தில் பயிற்சி பெற்ற பணியாளர்கள் உள்ளனர். இங்கு இக்குழந்தைகளுக்கு உணவு மற்றும் மருத்துவ வசதி அளிக்கப்பட்டு பாதுகாப்பான சூழ்நிலையில் இக்குழந்தைகள் பராமரிக்கப்படுகிறார்கள்.

தற்போது இம்மையத்தில் 5 குழந்தைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். மேலும், இப்பகுதியில் பெண்கள், பெண் சிசுவதையை தவறு என உணர்ந்து திருந்தி வருவதாக தெரிய வருகின்றன.



## அத்தியாயம் 4.

### ஊனமுற்றோர் நலம்.

4.1. பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து
ஆள்வினை இன்மை பழி
—என்றார் வள்ளுவப் பெருந்தகை.

உறுப்புக் குறைவு ஒரு குறையே அல்ல, பழியும் அல்ல, பாவமும் அல்ல. முயற்சிக் குறைவே உண்மையான குறை ஆகும்; பழி ஆகும் ; பாவமும் ஆகும் என்கிறார் வள்ளுவர். இந்த உண்மையைச் சமுதாயம் உணரவேண்டும், ஊனமுற்றோருக்கு உரிய வாய்ப்புகளும், உதவிகளும் வழங்க வேண்டும் ; அதன் மூலம் ஊனமுற்றோரும் பிறரைப்போல் வாழ வழி வகுக்க வேண்டும். இந்தக் குறிக்கோளை இலட்சியமாகக் கொண்டு, சமூக நலத் துறை ஊனமுற்றோர் நலனுக்காக உழைத்து வருகிறது.

ஊனமுற்றோரை நான்கு வகையாகப் பிரிக்கலாம். அவர்கள் கண் பார்வையற்றவர், காது கேளாதவர், கை-கால் ஊனமுற்றவர் மற்றும் மன வளர்ச்சி குன்றியவர் ஆவார்.

4.2. ஊனமுற்றோருக்குக் கல்வி :

ஊனமுற்றோருக்கு (கண் பார்வையற்றவர், காது கேளாதவர், கை-கால் ஊனமுற்றவர் மற்றும் மன வளர்ச்சி குன்றியவர்) உதவிகள் புரிந்து, அவர்களின் மறுவாழ்விற்கான சிறப்பு நடவடிக்கைகள் சமூகநலத் துறையால் எடுக்கப்படுகின்றன. குறிப்பாக அவர்களுக்கு சிறப்புக் கல்வி, கல்வி உதவித் தொகை, தொழில் பயிற்சி, பணியில் அமர்த்துதல், சுயவேலை வாய்ப்பில் ஈடுபட உதவுதல், தேவையான உபகரணங்களை இலவசமாக வழங்குதல், இலவசப் பயணச் சலுகை, கடும் ஊனத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பராமரிப்பு மானியம் வழங்குதல் போன்ற பல உதவிகள் வழங்கப்படுகின்றன.

ஊனமுற்றோருக்குக் கல்வி கற்பிப்பதற்கு தனியாக சிறப்பு பள்ளிகள் நடத்தப்படுகின்றன. அப்பள்ளிகள் பற்றிய விவரங்கள் வருமாறு :

| வரிசை எண் | பள்ளியின் பெயர். | அரசுப் பள்ளி | அரசு மானியம் பெறும் பள்ளி. | நகராட்சி பள்ளி | மொத்தம். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | பார்வையற்றோருக்கான பள்ளி. | 11 | 7 | .. | 20 |
| 2. | காது கேளாதோருக்கான பள்ளி. | 10 | 15 | 2 | 27 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 மனவளர்ச்சி குன்றியோருக்கான பள்ளி. | 1 | 7 | .. | 8 |
| 4 கை-கால் ஊனமுற்றோருக்கான பள்ளி. | 1 | 5 | .. | 6 |
| 5 தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான பள்ளி. | .. | 1 | .. | 1 |
| மொத்தம் .. | 23 | 37 | 2 | 62 |

சுமார் 7,000 உடல் ஊனமுற்ற குழந்தைகள் சிறப்புப் பள்ளிகள் மூலம் கல்வி வசதி பெற்று வருகிறார்கள். அரசு சிறப்புப் பள்ளிகள் மூலம் கல்வி வசதி பெறும் மாணவர்களுக்கு உணவு மற்றும் தங்கும் வசதி இலவசமாக வழங்கப் கப்படுகிறது. சீருடைகள் இரண்டு ஜதை ஆண்டுதோறும் இலவசமாக வழங்கப்படுகிறது. 1990–91ஆம் ஆண்டில் 6,873 குழந்தைகள் சிறப்புக் கல்வி வசதி பெற்றார்கள் 1990–91ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு ரூ. 209.91 இலட்சம் ஆகும். 1991–92 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு ரூ. 230.13 இலட்சம் ஆகும்.

4.3. ஊனமுற்றோருக்கான அரசுப் பள்ளிகளும் அங்குள்ள வகுப்புக்கள் பற்றிய விவரமும் பின்வருமாறு:

| வரிசை எண். | பள்ளிகள் இயங்கும் இடம். | செயல்பட்டு வரும் வகுப்புகள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |

**கண்பார்வையற்றோருக்கான அரசுப் பள்ளிகள்:**

| | | |
|---|---|---|
| 1 | பூவிருந்தவல்லி | 1 முதல் 12 வரை |
| 2 | திருச்சிராப்பள்ளி | 1 முதல் 12 வரை |
| 3 | தஞ்சாவூர் | 1 முதல் 8 வரை. |
| 4 | சேலம் | 1 முதல் 8 வரை, |



| வரிசை எண். | பள்ளிகள் இயங்கும் இடம். | செயல்பட்டு வரும் வகுப்புகள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 5 | மதுரை | 1 முதல் 6 வரை. |
| 6 | கடலூர் | 1 முதல் 5 வரை. |
| 7 | சிவகங்கை | 1 முதல் 5 வரை. |
| 8 | நாகர்கோவில் | 1 முதல் 5 வரை. |
| 9 | கோயம்புத்தூர் | 1 முதல் 5 வரை. |
| 10 | புதுக்கோட்டை | 1 முதல் 5 வரை. |
| 11 | தர்மபுரி | 1 முதல் 5 வரை. |

**காது கேளாதோருக்கான பள்ளிகள் :**

| | | |
|---|---|---|
| 1 | தஞ்சாவூர் | 1 முதல் 12 வரை. |
| 2 | தர்மபுரி | 1 முதல் 10 வரை. |
| 3 | கடலூர் | 1 முதல் 7 வரை. |
| 4 | புதுக்கோட்டை | 1 முதல் 7 வரை. |
| 5 | காஞ்சிபுரம் | 1 முதல் 6 வரை. |
| 6 | சேலம் | 1 முதல் 5 வரை. |
| 7 | ஈரோடு | 1 முதல் 5 வரை. |
| 8 | விருதுநகர் | 1 முதல் 5 வரை. |
| 9 | உதகமண்டலம் | 1 முதல் 5 வரை. |
| 10 | சென்னை | 1 முதல் 5 வரை, |

**கை-கால் ஊனமுற்றோருக்கான பள்ளி :**

| | |
|---|---|
| மதுரை | 1 முதல் 5 வரை |

மனவளர்ச்சி குன்றியோருக்கான பள்ளி :

| | |
|---|---|
| மனவளர்ச்சி குன்றியோருக்கான அரசு நிறுவனம், குரோம்பேட்டை, சென்னை. | குழந்தைகளின் மனவளர்ச்சிக்குத் தகுந்தாற்போல் மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டு சிறப்புக் கல்வி அளிக்கப்படுகிறது. |
| | 5 வயது முதல் 9 வயதுக்குட்பட்ட மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு கல்வி அளிக்கப்படுகிறது. 50 குழந்தைகள் இந்நிலையத்தில் உள்ளனர். |

1991–92 ஆம் ஆண்டில் மனவளர்ச்சி குன்றியோருக்கு நிலையம் ஒன்று புதிதாகத் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்நிலையத்தில் மனவளர்ச்சி குன்றியவர்—குழந்தைகளும் வயது வந்தவரும்—40 நபர் பயன் பெறுவர் அவர்களுக்கு கல்வி பயிற்சி, தங்களைத் தாங்களே பேணும் முறைக் கற்றுந்தரப்படும். தனியார் நிறுவனம் அரசு உதவியுடன் இதனை நடத்துவர். நிதி ஒதுக்கீடு ரூ. 2.01 இலட்சம் ஆகும்.

காதுகேளாத குழந்தைகளுக்கு முன்பருவப் பள்ளி :

ஒவ்வொரு மாவட்டத்திலும், காது கேளாத 3 வயதுக்கு மேல் 6 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு ஒரு முன்பருவப் பள்ளி வீதம் 20 முன்பருவப்பள்ளிகள் நடைபெற்று வருகின்றன. காது கேட்கும்திறன் குறையுள்ள குழந்தைகளின் பேச்சுத் திறனை மேம் படுத்திடவும், கேட்கும் திறனை செம்மைப்படுத்திடவும் இப் பள்ளி தொடங்கப்பட்டுள்ளது. சிறு வயதிலேயே முன் பருவப் பள்ளியில் கல்வி பயிலும் குழந்தைகள் தங்களுடைய பேச்சுத் திறனை வளர்த்துக் கொள்ள இதன் மூலம் வழிவகை செய்யப்பட்டுள்ளது. சுமார் 188 குழந்தைகள் இத்திட்டத் தின் மூலம் பயன்பெற்று வருகிறார்கள். 1991–92 ஆம் ஆண் டில் இத்திட்டத்திற்கு ரூ. 14.89 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய் யப்பட்டுள்ளது.

பார்வையுற்ற காது கேளாத மற்றும் மனவளர்ச்சி குன்றிய மாணவர்களுக்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளித்தல் :

பார்வையுற்ற காது கேளாத மற்றும் மன வளர்ச்சி குன்றிய மாணவர்களுக்கு நல்ல முறையில் கல்வி கற்றுத்தந்திடும் வகையில் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்க சிறப்புப் பயிற்சித்



திட்டம் அரசு நிறுவனத்தின் மூலம் அல்லது சேவை நிறுவனத்தின் மூலம் கீழ் குறிப்பிட்டுள்ள இடங்களில் நடத்தப்படுகிறது. அவை யாவன :—

| வரிசை எண். | பயிற்சி விவரம். | அரசு. | அரசு மான்யம் பெறுபவை. | மொத்தம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | கண்பார்வையற்றவர்களுக்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்குப் பயிற்சி. | 1 | .. | 1 |
| 2 | காது கேளாதவர்களுக்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்குப் பயிற்சி. | .. | 1 | 1 |
| 3 | மனவளர்ச்சிக் குன்றியவர்களுக்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்குப் பயிற்சி. | ... | 1 | 1 |
| | மொத்தம் | 1 | 2 | 3 |

4.4. கண் பார்வையற்றவர்களுக்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்குப் பயிற்சி :

அரசு பார்வையற்றோர் மேல்நிலைப் பள்ளி, பூவிருந்தவல்லியில் மத்திய அரசு உதவியுடன், மண்டலப் பயிற்சி மையம் ஒன்று துவக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இப்பயிற்சி மையத்தில் 20 ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

இதே போன்று மாநில அரசும் சிறப்பு பயிற்சிப் பகுதி ஒன்று, பார்வையற்றோருக்கு கல்வி கற்பிக்கும் ஆசியருக்கு ஒரு பிரிவை நடத்தி வருகிறது. இங்கு 15 ஆசிரியர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதற்கென ரூ. 3.21 இலட்சம் 1991–92 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4.5. காது கேளாதவர்களுக்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்குப் பயிற்சி :

சென்னையில் உள்ள சிறுமலர் காது கேளாதோர் மேல்நிலைப் பள்ளியில் ஒவ்வொரு ஆண்டும், 10 ஆசிரியர்களுக்கு, காது கேட்கும் தன்மை குன்றிய மாணவர்களுக்கு கல்வி கற்பிப்பதற்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியை நடத்த அரசின்

53—328—38

மானியம் முழுமையாக இப் பள்ளிக்கு வழங்கப்படுகிறது. சிறப்புப் பள்ளிகளில் பணிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் ஆசிரியர்களுக்கு இப்பயிற்சித் திட்டம் அளிக்கலாகிறது.

பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் தேவையைக் கருத்தில் கொண்டு, மேலும் 25 ஆசிரியர்களுக்கு ஓர் சிறப்புப் பயிற்சித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இப்பயிற்சித் திட்டத்தையும் சிறுமலர் காதுகேளாதோர் மேல் நிலைப்பள்ளியே நடத்துகிறது. 1991-92 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு ரூ. 3.60 இலட்சம் ஆகும். மொத்தம் 35 ஆசிரியர்கள் இந்த ஆண்டு பயிற்சி பெறுவார்கள்.

## 4.6. மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு சிறப்புப் பயிற்சி:

மன வளர்ச்சி குன்றிய மாணவர்களுக்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு ஓர் சிறப்புப் பயிற்சித் திட்டம் செயல்படுத்தப் படுகிறது. இப் பயிற்சியை ''பால விகார் பயிற்சி நிலையம், சென்னை'' நடத்துகிறது. இதற்கு 1990-91 ஆம் ஆண்டில் ரூ. 0.75 இலட்சம் மானியம் வழங்கப்பட்டது. 1991-92 ஆம் ஆண்டுக்கு ரூ. 0.75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

20 ஆசிரியர்கள் இந்த ஆண்டில் இச் சிறப்புப் பயிற்சியை பெறுவார்கள்.

## 4.7. ஊனமுற்றோருக்கு கல்வி உதவித் தொகை வழங்குதல்;

### அ. மத்திய அரசு நிதி உதவியுடன் வழங்கப்படும் கல்வி உதவித் தொகை:

ஒன்பதாம் வகுப்பும் அதற்கு மேலும் பயின்று வரும் ஊனமுற்ற மாணவர்களுக்கும், தொழில் பயிற்சி பெறும் ஊனமுற்ற மாணவர்களுக்கும், மத்திய அரசின் திட்டத்தின்கீழ் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது. இத் திட்டம் 1977-78 ஆம் ஆண்டு முதல் செயல் படுத்தப்பட்டு வருகிறது. 1990-91 ஆம் வருடத்தில், 2,080 உடல் ஊனமுற்ற மாணவர்கள் கல்வி உதவித் தொகை பெற்றார்கள். இந்த ஆண்டு (1991-92) மத்திய அரசிடமிருந்து ரூ. 30 இலட்சம் நிதி ஒதுக்கீடு கேட்கப்பட்டுள்ளது மத்திய அரசின் நிதி ஒதுக்கீட்டை எதிர் நோக்கி மாநில அரசு, முன்னதாக நிதி ஒதுக்கீடு செய்து, இத் திட்டத்தை செயல்படுத்துகிறது. இந்த ஆண்டு சுமார் 2,100 ஊனமுற்றவர்கள் பயனடைவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

### ஆ. தமிழ்நாடு அரசு வழங்கும் கல்வி உதவித் தொகை:

முதலாம் வகுப்பு முதல் 8-ஆம் வகுப்பு வரை பள்ளிகளில் படிக்கும் ஊனமுற்ற மாணவர்களுக்கு, புத்தகங்கள் மற்றும் நோட்டுப் புத்தகங்கள் வாங்குவதற்காக உதவித் தொகை



வழங்கப்படுகிறது. ஒரு மாணவருக்கு ஆண்டிற்கு ரூ. 10 முதல் ரூ. 84 வரை அவர் படிக்கும் வகுப்பிற்குத் தகுந்தாற்போல் உதவித் தொகை வழங்கப்படுகிறது. 1990-91 ஆம் வருடத்தில் 12,888 நபர்கள் உதவித் தொகை பெற்றார்கள். 1991-92-ஆம் ஆண்டுக்கு நிதி ஒதுக்கீடு ரூ. 6.62 இலட்சம் ஆகும். இதனால் சுமார் 13,800 மாணவர்கள் இந்த ஆண்டு பயன் அடைவார்கள்.

## பார்வையற்ற மாணவர்கள் தேர்வு எழுத உதவுபவர்க்கு உதவி:

4.8. பார்வையற்றோருக்கான சிறப்புப் பள்ளிகளில் 9ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் தேர்வின்போது வினாக்களுக்கு, பார்வையற்ற மாணவர்களால் வாய் மூலம் அளிக்கப்படும் பதிலினை அவ்வாறே எழுத பார்வையுள்ள உதவியாளர்கள் வைத்துக் கொள்ள அனுமதியளித்து, பார்வையற்ற மாணவர்கள் தேர்வுகளில் நல்ல மதிப்பெண் பெற்றிட வழிவகை செய்யப்பட்டுள்ளது. அரசு இவ்வாறு பார்வையற்ற மாணவர்களுக்கு தேர்வு எழுத உதவி புரிபவர்களுக்கு ஒரு தேர்வுத் தாளுக்கு ரூ. 6 வீதம் உதவித் தொகை வழங்கி வருகிறது. மேற்படி, உதவித் தொகை அரசு பார்வையற்றோர் மேல்நிலைப்பள்ளி, பூவிருந்தவல்லி, அரசு பார்வையற்றோர் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, திருச்சி. சிறுமலர் பார்வையற்றோர் பள்ளி, சென்னை மற்றும் செயின்ட் லூயிஸ் பார்வையற்றோர் பள்ளி, சென்னை ஆகிய பள்ளிகளுக்கு அளிக்கப்படுகிறது. சுமார் 200 மாணவர்கள் இத்திட்டத்தால் பயனடைகிறார்கள். இத் திட்டத்திற்கென 20,000 ரூபாய் 1991-92 ஆம் ஆண்டிற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 4.9. ஊனமுற்றோருக்குப் பயிற்சி:

சமூக நலத் துறை, கண்பார்வையற்றோர், காதுகேளாதோர், கை கால் ஊனமுற்றோர் ஆகியோருக்கு பயிற்சி நிலையங்கள் மூலம் தக்க பயிற்சிகளை அளித்து வருகிறது. இதன் விபரங்கள் பின்வருமாறு:—

## 4.10. கிண்டியிலுள்ள அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில் காது கேளாதோருக்குப் பயிற்சிப் பிரிவு:

கிண்டியிலுள்ள அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில் காது கேளாதவருக்கு பயிற்சியளிப்பதற்காக ஒரு சிறப்புப் பிரிவு ஏற்படுத்தப்பட்டு, தற்போது 15 காதுகேளாத மாணவர்கள் ''பொருத்துநர்'' பணியில் பயிற்சி பெற்று வருகின்றனர். இத் திட்டத்திற்காக 1990-91 ஆம் ஆண்டில் ரூ. 0.54 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1991-92 ஆம் ஆண்டுக்கு ரூ. 0.62 இலட்ச நிதி செய்யப்பட்டுள்ளது.

## 4.11. பார்வையற்றோருக்கான அரசு தொழில் பயிற்சி நிலையம் பூவிருந்தவல்லி:

பார்வையற்றவர்களுக்கு இலகு பொறியியல் பணியில் (Light Engineering T.adcs) பயிற்சி அளிப்பதற்காக ஒரு பயிற்சி நிலையம் 1967 ஆம் ஆண்டு சென்னை கிண்டியில் தொடங்கப்பட்டது. 1990 ஆம் ஆண்டு முதல் இது பூவிருந்தவல்லியில் இயங்கி வருகிறது. ஆரம்பகாலத்தில் வயது வந்த பார்வையற்றவர்களுக்கு இலகு பொறியியல் பணியில் 6 மாத காலம் பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது. ஆனால் இப்பயிற்சி தொழில் துறையினரின் எதிர் பார்ப்புகளுக்கு ஈடான வகையில் இல்லை. இதன் காரணமாக இப் பயிற்சியின் காலம் மற்றும் பயிற்சியின் தன்மை போன்ற வற்றை மாற்றி அமைக்கும்படியான அவசியம் ஏற்பட்டது. எனவே, 1982-83 ஆம் ஆண்டு முதல் பார்வையற்றவர்களுக்கு, தகுந்த தேர்ந்தெடுக்கப்பட்ட தொழிலில் அவர்களுக்கு போது மான திறமை ஏற்படவும் வேலை வாய்ப்பு அளிக்கவும் இதனை தொழிற் பயிற்சி மையமாக மாற்றி அமைத்து மேற்படி பயிற்சி திட்டத்தின்கீழ் பொறிப் பகுதி பொருத்துதல், புத்தகம் கட்டு தல் மற்றும் மின் கம்பி சுற்றுதல் ஆகிய மூன்று பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. மின் கம்பி சுற்றுவதில் 6 மாத காலமும், ஏனையவற்றிற்கு ஒரு வருடமும் பயிற்சி அளிக்கப்படு கிறது. ஒவ்வொரு ஆண்டும் 30 பார்வையற்ற நபர்கள் இப் பயிற்சியில் சேர்க்கப்படுகின்றனர். 1990-91 ஆம் ஆண்டு வரவு- செலவு திட்டத்தில் இந்த நிலையத்திற்கு ரூ. 4.59 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டது. மேலும், இப் பயிற்சியாளர்களுக்கு ஆண் டிற்கு இரண்டு ஜதை சீருடை இலவசமாக வழங்கப்படுகிறது. 1991-92-ஆம் ஆண்டுக்கு ரூ. 4.59 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ளது. ஆண்டு தோறும் 30 நபர்கள் பயிற்சி பெறுகிறார்கள்.

## 4.12. பயிற்சி பெற்ற பார்வையற்ற/காது கேளாத நபர்களை அரசு உதவிப் பணம் அளித்து தொழில் பழகுநராக நிய மித்தல்:

பூவிருந்தவல்லியில் இயங்கும் பார்வையற்றவருக்கான அரசு தொழில் பயிற்சி மையத்தில் பயிற்சிபெற்ற பார்வையற்றவர், சென்னை கிண்டியிலும், மதுரையிலும் உள்ள அரசு தொழில் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்ற காது கேளாதவரும் அரசு/ அரசுசார்பு/தனியார் நிறுவனங்களில் தொழில் பழகுநராக நிய மிக்கப்படுகிறார்கள். தொழில் பழகும் காலம் ஓராண்டு. அப் பொழுது அவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ. 400 உதவிப் பணம் வழங்கப்படுகிறது. தொழில் பழகுவதை வெற்றிகரமாக முடித்தபின்பு, அதே நிறுவனத்தில், காலி ஏ ப ம் எழும்பொழுது அவர்கள் பணியில் அமர்த்தப்படுவார்கள். இத் திட்டத்தால் 1991-92 ஆம் ஆண்டில் 100 பேர் தொழில் பழகுநராக நியமிக் கப்படுவார்கள். இதற்கு ஆகும் ஆண்டுச் செலவு ரூ. 2.00 இலட் சம் ஆகும்.



## 4.13. ஊனமுற்றோருக்கான வேலைவாய் [illegible]

தகுதிவாய்ந்த பணிகளில் ஊனமுற்றோரைப் பணியில் அமர்த்த பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்தகைய நடவடிக்கைகள் பற்றிய விவரங்கள் வருமாறு:

## 4.14. மண்டல மறுவாழ்வு மையம் :

ஊனமுற்றோருக்கு கல்வி, பயிற்சி, வேலைவாய்ப்பு, சுய வேலை வாய்ப்புக்கு உதவி, இலவச உபகரணங்கள் வழங்குதல் போன்ற பணிகளை சிறப்பாகச் செய்யும் பொருட்டு, அதற் கான ஓர் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. அதுதான் மண்டல மறுவாழ்வு மையம். இம்மையங்கள் சென்னை, மதுரை, கோவை, வேலூர், தஞ்சாவூர் ஆகிய 5 இடங்களில் செயல்படுகின்றன. 1990-91 ஆம் ஆண்டில் இம்மறுவாழ்வு மையங்கள் மூலம் 7,776 ஊனமுற்றோர் உதவி செய்யப்பட்டுள்ளார்கள். 1991-92 ஆம் ஆண்டில் 7,800 ஊனமுற்றோர் பயன் அடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. 1991-92 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு ரூ. 24.21 இலட்சம் ஆகும்.

## 4.15. ஊனமுற்றோரை பணியில் அமர்த்த மாவட்ட அளவிலான தேர்வுக் குழு:

அரசின் ஆணைப்படி ஒவ்வொரு மாவட்டத்திலும், கீழ்க் கண்ட உறுப்பினர்களை அங்கத்தினர்களாகக் கொண்ட மாவட்ட அளவிலான குழு ஒன்று அமைத்து, அக் குழுவின் மூலம் ஊனமுற்றோருக்கென ஒதுக்கப்பட்ட 3 விழுக்காடு ஒதுக்கீட்டை சி. மற்றும் டி. பிரிவான டணிகளுக்கு பணியாளர் தேர்வு செய்ய வகை செய்யப்பட்டுள்ளது:—

1. மாவட்ட ஆட்சியர்—தலைவர்,.

2. மாவட்ட வேலைவாய்ப்பில் உதவி இயக்குநர்-உறுப்பினர்

3. எந்தத் துறையில் பணியிடம் காலியாக உள்ளதோ அந் தத் துறையைச் சார்ந்த அலுவலர்—உறுப்பினர்.

4. மண்டல மறுவாழ்வு அலுவலர்/மாவட்ட சமூக நல அலு வலர்-உறுப்பினர்-செயலர்.

மாவட்டம் தோறும் இக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

### 4.16. வேலை கிடைக்காத பார்வையற்றோருக்கு நிவாரணத் தொகை வழங்குதல் :

மாநிலத்திலுள்ள பல்வேறு வேலைவாய்ப்பகங்களில் பதிவு செய்து, வேலை கிடைக்காத பார்வையற்றவர்களுக்கு நிவா ரணத் தொகை வழங்கும் திட்டம் 1981 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த நிவாரணத் தொகை யினைப் பெற கீழ்க்கண்டுள்ளபடி தகுதிகள் நிர்ணயிக்கப் பட்டுள்ளன :—

(1) பார்வையற்றவராக இருக்க வேண்டும்.

(2) வயது : 18 வயதுக்கு மேல் 40 வயதுக்குள் (தாழ்த்த பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு 45 வயது வரை வயது வரம்பு தளர்த்தப்பட்டுள் ளது).

(3) வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்து ஓராண் டுக்கு மேல் காத்திருப்போராக இருக்க வேண்டும்.

மேற்படி தகுதி உள்ள பார்வையற்ற நபர்களுக்கு வழங்கப் படும் நிவாரணத் தொகை விவரங்கள் வருமாறு :—

| | மாதம் ரூபாய். |
|---|---|
| (அ) பட்டதாரிகள்/முதுநிலை பட்டதாரிகள் | 200 |
| (ஆ) புகுமுக வகுப்பு/மேல் நிலை வகுப்பு தேறியவர்/பட்டப் படிப்பு முடிக்காத வர்கள் .. .. | 150 |
| (இ) இதர வகுப்புகள் .. .. | 100 |

இந்நிவாரணத் தொகை இவர்கள் தகுதி பெறும் காலத்தில் இருந்து வேலை வாய்ப்புக் கிடைக்கும் வரை அல்லது 40—45 வயது முடியும் வரை அதிகபட்சம் 5 ஆண்டுகளுக்கு வழங்கப்படும். 1990–91 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ. 13.37 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1,036 பார்வையற்றவர்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந் துள்ளார்கள். மேலும் 1991–92-க்கு நிதி ரூ. 10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.17. ஊனமுற்றோருக்கான பயிற்சி மற்றும் உற்பத்திக் கூடம், முட்டுக்காடு :

செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டம், முட்டுக்காட்டில், ஊன முற்றோருக்கான நவீனத் தொழிற் பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையம் இயங்கி வருகிறது. இதில் ஊனமுற்றோருக்காக மூச்சக்கரவண்டிகள், சக்கர நாற்காலிகள், பெட்டிக்கடைகள், அலமாரிகள், போன்ற இரும்பு சாமான்கள் உற்பத்தி செய் வதில் ஊனமுற்றவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. 1980 முதல் உற்பத்திக் கூடமாக இந்நிலையம் இயங்கி வருகிறது. இதில் சக்கர நாற்காலி, மூன்று சக்கர வண்டி, கப்போர்ட், பங்க், மடக்கு ஊன்றுகோல் போன்றவைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. மூன்று சக்கர வண்டிகள் 1,600, சக்கர நாற்காலிகள் 140, மடக்கு ஊன்றுகோல்கள் 2,000, மற்றும் பல இரும்பு சாமான்கள் (சுமார் ரூ. 34 இலட்சம் விலையுள்ள பொருட்களை) இந்த ஆண்டு உற் பத்தி செய்யப்படும்.



1991–92 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 33.57 இலட்சமாகும்.

### ஊனமுற்றோருக்கு இலவச உபகரணங்கள் வழங்குதல்.

### 4.18. மூன்று சக்கர வண்டிகள் :

ஊனமுற்றோருக்கு மூன்று சக்கர வண்டிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. 1974–75 முதல் 1989–90 ஆம் ஆண்டு இறுதிவரை 13,248 மூன்று சக்கர வண்டிகள் இரண்டு கால்களும் இழந்த ஊனமுற்ற நபர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. 1991–92 ஆம் ஆண்டு 1,000 நபர் களுக்கு மூன்று சக்கர வண்டிகள் வழங்கப்பட உள்ளன.

### 4.19. சக்கர நாற்காலிகள் :

பாரிச வாத நோயினால் பாதிக்கப்பட்ட ஊனமுற்ற நபர்களுக்கு 1981 ஆம் ஆண்டு முதல் இலவசமாக சக்கர நாற்காலிகள் வழங்கப்படுகின்றன. 1990–91 ஆம் ஆண்டு இறுதி வரை 1,000 சக்கர நாற்காலிகள் இலவசமாக வழங் கப்பட்டுள்ளன. 1991–92 ஆம் ஆண்டில் 100 சக்கர நாற்காலிகள் இலவசமாக வழங்க நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

### 4.20. காதொலிக் கருவிகள் :

காது கேளாத ஏழைக் குழந்தைகளுக்கு காதொலிக் கருவிகள் இலவசமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தினால் மொத்தத்தில் 25420 காது கேளாதோர் 1991 ஆம் ஆண்டு வரை பயன் பெற்றுள்ளார்கள். காது கேளாத நபர் களுக்கு 1991–92 ஆம் ஆண்டில் 1,110 காதொலிக் கருவிகள் வழங்கப்பட உள்ளன.

### 4.21. கண் பார்வையற்றோருக்கு இலவசமாகக் கறுப்புக் கண்ணாடி மற்றும் மடக்கு ஊன்றுகோல்கள் வழங்குதல்.

பார்வையற்ற நபர் ஒவ்வொருவருக்கும் தலா ஒரு கறுப் புக் கண்ணாடியும், மடக்கு ஊன்றுகோலும் இலவசமாக வழங்கப்படுகிறது. இந்தத் திட்டம் 1989–90 லிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1990–91 ஆம் ஆண்டு வரை 10,400 பார்வையற்ற நபர்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர்.

### 4.22. உடல் ஊனமுற்றவர்களுக்கு பேருந்துகளில் பயணம் செய்ய பயணச் சலுகை வழங்குதல்.

ஊனமுற்றவர்களுக்கு இலவசப் பயணச் சலுகை வழங்குவது பற்றி அரசு பல்வேறு கால கட்டங்களில் பல ஆணைகள் வெளியிட்டுள்ளது. அவை அனைத்தையும் ஒருங்கிணைத்து, ஊனமுற்றவர்களின் கோரிக்கைகளை பரிவுடன் பரிசீலித்து அரசு புதிய ஆணை (நிலை) எண். 2403 (போக்குவரத்துத் அறை), நாள் 20–8–1991 மூலம் வெளியிட்டுள்ளது.

அதன்படி வழங்கப்படும் சலுகைகள் பின்வருமாறு :

1. கண்பார்வையற்றவர் :

மருத்துவமனை/பள்ளி?/பயிற்சி கல்லூரி/பணியிடம் மற்றும் அனைத்து இடங்களுக்குச் சென்று வருவதற்கான அனைத்து பயணங்களுக்கும் தற்போது நடைமுறையில் உள்ளதுபோல் (திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் தவிர) அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இலவசப் பயணச் சலுகை தொடரப்படும். நடைமுறையில் மாற்றம் ஏதுமில்லை.

2. காது கேளாதோர் மற்றும் கை, கால் ஊனமுற்றவர் :

மருத்துவமனை/பள்ளிக்கூடம் ஆகியவற்றுக்கு சென்று வர அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளில் (திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் தவிர) 15 வயது வரை உள்ள மாணவர்களுக்கு அனுமதிக்கப்பட்டு வந்த இலவசப் பயணச் சலுகை, இனி கல்லூரி/பயிற்சி நிலையம் சென்று திரும்புவதற்கும் 20 வயது வரையுள்ள மாணவர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

3. மன வளர்ச்சி குன்றியவர் :

குறிப்பிட்ட 23 நிறுவனங்களில் கல்வி பயிலும் மன வளர்ச்சி குன்றியவர்களுக்கு பள்ளி/மருத்துவமனை சென்று திரும்புவதற்கு இலவசப் பயணச் சலுகை வழங்கப்பட்டு வந்தது. இனிமேல் அரசு சமூக நலத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட மன வளர்ச்சி குன்றியோருக்கான அனைத்து நிறுவனங்களிலும்—கல்வி/பயிற்சி/பணி புரிகின்ற மன வளர்ச்சி குன்றியோர் அனைவருக்கும்—மருத்துவ மனை, பள்ளி, பயிற்சி நிலையம், பணியிடம் சென்று திரும்ப—இலவசப் பயணச் சலுகை உண்டு. மேலும் அவருடன் ஓர் உதவியாளர் சென்றால் அவருக்கும் இலவசப் பயணச் சலுகை உண்டு.

4.23. இதுவரை இலவசப் பயணச் சலுகை பெற ஊன முற்றோர்கள் ஒவ்வொரு ஆண்டும் மருத்துவச் சான்றிதழ் பெற்றுத்தான் போக்குவரத்துக் கழகங்களுக்கு விண்ணப்பம் செய்ய வேண்டும் என்றிருந்த நிலையை மாற்றி, சமூக நலத் துறையினால் வழங்கப்படும் அடையாள அட்டையின் அடிப்படையில், இலவசப் பயணச் சலுகைகள் பெறத்



தகுதியுடையவர்கள் அனைவருக்கும் பயணச் சலுகை வழங்கப்பட வேண்டும் என இந்த அரசு அண்மையில் ஆணை வெளியிட்டுள்ளது.

4.24. பெட்ரோல் மான்யம் : உடல் ஊனமுற்றவர் மோட்டார் வாகனம் வைத்திருந்தால் மத்திய அரசு திட்டத்தின்கீழ் 50 சதவீதம் பெட்ரோல் வாங்கியமைக்காக மான்ய உதவி வழங்கப்படுகிறது. இத்திட்டம் 1985–86லிருந்து அமுல் செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 1990–91 ஆம் ஆண்டு வரை 93 ஊனமுற்ற நபர்கள் பயனடைந்துள்ளனர். 1991–92 ஆம் ஆண்டில் 25 நபர்கள் ரூ. 0.12 இலட்சம் செலவில் பயனடைவார்கள். இதற்காக இந்த ஆண்டிற்கு ரூ. 0.12 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

செயற்கை அவயவங்கள் பொருத்தும் துணை நிலையம், மதுரை.

4.25. கை, கால்கள் கடுமையாக ஊனமுற்ற 100 குழந்தைகளுக்கு உதவும் வகையில், செயற்கை அவயவங்கள் பொருத்தும் துணை நிலையம் ஒன்று மதுரை கடும் ஊனமுற்றோருக்கான பள்ளி வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. இந்த நிறுவனத்தில் 100 கடும் ஊனமுற்ற சிறார்களுக்கு சிறப்புக் கல்வி, மருத்துவ சிகிச்சை, இயற்கை முறை தசைப் பயிற்சி மற்றும் ஊனமுற்றோருக்கு உதவும் பொருத்தும் கருவிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. மருத்துவ வல்லுநர், இயற்கை முறை தசைப் பயிற்சியாளர், ஊனமுற்றோருக்கு உதவும் பொருத்தும் கருவிகள் தயாரிக்கும் பணியாளர்கள் இங்கு பணிபுரிகின்றனர்.

இத்திட்டத்திற்கென ரூ. 2.97 லட்சங்கள் 1991–92 ஆம் ஆண்டுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.26. பார்வையற்றோரை திருமணம் செய்து கொள்ளும் பார்வையுள்ளவர்களுக்கான சலுகைகள் :

பார்வையற்றவரை பார்வையுள்ளவர் திருமணம் செய்து கொண்டால் வழங்கப்படும் சலுகைகள் பின்வருமாறு :—

1. பாராட்டுச் சான்றிதழ்.
2. திருமணச் செலவிற்காக ரொக்கத் தொகை ரூ. 500.
3. தேசிய சேமிப்பு பத்திரம் ரூ. 5,500.

1990–91 ஆம் ஆண்டில் பயனடைந்தவர்கள் எண்ணிக்கை 53. 1991–92 ஆம் ஆண்டு ரூ. 1.41 லட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 23 தம்பதியர் 1991–92 ஆம் ஆண்டில் பயனடைவார்கள்.

**4.27. மாவட்ட மறுவாழ்வு மையம், செங்கற்பட்டு :**

மத்திய அரசும், அமெரிக்க ஐக்கிய நாட்டு அரசின் ஊன முற்றோர் ஆராய்ச்சி நிலையமும் ஒன்று சேர்ந்து ஊனமுற்றோ ருக்கு விரிவான மறுவாழ்வுப் பணிகள் செய்வதற்கான ஒரு முன்னோடித் திட்டத்தைத் தீட்டியுள்ளது. அதுவே மாவட்ட மறுவாழ்வு மையம் என்ற திட்டம். இதன் முதல் கட்டமாக செங்கற்பட்டு—எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் உள்ள காட்டாங்குளத் தூர், திருக்கழுக்குன்றம் ஆகிய இரு ஊராட்சி ஒன்றியப் பகுதி களில் செயல்படுத்தப்பட்டது. 2-வது கட்டமாக மதுராந்தகம் ஒன்றியப் பகுதியில் செயல்படுத்தப்படுகிறது.

**இத்திட்டத்தின் நோக்கம் :**

ஊனமுற்றோரைக் கண்டறிதல்.

அவர்களின் மறுவாழ்வுக்கான தேவைகளைக் கணித்தல்.

அவர்களின் மறுவாழ்வுக்கு உதவிகள் வழங்குதல்.

மேற்குறிப்பிட்ட 3 ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் 5,286 ஊனமுற்றோருக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த ஆண் டிற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 14.33 லட்சம் ஆகும்.

**அரசு மண்டல பிரெய்லி அச்சகம் :**

4.28. பார்வையற்றோருக்கான பிரெய்லி புத்தகங்கள் அச் சடித்து வழங்கும் பொருட்டு பூவிருந்தவல்லியில் பார்வை யற்றோர் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில், தனி அச்சகம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இவ்வச்சகத்தில் அச்சடிக்கப்படும் பிரெய்லி புத்தகங்கள் அரசு பள்ளிகள், அரசு உதவியுடன் இயங்கும் பள்ளிகளில் கல்வி பயிலும் பார்வையற்ற மாணவர் களுக்கு வழங்கப்படுகிறது. சுமார் 2,156 மாணவர்கள் இத்திட்டத்தின் மூலம் வருடாவருடம் பயனடைகின்றனர். இத் திட்டத்திற்கு 1991—92 ஆம் ஆண்டிற்கு ரூ. 4.48 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.29. ஊனமுற்றோர் சுய வேலை வாய்ப்பிற்கு உதவி அளித்தல்:**

**(அ) பெட்டிக்கடை வைக்க உதவி:**

ஊனமுற்றோர் சுயவேலை வாய்ப்பில் ஈடுபட ஊக்கு விக்கப்படுகிறார்கள். குறிப்பாக அவர்கள் பெட்டிக்கடை வைத்து நடத்துவதற்கு, வங்கிக் கடனுக்கு ஏற்பாடு செய்யப் படுகிறது. ஒவ்வொருவருக்கும் அரசு மானியமாக ரூ. 250 அல்லது ரூ. 500 வரை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ்



1990-91 ஆம் ஆண்டில் 300 ஊனமுற்றோர் பயன் அடைந்தார் கள். இந்த ஆண்டு இத்திட்டத்திற்கு ரூ. 1.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சுமார் 300 ஊனமுற்றோர் பயனடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

**(ஆ) பிற சுய வேலைவாய்ப்புக்கு உதவி :**

பிற சுய வேலை வாய்ப்பு முயற்சியில் ஈடுபட விரும்பும் ஒவ் வொரு ஊனமுற்ற நபருக்கும் வங்கிக் கடன் ஏற்பாடு செய்யப்படு கிறது. சுய தொழிலுக்கு தேவையான மொத்த மூலதனத்தில் 3-ல் 1 பங்கு ரூ. 1,000-க்கு மிகாமல் சுய தொழிலில் ஈடுபட விரும்பும் ஒவ்வொரு ஊனமுற்றவருக்கும் அரசு மானியம் வழங்கப்படுகிறது.

1991-92 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கான நிதி ஒதுக் கீடு ரூ. 8 இலட்சங்கள் ஆகும்.

**பார்வையற்ற மகளிருக்கான தொழிற்கூடத்துடன் கூடிய மறு வாழ்வு மையம் :**

4.30. பார்வையற்ற மகளிருக்கு விடுதி வசதியுடன் கூடிய மறுவாழ்வு மையம் ஒன்று செங்கை—எம்.ஜி.ஆர். மாவட்டம் பூவிருந்தவல்லியில் பார்வையற்றோருக்கான மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் இயங்கி வருகிறது. பார்வையற்ற ஆதரவற்ற மகளிர்—40 வயதுக்கு உட்பட்டவர்கள் இதில் சேர்க்கப்படுகிறார் கள். நெசவுத் தொழில், சாக்குக் கட்டி செய்தல் ஆகிய பணிகளில் அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக்காலம் ஆறு மாதங்கள் ஆகும். பயிற்சி காலத்தில் மாதம் ரூ. 90 வீதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது. பயிற்சிக்குப் பிறகு அங் கேயே வேலை வாய்ப்பளித்து, அவர்கள் செய்யும் பணிக்கேற்ப ஊதியம் கொடுக்கப்படுகிறது. இங்கு தயாரிக்கப்படும் போர்வைகள், துண்டுகள் மற்றும் சாக்குக் கட்டிகள் அரசு மருத்துவ மனைகளிலும், பள்ளிக் கூடங்களிலும் விற்பனை செய்யப்படுகின்றன. இத்திட்டதிற்கு 1991-92 ஆம் ஆண்டிற்கு ரூ. 2.64 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இங்கு பார்வை யற்ற 36 பெண்கள் பயிற்சி பெற்று பணிபுரிந்து வருகின்றார் கள்.

**வட சென்னை மற்றும் அம்பத்தூரிலுள்ள அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் கை-கால் ஊனமுற்றோருக்கு தொழிற் பயிற்சி :**

4.31. கை-கால் ஊனமுற்றோருக்கு பயிற்சி அளிக்க வட சென்னை மற்றும் அம்பத்தூரிலுள்ள அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில், ஊனமுற்றோருக்காக 3-வது ஷிப்ட் தொடங்கப் பட்டுள்ளது. இத்தொழிற் பயிற்சி நிலையங்களில் பொறிப்பகுதி பொருத்துபவர், இயந்திரப் பணியாளர், வர்ணம் பூசுபவர், வலை வாளர்(கட்டிடம்) மற்றும் குழாய் பொருத்துபவர் ஆகிய பணிகளிர

பயிற்சியளிக்கப்படுகிறது. 1991-92ம் ஆண்டுக்கு ரூ. 0.45 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 38 ஊனமுற்றோர் பயிற்சி பெறுகிறார்கள்.

## கடும் ஊனத்தால் பாதிக்கப்பட்டோருக்கு பராமரிப்பு உதவித் தொகை.

4.32. கல்விப் பயிற்சி, வேலை வாய்ப்பு போன்ற எவ்வித உதவிகள் மூலமும் மறுவாழ்வு அளிக்கப்பட முடியாத நிலையில் கடும் ஊனத்தால் பாதிக்கப்பட்டோருக்கு மாதம் ரூ. 100 பராமரிப்பு உதவித் தொகை வழங்கப்படுகிறது. இந்த உதவி பெறுவதற்கான தகுதிகள் பின்வருமாறு:—

1. ஊனத்தின் அளவு 75 சதவீதம் அல்லது அதற்கு மேலும் இருக்க வேண்டும்;

2. பெற்றோரின் மாத வருமானம் ரூ. 1,000 அல்லது அதற்கு கீழ் இருக்க வேண்டும்.

3. அரசின் வேறு எந்த உதவியும் பெறுபவராக இருக்கக் கூடாது.

இத்திட்டத்தால் 1990-91 ஆம் ஆண்டில் 420 பேர் பயனடைந்தார்கள். 1991-92-ம் ஆண்டில் மொத்தம் ரூ. 7.78 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1991-92 ஆம் ஆண்டில் கூடுதலாக 630 நபர்கள் இவ்வுதவியைப் பெறுவார்கள்.

## ஏழை ஊனமுற்ற குழந்தைகளை பராமரிப்பதற்காக தொண்டு நிறுவனங்களுக்கு மானியம் வழங்குதல் :

4.33. 8 முதல் 14 வயது வரையுள்ள ஊனமுற்ற மாணவர்கள் தொண்டு நிறுவனம் நடத்தும் பள்ளிகளில் கல்வி பயிலுகிறார் கள். அவர்களைப் பராமரிப்பதற்காக அத்தொண்டு நிறு வனங்களுக்கு அரசு மானியம் வழங்குகிறது. குழந்தை ஒன் றுக்கு மாதம் ரூ. 30 வீதம் இம்மானியம் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கு இந்த ஆண்டு ரூ. 2.15 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் ஊனமுற்ற குழந்தை கள் 713 பேர் பயனடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

## இளம்பிள்ளை வாதத் தடுப்பு மற்றும் மறுவாழ்வுத் திட்டம் :

4.34. ''இளம் பிள்ளை வாதத் தடுப்பு மற்றும் இளம் பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் திட்டம்'' சமூக நலத் துறையால் செயல்படுத்தப்படு கிறது. இத்திட்டத்தின் நோக்கம்—

(அ) இளம்பிள்ளை வாத நோய் வராமல் தடுப்பது.



(ஆ) இளம்பிள்ளை வாத நோயால் பாதிக்கப்பட்டவர் களுக்கு மறு வாழ்வு அளிப்பது.

1989-90 ஆம் ஆண்டில் இத்திட்டம் முதல் கட்டமாக 40 ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டது. மத்திய அரசால் ரூ. 109.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத் திட்டத்தால் இளம்பிள்ளை வாத நோயால் பாதிக்கப்பட்ட 13,352 நபர்கள் பயன் அடைந்தார்கள்.

இத்திட்டத்தின் இரண்டாவது கட்டம் தமிழ்நாட்டில் 51 ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் 1990-91 ஆம் ஆண்டில் ரூ. 80.15 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது. இதனால் 11,806 நபர்கள் மறுவாழ்வு உதவிகள் பெற்றனர்.

இத்திட்டத்தின் மூன்றாவது கட்டம் தேர்ந்தெடுக்கப்பட்ட 40 ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் 1991-92ம் ஆண்டில் செயல் படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்காக இந்த ஆண்டு ரூ. 80.48 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இளம் பிள்ளை வாதத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான நிவாரண உதவிகள் அளிப்பதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கை கள் தேர்ந்தெடுக்கப்பட்ட 40 ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் எடுக்கப்பட்டு விட்டன. இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப் பட்டோரை, தேர்வு செய்யப்பட்ட 40 ஊராட்சி ஒன்றியங்களில் கண்டறிவதற்காக மருத்துவ முகாம்கள் இப்பொழுது நடைபெற் றுக்கொண்டிருக்கின்றன. அதன்பின் அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் பணி தொடரும். இந்த ஆண்டு இத்திட்டத்தால் சுமார் 9,500 பேர்கள் பயனடைவார்கள் என எதிர்பார்க்கப்படு கிறது.

இளம் பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கீழ்க் காணும் உதவிகள் இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படுகிறது :—

மருத்துவ வசதி, அறுவை சிகிச்சை, தசைப் பயிற்சி, மூன்று சக்கர வண்டிகள், சக்கர நாற்காலிகள், காலுறைகள், ஊன்று கோல்கள் போன்ற உபகரணங்களை இலவசமாக வழங்குதல். பள்ளியில் சேர்த்தல், கல்வி உதவித் தொகை வழங்குதல் தொழில் பயிற்சியில் சேர்த்தல், பணியில் அமர்த்துதல், சுயவேலைவாய்ப் பில் ஈடுபடுவதற்கு வங்கிக் கடனுதவி ஏற்பாடு செய்து அரசு மானியமும் வழங்குதல் முதியோர் உதவித் தொகை வழங்குதல்: வேறு எந்த உதவியாலும் அவருக்குப் பயன் இல்லை எனில் பராமரிப்பு மானியம் வழங்குதல் போன்ற உதவி, ஒவ்வொரு வரின் நிலைமைக்கும், தேவைக்கும் தகுந்தவாறு வழங்கப் படுகிறது.

## அத்தியாயம் 5.

### தமிழ்நாடு சமூக நல வாரியம்.

5.1. தமிழ்நாடு சமூக நல வாரியம் 1954-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, தமிழ்நாட்டில் தொண்டு நிறுவனங்கள் வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் முக்கிய பங்கு வகிக்கிறது.

5.2. வாரியத்தின் முக்கிய நோக்கங்கள் வருமாறு :—

(1) சமூக நல அமைப்புகளை ஆரம்பித்து உயர்வடையச் செய்தல்.

(2) தனியார் சேவை நிறுவனங்கள் பணித் திறனை வளர்ப்பதற்கு தொழில்நுட்ப மற்றும் நிதி உதவியளித்தல்.

(3) உதவித் திட்டங்களை மதிப்பீடு செய்தல்.

5.3. தமிழ்நாடு சமூகநல வாரியம், மத்திய சமூக நல வாரியத்திடமிருந்து நிதி உதவி பெற்று, தொண்டு நிறுவனங்களின் மூலம் குழந்தைகள், ஊனமுற்றவர்கள் மற்றும் மகளிர் ஆகியோரது மேம்பாட்டுக்காகப் பணியாற்றுகிறது. சுமார் 50 சதவீதம் முதல் 90 சதவீதம் வரை தொண்டு நிறுவனங்களுக்கு நிதி உதவி செய்யப்படுகிறது. எஞ்சிய செலவுத் தொகை தொண்டு நிறுவனங்களால் ஏற்கப்படுகிறது. சில சிறப்புத் திட்டங்களுக்கு 100 சதவீதம்கூட நிதி உதவி செய்யப்படுகிறது.

5.4. தற்போதைய தமிழ்நாடு சமூக நல வாரியம் 1988-ம் ஆண்டு பிப்ரவரி மாதம், அரசு உறுப்பினர்கள் மூவர் உட்பட 27 உறுப்பினர்களைக் கொண்டதாக, திருத்தியமைக்கப்பட்டது.

5.5. 1990–91 ஆம் ஆண்டில் 1,796 தொண்டு நிறுவனங்களுக்கு ஏப்ரல் 1990 முதல் மார்ச் 1991 முடிய, மொத்தம் ரூ. 207.09 லட்சங்கள் நிதி உதவி செய்யப்பட்ட விவரங்கள் பின்வருமாறு :—



| வரிசை எண்ணும் திட்டமும். | அலகுகளின் எண்ணிக்கை. | அனுமதிக்கப்பட்ட தொகை (ரூபாய் லட்சத்தில்). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. வருடாந்திர உதவி .. | 253 | 9.75 |
| 2. மகிலா மண்டலத் திட்டம் | 34 | 1.24 |
| 3. சத்துணவுத் திட்டம் .. | 102 | 8.62 |
| 4. குழந்தைகள் காப்பகத் திட்டம் | 776 | 95.89 |
| 5. விடுமுறை முகாம். | 45 | 3.24 |
| 6. பணிபுரியும் மகளிர் தங்கும் விடுதி .. | 17 | 1.33 |
| 7. விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் திட்டம். .. | 31 | 3.10 |
| 8. மாநில அரசு மானியம் .. | 379 | 10.00 |
| 9. குடும்பநல அறிவுரை நிலையம் | 17 | 5.98 |
| 10. குறுகிய காலக் கல்விப் பயிற்சி (1 வருடம்—2 வருடம்) .. | 6 | 5.04 |
| 11. வாழ்க்கைத் தொழிற்பயிற்சி .. | 49 | 41.52 |
| 12. சமூகப் பொருளாதாரத் திட்டம்: | | |
| (அ) உற்பத்தி அலகுகள் .. | 1 | 3.00 |
| (ஆ) சேவை முனைப்புத் திட்டம் .. | 3 | 1.31 |
| (இ) பால்வளத் திட்டம் .. | 63 | 13.15 |
| (ஈ) சுய வேலை வாய்ப்புத் திட்டம் .. | .. | .. |
| (உ) ஆடு வளர்த்தல் .. | 14 | 5.86 |
| மொத்தம் .. | 1,796 | 207.09 |

## அத்தியாயம் 6.

## சமூகப் பாதுகாப்புத் துறை.

6.1. தமிழக அரசினரால் சமூகப் பாதுகாப்புத் துறை மூலம் 'இளைஞர் நீதிச் சட்டம் 1986' (நீக்கப்பட்ட தமிழ்நாடு குழந்தைகள் சட்டம் 1920) மற்றும் பரத்தமை தடுப்புச் சட்டம் 1956 இவற்றின்கீழ் பல்வேறு நலத் திட்டங்கள் செயல்படுத்தப் படுகின்றன. குறிப்பாக குழந்தைகள் நலம், குற்றத் தடுப்பு, ஒழுக்க நெறி தவறிய பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கான நலத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

6.2. புறக்கணிக்கப்பட்ட சிறார்கள் (ஆதரவற்ற, கைவிடப்பட்ட அனாதைகள்) குற்றம் இழைத்த சிறுவர், சிறுமியர் மற்றும் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்கள், சிறுமியர் ஆகியோரின் பாதுகாப்பு, பராமரிப்பு, கல்வி, தொழிற் கல்வி மற்றும் மறுவாழ்வு ஆகியவை சமூகப்பாதுகாப்புத் துறையின் முக்கிய நோக்கங்களாகும்.

6.3. சமூகப் பாதுகாப்புத் துறையின் நிர்வாகம் மற்றும் செயல்பாடுகளுக்கென ஒரு முழு நேர இயக்குநர் இத்துறையின் பொறுப்பினை வகிக்கிறார். மாநிலத்தின் தென்மண்டல நிறுவனங்களின் நிலையான மற்றும் திறமையான மேற்பார்வைக் கென ஒரு மண்டல அலுவலகம் மதுரையில் துணை இயக்குநரின்கீழ் இயங்கி வருகிறது.

### இளைஞர் நீதிச் சட்டம் 1986-ன்கீழ் அமைந்துள்ள நிறுவனங்கள்:

6.4. பதினான்கு கூர்நோக்கு இல்லங்கள் (குறுகிய காலத் திற்கு தங்கும் இல்லங்கள்) இம் மாநிலத்தில் உள்ளன. இக்கூர் நோக்கு இல்லங்கள், இளைஞர் நல குழுமத்திற்கு வரும் ஆதர வற்ற சிறார்களையும் இளைஞர் நீதி மன்றத்திற்கு வரும் விசா ரணைக்குட்படும் சிறுவர் சிறுமியரை விசாரணைக் காலங்களில் பொறுப்பேற்று கவனித்து ஆதரவு அளித்து வருகின்றன. சிறப்பு இளைஞர் இல்லங்களின் நுழைவு ஆதார இல்லங்களாக இவை உள்ளன. மொத்தமுள்ள 14 கூர்நோக்கு இல்லங்களில் பதி னொன்று அரசினராலும், ஏனைய 3 இல்லங்கள், குழந்தைகள் பாதுகாப்புச் சங்கம், விடுதலைபெற்ற கைதிகள் உதவிச் சங்கம் மற்றும் பால்மந்திர் ஆகிய தனியார் நிறுவனங்களாலும் அரசின் நிதியுதவியுடனும் நடத்தப்படுகின்றன. மைய அரசின் விதி முறைகள்படி இல்லவாசிகளுக்கு பராமரிப்பு மான்ய உதவியாக ஒரு இல்லவாசிக்கு வயது வித்தியாசமின்றி மாதமொன்றுக்கு ரூ. 240 (உணவு, உடை, எண்ணெய் மற்றும் சோப்பு வகைகள்) அரசினரால் வழங்கப்படுகிறது.



6.5. 1986-ம் ஆண்டு இளைஞர் நீதிச்சட்டத்தின்படி மொத்தம் 20 சிறப்பு இளைஞர் இல்லங்கள் மாநிலத்தில் உள்ளன. இந்த 20 நிறுவனங்களில் 2 சிறப்பு இல்லங்களும், 7 இளைஞர் இல்லங்களும் அரசினராலும், மீதமுள்ள 11 இளைஞர் இல்லங்கள் அரசிடமிருந்து பராமரிப்பதற்கு என மானிய உதவி பெற்றும் நடத்தப்பட்டு வருகின்றன. தர்மபுரி மாவட்டத்தில் தொண்டு நிறுவனங்கள் மூலம் ஒரு இளைஞர் இல்லம் நடப்பு ஆண்டில் ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் அனைத்து அரசினர் கூர்நோக்கு இல்லங்கள், இளைஞர் இல்லங்கள் மற்றும் சிறப்பு இல்லங்களில் ரூ. 2.60 இலட்சம் செலவில் மரச்சாமான் கள் வழங்கப்பட உள்ளது. இளைஞர் நீதிச் சட்டத்தின்கீழ் துவங்கப்பட்ட இளைஞர் நீதிமன்றங்கள் மூலம், குற்றம் புரிந்த சிறார்களும், இளைஞர் நலக் குழுமங்கள் மூலம் ஆதரவற்ற சிறார்களும், இளைஞர் இல்லங்களில் அனுமதிக்கப்படுகின்றனர். மனநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகள், சென்னையிலுள்ள பாலவிஹார் நிறுவனத்தின்கீழ் உள்ள இளைஞர் இல்லத்தில் அனுமதிக்கப்படுகின்றனர்.

### 6.6. இளைஞர் நலக் குழுமங்கள் :

புறக்கணிக்கப்பட்ட சிறார்கள் தொடர்புடைய வழக்குகள் விசாரணைக்கென ஒரு தலைவரும், 4 உறுப்பினர்களும் (மகளிர் உறுப்பினர் ஒருவர் உட்பட) 13 இளைஞர் நலக் குழுமங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

### 6.7. இளைஞர்கள் நீதிமன்றங்கள் :

சென்னை நகரினைப் பொறுத்தவரை, பன்னிரண்டாவது நகர நீதிபதியும், வெளியூர்களில் தலைமைக் குற்றவியல் நீதிபதி சார்பு உட்கோட்ட குற்றவியல் நீதிபதி மற்றும் முதன்மை குற்ற வியல் நீதிபதிகள் ஆகியோர் குற்றம் புரிந்த சிறார்களை விசாரித்து தீர்ப்பு வழங்கும் பொறுப்பு அளிக்கப்பட்டுள்ளது.

### 6.8. பரத்தமைத் தடுப்புச் சட்டம் 1956-ன்கீழ் அமைந்துள்ள நிறுவனங்கள் :

அரசினர் மகளிர் காப்பகங்கள்/பெண்கள் பாதுகாப்பு இல்லங் கள் அரசினர் கண்காணிப்பு/பாதுகாப்பு இல்லங்கள் (நீண்டகால வரையறை) 1956-ம் ஆண்டில் பரத்தமைத் தடுப்புச் சட்டத்தின்கீழ் சேர்க்கப்படும் பெண்டிர் மற்றும் சிறுமியர் கட்கு புகலிடமும் பயிற்சியும் மறுவாழ்வும் அளிக்கின்றன. இந் நிறுவனங்கள் ஒழுக்க நெறி தவறிய மற்றும் அபாயம் ஏற்படக் கூடிய வகையில் உள்ள மகளிரையும் ஒழுக்க நெறிக்கு ஊறுவிளையக்கூடும் என அஞ்சி தானாக சேர விரும்பும் மகளிருக் கும் பாதுகாப்பு அளிக்கின்றது. இத்துறையின் ஆறு மகளிர் காப்பகங்கள்/பாதுகாப்பு இல்லங்கள் உள்ளன. சென்னையில்

13—328—40

ஸ்திரீசதனா மற்றும் விழிப்பு பணி இல்லம், மதுரை, திருச்சி, சேலம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலும் நிறுவப்பட்டுள்ளது.

6.9. விழிப்புப் பணி மீட்பு இல்லங்கள்:

அரசினால் நடத்தப்படும் ஆறு (குறுகிய கால) மீட்பு இல்லங்கள் சிறுமியர் மற்றும் பெண்கள் நீதிமன்ற விசாரணைக் காவல்களில் பொறுப்பேற்கின்றன. இவை தவிர ஒழுக்க நெறி தவறிய சிறுமியர்களுக்கும் மற்றும் திருமணமாகாத தாய்மார்களுக்கும், 2 இல்லங்கள் தனியார் நிறுவனத்தாரால் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வில்லங்களிலுள்ள இல்லவாசிகளுக்கு ஒரு நாளை ரூ. 2.50 வீதம் மானியம் இத்துறையால் வழங்கப்பட்டு வருகிறது. இக்குறுகிய காலவரையறையுள்ள நிறுவனங்கள் நீண்ட காலவரையறையுள்ள பாதுகாப்பு இல்லங்களுக்கு நுழைவாயில்களாகும்.

6.10. பிற்காப்பு நிறுவனங்கள்:

மூன்று பிற்காப்பில்லங்கள் (சட்டத்தின்பாற்படாத) உள்ளன. இவற்றுள் இரண்டு சிறுவர்களுக்காகவும், ஒன்று சிறுமியர் மற்றும் பெண்டிருக்காகவும் உள்ளது. பெண்களுக்கான ஒரு இல்லம் வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம் வேலூரிலும், சிறுவர்களுக்கான இரண்டு இல்லங்கள் ஆத்தூர் (செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம்) மற்றும் மதுரையிலும் உள்ளன. இவ்வில்லங்கள் இளைஞர் இல்லங்களிலிருந்து விடுவிக்கப்பட்ட இல்லவாசிகளுக்கு, அவர்கள் சுயவேலைக்கு தகுதி பெறுமளவுக்கு தொடர்ச்சியாக தொழில் கல்வி பயிற்சி அளிக்கின்றன.

உடைகள், உள்ளடக்கிகள் மற்றும் தோல் பொருட்கள் தயாரிப்பதற்கான தொழில் பயிற்சியளிக்கும் வசதிகளும் வேலூர் அரசினர் மகளிர் பிற்காப்பு நிறுவனத்தில் செய்யப்பட்டுள்ளன. இல்லவாசிகள், பர்மா மற்றும் இலங்கை அகதி பெண்கள் மற்றும் உள்ளூர் பெண்கள் இந்நிலையத்தில் பயிற்சி பெறுகிறார்கள்.

6.11. கல்வி:

அனைத்து சிறப்பு/இளைஞர் இல்லங்களிலும் 8-ம் வகுப்பு வரை கல்வி அளிக்கப்படுகிறது. இவை கல்வித் துறையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இவை நீங்கலாக செங்கல்பட்டு அரசினர் சிறப்பு இல்லம், சென்னை அரசினர் பெண்கள் சிறப்பு இல்லம் ஆகியவற்றில் மாணவ மாணவியர்க்கு 10-ம் வகுப்பு வரை உயர்கல்வி கற்பிக்கப்படுகிறது. உயர் கல்வியில் நாட்டமுள்ள இல்லவாசிகள் மேல்நிலைப்பள்ளி/கல்லூரி/தொழிற்பயிற்சி நிலையங்கள் பல்தொழில் நுட்ப கல்லூரி ஆகியவற்றில் பயிற்றுவிக்கப்படுகின்றனர். சாதாரணப் பள்ளி கல்வி மட்டுமில்லாமல் முறைசாரா கல்வித் திட்டத்தின்கீழ் நடத்தப்படும் கல்வி பெறவும் தேர்வு எழுதவும் அனுப்பப்படுகின்றனர்.



6.12. வாழ்க்கைத் தொழிற்கல்வி:

சிறப்பு/இளைஞர் இல்லங்களிலிருந்து வெளிவருவோர் மறுவாழ்வுக்கென, கீழ்க் குறிப்பிட்டுள்ள வருவாய் ஈட்டக்கூடிய தொழிற்கல்வி பயிற்சிகளும் இங்கு அளிக்கப்படுகின்றன:—

(அ) சிறப்பு/இளைஞர் இல்லங்கள்:

1. தச்சு.
2. மின்தச்சு.
3. தையல் மற்றும் பூ வேலை.
4. நெசவு.
5. பாய் நெசவு.
6. கருமாரப்பணி.
7. உலோகப் பணி.
8. தோட்டம் மற்றும் வேளாண்மை.
9. கொத்து வேலை.
10. புத்தகம் கட்டுதல்.
11. இசைக் கருவி.
12. மாட்டுப் பண்ணை.
13. சோப்பு தயாரிப்பு.

இந்த ஆண்டு வீட்டில் மின்கம்பி பொறுத்துதல், பிரம்பு சாமான் செய்தல், பனை ஓலை வேலை, பிரஷ் செய்தல், மெழுகுவர்த்தி செய்தல், ரொட்டி செய்வதற்கான பயிற்சி முதலியன நடத்தப்பட்டு வருகின்றன.

(ஆ) விழிப்பு/பாதுகாப்பு இல்லங்கள்:

1. தையல் மற்றும் பூ வேலை.
2. பாய் நெசவு.
3. நெசவு.
4. மின்சலவையகம்.

(இ) பிற்காப்பு நிறுவனங்கள்:

1. புத்தகம் கட்டுதல்.
2. கருமாரப் பணி.

மேலேயுள்ள தொழிற்பிரிவு அலகுகளில் சென்னை அரசினர்
பெண்கள் இல்லம் மற்றும் தஞ்சாவூர் அரசினர் இளைஞர் இல்லங்
களின் தையற்கூடங்களும், செங்கற்பட்டு அரசினர் சிறப்பு
இல்லத்தின் தச்சு மற்றும் நெசவுத் தொழில் கூடங்களும் இயந்
திரமயமாக்கப்பட்டு, மின்பொறிகளின் உதவியால் மாணவர்
கட்கு உற்பத்தி செய்யப் பயிற்சி அளிக்கவும், இல்ல நீக்கம்
பெற்று வெளியேறி, அவர்கள் நிறுவனங்களில் வேலை வாய்ப்புப்
பெற வசதியும் செய்யப்பட்டுள்ளது. தஞ்சாவூர் அரசினர்
இளைஞர் இல்லம் மற்றும் இராணிப்பேட்டை அரசினர் இளைஞர்
இல்லத்திலும் உள்ள தச்சுப் பிரிவுகள் இயந்திரமயமாக்கப்
பட்டுள்ளதுடன் சென்னை அரசினர் மகளிர் காப்பகத்தில் ஒரு
மின்சலவையகக் கூடமும் துவக்கப்பட்டு இயங்கி வருகிறது.
பற்றவைப்பு, மற்றும் உற்பத்தித் தொழிற்கூடம் ஒன்று
இராணிப்பேட்டையில் துவக்கப்பட்டு, இல்லவாசிகளுக்கு பயிற்சி
அளிக்கப்படுகிறது. சென்னை அரசினர் பெண்கள் இல்ல வளாகத்
தில் ஒரு குழந்தைகள் காப்பகம் இயங்கி வருவதுடன் 15 மாணவி
கள் இப்பிரிவில் பயிற்சியும் பெற்று வருகின்றனர். சென்னை
அரசினர் மகளிர் காப்பகத்தில் 20 இல்லவாசிகளுக்கென
மணியியல் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது.

ஒழுக்க நெறி தவறிய பெண்கள் மறுவாழ்விற்கென ரூ. 5
இலட்சம் மானியத்துடன் தமிழ்நாடு நல நிதி அரசினரால்
ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்நிதி உதவி மகளிர் காப்பகங்
களிலிருந்து வெளிவரும் பெண்களுக்கு தேவையின் அடிப்படை
யில் வழங்கப்படும். இதில் ரூ. 2.50 இலட்சம் அரசின் நேரிடை
மானியமாகவும், ரூ. 2.50 இலட்சம் தமிழ்நாடு முதல் அமைச்சர்
பொது நிவாரண நிதியிலிருந்தும் வழங்கப்படும். இதுவரை 35
இல்லவாசிகள் பயனடைந்துள்ளனர். இதற்காக ஏற்படுத்தப்
பட்ட உயர்மட்டக் குழு 1991–92 ஆம் ஆண்டில் இல்லவாசி
களுக்கு நிதி உதவி அளிக்கப் பரிந்துரை செய்துள்ளது.

## 6.13. இளைஞர் வழிகாட்டி நிலையங்கள்:

சென்னை, மதுரை மற்றும் வேலூர் ஆகிய மூன்று இடங்
களில் உள்ள இளைஞர் வழிகாட்டி நிலையங்கள், இளைஞர் நீதி
மன்றங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களை அனுப்பும் சிறுவர்,
சிறுமியரைப் பற்றிய மனோ நிலைகளை ஆராய்வதுடன் சிறுவர்
களிடையே நிலவும் குற்றவியல் தன்மை பற்றியும் ஆய்வுகள்
மேற் கொள்ளுகின்றன. இவ்வழிகாட்டி நிலையங்கள் அருகில்
உள்ள கூர்நோக்கு இல்லங்களின் கோரிக்கைகளை கவனிக்கின்
றன. இந்நிலையங்களின் மீதான செலவினம் அரசால் ஏற்றுக்
கொள்ளப்படுகிறது. இவ்வழிகாட்டி நிலையங்கள் செயற்குழு
வினரால் நடத்தப்படுகின்றன,



## 6.14. திட்ட வளர்ச்சி மற்றும் கணிப்பாய்வு பிரிவு:

2—10—1987 முதல் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு
வரும் இளைஞர் நீதிச் சட்டம், 1986-னை அடிப்படையாகக்
கொண்டு, இச்சட்டத்தின் ஆக்கப் பணிகளை கண்காணிக்க
''யூனிசெப்'' உதவியுடன் ஒரு செயல்முறை திட்ட வளர்ச்சி
மற்றும் கணிப்பாய்வு பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. சமூக நலம்
மற்றும் சத்துணவு துறையின் அரசு செயலர் இப்பிரிவின் தலை
வர். இப்பிரிவின் கீழ் குறிப்பிட்டோர் உறுப்பினர்களாக செயல்
படுகின்றனர்:—

1. இயக்குநர், சமூகப் பாதுகாப்புத்துறை.

2. தலைவர், சமூக நல வாரியம்.

3. திட்ட ஒருங்கிணைப்பாளர், தமிழ்நாடு ஒருங்
கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்.

4. இயக்குநர், பொது சுகாதாரம்.

5. இயக்குநர், சமூக நலத் துறை.

பெற்றோரின் கவனிப்பற்ற குழந்தைகளின் வளர்ச்சி
முறையினை மேம்படுத்துவதையும், இளைஞர் நீதிச் சட்டம்,
1986-ன்படி இச்சட்டத்தின் செயலாக்கத்தினை முறையாக
நடைமுறைப்படுத்துவதையும் இப்பிரிவு குறிக்கோளாக கொண்
டுள்ளது. நிறுவனங்களின் ஒவ்வொரு நடைமுறையாக்கத்தினை
யும், இல்லங்களில் உறையும் சிறார்களுக்கு வழங்கப்படும் உணவு,
உடல்நலம், தொழில் மற்றும் கல்விப்பயிற்சி ஆகியவற்றையும்
இச்செயல்முறை திட்ட வளர்ச்சி மற்றும் கணிப்பாய்வு பிரிவு
கூராய்வு செய்கிறது.

## 6.15. மறுவாழ்வு :

இல்லவாசிகள் மற்றும் முன்னாள் இல்லவாசிகளுக்கு மறு
வாழ்வு வழங்குவதற்கு உதவியாக தொழிற்கூட்டுறவுச் சங்கம்
ஒன்று தொழில் வணிகத் துறையில் பதிவு செய்யப்பட்டு
'கஸ்தூரிபாய் காந்தி மறுவாழ்வு தொழிற்கூட்டுறவு சங்கம்'
எனப் பெயரிடப்பட்டுள்ளது. சென்னையில் உள்ள அரசு,
இளைஞர் சிறப்பு இல்ல வளாகத்தில் இது இயங்குகிறது.'

இத்திட்டத்தின் ஒரு பகுதியாக காலணிகள் தயாரித்தல்,
பனைஓலை பொருட்கள் தயாரித்தல் போன்றவற்றில் 3 பயிற்சி
வகுப்புகள் துவங்கப்பட்டுள்ளன. 'தாட்கோ' நிறுவனத்தின்
சிறப்பு ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டம் மூலமாகவும் மற்றும்
தொழில் வணிகத் துறையின் ஊரக தொழில் வளர்ச்சித் திட்டம்
ஆகியவற்றின் நிதி உதவியுடன் இப்பயிற்சித் திட்டங்கள் நடை
முறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

சீர்திருத்த நிறுவனங்களில் இல்லவாசிகள் சீர்திருத்தப் பயிற்சி பெற்ற பின்னர், அவர்களை சமுதாயத்தில் தகுந்த இடத்தில் அமர்த்துவதன் மூலமாக மறுவாழ்வு அளிக்கப்படு கிறது.

மறுவாழ்வு அளிக்கப்படும் முறைகளாவன:

(1) விருப்பமுள்ள (ஆதரவற்ற) பெண்களுக்கு திருமண ஏற்பாடு செய்தல்.

(2) வேலை வாய்ப்பு வசதி ஏற்படுத்தித் தருதல்.

(3) வேலைத் திறமையுள்ள மாணவர்கட்கு அவர்கள் பயின்ற தொழிற் கல்விக்கேற்ப கருவிகள் வழங்குதல்.

தமிழ்நாடு தேர்வாணைக் குழுவினரின் தேர்வு வரம்புக்கு உட்படாத இத்துறையின் அனைத்துப் பணியிடங்களுக்கும் மாவட்ட வேலை வாய்ப்பகங்கள் மூலம், தகுதிவாய்ந்த முன் னாள் இல்லவாசிகளைக் கொண்டு நிரப்பப்படுகின்றன. இதற் கென மாவட்ட வேலை வாய்ப்பகங்களில் தனியான பதிவேடும் பராமரிக்கப்படுகிறது.

(4) திருமணம் செய்து கொள்ளும் மணமக்களுக்கு அவர்கள் குடும்பம் துவங்க சீதனமாக ரூ. 1,000 மற்றும் திருமணச் செலவு களுக்கென ரூ. 100-ம் அரசால் வழங்கப்படுகிறது.

## 6.16. இளைஞர் நீதிச்சட்டம் 1986-ன் கீழ் செயல்படுத்தப் படும் திட்டங்கள்:

இளைஞர் நீதிச் சட்டம் 1986-ன் கீழ் இந்திய அரசினரால் பல்வேறு திட்டங்களுக்கென 50 சதவீதம் பங்குத் தொகையாக ரூ. 105.30 இலட்சம் 1988-89 மற்றும் 1989-90 ஆண்டுக்கு அனுமதிக்கப்பட்டு கீழ்க்காணும் திட்டங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளன. இத்திட்டங்களில் பயிற்சி மற்றும் கட்டுமானப் பணிகள் தவிர, பிற பணிகள் முடிவு பெற்றுள்ளன. கட்டிடப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(அ). தனி நபர் பராமரிப்பு மானியம் 12 வயதுக்கு உட் பட்டோருக்கு ரூ. 3.00; 12 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வ்ருக்கு ரூ. 4.50 என்று இருந்ததை மாற்றி இளைஞர்/சிறப்பு/ கூர்நோக்கு இல்லவாசிகளின் பராமரிப்பு மானியம் மாதமொன் றுக்கு தலா ரூ. 240 என உயர்த்தப்பட்டுள்ளது.

(ஆ) அரசினர் சிறப்பு/ இளைஞர்/கூர்நோக்கு இல்லங்களின் புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கென ரூ. 59.57 இலட்சம் அனு மதிக்கப்பட்டு பொதுப்பணித் துறையினரால் கட்டுமானப் பணி கள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் 1991-92, 1992-93 ஆகிய ஆண்டுகளில் செய்து முடிக்கப்படும்.



(இ) இளைஞர் நீதிச் சட்ட அமுலாக்க அலுவலர்களுக்கு சிறப்புப் பயிற்சிகள் வழங்க 1990-91, 1991-92-க்கு ரூ. 3.87 இலட்சம் அளிக்கப்பட்டுள்ளது.

(ஈ) தொலைக்காட்சிப் பெட்டிகள், விளையாட்டுப் பொருட்கள், பாத்திரங்கள், மருத்துவ உபகரணப் பொருட்கள் மற்றும் நூலகப் புத்தகங்கள் ஆகியவை அனைத்து இளைஞர்/ சிறப்பு/கூர்நோக்கு இல்லங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

(உ) 10 அரசினர் சிறப்பு இல்ல வசதிகளை மேம்படுத்த சமையல் எரிவாயு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

## 6.17. வரவு-செலவு:

1991-92 ஆம் ஆண்டிற்கு இத்துறைக்கான நிதி ஒதுக்கீடு (பணியாளர் சம்பளங்கள் உட்பட) ரூ. 336.00 இலட்சம் ஆகும். மானிய உதவியாக தனியார் நிறுவனங்களுக்கு வழங் கப்படுவது ரூ. 10.92 இலட்சமாகும்.

## அத்தியாயம்-7.

## முதியோர் உதவித் தொகை திட்டம்.

7.1. இததிட்டம் முதியோர்களுக்கு சமூக பாதுகாப்பு அளிக்கக்கூடிய முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும். உற்றார், உறவினர் ஆதரவின்றி பாதுகாப்பு அளிப்பார் இல்லாமல், வழி யற்ற நிலையில் வாழ்ந்து வரும் முதியோர்களுக்கு உதவித் தொகை அளிக்கும் பொருட்டு, அரசு கீழ்க்கண்ட இனங்களின் கீழ் இத்திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

(1) முதியோர் உதவித் தொகைத் (சாதாரணம்) திட்டம்.

கண் பார்வையற்றோர், தொழுநோய், மன நோய், பாரிச வாய்வு மற்றும் அவயமிழந்து வருவாய் ஈட்ட முடியாத நபர்கள், உதவித்தொகை பெற குறைந்தபட்ச வயது வரம்பு 60 ஆகும். மற்ற ஆதரவற்ற நபர்களுக்கு குறைந்த பட்ச வயது வரம்பு 65 ஆகும். இத்திட்டம் 1-4-1962 முதல் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

(2) முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற உடல் ஊன முற்றோர்) திட்டம்.

1-11-1974 முதல் இத்திட்டத்தின்கீழ் 45 வயது நிரம்பிய ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இந்தக் குறைந்த பட்ச வயது வரம்பு கண் பார்வையற்றவர்களுக்குப் பொருந்தாது.

(3) முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற விதவை) திட்டம்.

1-6-1975-ல் இத்திட்டம் 45 வயது நிரம்பிய ஆதரவற் வற்ற விதவைகளுக்குப் பயனளிக்கும் வகையில் நடைமுறைப் படுத்தப்பட்டது. பின்னர் 1990 மே மாதம் முதல் வயது வரம்பு நீக்கப்பட்டு எல்லா ஆதரவற்ற விதவைகளுக்கும் உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

(4) முதியோர் உதவித்தொகை (ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள்) திட்டம்.

இத்திட்டம் 21-8-1981 முதல் 60 வயது நிரம்பிய ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்களுக்கும் பயனளிக்கும் வகையில் விரிவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.



(5) கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்களுக்கு உதவித் தொகை.

25-4-1986 முதல் 30 வயது நிரம்பிய கணவனால் கைவிடபபட்ட ஆதரவற்ற பெண்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 7.2. உதவித் தொகை ஒப்பளிப்பு அளிக்கப்படும் முறை:

மேற்கண்ட திட்டங்களின் கீழ் உதவித் தொகை வழங்கும் அதிகாரம் தொடக்கக் காலத்தில் கோட்டாட்சியர்களுக்கு அளிக் கப்பட்டு பின்னர் 8-5-1989-ல் வட்டாட்சியர்களுக்கு அந்த அதி காரம் வழங்கப்பட்டது. அதன் பின்னர், மேற்கண்ட ஒப்பளிப்க் கும் அதிகாரம் துயர் துடைக்கும், பொறுப்பேற்கும் வட்டாட்சி யர்களுக்கு 18-7-1989 முதல் வழங்கப்பட்டுள்ளது.

### 7.3. உதவித் தொகை வழங்கும் முறை:

முதியோர் உதவித் தொகை திட்டததின் கீழ் 1-4-1962 முதல் 31-3-1979 வரை ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ. 20 உதவித் தொகையாக அளிக்கப்பட்டது. 1-4-1979 முதல் 31-3-1982 வரை மாதம் ரூ. 25 ஆகவும், 1-4-1982 முதல் 30-4-1989 வரை மாதம் ரூ. 35 ஆகவும் வழங்கப்பட்டு வந்தது. 1-5-1989 முதல் மாதம் ரூ. 50 ஆக வழங்கப்படுகிறது. இத திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உதவித்தொகை, பயன்பெறு பவர்களின் முகவரிக்கு பண அஞ்சல் மூலம் வட்டாட்சியரால் அனுப்பப்படுகிறது. இதற்கான பண அஞ்சல் கட்டணச் செலவையும் மாநில அரசே ஏற்றுக் கொள்கிறது.

### 7.4. இலவச கைத்தறி ஜனதா ஆடைகள் வழங்குதல்:

ஆண்டுதோறும் பொங்கல் நாள் மற்றும் சுதந்திர நாள் ஆகிய நாட்களில் முதியோர் உதவித் தொகை பெறும் ஆண் களுக்கு தலா ஒரு கைத்தறி ஜனதா வேட்டியும், பெண்களுக்கு தலா ஒரு கைத்தறி ஜனதா சேலையும் 1979 சுதந்திர நாள் முதல் இலவசமாக அளிக்கப்பட்டு வருகிறது.

### 7.5. மதிய சத்துணவு வழங்குதல்:

முதியோர் உதவித்தொகை பெறுபவர்களில், விரும்புவோர் களுக்கு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு கூடங்களில் மதிய உணவு வழங்கப்படுகிறது.

**7.6. முதியோர் உதவித் தொகை திட்டத்தின் கீழ் பயனடைவோரின் எண்ணிக்கை (30—6—1991):**

| | எண்ணிக்கை. |
|---|---|
| (அ) முதியோர் உதவித்தொகை (சாதாரணம்) திட்டம் .. ... ... ... | 2,25,358 |
| (ஆ) முதியோர் உதவித்தொகை (ஆதரவற்றோர் உடல் ஊனமுற்றோர்) திட்டம் ... | 27,438 |
| (இ) முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற விதவைகள்) திட்டம் ... ... ... | 1,84,598 |
| (ஈ) முதியோர் உதவித்தொகை (ஆதரவற்ற வேளாண்மை தொழிலாளர்கள்) திட்டம். | 68,292 |
| (உ) முதியோர் உதவித் தொகை (கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் ஆதரவற்ற பெண்கள்) திட்டம் .. .. | 22,699 |
| மொத்தம் ... | 5,28,385 |

**7.7. ஒவ்வொரு காலாண்டுக்கும் காத்திருப்போருக்கு முதியோர் உதவித்தொகை வழங்குதல்:**

ஒவ்வொரு காலாண்டின் முடிவிலும் காத்திருப்போர் பட்டி யலில் இருப்பவர்களுக்கு முதியோர் உதவித் தொகை வழங்க வேண்டும் என்ற அரசு ஆணை மே மாதம் 1989 முதல் நடை முறைப்படுத்தப்படுகிறது.

7.8. 1991—92 ஆம் ஆண்டில் முதியோர் உதவித் தொகை வழங்குப் திட்டத்திற்கென ரூ. 32.50 கோடி ஒதுக்கப்பட் டுள்ளது.

7.9. 1989 மே மாதம் வரை சத்துணவுக்கூடங்களில் உணவு உட்கொள்ளும் முதியோர் உதவித்தொகை பெறுபவர்கள் ஒவ் வொருவருக்கும் வாரம் ஒரு முறை ½ கிலோ அரிசியும், சத்துணவு கூடங்களில் சாப்பிடாத முதியோர்கள் ஒவ்வொருவருக்கும் வாரம் 1 முறை 1 கிலோ அரிசியும் இலவசமாக வழங்கப்பட்டு வந்தது. ஆனால் 1989 ஆம் வருடம் மே திங்களிலிருந்து சத்துணவுக் கூடங் களில் இலவச உணவு மட்டுமே அனுமதிக்கப்பட்டு இலவச அரிசி நிறுத்தப்பட்டு விட்டது.



ஆதரவற்ற வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள முதியோர் உதவித் தொகை பெறும் முதியோர்களின் நலனைக் கருத்தில் கொண்டு இவ்வரசு மீண்டும் 15-9-1991 முதல் முதியோர், உதவித்தொகை பெறுபவர்கள் முன்பு போலவே இலவச அரிசி பெறுவதற்கான ஆணை வெளியிட்டுள்ளது.

**முதியோர் இல்லங்கள்.**

7.10 வறுமை நிலையில் உள்ள குடும்பத்தைச் சார்ந்த முதி யோர்கள் மற்றும் ஆதரவற்ற வறுமையில் உள்ள முதியோர்கள் ஆகியவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. எனினும் இவர் களின் அன்றாட வாழ்வில் உணவு, உறைவிடம் இன்றி துயர் உறுவோர் பலர் உள்ளனர். இவர்களுடைய துயர், களைய, மாவட்டந்தோறும் தங்குமிடங்கள் அமைக்க அரசு கருதுகிறது. படிப்படியாக இத்திட்டம் நிறைவேற்றப்படும். இத்திட்டத்தில் தனியார் தொண்டு நிறுவனங்களின் சேவையை பயன்படுத்தி, ஏற்கெனவே பெரியார் மாவட்டத்தில் இயங்கும் தனியார் தொண்டு நிறுவனத்துடன், மேலும் ஐந்து இல்லங்கள் இந்த ஆண்டு ரூ. 5 லட்சம் நிதி உதவியுடன் தொடங்கப்படும்.

**தொகுப்புரை:**

''ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்'' என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

''இல்லாதவருக்கு உதவி செய்வேன், அவர்களை வாழ்க்கை யில் உயர்த்துவேன் அதுவே எனது இலட்சியம்'' என்றார் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

அதன்படி மகளிர், குழந்தைகள், ஊனமுற்றோர் ஆகிய சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்கு சமூக நலத்துறையின் மூலம் உதவிக் கரம் நீட்டுவோம். ஒல்லும் வகையால் உதவி செய் வோம். அப்பொழுது தான் அவர்கள் வாழ்வில் உயர்வார்கள். நாடும் உயரும். இதையே நமது இலட்சியமாகக் கொண்டு தொடர்ந்து நடை போடுவோம். என்றும் எவரும் இதுவரை எடுக்காத நடவடிக்கைகளை எடுத்து சமூக நலத்துறையின் பணிகளை துரிதப்படுத்திக் கொண்டு இருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி தலைமையில் தொடர்ந்து வெற்றி நடை போடுவோம்.

## இணைப்பு 3.

### வருவாய்த் துறை.

### கொள்கை விளக்கக் குறிப்பு—1991-92.

(112 ஆம் பக்கத்தில் உள்ள அடிக் குறிப்பைக் காண்க.)

பக்கங்கள்

1 முன்னுரை
2 மாவட்டங்களைச் சீரமைத்தல்
3 மாவட்ட வருவாய் நிருவாகம்
4 வருவாய்த்துறை கட்டிடங்கள்
5 கிராம நிர்வாகம்
6 நிலவரி
7 தண்ணீர்க் கட்டணம்
8 பட்டா பாஸ் புத்தகத் திட்டம்
9 நிலக் கொள்கை
10 வீட்டுமனை வழங்குதல்
11 நில ஒப்படை
12 நிலம் கையகப்படுத்துதல்
13 நிலச்சீர்திருத்தம்
14 நகர்ப்புற நில உச்சவரம்பு
15 நகர்ப்புற நிலவரி
16 வேளாண்மை வருமான வரி
17 மரத்திற்கான பட்டா வழங்கும் திட்டம்
18 இயற்கையின் இடர்ப்பாடுகள்
19 வறட்சி நிவாரணப் பணிகள்
20 தீ விபத்து
21 நில அளவை மற்றும் பதிவுருக்கள் பராமரிப்பு



### வருவாய்த்துறை.

### கொள்கை விளக்கக் குறிப்பு 1991-92.

முன்னுரை.

மாவட்ட அளவிற், வருவாய் மற்றும் நில நிர்வாகப் பணி யினை மாவட்ட ஆட்சியர் நிர்வகிக்கிறார். இவற்றின் செய லாக்கம் மூன்று ஆணையர்களால் திறமையாகக் கண்காணிக்கப் படுகிறது.

சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் மாவட்ட வருவாய் மற்றும் பொது நிர்வாகம், நிலவரி மற்றும் தொடர்புடைய மேல் வரிகள் விதித்தல் மற்றும் வசூலித்தல். இயற்கையின் இடர்பாடுகள், வறட்சிப் பணி ஆகிய அலுவல் களை கவனித்துக் கொள்கின்றார்.

சிறப்பு ஆணையர் மற்றுப் நில நிர்வாக ஆணையர் நில எடுப்பு. நில ஒப்படை, நில உரிமை மாற்றப், வீட்டுமனை ஒப்படை நில வருவாய் ஆவணங்கள் பராமரித்தல் மற்றும் நிலப்பட்டாக்கள் வழங்கல் குறித்த அலுவல்களை கவனித்து வருகிறார்.

சிறப்பு ஆணையர் மற்றும் நிலச் சீர்திருத்த ஆணையர் பொறுப்பில் நிலச் சீர்திருத்தம், நில உச்ச வரம்பு, நில குடி வாரம், வேளாண்மை வருமான வரி, நகர்ப்புற நிலவரி, குறித்த அலுவல்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மேற்படி பணிகளின் செயலாக்கம் பற்றிய கொள்கைகளை உருவாக்கி அவற்றின் செயலாக்கத்தை அரசின் வருவாய்த் துறை கண்காணிக்கின்றது.

மாவட்ட அளவிலான நிர்வாக வரம்பு, நில நிர்வாகம், வருவாய், நிர்வாகம் மற்றும் அத்யாவசிய மீட்புப் பணிகள், குடும்பக் கட்டுப்பாடு, போலி ரேஷன் கார்டுகளை கண்டுபிடித்தல், துயர் துடைப்புத் திட்டம். நிவாரணப் பணிகளுடனுமே நின்று விடாமல் எண்ணற்ற வளர்ச்சி மேம்பாட்டு பணிகளையும் உள்ளடக்கியுள்ளது. மாவட்ட அளவில் இப்பணிகள் மாவட்டாட்சியர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர்கள், கோட்டாட்சியர், வட்டாட்சியர் நில வருவாய் ஆய்வாளர், மற்றும் கிராம நிர்வாக அலுவலர்கள். உதவியுடன் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

தற்போது 21 மாவட்டங்கள், 60 வருவாய் கோட்டங்கள், 172 வட்டங்கள், ஒரு கூடுதல் வட்டம், 1101 உள் வட்டங்கள், 17,275 வருவாய் கிராமங்கள் உள்ளன.

**2. மாவட்டங்களைச் சீரமைத்தல் :**

பொதுமக்களின் தேவைகளை நிறைவு செய்யவும், வருவாய் நிருவாகத்தை மேம்படுத்தவும் மாவட்ட நிர்வாகத்தைச் சிறப்பாக அமைக்கும் நோக்குடன், பெரிய மாவட்டங்களையும் வட்டங்களையும் அரசு சீரமைத்து வருகின்றது. அரசுக்கு நிதி நெருக்கடி இருந்தபோதிலும், தஞ்சாவூர் மாவட்டத்தை இரண்டாக பிரித்து, நாகப்பட்டினத்தைத் தலைமையிடமாகக் கொண்டு கிழக்கு தஞ்சாவூர் பகுதியை ஒரு புதிய மாவட்டமாக ஏற்படுத்தவும், அம்மாவட்டத்திற்கு ''காயிதே மில்லத் மாவட்டம்'' என பெயரிடவும் அரசு முடிவு செய்துள்ளது. அரசின் மேற்சொன்ன முடிவுக்குச் செயல் வடிவம் கொடுக்க இந்திய ஆட்சிப் பணியைச் சார்ந்த தனி அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

சில மாவட்டங்களின் பெயர்களைக் கீழ்க்கண்டுள்ளவாறு மாற்றம் செய்துள்ளது.—

| | | |
|---|---|---|
| செங்கை-அண்ணா | .. | செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். |
| திண்டுக்கல்-காயிதே மில்லத் | ... | திண்டுக்கல்-அண்ணா. |
| பசும்பொன் தேவர் திருமகன் | ... | பசும்பொன் முத்துராமலிங்க தேவர். |

**3. மாவட்ட வருவாய் நிர்வாகம் :**

நிர்வாகம், மக்களை நெருங்கி செயல்படச் செய்யவும், மக்களுக்கு விரைவாக நிவாரணம் அளிக்கவும், வட்டாட்சியரின் பணிகளை அரசு பரவலாக்கி, அப்பணிகளில் சிலவற்றை இரண்டு அல்லது மூன்று குறுவட்டங்களுக்குப் பொறுப்பான மண்டல துணை வட்டாட்சியர்களிடம் ஒப்படைத்துள்ளது. இதனால் மக்கள் தங்கள் குறைகளை விரைவில் தீர்க்க முடிவதோடு, நீண்ட தூரம் பயணம் செய்து வட்ட தலைமை இடங்களுக்குச் சென்று அணுக வேண்டிய நிலை எழாது.

2. சாதிச் சான்றுகள் கோரி மாணவர்களிடம் இருந்தும் ஏனையோர்களிடமிருந்தும் பெறப்படும் விண்ணப்பங்களைப் பெறப்பட்ட அன்றே, அவர்களுக்கு எந்தவிதமான தடையோ அல்லது இன்னலோ இல்லாமல் சாதிச் சான்றுகள் வழங்கப்படுகின்றன என்பதை உறுதி செய்ய வேண்டுமென்று மாவட்ட ஆட்சியர்களுக்கு அரசு அறிவுரைகள் வழங்கியுள்ளது.

3. சாதாரண மனிதனின் குறைகளை களைவதே மனு நீதித் திட்டம் மற்றும் குறை தீர்க்கும் நாள் திட்டங்களின் குறிக்கோளாகும். இவ்விரண்டு திட்டங்களும் முறையாகச் செயல்படுகின்றன. மனு நீதித் திட்டத்தை தீவிரப்படுத்துவதற்கு,



மாவட்ட ஆட்சியர்களுக்கு மாவட்ட அளவிலும், வட்ட ஆட்சியர்களுக்கு வட்ட அளவிலும், போதுமான பணியிடங்களை வழங்க வேண்டுமென்று பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. குறிப்பாக மக்கள் குறைகளை வெகு விரைவாக கவனிப்பதற்கு, மாவட்ட ஆட்சியர்களுக்கு உதவி செய்ய ஒரு தனி நேர்முக உதவியாளரும், வட்டாட்சியருக்கு உதவி செய்ய வட்ட அளவில் ஒரு துணை வட்டாட்சியரும் நியமனம் செய்யும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளது. இவர் மனுவினைத் தொடர்ந்து கவனித்து பல்வேறு துறைகளிடமிருந்தும் அறிக்கைகளைப் பெற முடிவதோடு மாவட்டாட்சியர்/கோட்டாட்சியர்/வட்டாட்சியர் அவர்களின் முடிவான உத்தரவுக்கும் அனுப்ப இயலும்.

4. மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலுள்ள தலைமை உதவியாளர் பணியிடத்தை வட்டாட்சியர் நிலைக்கு உயர்த்தியதால், இதுவரை மாவட்ட ஆட்சியரால் துணை வட்டாச்சியர் நிலையில் உள்ளவர்களின் உதவியுடன் கவனித்து வரப்பட்ட மிகவும் முக்கியமான மற்றும் எளிதில் மாறுபாடு கொள்ளத்தக்க (sensitive) குற்றவியல் நடுவர் மன்றப் பணி (magesterial matters) இனி மேலும் சிறப்புடனும் செம்மையுடனும் கவனிக்க வழிவகுக்கிறது. இதேபோன்று மாவட்டத் தலைமையிடங்களிலுள்ள வட்ட விநியோக அதிகாரிகள் பணியிடங்களையும், உள் மாநில எல்லை வட்டாட்சியர் பணியிடங்களையும் உயர்த்துவதினால், திறமையான மற்றும் பாதுகாப்பான நிர்வாகத்தையும் மக்களுக்கு அளிக்க முடிகிறது.

5. வருவாய் நிர்வாகத்தை துரிதப்படுத்தவும், முடுக்கிவிடவும் ரூபாய் 220 இலட்சம் செலவில் நவீனக் கருவிகளை (கணிப் பொறி இயந்திரம் (computer), நகல் எடுக்கும் பொறி (plain paper copier) வண்ணமெருகு பூச்சு பொறி (laminating machine) நுண்படச்சுருள் கருவிகள் (micro film equipments)) போன்றவற்றை மாவட்ட அதிகாரிகளுக்கு அளிக்கலாம். என்று அரசு முடிவு செய்துள்ளது.

6. (அ) வட்டாட்சியர்கள் எளிதாக சென்று வரவும், பணிகளை செவ்வனே ஆற்றுவதற்கும் வட்டாட்சியர்களுக்கு 5 ஜீப்புகளை வழங்கவும்.

(ஆ) 12 மழைமானிகளை அளிக்கவும்.

(இ) வட்ட அலுவலகங்களில் பதிவுருக்களை பாதுகாக்கவும் ரூ. 18.16 இலட்சம் அனுமதி அளிக்கலாமென்று அரசு முடிவு செய்துள்ளது.

7. மதுவிலக்குக் கொள்கையால் வருவாய்த் துறையில் பணியிழந்த அனைத்து அலுவலர்களையும் பணியில் மீண்டும் அமர்த்துவதற்கு பல வகையான பணியிடங்களை தோற்றுவிக்கலாமென்று முடிவு செய்து அதற்காக நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளது. மதுவிலக்கு கொள்கையால் பணி இழப்பு மற்றும் பணி இறக்கம் ஏற்படாத வண்ணம் அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருகிறது. அவ்வாறு இருக்குமேயானால் அவர்கள் மனு நீதித்திட்டம், குடிமைப்பொருள் வழங்கும் பணி, நில சீர்திருத்தப்பணி, வருவாய் நீதிமன்றம் மற்றும் நில அளவை போன்ற பணிகளில் அமர்த்த தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

## 4. வருவாய்த்துறை கட்டிடங்கள் :

சிதம்பரனார் மாவட்டம் தவிர, மற்ற எல்லா மாவட்ட அலுவலகங்கள், அரசுக் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. அங்கு நீதி மன்ற குறுக்கீடினால் அலுவலக வளாகம் கட்டுவது தாமதம் அடைந்துள்ளது.

## வட்டாட்சியர் அலுவலகம் :

தற்பொழுது 10 வட்டாட்சியர் அலுவலகங்கள் மட்டுமே வாடகைக் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. இவைகளில் 4 வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கு ஏற்கனவே நிர்வாக ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது. 1991—92 ஆம் நிதியாண்டில் 2 வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கும் மேலும் 4 வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு கூடுதல் கட்டிடங்கள் கட்டுவதற்கும் ஆன செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

## 5. கிராம நிருவாகம் :

தமிழ்நாட்டில் 17,275 வருவாய்க் கிராமங்கள் உள்ளன. அவை 12,498 கிராம நிருவாக அலுவலர்களால் நிர்வகிக்கப்படுகின்றன. இவர்களுக்கு உதவியாக 30,747 கிராமப் பணியாளர்கள் உள்ளனர். கிராம நிருவாக அலுவலர்கள் அவர்களது பிற பணிகளுடன் கிராமங்களில் கள்ளச் சாராயம் காய்ச்சப்படுவதையும் கண்காணிக்க வேண்டும். அவர்கள் அவர்களது பொறுப்பிலுள்ள கிராமங்களில் கள்ளச்சாராயம் காய்ச்சப்படுவது பற்றிய அறிக்கையை தினமும் உள்ளூர் காவல் நிலையத்திற்கும், வட்ட ஆட்சியருக்கும் அனுப்ப வேண்டும். வட்ட ஆட்சியரின் மேற்படி பணிகளை 7 தினங்களுக்கொருமுறை மாவட்ட ஆட்சியருக்கு அனுப்ப வேண்டும். மாவட்ட ஆட்சியர் ஆய்வு செய்து ஆய்வு அறிக்கையை அரசின் வருவாய்த் துறைக்கு அனுப்ப வேண்டும். மேற்படி கள்ளச் சாராயம் காய்ச்சுவதையும், விற்பதையும் தடுக்க



வருவாய்த் துறை அலுவலர்களைக் கொண்ட நடமாடும் கண்காணிப்புக் குழுக்களை மாவட்ட அளவில் ஏற்படுத்தவும் அரசு ஆய்வு செய்து முடிவு எடுக்க உள்ளது.

கிராமப் பணியாளர்கள் பகுதிநேரப் பணியாளர்கள் ஆவர். அவர்களது மதிப்பூதியம் 1—1—1991 முதல் ரூ. 577 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. கிராமப் பணியாளர்களின் பின்தங்கிய சமூக மற்றும் பொருளாதார நிலையினைக் கருத்திற்கொண்டு அரசு ஊழியர்கள் பணியிலிருக்கும்போது மரணமடைந்தால் வழங்கப்படும் குடும்பநல நிதி ரூ. 60,000 வழங்கும் திட்டம் கிராமப் பணியாளர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

## 6. நிலவரி :

புஞ்சை நிலங்களுக்கு விதிக்கப்படும் நிலவரியை அரசு ஏற்கனவே ரத்து செய்துள்ளது. மேலும் 5 ஏக்கர் மற்றும் அதற்கு குறைவாக நன்செய் நிலங்களை வைத்துள்ள தனி நபருக்கு நன்செய் நிலங்களைப் பொறுத்தவரை நிலவரி ரத்து செய்யப்பட்டுள்ளது.

1956 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து வறட்சி நிலவி வந்தது. விவசாயிகள் தற்போது திருப்பிச் செலுத்தும் சக்தியை இழந்து அதன் விளைவாக நிலவரியை அவர்களிடமிருந்து முறையாக வசூலிக்க இயலவில்லை. பாதிக்கப்பட்ட பருவநிலை காரணமாக இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர், திருநெல்வேலி கட்டமொம்மன் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் நிலவரி ரூ. 1,08,35,525-க்கு தள்ளுபடி செய்யப்பட்டது. மேற்படி 4 மாவட்டங்களில் 1399 ஆம் பசலி விளைச்சல் ஆண்டுக்கு வரி விலக்கு அளிக்கப்படுகிறது. மற்றும் அரசு கடன்கள் அடுத்த பசலிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

## 7. தண்ணீர்க்கட்டணம் :

வருவாய்த் துறையின் 8—9—1977 ஆம் நாளிட்ட 1742 ஆம் எண் அரசாணையின்படி மாநிலத்தில் பாசனக் கட்டணங்கள் சீர்திருத்தம் செய்வது தொடர்பாக வழிவகை செய்ய அரசு ஒரு குழுவினை நியமித்தது. திரு. இராம்சந்தர், இ.ஆ.ப. அவர்களின் தலைமையிலான அக்குழு தனது அறிக்கையினை அரசிற்கு 1979 ஆம் ஆண்டில் சமர்ப்பித்தது. புஞ்செய் நிலங்களின் மீதான தீர்வையினை தள்ளுபடி செய்வது, மின் கட்டணங்களைக் குறைப்பது ஆகியவை தொடர்பாக அரசு அளித்த சலுகைகளை கணக்கில் கொண்டு ஒரு அறிக்கையினை அளிப்பதற்காக அவரையே தலைவராகக் கொண்ட மற்றுமொரு குழுவினை அரசு நியமித்தது. இவ்விரு குழுக்களின் பரிந்துரைகள் அரசின் ஆய்வில் உள்ளன.

8. பட்டா பாஸ் புத்தகத் திட்டம் :

1983 ஆம் வருட தமிழ்நாடு பட்டா பாஸ் புத்தகச் சட்டம் ஒவ்வொரு வட்டத்திலும் உள்ள எல்லா நில உரிமைதாரருக்கும் பட்டா பாஸ் புத்தகம் வழங்க வழிவகை செய்கிறது. இந்த பட்டா பாஸ் புத்தகத்தில் நிலங்களில் பயிர் செய்யும் நபர்களின் பெயர்கள், கூட்டுப் பாட்டாதாரர்களின் பெயர்கள், அவர்கள் ஒவ்வொருவருக்கும் உரிமையுள்ள பங்கு, பட்டாதாரர் செலுத்த வேண்டிய நிலவரி, செலுத்திய வரி விவரங்கள், நிலங்களின் மீதுள்ள வில்லங்கம் ஆகிய விவரங்களும் குறிப்பிடப்படுகின்றன. பட்டா பாஸ் புத்தகம் வழங்கும் திட்டம் பரிட்சார்த்த முறையில் செங்கல்பட்டு எம். ஜி. ஆர். மாவட்டத்தில் திருத்தணி வட்டத்திலும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் குளித்தலை வட்டத்திலும் 1—10—1987 முதல் செயல் படுத்தப்பட்டு வருகின்றது. பல நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக இத்திட்டத்திற்குத் தற்போது சில மாற்றங்கள் தேவைப்படுகின்றன. திருத்தணி மற்றும் குளித்தலை வட்டத்தில் பெற்ற அனுபவத்தை ஆய்வு செய்து தமிழகத்தில் உள்ள எல்லா மாவட்டங்களிலும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும்.

9. நிலக் கொள்கை :

உரிமை மாற்றம்.

அனைத்துப் பொது நிலங்களும் அரசுக்குச் சொந்த மானவை. அவற்றினை வருவாய்த் துறை நிர்வகித்து வருகிறது. மேற்படி நிலங்களை வருவாய் நிலை ஆணை 24-இன் கீழ் பள்ளி, மருத்துவமனை, சாலை, உள்ளாட்சி நிறுவனத்திற்கு அலுவலகக் கட்டிடங்கள் போன்ற பொது நோக்குகளுக்கு வழங்குவதற் கான நிலங்களாக இருக்குமானால், சூழ்நிலைக்கேற்றவாறு முழு நிலக்கிரயம் அல்லது சலுகை அடிப்படையிலான நிலக் கிரயம் வசூல் செய்து கொண்டு அல்லது நிலக் கிரயமின்றி அரசு நில உரிமை மாற்றம் செய்கிறது. மேலும் இரயில்வே, பாதுகாப்புத் துறை போன்ற முக்கியமான மைய அரசுத் துறை களுக்கு நிலக் கிரயம் வசூலித்துக் கொண்டு நிலம் வழங்கப்படு கிறது. சென்னை கடற்கரை-லஸ் துரித இரயில் போக்கு வரத்துத் திட்டத்திற்கு நிலங்களை மாநில அரசு இலவசமாக வழங்கியுள்ளது.

அரசின் வசம் போதிய நிலங்கள் இல்லாததால் அரசு நிலங் களை மாநில அரசு மற்றும் மைய அரசுத் துறைகள், பொது மக்கள், தனியார் அமைப்புகள் மற்றும் பிறர் கோருவது பெருகிவரும் நிலையில், நீர்நிலை மற்றும் மேய்க்கால் புறம் போக்கு போன்ற நிலங்களை பாதுகாத்து உயிரின வாழ்க்கை சூழலை சமநிலைப்படுத்தும் பொருட்டு அரசு நிலங்களை வழங்குவதில் சில வழிமுறைகளை வகுத்து நடைமுறை ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட வழிமுறைகளின்படி அரசு



நிலங்கள், அரசுத் துறைகள் மற்றும் அரசு நிறுவனங்களுக்கு உரிமை மாற்றம் மட்டுமே செய்யப்படல் வேண்டும். மைய அரசுத் துறைகள், மைய அரசு நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் உள்ளிட்ட பிற இனங்களில் அரசு நிலம் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட வேண்டும். தொழில் வளர்ச்சியினை ஊக்குவிப்ப தற்காக செய்யும் தொழிலின் தன்மையைப் பொருத்து அரசு நிலங்கள் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டு வருகின்றன.

10. வீட்டுமனை பட்டா :

சமுதாயத்தில் பொருளாதார அடிப்படையில் நலிவுற்றவர் களின் நிலைதனை மேம்படுத்தவும், அவர்களுக்கு அடிப்படை யான வீட்டுவசதி அளிக்கும் பொருட்டும், வருவாய் நிலை ஆணை எண். 21-இன் கீழ் நகர்ப்புறங்களிலும், கிராமப்புறங்களிலும், தகுதி வாய்ந்த ஏழைகளுக்கு வீட்டுமனை வழங்கும் உன்னத திட்டத்தை அரசு நிறைவேற்றி வருகிறது.

2. இத்திட்டத்தின்படி ஆண்டு வருமானம் ரூ. 6,400-க்கு கீழ் உள்ளவர்கள் இலவச வீட்டுமனை ஒப்படை பெற தகுதி யுடையவர் ஆவர். நிலமற்ற ஏழை ஆதி திராவிடர்கள், பழங்குடியினர், போரில் வீர மரணமடைந்த அல்லது இயலாமை யில் உள்ள இராணுவ வீரர்கள் குடும்பத்தினர், முன்னாள் படை வீரர்கள், கொத்தடிமை முறை ஒழிப்புச் சட்டத்தின் கீழ் விடுவிக்கப்பட்டோர், இலங்கை, மற்றும் பர்மா ஆகிய நாடுகளி லிருந்து அகதிகளாக தாயகம் திரும்பியோர், தங்கக் கட்டுப்பாடு சட்டத்தினால் வேலையிழந்த பொற்கொல்லர்கள், ஆகியோருக்கு வீட்டுமனை வழங்குவதில் முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இதன் படி மாநகராட்சிப் பகுதிகளுக்கு ஒரு சென்ட் வீதமும், நகராட்சிப் பகுதிகளில் 1½ சென்ட் வீதமும், கிராமப்புறங்களில் இரண்டு சென்ட் வீதமும் ஒப்படை வழங்கப்படுகிறது. சமுதாயத்தில் பெண்களின் நலன் காக்கவும், மற்றும் அவர்களின் நிலையினை மேம்படுத்தவும் வேண்டி குடும்பத்தில் மனைவி/பெண்டிர் பெயரில் தான் பட்டா வழங்கப்பட வேண்டுமென்றும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

3. வீட்டு மனைப் பட்டாவழங்கும் திட்டத்தை நிறை வேற்றுதல் நீங்கலாக அரசு நிலங்களில் குடிசைகள் மற்றும் குடியிருப்புகள் மூலமாக உள்ள ஆட்சேபகரமற்ற ஆக்கரமணங் களும் வரன்முறைப்படுத்தப்படுகின்றன. வீட்டுமனை ஒப்படை தாரர்கள் வீடு கட்டுவதற்கு கடன் வசதி பெறுவதற் காக அவர்களுக்கு ஒப்படை செய்யப்பட்ட வீட்டுமனையை தேசிய வங்கியில் அடமானம் செய்யலாம்.

4. இத்திட்டத்திற்காக ஒவ்வொரு ஆண்டும் குறியீடு நிர்ண யிக்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப 1990-91 ஆம் ஆண்டில் 3.25 இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டு மார்ச்சு 1991 வரை 3,77,069 வீட்டு

மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. 1991-92 ஆம் ஆண்டில் உயரளவாக 3.75 இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இக் குறியீட்டினை அடைதல் வேண்டி முனைப்பாக நடவடிக்கையினை மேற் கொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர்கள் கேட்டுக்கொள்ளப்படு கிறார்கள்.

## 11. நில ஒப்படை :

அரசு செயல்படுத்தி வரும் மற்றொரு சிறப்பான திட்டம் பயிரடத்தக்க தரிசு நிலங்கள் ஒப்படை செய்தல் ஆகும் பயிரி'-த் தக்க தரிசு நிலங்கள் தகுதி வாய்ந்த நிலமற்ற ஏழை மக்களுக்கு இலவசமாக ஒப்படை செய்யப்படுகின்றன. ஒரு நபரின் ஆண்டு வருமானம் ரூ. 6,400-க்கு குறைவாக இருப்பின் அவர் ஏழை எனக் கருதப்படுகிறார். அவ்வாறு கணக்கிடும்போது குடும்பத் தில் உள்ள நபர்களின் எண்ணிக்கை எவ்வளவாக இருந்தாலும் அதே ரூ. 6,400-ஐக் கணக்கில் கொள்ள வேண்டும். பயிரிடத் தக்க தரிசு நிலங்களில் ஆட்சேபனையற்ற ஆக்கிரமணங்கள் இருப்பின் அதனை சிறப்பு இனமாகக் கருதி ஆக்கிரமணதாரரின் பொருளாதார நிலையை கணக்கில் கொண்டு சந்தை விலை நிர்ணயிக்கப்பட்டு ஒப்படை செய்யப்படுகிறது.

2. அ சு நிர்ணயித்துள்ள முன்னுரிமை பட்டியல் வரிசைப்படி தகுதியு ள நபர்களுக்கு நில ஒப்படை வழங்கப்படுகின்றன. இப்பட்டியலில், போரில் வீர மரணமடைந்த இராணுவத்தினரின் குடும்பத்தினரும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பை சார்ந்த நிலமற்றோரும் முதலிடம் பெறுகின்றனர்.

3. கன்னியாகுமரி மாவட்டம் நீங்கலாக ஏனைய மாவட்டங் களில் ஒருவருக்கு ஒப்படை செய்யப்படும் நிலத்தில் உயரளவு பரப்பும் அவர் ஏற்கெனவே வைத்திருக்கும் நிலப்பரப்பும் சேர்ந்து உயரளவு பரப்பு 3 ஏக்கர் புன்செய் நிலம் அல்லது ஒன்றரை ஏக்கர் நன்செய் நிலம் மட்டுமே ஒப்படை செய்யலாம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் நிலங்கள் மிகவும் குறைவாகவும் மதிப்பு வாய்ந்தவை என்பத னால் இந்த உயரளவு ஒரு ஏக்கர் புன்செய் அல்லது அரை ஏக்கர் நன்சய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

4. நிலம் ஒப்படை பெற்ற 3 ஆண்டுகளுக்குள் பயிர் செய்யப் பட வேண்டும் எனவும் 10 ஆண்டு காலத்திற்குள் அந்நிலத்தை விற்கவோ அன்றி உரிமை மாற்றம் செய்யவோ கூடாது எனவும் நிபந்தனைகளுடன் நிலங்கள் ஒப்படை செய்யப்படுகின்றன. இருப் பினும் பயிரிடுவதற்கு கடன் வாங்கும் பொருட்டு நிலங்களை வங்கிகளில் அடமானம் வைக்கலாம். ஆனால், நிலத்தை ஒப்படை பெற்றவரோ அன்றி, அவரது குடும்ப உறுப்பினர் களோ அன்றி கூலி பெறும் தொழிலாளர்களைக் கொண்டே தான் நிலத்தை பயிரிட வேண்டும். வேறு எவரும் அந்நிலத்தை



பயிரிடக் கூடாது. ஒப்படை நிபந்தனைகள் மீறப்பட்டால் எவ்வித நஷ்ட ஈடும் கொடுக்காமல் நிலத்தை மீண்டும் அரசு எடுத்துக்கொள்ளலாம்.

5. பொது தேவைகளுக்கு உரிய சமுதாய நிலங்கள் யாவும் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நோக்கில், கால்வாய், ஓடை மற்றும் நீர்ப்பரப்பு நிலங்கள் போன்று அனைத்து நீர்வழிப் புறம்போக்குகளையும் மாட்டுத் தொழுவம் மந்தைவெளி மற்றும் மேய்க்கால் புறம்போக்குகளையும் ஒப்படைசெய்வதிலிருந்து அரசு தடை விதித்துள்ளது.

6. இயற்கை சூழல் சமன்பாட்டினை பாதுகாப்பதற்கும் நில அரிப்பினைத் தடுக்கவும் மாநிலத்திலுள்ள அனைத்து மலைப் பிரதேசங்களிலும் வேளாண்மைக்கான நில ஒப்படை செய்வதற்கு அரசு தடை விதித்துள்ளது. மேலும் ஆட்சேபகர மான ஆக்கிரமிப்புகளை அகற்றுவதன் மூலமாகவும் தகுதியான ஆக்கிரமிப்புகளை வரன் முறைப்படுத்துவதன் மூலமாகவும் இம் மாநிலத்திலுள்ள மலைப் பிரதேசங்களில் இயற்கைச் சூழலின் சமன்பாட்டினை பாதுகாப்பதற்கான பல்வேறு அணுகுமுறைகள் இன்ன பிறவற்றைக் கண்டறிந்து அரசுக்கு அறிக்கைத்தர சிறப்பு ஆணையர் மற்றும் நிலநிர்வாக ஆணையர் தலைமையில் ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டு அறிக்கை பெறப்பட்டு அவ் வறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

7. இது போன்ற நிலங்களை ஏழை மக்களுக்கு ஒப்படை செய்வதன் மூலம் அவர்களை பெரும் நிலக்கிழார்களின் பிடி யிலிருந்து விடுவிப்பதும் பொருளாதார ரீதியில் தன்னிறைவு பெறச் செய்வதும் அரசின் நோக்கமாகும். மேலும் ஆதாரம் எதுவுமின்றி அவர்களது அனுபவத்திலிருந்து வரும் நிலத்தையோ அல்லது பல காலமாக அவர்களால் குத்தகைக்கு பயிரிடப்பட்டு வரும் நிலத்தையோ அவர்களுக்கு சொந்தமாக்குவதும் அரசின் குறிக்கோளாகும்.

8. பொதுவாக இதன் மூலம் பயனடையும் பொரும்பாலான வர்கள் ஏழைகளாகவும் தங்களது வாழ்நாளைக் கழிக்க கூலி வேலை செய்து பிழைப்பவர்களுமாகவே உள்ளனர். ஒப்படைக் காக கைவசமாக்கும் புறம்போக்கு நிலங்கள் பெரும்பாலும் வரண்ட பயிர்செய்ய பாங்கற்ற நிலங்களாகவே இருப்பதால் அவர் களுக்கு அரசால் வழங்கப்படும் அனைத்து நிலங்களுமே உடனடி யாக விவசாயம் செய்யத் தகுந்தவையாக இருப்பதில்லை. உழுபவர்களுக்கே நிலத்தை சொந்தமாக்கும் குறிக்கோளை அடைவது மட்டுமின்றி இதன் மூலம் பயனடைவோரது பொருளா தார நிலையையும் மேம்படுத்த அரசு பல்வேறு வழிமுறைகளை செயல்படுத்த எண்ணியுள்ளது. அத்தகைய வழிமுறைகளில் ஒன்று ஒப்படை செய்யப்படவிருக்கும் நிலத்தைச் சீர்படுத்தி பாய்ச்சல் ஆதாரத்துடன் நிலத்தை ஒப்படை செய்வதாகும். அங்ஙனம் செய்தால் தான் ஒப்படை பெறுபவர் நிலத்தைப் பெற்றுக் கொண்டு உடனடியாக விவசாயம் செய்ய இயலும்.

9. இதன் மூலம் பயனடையும் ஏழைகளுக்கு நிதிநிறுவனங் கள் மூலம் பல்வேறு உள்ளமைப்புக்களை ஏற்படுத்தி தரு வதற்கும் அரசு எண்ணியுள்ளது.

## 12. நிலம் கையகப்படுத்துதல் :

1984 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தின் கீழ் பொது நோக்கங்களுக்காகவும் தொழிற்பேட்டைகள் அமைக்கவும் தனியார் நிலங்களை அரசு கையகப்படுத்தி வரு கிறது. அரசின் பல துறைகளும், பொது நிறுவனங்களும், இரயில்வே துறையினரும் அவ்வாறு கையகப்படுத்திய நிலங் களை பயன்படுத்தாமல் பல ஆண்டுகளாக வைத்திருக்கின்றன. அவ்வாறு பயன்படுத்தப்படாத காலி நிலங்களின் விவரங்களை சேகரித்து, பின்னர் அந்நிலங்களைத் திரும்பப்பெற்று வேறு பொது நோக்கங்களுக்காக அல்லது ஏழை எளியவர்களுக்காக ஒதுக்கீடு செய்வது பற்றி அரசு பரிசீலனை செய்து வருகிறது.

## 13. நிலச் சீர்திருத்தம் :

1961 ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணயம்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 58/61-இன் படி ஐந்து அல்லது அதற்கும் குறைவான நபர்கள் கொண்ட குடும்பத்திற்கு தற்போது உச்சவரம்பு பதினைந்து தர ஏக்க ரும், குடும்பத்தின் மொத்த உச்ச வரம்பு முப்பது தர ஏக்கரும் ஆகும். உச்ச வரம்பிற்கு மேற்பட்ட உபரி நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு, நிலமற்ற ஏழைகளுக்கு மூன்று ஏக்கர் புன்செய் அல்லது ஒன்றரை ஏக்கர் நன்செய் என்ற அள வில் 1965 ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச் சீர்த்திருத்த (மிகை நில விநியோக) விதிகளின் கீழ் நிலமற்ற ஏழை களுக்கு ஒப்படை செய்யப்படுகின்றன. இச்சட்டம் அமுலுக்கு வந்த நாளிலிருந்து 31-7-1991 ஆம் நாள் வரையில் அடைந்த முன்னேற்றம் பின்வருமாறு :—

| பயனடைந்தோர் இனவாரியாக. | நபர்கள். | ஒப்படை செய்யப்பட்ட பரப்பு. (ஏக்கரில்.) |
| --- | --- | --- |
| (1) | (2) | (3) |
| ஆதி திராவிடர் .. | 53,604 | 57,074 |
| பழங்குடியினர் .. | 97 | 148 |
| ஏனையோர் .. | 63,120 | 84,296 |
| மொத்தம் | 1,16,821 | 1,41,518 |



2. தமிழ்நாடு நிலச் சீர்திருத்த சட்டத்தின கீழ் உபரி நில ஒப்படை பெற்றவருக்கு நிதி உதவி செய்யும் திட்டம்.

மத்திய நிதி உதவி அளிக்கும் திட்டம் 50 : 50 எண் விகிதத்தில் நிலச் சீர்திருத்த சட்டத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்ட உபரி நில ஒப்படைதாரர்களுக்கு நிலத்தை அபிவிருத்தி செய்ய நிதி உதவியளிக்கப்படுகிறது. ஏக்கர் ஒன்றுக்கு 1,000 ரூபாய் வீதம் நிதி உதவி மானியமாக அளிக்கப்படுகிறது. இந்த மான்யம் 80 விழுக்காடு கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக உரமாகவும் மீதம் 20 விழுக்காடு ரொக்கமாகவும், அளிக்கப்படுகின்றது. இத்திட்டத்திற்குள்ளேயே தாழ்த்தப்பட்ட இனத்தவர் மற்றும் பழங்குடியினருக்கு வழங்குவதற்கு தனியாக வகை செய்யப் பட்டுள்ளது.

எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், ஆண்டு ஒன்றுககு 2,400 ஏக்கர் வீதம் 12,000 ஏக்கர் மிகை நிலங்களை ஒப்படைக்க குறியீடாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 2,500 ஏக்கர் நீலப் பரப்பு தகுதியுடைய நபர்களுக்கு வரவு செலவு திட்ட ஆண்டில் விநியோகம் செய்ய உள்ளது.

1991–92 ஆம் நிதி ஆண்டில், மத்திய நிதிஉதவியுடன் நடத் தப்படும் திட்டத்திற்கு 34 இலட்ச ரூபாயும் அதனுள் சிறப்பு உள்ளடக்க திட்டத்திற்கு 6.80 இலட்ச ரூபாயும் செலவிடுவ தற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

## சட்டம் :

1952[-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1ஆம் நாளிலிருந்து 1960 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 6 ஆம் நாள் வரையிலான காலத்தில் மிகை (உபரி) நிலங்களை, விற்பனை, கொடை, ஒப்படைவு ஏற்பாடு இவற்றில் எந்த வகையிலேனும் அல்லது பிற எந்த வகையிலேனும் நபர் எவருக்கும் செய்யப்பட்ட அத்தகைய நில உரிமை மாற்றங்கள் அனைத்தையும், சட்டப்படி செல்லாதவையாக ஆக்கும் வகையிலும் நிலமற்ற ஏழைகளுக்கு அந்த நிலங்களை வழங்கவும், டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது அறிமுகம் செய்யப்பட்ட சட்ட முன்வடிவினை அடிப்படையாகக் கொண்டு, ஒரு "பினாமி சட்டமுன்வடிவு" நடைபெறும் சட்டமன்றக் கூட்டத் தொடரில் அறிமுகம் செய்ய கருதப்பட்டுள்ளது.

உழுபவருக்கே நிலம் சொந்தமாக வேண்டும் என்ற அரசின் கொள்கைக்கேற்ப ஒரு சட்டம் இயற்றவும் கருதப்பட்டுள்ளது.

குடிவாரச் சட்டங்கள் :

1. 1955 ஆம் ஆண்டைய தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டம், தமிழ்நாடு சட்டம் 25/1955.

இந்தச் சட்டத்தின்படி எந்த ஒரு பயிரிடும் குத்தகைதாரரும், குத்தகைப் பணத்தை சரிவர செலுத்தாத நிலத்திற்கோ அல்லது மற்றும் அதிலுள்ள பயிர்களுக்கோ சேதம் விளைவிக்கின்ற செயல்களைச் செய்தாலும் நிலத்தை சாகுபடி செய்யாமல் இருக்கும் நிலையிலும், விவசாயமற்ற மற்ற காரியங்களுக்கு நிலத்தைப் பயன்படுத்தும் நிலையிலும், நில உரிமையாளர்களுக்கு நிலத்தின் உரிமையை எந்த ஒரு பட்சத்திலும் மறுக்கும் வகையில் செயல் புரியும் நிலையிலும் தவிர நிலத்திலிலிருந்து வெளியேற்றப்பட இயலாது. ஆயுதப்படையினரைத் தவிர, எந்த நில உடைமையாளரும் மேலே குறிப்பிட்ட காரணங்களின்றி மற்ற காரணங்களுக்காக குத்தகைதாரரிடமிருந்து தங்களுடைய நிலத்தை மீளப் பெற முடியாது. நில உரிமையாளர்களுக்குள்ளும், குத்தகைதாரர்களுக்குள்ளும் ஏற்படக்கூடிய வழக்குகளைத் தீர்த்து வைக்க ஐந்து வருவாய் நீதி மன்றங்கள் உள்ளன.

நிலுவையிலுள்ள குத்தகைப் பணத்தை நிர்ணயிக்கவும் குத்தகைதாரர்கள் சட்டங்களை திறம்பட செயல்படுத்தவும், ஏற்கனவேயுள்ள ஐந்து வருவாய் நீதிமன்றங்களுடன் மேலும் புதிதாக ஆறு வருவாய் நீதிமன்றங்கள் ஏற்படுத்த அரசு உத்தேசித்துள்ளது. இந்த புதிய நீதிமன்றங்கள் மன்னார்குடி, திருவாரூர், கும்பகோணம், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி மற்றும் லால்குடி ஆகிய இடங்களில் நிறுவப்படும்.

2. 1956 ஆம் ஆண்டைய குத்தகைதாரர்கள் (நியாயக் குத்தகை செலுத்துதல்) சட்டம்.

இச்சட்டத்தின்படி, குத்தகைதாரர்களால் நிலச் சொந்தக்காரர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய குத்தகைத் தொகையானது, தனிப்பட்ட நிலச் சொந்தக்காரர்களாக இருந்தாலும் அல்லது பொதுப் பொறுப்புக் கழகங்களாக இருந்தாலும் ஆண்டொன்றின் மொத்த விளைச்சலில் 25 விழுக்காடு ஆகும். அரசுக்குச் செலுத்த வேண்டிய நிலவரி மற்றும் நிலத்தின் மீதான இதர இனங்களை நிலத்தின் உரிமையாளர் செலுத்துவார். ஆனால், விவசாயத்திற்கான செலவு முழுவதையும் பயிரிடும் குத்தகைதாரர்களே ஏற்றுக் கொள்ள வேண்டும். இதுபற்றிய வழக்குகளும் வருவாய் நீதி மன்றங்களால் தீர்த்து வைக்கப்படுகின்றன.

3. 1961 ஆம் ஆண்டைய தமிழ்நாடு பொது நிறுவனங்கள் வேளாண்மை நிலங்கள் நிருவாகம் மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டம் (57/61).

3.1. தமிழ்நாடு பொதுப் பொறுப்புக் கழகங்கள் வைத்துள்ள விவசாய நிலங்களின் நிருவாகத்தை முறைப்படுத்துவதற்காக இச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது.



3.2. எந்த ஒரு பொதுப் பொறுப்புக் கழகமும் தன்னுடைய சொந்தச் சாகுபடிக்கு 20 தர ஏக்கர் வரை நிலத்தினை வைத்துக் கொள்ளலாம். அதற்கு மேலுள்ள நிலத்தினை உண்மையிலேயே பயிரிடும் குத்தகைதாரர்களுக்கு குத்தகைக்கு விடவேண்டும்.

4. 1969 ஆம் ஆண்டைய தமிழ்நாடு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவணச் சட்டம்.

தமிழ்நாட்டில் நிலச் சொந்தக்காரர்களிடம் அல்லது பொதுப் பொறுப்புக் கழகங்களிடம் உள்ள விவசாய நிலங்களைப் பயிரிடும் குத்தகைதாரர்கள் தங்களது பெயரினை பதிவு செய்வதற்காக இச்சட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்படி வட்டாட்சியர் பதிவு அலுவலராவார். அவர் பயிரிடும் குத்தகைதாரர்களின் நலன்களை பாதுகாப்பதற்காக, குத்தகை உரிமை பதிவுருக்களைப் பராமரிக்க வேண்டும். பதிவு அலுவலர் தன்னிச்சை நடவடிக்கை எடுத்து, குத்தகைதாரர்களை பதிவு செய்ய அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. வட்டாட்சியருக்கு உதவி புரிவதற்காக அலுவல் சார்பற்ற குழுக்கள் அமைக்க சட்டம் பிரிவு 5-ஏ, இல் வகை செய்யப்பட்டுள்ளது. இந்தக் குழுவில நிலமற்ற ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்த ஒருவரும், பயிரிடும் குத்தகைதாரர் ஒருவரும் மற்றும் சமூக நல ஊழியர்கள் மூவரும் உறுப்பினர்களாக இருப்பர். இத்தகைய குழுக்கள் தற்சமயம் 57 வட்டங்களில் இயங்குகிறது. இக்குழுவின் பதவிக்காலம் முடிந்து விட்டது. ஆனால் புது உறுப்பினர்கள் குழுவிற்கு நியமனம் செய்யப்படும் வரை ஏற்கெனவே உள்ள உறுப்பினர்கள் தொடர்ந்து குழுவில் இருந்து வருகின்றனர். மாவட்ட ஆட்சியாளர்களுடன் கலந்து ஆலோசனை செய்து, குழுக்களுக்கு புது உறுப்பினர்களை விரைவில் நியமனம் செய்வதற்கு, தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கடந்த 31-5-1991 வரை 4,97,271 நபர்கள் பயிரிடும் குத்தகைதாரர்களாக 6,92,885 ஏக்கருக்கு பதிவு செய்யப்பட்டுள்ளனர். அவற்றின் விவரம் வருமாறு.

| இனம். (1) | குத்தகைதாரர்களாக பதியப் பட்டோரின் எண்ணிக்கை. (2) |
|---|---|
| 1. ஆதி திராவிடர் | 1,74,911 |
| 2. பழங்குடியினர் | 772 |
| 3. ஏனையோர் | 3,21,588 |
| மொத்தம் | 4,97,271 |

**5. 1989[ஆம் ஆண்டைய தமிழ்நாடு பயிரிடு குத்தகையாளர்கள் நில வெளியேற்றுகையிலிருந்து பாதுகாப்புச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 41/89).**

1989 ஆம் ஆண்டைய தமிழ்நாடு பயிரிடு குத்தகைதாரர்கள் (நில வெளியேற்றுகையிலிருந்து பாதுகாப்பு)ச் சட்டம் பயிரிடு குத்தகைதாரர் குத்தகை தொகையினை செலுத்தாது நிலுவையில் வைத்திருக்கிறார் என்ற ஒரே காரணத்திற்காக அவர் நில வெளியேற்றப்படுதலிலிருந்து 1990 ஆம் ஆண்டு, மார்ச்சுத் திங்கள் 31ஆம்] நாள் வரை பாதுகாப்பளித்தது. மேலும், 1986ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1ஆம் நாளன்றோ அல்லது அதற்குப் பின்னரோ, இந்தச் சட்டம் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட நாளான 1989 ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள் 29ஆம் நாளுக்கு முன்னரோ குத்தகை பாக்கிக்காக நிலம் எதிலிருந்தேனும் வெளியேற்றப்பட்ட பயிரிடு குத்தகைதாரர் எவரும், தஞ்சாவூர், மயிலாடுதுறை, மதுரை, சேலம், கடலூர் ஆகிய வருவாய் நீதி மன்றங்களின் தொடர்புடைய வருவாய் நீதி மன்றத்திடம் மனுச்செய்து கொண்டு, அத்தகைய நிலத்தினை மீட்டுக் கொள்ள வாய்ப்பளிக்கப்பட்டது. இச்சட்டம் 1990 ஆம் ஆண்டு, மார்ச்சு திங்கள் 31ஆம் நாள் வரை நடைமுறையில் இருந்தது.

**6. 1990ஆம் ஆண்டைய தமிழ்நாடு பயிரிடு குத்தகைதாரர்கள் குத்தகை நிலுவை (நிவாரணச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 38/1990).**

இம்மாநிலத்தில் கடும் வறட்சியாலும், புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட பயிரிடு குத்தகைதாரர்களை பாதுகாக்க 1989 ஆம் ஆண்டைய தமிழ்நாடு பயிரிடு குத்தகைதாரர் (நில வெளியேற்றத்திலிருந்து பாதுகாத்தல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 41/89) இயற்றப்பட்டு குத்தகைப் பாக்கிகளைச் செலுத்த 31 மார்ச்சு 1990 வரை அவகாசமளித்தும், நில வெளியேற்றத்தைத் தடை செய்தும் நில வெளியேற்றப்பட்டவர்கள் மீண்டும் நிலத்தைப் பெறவும் உரிமை அளிக்கப்பட்டது. அச்சட்டம் 31, மார்ச்சு 1990 யுடன் காலங் கடந்த பிறகு அரசு 10, அக்டோபர் 1990 நாளிட்ட அரசிதழில் வெளியிட்ட 1990ஆம் ஆண்டைய தமிழ்நாடு பயிரிடு குத்தகைதாரர்கள் குத்தகை நிலுவை (நிவாரணச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 38/90) இன்படி 1 சூலை 1989 முதல் 30 ஜூன் 1990 முடிய நடப்புப் பசலிக்கான குத்தகை முழுவதையும் 30, சூன் 1989 நாளுடன் முடிவடைந்த ஆண்டுக்கும் அதற்கு முந்தைய காலத்திற்குமான மொத்த நிலுவைக் குத்தகைப் பாக்கியின் நான்கில் ஒரு பங்கையும் (வட்டியின்றி) 31 மார்ச்சு 1991 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ செலுத்தினால் அல்லது 31 மார்ச்சு 1991 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ நடப்பு அண்டுக் குத்தகை முழுவதையும் மற்றும் 30, சூன் 1989 நாளன்றோ அதற்கு முன்னரோ நிலுவையிலுள்ள மொத்தக் குத்தகையின் மூன்றில் ஒரு பங்கினை



யும் (வட்டியின்றி) ஐந்து சம ஆண்டுத் தவணைகளில் முதல் தவணையினையும் செலுத்தினால் பழைய குத்தகைப் பாக்கிகளை செலுத்துவதினின்றும் பயிரிடு குத்தகைதாரர்கள் விடுவிக்கப்படுகிறார்கள் என்றும், 1 ஏப்ரல் 1990க்குப் பிறகு குத்தகைப் பாக்கிக்காக நில வெளியேற்றம் செய்யப்பட்டவர்கள் 10 அக்டோபர் 1990லிருந்து மூன்று திங்களுக்குள் மீண்டும் மனு கொடுத்து நிலத்தை மீட்டுக் கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலே கூறிய குத்தகைப் பாக்கிகளை செலுத்த 10 அகடோபர் 1990லிருந்து இரண்டு மாதங்களுக்குள் எழுத்து மூலமாக விருப்பம் தெரிவிக்க வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது. இக்காலவரை 10, டிசம்பர் 1990 முதல் மேலும் இரண்டு திங்களுக்குள் நீட்டிக்கப்பட்டுள்ளது இதனால் பயிரிடு குத்தகைதாரர்கள் மேலும் 9 பிப்ரவரி 1991 வரை தங்களது விருப்பத்தினை எழுத்து மூலமாகத் தெரிவிக்கலாம். அவ்வாறு தெரிவிக்கப்பட்ட விருப்பத் தெரிவே முடிவானது. குத்தகை பாக்கிக்காக பயிரிடும் குத்தகையாளர்களை வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகள் 31, சூலை 1991 வரை தடை செய்யப்பட்டுள்ளது. மேற்சொன்ன சட்டத்தின்படி சுருக்க முறை விசாரணைக்குப் பின்பும் நில உரிமையாளருக்கு அல்லது நேர்விற்கேற்ப பொதுப்பொறுப்பாட்சியமைப்பிற்கு அறிவிப்பு கொடுத்ததற்கு பின்பும் நீதி மன்றம் அல்லது தகுதிவாய்ந்த அதிகார அமைப்பு, அச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டபடி பயிரிடு குத்தகையாளரால் செலுத்தப்பட வேண்டிய சரியான தொகையை குறித்து தீர்மானிக்க வேண்டும். அவ்வாறு இல்லையெனில் அந்நீதிமன்றம் அல்லது தகுதிவாய்ந்த அதிகார அமைப்பானது மேற்கொண்டு கொடுக்க வேண்டிய தொகையை 1991ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31 ஆம் நாளிலிருந்து 30 நாட்களுக்கு மேற்படாத ஒரு கால அளவிற்குள் வைப்பீடு செய்வதற்கு பயிரிடு குத்தகையாளர்களை அனுமதிக்க வேண்டும் என்றும் கூறுகின்றன. 1991 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31 ஆம் நாளிலிருந்து 30 நாட்களுக்குள்ளாக வழக்கை முடிவு செய்வதென்பது மேலே குறிப்பிட்ட வருவாய் வழக்கு நீதிமன்றங்களுக்கு இயலாத ஒன்றாகும். எனவே, பிரச்சினையை, சட்டத்தின்படி முடிவு செய்ய வருவாய் வழக்கு நீதிமன்றங்களுக்கு இயலுமாறு செய்வதற்காக 30 நாள் என்னும் மேற்சொன்ன பெருமளவு (அதிகபட்ச) கால வரம்பினை நான்கு திங்கள் (31 சூலை 1991 வரை) நீட்டித்தும் அரசு ஆணை பிறப்பித்தது.

**7. 1989 ஆம் ஆண்டைய தமிழ்நாடு வேளாண்மைத் தொழிலாளர்கள் நியாய ஊதியங்கள் சட்டம்:**

7.1. இச்சட்டம் கீழ்த் தஞ்சாவூர் மாவட்டத்தில் விவசாயத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தை முறைப்படுத்துவதற்காகவும் அதுபற்றி விசாரித்து, அக்கூலி விகிதங்களை மாறுதல் செய்வதற்காகவும் இயற்றப்பட்டுள்ளது.

இச்சட்டம் நெல் பயிரிடும் நிலங்களுக்கு மட்டும் பொருந்தும். கிழக்குத் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள கீழ்க்கண்ட 11 வட்டங்களுக்கு மட்டுமே இச்சட்டம் பொருந்தும் :—

| | |
|---|---|
| (1) மன்னார்குடி. | (7) திருவாரூர். |
| (2) திருத்துறைப்பூண்டி. | (8) வேதாரண்யம். |
| (3) மயிலாடுதுறை. | (9) நீடாமங்கலம். |
| (4) சீர்காழி. | (10) தரங்கம்பாடி மற்றும் |
| (5) நன்னிலம். | (11) கொடவாசல். |
| (6) நாகப்பட்டினம். | |

7.2. தற்போது கிழக்குத் தஞ்சாவூர் மாவட்டத்தில் உழவுத் தொழிலாளர்களுக்கு 3, ஏப்ரல் 1989 ஆம் நாளிட்ட வருவாய்த் துறை அரசு ஆணை பல்வகை எண் 468-இன்படி வழங்கத்தக்க ஊதியங்கள் விவரம் பின்வருமாறு :—

(i) உரிய வயது வந்தோர் :

| | |
|---|---|
| (அ) உழுதல், விதைத்தல், செப்பனிடுதல், நிலங்களையும் வாய்க்கால்களையும் பராமரித்தல், விதைப்பதற்கும் நடவு நடுவதற்கும் நிலத்தை தயார் செய்தல், இடு பொருட்களையும், விளைச்சல் பொருட்களையும் தலை சுமையாக எடுத்துச் செல்லுதல். | நாளொன்றுக்கு 7 லிட்டர் நெல்லுடன் ரூ. 6.90 அல்லது ரூ. 16.00. |
| (ஆ) நாற்று பிடுங்குதல் மற்றும் நடுதல். | நாளொன்றுக்கு 7 லிட்டர் நெல்லுடன் ரூ. 5.90 அல்லது ரூ. 15.00. |
| (இ) களையெடுத்தல் .. | நாளொன்றுக்கு 7 லிட்டர் நெல்லுடன் ரூ. 4.90 அல்லது ரூ. 14.00. |

(ii) உரிய வயதடையாதவர்கள் :

| | |
|---|---|
| அனைத்து வகை வேளாண்மைத் தொழில்களுக்கும், | நாளொன்றுக்கு 4 லிட்டர் நெல்லுடன் ரூ. 2.80 அல்லது ரூ. 8.00. |



7.3. உழுதல் தவிர ஏனைய வேளாண்மை பணிகளுக்குரிய வேலை நேரம் நாளொன்றுக்கு 7 மணி நேரமாகும். உழவுக்கு மட்டும் நாள் ஒன்றுக்கு 5 மணி நேரமாகும்.

## 8. 1971 ஆம் ஆண்டைய தமிழ்நாடு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உடைமை உரிமை வழங்குதல்) சட்டம் (சட்டம் 40/71):

8.1. இச்சட்டம் குடியிருப்புகளில் அனுபோகதாரர்களுக்கு உடைமை உரிமை அளிக்கிறது. அதன்படி 19, சூன் 1971 அன்று குத்தகையாளர் அல்லது உரிமைதாரர் என்ற முறையில் குடியிருப்பு மனையை அனுபோகத்தில் வைத்திருந்தவர் உரிமையாளராக இருப்பார். இக்குடியிருப்பு வில்லங்கம் எதுவுமின்றி அவரிடமே நிலைபெற்று இருக்கும்.

8.2. 31, மே 1991 வரை வழங்கப்பட்டுள்ள குடியிருப்புப் பட்டாக்களின் விவரம் வருமாறு :—

| இனம். (1) | நபர்களின் எண்ணிக்கை. (2) |
|---|---|
| ஆதிதிராவிடர் .. .. .. | 99,010 |
| பழங்குடியினர் .. .. .. | 2,209 |
| ஏனையோர் .. .. .. | 79,026 |
| மொத்தம் .. | 1,80,245 |

958 இனங்கள் விசாரணையில் உள்ளன.

## 9. 1976 ஆம் ஆண்டைய தமிழ்நாடு கிராமக் கைவினைஞர்கள் குடியிருப்பு அனுபோக உரிமை வழங்குதல்) சட்டம் (சட்டம் 38/1976) :

9.1. குத்தகைதாரர் அல்லது உரிமைதாரர் என்ற முறையில் 1, சூலை 1975 அன்று தமிழ்நாட்டில் குடியிருப்புகளை அனுபோகத்தில் வைத்துள்ள கிராமப்புற கைவினைஞர்களுக்கு உரிமை [illegible]

9.2. 31, மே 1991 ஆம் நாள் வரையில் வழங்கப்பட்டுள்ள குடியிருப்பு பட்டாக்கள் விவரம் பின்வருமாறு:—

| இனம். (1) | | நபர்களின் எண்ணிக்கை. (2) |
|---|---|---|
| ஆதிதிராவிடர் | .. .. .. | 43 |
| பழங்குடியினர் | .. .. .. | 15 |
| ஏனையோர் | .. .. .. | 349 |
| மொத்தம் | .. | 407 |

405 இனங்கள் விசாரணையில் உள்ளன:

9.3. 40/71 எண் கொண்ட தமிழ்நாடு குடியிருப்பு சட்டம் மற்றும் 38/76 எண் கொண்ட தமிழ்நாடு கிராமப்புற சட்டம் இவ்விரு சட்டங்களினால் அதிக அளவில் குடியிருப்புதாரர்கள் பயன்பெறும் வகையில், 1, ஏப்ரல் 1990 வரை குடியிருந்த குடியிருப்புதாரர்களுக்கும், குடியிருப்புப் பட்டா வழங்கும் வகையில், 1990 ஆம் ஆண்டைய தமிழ்நாடு குடியிருப்புச் சட்டங்கள் திருத்தச் சட்டம் (சட்டம் 39/90) இயற்றப்பட்டுள்ளது.

14. நகர்ப்புற நில உச்சவரம்பு :

ஒரு சில நபர்களிடம் நிலம் குவிந்திருப்பதைத் தடுக்கவும், நகர்ப்புறக் கூட்டுப்பகுதியில் உள்ள நிலங்களை சமமாகப் பங்கிட்டு வழங்கவும், 1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்தல்) சட்டம் கொண்டுவரப்பட்டு அது சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி ஆகிய ஆறு நகர்ப்புற கூட்டுப் பகுதிகளில் செயல்படுத்தப்படுகிறது.

2. சட்டத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்ட மிகைநிலங்களில், ஒரு முன்னுரிமை அடிப்படையில், அரசால் கீழ்க்கண்டவாறு ஒதுக்கீடு செய்யப்படுகிறது:—

(1) மாநில அரசுத் துறைகள்.

(2) மாநில அரசின் கீழ் உள்ள நகராட்சி மன்றங்கள், மாநகராட்சிகள் மற்றும் பொது நிறுவனங்கள்.



(3) மத்திய அரசுத் துறைகள்.

(4) மத்திய அரசின் கீழ் உள்ள கூட்டு நிறுவனங்கள் மற்றும் பொது நிறுவனங்கள்.

(5) வீட்டு வசதி நிறுவனங்கள்.

(6) தொழிற்சாலைகள்.

(7) தொழிற்சாலைகளில் வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கு வீடு கட்டுவதற்கு.

(8) பிற நிறுவனங்கள், நிலையங்கள்.

(9) தனியார்கள்.

3. இதுவரை மேற்சொன்ன சட்டத்தின் கீழ் கையகப்படுத்திய வெற்று நிலங்களில், 197 ஹெக்டேர், 39 ஏர், 65 சதுர மீட்டர் நிலங்களை, அரசுத் துறைகள், அரசுக் கழகங்கள், வீட்டு வசதி வாரியங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு, 15, ஆகஸ்ட் 1991 வரை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. நிலத்தின் மதிப்பு, நில ஒதுக்கீடு செய்யப்பட்டவர்களிடமிருந்து அரசால் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டவுடன் வசூலிக்கப்படும்.

4. தொழிற்சாலைகள் நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் விலக்குக்கோரி சமர்ப்பித்த மனுக்களில் எவ்வளவு விரைவில் ஆணை பிறப்பிக்க முடியுமோ, அவ்வளவு விரைவில் அரசு ஆணை பிறப்பித்து உதவ வேண்டும் என்று எண்ணம் கொண்டுள்ளது. தொழில் விரிவாக்கத்திற்கு வசதி செய்து தருவதற்காக விலக்கு மனுக்கள் அனைத்திலும் தகுதி அடிப்படையில் பரிசீலித்து அரசு ஆணை பிறப்பிக்கும்.

15. நகர்ப்புற நிலவரி :

தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம் சென்னை நகரில் 1966 ஆம் ஆண்டு முதல் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. பிறகு இச்சட்டம் சேலம், மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி முதலிய நகரங்களுக்கு 1971 ஆம் ஆண்டு முதல் நீட்டிக்கப்பட்டது. சென்னை புறநகர்ப் பகுதிகளில் 1975 ஆம் ஆண்டு முதல் நகர்ப்புற நிலவரி விரிவுபடுத்தப்பட்டது. மேற்படி இடங்களில் காலியாக உள்ள நகர நிலங்களுக்கு 1971, ஜூலை 1 ஆம் நாள் முதல் தேதி சந்தை மதிப்பீட்டின் அடிப்படையில் நகர்ப்புற நிலவரி விதிக்கப்பட்டு வருகிறது. 1981 ஆம் ஆண்டு முதல் இச்சட்டம் திருநெல்வேலி நகருக்கும் மதுரை, திருச்சி, சேலம் மற்றும் கோயம்புத்தூர் நகரங்களின் எல்லையோர பகுதிகளுக்கும் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்விடங்களுக்கு 1981, ஜூலை 1 ஆம் தேதிய சந்தை மதிப்பீட்டின் அடிப்படையில் நகர்ப்புற நிலவரி விதிக்கப்பட்டு வருகிறது. சீரான திட்டமிட்ட நகர

மேம்பாட்டிற்காக மேலும் அதிக ஒதுக்கீடுகள் செய்ய வேண்டியுள்ளதால் இந்த நிலையை சீரமைத்து, அனைத்துப் பகுதிகளிலும், ஒரே சீராக 1981 ஜூலை 1ஆம் நாளைய நிலவரப்படி நிலங்களின் மதிப்பீட்டின் அடிப்படையில் இனி வரி விதிக்கப்படும். அவ்வாறு நிர்ணயிக்கப்படும் புதிய வரி தற்போதைய வரிக்கு ஐந்து மடங்குக்கு மிகாமலிருக்கும்படி கட்டுப்படுத்தப்படும். மேலும் இச்சட்டத்தினை அனைத்து சிறப்பு மற்றும் தேர்வு நிலை நகராட்சிகளுக்கு நீட்டிக்கவும், அந்நகரங்களில் உள்ள நகர நிலங்களின் 1981 ஜூலை 1ஆம் நாளைய அங்காடி மதிப்பின் அடிப்படையில் நகர நிலவரி விதிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்படி அங்காடி மதிப்பினை கணக்கிடவும் வரித்தொகையை நிர்ணயிக்கவும், சிறப்பு துணை ஆட்சியர்கள் மற்றும் பிற அலுவலர்கள் நியமிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. நகர நிலவரி விதிக்கப்படும் புதிய நகரங்கள் வருமாறு—

1. ஈரோடு
2. பொள்ளாச்சி
3. தஞ்சாவூர்
4. திருப்பூர்
5. தூத்துக்குடி
6. வேலூர்
7. உதகமண்டலம்
8. திண்டுக்கல்
9. கரூர்
10. நாகர்கோவில்
11. கும்பகோணம்
12. கடலூர்
13. புதுக்கோட்டை
14. காஞ்சிபுரம்
15. விழுப்புரம்
16. மயிலாடுதுறை
17. உடுமலைப்பேட்டை
18. பழனி
19. காரைக்குடி
20. இராஜபாளையம்
21. நாமக்கல்
22. கொடைக்கானல் நகரியம் மற்றும்
23. மேட்டூர் நகரியம்

மேலும் சிறு தொழில் சான்றிதழ் தொழிற் கூடங்களுக்கு 25 சதவிகித வரிச்சலுகையும் துணை தொழிற் கூடங்களுக்கு 10 சதவிகித வரிச் சலுகையும் சங்கீத நாடக சபாக்களுக்கு 50 சதவிகித வரிச் சலுகையும் திரையரங்குகளுக்கு 10 சதவிகித வரிச் சலுகையும் 1971 ஆம் ஆண்டைய தமிழ் நாடு குடிசை குடியிருப்பு ஒழிப்பு சட்டத்தின்படி பிரிவு 3 (பி)-ன் கீழ் குடிசை குடியிருப்பாக அறிவிக்கப்பட்ட நிலங்களுக்கு நகர்ப்புற நிலவரியிலிருந்து விலக்கும் வழங்கப்பட்டுள்ளது.



## 16. வேளாண்மை வருமான வரி.

தமிழ் நாட்டில் வேளாண்மை வருமான வரி 1955 ஆம் ஆண்டிலிருந்து செயலில் உள்ளது. முதலில் மலைத் தோட்டப் பயிரான காப்பி, தேயிலை, ரப்பர், ஏலக்காய் மற்றும் சின்கோனா போன்ற மலைத் தோட்டப் பயிருக்கு மட்டுமே வேளாண்மை வருமான வரி விதிக்கப்பட்டது. 1958 ஆம் ஆண்டு திருத்தச் சட்டத்தின் மூலம் இம் மாநிலம் முழுவதும் மலைத் தோட்டப் பயிர் அல்லாத பயிர்களுக்கும் வேளாண்மை வருமான வரி விதிப்பதற்கு வகை செய்யப்பட்டது.

மலைத் தோட்டப் பயிர் அல்லாத பயிர்களான நெல், கரும்பு, மஞ்சள், வெற்றிலை, வாழை, தென்னை, சோளம், கம்பு, நிலக்கடலை, பருத்தி மற்றும் என் ஆகியவற்றுக்கு வேளாண்மை வருமான வரி முழுமையாக அகற்றப்படுகிறது.

தற்போது உள்ள வரி நீக்க வரம்பை ரூ. 10,000லிருந்து ரூ. 22,000 ஆக உயர்த்தப்படுகிறது.

இனி மலைத் தோட்டப் பயிருக்கு மட்டுமே வரி விதிக்கப்படுவதால் நிலைப்படுத்தப்பட்ட ஸ்டாண்டர்டு ஏக்கர் முறையை மாற்றி சாதாரண ஏக்கர் அடிப்படை பின்பற்றப்படும். ஒட்டு மொத்த வரி வைத்து 8 ஏக்கர் வரை விலக்களித்து உச்ச வரம்பு 40 ஏக்கரிலிருந்து 50 ஏக்கர் ஆக உயர்த்தப்படும்.

நில வரம்பின் அடிப்படையிலான வேளாண்மை வருமான வரி விகிதங்கள் கீழ்க்கண்டவாறு மாற்றப்படுகிறது:

| நிலப்பரப்புக்கு ஏக்கருக்கு. | வரி விகிதப் (ரூபாயில்.) |
|---|---|
| முதல் 8 ஏக்கருக்கு | வரி கிடையாது. |
| 8 முதல் 12 ஏக்கருக்கு | 150 |
| 12 முதல் 25 ஏக்கருக்கு | 200 |
| 25 முதல் 40 ஏக்கருக்கு | 300 |
| 40 முதல் 50 ஏக்கருக்கு | 500 |

## 17. மரத்திற்கான பட்டா வழங்கும் திட்டம்.

இம்மாநிலத்தில் மரத்திற்கான 2-சி பட்டா வழங்கும் திட்டம் பல்லாண்டுகளாக செயலிலுள்ளது. இத்திட்டத்தின்கீழ் அரசு புறம்போக்கில் உள்ள மரங்களின் இலைகள் மற்றும் கனிகளை பயன்படுத்துவதற்குரிய உரிமம் மட்டும் அனுபவ

நிலச்சொந்தக்காரர்களுக்கு அல்லது மரத்தை பராமரிக்கக்
கூடிய பிறருக்கு வழங்கப்படுகிறது. மரம் மற்றும் நிலத்தின்
மீதுள்ள உரிமம் அரசிடம் தொடர்ந்து இருக்கும்.

2. அரசு நிலங்களில் உள்ள மரங்களுக்கு 2-சி பட்டா
தற்பொழுது தனி நபருக்கு வழங்குகையில் மரங்களின் எண்
ணிக்கைக்கு உச்ச வரம்பு ஏதும் இல்லை. இனிமேல் மரங்
களுக்கு 2-சி பட்டா வழங்கும்பொழுது மரங்களின் எண்ணிக்கை
யையும் அதில் வரும் வருமானத்தையும் கருத்தில் கொண்டு
மரங்களுக்கு 2 சி பட்டா வழங்குவதற்கு உச்சவரம்பு நிர்ணயிக்
கலாம் என்ற கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளது. இனி
வழங்கப்படும் 2-சி பட்டாக்கள் தாழ்த்தப்பட்ட மலை சாதி
யினர் வகுப்பினரின் மகளிற்கே முன்னுரிமை வழங்கலாம் என்ற
கருத்துருவும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

3. புதிய சமூக மரவளர்ப்புத் திட்டம் 1987-ஆம் ஆண்டு
முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ்
வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள ஊரக மற்றும் நிலமற்ற ஏழைப்
பெண்டிர் வட்ட அளவிலான குழுவினரால் தெரிவு செய்யப்
பட்டு பலன் பெற இயலும். அரசு மற்றும் ஊராட்சி நிலங்
களில் மரம் வளர்ப்பதற்கு அவர்கட்கு மரம் நடுவதற்கான உரிமம்
வழங்கப்படும். உரிமை வழங்கப்பட்ட இரண்டு ஆண்டு காலத்
திற்குள் அவர்கள் மரங்களை நடுதல் வேண்டும். உரிமம்
வழங்கப்பட்ட இரண்டு ஆண்டுகட்குப்பின் மரம் இருப்பதை
சரிபார்க்கப்பட்டு இவ்வுரிமைதாரர்கட்கு மரப் பட்டா வழங்கப்
படும்.

## 18. இயற்கையின் இடர்பாடுகள்.

வெள்ளம் மற்றும் புயல்கள் ஏற்படும் காலங்களில் தாழ்வான
பகுதிகளில் இருக்கும் குடிசைகள் தண்ணீரால் மூழ்கப்படுகின்றன.
பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக உதவி வழங்குவதற்கு
முழுமையாக சேதம் அடைந்த குடிசைகளுக்கு நிவாரணமாக தலா
ரூ. 400-ம் பகுதியாக சேதம் அடைந்த குடிசைகளுக்கு தலா
ரூ. 200-ம் நிவாரணமாக வழங்கப்பட்டு வருகின்றன. இது
தவிர ஒவ்வொரு குடும்பத்திற்கும் இலவசமாக 5 கிலோ அரிசி
1 லிட்டர் மண்ணெண்ணெய், 72 மணி நேரம் மற்றும் அதற்குப்
பின்பும் மின் இணைப்பு தரக்கூடிய வாய்ப்பு இல்லாவிடில்
மற்றும் ஒரு வேட்டி, லுங்கி மற்றும் ஒரு புடவை வழங்கப்படு
கிறது. இந்த நிதி உதவி வருமான வரம்பின்றி எல்லாக்
குடும்பங்களுக்கும் வழங்கப்படுகின்றன. இவ் வெள்ளம் மற்றும்
புயலினால் மரணம் அடைந்தவர் குடும்பத் தலைவராகவும்
பொருளீட்டுபவராக இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவர்கள்
குடும்பத்திற்கு ரூ. 2,000 வழங்கப்படுகிறது மரணம் அடைந்தவர்
குழந்தையாக இருந்தாலும் இந்நிவாரணம் வழங்கப்படுகிறது.
அரசு எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் கருவூல விதி
27-ன்கீழ் மரணம் அடைந்தவர் குடும்பத்திற்கு நிதி உதவி
வழங்கும் அதிகாரம் வழங்கியுள்ளது.





1990-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் கடைசியிலும்
மற்றும் நவம்பர் மாதம் முதல் வாரத்திலும் பெய்த பெரும்
மழையினால் தமிழ்நாட்டில் நீர்ப்பாசன ஆதாரங்கள் சாலை
கள், ஏழை மக்களின் குடிசைகள் மிகவும் பாதிக்கப்பட்டன.
இயற்கைச் சீற்றம் குறித்த நிவாரண நிதியிலிருந்து ரூ. 13.26
கோடி சாலைகள் செப்பனிடவும் நீர்ப்பாசன ஆதாரங்களை
சீர் செய்யவும் கொடுக்கப்பட்டது. இத்தொகை சென்னை
அம்பத்தூர் நகரியம் திருநெல்வேலி கட்டபொம்மன் மற்றும்
நீலகிரி மாவட்டங்களுக்கு அளிக்கப்பட்டது.

நீலகிரி மாவட்டத்தில் 44 மின்வாரிய ஊழியர் குடியிருப்பு
களும், அஞ்சலகத்துடன் கூடிய வீடு மற்றும் ஒரு கூட்டுறவு
பண்டகசாலை கட்டிடம் முழுவதும் பலத்த வெள்ளத்தினால்
அழிக்கப்பட்டன. இம் மாவட்டத்தில் 47 உயிர்கள் பலியாகின.
சென்னை மாநகரில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மற்றும்
தண்ணீரால் சூழப்பட்ட குடிசைகளுக்கு ரூ. 2 கோடி அளிக்க
பட்டன. சென்னையில் 408 பேருந்து சாலைகள் மற்றும் உட்
புறமாக செல்லும் சாலைகள் சீரமைக்கப்பட்டன. அதேபோல்
102 இடங்களில் மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் மாவட்ட
சாலைகள் 122 கி.மீ. மற்ற சாலைகள் சீரமைக்கப்
பட்டன. 364 நீர்ப்பாசன ஆதாரங்கள் செப்பனிடப்பட்டன.

1991 ஜூன் மற்றும் ஜூலை மாதத்தில் பெரும் மழை பெய்து
கன்னியாகுமரி மாவட்டத்திற்கு பலத்த சேதம் விளைவித்தது.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு குழுவை அமைத்து
அக்குழுவை கன்னியாகுமரி மாவட்டத்திற்கு சென்று வெள்ளச்
சேதத்தை மதிப்பிட்டு ஒரு அறிக்கையை அளிக்கும்படி ஆணை
யிட்டார். அந்தக் குழுவின் பரிந்துரையை ஏற்று அரசு
ரூ. 56 இலட்சம் அம்மாவட்டத்திற்கு அளித்தது. இத்தொகை,
பாதிக்கப்பட்ட நீர்ப்பாசன ஆதாரங்களைச் சீர் செய்வதற்கும்
சாலைகளை பழுதுபார்க்கவும் அரசு கட்டிடங்களை சீரமைக்க
வும் மீனவர்களுக்கும் மற்றும் விவசாயிகளுக்கும் நிதி உதவி
வழங்க இத்தொகை பயன்படுத்தப்பட்டுள்ளது

## 19. வறட்சி நிவாரணப் பணிகள்.

1990 ஆம் ஆண்டு தென்மேற்குப் பருவ மழையும் மற்றும்
வடகிழக்குப் பருவ மழையும் பொய்த்து விட்டது. இதன் விளை
வாக குடிநீர்ப் பற்றாக்குறை அநேகமாக எல்லா மாவட்டங்களி
லும் சென்னை நகரிலும் ஏற்பட்டது. அரசு இதனை ஆராய்ந்து
இக்குடிநீர்ப் பற்றாக்குறையை போக்க 1991 பிப்ரவரி மாதம்
வரை ரூ. 10.17 கோடிக்கு ஒப்புதல் அளித்தது. 2—5—1991
அன்று சிற்றத் தணிப்பு நிவாரண மாநில குழு தலைமைச்
செயலரின் தலைமையில் கூடி மாநிலத்தில் குடிநீர் வழங்குவதைப்
பற்றி ஆய்வு செய்தது. குடிநீர் வழங்குவதற்காக நிதி உதவியாக
ரூ. 3.79 கோடி வழங்கியது. 30—7— 1991 அன்று இக் குழு
மீண்டும் கூடி குடிநீர் பற்றாக்குறையைப் போக்க கூடுதலாக

ரூ. 2.50 கோடி வழங்கியது. ஆக மொத்தம் ரூ. 16.46 கோடி 1991-ஆம் ஆண்டு வறட்சி நிவாரணப் பணிகளுக்காக அரசு வழங்கியுள்ளது.

சுமார் 2,000 ஆழ்துளைக் கிணறுகளும் வறட்சி நிவாரணப் பணிகளின்கீழ் அமைக்கப்பட்டன. ரூ. 1.70 கோடி அளவில் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் சேலம், பெரியார், திண்டுக்கல், அண்ணா, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, திருவண்ணாமலை— சம்புவராயர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் செலவு செய்யப்பட்டுள்ளன. சுமார் ரூ. 50 இலட்சம் அளவில் பழுதுபட்ட கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டன.

## 30. தீ விபத்து.

தீ விபத்து ஏற்பட்டதும், பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக உதவி வழங்குவதற்காக, முழுமையாகச் சேதமடைந்த குடிசைகளுக்கு நிவாரணமாக தலா ரூ. 400-ம் பகுதி சேதமடைந்த குடிசைகளுக்கு தலா ரூ. 200-ம் நிவாரணமாக வழங்கப்பட்டு வருகிறது. இது தவிர தீ விபத்தால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் இலவசமாக அரிசி, மண்ணெண்ணெய் மற்றும் உடுக்க உடை வழங்கப்படுகிறது. இந்த நிதியுதவி வருமான வரம்பின்றி குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

2. தீ விபத்தால் மரணமடைந்தவர் குடும்பத் தலைவராகவும், குடும்பத்தில் பொருளீட்டுபவராக இருந்திருப்பினும், இருந்திராவிடினும், அவருடைய குடும்பத்திற்கு ரூ. 2,000 வழங்கப்படுகிறது. மரணமடைந்தவர் குழந்தையாக இருந்தாலும் இந்நிதி உதவி வழங்கப்படுகிறது. அரசு, எல்லா மாவட்ட ஆட்சியருக்கும் கருவூல விதி எண் 27-இன்கீழ் தீ விபத்தினால் மரணமடைந்தவரின் குடும்பத்திற்கு இந்நிதியுதவி வழங்க அதிகாரம் வழங்கியுள்ளது.

3. இத்துடன் தீ விபத்தில் குடிசைகளையும், உடைமைகளையும் இழக்கின்ற நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், ஊரக கை வினைஞர்கள் மற்றும் ஏழ்மையான குடும்பத்தினர் ஆகியோர்களின் ஆண்டு வருமானம் அனைத்து வகைகளிலும் ரூ. 4,800-க்கு மிகாமல் ஊழியர்களுக்கு குடிசை காப்புறுதித் திட்டத்தின் கீழ் ஒரு திட்டத்தை மத்திய அரசு உருவாக்கியுள்ளது. இத்திட்டம் 1988ஆம் ஆண்டு மே திங்கள் முதல் நாளிலிருந்து இம்மாநிலத்தில் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஆகும் காப்பீட்டுக் கட்டணம் முழுவதையும் மத்திய அரசே ஏற்றுக் கொள்ளும் இத் திட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்ட குடிசை ஒவ்வொன்றுக்கும் தலா ரூ. 1,000-ம் மற்றும் அதில் உள்ள உடைமைகள் சேதமடைந்தால் தலா ரூ. 500-ம் காப்பீட்டுக்கழகம் வழங்கி வருகிறது.



### விபத்து நிவாரணத் திட்டம்:

தொழிலில் ஈடுபட்டிருக்கும்போது விபத்தினால் இறக்க நேரிடும் அல்லது காயங்களினால் அங்கங்களை இழக்க நேரிடும் ஏழைத் தொழிலார்களின் குடும்பங்களுக்கு நிதி உதவி வழங்குவதற்கான ஒருங்கிணைந்த விபத்து''நிவாரணத் திட்டம்'' அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் தற்போது 30 இன ஏழைத் தொழிலாளர்கள் பயன் பெறுகின்றனர். விபத்து நிவாரணத் திட்டத்தின்கீழ் பயன் பெறுபவருக்கு ஆண்டு வருமானம் ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை. தொழிலில் ஈடுபட்டிருக்கையில் இறக்க நேரிடும் ஏழைத் தொழிலாளர்களின் குடும்பத்திற்கு ரூ. 10,000, ரூ. 7,000 மற்றும் ரூ. 5,000 என முறையே இறப்பிற்கும் அங்கங்கள் இழப்பிற்கும் ஏற்ப வழங்கப்படுகிறது.

1989-90 ஆம் நிதி ஆண்டில் இத் திட்டத்தின்கீழ் 443 பேர் பயன்பெற்று ரூ. 39.04 லட்சம் நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது,. 1990-91 ஆம் நிதியாண்டிற்கு இத் திட்டத்தின் கீழ் ரூபாய் ஒரு கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டு 848 குடும்பங்கள் பயன் பெற்றுள்ளனர்.

### தமிழ்நாடு நலிந்தோர் குடும்ப நல நிவாரணத் திட்டம்:

குடும்ப காப்புப் பொருட்டுபவர்கள் இறந்தால் அன்னாரின் வருமானத்தை இழந்து தவிக்கும் ஏழை குடும்பத்திற்கு தனி உதவி செய்யும் பொருட்டு வகையில் ரூ. 2,000 வீதம் நிவாரணம் வழங்க தமிழ்நாடு நலிந்தோர் குடும்ப நல நிவாரணத் திட்டம் தமிழக அரசால் உருவாக்கப்பட்டது. பின்னர் இந் நிவாரணத் தொகையினை ரூ. 3,000 ஆக 1990, ஏப்ரல் 1 ஆம் நாள் முதல் அரசு உயர்த்தியுள்ளது. இத் தொகையினை ரூ. 5,000 ஆக உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது.

### எதிர்பாராத விபத்துக்கள் துயர் துடைப்பு கண்காணிப்புக் குழு:

தலைமைச் செயலரைத் தலைவராகக் கொண்ட எதிர்பாராத விபத்துக்கள் துயர் துடைப்பு கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது. வருவாய்த் துறைச் செயலாளர் இதில் உறுப்பினர் செயலாளர் ஆவார். இக்குழுவில் தொழில் துறை, சுற்றுப் புற சூழல், போக்குவரத்து, பொதுப் பணி, நகரிய நிர்வாகம், உள்துறை ஆகிய துறைச் செயலாளர்களும் சுற்றுப் புறச்சூழல் பாதுகாப்பு குழுமத்தின் தலைவரும் உறுப்பினர்களாக உள்ளனர். இக்குழு கூடி பல்வேறு துறைகளின் மற்றும் இரசாயன சம்பந்தப்பட்ட விபத்துக்கள் நிகழும் பொழுது அவசர கால கட்டத்தில் செய்ய வேண்டிய துயர் துடைப்பு பணிகள் மற்றும் நிவாரண நடவடிக்கைகள் மற்றும் திட்டங்களை வகுத்துள்ளது.

## 21. நில அளவை மற்றும் பதிவேடுகள் பராமரிப்பு:

விற்பனை மாற்றப், உரிமை வழி மாற்றப், அன்பளிப்பு பரிமாற்றம், நீதிமன்ற உத்தரவு, பாகப் பிரிவினை முதலிய நேர்வு மூலம் அன்றாடம் நில உடைமைதாரர்கள் நிலப் பதிவுருக்களில் நாளது வரையிலான விவரங்களை பிரதிபலிக்கும் வகையில் பராமரிப்பு செய்வதும், ஆய்வு செய்வதும் நில அளவைப் பதிவுருக்கள் துறையின் பொறுப்பாகும். முறையான நில பராமரிப்பு பணியுடன் கீழ்க்காணும் திட்டப் பணிகளும் இத்துறையினால் செயல்படுத்தப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளன:—

1. நத்தம் மற்றும் வேளாண்மைக்கல்லாத பிறவற்றிற்கு பயன்படுத்தப்படும் வேளாண் இடங்களை அளவு செய்தல்.

2. சென்னைப் பழைய நகரம் நீங்கலாக நகராட்சிகள், நகரியங்கள் மற்றும் மாநகராட்சிகளில் நகர அளவை மேற்கொள்ளுதல்.

3. மலைக் கிராமங்களின் அளவை ;

### நத்தம் அளவை.

நத்தம் நில அளவைப் பணி, சென்னை மாநகரம் மற்றும் நீலகிரி. கன்னியாகுமரி மாவட்டங்கள் நீங்கலாக ஏனைய மாவட்டங்களில் 159 வட்டங்களில் செயல்படுத்தப்பட்டன. அவற்றில் 73 வட்டங்களில் பணி முடிக்கப்பட்டன. 68 வட்டங்களில் பணி முன்னேற்றத்தில் உள்ளன. மீதமுள்ள 18 வட்டங்களில், ஏற்கனவே பணி மேற்கொள்ளப்பட்ட வட்டங்களில், பணி முடிவுற்றவுடன் செயல்படுத்தப்படும். நில அளவைப்பணி முடிவுற்றதும் ஆவணங்கள் ஒப்படைக்கும் பணி செயற்படுத்தப்பட்டு நில உரிமைதாரர்களுக்கு நில உரிமைப் பட்டா வழங்கப்பட்டு, பட்டா நிலங்கள் பரப்பளவிற்கு வரி விதிக்கப்படும். ஆவணங்கள் ஒப்படைப்பு பணி முடிவுற்று 31—3—1991 முடிய சுமார் 14.80 இலட்சம் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. தற்போதுள்ள பணியாளர்களைக் கொண்டு நத்தம் நில அளவை முடிவுற்ற பணிகளுக்கு ஆவணங்கள் ஒப்படைக்கும் பணி பத்து ஆண்டுகளில் முடிக்கப்படும். நிலப் பரப்பிற்கு ஏற்ப வரி விதிப்பு பத்து ஆண்டுகளுக்குப்பிறகு செயல்படுத்தப்படும். கூடுதல் பணியிடம் வழங்கப்பட்டு ஐந்து ஆண்டுகளில் இப்பணியினை முடித்தால் 50 லட்சம் கிராமதாரர்களுக்கு நத்தம் வீட்டு மனைப் பட்டா வழங்க இயலும். இப்பணியினால் ஆண்டு ஒன்றுக்கு வரிவிதிப்பின் மூலம் ரூ. 7.78 கோடி அரசுக்கு வருவாய் ஈட்டலாம்.



### நகர அளவை :

ஒவ்வொரு பகுதியிலும் மேற்கொள்ள வேண்டிய நகர அளவையின் தன்மையையொட்டி, முதல் நகர அளவை, துணை நகர அளவை மற்றும் நகர அளவை ஆவணங்கள், மேம்பாடு போன்றவைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தமிழ்நாட்டில் 3 மாநகராட்சிகளிலும், நகரியங்களை உள்ளடக்கி 106 நகராட்சிகளும் உள்ளன. இவற்றில், 30 நகராட்சிகளில் முதல் நகர அளவை மேற்கொள்ள வேண்டியுள்ளது. 76 நகராட்சிகளில் துணை நகர அளவையும், மூன்று நகராட்சிகளில் முதல் நகர அளவை அல்லது துணை நகர அளவை மேற்கொள்ள வேண்டியுளளது.

16 மாவட்டங்களை உள்ளடக்கி 29 நகரங்களிலும் 2 மாநகராட்சிகளிலும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. 13 நகரங்களிலும் பகுதியாக ஒரு மாநகராட்சியிலும் அளவுப் பணி முடிக்கப்பட்டும், 16 நகரங்களிலும், பணி முன்னேற்றத்தில் உள்ளது. தற்சமயம் நத்தம் மற்றும் வேளாண்மைக்கல்லாது பிற பயன்பாடுகளுக்குப் பயன்படுத்தும் வேளாண்மை நிலங்களில் நடை பெறும் அளவைப் பணி முடிந்தவுடன், படிப்படியாக இதர நகரங்களில் பணி மேற்கொள்ளப்படும்.

### மலை கிராம அளவை :

மலை கிராம அளவைப்பணி கீழ்க்காணும் ஆறு மலைகளில் பரவலாக 69 கிராமங்களின் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது:—

1. ஜவ்வாது மலை.
2. ஏலகிரி மலை.
3. பச்ச மலை.
4. கொல்லி மலை.
5. அரநூத்து மலை.
6. ஆனை மலை.

## வருவாய் பதிவுருக்கள் மற்றும் பதிவு மாற்றும் பராமரிப்பு

மாநில அளவில் கிராமங்களின் எல்லைகளை சரியான முறையில் கண்டுபிடிக்கப்பட்டு அவைகளைப் பராமரிப்பது மிகவும் அத்தியாவசியமானது. எனவே, மாநிலத்தில் பதிருவுக்களை மேம்படுத்தி பராமரிக்க குறுவட்டம் மற்றும் வட்ட அளவில் நில அளவை செய்து மேம்படுத்தப்படும்.

## நில உடமை பதிவேடுகளை மேம்படுத்துதல் :

ரூ. 150 இலட்சம் செலவில் நில உடமைப் பதிவேடுகளை மேம்படுத்த நில அளவை மற்றும் பதிவேடுகள் துறைக்குச் செலவு செய்யப்படும். இச் செலவினம் நில அளவைப் பதிவேடுகள் துறைக்கு நவீன கருவிகள் வாங்கவும், ஒரத்த நாட்டில் உள்ள நில அளவை பயிற்சிப் பள்ளிக்கு கட்டிடங்கள் கட்டவும் மற்றும் உபகரணங்கள் வாங்கவும் செலவு செய்யப்படும்.

## சேலம் மாவட்ட பதிவுருக்களை கணிப்பொறி மூலம் பதிவு செய்தல். :

மைய அரசின் நிதி உதவி மூலம் ரூ. 25 இலட்சத்தில் நிலப் பதிவுருக்களை கணிப்பொறி மூலம் பதிவு செய்யும் முன்னோடித் திட்டத்தினை செயல்படுத்த அரசு சேலம் மாவட்டத்தினை தேர்ந்தெடுத்துள்ளது. இத்திட்டத்தினைச் செம்மையாகச் செயல்படுத்த கூடுதலாக ரூ. 15 இலட்சம், மைய அரசிடமிருந்து பெறவும் அரசு திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்திற்குத் தேவையான உபகரணங்கள் (Hard wall and Soft ware) பற்றிய ஆரம்ப அறிக்கை தயாரிக்கப்பட்டுவிட்டது.





## இணைப்பு-4.

(112 ஆம் பக்கத்தில் உள்ள அடிகுறிப்புக் காண்க).

## வணிகவரிகள் மற்றும் அறநிலையத் துறை.

## கோரிக்கை எண் 5.

## முத்திரைத்தாள் நிர்வாகம்.

**1. பொது :**

சொத்து விற்பனை மாற்றம், அடைமானம், நன்கொடை,
உடைமை உரிமை நிலவர ஏற்பாடு முதலியவை குறித்த
பத்திரங்கள்பது முத்திரைத்தாள் திர்வை விதிப்பதற்கு 1899-ஆம்
ஆண்டு இந்திய முத்திரைத்தாள் சட்டம் (மத்தியச் சட்டம் 2/
1899) வகை செய்கிறது. வருவாய் வாரியம் கலைக்கப்பட்ட
பின்பு பதிவுத் துறைத்தலைவர் 1-12-1980-லிருந்து வருவாய்க்
கட்டுப்பாட்டுத் தலைமை அதிகாரியாக (முத்திரைத்தாள் வரு
வாய்) செயல்பட்டு வருகிறார். அவர் இந்திய முத்திரைத்தாள்
சட்டத்தின் மூலம் கிடைக்கும் வருவாயை நிர்வகித்து வரு
கிறார்.

**2. முத்திரைத்தாள்களின் தேவையைக் கணித்தலும் முத்திரைத் தாள்களை வழங்குதலும் :**

தமிழ்நாடு முழுவதற்கும் அஞ்சல் சாரா முத்திரைத்
தாள்களான நீதித்துறையைச் சார்ந்த முத்திரைத்தாள்கள், நீதித்
துரையைச்சாரா முத்திரைத்தாள்களின் தேவையை முத்திரைத்
தாள் கண்காணிப்பாளர் மதிப்பீடு செய்து, அதனை நாசிக்கி
லுள்ள இந்திய பாதுகாப்பு அச்சக முத்திரைத்தாள் கட்டுப்பாட்டு
அதிகாரிக்கு அனுப்பி வைக்கிறார். சென்னையிலுள்ள கருவூல
கணக்குகள் துறை மண்டல துணை இயக்குநர், முத்திரைத்தாள்
உதவி கண்கணிப்பாளர் ஒருவரின் உதவியுடன் அலுவல் முறையில்
முத்திரைத்தாள் கண்காணிப்பளராகச் செயல்படுகிறார்.
முத்திரைத்தாள்களின் ஆண்டு மற்றும் காலாண்டிற்கான தேவைப்
பட்டியலை மாவட்டக் கருவூல அதிகாரிகளும் முத்திரைத்தாள்
உதவிக் கண்காணிப்பாளரும், தயாரிக்கின்றனர். அவற்றை
முத்திரைத்தாள் கண்காணிப்பாளர் ஒருங்கிணைக்கிறார்.
வெவ்வேறு கருவூலங்களில் முத்திரைத்தாள்களின் இருப்பு நில
வரப்படியும், பொதுமக்களுக்குத் தேவைப்படும் அனைத்து வித
மான மதிப்புகளைக் கொண்ட முத்திரைத்தாள்களை வழங்கும்
நோக்குடனும் பொதுமக்களின் தேவை திடீரென அதிகரிக்கும்
போது, அத்தேவையை நிறைவு செய்யும் வகையிலும், சென்னை
முத்திரைத் தாள்கள் கண்காணிப்பாளர் ஒருங்கிணைந்த
முத்திரைத்தாள்கள் தேவைப்பட்டியலைத் தயாரிக்கிறார்.
குறிப்பிட்ட மதிப்புடைய முத்திரைத்தாள்கள் அவசரமாகத்
தேவைப்படும் போதும் பற்றாக்குறை ஏற்படும்போதும் அம்
முத்திரைத்தாள்களை இருப்பு வைத்துள்ள மாலட்டக் கருவூலத்தி
லிருந்து இருப்பு இல்லாத மாவட்ட கருவூலத்திற்குத் தேவையான
முத்திரைத்தாள்களை மாற்ற ஏற்பாடுகள் செய்யப்படுகிறது.

## 3. உரிமம் பெற்ற முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் :

உரிமம் பெற்ற முத்திரைத்தாள் விற்பனையாளர் மூலமும், கருவூலங்கள், சார்பதிவாளர் அலுவலகங்கள் ஆகியவற்றின் வாயிலாகவும் பொதுமக்களுக்கு முத்திரைத்தாள் விற்பனை செய்யப்படுகின்றன. தமிழ்நாட்டில் 1894 உரிமம் பெற்ற முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் உள்ளனர். முத்திரைத் தாள் விதிகளில் குறிப்பிட்டவாறு உரிமம் பெற்ற முத்திரைத்தாள் விற்பனையாளர்களுக்கு தரகுத் தொகை வழங்கப்படுகிறது. இவர் களின் பணிகளை மாவட்டப்பதிவாளர்களும், பதிவுத்துறை உயர் அதிகாரிகளும் மேற்பார்வை செய்து முறைப்படுத்துகின்றனர். மேலும் செயற்கையாக முத்திரைத்தாள் தட்டுப்பாட்டை ஏற்படுத்தி அவற்றைக் கள்ளச் சந்தையில் விற்பனை செய்யும் நோக்குடன் முத்திரைத்தாள் விற்பனையாளர் முத்திரைத்தாள் களை ஒட்டுமொத்தமாக விற்பனை செய்வதைத் தவிர்க்கவேண்டி பொதுவான தன்மையிலான பத்திரங்களைப் பொறுத்தமட்டில் முத்திரைத் தாள்களுக்குப் பதிலாக, ரொக்கம் பெற சார்பதிவாளர் களுக்கு முழு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மாநிலம் முழுவதிலுமுள்ள அனைத்துப் பதிவு அலுவலகங்களிலும் முத்திரைத் தாள் விற்பனைக்கு அரசு ஏற்பாடு செய்துள்ளது. இந்நடவடிக்கை மூலம் முத்திரைத்தாள் விற்பனையாளர் மூலம் முத்திரைத்தாள் கிடைக்காததால் பொதுமக்களுக்கு ஏற்படும் இடர்பாடுகள் குறைக்கப்படுவதுடன் பொதுமக்கள் பிறரால் சுரண்டப்படுவதும் தவிர்க்கப்படுகிறது. பொதுமக்கள் அவர்க ளுடைய பத்திரங்களில் முத்திரைத்தாள்களை ஒட்ட உதவும் வகையில் அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களிலும் சிறப்பு ஒட்டு வில்லைகள் எப்போதும் கிடைக்கிறது.

## 4. வருவாய் :

முத்திரைத்தாள் வருவாய்.

| வருடம். | பத்திரப்பதிவு அதிகாரிகள் மூலம். | முத்திரைத் தாள்கள் கண்காணிப் பாளர் மூலம். | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | ( ) | (4) |
| | | (ரூபாய் கோடியில்). | |
| 1988—89 | 199.46 | 20.92 | 220,38 |
| 1989—90 | 233.20 | 17.15 | 250.35 |
| 1990—91 | 267.53 | 20.48 | 288,01 |
| 1991—92 (ஆகஸ்ட் 91 வரை) | 135.39 | .. | 135,39 |



## 5. வழிக்காட்டி மதிப்பு மறு நிர்ணயம் :

அசையும் சொத்துக்கள் அல்லது அசையாச் சொத்துக்களை மாற்றம் செய்வது குறித்த ஆவணங்களின்பேரில் அதாவது சொத் துரிமை மாற்றம், சொத்து பரிமாற்றம், தானம், விடுதலை ஆவணம், உடைமை உரிமை நிலவர ஏற்பாடு, நிலையான குத்தகை, உடைமை உரிமையிலுள்ள அடைமானம் ஆகியவை போன்ற ஆவணங்களுக்கு முத்திரைத்தாள் தீர்வை விதிப்பதன் மூலம் கணிசமான வருவாய் கிடைக்கிறது. சொத்து விற்பனை மாற்றம், பரிவர்த்தனை, தானம், உடைமை, உரிமை நிலவர ஏற்பாடு குறித்த நடவடிக்கையில், சம்பந்தப்பட்ட சொத்தின் சந்தை மதிப்பு அடிப்படையில் முத்திரைத்தாள் தீர்வை விதிக்கப் பட்டு வருகிறது. பத்திரத்தில் சந்தை மதிப்பு சரியாகக் குறிப் பிட்டுள்ளதா என்பதை உறுதி செய்யும் நோக்குடன் பத்திரப் பதிவு அதிகாரிகளுக்கு அவரவர் அதிகார எல்லைக்குள் அமைந் துள்ள சொத்தின் தோராய மதிப்பைக் குறிப்பிடும் வழிகாட்டிப் பதிவேடு கொடுக்கப்பட்டுள்ளது.

காலமுறைக்கேற்ப ஒவ்வோராண்டும் வளர்ச்சி விகிதம், விற்பனைப் புள்ளிவிவரம், நிலத்தின் உபயோகம், பூகோள அமைப்பு, தெருக்களின் அகலம் மற்றும் விசாரணையின் மூலம் அறியப்படும் மதிப்பு ஆகிய விவரங்களைக் கொண்டு வழிகாட்டிப் பதிவேடுகள் மதிப்பு திருத்தியமைக்கப்படுவதற்கு ஒரு கூடுதல் பதிவுத்துறைத் தலைவரின்கீழ் ஒரு ''வழிகாட்டிக் குழு'' இயங்கி வருகிறது. அக்குழுவினால் திருத்தி நிர்ணயம் செய்யப்பட்ட மதிப்பு கடைசியாக 1-4-1991-லிருந்து அமுலுக்கு கொண்டுவரப் பட்டுள்ளது. இதனால் அரசுக்கு ஆண்டுதோறும் ரூ. 20 கோடி கூடுதல் வருவாய் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. சொத் துக்களைக் குறைவாக மதிப்பிடும் பழக்கத்தை அறவே தவிர்க்கும் பொருட்டு வழிகாட்டிப் பதிவேட்டை முழு அளவில் பயன்படுத்த ஆவன செய்யப்படுகிறது.

இத்துறையில் தீவிரமான மேற்பார்வையினாலும், விழிப்புணர் வினாலும் பத்திரப்பதிவுக் கட்டணங்கள், முத்திரைத்தாள் தீர்வை ஆகியவற்றின் மூலம் கிடைக்கும் வருவாய், 1968–69-ல் ரூ. 40 கோடியாக இருந்தது. 1989–90-ல் ரூ. 201.01 கோடியாக அதி கரித்துள்ளது. 1990–91 ஆம் நிதியாண்டில் கிடைத்த வருவாய் ரூ. 299.39 கோடியாகும்.

## 6. இந்திய முத்திரைத்தாள் சட்டத்தின் 47-ஏ பிரிவின்கீழ் வரும் இனங்கள் :

பத்திரங்களைப் பதிய வருபவர்கள் பத்திரத்தில் குறிப்பிடப் பட்டுள்ள சொத்தின் சரியான மதிப்பைக் குறிப்பிட வேண்டும். சொத்தின் சரியான சந்தை மதிப்பு பத்திரத்தில் உண்மையில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதைத் தெரிந்துகொள்ள, பத்திரப் பதிவு அதிகாரிகள் அவர்களுக்குக்கொடுக்கப்பட்டுள்ள வழிகாட்டிப் பதிவேடுகளை வைத்து சரிபார்க்கின்றனர். பத்திரத்தில் குறிப் டப்பட்டுள்ள மதிப்பிற்கும், வழிகாட்டி பதிவேட்டில் குறிப்

பிடப்பட்டுள்ள மதிப்பிற்கும் இடையே வேறுபாடு ஏதுமிருந்து பத்திரம் பதியவருபவர் அத்தொகையைச் செலுத்த மறுத்தால் இந்தியச் முத்திரைச்சட்டப் பிரிவு 47-ஏ-இன் கீழ் அச்சொத்தின் உண்மையான சந்தை மதிப்பை தீர்மானிப்பதற்கு பத்திரப்பதிவு அதிகாரி அந்தப் பத்திரத்தை மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பி வைப்பார். செலுத்த வேண்டிய முத்திரைத் தீர்வையை மாவட்ட ஆட்சியர் நிர்ணயிக்கிறார். அவ்வாறு சட்டப்பிரிவு 47-ஏ இன் கீழ் மாவட்ட ஆட்சியர் நிர்ணயம் செய்வதால் பாதிக்கப்பட்ட வர்கள் துணை நீதிமன்றங்களில் முறையீடு செய்யலாம். இனி மேல், மாவட்ட ஆட்சியர் (முத்திரைத்தாள்கள்) உத்தரவினால் பாதிக்கப்பட்டவர்கள் நீதிமன்றம் சாரா (Non-Judical) மேல் முறையீட்டு அதிகாரி, அதாவது நில நிர்வாக ஆணையாளரிடம் மேல்முறையீடு செய்துகொள்ள முத்திரைச்சட்டத்தில் வழிவகை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும், மாநிலத்தின் எல்லை யில் அமைந்துள்ள சொத்துக்கள் பதிவுச் சட்டத்தின் 28-வது பிரிவில் வகை செய்யப்பட்டுள்ளபடி அண்டை மாநிலங்களில் பதிவு செய்யப்படும் போது முத்திரைத் தீர்வை குறைவாக வசூ லிக்கப்பட்டு விடுகிற இனங்களில் அவ்வாறு விடுபட்ட முத்திரைத் தீர்வையை வசூலிப்பதற்கு இம்மாநில அரசுக்கு அதிகாரம் அளிக் கும் வகையில் முத்திரைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு செயற் குறிப்பு அரசின் தீவிர பரிசீலனையிலுள்ளது. சட்டப் பிரிவு 47-ஏ இன் கீழ் கொண்டுவரப்பட்ட வழக்குகள் அதிகமாக இருந்ததால் வருவாய்த் துறையில் 1990–91 ஆம் ஆண்டில் சிறப் புப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் இவ் வாண்டில் 60,401 வழக்குகளை முடித்துள்ளார்கள். மேலும், ரூ. 6.67 கோடி வசூலித்துள்ளார்கள்.

## 7. கட்டிடங்களைப் பார்வையிடுதல் :

கட்டிடங்களை விற்பனை செய்தல் நன்கொடையாகக் கொடுத்தல், பரிவர்த்தனை செய்தல் ஆகியவற்றைப் பொறுத்த மட்டில் அக்கட்டிடத்தின் முழு விவரங்களையும் ஒரு படிவத்தில் குறிப்பிட்டு பத்திரத்துடன் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும். ஆனால், பத்திரம் பதிய வரும் பொதுமக்கள் பொதுவாக உண்மையான விவரங்களை ஆவணத்தில் கொடுப்பதில்லை. எனவே, உண்மையான மதிப்பை மறைத்து குறைவாக மதிப்புக் காட்டப்பட்டுள்ள இனங்களைக் கண்டுபிடிக்க அரசு, கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் தலைமையில் நான்கு மாவட்டப் பதி வாளர்களையும், இருபத்தாறு தணிக்கை மாவட்டப் பதிவாளர் களையும், இரு உதவி செயற் பொறியாளர்களையும் உதவிகர அலுவலர்களையும் கொண்டு ஒரு கட்டிட புலனாய்வுக் குழு ஏற் படுத்தி உள்ளது. பதிவான கட்டிட ஆவணங்களில் புறநகர் களில் ரூ. 10,000-க்கும், நகரங்களில் ரூ. 25,000-க்கும் மேலான மதிப்புள்ள சொத்தைக் 'கள ஆய்வு' செய்து உண்மை நிலைகள் மறைக்கப்பட்டிருப்பின் உரிய நடவடிக்கை எடுத்து, அரசுக்கு சேர வேண்டிய வருவாயை ஈட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 1990–91 ஆம் நிதியாண்டில் 88,870 ஆவணங்களில்



கண்ட கட்டிடங்களைக் கள ஆய்வு செய்து ரூ. 5.85 கோடி வருவாய் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டில் ரூ. 3.44 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது.

## 8. முத்திரைத்தாள் தீர்வை மீதான மேல்வரி :

விற்பனை, பரிவர்த்தனை, நன்கொடை, உடைமை உரிமையுடன் கூடிய அடைமானம், அதன் மாற்றம் நிலையான குத்தகை தொடர்பான ஆவணங்களைப் பொறுத்த வரையில் முத்திரைத் தாள் தீர்வையுடன் 5 சதவீதம் மேல்வரி கூடுதலாக வசூலிக்கப் படுகிறது. மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளைப் பொறுத்த மட்டில் மேல்வரியாக வசூலிக்கப்படும் தொகையில் 10 சதவிகித தொகையை வசூல் கட்டணமாக இத்துறை எடுத்துக்கொண்டு எஞ்சியுள்ள 90 சதவிகித தொகையை மாநகராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும் வழங்கப்படுகிறது. அதேபோல் நகர பஞ்சா யத்துக்கள், உள்ளாட்சி மன்றங்களுக்கு சம்பந்தப்பட்ட மேல்வரி வசூல் 3 சதவிகிதம் இத்துறை வசூல் கட்டணமாக எடுத்துக் கொள்கிறது. மீதமுள்ள 97 சதவிகித மேல்வரியை சம்பந்தப் பட்ட நகர பஞ்சாயத்துகளுக்கும் உள்ளாட்சி மன்றங்களுக்கும் வழங்கப்படுகிறது.

## 9. 1989–90 ஆம் ஆண்டிலும், 1990–91 ஆம் ஆண்டிலும் முத்திரைத்தாளின் வரவு-செலவு விவரங்கள் :

| கணக்குத் தலைப்பு. | 1989–90 (1–4–1989 முதல் 31–3–1990 வரை). | 1990–91 (1–4–1990 முதல் 31–3–1991 வரை.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | ரூ. பை. | ரூ. பை. |
| 1. நீதித்துறைசாரா முத்திரைத்தாள்கள். | 1,84,91,14,384.90 | 2,02,16,57,311.95 |
| 2. நீதித்துறைசார்ந்த முத்திரைத்தாள்கள். | 15,53,89,811.40 | 16,69,27,325.15 |
| 3. உண்டியல் முத்திரைத் தாள்கள். | 30,10,952.00 | 7,66,127.00 |
| 4. ஒட்டு முத்திரை வில்லைகள். | 4,35,90,808.60 | 3,74,63,579.50 |
| 5. பலவகை வரவு | 37,32,11,269.70 | 55,42,03,449.40 |
| பெருமொத்த வரவுகள். | 2,42,43,17,226.60 | 2,78,00,17,793.00 |

குறிப்பு—திருப்பிச் செலுத்தியவை.

| | ரூ. பை. | ரூ. பை. |
|---|---|---|
| உள்ளாட்சி மன்றங்களுக்குக் கொடுக்கப்படும் தொகை உட்பட நீதித் துறை சாராதவை. | 73,33,01,569.15 | 78,36,95,032.45 |
| 2. நீதித்துறை சார்ந்தவை. | 1,02,51,025.50 | 75,89,962.80 |
| மொத்தம் .. | 74,35,52,594.65 | 79,12,84,995.25 |

கட்டணங்கள் :

| | ரூ. பை. | ரூ. பை. |
|---|---|---|
| 1. முத்திரைத்தாள் விற்பனையில் தள்ளுபடி. | 82,40,337.30 | 1,08,82,372.00 |
| 2. பணியாளர் செலவு. | 41,41,431.50 | 67,15,980.00 |
| 3. நாசிக்கிலுள்ள முத்திரைத்தாள் அச்சகத்திற்கு செலுத்தத்தக்க கட்டணம். | 37,86,635.00 | 84,41,692.00 |
| மொத்த செலவுகள் .. | 1,61,68,403.80 | 2,60,40,044.00 |
| மொத்த வரவுகள். | 2,42,43,17,226.60 | 2,78,00,17,793.00 |
| மொத்த செலவுகளும் திருப்பிக் கொடுக்கப்பட்ட தொகையும். | 75,97,20,998.40 | 81,73,25,039.25 |
| நிகர வரவுகள் | 1,66,45,96,228.20 | 1,96,26,92,753.75 |



## இணைப்பு 5.

(112ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## பத்திரப் பதிவுத் துறை.

1991–92

மானியக் கோரிக்கை எண் 6.

### பத்திரப் பதிவுத்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு :

1864 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டு மனிதர்களின் பிறப்பு முதல் இறப்பு வரை பலதரப்பட்ட சேவைகளை ஆற்றும் பத்திரப் பதிவுத் துறை தனது 126 ஆண்டு கால வரலாற்றை இவ்வாண்டில் நிறைவு செய்ய உள்ளது. இத்துறை 1908 ஆம் ஆண்டு பத்திரப் பதிவுச் சட்டத்தையும் (மத்திய சட்டம் 16/1908) மற்றும் கீழே பத்தி 3-ல் குறிப்பிட்ட சட்டங்களையும் செயற்படுத்தி வருகிறது. அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களைப் பதிவு செய்தலும் அவை சம்பந்தப்பட்ட பதிவு ஆவணங்களைப் பாதுகாத்து பேணலும் இத்துறையின் முக்கியமான பணிகளாகும்.

### 2. நிருவாக அமைப்பு :

#### (அ) தலைமை அலுவலகம் :

பத்திரப் பதிவுத் துறைத் தலைவராக இந்திய ஆட்சிப் பணித் தரத்தில் உள்ள அலுவலர் ஒருவர் உள்ளார். பிறப்பு, இறப்பு, திருமண தலைமைப் பதிவாளராகவும், 1982 ஆம் ஆண்டு மத்தியச் சீட்டு நிதிகள் சட்டத்தின்கீழ் (மத்திய சட்டம் 40/1982) சீட்டு விதிகள் பதிவாளராகவும் 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கப் பதிவுச் சட்டத்தின் கீழ் சங்கங்களின் பதிவாளராகவும் இவர் இருக்கிறார்.

இவருக்கு உதவியாகப் பின்வரும் அதிகாரிகள் தலைமையிடத்தில் பணியாற்றி வருகின்றனர் :—

1. கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (புலனாய்வு).
2. கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (வழிகாட்டி).
3. துணைப் பதிவுத் துறைத் தலைவர் பதவித் தரத்தில் சட்ட அலுவலர்.
4. துணைப் பதிவுத் துறைத் தலைவர் பதவித் தரத்தில் கூடுதல் சீட்டு மற்றும் சங்கங்களின் பதிவாளர்.

5. பதிவுத் துறைத் தலைவர் அவர்களின் நேர்முக உதவியாளர் (உதவிப் பதிவுத்துறைத் தலைவர் பதவித்தரத்தில்).

6. மாவட்டப் பதிவாளர் பதவித் தரத்தில் பத்திரப் பதிவுத் துறைத் தலைவருக்கு நேர்முக உதவியாளர் (சீட்டு நிதிகள்).

7. கணக்கு அலுவலர்.

8. காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் தலைமையின் கீழ் இயங்கும் விழிப்புப் பணிக் குழு.

(ஆ) மண்டல அலுவலகங்கள் :

வேலூர், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், மதுரை மற்றும் சென்னை ஆகிய இடங்களைத் தலைமை இடங்களாகக்கொண்டு தமிழ்நாடு முழுவதும் ஐந்து மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த மண்டலங்கள் ஒவ்வொன்றும் பத்திரப் பதிவுத் துறைத் துணைத் தலைவர் ஒருவரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மண்டலத்திலும் சென்னை நீங்கலாக இரு உதவி பதிவுத் துறைத் தலைவர்கள் உள்ளனர். மண்டலம் முழுவதையும் நிருவகித்தல், அனைத்து அலுவலகங்களையும் ஆய்வு செய்தல் விசாரணைகள் நடத்துதல் ஆகியவை துணைப் பதிவுத் துறைத் தலைவரின் முக்கியமான கடமைகளாகும் அவருடைய மண்டலத்திற்குள் உள்ள உதவி பதிவுத் துறைத் தலைவர்கள், மாவட்டப் பதிவாளர்கள், சார்பதிவாளர்கள் ஆகியோரின் அலுவலங்கங்களின் பணியை மேற்பார்வையிடும் அதிகாரம் அவருக்கு அளிக்கப்பட்டுள்ளது. அவருடைய மண்டல வருவாய்க்கு அவர் பொறுப்பாவார்.

(இ) சரக அலுவலகங்கள் :

வேலூர், கடலூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, சேலம், கோயம்புத்தூர் ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் ஒருவர் வீதம் எட்டு உதவிப் பதிவுத் துறைத் தலைவர்கள் பணிபுரிந்து வருகின்றனர். சார்பதிவாளர் அலுவலகங்களை ஆய்வு செய்தல், புகார்கள் தொடர்பான விசாரணைகள் செய்தல் ஆகியவை உதவிப் பதிவுத் துறைத் தலைவர்களின் முக்கியமான கடமையாகும். அவர்கள் சங்கங்களையும் சீட்டு நிதி நிறுவனங்களையும் ஆய்வு செய்கின்றனர். பொதுவாக அவர்கள் அந்தந்த மண்டலங்களில் பத்திரப் பதிவுத் துறைத் துணைத் தலைவரின் அன்றாட நிர்வாக அலுவல்களில் அவருக்கு உதவி புரிகின்றனர்.



(ஈ) மாவட்ட அலுவலகங்கள் :

இம்மாநிலம் 46 பத்திரப் பதிவு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வோரு மாவட்டமும் மாவட்டப் பதிவாளர் ஒருவரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. அவர் சங்கங்களின் பதிவாளராகவும், சீட்டு நிதிகளின் துணைப் பதிவாளராகவும் திருமணங்கள், கூட்டு வணிக நிறுவனம் ஆகியவற்றின் பதிவாளராகவும் இருக்கிறார் சார்பதிவாளர் அலுவலகங்களை ஆய்வு செய்தல் பத்திரப் பதிவுச் சட்டத்தின் கீழ் செய்யப்படும் மேல்முறையீடுகளை விசாரித்தல், பத்திரங்களின் தன்மை தொடர்பாக சார் பதிவாளர்கள் எழுப்பும் ஐயங்களுக்கு விளக்கமளித்தல், புகார்கள் ஏதேனும் வரப்பெற்றால் அவற்றை விசாரித்தல், சொத்துக்களின் மதிப்பைக் குறைவாகக் குறிப்பிட்டுள்ள பத்திரங்கள் அடங்கிய சொத்துக்களை ஆய்வு செய்து சரியான மதிப்பை நிர்ணயத்தல் ஆகியவை அவருடைய முக்கியமான பணிகளாகும். நிர்வாகத்தின் திறமையை மேம்படுத்தும் பொருட்டும், சென்னை கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய பெருநகர்களில் உள்ள மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்) பணியிடங்கள் உதவி பதிவுத் துறைத் தலைவர் நிலைக்கு உயர்த்தப் பட்டுள்ளன.

(உ) சார்பதிவகங்கள் :

மாநிலம் முழுவதிலும் 574 சார் பதிவாளர் அலுவலகங்கள் உள்ளன, இவை ஒவ்வொன்றையும் சார் பதிவாளர் ஒருவர் நிர்வகித்து வருகிறார். அவர் பலவகையான ஆவணங்களையும் பதிவு செய்கிறார். வில்லங்கச் சான்றிதழ்கள் வழங்குகிறார். ஆவணங்களின் நகல்களுக்குச் சான்றளிக்கிறார். திருமணங்களை பதிவு செய்கிறார். பதிவுத்துறையின் பணி பொதுமக்களுக்கு எளிதில் கிட்டும் வகையிலும் இத்துறையை திருத்தியமைக்கும் திட்டத்தை நிறைவேற்றும் வகையிலும் ஒவ்வொரு ஆண்டும் சார்பதிவாளர் அலுவலகங்கள் திறக்கப்படுகின்றன. சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை போன்ற பெரு நகர்களைப் பொருத்தவரையில் பதிவுக்கு வரும் ஆவணங்கள் சிக்கலானதாகவும் அதிகமான மதிப்புள்ளதாக இருப்பதாலும், அந்த பெரு நகர்களிலுள்ள சார்பதிவாளர்கள் மாவட்டப்பதிவாளர் நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளனர்.

(ஊ) புலனாய்வுக் குழு :

வீடு மற்றும் கட்டிடங்கள் போன்ற அசையா சொத்துக்கள் கைமாறும் ஆவணங்களின் நீளம் அகலம், கட்டிடத் தன்மை, பரப்பு, வயது போன்ற உண்மை நிலைகளை மறைத்து மதிப்புக் குறைவு செய்து அதனால் அரசுக்கு வரக்கூடிய முத்திரை வருவாய் மற்றும் பதிவுக் கட்டணங்களை ஏமாற்றும் வகையில் ஆவணதாரர்கள் பெரும்பாலோர் செய்து வந்தனர். இந்திய முத்திரைச் சட்டம் பிரிவு 27-ன்படி கைமாறும் சொத்தின் உண்மை

நிலவகளை முழுமையாகக் கொடுக்கப்படவேண்டும் என்பது சட்டமாகும். இருப்பினும் இதனை ஏமாற்றும் வகையில் மேற்கண்ட செயல்முறைகள் நடந்து வந்தன. அதனைத் தடுக்கும் வகையில் புலனாய்வுப் பிரிவு ( Intelligence Cell ) என்ற ஒரு அமைப்பை அரசு ஆணை எண் 390, வணிக வரி மற்றும் அறநிலையத் துறை, நாள் 27-5-1989-ல் ஏற்படுத்தியுள்ளது. அதன்படி மேற்படி புலனாய்வு பிரிவு ஒரு கூடுதல் பதிவுத் துறைத் தலைவரின் தலைமையில் 4 மாவட்டப் பதிவாளர்களையும், இரு உதவி செயற்பொறியாளர்களையும் கொண்டு இயங்குகிறது. இவர்களுடன் நிர்வாக மாவட்டப் பதிவாளர்களையும், தணிக்கை மாவட்டப் பதிவாளர்களையும், துணைப் பதிவுத் துறைத் தலைவர்களையும் ஈடுபடுத்தி கட்டிடக் களப்பணி செய்யப்பட்டு வருகிறது. இதனால் 1990-91-ல் ரூ. 5.85 கோடி இழப்பு கண்டுபிடிக்கப்பட்டு ரூ. 3.44 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது.

மேலும் மாநிலக் கணக்கரின் தணிக்கை பத்திகள் முடிப்பதிலும் துறையின் உள்தணிக்கைப் பத்திகள் முடிப்பதிலும் இக்குழு செயல்பட்டு வருகிறது.

(எ) வழிகாட்டி பிரிவு :

அரசுக்கு வரும் வருவாயினை சரியாகக் கணக்கிட்டு பெறும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் வழிகாட்டிப் பதிவேடுகளின் மதிப்பை, வளர்ச்சி விகிதம், விற்பனை புள்ளி விவரங்கள், நிலத்தின் உபயோகம், தெருக்களின் அகலம், பூகோள அமைப்பு மற்றும் விசாரணை மூலம் அறியப்படும் மதிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் திருத்தி அமைப்பதற்கு ஒரு கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் தலைமையில் ''வழிகாட்டி குழு'' என்ற அமைப்பு செயல்பட்டு வருகிறது. இந்தக் குழு மொத்தமுள்ள 18,249 வழிகாட்டிப் பதிவேடுகளின் மதிப்பையும் ஆண்டுதோறும் திருத்தி அமைக்கும் பணியினை மேற்கொண்டு வருகிறது. இதனால் அரசுக்கு ஆண்டுதோறும் ரூ. 20 கோடிக்குக் குறையாமல் கூடுதல் வருவாய் அதிகரிக்க வாய்ப்பு ஏற்படுகிறது.

3. இத்துறை நிர்வகிக்கும் பல்வேறு சட்டங்கள் :

(1) 1908 ஆம் ஆண்டு பதிவுச் சட்டம்.

(2) 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம்.

(3) 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம் (மத்திய சட்டம் 40/1982).

(4) 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம்

5) 1932 ஆம்ஆண்டு இந்திய கூட்டு வணிகச் சட்டம்.



(6) 1886 ஆம் ஆண்டு பிறப்பு, இறப்பு, திருமணங்கள் சட்டம்.

(7) (அ) 1936, ஆம் ஆண்டு பார்சி இனத்தவர் திருமணங்கள் மற்றும் விவாக ரத்து சட்டம்.

(ஆ) 1869 ஆம் ஆண்டு பிறப்பு, இறப்புச் சட்டம்.

(இ) 1954 ஆம் ஆண்டு சிறப்புத் திருமணங்கள் சட்டம்.

(ஈ) 1955 ஆம் ஆண்டு இந்து திருமணங்கள் சட்டம்

(உ) 1961 ஆம் ஆண்டு வரதட்சிணை தடுப்புச் சட்டம்.

(ஊ) 1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு சீட்டு நிதிகள் சட்டம்

(8) 1972 ஆம் ஆண்டு வணிகஞ்சாரா நிறுவனங்கள் சட்டம்

4. வருவாய் :

ஆவணங்கள் மீது விதிக்கப்பட்ட முத்திரைத்தாள் தீர்வை,
பத்திரப் பதிவுக் கட்டணங்கள், சீட்டுகள், சங்கங்கள் கூட்டு
வணிக நிலையங்கள், திருமணங்கள் ஆகியவற்றைப் பதிவு
செய்வதற்காக விதிக்கப்பட்ட கட்டணங்கள் ஆகியவை இத்
துறைக்கு வருவாய் தரும் முக்கிய இனங்களாகும். கிரயம்,
பினாமி, விடுதலை முதலிய ஆவணங்களில் ஆவணத்தில் கூறப்
படும் கைம்மாறும் தொகையின் மீது முத்திரைத் தீர்வை விதிக்
கப்பட்டுவந்தது. இந்த அடிப்படையை மாற்றி சொத்தின்
அங்காடி மதிப்பின் மீது இது போன்ற ஆவணங்களுக்கு முத்திரைத்
தீர்வை வசூலிக்க வேண்டுமென்று 1968-ல் முத்திரை சட்டத்திற்
குத் திருத்தம் கொண்டு வரப்பெற்றது. இது இந்தச் சட்டத்தில்
ஏற்பட்ட ஒரு முக்கிய மாற்றமாகும். சொத்துக்களின் சந்தை
மதிப்பைக் குறிக்கும் வழிகாட்டிப் பதிவேடுகள் சார்பதிவாளர்
களுக்கு வழங்கப்படுகிறது. அவை சந்தை மதிப்பிற்கேற்ப
ஆண்டுதோறும் திருத்தி அமைக்கப்படுகிறது.

| வருவாய் வருடம். | பதிவுத் துறையின் வருவாய் (கோடியில்). |
|---|---|
| | ரூ. பை. |
| 1988-89 | 199.46 |
| 1989-90 | 261.01 |
| 1990-91 | 299.39 |
| 1991-92 (ஆகஸ்ட் 91 முடிய) | 135.40 |

## 5. ஆவண எழுத்தர்களும் நகல் எழுத்தர்களும் :

நகல் எழுத்தர்கள் உரிம விதிகள் 1971-ல் இயற்றப்பட்டன. ஆவண எழுத்தர்களுக்கு உரிமங்கள் வழங்குவது தொடர்பான விதிகள் 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 14 ஆம் தேதியிலிருந்து செயலுக்குக் கொண்டுவரப்பட்டன. 31–3–1991 நாள் நிலவரப்படி, நகல் எழுத்தர், நகல் தட்டச்சர், ஆவண எழுத்தர் உரிமங்களின் எண்ணிக்கை வருமாறு :

| (1) | ஆவண எழுத்தர்கள். (2) | நகல் எழுத்தர்கள். (3) | நகல் தட்டச்சர்கள். (4) |
|---|---|---|---|
| 1. மாநில உரிமம் வைத்திருப்பவர்கள். | 5099 | 4869 | 1890 |
| 2. மாவட்ட உரிமங்கள் | 5929 | 5750 | 725 |
| 3. துணை மாவட்ட உரிமங்கள். | 6710 | 6500 | 130 |
| மொத்தம் .. | 17738 | 17119 | 2745 |

அரசாணை எண் 317, வணிக வரி மற்றும் அறநிலையத் துறை, நாள் 23–5–1990-ன்படி ஆவண எழுத்தர் மற்றும் நகல் எழுத்தர்களுக்கு 12–8–1990 அன்று தேர்வு நடத்தப்பட்டு 4,336 ஆவண எழுத்தர்களும், 6,676 நகல் எழுத்தர்களும் தேர்வில் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் கோரிக்கையின் மீது உரிமங்கள் வழங்கப்படுகின்றன.

## 6. தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 27/1975).

1908 ஆம் ஆண்டு இந்திய பதிவுச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட பதிவுத்துறைத் தலைவர், அனைத்து மாவட்டப் பதிவாளர்கள் ஆகியோர் இச்சட்டத்தின்படி தத்தம் அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதிக்கு பதிவாளர்களாவர். பதிவுத் துறைத் தலைவர், பதிவாளர்களை மேற்பார்வை செய்யும் உரிமையைப் பெற்றுள்ளார். பத்திரப் பதிவுத்துறைத் தலைவரின் அனுமதி பெற்ற பிறகே இச்சட்டத்தின்கீழ் வழக்குத் தொடர இயலும்.

2. இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவில் கூறப்பட்ட கல்வி, இலக்ச அறிவியல் போன்ற நோக்கங்களுக்காக எழுவர் சேர்ந்து ங்கத்தை அமைக்கலாம். ஆண்டு வரவு செலவு 10,00 ரு க்கு மல் அல்லது 20 உறுப்பினர்களுக்கு மேல் உள்ள



சங்கங்கள், அவை அமைக்கப்பட்ட நாளிலிருந்து 3 திங்களுக்குள் கட்டாயமாகப் பதிவு செய்யப்பட வேண்டும். மதம், உடற்பயிற்சி அல்லது விளையாட்டுகள் முதலியவற்றை மேம்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட சங்கங்களும் அல்லது 10,000 ரூபாய்க்குக் குறைவான வருமானம் உள்ள ஏனைய சங்கங்களும் அல்லது 20 உறுப்பினர்களுக்குக் குறைவாக உள்ள சங்கங்களும் விரும்பினால் பதிவு செய்து கொள்ளலாம்.

3. ஆண்டு வரவு-செலவு 10,000 ரூபாய்க்குமேல் உள்ள ஒவ்வொரு சங்கமும் அதன் கணக்குகளை, ஆண்டுதோறும் பட்டயக் கணக்கர்களைக் கொண்டு தணிக்கை செய்ய வேண்டும். சங்கத்தின் ஆண்டு வருமானம் 10,000 ரூபாய்க்குச் குறைவாகவும் 2,500 ரூபாய்க்கு அதிகமாகவும் இருந்தால், அச்சங்கத்தின் கணக்குகளை, அச்சங்கத்தின் பட்டதாரி உறுப்பினர் ஒருவரைக் கொண்டு தணிக்கை செய்ய வேண்டும். அதன் ஆண்டு வருமானம் 2,500 ரூபாய்க்கு குறைவாக இருந்தால் 10 ஆம் வகுப்பு அல்லது அதற்குச் சமமான அல்லது அதற்கு மேற்பட்ட தேர்வில் தேர்ச்சி பெற்ற சங்க உறுப்பினர் ஒருவரைக் கொண்டு அச்சங்கத்தின் கணக்குகளைத் தணிக்கை செய்ய வேண்டும். தணிக்கை செய்யப்பட்ட கணக்கர்களுக்கு நிதியாண்டு முடிவுற்ற நாளிலிருந்து 6 திங்களுக்குள் அச்சங்கத்தின் பொதுக்குழு ஒப்புதலளிக்க வேண்டும். அத்துடன் (1) வரவு-செலவுக் கணக்குகளின் அதிகாரப் பூர்வமான நகல் ஐந்தொகை கணக்கு, அறிக்கைகள், (2) நிதியாண்டு முடிவுறுகையில் அச்சங்கத்திலுள்ள உறுப்பினர்களின் பட்டியல், (3) நிதியாண்டில் சங்கம் சரிவர செயல்பட்டு வருவதற்கான உறுதிமொழி ஆகியவற்றை பொதுக்குழுவின் ஒப்புதல் பெற்ற இரண்டு திங்களுக்குள் ஆண்டுதோறும் மாவட்டப் பதிவாளருக்கு அனுப்பவேண்டும். 31-3-91-ன்படி செயல் முறையில் உள்ள சங்கங்களின் எண்ணிக்கை 44,475 ஆகும். 1991 ஆம் ஆண்டில் பதிவான சங்கங்களின் எண்ணிக்கை 4,983 ஆகும். அதில் எய்திய வருவாய் ரூ. 4,59,056 ஆகும். தமிழ்நாடு சங்கப்பதிவுச் சட்டத்தை சிறப்பாக நிர்வகிக்கும் பொருட்டு, தவறு செய்யும் சங்கங்களைத் திருத்தி அமைக்கும் பொருட்டு, பொதுமக்களுக்கும் இன்னும் சிறப்பாக தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டும், தமிழ்நாடு சங்கப்பதிவுச் சட்டம் பிரிவுகளை 15 (3), 34, 36 (49)(ஏ) திருத்தி தவறுகள் செய்யும் சங்கங்களுக்குத் தனி அலுவலர்கள் நியமித்து நிர்வாகத்தைச் சீர் செய்யும் வகையிலும் நியமன உறுப்பினர்களை நியமிக்க வழிவகை செய்யும்பொருட்டு சட்ட திருத்தம் கொண்டுவர அரசு தீர்மானித்துள்ளது. சட்டம் விரைவில் கொண்டு வரப்படும்.

## 7. சீட்டு நிதி நிர்வாகம் :

(1) தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம்.—பதிவுத் துறைத் தலைவர் இந்த சட்டத்தின்கீழ் சீட்டு நிதி நிறுவன இயக்குநராக அலுவல் சார்பான முறையில் செயல்படுகிறார். 31–3–1991 ஆம் நாள் நிலவரப்படி தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டத்தின்கீழ் நடத்தப்பட்டு வரும் சீட்டுகளின்

எண்ணிக்கை 433 ஆகும். 31-3-1991 ஆம் நாள் நிலவரப்படி சீட்டு நிறுவனப்பதிவாளர் பிணைய வைப்புத் தொகையாக பெற் றுள்ள தொகையின் மதிப்பு ரூ. 50.93 இலட்சம் ஆகும். இச் சட்டம் 1982-ம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டத்தால் (மத்திய சட்டம் 40/1982) ரத்து செய்யப்பட்ட போதிலும் ஏற்கெனவே செயல்பட்டு வரும் சீட்டுகள் முடிவு பெறும் வரை இந்த அதி காரம் செயலில் இருந்து வருகிறது.

2. சீட்டு நிதிகள் சட்டம் (மத்திய சட்டம் 40/1982) : தமிழ் நாடு 1961-ம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டத்திற்குப் பதிலாக, இச்சட்டம் 13-4-1984 ஆம் நாளிலிருந்து தமிழ்நாட்டில் அமு லுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. பதிவுத் துறைத் தலைவரே சீட்டுப் பதிவாளராகவும் செயல்படுகிறார். கூடுதல் சீட்டுப் பதிவாளர் ஒருவரும், நேர்முக உதவியாளர் (சீட்டு) ஒருவரும் தலைமையிடத்தில் சீட்டுப் பதிவாளருக்கு உதவி புரிகின்றனர். அரசாணை எண் 135, வணிகவரி மற்றும் அறநிலையத் துறை நாள் 6-3-1990-ன்படி, பதிவு சட்டத்தின்கீழ் பணிபுரியும் துணைப்பதிவுத் துறைத் தலைவர்களும் 1982-ம் ஆண்டு சீட்டு நிதி சட்டத்தின்கீழ் இணை சீட்டுப் பதிவாளர்களாகவும், அனைத்து மாவட்டப் பதிவாளர்களும், துணை சீட்டுப்பதிவாளர் களாகவும் தத்தம் அதிகார வரம்பிற்குள் நியமிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் மாவட்டங்களில் சீட்டு நிதி பணியை கவனிக்க 46 சார் பதிவாளர்கள் சீட்டு நிதி ஆய்வாளர்களாகப் பணியாற்றி வருகின்றனர். சந்தாதாரர்களின் நலத்தினைப் பாதுகாக்க பல விதிகளை உள்ளடக்கியதாகும். சீட்டுநிதிகள் சட்டம், மத்திய சீட்டுநிதிகள் சட்டத்தின்படி வசூலித்து வைக்கப்பட்டுள்ள பிணைய வைப்பீட்டுகளின் மதிப்பு 31-3-1991 நிலவரப்படி ரூ. 102 கோடியாகும்.

தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்ட சீட்டு நிதி நிறுவனங்கள் 4,220 உள்ளன. அவை நடத்துகின்ற சீட்டுக்களின் எண் ணிக்கை 43,092 ஆகும். சீட்டு நிறுவனங்களின் மீது வரும் புகார்களைக் கவனிக்கவும், பதிவுறா சீட்டுகள் நடைபெறுவதைக் கண்டு பிடித்து தண்டிக்கவும், சீட்டு சந்தாதாரர்களுக்கு உரிய தொகையை உரிய காலத்தில் வாங்கவும், "சீட்டு விழிப்புக் குழு" என்ற அமைப்பு 1-1-1990 முதல் கூடுதல் சீட்டுப் பதிவாளர் தலைமையின்கீழ் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்த அமைப்பு 31-3-1991 முடிய 550 பதிவுறா சீட்டுக்களை கண்டுபிடித்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

8. சீட்டு விழிப்புக்குழு :

பதிவுறா சீட்டு நடத்துபவர்களை கணடுபிடிக்கவும், பதிவு செய்த சீட்டுகளை நடத்துபவர்கள் பதிவுறா சீட்டுகளை நடத்து கிறார்களா என்பதை கண்காணிக்கும் வகையிலும் இதற்கு உதவி யாக கூடுதல் சீட்டுப் பதிவாளர் தலைமையின்கீழ் 'சீட்டு விழிப்புக் குழு" என்ற அமைப்பு செயல் பட்டு வருகிறது. இதற்கு உதவி



யாக அரசாணை எண் 514, வணிக வரி மற்றும் அறநிலையத் துறை, 22-8-1990-ன்படி ஒரு டீசல் ஜீப் சீட்டு விழிப்புக்குழு வுக்கு வழங்கப்பட்டுள்ளது.

9. சீட்டு நிதிக் கழகம் : தமிழ்நாடு சீட்டு நிதிக் கழகம் :

தமிழ்நாடு சீட்டுநிதிக்கழகம் அரசின் கொள்கை முடிவுப்படி 2-5-1989 தேதியிட்ட அரசு நிலையாணை எண் 385, (வணிக வரி மற்றும் அறநிலையத் துறையின்)படி கலைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு பணியாளர்கள் படிப்படியாக வெளி யேற்றப்படுகிறார்கள். மிகக்குறைந்த அளவு பணியாளர்களைக் கொண்டு தற்போது இயங்கி வருகிறது. தற்போதைய சீட்டுப் பிரிவுகள் (Chit Groups) முடியும்வரை அதாவது 1993 வரை மேற்படி சீட்டு நிதிக் கழகம் செயல்பட்டுக் கொண்டிருக்கும். வெளியேற்றப்பட்ட பணியாளர்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலுள்ள நியமனப் பிரிவின்படி (Placement Cell) அரசு பொது நிறுவனங்களில் அல்லது வாரியங்களிலோ வேலைக்கு அமர்த்தப்படுவார்கள் என 6-9-1989 நாளிட்ட அரசாணை (நிலை) எண் 684 (வணிக வரி மற்றும் அறநிலையத் துறையில் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

இந்த சட்டத்தின்கீழ் பதியப்படும் நிறுவனங்கள் பதிவு செய்த பிறகு தொடர்ந்து செயல்பட்டு வருவது குறித்து எவ்வித விவரங்களையும் அரசுக்குத் தெரிவிப்பதில்லை. இந்நிலையை தவிர்க்கும்பொருட்டு, எத்தனை கூட்டு நிறுவனங்கள் செயல் பட்டு வருகின்றன எனவும், அவைகளுக்கு அளிக்கப்படும் சலு கைகள் சரிதானா என கண்காணிக்க உதவி புரியும் வகையில் அரசாணை எண் 747, வணிகவரி மற்றும் அறநிலையத் துறை நாள் 27-12-1990-ன்படி ஆண்டுதோறும் உறுதிமொழி அறிக்கை தாக்கல் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

11. சார் பதிவகங்களில் முத்திரைத்தாள் விற்பனை :

முத்திரை வில்லைகள் விற்கும் முத்திரைத்தாள் விற்பனை யாளராக சார் பதிவாளர் செயல்பட்டு வருகிறார். ஒட்டு முத் திரை வில்லைகளில் ஒப்பமிடும் அதிகாரியாகவும் பொருத்தமான முத்திரை வில்லைகளுக்குப் பதிலாக ரொக்கத்தை ஏற்றுக்கொள் ளவும் அவருக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. முத்திரைத் தாள்கள் பெறுவதில் பொது மக்களுக்கு சிரமம் இல்லாமல் இருப் பதற்கு இது மிகவும் உதவியாக இருக்கும்.

## இணைப்பு-6.

112ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.

### கோரிக்கை எண். 44.

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை 1991—92.

### எழுதுபொருள்-அச்சுத் துறையின் பணி குறித்த கொள்கை விளக்கம்.

எழுதுபொருள்-அச்சுத் துறை முதலில் 1831 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசிதழ்களை மட்டுமே அச்சிடுவதற்காக 10 தொழிலாளர்களைக் கொண்டு தொடங்கப்பட்டது. பின்னர் அது படிப்படியாக வளர்ச்சி அடைந்து தற்போது சென்னை மாநகரிலும் பிற மாவட்டங்களிலும் 8 அச்சகங்களுடன் இயங்கி வருகின்றது.

எழுதுபொருள்-அச்சுத் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டிலுள்ள அச்சகங்கள் பின்வரும் இடங்களில் அமைந்துள்ளன—

1. அரசு மைய அச்சகம், வள்ளலார் நகர், சென்னை.
2. அரசு கிளை அச்சகம், உயர்நீதிமன்ற வளாகம், சென்னை.
3. அரசு கிளை அச்சகம், சூளை, சென்னை.
4. அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை.
5. அரசு கிளை அச்சகம், திருச்சிராப்பள்ளி.
6. அரசு கிளை அச்சகம், சேலம்.
7. அரசு கிளை அச்சகம், விருத்தாசலம்.
8. அரசு கிளை அச்சகம், மதுரை.

இவை தவிர எழுதுபொருள்-அச்சுத் துறை இயக்கத்தின் நிருவாகக் கட்டுப்பட்டின்கீழ் எழுதுபொருள் பிரிவும் அரசு வெளியீடுகள் விற்பனை நிலையமும் செயல்படுகின்றன.

பணியாளர் நிருவாகம், தொழில் உறவுகள், பெதி நிருவாகம், பொருட்களின் மைய நிருவாக அமைப்பு, இயந் திரங்கள் வாங்குதல் அச்சுப் பிரிவுகளுக்குத் தேவையான பொருட்களைக் கொள்முதல் செய்தல், மாநிலத்திலுள்ள அரசுத் துறைகள் அனைத்திற்கும் தேவைப் எழுதபடும்



பொருட்கள், தட்டச்சுப் பொறிகள், படிபெருக்கிகள், கணக் கீட்டுப் பொறிகள் முதலியவற்றைக் கொள்முதல் செய்து வழங்குதல் போன்ற பணிகள், தலைமைச் செயலகம், துறைத் தலைவர்கள், தமிழ்நாடு மாநில கணக்குத் துறைத் தலைவர், அரசுத் துறை நிறுவனங்கள் ஆகியவை ஒப்படைக்கும் அச்சுப் பணிகள், வரவு-செலவுத் திட்ட ஆவணங்கள், தமிழ்நாடு அரசிதழ், மந்தண சிறப்பு அறிக்கைகள், விதிக்கோவைகள், நடைமுறை நூல்கள், வாக்குச் சீட்டுகள், வினாத்தாள்கள் போன்ற மிகவும் மறைபொருள் தன்மை வாய்ந்த இனங்கள், நிலைப்படுத்தப்பட்ட — நிலைப்படுத்தப்படாத படிவங்கள், அச்சிடுதல் ஆகிய பணிகள் எழுதுபொருள்- அச்சுத் துறையின் கீழ் வருகின்றன.

எழுதுபொருள்,-அச்சுத் துறை இயக்ககம், மேற்கூறிய அச்சுப் பிரிவுகள் பணிபுரிவதைக் கண்காணிக்கும் தலைமை அமைப் பாகும். இதன் அனுமதிக்கப்பட்ட பணியாளர்களின் எண் ணிக்கை 231 ஆகும். இத்துறை இயக்குநர், எழுதுபொருள்-அச்சுத் துறை தொடர்பான பணிகளில் தமிழ்நாடு மாநில அரசுக்கு ஆலோசகராகவும் செயல்படுகிறார். இவருக்கு இணை இயக்குநர், பொது மேலாளர், தலைமைக் கணக்கு அலுவலர், பணி மேலாளர், துணைப் பணி மேலாளர்கள், உதவிப் பணிமேலாளர்கள், மற்றும் ஏனைய தொழில் நுட்ப பணியாளர்கள் ஆகியோர் உதவி புரிகின்றனர்.

மாவட்டங்களில் மாவட்ட அரசிதழ்களை அச்சிடும் பணி யைக் கிளை அச்சகங்கள் கவனித்து வருகின்றன. உயர் நீதிமன்றத்திற்குரிய அன்றாட வழக்கு பட்டியல்களையும் சட்ட அறிக்கைகளையும் அச்சிடும் பணியை சென்னை உயர் நீதிமன்றத்தில் உள்ள கிளை அச்சகம் கவனித்துவருகிறது.

### 1. அச்சப் பிரிவு :

#### (1) அரசு மைய அச்சகம், சென்னை-79.

இது பணி மேலாளரின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் மொத்தம் 3,487 பணியாளர்களைக் கொண்டு மூன்று முறை மாற்றுப் பணிகளில் செயல்பட்டு வருகிறது. இவ் வச்சகத்தில் அச்சிடுப் எந்திரங்கள், புத்தகம் கட்டுப் எந்திரங் கள், அச்சுக்கோர்க்குப் எந்திரங்கள், போட்டோ கம்போசிங் எந்திரம், பிளாக் தயாரிப்புப் பிரிவு, ரப்பர் முத்திரைப் பிரிவு ஆகிய அனைத்து வசதிகளும் உள்ளன.

தலைமைச் செயலகம், துறைத் தலைவர்கள், தமிழ் நாடு மாநில கணக்குத் துறைத் தலைவர், அரசுத் துறை நிறுவனங்கள் ஆகியவை ஒப்படைக்கும் அச்சுப் பணிகளின் பெரும்பான்மைப் பணியையும், வரவு-செலவுத் திட்ட ஆவணங் கள், தமிழ்நாடு அரசிதழ்கள், மறைபொருள் ஆவணங்கள்,

வினாத்தாள்கள், நிலைப்படுத்தப்பட்ட - நிலைப்படுத்தப்படாத சில படிவங்கள் போன்ற அதிக மறைபொருள் நன்மையுள்ள இனங்கள் ஆகியவற்றையும் அரசு மைய அச்சகம் அச்சிடுகிறது.

1990ஆம் ஆண்டில் மைய அச்சகம் செய்து முடித்த முக்கிய பணிகள் பின்வருமாறு :—

| துறையின் பெயர். | மொத்த இனங்கள். | மொத்த படிவங்கள். | மொத்த புத்தகங்கள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. உள்துறை-மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை. | 56 | 3,15,930 | 22,040 |
| 2. பொதுத் துறை .. | 109 | 51,847 | 12,770 |
| 3. செய்தி-மக்கள் தொடர்புத் புத துறை. | 4 | 3,00,000 | 750 |
| 4. கால்நடை பராமரிப் துறை | 1 | 500 | .. |
| 5. தமிழ்நாடு சட்டப் பேரவை. | 152 | 10.18,500 | 44,575 |
| 6. மோட்டார் வாகன பராமரிப்புத் துறை. | 7 | 1,92,096 | .. |
| 7. தமிழ்நாடு மாநிலக் கணக்குத் துறைத் தலைவர் அலுவலகம், சென்னை-18. | 9 | 1,89,000 | 70 |
| 8. தேசிய சேமிப்புத் துறை. | 30 | 5,70,550 | 20,000 |
| 9. இந்திய ரிசர்வ் வங்கி படிவங்கள். | 3 | 2,000 | .. |

இந்த அச்சகத்தில் ஒய்வு அறை ஒன்று உள்ளது. ஒரு சிற்றுண்டிச்சாலை ஒப்பந்தக்காரரால் நடத்தப்படுகிறது. பணி புரியும் மகளிரின் குழந்தைகளைப் பணி நேரங்களில் கவனித்துக் கொள்ள குழந்தைகள் காப்பகம் ஒன்று உள்ளது.



(2) அரசு கிளை அச்சகம், சூளை, சென்னை:

இந்த அச்சகம் அனுமதிக்கப்பட்ட 675 பணியாளர்களுடன் மூன்று முறை மாற்றுப் பணிகளில் செயல்படுகிறது. இந்த அச்சகம், முக்கியமாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர் வாணையம், காவல்துறை, மருத்துவத் துறை, வணிகவரித் துறை ஆகிய துறைகளின் அச்சுப் பணியை மேற்கொள்கிறது.

தொழிலாளர் நல உதவி அலுவலர் ஒருவர், இக்கிளை அச் சகத் தொழிலாளர் நலனைக் கவனிக்கிறார். இந்த அச்சகம் மிகவும் பழைய வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. எனவே, சூளை அரசு கிளை அச்சகத்திற்கு கட்டடம் கட்டு வதற்காக 3 ஏக்கர் நிலம் எழுதுபொருள்-அச்சகத் துறைக்கு மாற்றித் தருமாறு சென்னையிலுள்ள பால்வளத் துறை ஆணை யாளரிடம் (பால்) கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

(3) சென்னை உயர் நீதிமன்ற வளாகத்திலுள்ள அரசு கிளை அச்சகம்

இக்கிளை அச்சகம், அனுமதிக்கப்பட்ட 238 பணியாளர் களுடன் மூன்று முறை மாற்றுப் பணிகளில் செயல்படுகிறது. உயர்நீதிமன்றத்திற்குரிய தினசரி வழக்குப் பட்டியல்களை அச்சிட்டு வழங்குவதும், இந்தியச் சட்ட அறிக்கைகளை அச்சிடு வதும் இவ்வச்சகத்தின் முக்கிய பணி ஆகும்.

மேலும், சிறைத் துறை, காவல் துறைக்கான படிவங்கள் 1 முதல் 4 வரை, மோட்டார் வண்டிகள் சட்டப் படிவங்கள், தமிழ்நாடு அரசு விற்பனை வரிப் படிவங்கள், அரசு வழக் கறிஞர் அலுவலகப் படிவங்கள், உரிமை மாற்றம் பெறும் அலுவலர் ( Official Assigree ) படிவங்கள் மற்றும் ஒப்பந்தப் புள்ளி அறிவிப்புகள் இவ்வச்சகத்தில் அச்சிடப்படுகின்றன. 1988–89ஆம் ஆண்டிற்கான, தொழிற்சாலைகளுக்கான பாது காப்பு விருது இப்பிரிவுக்கு வழங்க அறிவிக்கப்பட்டுள்ளது.

(4) அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை:

இக்கிளை அச்சகம், அனுமதிக்கப்பட்ட 255 பணியாளர் களைக் கொண்டு இரண்டு முறை மாற்றுப் பணிகளில் இயங்கி வருகிறது. பதிவுத் துறை படிவங்கள், ஆதி திராவிடர் நலத் துறைப் படிவங்கள், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை படிவங் கள், கருவூலக் கணக்குகள், துறை படிவங்கள், பொதுப் பணித் துறை படிவங்கள், உயர் நீதிமன்றத்திற்கான படிவங்கள், மீன் துறைப் படிவங்கள், தேசியக் கல்விக் கடன் உதவித் தொகை படிவங்கள் போன்ற வழக்கமான வரையறுக்கப்பட்ட படிவங் கள், பதிவேடுகள் இவ்வச்சகத்தில் அச்சிடப்படுகின்றன. இவற் றுடன், 14 மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்கள் அச்ச டிக்கும் பணியும் இவ்வச்சகத்தில் மேற்கொள்ளப்படுகின்றன.

(5) அரசு கிளை அச்சகம், திருச்சிராப்பள்ளி:

இக்கிளை அச்சகம் 1965ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, தற்போது (29–11–1990 முதல்) திருச்சிராப்பள்ளியிலுள்ள, துவாக்குடியில் அதற்கான சொந்த கட்டிடத்தில் அனுமதிக்கப் பட்ட 184 பணியாளர்களுடன் இயங்கி வருகிறது.

இக்கிளை அச்சகம், தமிழ்நாட்டிலுள்ள எல்லா அரசுத் துறைகளுக்கும் அன்றாட பணிக்குத் தேவைப்படக் கூடிய பொதுவான படிவங்களையும் பதிவேடுகளையும் அச்சிட்டு வழங்கி வருகிறது. இதைத் தவிர நில அளவை ஏற்பாடுகள் 'ஏ' பதிவேடுகள், தலைமைச் செயலக உள்துறைக்கு தேவையான வார அட்டவணைகள், பொதுப் பணித்துறை அட்டவணை வீதங்கள் மற்றும் வேளாண்மைத்துறை மாத வெளியீடாக ''நீரும் நிலமும்'' என்ற பத்திரிகை முதலானவை இவ்வச்சகத்தால் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன திருச்சி, மதுரை மற்றும் திண்டுக்கல்-அண்ணா மாவட்ட அரசிதழ்களும் இக்கிளை அச்சகத்தில் அச்சிடப்படுகின்றன.

(6) அரசு கிளை அச்சகம், சேலம்:

இவ்வச்சகம், அனுமதிக்கப்பட்ட 204 பணியாளர்களைக் கொண்டு, சொந்தக் கட்டிடத்தில் இரண்டு முறை மாற்றுப் பணிகளில் இயங்கி வருகிறது.

இவ்வச்சகத்தில், 1990 ஆம் ஆண்டில், பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.—

(1) தமிழ்நாடு கருவூல விதிக்கோவை படிவங்கள், மற்றும் பதிவேடுகள் அனைத்தும் அச்சிடப்பட்டு, தமிழ்நாடு அரசுத் துறைகள் அனைத்திற்கும் வழங்கப்பட்டிருக்கின்றன.

(2) சேலம், பெரியார் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களின் அரசிதழ்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சிடப்பட்டிருக்கின்றன.

(3) 20 இலட்சம் உணவுப் பங்கீட்டு அட்டைகள் அச்சிடப்பட்டன.

(4) 3,32,00,000 மருத்துவத் துறையின் புற நோயாளி (மருத்துவத்துறை 1–15) சீட்டுகளும் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டன.

(5) நிலத் தீர்வை 'ஏ' பதிவேடுகள் அச்சிடப்பட்டிருக்கின்றன.





(7) அரசு கிளை அச்சகம், விருத்நாசலம்:

இவ்வச்சகம், 1966ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, அதன் சொந்தக் கட்டிடத்தில் அனுமதிக்கப்பட்ட 211 பணியாளர்களைக் கொண்டு இரண்டு முறை மாற்றுப் பணிகளில் இயங்கி வருகிறது.

இவ்வச்சகத்தில் நிதித் துறை, வேளாண்மை, கால்நடை பராமரிப்புத் துறை, தமிழ்நாடு தீயணைப்புத் துறை, காவல் துறை, மருத்துவத் துறை, வனத் துறை, பொதுப்பணித் துறை, தொழில் மற்றும் வணிகம், கூட்டுறவு, புள்ளியியல், நில அளவை நிலவரி ஏற்பாடுகள் துறை, மற்றும் தேசிய மாணவர் படைத் துறை ஆகியவற்றிற்கான நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள் அச்சிடப்படுகின்றன. மேற் சொன்னதைத் தவிர, தென் ஆற்காடு மாவட்ட அரசிதழும் இவ்வச்சகத்தில் அச்சிடப்படுகின்றது. இவ்வச்சகத்தில் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கமும் மற்றும் பணியாளர்களின் நலனுக்காக மனமகிழ் மன்றம் ஒன்றும் இயங்கி வருகின்றது.

(8) அரசு கிளை அச்சகம், மதுரை:

இக்கிளை அச்சகம், 1976 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு நன்முறையில் வடிவமைக்கப்பட்ட சொந்தக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. இதில் அனுமதிக்கப்பட்ட 356 பணியாளர்கள் பணிபுரிகின்றனர். இவ்வச்சகத்தில் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன :—

(1) வருவாய்த்துறை படிவங்கள் (R.F. Group).

(2) போக்குவரத்துத் துறை (மோட்டார் வண்டிகள் சட்டம்) வரி விதிப்பு உரிமங்கள் (12 வகைப் படிவங்கள்).

(3) தமிழ்நாடு கருவூல கணக்குத் துறை (D.T.A. Group).

(4) பத்திரப்பதிவுத் துறை படிவங்கள் (Registration Group).

(5) காவல் துறைப் படிவங்கள் (கா.பி. 60–62 மற்றும் 63).

(6) நீலம் மற்றும் வெள்ளை விதைக் கொடிகள்—50,00,000.

(7) மாநில கணக்குத் துறைத் தலைவர் தணிக்கை அறிக்கைகள் (5 வகைகள்).

(8) தமிழ்நாடு [illegible] அணிக்க கணக்குப்படிவங்கள் 41 [illegible] XXI—40,000 புத்தகங்கள்.

(9) நல்வாழ்விற்கு நல்மருத்துவம்—10,000 புத்தகங்கள்.

(10) திருமலை நாயக்கர் அரண்மனை நுழைவுச் சீட்டு கள்—2 இனங்கள்.

(11) நிலத்தீர்வை 'அ' பதிவேடுகள்—3 இனங்கள்.

(12) குடும்ப அட்டை—10,44,000.
குடும்ப அட்டை 'இ' படிவம்—60,00,000
மற்றும் அடையாள சீட்டுகள்—60,00,000.

## II. எழுதுபொருள் பிரிவு :

எழுதுபொருள் அச்சுத்துறையில் எழுதுபொருள் பிரிவு, எழுதுபொருள்கள், தட்டச்சு இயந்திரங்கள், படிபெருக்கி கள், கணக்கிடும் பொறிகள் முதலியவற்றை கொள்முதல் செய்து தமிழ்நாட்டிலுள்ள அரசு அலுவலகங்கள் அனைத் திற்கும் வழங்கும் மைய முகவரமைப்பாக இயங்கி வருகிறது. இந்த எழுதுபொருள்கள், அரசு அலுவலகங்கள் அனைத்திற் கும் இலவசமாக வழங்கப்படுகின்றன.

1—4—1990 முதல் 30—11—1990 வரையிலான கால அளவில் ரூ. 3.57 கோடி செலவில் எழுதுபொருள்கள் வாங்கப்பட்டன. மத்திய அரசின் உதவி பெறும் அல்லது மத்திய அரசு பொறுப் பேற்கும் திட்டங்களைச் செயல்படுத்தும் நிறுவனங்களுக்கு முன்கூட்டியே உரிய தொகை செலுத்துவதன் பேரில் எழுது பொருள் வழங்கப்படுகின்றன.

### (அ) எழுதுபொருள் கொள்முதல் :

காகிதம், அட்டை, தட்டச்சுப் பொறிகள், படிபெருக்கி கள், கதர் மற்றும் கைத்தறித் துணிகள், அச்சக மற்றும் சிறைச்சாலை தயாரிக்கும் பொருட்கள் நீங்கலாக, ஏனைய எல்லா எழுது பொருட்களும் ஆண்டுதோறும் ஒப்பந்தப்புள்ளி கள் கோரப்பட்டு வெளி அங்காடியில் வாங்கப்படுகின்றன.

### (ஆ) காகிதம், அட்டைகள் கொள்முதல் :

புதுடெல்லியில் உள்ள வழங்கல்-விற்பனைத் தலைமை இயக்குநர், விலை வீத ஒப்பந்த அடிப்படையில் செய்யும் ஒதுக் கீட்டின் பேரில் காகிதம், அட்டைகள் போன்றவற்றை பல் வேறு காகித ஆலைகளிலிருந்து கொள்முதல் செய்கிறார்.

வழங்கல்-விற்பனைத் தலைமை இயக்குநரின் விலை வீத ஒப்பந்தத்தின் கீழ் வராத சிறப்பு வகைக் காகிதம், அட்டை கள் போன்றவை செய்தி மற்றும் சுற்றுலாத் துறைச் செயலர் அவர்களைத் தலைவராகவும் எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநர் மற்றும் நிதித் துறையின் துணைச் செயலர்



ஆகியவர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட சிறப்புக் கொள்முதல் குழுவின் ஒப்புதல் பெற்று, வெளி அங்காடியின் ஒப்பந்த புள்ளிகள் அல்லது வரம்பிற்குட்பட்ட ஒப் பிரங்க ஒப்பந்த புள்ளிகள் கோருவதன் மூலம் கொள்முதல் செய்யப் படுகின்றன.

## III. அரசு வெளியீடுகள் பிரிவு :

சென்னை, அண்ணாசாலை, அரசு வெளியீடுகள் விற் பனை நிலையம் மற்றும் சென்னை, உயர்நீதிமன்ற வளாகத் திலுள்ள கிளை விற்பனை நிலையம் ஆகிய இவ்விரண்டும், உதவி இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் 57 பணியாளர்களைக் கொண்டு செயற்பட்டு வருகின்றன. இவை, சட்டங்கள், விதிகள், விதிக்கோவைகள், நடைமுறை நூல்கள், அரசிதழ் கள், செய்தி அறிவிப்பு வெளியீடுகள் மற்றும் பணிப் பதிவேடு கள் போன்ற அரசு வெளியீடுகளை விற்பனை செய்து வரு கின்றன. இந்திய அரசு வெளியீடுகளுக்கும் இது முகவரமைப் பாக செயல்படுகிறது. இந்த வெளியீடுகள், தரகு அடிப்படை யில் இம்மாநிலம் முழுவதிலுமுள்ள அனுமதி பெற்ற முகவர் கள் மூலமாகவும் விற்கப்படுகின்றன. 1—4—1990 முதல் 30—11—1990 வரையிலான கால அளவில் இந்த அரசு வெளி யீடுகள் விற்பனை நிலையத்தின் விற்பனை அளவு வருமாறு:—

| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1. | அரசு அலுவலகங்களுக்கு இலவசமாக வழங்கிய வெளியீடுகள் மதிப்பு. | 0.27 |
| 2. | மாநில, மைய அரசு வெளியீடுகளின் விற்பனை மதிப்பு : சென்னை அண்ணாசாலையில் உள்ள நிலையத்தில் விற்பனை செய்யப்பட்டது. | 5.68 |
| 3. | உயர்நீதிமன்ற வளாகத்தில் இருக்கும் அரசு கிளை விற்பனை நிலையத்தின் மாநில மைய அரசு வெளியீடுகள் விற்பனை மதிப்பு. | 1.28 |

## பணியாளர்களின் வசதிகள் :

### (1) குடியிருப்புகள் :

சென்னை தண்டையார்பேட்டையில் பணியாளர்களுக் கென 300 குடியிருப்புகள் மின்விசிறி கம்பிவலைகள் பொருத் தப்பட்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியும் தெருவிளக்கு வசதியும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் 104 குடியிருப்புகள் 'ஏ' வகையும் 96 'பி' வகையும் 100 'சி' வகையும் சேர்ந்தவை.

(2) தொழிலாளர் நலம் :

தொழிலாளர் நல அதிகாரியும், சுகாதார ஆய்வாளரும் அடிக்கடி இங்கு சென்று குடியிருப்போரின் நலன்களைக் கவனித்து வருகின்றனர். தொழிலாளர்களின் குறைகளைக் கேட்டறிந்து அவற்றைக் களைவதற்காக தொழிலாளர் நல அதிகாரி சென்னை மற்றும் வெளியூர்களிலுள்ள இத்துறைப் பிரிவுகளுக்கு நேரடியாகச் சென்று வருகின்றார். சுகாதார ஆய்வாளர் நகரில் உள்ள எல்லா பிரிவுகளுக்கும் அடிக்கடி சென்று சுகாதார வசதிகள் நன்முறையில் பராமரிக்கப்படுகின்றனவா என்பதை மேற்பார்வையிடுகின்றார். ஓய்வு அறை, சிற்றுண்டி அறை, மிதிவண்டி நிறுத்துமிடம், வானொலி பெட்டிகள் ஆகியவற்றுடன் பிரிவு அளவில் வகுப்புகள் நடத்தும் அறைகள் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. தொழிலாளர்கள் தொடர்ந்து இவ்வசதிகளைப் பயன்படுத்தி வருகின்றனர்.

(3) மருத்துவ வசதி :

அரசினர் மைய அச்சகத்திலுள்ள மருந்தகத்தைச் சார்ந்த மருத்துவ அலுவலர் வாரம் ஒரு முறை எழுதுபொருள் இயக்ககம், உயர்நீதிமன்ற கட்டிட கிளை அச்சகம், எழுதுபொருள் கிடங்கு, கூளையில் ஆனைக்காரத் தோட்டம் கிளை அச்சகம் ஆகியவற்றிற்குச் சென்று பார்வையிடுகிறார். பணியாளர்களுக்கும் அவர்கள் குடும்பத்தினர்களுக்கும் மைய அச்சகத்தில் உள்ள மருந்தகத்தில் நாள்தோறும் மருத்துவ வசதிகள் அளிக்கப்படுகின்றன.

(4) பன் தேநீர் பால் இலவசமாக வழங்குதல் :

அரசு மைய அச்சகம் அதன் கிளை அச்சகங்கள் அனைத்திலும் பணிபுரியும் எல்லாப் பணியாளர்களுக்கும் பன் தேநீர் [illegible] ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 20 [illegible] வழங்கப்படுகின்றது. மேலும் உலோகப் புகை [illegible] இன்னல்களுக்குட்படக்கூடிய பணியாளர் [illegible] நாள்தோறும் 250 மி.லிட்டர் பால் வழங்கப் [illegible] ஒரு நாளைக்கு 60 பைசா வீதம் ஒவ்வொரு பணியாளருக்கும் வழங்கப்படுகிறது. இத்துடன் [illegible] மாத்திரைகளும் வழங்கப்படுகின்றன [illegible] பாகமாக ஒவ்வொரு தொழி[illegible] 2.50 வழங்கப்படுகிறது. சென்னை அரசினர் மைய அச்சக வரவு-செலவுத் திட்ட இரகசியப் பிரிவிலும் [illegible] பிரிவிலும் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு 7 நாள் வார சம்பளப்படியாக மாதம் ஒன்றுக்கு முறையே ரூ. 12 ரூ 15 வழங்கப்படுகின்றன.



(5) தொழிலாளர் நல நிதி :

எழுதுபொருள்-அச்சுத்துறையில் தொழிலாளர் நல நிதியிலிருந்து அனைத்து மனமகிழ் மன்றங்களுக்கும் விளையாட்டுக்கள் தொழிலாளர் நலப்பணிகள் ஆகியவற்றிற்காக நிதி வழங்கப்படுகின்றது. மேலும் சுதந்திர தின விழா, ஆயுத பூஜை முதலிய விழாக்களைக் கொண்டாடவும் இந்நிதியிலிருந்து பணியாளர்களுக்குத் தொகை வழங்கப்படுகிறது. தொழிலாளர் நல நிதிக்குப் பங்குத் தொகை செலுத்தும் தொழிலாளர்களுடைய குழந்தைகளின் பள்ளிப்பாடப் புத்தகங்களுக்காகும் செலவை சென்னை-6-ல் உள்ள தொழிலாளர் நல வாரியம் ஒவ்வோராண்டும் ஈடு செய்கிறது.

(6) நலத் திட்டங்கள்:

மகளிர் துணை வருவாய் பெற உதவும் வகையில் ஒரு நலத்திட்டமாக புத்தகம் கட்டும் வேலைகள், கோடிடுதல், மேலுறை தயாரித்தல் ஆகிய பணிகள் சென்னை மாநகரில் உள்ள காவல் துறை நலப்பிரிவுகள் பட்டினப்பாக்கம் மகளிர் மன்றம் சென்னை நகரிலுள்ள ஊனமுற்றோர் நலக் கூட்டுறவுச் சங்கம் போன்ற சமூக நல அமைப்புகளிடம் ஒப்படைக்கப்படுகின்றன. மேலும் அரசுத் துறைகளுக்கு மொத்தமாகத் தேவைப்படும் இரண்டாவது வகை அட்டைகளில் 25 சதவிகிதத்தை சென்னை வண்ணாரப்பேட்டையிலுள்ள தமிழ்நாடு பார்வையற்றோர் சங்கத்திடமிருந்து வாங்க அரசு ஆணையிட்டுள்ளது.

(7) குழந்தைகள் காப்பகம் :

மகளிரின் வசதிக்காக அரசு மைய பணிபுரியும் அச்சகம், கூளையில் உள்ள அரசு கிளை அச்சகம் ஆகியவற்றில் குழந்தைகள் காப்பகங்கள் அமைத்து கொடுக்கப்பட்டுள்ளன. காப்பகத்திலுள்ள குழந்தைகளைக் காப்பகப் பணியாளர் பார்த்துக் கொள்கிறார். குழந்தைகளுக்குப் பால், பிஸ்கோத்து, பொம்மைகள் முதலியன அரசு செலவில் வழங்கப்படுகின்றன.

(8) சீருடைகள் :

இத்துறையின் அனைத்து தொழிலாளர்களுக்கும் இலவசமாக இரண்டு ஜோடி சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கு முன்னர் 1,724 தொழிலாளர்களுக்குச் சீருடை வழங்க அனுமதியளிக்கப்பட்டது. எஞ்சியுள்ள தொழிலாளர்களுக்கும் சீருடை வழங்க அரசு அனுமதியளித்துள்ளது. இவ்வாறு அனைத்து வகைகளைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கும் சீருடை வழங்கப்படுகிறது. மேலும் தொழிலாளர்களுக்குச் சலவைப்படி மாதம் ரூ. 15-ம் வழங்கப்படுகிறது.

(9) தொழிலாளர் கல்வித் திட்டம் :

தொழிலாளர்களைப் பணியாளர்-ஆசிரியர் பயிற்சி பெற சென்னை வட்டாரத் தொழிலாளர் கல்வி இயக்கத்திற்கு முகமை யில் அனுப்புவதன் மூலம் தொழிலாளர் கல்வித் திட்டம் செயல் படுத்தப்படுகிறது. பணியாளர்-ஆசிரியர் மற்றும் பணியாளர் பயிற்சியாளருக்கு மொத்தமாக ஒரு தொகை வழங்கப்படுகிறது. பயிற்சிக் காலத்தின்போது பணிக்கு வரமுடியாது. எனவே அந்த பயிற்சிக்காலம் பணிக்காலமாக கொள்ளப்படுகிறது.

(10) சிற்றுண்டிச் சாலை :

தொழிலாளர்களின் தேவையை நிறைவு செய்ய அரசு மைய அச்சக சிற்றுண்டிச்சாலை சூளை ஆனைக்காரன் அச்சகத்தில் உள்ள சிற்றுண்டிச்சாலை ஆகியவை தனியார் ஒப்பந்தகாரரால் நடத்தப் படுகின்றன.

(11) தொழிலாளர் நற்பணி நல நிதி :

தொழிலாளர் இறக்க நேரிடின், அவருடைய குடும்பத்தி னருக்கு உடனடி நிவாரணமாக இந்நிதியிலிருந்து ரூ. 100 வழங்கப் படுகிறது. இதைத் தவிர தொழிலாளர் நல வாரியத்திலிருந்து இந்தத் தொழிலாளர்களின் சட்ட பூர்வமான வாரிசுதாரருக்கு ரூ. 200 வழங்கப்படுகிறது.

(12) தொழில் பழகுதல் :

1961-ஆம் ஆண்டு தொழில் பழகுநர் சட்டத்தைச் செயல் படுத்த, மாநகரிலுள்ள அச்சகங்களிலும், வெளியூர்களிலுள்ள அச்சகங்களிலும் வெவ்வேறு வகையைச் சேர்ந்த 55 தொழில் பழகுநர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

(13) கூட்டுறவுச் சங்கம் :

சென்னை மைய அச்சகத்தில் இயங்கி வரும் தமிழ் நாடு அரசு அச்சக எழுதுபொருள் துறை பணியாளர் கூட்டுறவுச் சங்கம், 2,171 'ஏ' பிரிவு உறுப்பினர்களையும் 645 'பி' பிரிவு உறுப்பினர்களையும் கொண்டுள்ளது. இதன் பங்கு மூலதனம் ரூ. 41.34 இலட்சம் ஆகும். இச்சங்கத்தின் மூலம் உறுப்பினர் களுக்கு 3.59 கோடி ரூபாய் கடனாக வழங்கப்பட்டது. இதன் மூலம் இச்சங்கம் ரூ. 6.37 இலட்சம் நிகர இலாபம் ஈட்டியது. இதன் பயனாக, அதன் உறுப்பினர்களுக்கு உயரளவு வீதமாக 14 சதவீதம் ஆதாயப் பங்குத் தொகை வழங்கப்பட்டது.

(14) கூட்டுறவுப் பண்டக சாலை :

தமிழ்நாடு அரசு எழுது பொருள் அச்சுத் துறை கூட்டுறவுப் பண்டகசாலை, உணவுப் பொருள் பங்கீட்டு ஏற்பாட்டின் கீழ்



பொருட்களை
வரும் பொருட்கள் உட்பட இன்றியமையாத
நியாய விலையில் பணியாளர்களுக்கு விற்பனை செய்வதன் மூலம்
பயனுள்ள பணியாற்றுகிறது.

(15) அரசு அச்சகச் சங்கம் :
தொழிலாளர்களால் ஏற்படுத்தப்பட்ட
இது அச்சகப் பிரிவுத் தொழிலாளர்கள் எவரேனும் இறக்க
ஓர் சங்கமாகும். இச்சங்க உறுப்பினர்கள் எவரேனும் இறக்க
நேரிடின், அவருடைய குடும்பத்திற்கு தேவையான அவசர உதவி
களை இச்சங்கம் தொடர்ந்து செய்து வருகிறது. இச்சங்கத்தில்
30—11—1990 அன்றிருந்தவாறு 3,024 உறுப்பினர்கள் உள்ளனர்
1990 ஆம் ஆண்டில் இறந்து போன உறுப்பினர்களின் ஈமக்கிரியை
செலவிற்காகவும் ஏனைய செலவிற்காகவும் அவர்களுடைய
குடும்ப வாரிசுதாரர்களுக்கு ரூ. 18,600-ம் மற்றும் இறந்து போன
உறுப்பினர்களின் குடும்பத்திற்குச் சேர வேண்டிய கடைசித்
தொகையான ரூ. 4,000-ம் வழங்கப்பட்டுள்ளது.

அச்சகத்தின் செயல் திறனைப் பெருக்குதல் :

(அ) தளவாடங்களும் இயந்திரங்களும்.—1990-91 ஆம்
ஆண்டில், மதுரை கிளை அச்சகத்திற்காக ரூ. 0.47 இலட்சம்
செலவில் மெட்டல் ஹாலிட் லைட்டிங் எக்ஸ்போஸிங் யூனிட்
ஒன்றும் (பெடஸ்டல் ஸ்டாண்டுடன் கூடியது) தானியங்கி பிளேட்
பிராஸஸர் ஒன்றும் மத்திய அச்சகத்திற்கு ரூ. 1.83 இலட்சம்
செலவில் வாங்கப்பட்டுள்ளன.

(ஆ) கட்டிடங்கள்.—திருச்சிராப்பள்ளிக்கு அருகிலுள்ள துவாக்
குடியில் ரூ. 21.78 இலட்சம் செலவில் புதிய கட்டிடம் கட்டப்பட்டு
அதில் திருச்சி கிளை அச்சகம் 29-11-1990 முதல் இயங்குகிறது.

வரவு-செலவு சம்பந்தப்பட்ட ஆவணங்களை அச்சிடுவதற்
காக நவீன இயந்திரங்களை அமைக்க இயலும் வகையில் இடவசதி
ஏற்படுத்த சென்னை மத்திய அச்சகத்திலுள்ள தற்
போதைய கட்டிடங்களின் அமைப்பை மாற்றி அமைக்கும் பணி
முடிவடையும் நிலையில் உள்ளது. தற்பொழுது வாடகை கட்டிடத்
தில் இயங்கி வரும் ஒரே பிரிவான சூளையிலுள்ள கிளை அச்சகத்
திற்குப் புதிய கட்டிடம் கட்ட, 3 ஏக்கர் நிலத்தை எழுது
பொருள்-அச்சுத் துறைக்குத் தருமாறு பால் வளத்துறை ஆணை
யர் அவர்களிடம் கேட்கப்பட்டுள்ளது.

(இ) நவீனமயமாக்குதல்.—தலைமைச் செயலக நிதித்துறையின்
வரவு-செலவுத் திட்டப் பிரிவில் கணிப்புபொறிமயமாக்கும் திட்டம்
அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதால் அரசு மைய அச்சகத்தில் புதிய
தொழில் நுட்ப உத்திகளைப் பின்பற்றி வரவு-செலவு திட்ட
ஆவணங்களை அச்சிட சென்னை, அரசு மைய அச்சகத்திற்கு
7 நவீன இயந்திரங்களை வாங்குவதற்கும், சீர்வளி வசதி செய்து
கொடுக்கவும், இயந்திரங்களின் அமைப்பை மாற்றியமைக்கவும்
அரசு ரூ. 139.75 இலட்சம் அனுமதித்துள்ளது.

158376
1991 செப்டம்பர் 20
600 006



அனுமதி வழங்கப்பட்டுள்ள தொகையிலிருந்து பின்வரும் எந்திரங்களை வாங்குவதற்காக கொள்முதல் ஆணைகள் வழங்கப் பட்டுள்ளது :—

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1. லைனிங் மேசை Lining up table — 1 .. | 0.31 |
| 2. ரீடச்சிங் மேசை (Retouching table) — 1 | 0.38 |
| 3. ஃபோல்டர், ஷீட்டருடன் கூடிய வெப்-ஆப்செட் அச்சிடும் எந்திரம் (Web-offset Printing machine with Folders and sheetare) | 61.57 |
| 4. ஒயர் ஸ்டிச்சிங் எந்திரங்கள்(Wire Stitching Machine) | 1.10 |
| 5. ஷீட்பெட் சிங்கிள் கலர் ஆப்செட்— 1 எந்திரம் (Sheet Fed Single Colour Offset Machine) | 5.98 |
| 6. பெர்பெக்ட் பைண்டிங் எந்திரம்— 1 Perfect Binding Machine .. | 23.89 |
| 7. ஸ்டிச்சர் உடன் கூடிய கேதரிங் எந்திரம்— 1 (Gathering Machine with Stitcher) | 45.62 |

மேற்சொன்ன 7 எந்திரங்களுள் 1 முதல் 3 வரையில் குறிப் பிடப்பட்டுள்ள எந்திரங்கள் வரப்பெற்று, மைய அச்சகத்தில் நிறுவப்பட்டு வருகின்றன. வரிசை எண். 4, 5-ல் குறிப்பிடப்பட் டுள்ள இயந்திரங்கள் விரைவில் வருமென்று எதிர்பார்க்கப்படு கின்றன. வரிசை எண். 6, 7 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள எந்திரங்களைப் பெறுவதற்காக அந்நியச் செலாவணி விதிகளைத் தளர்த்துவதற்கு இந்திய அரசின் ஆணைகள் விரைவில் வருமென்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

**(ஈ) எட்டாம் ஐந்தாண்டுத் திட்டம்.**—இத் திட்டக் காலத் தில் மதுரை அரசு கிளை அச்சகத்தின் செயல் திறனை உயர்த்தும் நோக்குடன், ரூ. 11 இலட்சம் மதிப்பிற்கு எந்திரங்களை வாங்க கருதப்பட்டுள்ளது.

பொது :

மைய அச்சகம் நவீனப்படுத்தப்பட்டு, வரவு-செலவு திட்ட மதிப்பீட்டு ஆவணங்கள் 'ஆப்செட்' அச்சு எந்திரங்கள் மூலம் விரைவில் அச்சிடப்படும். மைய அச்சகத்தில் எந்திரங்களை நவீனப் படுத்திய பின்னர், அவற்றை உரிய அளவிற்குப் பயன்படுத்த குறிப்பிட்ட அளவிற்குப் பாட புத்தகங்களை அச்சிடவும் கருதப் பட்டுள்ளது.